the horoscopes lagna-war and kept the thirteen volumes as twelve volumes at the rate of one volume for each of the twelve lagnas. After about six months, Mr. Krishnaswamy Pillai fell out with Mr. Rāju Mudaliar, snatched from him all the volumes of this Naadi and sold them away to the Madras Government Oriental Manuscripts Library in about 1914—1915 A.D. This is the history of this Nādi from the time of it stay in Perunagar village to the time when it found its way to the Oriental Manuscripts Library, Madras. When I helped Mr. Raaju Mudaliar in preparing the Index in 1912 A.D. I happened to read some of the readings in the several volumes of this Nādi and I used to read also occasionally the volume that was with me, and I gathered the impression that all the volumes had numerous references to Kānchi. Subsequently in 1932 A.D. I met Mr. Kanakasabhai Pandāram (who was my senior in age by some years) during one of my official camps in Perunagar village as the Deputy Tahsildar of Uttiramerur Sub-taluk to which this village is attached. He told me that his father's relative and friend who was living in Bangalore had the original of this Nādi in many more volumes, that his father took copies from them of such of the horoscopes-readings as seemed to him from the topographical descriptions and references to places in them, to relate to persons who lived in places round about Kānchi or so. This appears to be the probable reason for the unduly many references to Kānchi if the abovementioned version is genuine. The information furnished by me purposely in this paragraph, I believe, will enable research-scholars to take up the clue and pursue the thread to discover further details about the previous history of this Nādi and the venue of the sessions of the Saptarṣis. I may also be permitted in this connection to state that, I have observed that the style of the language adopted in some two or three horoscope-readings in this volume is clearly and decidedly different from the uniform style adopted in a very great majority of horoscope-readings in this volume, and it is probable that Ponnambala Pandāram himself who was well-versed in astrology and in stanza-composition, was the real author of the predictions in these very few cases.

Before closing this introduction, I wish to say a word or two about the usefulness of this Nādi, on the publication of which for the benefit of the public, a considerable amount of the public money was spent usefully by the present liberal and generous Government,

which is interested very much in the preservation of our ancient culture and learning, which are the glory of our Nation. In the science of economics, utility and rarity determine the value of a commodity. The Saptarṣis Nādi is one of the earliest and rarest of Nādis. It has had a reputation of its own during the past several centuries, during which it has enjoyed also a unique popularity. Dhruva Nādi or Sukra Nādi or any other Nādi is the product of a single person, while the Saptarṣi Nādi is the joint output of the seven brilliant intellects and as such, has the best and well-considered opinions of the groups of seven brilliant intellectual stars in the firmaments of astrology about the life-events of a human being. No other Nādi is therefore entitled to a greater regard or esteem and value. Each horscope in the Nādi will be of immense value specially to its Native or owner, as a guiding star in his future career or will serve him as a beacon-light in the otherwise dark path of his future life. It will enable him to know things beforehand and to move forward cautiously in his onward journey of life. He can shape his affairs and commitments according to the brightness or dullness or fortunes or misfortunes of his future career and try to avert unfavourable things or happenings as far as possible, either by fore-stalling or fore-arming himself. If any misfortune is to happen in the future, he can prepare his mind for it earlier by knowing it through astrology in advance and the rigour or severity of the onslaught of the misfortune on his mind, when it really happens or transpires will be reduced thereby, but if the onslaught takes his mind by surprise, the effects of this impact on the mind would be unbearable in many cases and the mind may sink or give way under the weight or intesity of the impacts. If a person knows beforehand through astrology the fortunes that are in store for him in his future career the actual pleasure derived from the enjoyments of the fortunes, when they actually happen, will be augmented or heightened by the very nature if their anticipatedness. If the horoscopes in the Nādi are the horoscopes of persons who are now dead, or who are not to be ushered into existence within a generation or two, still they will be useful to those who are interested in the study of astrology as a noble or subline art. Each horoscope will serve as an illustrative horoscope both to the novice and the adept or expert in astrology. We live in a world of precedents or examples and these play a very important role or part in every

sphere of activity. For example, whenever a Government official for instance, considers a problem as presenting to him a new phase or a new difficulty, though it may present on old phase only to others, he looks up for a precedent at once without seeking other's help to guide him in his ignorance. So precedent serves many people as a guide for many things which are unfamiliar to them in actual life. Astrology, as I have stated already, is an Empirical System based on experience. Precedents are nothing but past experiences of people. If there is a particular configuration of two or three or more planets in a horoscope under scrutiny and if there is a precedent for this configuration or in other words, if there is a similar configuration in any one of the horoscopes contained in this volume of the Saptaṛṣi Nādi, the astrologer can easily and readily apply the readings given in this Nādi as the effects of this configuration to the horscope under his examination and thus much of his thinking and the consequent labour will be saved and greater accuracy will also be acheived by the help of this Nādi. An astrologer can watch the trends of discussions in them among the Ṛṣis, the arguments advanced by them for and against a point under their consideration, the reasons adduced by them and the nature of the final decision arrived at and if a similar difficulty arises in the course of his own examination of a horoscope, he can adopt the line of argument or reasoning employed by the Ṛṣis and give out his decision about the point with a greater sense or certainty of its accuracy. There are discussions very often in this Nādi about questions of (1) longevity, (2) number of wives that a man may have, (3) the children that he may have, (4) yogas or fortunes, good or bad, that he may have and these are among the very important points which every ordinary man is anxious to know of his own life. If the astrologer carefully studies and follows these discussions, he will really be very much benefited or profitted by them, by gaining more experience and turn out to be a more capable and more successful astrologer and will loom large in the eyes of his clients and the public. Further this Nādi has its own value even to a non-astrologer among the public. It has many valuable lessons in it on morality, ethics and religion. He who reads this Naadi cannot go uninfluenced by it and will emerge out as a new man with fresh and new views about life. He is bound to imbibe the doctrines and teachings found in it about ethics and religion and moral codes of conduct of

life found in it. He will therefore become pious, virtuous, righteous, honest, God-fearing, generous, and philanthropic. This Nādi, thus serves as a very great moral reformer for a non-astrologer too. Thus this Nādi has a great universal and cultural value to one and all and the money spent on it by the Government is well spent on a noble cause and the gentlemen who were responsible for selecting this work for publication and in particular Sri T. Chandrasekara Iyer, M.A., L.T., the Curator of the Madras Government Oriental Manuscripts Library (who has been bestowing his particular, special and unstinted care for the selection of proper editors for its correct and proper publication, free from avoidable defects in the midst of his multifarious and onerous duties) deserve to be especially congratulated upon and to be thanked by the public, who are mainly benefited by this work. As a co-editor, I translated the stanzas in the horoscopes bearing numbers from fifty-two to one hundred and five, adding notes and commentaries wherever necessary by way of explanation and clarification. In respect of the stanzas in the horoscopes bearing numbers one to fifty-one, the same was done by my co-editor Śri Vidwan V. S. Seshadri Achariar, Astrologer, T.Nagar, Madras-17. I have written this introduction myself unaided by others and with the help of my own knowledge and experience and with the help of previous works on the astrological literature to the authors of which, I hereby acknowledge my indebtedness. Salutation to the Saptaṛṣis, classical authors on astrology, to the sympathisers of and believers in astrology and to the coterie of gentlemen who were responsible for the publication of this very useful, highly valuable and rare volume of Saptaṛṣi Nādi.

C. G. RĀJAN
(alias C. Govindarājan),

MADRAS, 24th *June* 1956.

சப்தரிஷி நாடி — நான்காவது பாகம்

கடக லக்கினம்

முன்னுரை

1-வது அத்தியாயம்

Chapter I

ஜ்யோதிஷம் (Astrology) என்பது ஆகாயத்தில் ஜோதியாய் நமக்குப் புலப்படுகின்ற அண்டங்களால் உண்டாகின்ற நன்மை துன்மைகளைப்பற்றி முந்தியாகவே தெரிவிக்கின்ற ஒரு சாஸ்திரமாகும். இந்தச் சாஸ்திரம் வான சாஸ்திரத்தை (Astronomy) அடிப்படையாகவுடையதாகும். இந்த வான சாஸ்திரம் நட்சத்திரங்கள், கிரகங்கள் தூமகேதுக்கள் முதலியவைகளின் உருவத்தையும் அளவையும் இவைகள், எந்த உலோகங்களால் உண்டாக்கப்பட்டிருக்கின்றனவென்பதையும் தெரிவிப்பதுடன், கிரகங்கள் எவ்விதமாக அசைகின்றன என்பதையும், அப்படி அசைவதற்குக் காரணத்தையும் அந்தக் காரணத்தைக் கொண்டு நமக்குத் தேவையான ஒரு காலத்தில் கிரகங்கள் ஆகாயத்தில் எவ்விடத்தில் இருக்கும் என்பதை அறியும் மார்க்கத்தையும், கிரஹணங்கள் சம்பவிக்கும் காலத்தையும் தெரிவிக்கும். ஆனால் இந்தச் சாஸ்திரம் நட்சத்திரங்கள், கிரகங்கள், தூமகேதுக்கள் முதலியவைகளால் இந்தப் பூமண்டலத்திலுள்ள ஜீவ பிராணிகளுக்குச் சம்பவிக்கும் நன்மை, துன்மைகளைப்பற்றி ஒன்றும் தெரிவிக்கின்றதில்லை. வான சாஸ்திரம் விஞ்ஞான சாஸ்திரங்களில் மிகவும் புராதீனமான சாஸ்திரம் என்று மனிதனுடைய மனதின் அபிவிருத்தி சம்மந்தமான சரித்திரத்திலிருந்து விளங்குகின்ற ஒரு உண்மையாகும். ஆகாயத்தில் அதிசயமாகவும் வியக்கத்தக்கதாகவும் நேரிடுகின்ற சம்பவங்களாகிய கிரஹணங்கள், வால் நட்சத்திரங்கள், தூமகேதுக்கள் ஆகிய இவைகள் பிரபஞ்சத்தின் அல்லது கடவுளின் கோபத்தை முந்தியாகவே தெரிவிக்கின்ற அறிகுறிகள் என்ற அபிப்பிராயம் நீடூழிகாலமாக ஜனங்களிடத்தில் இருந்து கொண்டிருக்கின்றது. மனிதர்களுடைய அல்லது சாம்ராஜ்யங்களினுடைய (of empires)பாக்கியங்களும், செல்வங்களும், தலைவிதிகளும், ஆகாயத்திலுள்ள அண்டங்களாகிய நட்சத்திரங்கள், கிரகங்கள், ஆகிய இவைகளின் நிலைமைகள், ஸ்தானங்கள், சலனங்கள், இவைகள் ஒன்றுக்கொன்றைப் பார்த்துக் கொள்ளும் திருஷ்டி என்ற பார்வை (aspects) இவைகள் ஒன்றின் பேரில் மற்றொன்று செலுத்திக் கொள்ளும் பிரபாவம், அதிகாரம் (mutual influences), இவைகளுக்குள் அப்போதுக்கப்போது ஏற்படுகின்ற வடிவம், உருவம், தோற்றம், யோகம் (configuration) ஆகிய இவைகளைத் தழுவி அனுசரித்து இருக்கின்றன என்ற ஒரு உறுதியான கொள்கை எல்லா தேச ஜனங்களிடத்திலும் இருந்து கொண்டு வந்திருப்பதாகத் தேச சரித்திரங்களின் மிகவும் பூர்வீகமான சாதனம், பதிவு,

குறிப்பு (earliest records) முதலியவைகளிலிருந்து புலப்படுகின்றது. ஆகாயத்திலுள்ள அண்டங்களாகிய நட்சத்திரங்கள், கிரகங்கள் முதலியவைகளால் மானிடர்களுக்கு ஏற்படக்கூடிய பலிதங்கள், காரிய சித்தி, பலாபலன்கள் (effects) ஆகிய இவைகள் சம்பந்தப்பட்ட வரையிலும் இவ்வண்டங்களை மானிடர்களுடன் சம்மந்தப்படுத்த வேண்டும் என்ற அவாவானது வான சாஸ்திரத்தின் அபிவிருத்திக்கு மூலாதாரமான காரணமாக விருந்து வந்திருக்கின்றது. இக் காரணத்தின் பொருட்டே ஜோதிட சாஸ்திரத்தை வான சாஸ்திரத்தின் வளர்ப்புத் தாய் (foster-mother) என்றும், தாதி, கைத்தாய் (nursing-mother) என்றும் அடிக்கடி சொல்லுகின்ற ஒரு வழக்கம் உண்டாகிவிருக்கின்றது. ஜோதிடமும், வான சாஸ்திரமும், இவ்விரண்டின் அபிவிருத்திக்கு அத்தியாவசியமான கணித சாஸ்திரமும் (mathematics), விஞ்ஞான சகோதரிகள் (sister-sciences) என்று வழங்கப்பட்டு வருகின்றன. இம் மூன்று சாஸ்திரங்களும் எப்போதும் திருமூர்த்திகளைப் போலவே ஒன்ருகவே புழங்கிவருகின்றன. ஆகையால் நியூடன் (Newton), கெப்லர் (Kepler) ஆகிய இவர்களைப் போன்ற புத்தி நுட்பம், சாமர்த்தியம் (Mental calibre) உள்ள மிகவும் சிறந்த விஞ்ஞானிகள் (eminent scientists) ஏக காலத்தில் பெரும்பாலும் கணிதர்கள், வான சாஸ்திரிகள், ஜோதிடர்கள் ஆகிய இவர்களின் திரட்டு பிண்டம் அல்லது கதம்பகங்களாக (Conglomeration or congery or mass) இருந்து வந்திருக்கின்ருர்கள்.

2. ஜோதிட சாஸ்திரம் தற்கால நிலையில் பெரும்பாலும் அனுபவத்திஞல் ஏற்படுத்தப்பட்ட சாஸ்திரமாகும் (Empirical system). இது பெரும்பாலும் போதுமான வரையிலும் அல்லது தேவையான வரையிலும் அநேக சம்பவங்களை ஆராய்ச்சி செய்தும், பரீட்சை செய்தும் இவைகளில் இருந்து ஊகிக்கக் கூடியவைகளில் இருந்து ஏற்படுத்தப்பட்ட நியம விதிகளையும் தத்துவங்களையும் (dogmas and rules)உடைய மிகவும் சரியான அல்லது மிகவும் உன்னதமான விஞ்ஞான சாஸ்திரம் அல்ல. மிகவும் சரியான அல்லது உன்னதமான விஞ்ஞான சாஸ்திரங்கள் (Exact sciences) போதுமானதும் அநேகமானதுமான சம்பவங்களை ஆராய்ச்சி செய்து அவைகளிலிருந்து யூகிக்கப்பட்ட தத்துவங்களையும், சித்தாந்தங்களையும் உடையனவாகும். ஆகையால் ஜோதிட சாஸ்திரம் தற்கால நிலையில் வான சாஸ்திரம், பௌதீக சாஸ்திரம் என்ற பௌதிக நூல் (Physics), இரஸாயன சாஸ்திரம் என்ற இரஸாயன நூல் (Chemistry) ஆகிய இவைகளைப் போன்ற மிகவும் சரியான அல்லது உன்னதமான விஞ்ஞானம் சாஸ்திரம் (Science) அல்ல. ஆனுல் இது வைத்திய சாஸ்திரம் (Medical-science), ராஜ்ய நிர்வாக தந்திர சாஸ்திரம் (Political science), இல்லோம்பும் முறை பொருள் நூல் (Economics) ஆகிய இவைகளைப்போன்ற ஒரு தோராயமான சாஸ்திரம் (not an exact science) ஆகும். மிகவும் சரியான, அல்லது உன்னதமான சாஸ்திரங்கள் என்று தற்காலத்தில் கருதப்பட்டு வருகின்ற பௌதிக சாஸ்திரம் (Physics), இரஸாயன சாஸ்திரம் ஆகிய இவைகள் கூட சில அரிய சந்தற்பங்களில் சரியான சாஸ்திரத்தன்மைக்கு விரோதமாக நடந்து கொள்ளுகின்றன. உதாரணமாக பாயிலின் விதி (Boyle's Law) என்பது தனக்குறிய

அத்தை மீறுகிற சந்தற்பத்தில் முரண்பாடாகவும், விரோதமாகவும் நடந்து கொள்ளுகின்ற விஷயம் அநேகருக்குத் தெரிந்த விஷயமே ஆகும். இவ்விதமாக விருந்தும் பௌதிக சாஸ்திரத்தை (Physics) மிகவும் சரியானசாஸ்திரம் என்று சொல்லுகின்ருேம். சீதபேதிக்குத் தகுந்த மருந்தில் அம்பரை (Bismuth) என்ற ஒருசரக்கு மிகவும் முக்கியமான சரக்குஆகும். இது நோயாளியுடைய பாதையைத் தணித்து இவருக்குச் சுகத்தை உண்டு பண்ணுவதற்குப் பதிலாகச் சில மிகவும் அருமையான சந்தற்பங்களில் இவருக்குத் தன்னுடைய தேகமெங்கும் கொப்பளங்களை உண்டு பண்ணி இவருக்கு ஏற்கனவே உள்ள பாதையை அதிகமாக்கி இவருக்கு மிகவும் அதிகமான துன்பத்தை விளைவித்துவிடுகின்றது. இவ்விதமாக ஒரு நோயாளிக்கு நடந்த ஒரு சம்பவம் எனக்கு நன்ருகத் தெரியும். என்னுடைய சிநேகிதர்களில் ஒருவருடைய நெருங்கின பந்துவாகிய ஒரு ஸ்திரீக்குச் சீதபேதி ஏற்படவே அவளுக்கு அம்பரை (Bismuth) சம்மந்தப்பட்ட ஒரு ஜல ரூபமான மருந்து (Mixture containing Bismuth) ஒரு ரிஜிஸ்டர் செய்யப்பட்ட வைத்தியரால் (a registered doctor) கொடுக்கப்பட்டது. இந்த மருந்து எல்லா ஆங்கில வைத்திய புஸ்தகங்களில் கொடுத்துள்ள சாதாரண மருந்தாகும். இந்த மருந்தைச் சாப்பிட்ட பிறகு இந்த ஸ்திரீக்கு உடம்பெல்லாம் கொப்பளங்கள் ஏற்பட்டு விட்டன. உபத்திரம் பொறுக்க முடியாமல் போய்விட்டது. மருந்தைக் கொடுத்த வைத்தியரும் இவளுக்கு உபசரணை செய்து கொண்டிருந்தவர்களும் பயந்து திகிலடைந்து விட்டார்கள். இவளை வாழை இலைகளில் எண்ணெய் முதலிய மழ மழப்பான வஸ்துக்களைத் தடவி வளர்த்தி நீண்ட காலம் வைத்தியஞ் செய்து காப்பாற்றவேண்டியதாக நேரிட்டு விட்டது. இவ்விதமான காரணங்களினுல் பௌதிக சாஸ்திரமும் (Physics) இரஸாயன சாஸ்திரமும் (Chemistry) சரியான விஞ்ஞான சாஸ்திரங்கள் அல்லவென்று நாம் சொல்லுவதற்கு இடந்தராது. இவ்விதமாகவே சில சமயங்களில் ஜோதிட சாஸ்திரங் கூட தவறிப் போய் விடுமானுல் இது சரியான சாஸ்திரம் அல்லவென்று சொல்லுவதற்கு இடந்தராது. பௌதிக சாஸ்திரம் (Physics), இரஸாயன சாஸ்திரம் (Chemistry) ஆகிய இவைகளின் விதிகளை (Laws) ஒரு பௌதிக, ரஸாயன, பரீக்ஷண சாலை (Laboratory) யில் பரீக்ஷை செய்து பார்க்கக்கூடும். இவ்விதமான பரீக்ஷையை மிகவும் குறுகிய காலத்தில் கூட அனேக தடவைகளில் செய்து இவ்விதிகள் எப்போதும் எல்லா சந்தற்பங்களிலும் தவறிவிடாமல் சரியாக விருக்கின்றனவா என்று பரிசோதனை செய்து பார்த்துத் தேவையானுல் விதிகளைச் சீர் திருத்தம் செய்யக்கூடும். இவ்விதமான பரிசோதனைகளைச் சில குறிப்பிட்ட கிரகங்களினுடைய நிலையால் (Configuration or yogas) ஏற்படக் கூடிய பலனின் ஒரு நியம விதியை (Dogma) ப்பற்றிச் செய்து பார்க்க ஒரு மனிதனுடைய வாழ்நாள் பூராகவும் காற்றுக் கொண்டிருந்தாலும் கொஞ்சமான சந்தற்பங்கள் கூட நேரிடாமல் போய்விடக்கூடும். ஏனென்ருல் கிரகங்கள் மனிதனுடைய ஆதிக்கியத்திலாவது அல்லது கட்டுப்பாட்டிலாவது இருக்கவில்லை. உதாரணமாக ஒரு குறிப்பிட்ட சில கிரகங்கள் ஒரு ஜாதகத்தில் இருக்கும் நிலையால் (Configuration or yoga) உண்டாகக் கூடிய பலன் இவ்விதமான கிரக நிலை அமையும்போதெல்லாம் உண்டாகுமா உண்டாகாதா

என்று பார்க்க வேண்டுமானால் இவ்விதமான கிரக நிலை மறுபடியும் கூடிய சீக்கிரத்தில் சம்பவிப்பது பெரும்பாலும் அறிதாகி விடுகிறது. ஒரு சமயம் சம்பவித்தாலும் இவ்விதமான சம்பவங்கள் போதுமான எண்ணிக்கையுள்ள சம்பவங்களாக நேரிடுகிறதில்லை. ஆகையால் இந்தக் கொஞ்சமான எண்ணிக்கைகளையுடைய சம்பவங்களிலிருந்து யூகித்து ஏற்படுத்துகின்ற விதி பின்னால் நேரிடுகின்ற இதே விதமான கிரக நிலையையுடைய சில சம்பவங்களுக்கு மாத்திரம் ஒற்று வருகின்றது, சில சம்பவங்களில் ஒற்று வரா மலும் போய் விடுகின்றது. ஏனென்றால் இவ்விதி போதுமான எண்ணிக்கைகளையுடைய அதே கிரக நிலையையுடைய அநேக சம்பவங்களைப் பரிசோதித்து ஏற்படுத்தியிருந்தால் இவ்விதமாகத் தவறிப் போவதற்கு முகாந்தரம் உண்டாகாது. போதுமான அநேக சம்பவங்களைப் பரிசோதித்து ஏற்படுத்தியுள்ள ஜோதிட சாஸ்திர விதிகள் பெரும்பாலும் உண்மையாகவே இருந்து வருகின்றன. இப்படிப்பட்ட விதிகள் ஜோதிட சாஸ்திரத்தில் அநேகம் இருந்து வருகின்றன; தவறிப்போகின்ற சில விதிகளும் அங்கும் இங்குமாக இருந்து வருகின்றன. இவ்விதிகள் மேற்கண்ட காரணத்தினால் ஏற்பட்டு இருக்கின்றன. காலம் செல்லச் செல்ல இவ் விதிகள் நாளடைவில் புழக்கத்தில் வராமல் விட்டு விடக்கூடும். இதனால் ஜோதிட சாஸ்திரம் இன்னம் உயர்ந்த நிலையை அடையக்கூடும். ஜோதிட சாஸ்திரத்தின் விரோதிகள் ஒரு குறிப்பிட்ட சில கிரகங்களின் நிலையால் (Configuration or collocation or yoga) உண்டாகக் கூடிய பலன் விஷயமாக உள்ள நியமவிதி (dogma or rule) பல ஜோதிட புத்தங்களில் ஒன்றுக்கொன்று முரண்பாடாகவும் அல்லது வித்தியாசமாகவும் கொடுக்கப்பட்டு இருக்கின்றன என்று புகார் செய்து இந்தச் சாஸ்திரத்தின் பேரில் குற்றஞ் சாட்டுகின்றார்கள். அல்லது இதைக் கண்டனஞ் செய்கிறார்கள். இவ்விதமாகச் சில சமயங்களில் நேரிட்டிருப்பதற்கு மேலே சொல்லியுள்ள காரணமே காரணமாகும் என்று ஜோதிடத்தின் பேரில் குற்றத்தைச் சாட்டுகின்றவர்களுக்கு ஜோதிடர்களும் ஜோதிடத்தில் நம்பிக்கையுள்ளவர்களும் சொல்லி அவர்களைச் சாந்தப்படுத்துவது அல்லது திருப்தி செய்வது ஜோதிட சாஸ்திரத்திற்குச் செய்கிற ஒரு பேருதவியாகும்.

3. ஜோதிட சாஸ்திரத்தின் பூர்வீகத்தன்மையைப்பற்றி இனி விசாரணை செய்யப்படும். இந்தியருடைய வேதங்களில் வானசாஸ்திரமும், ஜோதிட சாஸ்திரமும், ஜோதிட சாஸ்திரம் என்ற பொதுப்பெயரால் குறிக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் வேதங்களின் அங்கமாக காணப்பட்டிருக்கின்றன. ஜோதிட சாஸ்திரம் அதர்வணவேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. மஹாபாரதத்தில் குறிக்கப்பட்டுள்ள பஞ்சபாண்டவர்களில் சகாதேவன் ஒருவராவர். இவர் அதர்வணவேதத்தை நன்றாகப்படித்தவர். இவரைப் பாண்டவர்களின் எதிரிகக்ஷியைச் சேர்ந்தவர்களுக்கு தலைவராகிய துரியோதனர் வேண்டிக் கொள்ளவே மஹாபாரத யுத்தத்தை ஆரம்பிப்பதற்காக ஒரு நல்ல வேளையை அல்லது முகூர்த்தத்தை ஜோதிடசாஸ்திரத்தின் பிரகாரம் இவர் நிர்ணயித்துக்கொடுத்ததாக மஹாபாரதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த மஹாபாரத யுத்தம் துவாபரயுகம் முடிவில் சாலிவாகன சகாப்தம் ஆரம்பிப்பதற்குச் சுமார் நாலாயிரத்து நூற்றிருபத்திரண்டு வருஷங்களுக்கு முந்தி அல்லது கிருஸ்து பிறப்பதற்கு முந்தி சுமார் நாலாயிரத்து நாற்பத்தைந்து

வருஷங்களுக்கு முந்தி நடந்ததாக் காலகணிதர்கள் (Chronologists) சொல்லுகின்றார்கள். ஆகையால் மஹாபாரத யுத்தம் நடந்தது தற்காலத்திலிருந்து சுமார் ஆறுயிர வருஷங்களாகின்றது. மேலும் இந்து மத சம்மந்தமான புத்தகங்களில் ஸ்ரீராமர் பிறந்தபோது (அவதாரஞ் செய்தபோது) நவக்கிரகங்களில் ஐந்து கிரகங்கள் தங்களுடைய உச்ச ஸ்தானங்களில் இருந்ததாகவும், இராஜயோகத்தையும் அபாரமான நன்மைகளையும் தரக்கூடிய மிகவும் அநுகூலமான நிலைகளில் கிரகங்கள் இருந்ததாகவும் கண்டிருக்கின்றது. இதை ஒரு கூடார்த்த கதை அல்லது கட்டுக்கதை (Myth) என்று நிராகரித்துவிடாமல் இது ஒரு உண்மையான சம்பவம் என்று நாம் நம்புவோமானால் ஸ்ரீராமபிரான் பிறந்த காலத்தில் ஜோதிஷம் புழக்கத்திலிருந்தது என்று நம்பவேண்டியதாக விருக்கின்றது. நிலையான பவனச் சக்கரம் (Fixed Zodiac) என்று சொல்லப்படுகின்ற நட்சத்திர ராசி மண்டலத்தை (Siderial Zodiac or Nirayana Rasi mandalam) அனுசரித்து தற்காலத்திய கால நிர்ணய பண்டிதர்கள் (Chronologists) இராமர் பிறந்தது கிறிஸ்து பிறப்பதற்கு முந்தி சுமார் இரண்டாயிரத்து ஐம்பத்தைந்தாவது வருஷத்தில் (2055 B.C.) நேரிட்டது என்று சொல்லுகின்றார்கள். ஸ்ரீராமபிரானுடைய ஜாதகத்தில் சூரியன் மேஷராசியில் உச்சமாக விருக்கின்றார்; சந்திரன் நட்சத்திரமண்டலத்தில் புனர்வசு என்ற புனர்பூச நட்சத்திரத்தில் இருக்கின்றார். திதி சுக்லபக்ஷ நவமி திதியாகும். அங்காரகன், குரு, சுக்கிரன், சனி ஆகிய இந்த நான்கு கிரகங்களுங்கூட உச்சமாக விருக்கின்றார்கள். சூரியன் நிரயன மேஷராசியின் ஆரம்பத்தில் (அஃதாவது மேஷ ராசியில் பூஜ்யம் பாகை, பூஜ்யம் கலையையுடைய நிரயன ஸ்புடத்தையுடைய விடத்தில்) இருப்பதாகவும் சந்திரன் புனர்வசு நட்சத்திரத்தின் கடைசியில் 93 பாகை—20 கலையையுடைய நிரயன ஸ்புடத்தையுடைய விடத்தில் இருப்பதாகவும் பாவித்தாலுங்கூடச் சந்திரனுக்கும் சூரியனுக்கும் இடையிலுள்ள நிரயன ஸ்புடதூரம் (Niraayana Elongation of the Moon) 93 பாகை—20 கலைக்குமேல் ஏற்படாது. ஒரு திதிக்குறிய நிரயன ஸ்புடம் பன்னிரண்டு பாகை (12 degrees) ஆகும். இவ்விதமாகக்கணக்கிட 93 பாகை—20 கலைக்கு எட்டுதிதிகள் கூட முடிவுபெருவதற்கு இடமில்லை, அஃதாவது அஷ்டமிதிதி கூட முடிவதற்கு இடமில்லை. ஆகையால் இராமாயணத்தில் சொல்லிய பிரகாரம் ஸ்ரீராமபிரான் பிறந்தபோது (நிரயன இராசிச்சக்கர ரீதியாய்க் கணிதஞ் செய்து பார்ப்போமானால்) நவமிதிதி ஆரம்பித்திருக்கக்கூட முடியாது. ஆகையால் ஸ்ரீராமருடைய ஜாதகம் நிரயன இராசி மண்டல ரீதியாய்க் கணிக்கப்பட்டிருக்க முடியாது, கிரகங்களும் ஜாதகத்தில் கண்டபடி ஆகாயத்தில் உண்மையில் நிரயன கணிதம் பிரகாரம் இருந்திருக்கவும் முடியாது, ஆனால் இந்த ஜாதகம் உண்மையான ஜாதகமாக விருந்தால் சூரியன் நிரயன மேஷராசியில் அல்லாமல் இன்னொரு விடத்தில் இருந்திருக்க வேண்டும். சூரியனை 2 பாகை—40 கலை (அஃதாவது அஷ்டமி திதி முடிந்து நவமிதிதி ஆரம்பிப்பதற்குத் தேவையான 96 பாகையிலிருந்து புனர்பூசம் முடியத்தேவையான 93 பாகை—20 கலையைக் கழிக்க வருகின்ற 2 பாகை—40 கலை)க்குக் குறையாமல் பின்பக்கமாக, வக்கிர கதியாகத் தள்ளுவோமானால், ஸ்ரீராமருடைய ஜாதகம் நிரயன கணிதத்தில் உண்மையான ஜாதகமாகும்; இவ்விதமாகத் தள்ளுவோமானால் சூரியன் நிரயன

மீனராசியில் போய்விடும், அப்போது சூரியன் உச்சமாக விருந்திருக்க முடியாது. ஆகையால் சூரியன் சாயன கணிதரீதியான மேஷராசியில் இருந்திருக்கவேணும். இவ்விதமானால் சூரியன் சாயன மேஷராசியில் உச்சத்திலிருந்திருக்கக்கூடும். ஸ்ரீராமபிரான் அவதரித்தகாலத்தில் சூரியன் நட்சத்திர மண்டலத்தில் பூர்வபாத்ரபதா நட்சத்திரம் என்ற பூரட்டாதி நட்சத்திரதிலும் (Constellational Poorva-Bhaadrapadhaa), சந்திரன் நட்சத்திரத் மண்டத்தில் புனர்பூச நட்சத்திரத்திலும் (Constellational Punarvasu) இருந்ததாகச் சிலர் சொல்லுகின்றார்கள்—அப்போது மேஷாயனம் (Vernal Equinoctial Point) கூட பூர்வபாத்ரபதா நட்சத்திரத்தில் இருந்ததாகவுஞ் சொல்லுகின்றார்கள். இந்த மேஷாயனம் இப்போது உத்திரபாத்திரபதா நட்சத்திரத்தில் (Constellational uttira-bhaadrapadhaa) இருந்து வருகின்றது. ஆகையால் ஸ்ரீராமபிரான் அவதாரஞ் செய்த காலத்தில் மேஷாயனம் இப்போது இருக்கின்ற விடத்தைத் தாண்டிப் போய் இருக்க வேண்டும்; இவ்விதமாக அதிகதூரம் மேற்கே தாண்டிப்போய் இருக்க வேண்டும். அஃதாவது மேஷாயனம் ஸ்ரீராமர் பிறந்தகாலத்திற்குப் பிறகு இதுவரையிலும் தோராயமாக ஒரு சுற்று (One revolution) சுழண்டுபோய் இருக்கவேண்டும். மேஷாயனம் ஆகாயத்தில் இராசிமண்டலத்தை சுமார் இருபத்தையாயிரத்து எண்ணூறு (25,800 Years) வருஷங்களுக்கு அல்லது சுமார் இருபத்தாருயிரம் (26,00 Years) வருஷங்களுக்கு ஒருதரம் சுற்றிவருகிறது, ஸ்ரீராமபிரானுடைய ஜாதகம் உண்மையானது, அஃதாவது ஐந்து கிரகங்கள் உச்சமாகவிருந்தன, ஜனன நட்சத்திரம் புனர்வசு, ஜனனதிதி சுக்கில நவமிதிதி என்று அங்கீகாரஞ் செய்வதுடன் ஸ்ரீராமருடைய ஜாதகம் சாயன கணிதரீதியாய்க் கணிக்கப்பட்டிருக்கவேண்டும் என்றும் தீர்மானஞ் செய்வோமானால் ஸ்ரீராமபிரான் அவதாரஞ் செய்த காலம் குறைந்த பட்சம் சுமார் இருபதாயிரம் வருஷங்களுக்கு முந்தியே இருந்திருக்கவேண்டும். ஸ்ரீராமாவதாரம் எத்தனையோயாயிரம் வருஷங்களுக்கு முந்தி நேர்ந்தது என்று அநேக காலமாக சகல ஜனங்களிடத்தில் நம்பிக்கை இருந்து வருவதால் ஸ்ரீராமபிரான் ஜாதகம் சாயனரீதியாகவே கணிக்கப்பட்டிருக்கவேண்டும் என்ற கொள்கை பொருத்த முடையதாக விருக்கும். இவ்விதமாகத் தீர்மானஞ் செய்வோமானால் ஜோதிடசாஸ்திரம் சுமார் இருபதாயிரம் வருஷங்களுக்குக் குறையாத பூர்வீகத்தன்மையை (Antiquity) உடைய சாஸ்திரமாகும் என்பதற்குச் சந்தேகமே இல்லை. சிலர் ஸ்ரீராமபிரானுடைய ஜாதகம் உண்மையான ஜாதகம் அல்லவென்றும் வால்மீகி கவியானவர் தன்னுடைய கதாநாயகராகிய (Hero) ஸ்ரீராமபிரானுக்கு அதிக செல்வத்தையும் செல்வாக்கையும் கௌரவத்தையும் கொடுக்கக்கூடிய ஒரு பொய்யான, மனக்கற்பிதமா (Imaginary) ஜாதகத்தைக் கல்பித்துக் கொடுத்துவிட்டார் என்றும், இவ்விதமாகப் புலவர்கள் தங்களுடைய கதாநாயகர்களுக்கு மிகவும் சிறந்த, செல்வாக்கான, செல்வத்தைத்தரக் கூடிய, அதிக கீர்த்தியையுடைய ஜாதகங்களை கல்பனையாக ஏற்படுத்திக் கொடுத்துவிடுவது சகஜமானது என்று நினைக்கின்றார்கள். ஆனால் இவ்விதமாக நினைக்கின்றவர்களைப்பற்றி நாம் கவலைப்படவேண்டிய அவசியமில்லை. இவர்களிடத்தில் நாம் பச்சாதாபம் வைத்துக்கொண்டு இவர்கள் போகின்ற வழியிலேயே இவர்களை விட்டுவிடுவது நலமாகும்.

4, மிகவும் பழமையான காலங்களில் வானசாஸ்திரமும் ஜோதிட சாஸ்திரமும் ஒன்றாகவே புழக்கத்தில் இருந்துவந்தன. இவ்விதமாக இவைகள் இரண்டும் இந்து தேசத்திலும், சீனதேசத்திலும் (China), எகிப்து தேசத்திலும் (Egypt), பேபிலோனியா (Babylonia) என்ற தேசத்திலும், கால்டியா (Chaldea) என்ற தேசத்திலும் பழக்கத்திலிருந்து வந்திருக்கின்றன. லாக்கியர் (Lockyer) என்பவருடைய புத்தகமாகிய "ஸ்டார்—கேஜிங்கு" (Star-gazing) என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள சீனதேசத்திய பிரக்யாதியான ஐந்து கிரகக்கூட்டம் என்பது (the famous Chinese conjunction of five planets) கிருஸ்து பிறப்பதற்கு முன்னே இரண்டாயிரத்து நானூற்றி நாற்பத்தொன்பதாவது வருஷத்தில் (2449 B.C.) சம்பவித்திருக்கின்றது. இதை ஜனங்கள் அக்காலத்தில் கவனித்திருக்கின்றார்கள். பராசர மஹரிஷியானவர் தன்னுடைய ஹோரா சாஸ்திரமாகிய ஜோதிட சாஸ்திரத்தில் உடுதசை என்ற நக்ஷத்திர தசையின் வரிசைக் கிரமத்தைத் தெரிவித்திருக்கின்றார். இவ்விதமான வரிசைக் கிரமத்தில் எழுகிரகங்களும் ஒருகாலத்தில் ஆகாயத்தில் உண்மையாகவே இருந்தனவென்றும், இவ்விதமான மிகவும் பெருமைவாய்ந்த கிரக வரிசை கிருஸ்து பிறப்பதற்கு முன்னே இரண்டாயிரத்து நானூற்றைம்பதாவது வருஷத்தில் (2450 B.C.) நேரிட்டதென்றும் மேல்நாட்டு ஆராய்ச்சியாளர்கள் (Research Scholars) கூறுகின்றார்கள். இந்து தேசத்தாருடைய ஜோதிடசாஸ்திரத்தின் இராசிமண்டலத்தின் வயதைப்பற்றி அஃதாவது இந்த ராசிமண்டலம் உண்டான ஏற்படுத்தப்பட்ட காலத்தைப் பற்றி (Age of the Hindu Zodiac) சர் வில்லியம் ஜோன்ஸ் (Sir William Jones), மிஸ்டர் கோல்புருக் (Mr. Colebrooke) சர் டப்ளியூ. டிரம்மாண்டு (Sir W. Drummond), மிஸ்டர் எம். பெய்லி (Mr. M. Bailly) ஆகிய இவர்களைப் போன்ற கீழ்த் திசைப்பாஷைகளில் வல்லவர்களும் (Orientalists), நூலாசிரியர்களும் (Writers) பரிசோதனைகளைச் செய்து வெவ்வேறான தீர்மானங்களுக்கு வந்திருக்கின்றார்கள். கீழ்த்திசைப் பாஷைகளில் வல்லவர்களால் எழுதப்பட்டவைகளுள் அதிகமேன்மையுடனும் கௌரவத்துடனும் மதிக்கப்பட்டதும் மிஸ்டர் பெய்லி (Mr. Bailly) அவர்களால் எழுதப்பட்டதுமான "அஸ்ட்டி ரானமி இன்டியன்" (Astronomie Indienne) என்ற புத்தகத்தில் இவரே இந்துக்களுடைய இராசி மண்டலம் கிறிஸ்து பிறப்பதற்கு முன்னே சுமார் இரண்டாயிரத் திருநூற்றைம்பதாவது வருஷத்தில் (2250 B.C.) ஏற்படுத்தப்பட்டது என்று நிர்மானித்திருக்கின்றார். இக்காலம் இப்போதைக்கிருந்து சுமார் நாலாயிரத்திருநூற்றுறு வருஷங்களுக்கு முந்தியாகும். வராஹமிகிராச்சாரியார் தன்னுடைய பிருஹத் சம்ஹிதா என்ற சமஸ்கிருத கிரந்தத்தின் மூன்றாவது அத்தியாயத்தில் கடகாயனம் (Somme Solstice) ஒரு காலத்தில் ஆஷ்லேஷா என்ற ஆயில்ய நட்சத்திரத்தின் மத்தியிலும், மகராயனம் தனிஷ்டா என்ற அவிட்ட நட்சத்திரத்தின் ஆரம்பத்திலும் தன்காலத்திய புராதீனமான சாஸ்திரங்கள் பிரகாரம் இருந்தனவென்றும் ஆனால் தன்னுடைய காலத்தில் சூரியன் கடகராசியின் ஆரம்பத்திலிருந்தே வடக்கிலிருந்து தெற்குத்திக்கை நோக்கிச் செல்ல ஆரம்பிக்கின்றார் என்றும், மகர

ராசியின் ஆரம்பத்திலிருந்தே தெற்கிலிருந்து வடக்குத்திக்கை நோக்கிச் செல்ல ஆரம்பிக்கின்றார் என்றும் வெளிப்படையாகச் சொல்லியிருக்கின்றார். இவ்விதமாகச் சொல்லியிருப்பதிலிருந்து இவருடைய காலத்துப் புராதீனமான காலத்துக் கிரந்தகர்த்தாகள் கிருஸ்து பிறப்பதற்கு முன்னே சுமார் ஆயிரத்திருநூற்றிருபத்தொன்பதாவது வருஷத்தில் (1229 B.C.) அ∴தாவது இப்போதிருந்து சுமார் மூவாயிரத்து நூற்றெண்பத்தைந்து வருஷங்களுக்கு முந்தியே இருந்திருக்கவேண்டும் என்று ஏற்படுகின்றது. வராஹ மிஹிரர் அடிக்கடி மிகவும் புகழ்பெற்ற ஜோதிடர்களாகிய பராசர மஹரிஷியையும் கர்கமஹரிஷியையும் பற்றிக் குறிப்பிடுகின்றார். ஆகையால் இவர் தன்னுடைய பூர்வீக காலத்திய கிரந்தகர்த்தர்கள் என்று சொல்லிய போது இவர் இவ்விரண்டு மகரிஷிகளைத் தன்னுடைய மனதில் வைத்துக் கொண்டு சொல்லியிருக்கவேண்டும் என்று யூகிக்கவேண்டியதாக விருக்கின்றது. நாரதமஹரிஷி ஜோதிடசாஸ்திரத்தின் பிரிவுகளாகிய பலபாகம், முகூர்த்த பாகம் ஆகிய இவைகளைப் பற்றித் தன்னுடைய சம்ஹிதையாகிய “நாரதசம்ஹிதையில்” எழுதியிருக்கின்றார். இவர் இவ்விரண்டு மகரிஷிகளுக்கும் வெகுகாலத்திற்கு முன்பே இருந்தவராவர். இவரைப்பற்றி ஆலோசிப்போமானால் ஜோதிடசாஸ்திரம் மனதிற்கெட்டாத வெகுகாலத்திற்கு முந்தியே இருந்து வந்திருக்கவேண்டும் என்று தோற்றுகின்றது. ஜோதிட சாஸ்திரத்தின் பூர்விகத்தைப்பற்றிப் பேசும்போது இதுவரையிலும் இந்தியாவைப்பற்றியும் இத்தேசத்து வானசாஸ்திரிகள், ஜோதிடர்கள் ஆகிய இவர்களைப்பற்றியும் விஷயங்கள் சொல்லப்பட்டன.

ஜோதிடத்தின் பூர்வீக விஷயமாகச் சீனு (China) தேசம் அடுத்தபடியே வருகின்றது. நாம் முந்தியே குறிப்பிட்டுள்ள பிரக்கியாதிபெற்ற சீனு தேசத்திய ஐந்து கிரகக் கூட்டமானது வான சாஸ்திரமும் ஜோதிடமும் கிறிஸ்து பிறப்பதற்கு முன்னே சுமார் இரண்டாயிரத்து நானூற்றி நாற்பத்தொன்பதாவது வருஷத்திலிருந்து (2449 B.C.) சீனுவில் புழக்கத்திலிருந்து வருகின்றன என்று குறிப்பிடுகின்றதாகும். சீனு தேசம் தன்னுடைய வான சாஸ்திரத்தையும் ஜோதிட சாஸ்திரத்தையும் இந்தியா தேசத்திலிருந்து கற்றுக் கொண்டதாகச் சிலர் அபிப்பிராயப்படுகின்றார்கள், இன்னும் சிலர் எதிரிடையாக அபிப்பிராயப்படுகின்றார்கள். இந்தியாவிற்கும் சீனு தேசத்திற்கும் இடையே கடந்து தாண்டிப் போகமுடியாத தடையாகிய இமயமலை இருப்பதால் மேற்குறித்த சீனு தேசத்து ஐந்து கிரகக் கூட்டம் சம்பவித்த காலத்திலாவது அல்லது கர்கர், பராசரர், நாரதர் ஆகிய இவர்கள் இருந்த காலத்திலாவது இந்தியாவிலிருந்து சீனு தேசத்திற்கும் அல்லது சீனு தேசத்திலிருந்து இந்தியா தேசத்திற்காவது ஜோதிட சாஸ்திரத்தின் ஞானம் அல்லது ஜோதிடவித்தை நேராகப் போய் இருந்திருக்கமுடியாதென்று அபிப்பிராயப்படுகின்றார்கள். ஜோதிட சாஸ்திரத்தின் மூலதாரங்கள், மூல சித்தாந்தங்கள், என்று சொல்லப்பட்டவைகளும் கிரகங்களும், நட்சத்திரங்களும், கிழமைகளும் இரண்டு தேசத்தார்களுக்கும் பொதுவானவைகளாக விருந்து வருகின்றன. மேலும் இந்தியாவில் உற்பத்தியான பௌத்த மதத்தையும் அதனுடைய சித்தாந்தங்களையும் கொள்கைகளையும் எவ்விதமாக சீனு

தேசத்தார் வெகுகாலத்திற்கு முந்தியே தெரிந்து கொண்டு நாளது வரையிலும் அநுஷ்டித்து வருகின்றார்களோ அவ்விதமாகவே அ∴தாவது அந்த வழியாகவே அவர்கள் இந்து தேசத்தாருடைய ஜோதிட சாஸ்திரத்தின் மூலாதாரங்களையும் மூல சித்தாந்தங்களையும் தெரிந்து கொண்டிருக்கவேண்டும் என்று அபிப்பிராயப்படுவதற்கு இடந்தருகின்றது. ஆனல் இவ்விரண்டு தேசத்தார்களும் இவைகளை ஒருவரிடத்திலிருந்து மற்றொருவர் கற்றுக் கொள்ளவில்லை என்று அபிப்பிராயப்படுவோமானல் இவைகள் இரண்டு தேசத்தார்களுடைய ஜோதிட சாஸ்திரங்களில் ஒற்றுமையுடையனவாயப் பொதுவாகவிருப்பதால் இவைகளை இவ்விரண்டு தேசத்தார்களும் வேறு ஓர தேசத்தாரிடமிருந்து தெரிந்து கொண்டிருக்க வேண்டும் என்று அபிப்பிராயப்படுவதற்கு இடமுண்டாகின்றது.

மேல் நாட்டார்களின் தேசங்களாகிய எகிப்து (Egypt), பேபிலோனியா (Babylonia), கால்டியா (Chaldea), கிரேக் என்ற கிரீஸ் (Greece), அஸ்ஸிரியா (Assyria), என்ற தேசங்களுக்குள் கால்டியா தேசத்தார் அல்லது எகிப்து தேசத்தார்தான் வெகுகாலமாக வான சாஸ்திரம் ஜோதிடம் ஆகிய இவைகளின் ஞானத்தை உடையவர்கள் என்று பாராட்டப்பட்டு வந்திருக்கின்றார்கள். இவ்விரு தேசத்தார்களுக்குள், கால்டியா தேசத்தாரா அல்லது எகிப்து தேசத்தாரா முதல் முதல் ஜோதிடத்தை உண்டு பண்ணினவர்கள் என்ற பிரச்னை அல்லது வினு (question) வெகுகாலமாக வாக்கு வாதத்தில் அல்லது தர்க்கத்தில் (controversy) இருந்து வந்தது. ஆனல் கால்டியா தேசத்தில்தான் ஜோதிட சாஸ்திரமும் உண்டாக்கப்பட்டது என்று இப்போது ஒருவாராக ஒரு முடிவிற்கு வந்திருக்கின்றார்கள். கால்டியா தேசத்தில் ஜோதிட சாஸ்திரம், அகாடி (Agadi) யாவைச் சார்ந்த ஓராவது சார்கான் (Sargon I) என்பவருடைய சிலா ஸ்தாபனங்கள், சிறிய பீடங்கள் அல்லது பதக்கங்களில் (tablets) எழுதப்பட்டிருக்கின்றது. இந்த ஜோதிட சாஸ்திரம்தான் இவ்விடத்தில் மிகவும் புராதீனமான ஜோதிட சாஸ்திரமாகும். ஓராவது சார்கான் என்பவர் சிலருடைய அபிப்பிராயம் பிரகாரம் கிறிஸ்து பிறப்பதற்கு முன்னே சுமார் மூவாயிரத்து எண்ணூறு வருஷங்களுக்கு முன் (3800 B.C.) இருந்ததாகவும் இன்னம் சிலருடைய அபிப்பிராயப்படி கிறிஸ்து பிறப்பதற்கு முன்னே சுமார் இரண்டாயிரத்து எழுநூறு வருஷங்களுக்கு முன்னே (2700 B.C.) இருந்ததாகவும் ஏற்படுகின்றது. கிரகங்கள் அஸ்தமனமும் உதையமும் அடைவதைப் போலவே நட்சத்திரங்களும் உதையமும் அஸ்தமனமும் அடைகின்ற சம்பவங்களிலிருந்து (heliacal risings and settings of stars) எகிப்து தேசத்தார் (Egyptians) 365¼ நாள் கொண்ட சௌரமான வருஷத்தின் அளவையும், சம்பவங்களைப் பார்த்துக் குறிப்பிடுகின்ற தங்களுடைய சக்தியினுல் கடகாயனமும் மகராயனமும் (Solstices) இருக்கும் இடங்களையும் நிர்ணயஞ் செய்ததுமன்றி, அசையாமல் இருக்கின்ற நட்சத்திரங்களைக்கொண்டு தாராகணங்கள் என்ற நட்சத்திரக் கூட்டங்களையும் (Constellations) ஏற்படுத்தினர்கள் என்றும் இவர்கள் கிறிஸ்து பிறப்பதற்கு முந்தி சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு முன்னமே இவ்விதமாகச் செய்தார்கள்

என்றும் ஆகர்ஷண சக்தி என்ற நிலக் கவர்ச்சி சக்தி (gravitation) யைக் கண்டுபிடித்த சர் ஐசக் நியூடன் (Sir Isaac Newton) என்ற விஞ்ஞானி சொல்லி இருக்கின்றார். இந்த எகிப்த்து தேசத்தார்கள் ஆகாயத்தில் கிரகங்கள் செல்லுகின்ற கிரக கமனம் என்ற கிரக சலனங்களைப் பார்த்துக்கொண்டும் பரிசோதனை செய்துகொண்டும் வந்தார்கள். செயிஸ் (Sais) என்ற நாட்டின் அரசராகிய நிஸிப்ஸ்ஸாஸ் (Nicepsos or Nechepsos) என்பவர் எகிப்த்தின் பாதிரியாகிய பிடாஸிரிஸ் (Petosiris) என்பவருடைய உதவியினால் கிருஸ்து பிறப்பதற்கு முன்னே எழுநூற்றெழுபத்திரண்டாவது வருஷத்தில் (772 B.C.) ஜோதிட சாஸ்திரத்தை உண்டு பண்ணினார். இவ்விதமாக நியூடன் (Newton) தெரிவித்திருக்கின்றார். பிடாஸிரிஸ் (Petosiris) என்பவர் எகிப்த்து தேசத்து ஒரு ஜோதிடர் என்று கருதப்பட்டு வந்திருக்கின்றது, ஆனால் இவர் உண்மையிலே ஒரு கால்டியா தேசத்தவராவர் (Chaldean). இந்த பிடாஸிரிஸ் உண்மையிலே கால்டியா தேசத்தவராயிருந்தபடியால் கால்டியா தேசத்து ஜோதிட சாஸ்திரத்தை இவர் நன்றாகப் படித்து அதிலுள்ள சாராம்சங்கள் எல்லாவற்றையும் தான் புதியதாக உண்டுபண்ணிய ஜோதிட சாஸ்திரத்தில் நுழைத்து விட்டார். பிறகு ஜோதிட சாஸ்திரம் கால்டியா (Chaldea) தேசத்திலிருந்து கிரேக் (Greece) தேசத்திற்குக்கொண்டு போகப்பட்டது. பேபிலோனியா ராஜாங்கம் (Babylonian Kingdom) தோல்வியடைந்து அழிக்கப்பட்டு அஸ்ஸிரியா (Assyria) தேசத்தின் ஆளுகைக்குள் வந்துவிடவே, பேபிலோனியாவிலும் (Babylonia) கால்டியாவிலும் (Chaldea) இருந்த சில கால்டியர்கள் (Chaldeans) கிரேக் (Greece) தேசத்திற்கு ஓடிப்போய் அங்கு நிலைத்துவிட்டார்கள். இவர்களால் மேற்சொல்லியபடி ஜோதிட சாஸ்திரம் கிரேக் தேசத்திற்குக் கொண்டுபோகப்பட்டது என்று ஏற்படுகிறது. எபிரேயருடைய ஜோதிட சாஸ்திரம் கூட (Hebrew Astrology) கால்டியா தேசத்தாருடைய ஜோதிட சாஸ்திரத்தை அடிப்படையாக உடையதாகும் : அஃதாவது அது கால்டியருடைய ஜோதிடத்தை அனுசரித்து உண்டாக்கப்பட்டதாகும். ஏனென்றால் எப்ரஹாம் (Abraham) என்பவர் உர் (Ur) என்ற நாட்டிலிருந்து ஓடிப்போய்விட்ட கால்டியா தேசத்தாராவர். மேலும் எகிப்த்து தேசத்தாருடைய வித்தைகளையும் ஞானத்தையும் (knowledge and culture) மோஸஸ் (Moses) என்பவர் கூட கிரகித்தவராவர். மேல்நாட்டு தேசங்களில் கால்டியா என்ற தேசத்தில் ஜோதிட சாஸ்திரம் முதல் முதல் ஏற்படுத்தப்பட்டதென்றும், பிறகு இவ்விடத்திலிருந்து இதர தேசங்களாகிய எகிப்த்து, பேபிலோனியா, அஸ்ஸிரியா, கிரேக் முதலிய தேசங்களுக்குக் கொண்டுபோகப்பட்டதென்றும் நான் இதுவரையிலும் இவ்விதமாக விளக்கியிருக்கின்றேன்.

இனிமேல் மூன்று தேசங்களாகிய இந்தியா (India), சின (China), கால்டியா (Chaldea) ஆகிய இவைகளில் எந்தத் தேசம் ஜோதிட சாஸ்திரத்தை முதல் முதல் உண்டாக்கியதென்ற பிரச்னையையும் அல்லது எந்தத் தேசம் எந்தத் தேசத்திலிருந்து ஜோதிட சாஸ்திரத்தைக் கற்றுக்கொண்டது என்ற பிரச்னையையும் பற்றிக் கவனிப்போம். இந்தியாவும் சீனவும் சம்பந்தப்பட்ட வரையிலும், பூகோள இயற்கை அமைப்பினால் ஆகாய விமான மூலமாக ஆகாயப் பிரயாணம் இல்லாத முற்காலத்தில், இவ்விரண்டு தேசத்தார்களுக்கும் நேராக யாதொரு போக்குவரத்துகளும் சம்பந்தமும் இருந்திருக்க முடியாது என்றும், ஆனால் எவ்விதத்திலோ இந்து தேசத்திலுண்டாக்கப்பட்ட பௌத்த மதத்தின் கொள்கைகளைக் கிரகித்துக்கொண்ட சீன தேசமானது அவ்விதத்திலேயே ஜோதிட சாஸ்திரத்தைக்கூட இந்தியா தேசத்திலிருந்து கிரகித்துக் கொண்டிருக்க வேண்டும் என்றும் அல்லது இவ்விரண்டு தேசங்களும் ஏதோ ஒரு பொதுவான தேசத்திலிருந்து ஜோதிட சாஸ்திரத்தின் மூலாதாரங்களை மாத்திரம் கிரகித்துக் கொண்டிருக்கவேண்டும் என்றும் நான் முன்னமே மேலே சொல்லியிருக்கின்றேன். இந்துக்கள் தங்களுடைய வான சாஸ்திரம், ஜோதிட சாஸ்திரம் ஆகிய இவைகளின் மூலாதாரங்களையும் முக்கியமான தத்துவங்களையும் கிரேக் (Greece) தேசத்தாரிடமிருந்து கிரகித்துக் கொண்டார்கள் என்று அபிப்பிராயப் படுகின்ற சிலர் இருக்கின்றார்கள். இவர்களைவிட இன்னம் இந்த அபிப்பிராயத்தில் அதிக தூரஞ் செல்லுகின்றவர்களும் இருக்கின்றார்கள், இவர் இந்துக்களுடைய வான சாஸ்திரமும் ஜோதிட சாஸ்திரமும் கிரேக் தேசத்தாருடைய வான சாஸ்திரமும், ஜோதிட சாஸ்திரம் ஆகிய இவைகளின் "அசல் நகல்கள்" (Facsimiles) என்று கருதுகின்றார்கள். இந்துக்கள் தங்களுடைய ஜோதிட விஷயங்களை அல்லது ஜோதிட ஞானத்தைக் கிரேக் தேசத்தாரிடமிருந்து கற்றுக்கொண்டார்களா அல்லது கிரகித்துக் கொண்டார்களா இல்லையா என்ற விஷயத்தையும், ஒரு சமயம் கற்றுக்கொண்டோ அல்லது கிரகித்துக் கொண்டோவிருந்தால் எவ்வளவு வரையிலும் இவ்விதமாகச் செய்திருக்கக்கூடும் என்ற விஷயத்தையும் இனிமேல் ஆராய்ச்சி செய்யலாம். ஸ்ரீ ராமபிரானுடைய ஜாதகம், ஜோதிட சாஸ்திரம் சுமார் இருபதாயிரம் வருஷங்களுக்கு முந்தியே இந்தியாவில் புழங்கி வந்திருக்கின்றது என்று தெரிவிக்கின்றது என்று நான் முந்தியே சொல்லி இருக்கின்றேன். மஹாபாரதத்திலுள்ள சோதிட சம்பந்தமான விஷயங்கள் சுமார் இன்றைக் கிருந்து ஆறுயிரம் வருஷங்களுக்கு முந்தியே நடந்த சம்பவங்களைக் குறிக்கின்றனவாகும். நாம் முந்தியே குறிப்பிட்டுள்ள ஒராவது சார்கான் (Sargon I) என்றவருடைய சிலா ஸ்தாபனங்கள், சிறிய பீடங்கள் அல்லது பதக்கங்கள் (Tablets) கிறிஸ்து பிறப்பதற்கு முந்தி சுமார் இரண்டாயிரத்தெழுநூறு வருஷங்களுக்கு (2700 B.C.) முந்தி ஏற்படுத்தப்பட்டன ; இவைகளில்தான் கால்டியா தேசத்திய ஜோதிட சாஸ்திரத்தின் ஆரம்ப விஷயங்கள் (the first traces of Chaldean astrology) முதல்முதல் தென்படுகின்றன. கால்டியா தேசத்திய ஜோதிட சாஸ்திரம் தன்னுடைய கெற்பஸ்திதி நிலையில் (its embryonic condition) இருந்த காலத்திலேயே இந்து ஜோதிட சாஸ்திரம் பெரும்பாலும் தன்னுடைய உன்னத நிலையை அடைந்து விட்டது என்று நாரதமஹரிஷி, வசிஷ்ட மஹரிஷி, பராசர மஹரிஷி ஆகிய இவர்களுடைய ஜோதிட கிரந்தங்கள் தெரிவிக்கின்றன, மேலும் தங்களுடைய மூதாதைகளின் காலத்தில் கடகாயனம் (Summer Solstice) ஆஷ்லேஷ நட்சத்திரத்தின் மத்தியில் இருந்தது என்று தன்னுடைய பிருஹத் சம்ஹிதையில் வராஹமிகிராச்சாரியார் சொல்லியிருப்பதும், இவருக்கு முந்தியும் நாரதமஹரிஷியின் காலம் வரையிலும் இடையிலுள்ளக் காலங்களில் இருந்த இந்து ஜோதிடர்களின் பரம்பரையானதும்

கிறிஸ்து பிறப்பதற்கு முந்தி இரண்டாயிரத் தெழுநூறு (2700 B.C.) வருஷங்களுக்கு முன்னேயுள்ள அநேக நூற்றுண்டுகளைக் குறிக்கின்றன. கால்டியா தேசத்து ஜோதிட சாஸ்திரம் எகிப்த்து தேசத்து ஜோதிட சாஸ்திரத்தில் மிகவும் அதிகமாகப் புலப்படுகின்றது. மேலும் எகிப்த்து தேசத்திய ஜோதிட சாஸ்திரமானது "கிளாடியஸ் டாலமி" (Claudius Ptolemy) என்பவருடைய கிரேக் தேசத்து ஜோதிட சாஸ்திரத்தில் அதிகமாக அடங்கி இருக்கின்றது. கிறிஸ்து பிறப்பதற்கு முந்தி இரண்டாயிரத் திருநூற்று முப்பது (2230 B.C.) வருஷங்களுக்கு முன்னே இருந்து இதற்குப் பிறகு ஆயிரத்தறுநூறு (1600) வருஷ காலங்களில் பேபிலோனியர்களால் (Babylonians) வான சாஸ்திரம் சம்பந்தமாக ஆகாயத்தில் பார்க்கப்பட்ட விஷயங்கள் அடங்கியுள்ள அநேக சிலா ஸ்தாபனங்கள் (Tablets containing the astronomical observations of the Babylonians for a period of about 1600 years after 2230 B.C.) இருக்கின்றன. பேபிலோனியருடைய ராஜ்யம் அழிந்து விட்ட பிறகு அரிஸ்டாட்டில் (Aristottle) என்ற ஒரு தத்துவ விசாரகர் அல்லது வேதாந்தியின் (Philosopher) விருப்பத்தின் பேரில் அலெக்ஸாண்டர் தி கிரேட் (Alexander, the Great) என்ற ஒரு போர் வீரனின் சைன்னிபத்தின் தளகர்த்தராகவிருந்த கால்லிஸ்தீனிஸ் (Callisthenes) என்பவரால் இந்த அநேக சிலா ஸ்தாபனங்கள் (Tablets) சேகரிக்கப்பட்டு இந்தப் போர் வீரருக்குக் கொடுக்கப்படவே, இந்தப் போர் வீரருடைய சிநேகிதராகிய சோடர் டாலமி (Soter Ptolemy) என்பவரால் ஸ்தாபனஞ் செய்யப்பட்டு அலெக்ஸாண்டிரியா(Alexandria) என்ற பட்டணத்திலுள்ள ஒரு புஸ்தகாலயத்திற்கு (Library)-க் கடைசியாக இந்தப் போர்வீரரால் அனுப்பப்பட்டு அவ்விடத்தில் இவைகள் இருந்துவருகின்றன. மிகவும் பிரக்யாதிபெற்ற கணித சாஸ்திரியாகவும், வான சாஸ்திரியாகவும், கிரேக் தேசத்து ஜோதிட சாஸ்திரத்தின் ஆசிரியராகவும் இருந்த கிளாடியஸ் டாலமி (Clandius Ptolemy) என்றவர் அலெக்ஸாண்டிரியா (Alexandria) என்ற நகரத்தில் வாசித்த காலத்தில் இவர் இந்த புஸ்தகாலயத்திற்கு அல்லது புத்தக சாலைக்குப் போய்ப் படித்து இந்த சிலாஸ்தாபனங்களிலுள்ள அநேகவான சாஸ்திர ஜோதிட சாஸ்திர விஷயங்களைத் தன்னுல் எழுதப்பட்ட, சிறப்பு வாய்ந்த கிரந்தங்களாகிய டெட்ராபிப்லாஸ் (Tetrobiblos), ஆல்மகெஸ்ட் (Almagest) என்று பெயருள்ள புத்தகங்களில் உபயோகப் படுத்திருக்கின்ருர். கிரேக் ஜோதிட சாஸ்திரத்தில் வித்தியாசமுள்ள இரண்டு வகுப்புகள் இருக்கின்றன. இவைகள் டாலமி என்பவரால் (Ptolemy) குறிப்பிடப்பட்ட ஒரு வகுப்பும், மணீலியஸ் (Manilius) என்பவரால் குறிப்பிடப்பட்ட மற்றொரு வகுப்பும் ஆகும். மணீலியஸ் என்பவர் கிறிஸ்து பிறந்த பிறகு முதலாவது நூற்றுண்டிலிருந்த ஒரு லாடின் கவிஞர் அல்லது பாவலர் (Latin Poet) ஆவர். ஜோதிட சாஸ்திரத்தின் மூலாதாரங்கள் அடிப்படையானமூலதத்துவங்கள் (Fundamentals), ஆதார நியாயங்கள் அல்லது சுவீகிருத பக்ஷங்கள் (Postulates), மூலசூத்திரங்கள் என்ற சுயப்பிரமாணங்கள் (Axioms) ஆகிய இவைகள் சம்மந்தப்பட்ட வரையிலும் இந்து தேசத்திய ஜோதிட சாஸ்திரத்திற்கும் டாலமி என்பவருடைய கிரேக் தேசத்திய ஜோதிட சாஸ்திரத்திற்கும் கவனிக்கத்தக்க

அல்லது குறிப்பான உவமை, சமானம், ஒற்றுமை (remarkable similarity) இருந்த போதிலுங்கூட, ஜோதிடத்தின் மற்ற விஷயங்கள் சம்மந்தப்பட்ட வரையிலும் அபாரமான விஸ்தாரமான ஒவ்வாமை அல்லது வித்தியாசம் (vast divergency) இருக்கின்றது. இராசி மண்டலத்தை அஃதாவது இராசிகளை துவாதசாம்சங்களாகவும், சோடச வர்க்கங்களாகவும் பங்கிடுவதும் உடுதசை என்ற நட்சத்திர தசை எனபதிலும், காலச் சக்கிர தசை என்பதும் ஆகிய இவைகளும் இன்னம் சில விஷயங்களும் இந்து ஜோதிட சாஸ்திரத்திற்கே பிரத்தியேகமாக உறிய, சிரேஷ்டமான, நிகரில்லாத விஷயங்களாகும். இவ் விஷயங்களும் இந்து ஜோதிட சாஸ்திரத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள இன்னம் அநேக விதமான உயர்ந்த சித்தாந்தங்களும், நியமங்களும், விதிகளும் (Principles, Dogmas, Rules) வழிகளும் (Methods) இந்து தேசத்து ஜோதிட சாஸ்திரமும் கிரேக் தேசத்து ஜோதிட சாஸ்திரமும் பெரும்பாலும் பூராகவும் வெவ்வேருனவைகளே தவிர ஒற்றுமையானவைகள் அல்லவென்று யாதொரு சந்தேகத்திற்கும் வாக்கு வாதத்திற்கும் இடம் இல்லாதபடிக்கு எடுத்துக் காட்டுகின்றனவாகும். ஒரு சமயம் இந்திய ஜோதிட சாஸ்திரம் அதிகமாக விருத்தியை யடைந்த பிறகு கிரேக் தேசத்திய ஜோதிட சாஸ்திரத்திலிருந்து சிற்சில விஷயங்களைத் திரட்டி இங்கும் அங்குமாக உபயோகப்படுத்திக் கொண்டிருக்கக்கூடும், இதனுலேயே மாத்திரம் இந்து தேசத்திய ஜோதிட சாஸ்திரம் கிரேக் தேசத்திய ஜோதிட சாஸ்திரத்தின் அசல் நகல் (Facsimile) என்று சொல்லுவதற்கு இடந்தராது. முன்னமே நாம் குறிப்பிட்டுள்ள மணீலியஸ் (Manilius) என்பவருக்குப் பிறகு அவருடைய சிஷியர் பர்மிகஸ் மெடர்னஸ் (Firmicus Maternus) என்ற ஒரு ஜோதிடர் கிறிஸ்து பிறந்த நான்காவது நூற்றுண்டில் ஏற்பட்டார். இந்த மணீலியஸ் என்பவருடைய கிரீக் தேசத்து ஒருவித வகுப்பு ஜோதிடத்திற்கும் இந்து ஜோதிடத்திற்கும் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், ஆகிய இவைகளால் உண்டாகும் பலாபலன்கள் சம்மந்தப்பட்ட வரையில் மாத்திரம், அதிகமான ஒற்றுமை இருந்தது ; ஆனல் மணீலியஸ் தோன்றினதற்கு முன்னமே, மணீலியஸால் சொல்லப்படாத விஷயமாகிய மற்றக் கிரகங்களால் உண்டாகின்ற பலாபலன்கள்கூட இந்து ஜோதிட சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகையால் மணீலியஸால் ஏற்படுத்தப்பட்ட ஒரு வகுப்பான கிரேக் தேசத்து ஜோதிட சாஸ்திரம் இந்து தேசத்து ஜோதிட சாஸ்திரத்திலிருந்து உண்டாக்கப் பட்டிருக்கக்கூடும் என்று அபிப்பிராயப் படுவதற்கு ஒருவிதமான இடம் உண்டு. ஆகையால் இந்துக்கள் தங்களுடைய ஜோதிட சாஸ்திரத்தையும் வான சாஸ்திரத்தையும் கிரேக் தேசத்தாரிடமிருந்து கற்றுக்கொண்டார்கள் என்று சொல்லுவது வீணன், அல்லது சாதிக்க முடியாத வாக்குவாதமாகும். இந்து தேசத்திய ஜோதிட சாஸ்திரம் மணீலியஸ் அல்லது கிளாடியஸ் டாலமி ஆகிய இவர்களுக்கு முந்தி அநேக நூற்றுண்டுகளாக விருந்துவருகின்றது. மேலும் இந்தச் சாஸ்திரம் கிழக்கு, மேற்கு நாடுகளில் புழங்கி வருகின்ற ஜோதிட சாஸ்திரங்களுக்குள்ளே மிகவும் புராதீனமான சாஸ்திரமேயாகும்.

2-வது அத்தியாயம்

Chapter II

ஜோதிட சாஸ்திரத்தின் பூர்வீகத் தன்மை (Antiquity of Astrology)-யைப்பற்றி நான் ஏன் இவ்வளவு காலத்தையுங் கஷ்டத்தையுஞ் செலுத்தியிருக்கின்றேன் என்பது பின்னுல் இப்போது சொல்லப்போவதிலிருந்து புலப்படும். இந்தப் புராதனமானத் தன்மையானது நான் இப்போது விசாரணை செய்யப்போகின்ற அடுத்த பிரஷ்னையாகிய ஜோதிடத்தின் நம்பத்தக்க தன்மை (Credibility of Astrology)-க்குச் சம்மந்தம் உடையதாகும். ஜோதிட சாஸ்திரத்தைப்பற்றி அதிகமாகவது அல்லது ஒன்றுமேயாவது தெரியாத ஜோதிட சாஸ்திரத்தின் விரோதிகள் அல்லது எதிரிடையாளர்கள் இந்தச் சாஸ்திரத்தைப்பற்றிக் கொடுந் திட்டுதல் அல்லது கொடும்பழி கூறுதல் (Vituperation), கண்டனை செய்தல் (Tirade) அல்லது மும்முறமாக எதிர்த்தல் அல்லது தாக்குதல் (Furious attack) அல்லது பாய்ந்து தாக்குதல் (Onslaughts) ஆகிய இவைகளில் யாதொரு கட்டுப்பாடில்லாமலும் தடையில்லாமலும் பிரவேசிக்கின்றுர்கள் (Freely indulge). மேலும் இவர்கள் யாதொரு காலவரையில்லாமல் சதாகாலமும் (In and Out of season) ஜோதிட சாஸ்திரம் ஒரு மோசம் அல்லது சூது (Fake) என்றும், ஒரு மாயவித்தை அல்லது ஜாலம் (Hocus-pocus) என்றும், ஒரு எய்ப்பு (Hoax) என்றும் சொல்லுகின்றுர்கள். மேலும் மோசக்காரர்கள் (Cheats) அல்லது வேஷம் போடுகின்றவர்கள் (Masqueraders) ஆகிய இவர்கள் தங்களுடைய சுயநலத்தைத் தவிர வேறே ஒன்றையும் கவனியாமல் சீக்கிரம் எதையும் நம்பி ஏமாறகூடிய ஜனங்களை ஏமாற்றி விடுவதற்காகவே ஏற்படுத்தப்பட்ட சாஸ்திரம் ஜோதிட சாஸ்திரமாகும் என்று சில ஜோதிட சாஸ்திர விரோதிகள் வாதிக்கின்றுர்கள். ஜோதிட சாஸ்திரம் பொய்யானதாகவாவது அல்லது இதில் யாதொரு உண்மையும் இல்லாமலாவது இருந்தால் சாமான்ய ஜனங்களும் (Masses), வாசித்தறிந்தவர்களும், வித்தையில் பண்பட்டு நல்ல பயிற்சியுள்ளவர்களும் (educated and cultured persons) நீடூழி காலத்திலிருந்து இந்தச் சாஸ்திரத்தில் யாதொரு கவர்ச்சி, மோகம், பிரம்மை (Fascination) ஆகிய இவைகளை உடையவர்களாக விருந்திருக்கமாட்டார்கள்; மேலும் எல்லா தேசத்தாரைச் சேர்ந்த மேதாவிகளான கணித சாஸ்திரிகளும் (Mathematicians), விஞ்ஞானிகளும் (Scientists), அரசியல் தந்திரிகளும் (Politicians), வைத்தியர்களும் (Physicians), ரண சிகிச்சகர் என்ற சஸ்திர வைத்தியர்களும் (Surgeons), பாதிரிகளும் புரோகிதர்களும் (Priests). சரித்திரகாரர்களும் (Historians) எக்காலத்திலும் இந்த ஜோதிட சாஸ்திரத்தில் நம்பிக்கையை உடையவர்களாக இருந்திருக்கமாட்டார்கள். தேல்ஸ் (Thales) என்பவருடைய சினேகிதரும் சிஷியருமான அனுக்ஸிமாண்டர் (Anaximander) புகழ் பெற்ற ஒரு கிரேக் தேசத்திய தத்துவ விசாரகஞானி (a Greek Philosopher)-யும் சாக்ரடீஸ் (Socrates) என்ற ஒரு தத்துவ விசாரக ஞானியின் குருவும் ஆன ஆனுக்ஸகோராஸ் (Anaxagoras),

பித்தாகொராஸ் (Pythagoras), அரிஸ்டாட்டில் (Aristotle), பிளேடோ (Plato), போர்பைரி (Porphyry), வைத்திய சாஸ்திரத்தை ஆக்கியோனுகிய ஹிப்போகிரேட்ஸ் (Hippocrates, the Father of Medicine), ஆகிய இவர்கள் எல்லோரும் ஜோதிட சாஸ்திரத்தின் ஞானத்திலும், கொள்கைகளிலும் உண்மைகளிலும் நம்பிக்கையுடையவர்களாக விருந்திருக்கின்றுர்கள். ஹோரேஸ் (Horace), வர்ஜில் (Virgil) ஆகிய இவர்களுடைய கிரந்தங்களில் ஜோதிட சம்மந்தமான விஷயங்கள் குவிந்து கிடக்கின்றன; இவைகள் இவர்கள் இருந்த காலத்தில் உள்ள ஜனங்கள் ஜோதிட சாஸ்திரத்தில் வைத்திருந்த நம்பிக்கையைக் காட்டுகின்றனவாகும். இவ்வுலகத்திலுள்ள எல்லா ஞானமும் வித்தையும் தங்களுக்குத்தான் தெரியும், மற்றவர்களுக்குத் தெரியாது என்று இறுமாப்புடன் நினைத்துக்கொண்டு ஜோதிட சாஸ்திரத்தைக் கண்டனஞ் செய்கின்ற அல்லது ஏளனஞ் செய்கின்ற தற்காலத்தவர் சிலர் இருக்கின்றுர்கள். இவர்களைவிட இவ்வுலக விஷயங்களைப்பற்றியும் இதர உலக விஷயங்களைப்பற்றியும் அதிகமாகத் தெரிந்தவர்களாகிய மிகவும் கீர்த்திபெற்ற, சிறந்த, இந்து தேசத்திய பழையகாலத்து மஹரிஷிகளும் (Sages), ஞானதிருஷ்டிகர்களும் (Seers) ஜோதிட சாஸ்திரத்தில் நம்பிக்கையுடையவர்களாகவிருந்து மானிடர்களின் நன்மையைக் கருதி ஜோதிட சாஸ்திரத்தின் தத்துவங்களையும், கொள்கைகளையும், விதிகளையும் ஏற்படுத்தி இவைகளைத் தங்களுடைய காலத்தவர்களுக்கும் பிற்காலத்தவர்களுக்கும் உபயோகப்படும்படியாகச் செய்துவிட்டுப்போய் இருக்கின்றுர்கள். அறிவில் மிகவும் சிறந்த பிரகாசமான, நட்சத்திரங்களாக விருந்தவர்கள் தங்களுடைய ஞானத்தாலும் உழைப்பினுலும் உண்டாக்கிவைத்த ஜோதிட சாஸ்திரத்தின் மிகப்பெரிய, கம்பீரமான மாளிகையை இடித்து உடைத்து நாசமாக்க வேண்டும் என்ற எண்ணத்தையுடைய ஜோதிட சாஸ்திரத்தின் விரோதி இந்த உலகத்தில் தான்ஒருவர்தான் மிகவும் புத்திசாலியானவர் என்றும், மற்றெல்லோரும் முட்டாள்கள் என்றும் சர்ரோஜர் டி காவர்லி (Sir Roger-de-Coverley) என்பவரைப்போலத் தன்னைப்பற்றித் கெடுதியான வழியில் பிரபலமாக நினைத்துக்கொள்ளுகின்றுர். ஜோதிட சாஸ்திரத்தில் யாதொரு உண்மையும் இராவிட்டால், இது இராமாயணம், மஹாபாரதம் ஆகிய இவைகளின் காலங்களிலிருந்து அநேக நூற்றுண்டு கணக்கான காலங்களாகப் புழக்கத்திலிருந்துகொண்டு நாளாக நாளாக அதிகக் கீர்த்தியுடனும் பிரகாசத்துடனும் விருத்தியுடனும் நாளது வரையிலும் நமக்கு வந்திருக்காமல் இது எப்பொழுதோ க்ஷீணதசையையடைந்து மாண்டு அழிந்து இழிவுடன் புதைக்கப்பட்டுவிட்டிருக்கும். இவ்விதமாக இது அழிந்து போகாமல் இருப்பதே இதனுடைய உண்மைக்கு ஒரு மிகவும் வலிவான ஆதாரமாகவும் காரணமாகவும் இருக்கின்றது. ஒரு புட்டு பலகாரம் நன்றுகச் செய்யப்பட்டிருக்கின்றதா இல்லையா என்ற விஷயம் அதைச் சாப்பிடுவதிலிருந்தே தெரியவரும் என்று சொல்லுகின்ற பழமொழியைப் போலவே ஜோதிடத்தின் உண்மையானது இதைப்பற்றிய திருப்த்திகரமான உதாரண சம்பவங்களிலிருந்தே விளங்கும். ஜோதிட பலாபலன்கள் அதிக ஆச்சரியமாக சரியாக நடந்தேறிய சில சம்பவங்களை உதாரணமாகக் காண்பித்து இந்த ஜோதிட சாஸ்திரத்தின் உண்மையை நான் இனிமேல்

விளக்கிக் காட்டுகின்றேன். இவ்விதமாக ஜோதிட சாஸ்திரத்தின் உண்மையை ரூபிக்க வேணுமே தவிர வேரே எந்த வழியும் இதை ரூபிக்கக் கிடையாது :—

(1) வில்லியம் லில்லி (William Lilly) என்ற ஒரு ஆங்கில ஜோதிட சாஸ்திரி கிறிஸ்து பிறந்த பிறகு ஆயிரத்தி அறுநூற்றைம் பத்தோராவது வருஷத்தில் (1651 A.D.) தான் அச்சிட்டு பிரசுரஞ் செய்த "ஏகாதிபத்தியம் உண்டு அல்லது ஏகாதிபத்தியம் இல்லை" (Monarchy or no Monarchy) என்ற ஒரு சிறிய பிரசுரத்தில் (Pamphlet) லண்டன் (London) பட்டணத்தில் சம்பவித்த பெரிய பிளேக் "என்ற ஒரு பெரிய பெருவாரி கொள்ளைக்காய்ச்சல் நோய்" (The Great Plague of London), "பெரிய நெருப்பு" என்ற ஒரு பெருந்தீ (The Great Fire of London) ஆகிய இவைகளைப்பற்றி ஜோதிட சாஸ்திரத்தின் உதவியால் முன்னடியாகவே அறிவித்தார் (Predicted). இந்த இரண்டு சம்பவங்களும் மிகவும் ஆச்சரியமாகப் பிரசுரஞ்செய்தபடியே உண்மையில் நடந்தேறின ; இதன் பேரில் சந்தேகப்பட்டுக்கொண்டு பிறகு பிரத்தியேகமாக ஏற்படுத்தப்பட்ட ஒரு காரிய நிர்வாக சபையால் (Special Committee) அவுஸ் ஆப் காமன்ஸ் (House of Commons) என்ற சட்ட சபையின் முன் ஆஜராகும்படி இந்த ஜோதிடருக்கு ஒரு உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. இவர் இவ்விதமாகவே இந்த நிர்வாக சபையின் முன் ஆஜராகி லண்டன் பட்டணத்திற்குரிய ஜோதிட சாஸ்திரத்தின் இராசியின் பாகையின் நிலையையும் கிரகங்களின் நிலையையும் அனுசரித்துப் பின்னால் நடக்கப் போவதைத் தான முந்தியாகவே தெரிவித்ததற்குத் தகுந்த காரணங்களை இந்தச் சபை திருப்தியடையும்படியாகக் காட்டி ருஜூவு செய்தார். இதனால் இவருடைய கீர்த்தியும் புகழும் அதிகப்பட்டன. இவரை ஒரு சிறந்த ஜோதிடர் என்று முதலாவது ஸ்சார்லஜ் (Charles I) என்ற அரசர் கலந்து ஆலோசனை செய்தார்.

(2) ஓராவது செலீம் (Selim I) என்றவர் தான் எகிப்து (Egypt) தேசத்தின் பேரில் படை எடுத்ததற்கு முந்தி டாமாஸ் பட்டணத்தின் துறவியாகிய (the Hermit of Damas) தன்னுடைய ஜோதிட சாஸ்திரியுடன் கலந்து ஆலோசனை செய்தார். இந்த ஜோதிடர் இந்த அரசர் யுத்தத்தில் ஜெயத்தை அடைவாரென்றும், ஆனால் இந்த அரசர் ஜெயம் பெற்ற ஒன்பதாவது வருஷத்தில் இறந்து விடுவார் என்றும் முந்தியாகவே ஜோதிடசாஸ்திரத்தின் மூலமாகச் சொன்னார். இவர் தெரிவித்த பிரகாரமே மிகவும் ஆச்சரியப்படத்தக்கப்படி இவ் விஷயங்கள் நடந்தன.

(3) அந்தப்புரத்திலிருந்த ஒரு சுல்தானாகிய மூன்றாவது மஹம்மது (Muhammad III, a Sultan in his Harem) முன்னிலையில் ஒரு துருக்கத் துறவி (Dervish or Dervis) யாகிய ஒரு ஜோதிடர் ஆஜராகி அன்று முதல் ஐம்பத்தாறு தினத்திற்குள் இந்த சுல்தான் இறந்து விடுவார் என்று சொன்னார். இந்த ஜோதிடர் சொல்லியது மிகவும் அதிசயமாக உண்மையாகவே நடந்தது.

(4) பாரசீக தேசத்து அரசனாகிய (King of Persia) டெரையஸ் (Darius) என்பவருடைய அரசாட்சி காலத்தில் ஜோதிட சாஸ்திர கிரந்தகர்த்தராக விருந்த ஜிமாஸ்பு ஆல்ஹகிம் (Gjimasp Alhakim) என்பவர் ஏசுநாதர், மஹம்மது (Jesus and Muhammad) ஆகிய இவர்கள் பிறப்பதைப்பற்றி (அவதாரஞ் செய்யப்போவதைப்பற்றி) ஜோதிட சாஸ்திரத்தின் கிரகக் கூட்டங்களை ஆராய்ச்சி செய்து முந்தியாகவே தெரிவித்தார்.

(5) தேல்ஸ் (Thales) என்பவருடைய மாணுக்கராக விருந்த அனுக்ஸிமாண்டர் (Anaximander) என்பவர் கிறிஸ்து பிறந்ததற்கு முன்னே அறுநூறுவது வருஷத்தில் (600 B.C.) லாஸிடிமான் (Lacedemon) என்ற பட்டணத்தைப் பாழாக்கிவிட்ட பூகம்பத்தைப் பற்றி (Earth-quake) ஜோதிட சாஸ்திரத்தின் உதவியால் முந்தியாகவே தெரிவித்தார்.

(6) இத்தாலி தேசத்து ஜோதிடராகிய (an Italian Astrologer) கைடோ பொனுடஸ் (Guido Bonatus) என்பவர் எர்ல் ஆப் மான்ஸ்ஸராட் (Earl of Monserrat) என்பவர் ஒரு குறித்த தினத்தின் ஒரு குறித்த மணியின் காலத்தில் யுத்த களத்தில் ஜெயம் பெறுவார் என்றும் அப்போது அவர் தன்னுடைய முழங்காலில் ஒரு காயத்தை அடைவார் என்றும் ஜோதிடத்தின் உதவியால் முந்தியே தெரிவித்தது பிரமிக்கத்தக்கதாகப் பலித்தது.

(7) ஐரோப்பா கண்டத்தில் இருந்த ஒரு புகழ்பெற்ற ஜோதிட சாஸ்திரியான வாலன்டைன் நெய்பாட் (Valentine Naibod) என்பவர் ஒரு குறித்த காலத்தில் தனக்குக் கொடுமையான தாக்குகையால் (Violence) துர்மரணம் நேரிடும் என்று முந்தியே தெரிவித்தார். இக் குறித்த காலம் நெருங்கின போது தன்னுடைய வீட்டில் தன்னை நன்ருக அடைக்கலஞ் செய்து கொண்டு வீட்டை நன்ருகவும் வலிவாகவும் மூடிக்கொண்டு அதற்குத் தகுந்த பந்தோபஸ்துக்களையும் ஏற்படுத்திக் கொண்டார். இவர் வீட்டு வழியாகச் சென்ற சில திருடர்கள் இவருடைய வீடு பந்தோபஸ்தாக மூடி இருப்பதைப் பார்த்து இதில் ஏதோ ஒரு பொக்கிஷம் இருக்கவேண்டும், அதனால் தான் இவ்வளவு பந்தோபஸ்துக்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்று சந்தேகப்பட்டு இந்த வீட்டை உடைத்து உள்ளே சென்று இவரைக் கொன்று விட்டார்கள் ; இவ்விதமாக இவர் ஜோதிட சாஸ்திரத்தின் உதவியால் முந்தியாகவே தெரிவித்த பலன் நடந்தேறியது.

(8) இதைப் போலவே பெல்லாரியில் ஒரு சம்பவம் சில வருஷங்களுக்கு முந்தி நடந்ததை நாம் தினப் பத்திரிகைகள் மூலமாகப் படித்திருக்கின்றோம். ஒரு உபாத்தியாயர் தன்னுடைய குமாரனுக்கு ஜோதிடர்கள் முந்தியாகவே உயிரைப் பற்றிய ஆபத்து நேரிடும் என்று குறித்த தினத்தில் இந்த ஆபத்தைத் தடுப்பதற்காகத் தன்னுடைய பிள்ளையைத் தன் வீட்டில் ஒரு அறையில் விட்டு அந்த அறையை மூடிவிட்டு வழக்கம் போல் தான் பள்ளிக் கூடத்திற்குப் போய்விட்டார். இந்தப் பிள்ளையினுடைய ஒரு பள்ளிக்கூட சினேகிதர் இவனிடம் சென்று இவனை அழைக்கவே இவன் தன்னுடைய தாயாரின் உதவியால் இந்த அறையின் உள்ளே விருந்து வெளியே வந்து பிறகு, இந்தச் சினேகிதருடன் வெளியே சென்று விளையாட ஒரு குளத்திற்குப்போய் விளையாடி இந்தக் குளத்தில் மூழ்கி இறந்து விட்டான். இந்த ஏழாவது எட்டாவதாகிய இரண்டு உதாரணங்களும் தலை விதியை யாராலும் (பெரும்பாலும்) மாற்றமுடியாது என்ற கொள்கையை ருசு படுத்துகின்றனவாகும்.

(9) மைக்கேல் ஸ்காட் (Michael Scot) என்பவர் தன்னுடைய இரக்ஷக ராகிய சக்கிரவர்த்தியான இரண்டாவது பிரடரிக் (Emperor Frederick II) என்பவர் ப்பிலாரன்ஸ் (Florence) என்ற பட்டணத்தில் இறந்து விடுவார் என்று ஜோடத்தின் மூலமாக முந்தியாகவே தெரிவித்தது பலித்துவிட்டது.

(10) இந்த மைகேல் ஸ்காட் (Michael Scot) என்பவரே தன்னுடைய விஷயத்திற்கூட தனக்கு ஒரு கல் விழுவதினால் மரணம் நேரிடும் என்று ஜோதிடத்தின் மூலமாக முந்தியே தெரிவித்திருந்தார். இவர் ஒரு மாதா கோயிலில் (Church) தன்னுடைய தேவனைப் பிராத்தித்துக்கொண்டிருந்த போது இந்தக் கோயிலின் மேற்கூரை (Roof)-யிலிருந்து ஒரு கல் இவர் மீது விழுந்து, இவர் தான் முந்தியே ஜோதிடத்தின்மூலமாகத் தெரிவித் திருந்த பிரகாரமே இறந்துவிட இவர் சொல்லியது உண்மையில் பலித்து விட்டது.

(11) பெயரை வெளிப்படுத்த நமக்கு இஷ்டமில்லாத சைதாப் பேட்டையில் டிப்டி கலெக்டராயிருந்த (Deputy Collector of Saidapet) ஒருவரைப்பற்றி இவர் கிறிஸ்து பிறந்த பிறகு ஆயிரத்துத் தொள்ளாயிரத் திருபத்தெட்டாவது வருஷத்தில் (1928 A.D.) ஒரு குறித்தக் காலத்தில் ஒரு வாகனக் கருவியால் ஏற்படக்கூடிய ஒரு தற்செயல் ஆபத்தால (accident by a conveyance) இறந்து விடுவார் என்று ஒரு தென்னிந்திய ஜோதிடர் ஜோதிடத்தின் மூலமாய் முந்தியாகவே பலனைத் தெரிவித்திருந்தார். தென்னிந்தியாவில் உள்ள ஒரு ஜில்லாவில் சப்-ஜட்ஜ் (Sub-Judge)-ஆக விருந்த இவருடைய சகோதரர் மூலமாக இவருக்கு இந்த ஜோதிட சாஸ்திர பலன் முந்தியே தெரிவிக்கப்பட்டிருந்தது. சைதாப்பேட்டை ரயில் ஸ்டேஷனண்டையுள்ள ஒரு ரயில்வே கேட்டண்டை (Railway Level-Crossing) இவருடைய மோட்டார் கார் தற்செயலாய் இடித்துக்கொள்ளப்போகப்பட்ட சம்பவம் நேர்ந்த பிறகும் ஆபத்து நேரிடும் என்று குறித்த காலத்திற்குச் சில நாட்களுக்கு முந்தியும் இவர் இந்த எதிர் பார்த்திருந்த ஆபத்தைத் தடுப்பதற்காகவே தன்னுடைய மோட்டார்காரையும் விற்பனை செய்து விட்டார். இவ்விதமான ஜாக்கிரதையுடன் இவர் இருந்திருந்தும் இதே ரயில்வே கேட்டண்டை குறித்த காலத்தில் ஒரு போட் மெயில் ரயில்வே வண்டி இவர் பேரில் தற்செயலாய் ஏறி ஓடி இவர் கொல்லப்படவே ஜோதிடர் ஜோதிடத்தின் மூலமாய்ச் சொல்லப்பட்ட பலன் உண்மையில் பலித்து விட்டது.

(12) கவியாகிய டிரைடன் (Dryden, the poet) என்பவரைப்பற்றிப்பின் வருமாறு சொல்லப்பட்டிருக்கின்றது, இவர் தன்னுடைய பிள்ளையாகிய சார்லஸ் (Charles) என்பவருக்குத் தன்னுடைய எட்டாவது வயதிலும், இருபத்து மூன்றாவது வயதிலும் கெண்டங்கள் நேரிடும் என்றும், முப்பத்து நான்காவது வயதில் இறந்துவிடுவார் என்றும் முந்தியே சொல்லி இருந் தார். இரண்டு நாய்கள் ஒரு மானைத் துரத்திக்கொண்டு ஓடினபோது இவைகள் ஒரு சுவற்றின்பேரில் தாக்கவே இந்தச் சுவர் இடிந்து சார்லஸ் (Charles) என்பவரின்பேரில் இவருக்கு எட்டாவது வயதில் விழுந்து இவர் இந்தச் சுவரின் குப்பை (Debris)-யின் கீழ் அகப்பட்டுக்கொண்டார். இவருக்கு இருபத்து மூன்று வயது நடந்துகொண்டிருந்தபோது ரோமாபுரியில் (Rome)

உள்ள வாடிகன் (Vatican) என்ற ரோமன் காத்தலிக்குக் குரு (Pope) வினுடைய வாசஸ்தலமாகிய மாளிகையின் கோபுரத்திலிருந்து (Tower) கீழே விழுந்துவிட்டார். இவர் தனக்கு முப்பத்து மூன்றாவது வயது நடந்துகொண் டிருந்தபோது வின்ட்சர் (Windsor) என்ற பட்டணத்தில் ஜலத்தில் மூழ்கி இறந்துவிட்டார். இவ்விதமான மூன்று பலாபலன்களும் ஜோதிட சாஸ திரத்தின் மூலமாய் டிரைடன் (Dryden) என்பவர் முந்தியாகவே சொல்லி யிருந்த பிரகாரம் உண்மையில் பலித்துவிட்டன.

நார்மண்டி என்ற தேசத்தைச்சார்ந்த வில்லியம் என்பவர் இங்கிலாந்து தேசத்தை ஜெயித்த காலம் முதற்கொண்டு (The Conquest of England by William of Normandy) லார்டு பேகன் (Lord Bacon) காலம் வரையிலும் உள்ள காலத்தில் இருந்த பெரும்பாலும் ஒவ்வொரு புகழ் பெற்ற கணித சாஸ்திரியும், ஜோதிட சாஸ்திரத்தில் நம்பிக்கை உடையவராக விருந்திருக் கின்றார். கிறிஸ்து பிறந்த பிறகு ஆயிரத்து அறுபதாவது வருஷத்திலிருந்த (1060 A.D.) ஆலிவர் ஆப் மால்மஸ்பரி (Oliver of Malmesbury) என்ற ஒரு கணித சாஸ்திரி ஜோதிட சாஸ்திரத்தின் கொள்கைகளில் நம்பிக்கையுடையவ ராக விருந்தார். கிறிஸ்து பிறந்து ஆயிரத்துத் தொண்ணூற்றைந்தாவது (1095 A.D.) வருஷத்திலிருந்த எர்பர்ட் ஆப் லோரைன் (Herbert of Lorraine) என்பவரும் கிறிஸ்து பிறந்த ஆயிரத்திருநூற்றிப் பதினான்காவது (1214 A.D.) வருஷத்திலிருந்த ரோஜர் பேகன் (Rojer Bacon) என்பவரும் ஜோதிட சாஸ்திரத்தில் நம்பிக்கையுடையவர்களாகவிருந்தார்கள். சர் ஐசக் நியூட்டன் (Sir Isaac Newton) என்பவருக்கு முன்னே மிகவும் அதிகமான தத்துவ சாமர்த்தியத்தை உடையவர்களுக்குள் ஒருவராகவிருந்தவரும் (One of the ablest men) கிறிஸ்து பிறந்த ஆயிரத்திருநூற்றைம்பத்தாறுவது (1256 A.D.) வருஷத்தில் இறந்தவருமாகிய ஹோலிவுட் (Holywood) என்ற ஜான் ஆப் ஹாலிபாக்ஸ் (John of Holifax) என்றவர் ஜோதிடத்தில் நம்பிக்கையை யுடையவராகவிருந்ததுமன்றி ஜோதிட சாஸ்திரத்தைப்பற்றி ஒரு புத்தகங் கூட எழுதினார். ஒராவது ரிச்சர்டு என்ற அரசர் (King Richard I) கிரகங் களினுடைய சக்தியாலுண்டாகும் பலனில் நம்பிக்கையையுடையவராகவிருந் தார். கவியாகிய ஜியோப்ரே சாஸர் (Geoffry Chaucer) ஜோதிட சாஸ்திரத்தின் நியம விதிகளில் (Rules) நம்பிக்கையையுடையவராகவிருந் தார். ஜோதிட சாஸ்திரத்தின் பலாபலன்களின் காலங்களைக் கணிதஞ் செய்வதற்காக, மிகவும் உபயோகமான ஜோதிட சாஸ்திரத்தின் வாக்கியங்களை (astrological tables to calculate directions in astrology) டியூக் ஆப் கிளொசெஸ்ட்டர் (Duke of Glouchester) என்பவர் கிறிஸ்து பிறந்த ஆயிரத்தி நானூற்றி நாற்பதாவது (1440 A.D.) வருஷத்தில் உண்டு பண்ணினார். ஆங்கில பாஷையில் முதல் முதல் அங்க கணித நூலை (Arithmetic) எழுதியவரும், முதல் முதல் ஆங்கில பாஷையில் இரேகா கணிதம் என்ற க்ஷேத்திர கணித நூலை (Geometry) எழுதியவரும், அக்ஷர கணிதம் என்ற பீஜகணிதத்தை முதல் முதல் இங்கிலாந்து (England) தேசத் திற்குக் கொண்டுவந்தவரும் ஆகிய ராபர்ட் ரெகார்டே (Robert Recorde). ஜோதிட சாஸ்திரத்தின் நியம விதிகளில் (Dogmas) நம்பிக்கையையுடையவ ராகவிருந்தார். செயின்ட் ஆல்பான்ஸ் (Saint Albons) என்றவரும் கீர்த்தி

பெற்ற பேகன் (Bacon Lord Verulam) என்றவரும் கிரகங்களினுடைய சக்தியால் உண்டாகும் பலனில் நம்பிக்கையுடையவர்களாகவிருந்தார்கள். இங்கிலாந்து (England) தேசத்தில் இன்டக்ட்டிவ் பிலாசபி (Inductive Philosophy) என்ற ஒரு புதிய தத்துவ சாஸ்திரம் என்ற வேதாந்த சாஸ்திரத்தை (Philosophy) உண்டாக்கியவரும் மானிட சுபாவத்தை நன்றாகக் கவனித்துப் படித்தவருமாகிய பேகன் (Bacon) என்பவர் தானே ஜோதிட சாஸ்திரத்தின் தத்துவங்களையும் நியம விதிகளையும் அனுபவத்தில் பரிசோதனை செய்து திருப்தியடையாதவராயிருந்தால் ஜோதிட சாஸ்திரத்தின் கொள்கைகளில் நம்பிக்கையை வைத்திருந்திருக்கமாட்டார். அடுத்தபடியே கணித சாஸ்திரிகளுக்குள் இளவரசராக இருந்தவரும் லகுஜா கணிதத்தை (Logarithm) உண்டு பண்ணியவருமாகிய பாரன் நேபியர் (Baron Napier) என்பவரைப்பற்றிக் கவனிப்போம். ஜோதிட சாஸ்திரம் ஒரு உண்மையான சாஸ்திரம் என்று எண்ணி இவர்கூட இதில் நம்பிக்கையை வைத்திருந்தார். கிரகங்களினுடைய சலன விதிகளை (Palnetary Laws) கண்டுபிடித்தவராகிய (Kepler) என்ற வான சாஸ்திரியானவர் ஜோதிட சாஸ்திரத்தில் நம்பிக்கையையுடையவராகவிருந்ததால் இவர் ஜோதிட சாஸ்திரத்தில் உபயோகிக்கின்ற கிரகங்களின் பலவிதமான பார்வைகளைக் கண்டு பிடித்தார். இந்து தேசத்தின் ஜனங்களின் தகப்பனாராகிய மகாத்மா காந்திஜி அவர்களைப் (Mahatma Gandhiji, the Father of Indian Nation) பற்றியும் சில விஷயம் இங்கு இப்போது சொல்லப்படுகின்றது. இவர் ஜனங்களுடைய நன்மைக்காக நூற்றிருபது வயது வரையிலும் ஜீவித்திருக்க ஆசைபட்டிருந்தார். அநேக தடவைகளில் இவர் தான் நூற்றிருபது வயது வரையிலும் ஆயுளை உடையவராகவிருப்பார் என்று சொல்லிக்கொண்டும் இருந்தார். ஆனால் விக்கிரமாதித்திய அரசருடைய சபையில் பிரகாசித்துக்கொண்டிருந்த நவரத்தினங்கள் என்ற நவமணிகளில் ஒருவராகியவரும் ஜோதிட சாஸ்திரத்தில் நிபுணருமாகியவரும் ஆன சத்தியாச்சாரியார் என்ற சத்திய மஹரிஷியால் எழுதப்பட்ட துருவ நாடி ஜோதிட சாஸ்திரத்தில் மகாத்மா காந்திஜியின் ஆயுள் முடிவு காலத்தைப்பற்றி முந்தியாகவே குறிப்பிட்டிருந்த காலத்திலேயே மகாத்மா காந்திஜி இறந்துவிட்டார். இது எல்லோருக்கும் தெரிந்த விஷயமேயாகும். ஸ்ரீ ராமபிரான் காட்டிற்குப் போவதற்கு முந்தி காட்டில் வாசஞ் செய்வது மிகவும் கஷ்டமானது, ஆபத்தானது, துக்கத்தையும் துன்பத்தையும் விளைவிக்கக்கூடியது என்று தன்னுடைய பத்தினியாகிய சீதாபிராட்டியாருக்குச் சொல்லிச் சீதையை அரண்மனையிலேயே விட்டு விட்டுப் போகச் சீதையுடன் வாதாடியபோது, இந்தப் பிரசித்தமான வாதாட்டத்தில் சீதை தான் இளம்பிராயத்திருந்தகாலத்தில் தான் காட்டில் நீண்ட காலம் வாசஞ் செய்ய நேரிடும் என்று ஜோதிட சாஸ்திரிகள் தனக்கு முந்தியாகவே சொல்லுவது வழக்கமாகவிருந்தது என்று பதில் சொல்லியது எல்லோருக்கும் தெரிந்தவிஷயமாகும். இந்த விஷயத்தில்கூட ஜோதிட சாஸ்திரம் பலித்துவிட்டது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமாகும். சாதாரணமாக ஒருவரும் அல்லது மிகவும் நுட்பமான சூட்சுமமான புத்தியையுடையவர்கூட சீதையைப்போன்ற விவாகமான ஒரு இளவரசி காட்டில் வாசஞ் செய்ய நேரிடுமென்று கனவிலும் நினைத்திருக்கமுடியாது. ஒரு

பிள்ளை (a Pillai) அவர்கள், ஒரு ராவ் (a Rao) அவர்கள் உள்பட ஜோதிடத்தின் விரோதிகள், ஜோதிட சாஸ்திரத்தின் மூலதாரங்கள் என்ற ஜோதிட அரிச்சுவடிகூட ஒன்றுமே தெரியாத மிகவும் புத்தி கூர்மை, புத்தி சூட்சுமம் உள்ள ஒருவர் ஜோதிடத்தின் பலாபலன்களை முந்தியாகவே யூகிக்கக்கூடும், உத்தேசிக்கக்கூடும் என்றும், ஜோதிட சாஸ்திரத்தின் பலாபலன்கள் தற்செயலாய் வாய்க்கக்கூடியவைகள் (accidental hits) என்றும் இவ்விதமாகப் பலித்துவிட்ட ஒரு ஜாதகத்தின் அநேக பலாபலன்களைப் பற்றியும்கூட அடிக்கடி கூறுகின்றார்கள். இந்த விஷயத்தைப்பற்றி மேலே சீதாபிராட்டியின் வனவாசத்தைப்பற்றி புத்தி சூட்சுமம் மாத்திரம் உள்ள ஒருவர் யூகிக்கக்கூடுமா முடியாதா என்பதைப்பற்றிக் கவனிக்கவும். இந்த வனவாசம் உண்மையிலே இவ்விதமாக ஊகிக்கக்கூடிய விஷயம் அல்லவென்று எல்லோருக்கும் எளிதில் புலப்படக்கூடியதாகும்.

ஏப்ரஹாம் (Abraham) என்பவர் கால்டியா தேசத்தாருடைய ஜோதிட சாஸ்திரத்தில் (Chaldean astrology) மிகவும் தேர்ச்சியடைந்தவராகவிருந்தார். கால்டியா தேசத்து மாஜி என்ற புத்திசாலிகளுக்குச் சட்ட மமைக்கின்றவராகவிருந்த (The legislator of the Magi or wise man of Chaldea) ஜோராஸ்டர் (Zoroaster) என்பவர் ஜோதிட சாஸ்திரத்தைக் கையாண்டு வந்தார். மோஸஸ் (Moses) என்றவர் ஜோதிட சாஸ்திரத்தை அறிந்து கொண்டு அதை பௌஷ்யவாதம் என்ற வருங்காரிய முரைத்தல் (Predictive Art) என்ற கலையில் உபயோகப்படுத்தி வந்தார். மனிதர்களுடைய சகல விதமான காரியங்களையும் கிரகங்கள்தான் நடத்திக்கொண்டு வருகின்றன என்ற பழைய காலத்தவருடைய அபிப்பிராயத்தை பைலோ (Philo) என்றவர் உடையவராக விருந்தார். சூரியன், சந்திரன் நட்சத்திரங்கள் ஆகிய இவைகளின் சக்தியினால் ஏற்படுகின்ற பெரிய பெரிய பூகம்பம் (Earth-quake), கொள்ளை, பெருவாரி நோய் (Pestilence), பஞ்சம் (Famine) ஆகிய இவைகளைப்பற்றி ஜீஸஸ் கிரைஸ்ட்டு என்ற ஏசுநாதர் (Jesus christ) முன்னமே தெரிவித்திருந்த வரும் காரியம் உரைத்தல் என்ற குறி சொல்லுதல் (Prophecy) ஜெருசிலம் (Jerusalem) என்ற பட்டணத்தின் அழிவால் பலித்துவிட்டது. பாரசீகத்து தேசத்தின் அரசராகிய குஸ்டாஸ்ப் (Gushtasp, king of Persia) என்பவருடைய முதல் மந்திரியும், சகோதரரும் அந்தரங்க கூட்டாளியுமான Confidant) வரும் கீர்த்திபெற்ற பாரசீக தத்துவ சாஸ்திரியுமான (Philosopher) ஜயமாஸ்பு (Gyamasp) என்றவர் ஒரு ஜோதிடராகவுங்கூடவிருந்து கிரகங்களின் கூட்ட, சம்பவங்களினால் மெஸ்ஸியா வரப்போவதை (The coming of Messiah) முன்னடியாகவே தெரிவித்தார். கிரகங்களினுடைய அதிகாரத்தை (Influence of planets) பற்றி செனிகா (Seneca) என்பவர் நம்பிக்கையுடையவராக இருந்தார். டாசிடஸ் (Tacitus) என்பவர் ஜோதிட சாஸ்திரத்திரத்தில் நம்பிக்கையுடையவராக இருந்தார். ஒவ்வொரு மனிதனும் பிறக்கின்ற காலத்திலேயே தன்னுடைய வாழுளில் சம்பவிக்கப்போகின்ற எல்லா பலன்களும் நிர்தாரணஞ் செய்யப்பட்டு விடுகின்றன என்ற கொள்கை அல்லது அபிப்பிராயத்திலிருந்து மானிடர்களில் பெரும்பான்மையோரை விடுவிக்க முடியாது என்று தெரிவித்தார். ஜோதிட சாஸ்திரத்தைக் கையாளுகின்ற சிலருடைய அஞ்ஞானத்தால்

அறியாமையினால் (Ignorance) சில விஷயங்கள் தவறிப்போகக்கூடும். அதனால் ஜோதிடத்தை அநியாயமாகக் கண்டனஞ் செய்யக்கூடும். ஆனால், பெயர்பெற்ற சிலாக்கியமான அனேக பலித்துவிட்ட பலாபலன்களின் உதாரணங்களினால் ஜோதிட சாஸ்திரம் புகழப்படும் என்றே தெரிவித்துள்ளார். பித்தகொராஸ் (Pythagoras) என்பவர் பூமி தன்னுடைய மேரு என்ற உருவாணி அல்லது இருசு (Axis)-யைத் தினந்தோறுஞ் சுற்றி வருகிறதென்றும் சூரிய பிரபஞ்சபத்திற்கு (Solar system) மத்தியாகிய சூரியனைப் பூமி ஒரு வருஷத்திற்கு ஒரு தரம் சுற்றி வருகின்றதென்றும் தெரிந்து கொண்டிருந்தார். இவர் இவ்விதமாகக் கோபர்னிகஸ் (Coperni cus) என்பவர் பின்னால் நிரூபித்து நிலைநாட்டிய வாதத்தை அல்லது கோட்பாட்டை (Theory) முன்னமே தெரிந்து கொண்டிருந்தார். இப்படிப்பட்ட மேதாவியானவர் கிரகங்களின் சக்தியால் மனிதர்களுக்கு உண்டாகும் பலாபலன்களில் நம்பிக்கையுடையவராகவிருந்தார். தூரதிருஷ்டிக் கண்ணாடியால் (Telescopes) பின்னால் கண்டு பிடிக்கப்பட்ட அநேக விஷயங்களை முந்தியே தெரிந்து கொண்டிருந்தவரும், சூரியன் ஒரு பெரிய அக்கினி கோளம் என்று தெரிந்து கொண்டிருந்தவரும், சந்திரன் பர்வதங்கள் முதலியவைகளை உடையது என்று தெரிந்து கொண்டிருந்தவருமான அனக்ஸா கோராஸ் (Anaxagoras) என்பவர் ஜோதிட சாஸ்திரத்தில் நம்பிக்கையுடையவராகவிருந்து ஒரு பெரிய நட்சத்திரக் கல்லு (Meteoric-stone) பின்னால் ஆகாயத்திலிருந்து உறுவி விழப்போவதை முன்னமே தெரிவித்தார். தேல்ஸ் (Thales) என்பவருடைய மாணாக்கராகவிருந்த அனுக்ஸிமாண்டர் (Anaximander) என்றவர் ஒரு புகழ்பெற்ற ஜோதிடராக இருந்தார். பிளினி (Pliny) என்றவர்கூட ஒரு கீர்த்திபெற்ற ஜோதிடராக இருந்து லாஸிடமன் (Laccedemon) என்ற நகரத்தை அழித்துவிட்ட பூகம்பங்களைப்பற்றி (Earth-quakes) முந்தியாகவே தெரிவித்திருந்தார். டெமாகிரைட்டஸ் (Democritus) என்றவர் பிற்காலத்தில் சில கிரகங்கள் புதியதாகக் கண்டு பிடிக்கப்படும் என்று முந்தியாக தெரிவித்திருந்தார். இந்த விஷயம் பலித்துவிட்டது. ஜோதிடத்தின் விரோதிகள் வாதஞ்செய்கின்றது போலவே ஜோதிடம் ஒரு பொய்யான சாஸ்திரமாகவிருந்தால், பித்தாகொராஸ் (Phythagoras), அனுக்ஸிமாண்டர் (Anaximander), அனக்ஸா கோராஸ் (Anaxagoras) ஆகிய இவர்களும் இவர்களுக்கு முன்னே இருந்த பலரும் ஜோதிடத்தில் நம்பிக்கையுடையவர்களாகி இதைக் கையாண்டு கொண்டு வந்தவர்கள் இதனுடைய பொய்யை அறியாதவர்களாக விருந்திருக்கமாட்டார்கள். மேலும், இவர்கள் ஜோதிட சாஸ்திரமானது அனுபவத்தையும் உண்மையையும் அடிப்படையாக உள்ள சாஸ்திரமாகவிருந்திராவிட்டால் இந்த சாஸ்திரத்தின் மூலமாகப் பின்னால் வரப்போகின்ற, நேரிடப்போகின்ற பலாபலன்களையும் சம்பவங்களையும் முன்னால் தெரிவித்திருக்கமாட்டார்கள். ஜோதிட சாஸ்திரத்தின் எதிரிகள் இந்தச் சாஸ்திர விஷயமாய்ச் செய்கின்ற கண்டனை (Tirade), நிந்தை (Invective) பழி கூறுதல் (Visuperation), தூஷணப் பிரசங்கத்தாக்குதல், (Philippic) ஆகிய இவைகளால் ஜோதிட சாஸ்திரத்தின் மூலத் தத்துவங்கள், நியம விதிகள், கொள்கைகள் ஆகிய இவைகளைத் தாங்கள் அறியாதவர்களாக

இருக்குந்தன்மையைத் தாமே பிறருக்குக் காண்பித்துக்கொள்ளுகிறார்கள். கிறிஸ்து பிறப்பதற்கு முன்னே முன்னூற்றறுபத்தெட்டாவது (368 B. C.) வருஷத்தில் பிறந்த யூடாக்ஸஸ் (Eudoxus) என்பவர் ஜோதிட சாஸ்திரம், வைத்திய சாஸ்திரம் ஆகிய இவைகளின் ஞானத்தில் அதிகப் பிரக்கியாதியடைந்திருந்தார். ஜோதிட சாஸ்திரத்தை மிகவும் சிரத்தையுடன் படித்திருந்தவராகிய ஹிப்போகிரேட்ஸ் (Hippocrates) என்றவர் ஜோதிட சாஸ்திரத்தை அறிந்திராத ஒரு வைத்தியர் வைத்தியஞ் செய்வதற்கு லாயக்கானவர் அல்லவென்றே பிரசுரஞ் செய்தார். நமது காலத்தில் உள்ள ஒரு புகழ்பெற்ற முதலியார் வகுப்பைச் சார்ந்த வைத்தியர், ஜோதிட சாஸ்திரம் ஒரு வைத்தியருக்குத் தெரிந்திருந்தால் இதனால் இந்த வைத்தியர் அதிக நன்மையை அடையக்கூடும் என்று தெரிவித்திருக்கின்றார். ஏனென்றால் ஜோதிட சாஸ்திரத்தின் ஞானம் இந்த வைத்தியர் வியாதிகளை நிர்ணயஞ் செய்வதில் (Diganosis of Diseases) இவருக்கு அதிக உபயோகமாகவிருக்கும் என்று தெரிவித்தார். சிஸிரோ (Cicero) என்பவருடைய மிகவும் ஆத்ம சிநேகிதரான நிஜடியஸ் பிகுலஸ் (Nigidius Figulus) என்பவர் அஹஸ்டஸ் ஸீஸர் (Augustus Caesar) என்பவர் பிறந்த வேளையின் மணியிலிருந்து பூமியை அரசாளப்போகின்ற ஒரு அரசர் அவதரித்தார் என்று பிரசாரஞ் செய்தார். "கிரகங்களின் கூட்டத்தினாலும் பார்வையினாலும் சந்திர மண்டலத்திற்குக் கீழே பூமியிலுள்ள சீவராசிகளின் பேரில் உண்டாகின்ற கிளர்ச்சி (Excitement)யைப்பற்றி என்னுடைய தவறிடாத அனுபவமானது எனக்கு இஷ்டமில்லாமல் இருந்துங்கூட எனக்கு அதில் (ஜோதிடத்தில்) நம்பிக்கையைப் பலவந்தமாக ஏற்படுத்திவிட்டது" என்று கெப்லர் (Kepler) என்றவர் யாதொரு கபடமுமில்லாமல் வெள்ளையாகப் பகிரங்கமாகத் தெரிவித்துவிட்டார். கிறிஸ்து பிறந்த ஆயிரத்தறுநூற்றெழுபத்தைந்தாவது (1675 A.D.) வருஷத்தில் ஆகஸ்ட்டு மாதத்தில் பத்தாந் தேதியன்று பகல் மூன்று மணி பதினைங்கு நிமிஷத்திற்குக் கிரீன்விச் ஜோதி மண்டபம் என்ற நட்சத்திரசாலையின் (Greenwich Observatory) அஸ்திவாரக்கல்லை (Foundation Stone) நாட்டி இவ் வேளைக்கு ஒரு ஜாதகத்தைக் குறித்து இதனால் பிளாம்ஸ்டீட்டு (Flamstead) என்ற வான சாஸ்திரிதனக்கு ஜோதிட சாஸ்திரத்திலிருந்த விருப்பத்தையும், அக்கரையையும் (Interest in Astrology) தெரிவித்துவிட்டார். ஆகாயத்திலுள்ள மண்டலங்கள் (Celestial Bodies) தங்களுடைய வெளிச்சம் (Light), உஷ்ணம் (Heat) இவைகளையும் அல்லாமல் இதர சக்திகளையும் உடையனவாக விருக்கின்றன என்று நாம் ஐயமில்லாமல் இருக்கின்றோம். ஆகையால் இந்த குணங்களுக்கு ஒற்றுமையாயுள்ள "ஆஸ்ட்ராலாஜியா சானு" (Astrologia Sana) என்ற பெயரையுடைய ஒரு ஜோதிட சாஸ்திரம் மொத்தத்தில் நமக்குத் தேவையானதென்று நாம் பதிவு (Register) செய்து கொள்ளவேண்டும். என்று பேகன் (Bacon) என்பவர் பிரசுரஞ் செய்திருக்கின்றார். இந்த ஜோதிட சாஸ்திரம் பின்னால் நடக்கப்போகின்ற விஷயங்களைப்பற்றி இன்னம் அதிகமான நம்பிக்கையுடனும், முகூர்த்தங்கள் வைப்பதில் அதிகமான ஜாக்கிரதையுடனும், இவ்விரண்டு விஷயங்களிலும் கட்டுத் திட்டத்துடனும்,

(with moderation) உபயோகப்படுத்தப்படவேண்டும் என்றும் இவர் தெரிவித்திருக்கின்றுர். மிலான் (Milan) என்ற பட்டணத்துப் பிரசித்திபெற்ற வைத்தியரானவரும் கிறிஸ்து பிறந்த ஆயிரத்தைந்நூற்றென்ருவது (1501 A.D.) வருஷத்தில் பிறந்தவருமான கார்டன் (Cardan) என்பவர் ஒரு பிரக்யாதிபெற்ற ஜோதிட சாஸ்திரியாக இருந்தார். இவர் ஜெர்மனி (Germany) பிரான்ஸ், (France) ஆகிய இந்த தேசங்களின் எல்லா வைத்தியர்களேயும் பிரமிக்கும்படி ஏமாற்றிக் கொண்டும் பங்கப்படுத்திக்கொண்டும் (Baffle) வந்திருந்த வியாதியான ஆர்ச்சி பிஷப் ஆப் செயின்ட் ஆன்ட்ரூஸ் (Archbishop of Saint Andrews) என்பவருடைய ஒரு நோயை ஜோதிட சாஸ்திரத்தின் ஞான உதவியால் சிகிச்சை செய்து சொஸ்தப்படுத்திவிட்டார். (Cured). இத்தாலியா (Italy) தேசத்து துறவி அல்லது ஏகாங்கி (Monk)யான டைடாகஸ் பிலேஸிடியஸ் டெடைடஸ் (Didacus placidus de titus) என்பவர் பெரிய கணித சாஸ்திரியாக இருந்ததுமல்லாமல் மிகவும் பிரக்கியாதி பெற்ற ஒரு ஜோதிட சாஸ்திரியாகவுங்கூட இருந்து அவர் காலத்தில் ஐரோப்பா கண்டத்தில் இருந்த மிகவும் பிரசித்திபெற்ற முப்பது பெரிய மனிதர்களின் ஜாதகங்களேத் தன்னுடைய புத்தகமாகிய "பிரிமம் மொபிலி" (Primum mobile) என்றதில் எழுதி ஜோதிட சாஸ்திரத்தின் உண்மையை நிலே நாட்டினுர். டைகோ பிராஹி (Tycho-brahe) என்ற வான சாஸ்திரியானவர் ஜோதிட சாஸ்திரியாகவுங்கூடவிருந்து கிறிஸ்து பிறந்த ஆயிரத்தைந்நூற்றெழுபத்தேழாவது (1577 A.D.) வருஷத்தில் தெரியப்பட்ட ஒரு வால் நட்சத்திரத்திலிருந்து (Comet) பின்லாந்து (Finland) என்ற தேசத்தில் இனிமேல் பிறக்கப்போகின்ற குஸ்தாவுஸ் அடால்ப்பஸ் (Gustavus Adolphus) என்பவர் ஜெர்மனி (Germany) தேசத்தை அழித்துவிட்டு கிறிஸ்து பிறந்த ஆயிரத்தறுநூற்றி முப்பத்திரண்டாவது (1632 A.D.) வருஷத்தில். இறந்துவிடுவார் என்று முன்னடியாகவே தெரிவித்திருந்தார். இந்த விஷயங்கள் எல்லாம் முந்தியே தெரிவித்தபடியே பூராகவும் நடந்தேறினவாகும். வர்ஜில் (Virgil), ஹோமர் (Homer), ஸாஸர் (Chaucer), மில்டன் (Milton), டிரைடன் (Dryden), பைரன் (Byron) ஆகிய இவர்களேப்போன்ற கவிகள் (Poets) ஜோதிட சாஸ்திரத்தைப்பற்றிப் புகழ்ந்து பேசி இருக்கின்றுர்கள்.

ஜோதிட சாஸ்திரத்தில் நம்பிக்கையை யுடையவர்களாக விருந்தவர்களேயும், இனி வரப்போகின்ற, பௌஷ்யகால, விஷயங்களே (the future) முந்தியாகவே அறிவதற்கு ஒரு மார்க்கமாக ஜோதிட சாஸ்திரம் இருப்பதற்கு இதனுடைய உரிமையையும் அக்கையும் பற்றியும் இது வரையிலும் நான் சொல்லி வந்தவை எல்லாவற்றையும் சுறுக்கிக் கீழ்க்கண்ட மேற்கோளால் (Quotation) நான் அப்படியே மாற்றுமல் தெரியப்படுத்துகின்றேன். "மேல் நாட்டில் இருந்த பூர்வீகர்களில் இப்போகிரேட்ஸ் (Hippocratus), அரிஸ்டாட்டில் (Aristotle), சிஸிரோ (Cicero) சாக்ரடீஸ் (Socrates) காலன் (Galen) பித்தா கொராஸ் (Pythagoras), கிளாடியஸ் டாலமி (Claudius Ptolemy), ஸீஸர், (Caesar), தேல்ஸ் (Thales) டெமொக்கிரைட்டிஸ் (Democritus) ஜொஷிபஸ் (Josephus) மணீலியஸ் (Manilius) ஜஸ்டினஸ் (Justinus) ஆகிய இவர்களும் இன்னம் இதர்களும் ஆவார்கள். நம்முடைய காலத்திற்கு நெருங்கியுள்ளவர்களில், பிலிப்பு மெலாங்த்தன் (Philip Melancthon,) ஸர்ஹென்றி கார்னீலியஸ் அக்ரிப்பா (Sir Henry Cornelius Agrippa), ரோஜர் பேகன் (Roger Bagon), கைடோ பொனுடஸ் (Guido Bonatus), கார்டன் (Cardon), லார்ட் வெருலம் என்ற பிரான்ஸிஸ் பேகன் (Lord Verulum-Bacon) ஆர்ச்பிஷப் யூஷர் (Archbishop Usher), வாலன்டைன் நெய்பாட் (Valentine Nailbod), பிஷப் ராபர்ட் ஹால் (Bishop Robert Hall), ஹென்றி கோலி (Henry Coly), ஜியார்ஜ் பார்க்கர் (George Parker), மைக்கேல் நாஷ்ட்ரோடாமஸ் (Michael Nostrodamus), சீயர்டி சோலிசெல் (Sieur de Soleysell), ஒராவது சார்லஸுக்கு டாக்டராகவிருந்த டாக்டர் மீட் (Dr. Meed, Physician to Charles I), டாக்டர் எபெனஷர்ஸிப்ளி (Dr. Ebenezer Sibley), ஜான் ஒர்ட்ஸ்டேல் (John Wordsdale), மெர்காட்டர் (Mercator), இலியாஸ் ஆஷ்மோல் (Elias Ashmole), ஸர் கெனலம் டிக்பி (Sir (Kenelm Digby), நிக்கொலெஸ் குல்பெப்பர் (Nicholas Culpeper), ஹெரல் ஆப் பிரிஸ்டல் என்ற ஜியார்ஜ் டிக்பி (George Digby, Earl of Bristol), ஜான் ஹேடன் (John Heydon), ஸர் கிரிஸ்டோபர் ஹேடன் (Sir Christopher Heydon), கவிகளுக்குள் அரசனுகிய ஜான் டிரைட்டன் (Jhon Dryden Poet Laureate) டாக்டர் ஜான் பட்லர் (Dr. Jhon Butler), ஸர் ஜார்ஜ் வார்டன் (Sir George Wharton), வானசாஸ்திரியாகிய வின்ஷென்ட் விங்கு (Vincent Wing the Astronomer) அஸ்ட்ராணமர் ராயல் போர்ட்ஸ்மத் என்ற ஜார்ஜ் விட்ச்செல் (George Witchel, Astronomer Royal Portsmouth), பஸ்ட் அஸ்ட்ராணமர் ராயல் என்ற மிஸ்டர் பிளாம்ஸ்டீட் (Mr. Flamstead, First Astronomer Royal), டைக்கோ பிராஹி (Tycho Brahe) என்ற பெரிய வான சாஸ்திரியும் கெப்லர் (Kepler) என்ற பெரிய வான சாஸ்திரியும் (the great Astronomers), ஜான் ஓர்ஸ்டேல் (Jhon Worsdale) லார்ட் லிட்டன் (Lord Lytton) ஆகிய இன்னஞ் சிலர்களும் ஆவார்கள். விசேஷ புத்தி வைபவத்தை (Talent) யுடைய இப்படிப்பட்டச் சிறந்த மேதாவிகளின் கூட்டமானது (Galaxy of Talent) ஜோதிட சாஸ்திரத்திற்கு உண்மையிலே ஒரு பெரிய கௌரவமான அந்தஸ்த்தையும் பிரகாசத்தையும் கொடுக்கும் என்பவதற்குச் சந்தேகமே கிடையாது! ஏனென்றுல் இப்படிப்பட்ட சிறந்த புத்திவாய்ந்த மேதாவிகள் எல்லோரும் அனுபவத்திலாகிலும் (Experience) அல்லது தத்துவ ஞானத்திலாகிலும் (Philosophy) அடியாதாரங்கள் என்ற அஸ்திவாரங்களே (Foundations) உடையதாகவில்லாத ஒன்றினுல் ஏகமனதாய் (in a common consent) ஆளப்பட்டு இருப்பார்கள்அல்லது மயக்கப்பட்டிருப்பார்கள் (swayed away) என்று நினைப்பது சாமானிய லௌகிக ஞானத்திற்கு என்ற பகுத்தறிவிற்கு (reason) எதிரிடையாகவிருக்கின்றது (is opposed to reason) "கிரகங்களின் கூட்டத்தினுலும் பார்வையினுலும் சந்திர மண்டலத்திற்குக் கீழே பூமியிலுள்ள ஜீவராசிகளின் பேரில் உண்டாகின்ற கிளர்ச்சி (Excitement) யைப் பற்றிய என்னுடைய தவறிடாத அனுபவமானது எனக்கு இஷ்டமில்லாமல் இருந்துங்கூட எனக்கு அதில் ஜோதிடத்தில் நம்பிக்கையைப் பலவந்தமாக ஏற்படுத்திவிட்டது" என்று நாம் முந்தியே

மேலே சொல்லியுள்ளபடி கெப்லர் (Kepler) என்றவர்கூட சொல்லியிருக்கின்றூர். இங்கு சொல்லப்பட்ட மேல்நாட்டு மேதாவிகளாகிய இத்தனை பேர்களும் இந்து தேசத்து மேதாவிகளும் மகரிஷிகளும் ஜோதிடத்தில் நம்பிக்கையை உடையவர்களாகவே இருந்தார்கள் என்ற விஷயமானது ஜோதிடம் உண்மையான சாஸ்திரம் எனறே தெரிவிக்கின்றது என்பதற்கு யாதொரு சந்தேகமும் இடையாது என்று இது வரையிலும், சொல்லி வந்தவைகளின் கருத்தேயாகும். நான் இது வரையிலுஞ் சொல்லி வந்தவைகளில் சில விஷயங்கள் சம்மந்தப்பட்ட வரையிலும் உண்மையிலே இங்கு இருப்பது போலவே கூறியவையே மறுபடியுங் கூறுதல் (Repetition) என்ற குற்றம் இருப்பினும் இதை மன்னிக்க வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகின்றேன். ஏனென்றுல் பல புத்தகங்களை நான் மறுபடியும் படித்து இந்த முகவுரையை எழுதியிருப்பதால் இவ்விதமாக நேர்ந்திருக்கக்கூடும், மேலும் கூறியதை மறுபடியுங் கூறுதல் என்பது சில சமயங்களில் விஷயங்களை நன்ருக மனதில் படிவதற்காகச் சொல்லுதலாகும்.

ஒரு ஆங்கில பாஷையின் அகராதியை ஜோதிடத்தின் அர்த்தம் என்ன என்று தெரிந்து கொள்ளுவதற்காக நீர் பார்ப்பீராயின் ஜோதிடம் " தள்ளுண்ட, கழிக்கப்பட்ட சாஸ்திரம் " (Exploded Science) என்று சில சமயம் விளக்கப்பட்டிருப்பதை நீர் கவனிக்கலாம். இவ்விதமாக ஜோதிடத்தைக் கழித்து விடும்படியாகச் செய்து கீர்த்தி பெற்றவர் செக்ஸ்டஸ் எம்பிரிகஸ் (Sextus Empiricus) என்பவராவர். இவர் கிறிஸ்து பிறந்த இருநூருவது (200 A.D.) வருஷத்தில் ஜோதிடத்தைப் பற்றிச் சில விஷயங்களை விரோதமாக எழுதின ஒரு வைத்திய சாஸ்திரியாவர். உதாரணமாக ஒரே நிமிஷகாலத்தில் பிறந்த ஒரு மனிதனையும் ஒரு கோவேறிக் கழுதையும் இவர் எடுத்துக்கொண்டார். ஒரு தினத்தில் அநேக மணி காலம் வரையிலும் ஒரு பளுவான திரிகை வட்டம் என்ற (Mill) மில்லைச் சுழற்றுகின்ற ஒரு கஷ்டமான வேலையில் இந்தக் கோவேறிக் கழுதை உபயோகப்படுத்தப்பட்டு வந்தது, ஆனல் இந்த மனிதனே ஒரு அதிக பணக்காரராக விருந்துகொண்டு சுகமாகவும் சந்தோஷமாகவும் தன்னுடைய வாணுளைக் கழித்துக்கொண்டு வந்தார். இவ்விதமான உதாரணத்தினல் மேலே சொல்லப்பட்டவர் ஜோதிடம் தள்ளப்படக்கூடிய சாஸ்திரம் என்று ருசுப்படுத்தினர். இவர் செய்ததில் ஒரு தப்பிதம் உண்டு. ஒரு விவேகமுள்ள (Sensible) அல்லது நியாய யுக்தமுள்ள (Rational) ஒத்துப் பார்த்தல் என்ற தாரதம்மியம் அல்லது உவமானம் (Comparison) செய்யவேண்டுமானல் இவர் ஒரே இனத்தைச் சார்ந்த இரண்டு ஜீவராசிகளை எடுத்துக்கொண்டிருக்க வேண்டுமே தவிற ஒரு நாற்கால் பிராணியாகிய கோவேறிக் கழுதையையும் ஒரு இரண்டு கால் பிராணியாகிய மனிதனையும் ஒத்துப் பார்த்தலுக்கு எடுத்து கொண்டிருக்கக்கூடாது. எண்பத்து நான்கு கோடி ஜீவராசிகள் உலகத்தில் இருக்கின்றனவென்று நமது இந்து தேசத்து சாஸ்திரங்கள் தெரிவித்திருக்கின்றன என்ற விஷயம் எல்லோருக்குந் தெரிந்த விஷயமாகும். ஆகையால் பல இனத்தைச் சார்ந்த பல ஜீவராசிகள் ஒரே க்ஷணத்தில் பிறந்திருக்கக்கூடுமென்பது மிகவும் சகஜமான விஷயமாகும்.

ஒத்துப் பார்ப்பதற்கு ஒரே இனத்தைச் சார்ந்த இரண்டு பிராணிகள் அஃதாவது ஒரே க்ஷணத்தில் பிறந்த இரண்டு கோவேறிக் கழுதைகள் அல்லது இரண்டு மனிதர்களை உதாரணமாக அவர் எடுத்துக்கொண்டிருக்க வேண்டும், ஏனென்றுல் ஒரே வகுப்பைச் சார்ந்த (Species) இரண்டு பிராணிகள் சம்பந்தப்பட்ட விஷயத்தில்கூட இவைகளின் வாழ்க்கையை உருவாக்குகின்ற (Shaping the career) வமிசப்பாரம்பரியம் என்ற ஒரு விஷயத்தையும் (Heredity) கவனிக்கவேண்டியதாக விருக்கின்றது. ஆகையால் இரண்டு வித்தியாசமான வகுப்பைச் சார்ந்த பிராணிகள் சம்மந்தப்பட்ட விஷயத்தில் வமிசப் பாரம்பரியத்தை (Heredity) இன்னம் அதிகமாகக் கவனிக்கவேண்டியதாகவே இருந்து வருகின்றது. நான்கு அறிவுள்ள பிராணியாகிய ஒரு கோவேறிக் கழுதையையும், ஐந்து அறிவுள்ள ஒரு மனிதனையும் ஒத்துப் பார்ப்பது நியாயமானதல்ல. ஜோதிடத்தைப்பற்றியும் ஜோதிட சாஸ்திரிகளைப்பற்றியும் விரோதமாக வாதாடி எம்பிரிகஸ் (Empiricus) அடையப்பட்ட ஜயமானது உண்மையான ஜயமாகாது, இது போலியான கற்பிதமான ஜயமேயாகும் (Feigned Success) ; ஏனென்றுல் இது கலந்து ஆபாசம் பண்ணுதல், புரட்டுதல் என்ற முகாந்தரத்தாலும் (Sophisticated method) கெட்டவிதத்தாலும் அடையப்பட்டதாகும். ஒரே க்ஷணத்தில் அல்லது கூடிய மட்டும் ஏககாலத்தில் பிறந்து ஒரே விதமான பலாபலன்களைத் தங்களுடைய வாணுட்களில் உடையவர்களை உதாரணங்களாக எடுத்துக்கொண்டு மேற்கண்ட எம்பிரிகஸ் (Empiricus) கையாண்ட வழியைக் கொண்டே ஜோதிட சாஸ்திரத்தின் தன்மையை ஸ்தாபிக்க நான் இப்போது பிரயத்தனப்படுகிறேன். கிறிஸ்து பிறந்த ஆயிரத்தெண்ணூற்றிருபதாவது (1820 A.D.) வருஷத்தில் பிப்ரவரி மாதத்தில் வெளியான பத்திரிகை பிரகாரம் செயின்ட் மார்ட்டின் லெ பீல்ட்ஸ் (Saint Martin-le-fields) என்ற விடத்தில் ஏககாலத்தில் மிஸ்டர் சாமுயல் ஹெம்மிங்ஸ (Mr. Samuel Hemmings) என்பவரும், மூன்ருவது ஜார்ஜ் அரசர் (King George III) என்பவரும் பிறந்தார்கள். மூன்ருவது ஜார்ஜ் (George III) என்பவர் பட்டந்தரித்துச் சிம்மாசனம் ஏறின காலத்திலேயே அஃதாவது கிறிஸ்து பிறந்த ஆயிரத்தெழுநூற்றறுபதாவது (1760 A.D.) வருஷத்தில் அக்டோபர் மாதத்தில் மிஸ்டர் ஹெம்மிங்ஸ் (Mr. Hemmings) என்பவர்கூட தன்னுடைய தகப்பனரின் சொத்துக்களை உரிமை வழியாகப் பெற்றுர் (inherited). முன் சொல்லப்பட்டவர் விவாகஞ் செய்துகொள்ளப்பட்டக் காலமாகிய கிறிஸ்து பிறந்த ஆயிரத்தெழுநூற்றறுபத்தோராவது வருஷத்தில், செப்டம்பர் மாதம் எட்டாந்தேதி (8-9-1761 A.D.) யன்றே பின் சொல்லப்பட்டவரும் விவாகஞ் செய்துகொண்டார். முன் சொல்லப்பட்டவர் இறந்த காலமாகிய கிறிஸ்து பிறந்த ஆயிரத்தெண்ணூற்றிருபதாவது வருஷத்தில் ஜனவரி மாதத்தில் இருபத்தொன்பதாவது தேதியாகிய சனிக்கிழமை (Saturday, 29-1-1820 A.D.) யன்றே பின் சொல்லப்பட்டவருடைய ஆத்துமா தன்னுடைய தேகத்திலிருந்து பிறிந்துவிடவே இவருடைய உடலம் அழுந்தவிடப்பட்டது. கிறிஸ்து பிறந்த ஆயிரத்தெழு நூற்றெழுபத்தாருவது (1776 A.D.) வருஷத்திய வருஷ ரிஜிஸ்டர் என்ற ரிக்கார்டில் ஒரே

தினத்தில் சுமார் ஏககாலத்தில் பிறந்தவர்கள் என்று இரட்டைக் குழந்தை (Twins born at about the same time on the same day)களின் ஜனனத்தின் பதிவு செய்யப்பட்டது. ஒருவர் ஆண், மற்றொருவர் பெண் ஆகும். ஆனால் இவர்கள் இருவரும் ஒரே தினத்தில் விவாகஞ் செய்துகொண்டார்கள், ஒரே தினத்தில் இறந்துவிட்டார்கள், ஒரே மசானக் குழியில் புதைக்கப் பட்டார்கள். ஒரே தினமாகிய கிறிஸ்து பிறந்த ஆயிரத்தெண்ணூற்றெழுபத் தொன்பதாவது வருஷத்தில் ஏப்ரல் மாதத்தில் பதினைந்தாவது தேதியில் (15-4-1879 A.D.), இரட்டைக் குழந்தைகளில் சாயந்திரம் ஐந்துமணி பத்து நிமிஷத்தில் ஒரு குழந்தையும்; மற்றொரு குழந்தை சாயந்திரம் ஐந்து மணி இருபத்திரண்டு நிமிஷத்திலுமாகப் பிறந்தன. முதற் குழந்தை கிறிஸ்து பிறந்த ஆயிரத்தெண்ணூற்றெண்பத்தோராவது வருஷத்தில் ஜூலை மாதத்தில் ஒன்பதாவது தேதியில் (9-7-1881 A.D.) இறந்துவிட்டது; மற்றொரு குழந்தை மூன்று தினங்கள் கழித்து இறந்துவிட்டது. இவ்விருவரும் பிறந்தகாலத்தில் பன்னிரண்டு நிமிஷங்கள்தான் வித்தியாசம் ஆகும். இறந்த காலத்தில் மூன்று தினங்கள்தான் வித்தியாசமாகும். மேல்நாட்டு ஜோதிட சாஸ்திரத்தில் பலாபலன்கள் நடக்குங் காலத்தைக் குறிப்பிடுவதற்காக ஒரு நாளுக்கு ஒரு வருஷகாலமாகவும், அஃதாவது நான்கு நிமிஷங்களுக்கு ஒருநாள் காலமாகவும் கணக்கிட்டு வருகின்றார்கள். இவ்விதமான கணக்குப்பிரகாரம் ஜனனகாலத்தில் வித்தியாசமான பன்னிரண்டு நிமிஷமானது மூன்றுநாள் வித்தியாசத்தையே குறிக்கும். இறந்த காலங்களில் ஏற்பட்ட வித்தியாசங்கூட இந்த மூன்றுநாளேதான் என்ற விஷயத்தை நன்றாய்க் கவனிக்கவும். இந்தக் கணக்கு விஷயமாகப் பின்னால் கீழே * குறிப்பிட்டுள்ள புத்தகங்களையும் பக்கங்களையும் பார்க்கவும். இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்க நிர்வாகத்தில் தற்காலத்தில் அதிகமாகக் கலந்து கொள்ளுகின்ற தென்னிந்தியாவைச் சேர்ந்த இரட்டைப்பிறவி யாளர்களாகிய இரண்டு முதலியார்களின் விஷயங்களைக்கூட நீர் கவனிக்கலாம். அமெரிக்காவைச் சேர்ந்த (America) பிரக்கியாதிபெற்ற சங்கீத சாஸ்திரிகளாகவும், (Musicians) வாசாலக பிரசங்கிகளாகவும் (Elocutionists) இருந்த இரட்டைப் பிறவியாளர்களாகிய புகழ்பெற்ற மாறில் டிவின்ஸ (Morril Twins) என்றவர்கள் ஒரே தினத்தில் அஃதாவது கிறிஸ்து பிறந்த ஆயிரத்தெண்ணூற்றறுபத்தேழாவது வருஷத்தில் ஆகஸ்ட்டு மாதத்தில், முப்பதாந் தேதியன்று (30-8-1867 A.D.) நியூயார்க் (New york) என்ற பட்டணத்தில் பிறந்தார்கள். கிறிஸ்து பிறந்த ஆயிரத்தெண்ணூற்றெழுபத்தெட்டாவது (1878 A.D.) வருஷத்தில் இருவரும் நீரில் மூழ்கிவிடும் சம்பவத்திலிருந்து இவர்களுடைய சகோதரரால் காப்பாற்றப்பட்டார்கள், இவர்கள் இருவரும் தங்களுடைய பதினைகாவது வயதுகாலத்தில் ஒரே கல்லூரி என்ற வித்தியாலயத்தில்(College) சேர்ந்து வாசித்தார்கள். இவர்கள் இருவரும் தங்களுடைய இருபதாவது வயதில் ஏககாலத்தில் கற்றுத் தேரிய பட்டம்பெற்றவர்களானார்கள் (became

* Vide page 179 of W. J. Simmonites "Complete Arcana of Natal Philosophy" 1890 A.D; page 189 of "A Student's Text Book of Astrology" by Vivian E Robson, B.Sc, 1925 A.D; page 223 of "the Text Book of Astrology" by " Alfred. Alfred by John Pearce" 1911, A.D.

graduates together). ஏககாலத்தில் ஷேக்ஸ்பீயர் கல்லூரி என்ற சங்கஸ்தாபனத்திலிருந்து (from Shakespearean Institute) நிதர்சன பத்திரங்கள் என்ற பட்டபத்திரங்களைப் (Diplomas) பெற்றார்கள்; தங்களுடைய மத விஷயமாகப் பிரசங்கஞ் செய்கின்ற வேலையை நடத்தும் விஷயமாகக் கிறிஸ்து பிறந்த ஆயிரத்தெண்ணூற்றெண்பத்தேழாவது வருஷத்தில் நவம்பர் மாதத்தில் இரண்டாவது தேதியன்று (2-11-1887 A.D.) லைசென்ஸ் கொடுக்கப்பட்டார்கள். இவர்கள் இருவரும் உருவ தோற்றத்திற்கூட (Physical appearance) கவனிக்கத்தக்கபடி அதிக ஒற்றுமையுடையவர்களாக விருந்தார்கள். தென்னிந்தியாவிற்கூட இரண்டு இரட்டைப் பிறவியாளர்கள் தங்களுடைய உருவ தோற்றத்தில் மிகவும் ஒற்றுமையாக விருந்ததால் இவர்களைப் பெற்றோர்கள்கூட வித்தியாசப்படுத்தித் தெரிந்துகொள்வதற்காக இலட்சுமணர் என்ற இளைய பிள்ளையின் கையில் இவர்கள் சிறியவர்களாக விருந்தபோது ஒரு வளையத்தைப்போட்டு அதன்மூலமாகத் தெரிந்துகொண்டு வந்தார்கள்; இவர்கள் பெரியவர்களாகி விவாகஞ்செய்துகொண்டு வாழ்ந்த காலத்திற்கூட இவர்கள் உருவதோற்றத்தில் மிகவும் ஒத்திருந்ததால் இவர்களுடன் இவர்களுடை மனைவிமார்கள் இவர்களை இவர்களுடைய குரல்களின் மூலம் தெரிந்து வித்தியாசத்தை அறிந்துகொள்ளுவதற்கு முந்தி இவர்களுடன் இரவுகாலங்களில் பேசத் துணியமாட்டார்கள். யார்க்ஷையர் (Yorkshire) என்ற தேசத்தில் கிறிஸ்து பிறந்த ஆயிரத்தெண்ணூற்றிருபத்தினான்காவது வருஷத்தில் ஜூன் மாதத்தில், இருபத்தெட்டாந் தேதியன்று (28-6-1824 A.D.) காலை எட்டு மணிக்கு இரட்டைக் குழந்தைகளாகப் பிறந்த சாமுயல் கிளப் (Samuel Clough) என்றவரும் ஜோஷப் கிளப் என்பவரும் இவர்களுடைய நான்காவது வயதில் ஸ்கார்லெட் பீவர் என்ற ஒருவிதமான ஜுரத்தினால் (Scarlet fever) கஷ்டப்பட்டார்கள், இவர்கள் இருவரும் விவாகஞ்செய்துகொள்ள ஸ்திரீகளிடத்தில் ஏககாலத்தில் உடன்பட்டார்கள். இந்த இரட்டைப்பிறவியாளர்களுடைய பத்தொன்பதாவது வயதில் இவர்கள் நேசித்த ஸ்திரீகள் இருவரும் ஏககாலத்தில் இறந்துவிட்டார்கள். இந்த இரட்டைப்பிறவியாளர்கள் ஒரேவிதமான ரோகமாகிய க்ஷயரோகத்தினால் (Consumption) ஒருநாள் வித்தியாசத்துக்குள்ளே இறந்துவிடவே கிறிஸ்து பிறந்த ஆயிரத்தெண்ணூற்றி நாற்பத்திரண்டாவது வருஷத்தில் ஆகஸ்ட்டு மாதத்தில் இரண்டாந்தேதியன்று (2-8-1842 A.D.) ஒரே மசான குழியில் புதைக்கப்பட்டார்கள் என்று கிறிஸ்து பிறந்த ஆயிரத்தெண்ணூற்றி நாற்பத்திரண்டாவது வருஷத்திய ஆகஸ்ட்டு மாதத்திய ஆறாந்தேதியையுடைய லீட்ஸ் பத்திரிக்கை (Leeds News of the sixth, August, 1842 A.D.) மூலமாய் தெரியவருகின்றது. கிறிஸ்து பிறந்த ஆயிரத்தெண்ணூற்றித்தொண்ணூறாவது வருஷத்தில் ஜூன் மாதத்தில் பதின்மூன்றாவது தேதியை (13-6-1890 A.D.) யுடைய 'டெயிலி கிராபிக்' (Daily Graphic) பத்திரிகை பிரகாரம் மேற்கு இங்கிலாந்தில் (Western England) பிறந்த இரண்டு ஜான்ஷன்ஸ் என்ற இரட்டைப்பிறவியாளர்கள் (Twin Johnsons) உருவத்தின் பார்வையில் அதிகமான ஒற்றுமையையுடையவர்களாக விருந்தார்கள்; இவ்விருவர்களும் ஒரே எடை, நிறை (Weight) உடையவர்களாகவும், ஒரே உயரத்தையுடையவர்களாகவும், தலை மயிர், கண்கள், தேகம் ஆகிய இவைகளின் நிறம் ஒன்றாகவே யுடையவர்களாகவும், தேகத்தின் அளவு ஒன்று

கவும், ஜீவனத்தொழில் ஒன்ருகவும், வாழ்க்கையின் அந்தஸ்து ஒன்ருகவும், விருப்பமும் வெறுப்பும் ஒன்ருகவும், மதாச்சார நம்பிக்கைகள் ஒன்ருகவும், பிள்ளைகள், பெண்கள் ஆகிய இவர்களின் எண்ணிக்கைகள் ஒன்ருகவும், நடை நொடி பாவனைகள் ஆகிய இவைகள்கூட ஒன்ருகவும் உடையவர்களாக விருந்தார்கள். சந்திரகலா நாடியில் பின்வரும் ஜோதிட சாஸ்திர விதிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒரு ஜாதகத்தின் ஜன்ம லக்கினத்தின் திரிகோண பாவ அதிபதிகள் என்ற ஜன்ம லக்கினத்தின் ஐந்தாவது, ஒன்பதாவது பாவங்களின் அதிபதிகளான கிரகங்களின் வாரங்கள் ஜாதகருக்கு எப்போதும் நல்ல வாரங்கள் என்றும் அதிருஷ்டமான வாரங்கள் என்றும் சொல்லப்படும். ஒரு ஜாதகத்தின் ஜன்ம லக்கினத்தின் ஸ்தானங்கள் என்று சொல்லப்பட்ட ஆருவது, எட்டாவது, பன்னிரண்டாவது பாவங்களின் அதிபதிகளின் வாரங்கள் ஜாதகருக்கு எப்போதும் கெட்ட வாரங்கள் என்றும் துரதிருஷ்டமான வாரங்கள் என்றும் சொல்லப்படும். உதாரணமாக, ஆர்ச் பிஷப் கான்டர்பரி என்ற தாமஸ பெக்கெட் (Thomas Becket, Archbishop of Canterbury) என்பவரின் வாழ்நாளின் முக்கியமான சம்பவங்கள் எல்லாம் செவ்வாய்க்கிழமையன்றே நடந்தேறின, சனிக்கிழமை எப்போதும் தனக்கு ஒரு அதிருஷ்டமான தினம் என்று இங்கிலாந்தைச் சேர்ந்த ஏழாவது ஹென்ரி (Henry VII of England) சொல்லுவது வழக்கமாகவிருந்தது. எட்டாவது ஹென்ரி (Henry VIII) என்பவருக்கு வியாழக்கிழமை எப்போதும் துரதிருஷ்டமான நாளாகவே விருந்தது. ஐந்தாவது போப் சிக்ஸ்டஸ் என்பவருக்கு புதன்கிழமை எப்போதும் ஒரு அதிருஷ்டமான நாளாகவே விருந்தது. ஜோதிட சாஸ்திரத்தின் சில விரோதிகள் இப்படிப்பட்ட விஷயங்களைத் தற்செயலான சம்பவங்கள் (chances) என்றும் உடனிகழ்ச்சிகள் (coincidences) என்றும் சொல்லித் தள்ளிவிடுகின்ருர்கள். ஆனுல் இவ்விதமான தற்செயலான சம்பவங்களும் (chances) உடனிகழ்ச்சிகளும் (coincidences) அடிக்கடி நேரிடுமானுல் இவைகளுக்கு சட்டங்களும், விதிகளும் அல்லது நியமங்களும் (laws) இருந்தே தீரவேண்டும். கிரகங்களில் இப்படிப்பட்ட நியமங்கள் ஏற்படுவதால் ஜோதிட சாஸ்திரம் இவ்விதமான நியமங்களைப்பற்றியும் தெரிவிக்கின்றது.

மேலும் தாங்கள் கண்டனஞ் செய்கின்ற விஷயத்தைப்பற்றித் தங்களுக்கு ஒன்றுமே தெரியாமலிருந்தபோதிலுங்கூட ஜோதிட சாஸ்திரத்தின் பேரில் உள்ள சுத்த வெறுப்பாலும் (Hatred), துரபிமானத்தாலும் (Prejudice) படித்துத் தேர்ந்த விஞ்ஞான சாஸ்திரிகளில் (Learned Scientists) சிலர் ஜோதிட சாஸ்திரம் பிரமை அல்லது மூடபக்தி (Superstition) அஞ்ஞானம் அல்லது அறியாமை (Ignorance) ஆகிய இவைகளாலும் விளைந்த ஒரு பயன் என்று சொல்லிக் கண்டனஞ் செய்கின்ருர்கள். இவர்கள் இந்த சாஸ்திரம் மனிதனுடைய புத்திகோளாறு என்கிற பைத்தியத்தினுல் (Aberration of human mind) உண்டான பயன் (Result) என்கின்ருர்கள் ; ஆனுல் இவர்கள் உண்மையான விஞ்ஞானிகள் செய்ய வேண்டிய முறை பிரகாரம் ஜோதிட சாஸ்திரத்தின் விதிகளையும் நியமங்களையும் பரிசோதனை செய்து பார்க்காமலேயே வெறுங் கண்மூடிகளாகக் கர்வப்பட்டுத் தங்களுடைய அபிப்பிராயத்தை எண்பித்துக் கொள்ளுகின்ருர்கள் (simply assume). "புகழ் பெற்ற விஞ்ஞானிகள் ஏன் ஜோதிட

சாஸ்திரம் ஒரு ஏமாற்றம், மோசம், என்று சொல்லுகின்ருர்கள். (Famous Scientists tell why Astrology is a Fake) என்ற தலைப்புடன் (Caption) வெளிவந்த ஒரு வியாசத்தை (an article) சில வருஷங்களுக்குமுன் நான் கண்ணுற்றேன். விவாகமாகாத சிறிய பெண்கள், (Spinsters), மனவலி தளர்ந்த முதியோர்கள் (Dotards) ஆகிய இவர்கள் உள்பட எல்லா அந்தஸ்து வகுப்புக்களைச் சார்ந்த பொதுமக்களிடத்திலிருந்து பணத்தை அபகரித்துக் கொண்டும் (fleece money) அமலைசெய்துகொண்டும் நட்சத்திரங்களைக் கண் கொட்டாதபடி உற்றுப்பார்க்கின்றவர்கள் (Racketeer star-gazers) என்றும், நெஞ்சறிந்த அல்லது தாங்களே நன்ருகத் தெரிந்து கொண்ட வஞ்சகத் தன்மையுள்ள மூடர்கள் (conscious charlatans) என்றும் ஜோதிட சாஸ்திரிகளை இந்த வியாசம் (article) நிந்திக்கின்றது (Brands). சராசரி விகிதங்களைப்பற்றிய விதிகள் (Law of averages) ஜனங்களுடைய சுபாவங்கள் விஷயங்கள், உலகவழக்கு (human nature and affairs) ஆகிய இவைகளின் சாதாரணமான விஷய ஞானம் (knowledge), என்பதை அநுசரித்த சாதாரண ஊகைகளோ அல்லது உத்தேசங்களோ (simple guesses) அல்லாமல் வேறே ஒன்றுமில்லை என்று ஜோதிடர்கள் முன்தியாகவே சொல்லிப் பலித்து விட்ட பலாபலன்களைப் பற்றி இந்த வியாசம் பகிரங்கப்படுத்துகின்றது. ஜோதிட சாஸ்திரத்தின் உறுதியான, வெளிப்படையான விரோதிகள் (avowed enemies), ஜோதிட சாஸ்திரத்தை மஞ்சா காமாலை கண்களுடன் (Jaundiced eyes) அஃதாவது துரப்பிராயமுடன் பார்க்கின்றவர்கள் ஆகிய இவர்கள், அதிருப்தியுடனும் மனவேக்காடுடனும் (disgruntled) ஜோதிட சாஸ்திரத்தைக் கருதுகின்றவர்கள் ஆகிய இவர்கள் எல்லோருடைய ஆபாசமான, அறிவில்லாத, பயன்படாத ஜம்பம என்ற வீம்பு பேச்சுகளையும் (empty vapourings), இறுமாப்பான, டம்பமான கோபங்களையும் தவிர வேறே ஒன்றையும் இந்த வியாசம் தெரியப்படுத்தவில்லை. இந்த நபர்கள் தங்களுக்குத் தெரிந்த வித்தைகளில் எவ்வளவோ புத்திசாலிகளாய் இருந்த போதிலுங்கூட ஜோதிட சாஸ்திர ஞானம் இவர்களுக்கு ஒன்றுமே அல்லது கொஞ்சங்கூட இல்லாத வரையிலும், இந்தச் சாஸ்திரத்தைப் பற்றி எவ்விதமான அபிப்பிராயத்தையாவது (opinion) அல்லது தீர்ப்பையாவது (Judgment) தெரியப்படுத்துவதற்குப் பூராகவும் சக்தியற்றவர்களாகவே (thoroughly incompetent) இருக்கின்ருர்கள். ஜோதிட சாஸ்திரத்தின் விரோதிகளில் பௌதிகமதவாதஸ்தர்கள் (Materialistic enemies) என்ற உலக சம்மந்தம்மான விஷயங்களையே மிகவும் அதிகமாகக் கவனிக்கின்றவர்கள் இந்தச் சாஸ்திரம் சாமான்யமான புத்தி அறிவிற்கு (common-sense) விரோதமாகவிருக்கின்றதென்று துணிந்து உறுத்திச்சொல்லுகின்ருர்கள் (assert). சாமான்யமான புத்தி அறிவு (Commonsense) என்பது எப்போதும் மாறுபடாமல் இருப்பதில்லை, நிலையாகவும் இருப்பதில்லை. இதர வஸ்துக்கள் அல்லது விஷயங்கள் போலவே இதுவும் விருத்தியாகிக் கொண்டே விருக்கின்றது. ஒரு காலத்தில் (in one age) சாமான்யமான புத்தி அறிவிற்கு விரோதமாக விருந்தது, இன்னெரு காலத்தில் (in another age) பொருத்தமாகவும் ஒற்றுமையாகவும் வந்துவிடுகின்றது (is in harmony). இராமாயண யுத்தத்தில் இந்திரஜித்து மேகங்களுக்குப் பின்னுல் மறைந்துகொண்டு இராமபிரானுடைய சைந்நியங்களுடன் போர் புரிந்தார்

என்று ஒரு காலத்தில் சொல்லிக்கொண்டிருந்தபோது இவ்விதமாகச் சண்டை செய்வது சாமான்னிய யுத்தி அறிவிற்கு விரோதமான பொய் (அண்டப்புளுகு, ஆகாசப்புளுகு, பிரமாண்டமான புளுகு ஆகிய இவைகளுக்குள் பிரமாண்டமான புளுகு) என்று கருதப்பட்டு வந்தது. ஆனால் இந்தப் பொய் நமது காலத்திலோ சாமான்னியமான புத்தி அறிவிற்கே ஒற்றுமையுடையதாகவும், பொருத்தமுடையதாகவும் வந்துவிட்டது. ஆகாயம் விமானம் உண்டு பண்ணினதற்கு முன்னே, டென்னிஷன் (Tennyson) என்பவர் தன்னுடைய இன்மிமோரியம் (In memorium) என்ற யாப்புக் கவிதை என்ற செய்யுளில் (poem), பின் வரப்போகின்ற ஒரு காலத்தில் வர்த்தகம் நடமாட்டம் ஆகிய இவைகள் (commerce, traffic, etc.) ஆகாய மார்க்கமாக நடக்கப்போகின்றது என்று தெரிவித்திருந்ததை ஜனங்கள் இது ஒரு பொய் என்று இகழ்ச்சியாக ஏளனமும் கேலியுஞ் செய்தார்கள். (Ridiculed). இப்போது இந்த ஏளனமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல ஒரு சிங்கத்தைக் கண்ட யானைக் கூட்டத்தைப்போலப் பறந்தோடிப் போய் விட்டன. சுமார் ஐம்பது வருஷத்திற்கு முன்னே புதுச்சேரியிலிருந்து வாங்கி வரப்பட்ட ஒருவருடைய ஜனன ஜாதக நாடியில் இந்த ஜாதகர் " ககன மார்க்கம் பறப்பனுகும் " அஃதாவது ஆகாயத்தில் இவர் பறப்பார் என்று ஒரு பாட்டில் சொல்லியிருந்ததைச் சில ஜோதிடர்கள் எப்படிப் பறக்கமுடியும் இது அசாத்தியமான காரியம் என்று எண்ணி இது பாட்டின் பிழை என்று சொன்னார்கள். இன்னஞ் சிலர் இந்த ஜாதகர் தன்னுடைய கனவில் ஆகாயத்தில் பறப்பதைப்போல கனவு காண்பார் என்று சொன்னார்கள். அக்காலத்தில் ஊமையன் அல்லது உறங்கினவன் கண்ட கனவு போல விருந்தது. இக் காலத்தில் விழித்தவன் கண்ட உண்மை போலவாகிவிட்டது. ஆகாயத்தில் பறவைகளைப்போலப் பறப்பது சாமான்ய புத்தி அறிவிற்கு ஒற்றுமை அல்லது பொருத்தம் உடையதாக இக் காலத்திய அநுபவித்தினுல் ஏற்பட்டுவிட்டது என்ற விஷயம் குழந்தை குட்டிகளுக்குக் கூட தெரிந்த விஷயமாக வாகிவிட்டது. சக்கரங்களின் உதவியால் ஓடுகின்ற நீராவி யந்திரம் (Locomotive steam engine) மூலமாய் ஒரு மணிக்கு ஐம்பது மைல் விகிதம் பிரயாணஞ் செய்யக்கூடும் என்று நினைக்கக்கூடிய விஷயம் சுமார் நூறு வருஷங்களுக்கு முந்தி சாமான்னியமான புத்தி அறிவிற்கு விரோதமானதாகக் கருதப்பட்டுவிட்டது. இக்காலத்தில் இவ்விதமாகவும் இன்னம் ஆச்சரியப்படத்தக்க அதிகமான வேகத்துடனும் பிரயாணஞ் செய்வது சகஜமாகிவிட்டது. ஜோதிட சாஸ்திரத்தில் அதிக நம்பிக்கையை யுடைய வர்களாக விருந்த நம்முடைய பழைய காலத்திய மஹரிஷிகள், ஞானிகள், ஞான திருஷ்டியையுடைய மேதாவிகள் (Sages and seers) ஆகிய இவர்களுடைய மனத்தின் திறமையை, புத்தியின் சாமாத்தியத்தை (Mental calibre) ஜோதிடத்தின் விரோதிகள் அடைவார்களேயானுல் அப்போது இவர்கள் ஆச்சரியப்படும்படியாய் ஜோதிடத்தில் நம்பிக்கையையுடையவர்களாக மாறிவிட்டு ஜோதிட சாஸ்திரம் சாமான்னிய புத்தி அறிவிற்கு விரோதமானதல்லவென்று பறை சாற்றுவார்கள், பிரசங்கஞ் செய்வார்கள், பிரகடனஞ் செய்வார்கள். (Proclaim) என்பதற்குச் சந்தேகமே விராது.

ஒரு காலத்தில் ஜோதிட சாஸ்திரத்தைக் கண்டனஞ்செய்து தூஷித்த ஸர் டேவிட்டு புரூஸ்டர் (Sir David Brewster) என்றவர் " கிரகங்களும்

நட்சத்திரங்களும் மாத்திரந்தான் இந்தப் பிரபஞ்சத்தில் எல்லாதேசத்தாராலும் பார்க்கப்படப்பட்டனவாகும். எல்லா ஜனங்களாலும் புகழப்பட்டு மெச்சத்தக்கனவாகும். இவைகள் நாம் பிறக்கும்போது உண்டாகும் ஜாதகங்களின் பேரில் தங்களுடைய ஆதிக்கத்தைச் செலுத்தித் தலைமைவகித்து காரியங்களை நடத்துகின்றன (presided over the horoscopes of our birth); இவைகள்தான் நாம் இறந்துபோய் மசானத்தில் பூமியின்மீழ் புதைந்து கிடக்கும்போது கூட நம்முடைய பசுமையான சபக்குழி மண்மேடுகளின் பேரில் தங்களுடைய கிரணங்களை வீசப்போகின்றன " என்று சொல்லும்படிக் கட்டாயப்படுத்தப்பட்டார். இவர் தன்னுடைய காலத்தில் ஜோதிட சாஸ்திரிகளைச் சவுக்கினுல் அடிக்கின்ற ஒரு பேர்வழி (An astrological scourge) என்ற நாம தேயத்தினுல் வழங்கப்பட்டு வந்தார். ஜோதிட சாஸ்திரத்தின் பேரில் குற்றஞ்சாட்டி இதை இழிவு படுத்திக் கண்டனஞ்செய்த (denounced) பன்னிரண்டு புத்தகங்களை இவர் எழுதினுர். இப்படிப்பட்ட பொல்லாத பேர்வழியானவர் தன்னைப் பற்றித் தான் தன்னுடைய முப்பத்தி மூன்றுவது வயதில் இறந்து போய்விடப் போகின்ற விஷயத்தைப்பற்றி ஜோதிட சாஸ்திரிகள் முன்னமே விளம்பரப் படுத்தி யிருந்த பிரகாரமேதான் இறந்துவிடத் தான் நேரிடும் என்றும், தான் இதுவரையிலும் ஜோதிட சாஸ்திரத்தைப் பற்றித் தன்னுடைய பன்னிரண்டு புத்தகங்களில் எழுதியவைகள் எல்லாம் தான் குறித்த காலத்தில் இறந்து விடுவதால் பொய்த்துப் போகப் போகின்றன என்று தன்னுடைய மரணப் படுக்கையில் (Death-bed) இருந்த காலத்தில் தெரிந்து கொள்ளவே ஜோதிட சாஸ்திரத்தின் உண்மைகளை எல்லாம் ஒற்றுக்கொண்டு தன்னுடைய மரணப் படுக்கையில் அங்கீகாரஞ் செய்யும்படிக் கட்டாயமாக நேரிட்டுவிட்டது (he was constrained to admit the truths of astrology in his death-bed).

நான் இனிமேல் ஜோதிடத்தின் உண்மையை உங்களுக்குத் திருப்திகரமாக விளக்குவதற்காக உண்மையான அநுபவ உதாரணங்களில் சிலவற்றை எடுத்துக்காட்டி ஜோதிட சாஸ்திரத்தில் கொடுத்துள்ள விதிகள் சரியானவைகளே என்று ருஜுபடுத்தப் போகின்றேன் :—

குரு		ராகு	
லக்கினம்	இராசி சக்கரம்		
	சூரியன் சந்திரன் சனி கேது	அங்காரகன் புதன்	சுக்கிரன்

1. இங்கு மேலே கொடுக்கப்பட்டுள்ள ஆண் ஜாதகம் கிறிஸ்து பிறந்த ஆயிரத்தித் தொள்ளாயிரத்திருபத்தேழாவது வருஷத்தில் நவம்பர் மாதத்தில் இருபத்தைந்தாந் தேதியில் (25-11-1927/A. D) பிறந்து கிறிஸ்து பிறந்த ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி நாற்பத்தாறுவது வருஷத்தில் ஆகஸ்ட்டு மாதத்தில் இருபதாந் தேதியன்று (20-8-1946./A.D.) க்ஷய ரோகத்தினால் கிருத்திகை நட்சத்திரத்தில் இறந்துபோன ஒருவருடைய நிரயன ஜாதகமாகும். கும்ப ராசியில் லக்கினமும், மீனத்தில் குருவும், ரிஷபத்தில் ராகுவும், கன்னியில் சுக்கிரனும், துலாத்தில் அங்காரகனும் புதனும், விருச்சிகத்தில் சூரியனும், சந்திரனும், சனியும் கேதுவும் ஆகும். ஜன்ம நட்சத்திரம் கேட்டை ஆகும். ஜனன காலத்தில் புதன் தசையில் இருப்பு பதினன்கு வருஷங்களும் ஏழு மாதங்களும் ஆகும். கீழே குறிக்கப்பட்ட பாடல் அகஸ்திய மஹரிஷியால் உண்டாக்கப்பட்டு 1899 A. D.-யில் பதிக்கப்பட்ட "மணிகண்ட கேரளம்" என்ற பெயரை யுடைய ஒரு தமிழ் புத்தகத்தில் உள்ள அறுபத்தோராவது பக்கத்தில் ஏழாவது செய்யுளாகும்.

> சீணமாய் மதி யிருக்கச் சேர்ந்திட பாபர் தானும்
> ஈனமாங் கடகந் தேளும் இடர்சுரா வாகி நின்றால்
> ஈனமாம் ஈரா றெட்டில் இருக்கினும் க்ஷயமே யுண்டு
> மானமே யுடைய மாதே மடிவனே க்ஷய ரோகத்தில்.

இதனுடைய அர்த்தம் பின்வருமாறு ஆகும். மதி என்ற சந்திரன் க்ஷீணமாக அஃதாவது பலவீனமாக விருந்து இவருடன் பாபக்கிரகங்கள் கூடி கடகராசியிலும் தேள் என்ற விருச்சிகராசியிலும், இடர் என்ற கஷ்டத்தை விளைவிக்கக்கூடிய சுரா என்ற மகர ராசியிலும் வலிவில்லாமல் இருந்தாலும் அல்லது லக்கினத்திலிருந்து பன்னிரண்டு, எட்டு, என்ற பாவங்களில் இருந்தாலும் மானத்தையுடைய மாதாகிய பார்வதியம்மையே! ஜாதகர் க்ஷயரோகத்தை உடையவராவர். இவர் இந்த க்ஷயரோகத்தினால் இறந்து போய்விடுவார். இங்கு உதாரணமாகக் கொடுக்கப்பட்டுள்ள ஜாதகத்தில் சந்திரன் விருச்சிகத்தில் நீச்சமாகி அஸ்தங்கதம் அடைந்திருப்பதால் மிகவும் வலிவில்லாமல் பலவீனமாக விருக்கின்றார். இவர் பாபக்கிரகங்களாகிய சனி, கேது, சூரியன் ஆகிய இவர்களுடன் கூடி இங்கு பாடலில் சொல்லப்பட்ட மூன்று ராசிகளில் ஒரு ராசியாகிய விருச்சிகத்திலேயே யிருக்கின்றார். இந்தச் செய்யுள் பிரகாரம் இந்த ஜாதகர் க்ஷயரோகத்தினால் இறந்துபோகும் தலைவிதியை அல்லது அமைப்பையுடையவராக விருக்கின்றார். இவர் உண்மையிலே சுமார் ஒன்றரை வருஷகாலமாக க்ஷயரோகத்தினால் அதிகத் துன்பத்தையடைந்து இந்த க்ஷயரோகத்தினாலேயே கடைசியில் இறந்துபோய்விட்டார். தற்காலத்தில் க்ஷயரோக வைத்திய நிபுணர்கள் என்று சொல்லப்பட்ட எல்லா வைத்தியர்களைக்கொண்டு இவருடைய தாய்தகப்பனர்கள் சுமார் ஐயாயிரம் ரூபாய் வரையிலும் செலவு செய்து இவருக்குச் சிகிச்சை செய்து பார்த்தார்கள். இந்த நிபுண வைத்தியர்கள் என்று சொல்லப்பட்ட வைத்தியர்களில் ஒரு வைத்தியர்கூட தயாதாக்ஷிண்யமற்ற தலைவிதியிலிருந்து (Inexorable fate) இந்த ஜாதகரைக் காப்பாற்றமுடியாமல் போய்விட்டது. இந்தப் பழைய காலத்திய ஜோதிட புத்தகத்திலுள்ள பாடலில் கண்டபிரகாரமே இவர் இறந்துவிட நேரிட்டது. தற்காலத்தில் ஜோதிட சாஸ்திரத்தி

நம்பிக்கையையுடைய ஒரு மிகவுஞ் சிறந்த முதலியார் வைத்தியர் (a Mudaliar Physician) இருக்கின்றார். இவர் நீடித்த வியாதிகள் (Chronic diseases) மூலமாய் ஏகாதசி, அமாவாசை, கிருத்திகை ஆகிய இவைகள் போன்ற திதி, நட்சத்திரங்கள் ஆகிய இவைகளையுடைய தினங்களில் இந்த நோய்களையுடையவர்கள் கஷ்டங்களைப் பிரத்தியேகமாக அனுபவிக்கின்றார்கள் என்று சாதாரண ஜனங்கள் அபிப்பிராயப்படுவது போலவே அபிப்பிராயத்தை யுடையவராகவேயிருக்கின்றார். இந்த ஜாதகத்திற்குரியவர் சாதாரணமாக ஜோதிட சாஸ்திரத்தில் நம்பிக்கையை யுடையவரல்ல. இவர் இறந்துபோவதற்கு முந்தியதினமாகிய 19-8-1946 A. D. தேதியையுடைய தினத்தில் முன்னிரவில் கிருத்திகை நட்சத்திரம் ஆரம்பித்தபோது கிருத்திகை நட்சத்திரம் வந்துபோய்விட்டதா என்று இவர் தன்னுடைய தாய் தகப்பனார்களைக் கேட்டார். இவரை "நீ ஏன் இப்போது இதைப்பற்றி இவ்வளவு அக்கரையுடன் கேட்கின்றாய்" என்று தாய்தகப்பனர்கள் கேட்டபோது "நான் இந்த நட்சத்திரத்தைப்பற்றி மிகவும் பயந்து கொண்டிருக்கின்றேன். என்னுடைய இந்த ஒன்றரை வருஷகாலமாக வியாப்த்தியுள்ள வியாதியின் அனுபவத்தினால் இந்தக் காலத்தில் நேரிட்ட கிருத்திகை வியாபித்திருந்த நாட்களில் என்னுடைய நோய் அதிகமாகி நான் அதிக துன்பத்தை அடைந்து என்னுடைய தேகசுகம் அதிகமாகக் கெட்டுப்போய் விட்டது" என்று பதில் சொல்லி கிருத்திகையைப்பற்றிய தன்னுடைய அனுபவத்தை முதல் முதல் தெரிவித்தார். தாம்பரத்தி லுள்ள க்ஷயரோக ஆஸ்பத்திரியில் (Tambaram Sanatorium) இவர் சிகிச்சைக்காக விருந்த காலத்தில் இவருக்கு ஒரு ஆப்பரேஷன் (operation) என்ற வைத்தியன் செய்யும் சஸ்திரக் கிரியையைச் செய்ய வைத்தியர்கள் எண்ணி இவருக்குத் துரதிருஷ்டமாகவும் இவர்களுக்குந் தெரியாமலும் கிருத்திகையையுடைய ஒரு தினத்தைக் குறித்தார்கள். இந்தக் குறித்ததினத்தில் இந்த ஆப்பரேஷன் கிரியைச்செய்ய எல்லாவற்றையுந் தயார் செய்துவிட்டபிறகு, ஆப்பரேஷனை ஆரம்பிக்க வைத்தியர் இந்த ஜாதகருடைய கை நாடியைப் பரிசோதனை செய்தார். இந்த வைத்தியர் ஆச்சரியப்படும்படியாயும் பயப்படும்படியாயும் எதிர்பாராதபடி இந்த நோயாளியினுடைய கை நாடிகள் திடீரென்று (முந்திய தினத்திலிருந்ததைவிட) மிகவும் பலவீனமாகவும் கெடுதியாகவும் போய்விட்டன. இந்த நோயாளி இந் நிலையில் ஆப்பரேஷனைத் தாளமாட்டார் என்று எண்ணி பயந்து வைத்தியராகிய சஸ்திர வைத்தியர் ஆப்பரேஷனைச் செய்யாமல் நிறுத்தி விட்டார். இவ்விதமான காரணத்தினால் இந் நோயாளிக்கு ஆப்பரேஷனே நடக்காமலேயே போய் விட்டது. மேலும் 1877 A.D-ஆம் வருஷத்திற்குச் சரியான ஈஸ்வர௵ வைகாசி மாதத்தில் பதிப்பிட்டதும் பிரம௠ ஸ்ரீ வேதலிங்கப் பட்டர் அவர்களால் எழுதப்பட்டதுமான தமிழ் "துய்ய கேரளம்" என்ற ஜோதிட புத்தகத்தில் இரண்டாவது மூன்றாவது பக்கங்களிலுள்ள பதினறாவது பாடல் கீழே குறிக்கப்பட்ட பாடலாகும்.

> "என்னு மொன்றினிற் கோள் ஆறுமிடத்துக் கோளுடனே கூடி
> உன்னிய ராகு கேது வோடொரு ஸ்தலத்தே நிற்கத்
> தன் னுடல் சுகமில்லாமற் சஞ்சல மனத்த னுகி
> மின்னனய் வியாதி யத்தனு மென விளம்ப லாமே."

இதனுடைய அர்த்தம் பின்வருமாறு ஆகும். ஜன்மலக்கினம் என்ற ஓராவது வீட்டிற்குடைய கிரகம் ஆருவது வீட்டிற்குடைய கிரகத்துடனும் இராகு அல்லது கேது என்ற கிரகத்துடனும் ஒன்ருகக் கூடிக்கொண்டு ஒரே வீட்டில் இருந்தால் ஜாதகர் தன்னுடைய தேகமானது சுகத்துடன் இல்லாமலும், இவர் கஷ்டமான அல்லது துன்பத்தை அடைந்த மனத்தை உடையவராகவும் இருந்துகொண்டு நோயாளியாக விருப்பார் என்று சொல்லக் கூடும். இந்த உதாரண ஜாதகத்தில் ஜன்ம லக்கினுதிபதியாகிய அஃதாவது ஓராவது வீட்டிற்குடையவராகிய சனி ஆருவது வீட்டிற்குடையவராகிய சந்திரனுடனும் கேது என்ற கிரகத்துடனும் ஒன்ருகக்கூடிக்கொண்டு விருச்சிக ராசியில் ஒரே வீட்டில் இருக்கின்ருர்கள். ஆகையால் இந்த ஜாதகத்தில் இந்தப் பாடலில் சொல்லியுள்ள பிரகாரம் கிரக நிலை அமைந்திருக்கின்றது. இந்தப் பாடலில் சொல்லியுள்ள பிரகாரமே இந்த ஜாதகர் 1946 A.D.-ஆம் வருஷத்தில் சுமார் ஒன்றரை வருஷகாலம் வரையிலும் விடாமல் நீடித்திருந்த க்ஷய ரோகத்தினுல் இறந்து போவதற்கு முந்தி சுமார் மூன்று நான்கு வருஷங்களாகப் பல வித ரோகங்களால் பீடிக்கப்பட்டுத் தேக சுகமில்லாமல் வியாதியஸ்தராகிக் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார். இவர் ஒரு நல்ல வேட்டைக்காரர் (Sportsman) ஆக விருந்தார். இவர் எப்போதும் வெளியிலேயே உலாவிக்கொண்டிருக்கின்ற வாழ்க்கையில் (Outdoor life) மிகவும் பிரியமுள்ளவராக விருந்தார். இவர் இன்டர்மீடியேட் பரீட்சைக்குப் (Intermediate Examination) வாசித்துக்கொண்டிருந்தார். இப்படிப்பட்ட வாலிபர் சுமார் ஒன்றரை வருஷகாலம் கொடிய ரோகமாகிய க்ஷய ரோகத்தினுல் பீடிக்கப்பட்டு ஜெயிலிலடைப்பட்டிருந்தது போலவே இருந்ததால் இவர் எவ்வளவு மனச்சஞ்சலம், துன்பம் ஆகிய இவைகளை இந்தப் பாட்டில் சொல்லியுள்ள பிரகாரம் அடைந்திருக்கக்கூடும் என்பதை நீங்களே ஊகிக்கக் கூடும். இந்த ஜாதகம் இவ்விரண்டு செய்யுள்களால் ஜோதிட சாஸ்திரம் உண்மையான சாஸ்திரம் என்றே தெரிவிக்கின்றது.

புதன்	சூரியன் குரு சனி	சுக்கிரன் கேது	
அங்காரகன்	இராசி சக்கரம்		
			சந்திரன்
	லக்கினம் ராகு		

2. மேலே கொடுக்கப்பட்டுள்ள ஆண் ஜாதகம் கிருஸ்து பிறந்த ஆயிரத்தொனுற்றெண்பத்தோராவது வருஷத்தில் எப்ரல் மாதத்தில் பதினோராந்தேதியன்று(11-4-1881/A.D.) இரவு மணி 8-45 நிமிஷத்திற்குப்பிறந்து

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்தைந்தாவது வருஷத்தில் நவம்பர் மாதத்தில் பதினோராந் தேதியன்று சுமார் இரவு 7 மணி-30 நிமிஷத்திற்கு இறந்துபோன ஒருவருடைய நிரயன ஜாதகமாகும். விருச்சிகராசியில் ஜன்ம லக்கினமும் இராகுவும், கும்பத்தில் அங்காரகனும், மீனத்தில் புதனும், மேஷத்தில் சூரியனும் குருவும் சனியும், ரிஷபத்தில் சுக்கிரனும் கேதுவும் சிம்மத்தில் சந்திரனும் ஆகும். ஜனன நட்சத்திரம் பூரம் ஆகும். ஜனன காலத்தில் சுக்கிர மகாதசையில் இருப்பு ஒருவருஷமும் ஐந்து மாதங்களும் இருபது நாட்களும் வாக்கியபஞ்சாங்க ரீதியாய்க் குறிக்கப்பட்டிருந்தது. கிருஸ்து பிறந்த ஆயிரத்தறுநூற்றறுபத்து நான்காவது (1664 A.D) வருஷத்தில் சீரனூர் நடராஜர் என்ற ஒரு ஜோதிடரால் எழுதப்பட்டு 1902 A.D. ஆம் வருஷத்தில் அச்சிடப்பட்ட புத்தகமாகிய தமிழ் ஜாதகாலங்காரத்தில் எழுபத்தேழாவது பக்கத்திலுள்ள நானூற்றிபதின்மூன்ருவது பாடலாகும் கீழ்கண்ட பாடல்.

> "கண்ட பன்னிரண்டாம் வீட்டோன் கனத் திரிகோண மேறிக்
> கொண்ட கேந்திரத்தி னிற்க அவனேடு கூடி ராகு
> அண்டியே நிற்கப் பாபர் அவர்களைப் பார்த் திருக்க
> எண்டிசை உலகில் அங்க ஈனனுய் இருப்பன் என்னே."

இந்தச் செய்யுளின் அர்த்தம் பின்வருமாறு ஆகும் ஜன்மலக்கினத்திற்குப் பன்னிரண்டாவது வீட்டிற்குடையவர் திரிகோணபாவங்கள் என்ற ஓராவது, ஐந்தாவது, ஒன்பதாவது வீடுகளில் இருந்தாலும் அல்லது கேந்திர பாவங்கள் என்று சொல்லப்பட்ட ஓராவது, நான்காவது, ஏழாவது, பத்தாவது வீடுகளில் இருந்தாலும் அப்போது இவருடன் இராகு கூடிக்கொண்டிருந்தாலும் அல்லது இவருக்கு அருகில் இருந்தாலும், அப்போது இவர் களைப் பாபக்கிரகங்கள் பார்த்திருந்தால் ஜாதகர் அங்கவீனராக விருந்து கொண்டு உலகத்தில் வாழ்வார். இங்கு உதாரணமாகக் குறிப்பிட்ட ஜாதகத்தில் ஜன்ம லக்கினத்திற்குப் பன்னிரண்டாவது வீட்டிற்குடைய சுக்கிரன் ஏழாவது கேந்திர வீட்டில் கேதுவுடன் கூடிக்கொண்டு ராகுவால் (கூடாமல்) பார்க்கப்பட்டு இருப்பதுடன் சுக்கிரனைப்பாபராகிய அங்காரகனும் பார்த்திருக்கின்ருர். ஆகையால் இந்தப்பாடலில் சொல்லியுள்ள கிரக அமைப்புகள் பெரும்பாலும் ஒத்திருக்கின்றன. இந்த ஜாதகர் தன்னுடைய இடது கால் முழங்காலுக்குக் கீழே ஊனமாகவும் இடது பாதம் வளைந்து மடங்கி நொண்டியாகவும் பிறந்தார். இவர் கைக் குழந்தையாக விருந்தபோது இவருக்கு வைத்தியஞ் செய்யவே பாதம் நிமிர்ந்து படிந்து நொண்டித்தன்மை அதிகமாகச் சொஸ்தமாகி விட்டது. ஆனுல் இந்த இடது கால் நேர்ந்து போய்க் கொஞ்சம் ஊனமாகவே மெலிந்து போய் இவ்விதமாகவே விருந்து விட்டது, ஆகையால் இவர் ஒரு பக்கமாகக் கொஞ்சஞ் சாய்ந்து கொண்டு நடப்பதுண்டு, இந்தப்பாடல்கூட இவ்விதமாக ஜோதிட சாஸ்திரத்தின் உண்மையை நிலை நாட்டுகின்றது. நான் பார்த்த இன்னெரு ஜாதகத்தில் ஜன்மலக்கினம் கும்பராசியாகிப் பன்னிரண்டாவது வீட்டிற் கதிபதியாகிய சனி கும்பத்தில் கேந்திரத்தில் இருந்து கொண்டு, இராகு மகரராசியில் கும்பத்திலுள்ள சனிக்கு மிகவும் அருகில் இருந்து கொண்டு, இந்தச் சனியும்

இராகுவும் பாபக்கிரகங்களால் பார்க்கப்பட்டிருக்கின்றார்கள். இந்த ஜாதகர் கூட தன்னுடைய இடது கால் நொண்டியாகப் பிறந்து இப்போது இவர் பெரியவராகியும் நொண்டியாகவே விருந்து வருகின்றார்.

3. கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆண் ஜாதகம் கிறிஸ்து பிறந்த ஆயிரத்துத் தொள்ளாயிரத் திருபத்தோராவது வருஷத்தில் செப்டம்பர் மாதத்தில் ஒன்று இரண்டு தேதிகளுக்குரிய இரவில் (12—9—1921/A.D.) மணி ஒன்று நிமிஷம் பதினைந்திற்குப் பிறந்து கிறிஸ்து பிறந்த ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தெட்டாவது வருஷத்தில் ஜூலை மாதத்தில் 15, 16-ந் தேதி இரவில் மணி இரண்டு, நிமிஷம் நாற்பத்தைந்திற்கு (at 2-45 a. m. 15, 16-7-1948 A.D) முதலில் க்ஷயரோகமாகக் கண்டு கடைசியில் க்ஷயரோக மூளைநோயாக மாறின ஒரு நோயால் (tubercular Meningitis) இறந்து போய் விட்டவருடைய நிரயன ஜாதகமாகும். மிதுன ராசியில் ஜன்மலக்கினமும், கடகத்தில் சுக்கிரனும் அங்காரகனும், சிம்மத்தில் சூரியனும் சந்திரனும் புதனும், கன்னியில் குருவும், சனியும், இராகுவும், மீனத்தில் கேதுவும் ஆகும். ஜன்ம நட்சத்திரம் மகம் ஆகும். ஜனன காலத்தில் கேது தசையில் இருப்பு ஆறு மாதந்தான் ஆகும். தில்லை நாயக ஜோதிடர் என்பவரால் எழுதப்பட்டு, கிறிஸ்து பிறந்த ஆயிரத்தெண்ணூற் றெண்பதாவது வருஷத்தில் (1880 A. D.) அச்சிடப்பட்ட தமிழ் ஜாதக சிந்தா மணி என்ற புத்தகத்தின் நூற்றறுபத்தாறுவது பக்கத்தில் உள்ள ஆயிரத் தெழுபத்தாறுவது பாடல் ஆகும் கீழ்குறித்தப் பாடல்.—

"பெருகும் அட்டமத்தோன் கேந்திரம் பெலக்கவே இலக்கினத்
[தோன்
வரும் பலவீனமாக வறைந்திடின் வடிவேற் கண்ணாய்
ஒரு பன்னிரண்டே பன்னேழோ ரிருபத் திரண்டாம்
இருபத்தைந்து அல்லான் முப்பத் திரண்டினின் மரணமாமே"

கேது			லக்கினம்
	இராசி சக்கரம்		சுக்கரன் அங்காரகன்
			சூரியன் சந்திரன் புதன்
			குரு சனி ராகு

இந்தப்பாட்டின் அர்த்தம் பின்வருமாறு ஆகும். ஜன்ம லக்கினத்திற்கு அஷ்டமாதிபதி என்ற எட்டிற்குடையவர் கேந்திரபாவம் என்ற ஒன்று, நான்கு, ஏழு, பத்து ஆகிய இந்த வீடுகளில் பலமாக விருந்து ஜன்ம

லக்கினாதிபதியானவர் பலவீனமாக விருந்தால் வேலாயுதத்தைப் போன்ற அழகுள்ள கண்களையுடையவளே! ஜாதகர் பன்னிரண்டாவது, அல்லது பதினேழாவது, அல்லது இருபத்திரண்டாவது, அல்லது இருபத்தைந்தாவது அல்லது முப்பத்திரண்டாவது வயதில் மரணமாவார். இவருக்கு முப்பத்தி ரண்டு வயதிற்குமேல் ஆயுள் கிடையாதென்று இந்தச் செய்யுளின் கருத் தாகும். இந்த உதாரண ஜாதகத்தில் ஜன்மலக்கினத்திற்கு எட்டாவது வீட்டிற்குடையவராகிய சனி நான்காவது கேந்திர வீட்டில் வலிவாக விருக் கின்றார். இலக்கினாதிபதியாகிய புதன் மூன்றாவது பாவத்தில் சூரியனுக்கு எட்டரைப் பாகைக்குள்ளே இருந்து கொண்டு அஸ்தங்கத மடைந்து மிகவும் பல வீனமாக விருக்கின்றார். மேலும் தெய்வக்ஞ ஸ்ரீமான் மஹாதேவ ஸர்மா என்பவரால் எழுதப்பட்டு, மத்தியபாரத் என்ற இராஜ்யத்திலுள்ள (Madhya Bharath State) ரதலாமா (Rutlam or Ratlam) என்ற பட்டணத் தில் புவனேஸ்வரி என்ற அச்சுக் கூடத்தில் 1950 A.D. ஆவது வருஷத்தில் அச்சிடப்பட்ட சமஸ்கிருத புத்தமாகிய "ஜாதக தத்வம்" என்ற கிரந்தத்தில் இருநூற்றைம்பதாவது பக்கத்திலுள்ள நாற்பத்தொன்பதாவது சுலோகம் கீழ்கண்ட சுலோகம் ஆகும். "சிம்ஹேவா கர்க்கே சநரார்க் கௌ க்ஷ ஹீ"

இதனுடைய அர்த்தம் பின்வருமாறு ஆகும். சூரியனும் சந்திரனும் கூடிச் சிம்மராசி அல்லது கடகராசியில் ஒன்றாக விருந்தால் ஜாதகருக்கு க்ஷய ரோகம் உண்டு. இந்த உதாரண ஜாதகத்தில் சூரியனும் சந்திரனும் கூடி இருவரும் சிம்மராசியில் இருக்கின்றார்கள். இந்தச் சுலோகமும் மேலே குறித்துள்ள செய்யுளும் இந்த உதாரண ஜாதகத்திற்குப் பொருத்த முடையனவாக விருக்கின்றன. இந்த ஜாதகர் தன்னுடைய இருபத்தேழா வது வயதில் க்ஷய ரோகத்தினால் இறந்து விட்டார். இவர் இந்தத்தமிழ் செய்யுளில் கண்டுள்ள இருபத்தைந்தாவது வருஷத்திற்கு ஒரு வருஷமும் சில்லரை மாதமும் வித்தியாசமுள்ள காலமாகிய இருபத்தாறுவது முடிந்து இருபத்தேழாவது வயதில் இறந்து விட்டார். இந்த வித்தியாசம் அவ்வள வாகப்பாராட்டக் கூடிய வித்தியாசம் அல்ல வென்று அறியவும். இந்த உதாரணத்தில் கூட இந்தச் சுலோகம், இந்தச் செய்யுள் ஆகிய இவைகளில் சொல்லியுள்ள பிரகாரமே இந்த ஜாதகர் இறந்து போய்விட்டார். ஜோதிட சாஸ்திரத்தின் உண்மையை இந்த ஜாதகங்கூட ருசு படுத்துகின்றதாகும். இந்த ஜாதகர் பேர்குலர் மெனிஞ்சைட்டீஸ் (Tubercular Meningities) என்ற ஒரு கொடுமையான வியாதியால் கடைசியில் இறந்து போன விஷயத்தின் விவரங்களை இங்கு எடுத்துச் சொல்ல வேண்டிய ஒரு அவசியம் இருக்கின்றது. இதைத்தயவு செய்து கவனிக்கவும். இந்த ஜாதகருக்கு முதலில் க்ஷய ரோகம் என்ற நோய் ஆரம்பித்து, இந்த நோய் மொத்தத்தில் ஆறு மாதக் காலம் இருந்தது. இது ஆரம்பமான நாள் முதற்கொண்டு சென்னை யிலுள்ள முக்கியமான ஆஸ்பத்திரிகளில் ஒரு ஆஸ்பத்திரியில் ஒரு சிறந்த திறமை வாய்ந்த வைத்தியரால் சிகிச்சை செய்யப்பட்டு வந்தார். மொத்தத் தில் ஸ்ட்ரப்டோ மையோஸின் ஆப் ஹைட்ரோகுளோரைட் (Streptomyocin of hydrochloride) என்ற திராவக மருந்து குழாய்கள் எழுபது குழாய்கள் (tubes) வாங்கப்பட்டன. அந்தக் காலத்தில் ஒவ்வொரு குழாய் மருந்தும் முப்பது ரூபாய் விகிதம் அதிகமான விலை கொடுத்து 2,100 ரூபாய் கொடுத்து

எழுபது குழாய் மருந்துகள் வாங்கப்பட்டன. இவைகளில் மொத்தத்தில் அறுபத்து நான்கு குழாய்களில் உள்ள மருந்தை நாளடைவில் இந்தவைத்தியர் ஊசியினால் குத்தி உள்ளுக்கு ஏற்றினர் (injected sixty-four tubes of medicine). ஜாதகருக்கு இந்த வைத்தியரால் சுமார் இருபத்தைந்து குழாய்களிலுள்ள மருந்தை ஊசியால் குத்தி உள்ளுக்கு ஏற்றிவந்த வரையிலும் இந்த ஜாதகருக்கும் இவரைப் பெற்றோர்களுக்கும் சந்தோஷம் உண்டாகும்படி ஆச்சரியான வேகத்துடன் இந்த மருந்து நோயைக் குணப்படுத்திக்கொண்டே வந்தது. பிறகு இந்த மருந்தே விஷமாக ஆகி விட்டது. பிறகு இந்த மருந்தையே கொடுத்துக் கொண்டுவரவே ஜாதகருக்கு தலைவலி கொஞ்சங் கொஞ்சமாக உண்டாகி இது நாளடைவில் அதிகப்படவாரம்பித்து விட்டது. வைத்தியருக்குக் கவலை உண்டாகி விட்டது. இந்த வைதியர் கழுத்திற்குக் கீழ்பட்ட விடத்திலுள்ள க்ஷய ரோகத்திற்கு முந்திபோலவே தான் வைத்தியஞ் செய்வதாகவும், தலையில் ஏற்பட்ட வியாதிக்கு இதே ஆஸ்பத்திரியிலுள்ள ஒரு சிறந்த திறமைவாய்ந்த இன்னொரு வைத்தியரை சிகிச்சை செய்யும் படியாகவும் ஏற்பாடு செய்தார். இவ்விதமாக ஜாதகருடைய உடலை இரண்டு கூறாக உயிருடன் இருக்கும் போதே பங்கு போட்டுக் கொண்டு வைத்தியஞ் செய்து கொண்டு வந்தார்கள். இவ்விதமான இரண்டுவித சிகிச்சைகள் கொஞ்சகாலம் நடந்த பிறகு ஜாதகா திடீரென்று பித்தலும் பிணத்தலுஞ் செய்து சுற்றிக் கலாட்டா செய்ய வாரம்பித்து விட்டார். தலையில் மூளையிலுள்ள எட்டாவது நரம்பு என்ற ஒரு நரம்பு (eighth nerve in the brain) க்ஷயரோகம் மெனிஞ்சைட்டீஸ் என்ற ஒரு ரோகமாக விருத்தியடைந்து விட்டதால் கெட்டுப்போய் விட்டதென்றுஅப்போது தான் டாக்டர்களுக்குத் தெரியவந்தது. அந்தக் காலத்தில் அமெரிக்கா தேசத்தில் இந்த மருந்தைச் கண்டனஞ் செய்து ஒரு வாக்குவாதம் (controversy) நடந்து கொண்டிருக்கின்ற தென்றும் இந்த மருந்தை இருபத்தைந்து குழாய்களுக்கு மேல் உள்ளுக்குப்பிரயோகஞ் செய்யக் கூடாது என்றும், இதற்கு மேல் அதிகமாக உள்ளுக்கு ஏற்றினால் மூளையில் மயக்கத்தையும் பாதையையும் உண்டு பண்ணுகின்ற தென்றும், கொஞ்ச நாள் பொறுத்து இந்த மயக்கம் ஸ்மரண மற்றத் தன்மையை உண்டுபண்ணுகின்ற தென்றும், பிறகு இந்த ஸ்மரணையிலிருந்து நோயாளி தெளியாமலேயே கடைசியில் இறந்து போய்விடுகின்ருர் என்றும் ஒரு வைத்திய ஜர்னல் என்ற வார்த்தா பத்திரிகையில் (a medical journal) வாசித்ததாக நோயாளியின் தகப்பனரின் வக்கீல் சிநேகிதர் ஒருவர் தகப்பனருக்குத் தெரிவித்தார். இவ்விதமாக இந்த வக்கீல் இந்த மருந்தில் சுமார் நான்கு ஐந்து குழாய் மருந்துகள் கொடுக்கப்பட்டவுடனே தெரிவித்தார். இந்த நோயாளி கடைசி காலத்தில் பித்தலும் பிணத்தலும் அடங்கி சுமார் பதினைந்து நாட்கள் வரையிலும் ஸ்மரணை இல்லாமலே இருந்து இந்த வக்கீல் சிநேகிதர் எச்சரிக்கை செய்த பிரகாரமே ஸ்மரணையிலிருந்து தெளியாமல் மெனிஞ்-ஜைட்டிஸ் நோயால் இறந்து போய்விட்டார். இவ்விதமாக இரண்டு சிறந்த பெரிய வைத்தியர்கள் இக்காலத்தில் மேல் நாட்டில் இந்த மருந்தைப்பற்றி வாக்குவாதம் நடந்து கொண்டிருந்ததைத் தெரியாதவர்களாக விருந்து இந்த மருந்தை

(Streptomycin hydrochloride) அதிகமாகக் கொடுத்துக் கொண்டே போய்க்கொண்டே இருந்தார்கள். இவ்விதமாக இவர்கள் செய்தது நோயாளியினுடைய துரதிருஷ்டமேயாகும். மேலும் இவருடை பெற்றோர்களுடைய துர்திஷ்டமே கூடவாகும். இவ்விதமாக இவ்விரண்டும் பெரிய பெரிய வைத்தியர்கள் நோயாளியினுடைய மரணத்திற்கு முக்கியமானக் காரணமாக விருந்து விட்டார்கள். தகப்பனருடைய பணக்கொழுப்பு கூட கொஞ்சம் காரணமாக விருந்தது. இவருக்கு வேண்டிய பணம் இல்லாமல் இருந்திருந்தால் இவ்விதமான அதிக விலையுள்ள மருந்தை வைத்தியர் பேச்சைக் கேட்டு வாங்கிக் கொடுத்திருக்க மாட்டார். இவர் இவ்விதமாகப் பணக்கொழுப்பாலும் அவாவினலும் வாங்கிக் கொடுத்ததால் வைத்தியர்கள் இந்த மருந்தை அளவிற்கு மிஞ்சி அதிகமாகக் கொடுத்து நோயாளியைக் கொல்ல நேரிட்டு விட்டது. "வினை தான் ஒழிந்தால் ஒரு தினைப்போதும் நில்லாது இந்த உடலம்" "ஈதெல்லாம் எனையாளும் ஈசன் செயல்" என்று ஒரு தத்துவஞானி (Philosopher) சொல்லி மனிதர்களைத் திருப்தி செய்யப் பார்க்கின்றது நமது இந்து தேசத்தில் பழக்கமாக விருக்கின்றது. மேல் நாட்டில் நடந்து வந்த இந்த வாக்குவாதம் (Controversy) இரண்டு மூன்று வருஷங்களுக்குப் பிறகு சென்னை இராஜதானியில்கூட நடக்கவாரம்பித்து விட்டது. இந்த வாக்குவாதத்தில் சென்னையிலும் மதனபள்ளி ஆரோக்கியாசிரமம் (Sanatorium) என்ற ஆஸ்பத்திரியிலும் உள்ள மேதாவியான வைத்தியர்கள் கலந்து கொண்டார்கள். இந்த வாக்குவாதத்தின் பிறகு பதின்மூன்று வயதிற்கு மேற்பட்டு பத்தொன்பது வயதிற்குட்பட்ட ஒரு சிறியவனுக்கு (a boy in his teens) மதனபள்ளி ஆஸ்பத்திரியில் இதே மருந்தில் சுமார் இருபது குழாய் மருந்து வரையிலும்தான் நாளடைவில் கொடுத்து க்ஷயரோகத்தைச் திருப்திகரமாகச் சொஸ்தஞ் செய்து விட்டது எனக்குத் தெரியும். இந்த உதாரண ஜாதகத்தின் நபருக்கு மாத்திரம் மரணம் ஏற்பட்டதற்குக் காரணம் இந்த மருந்தை அளவு கடந்து அதிகமாக உபயோகப்படுத்தியதே யாகும். "வைத்தியர்கள்தான் தலைவிதிக்கு (fate) எதிராக என்ன செய்யக் கூடும், இவர்களும் மனிதர்கள் தானே, தலைவிதி என்பது இவர்களுடைய கண்களை மறைத்து விடுகின்றது, அறிவில் மிகவும் புத்திசாலிகளாயுள்ளவர்களின் புத்திகூர்மையை மழுங்கும்படி செய்து விடுகின்றது," என்று இந்த இறந்து போன நோயாளியின் பெற்றோர்கள் தங்களுடைய மனதை ஒருவாறு தேருதல் செய்து கொள்ள வேண்டியதாக விருந்து விட்டது. இந்த உண்மையைத்தான் இந்த உதாரண ஜாதகத்திற்குப் பொருத்தமாயுள்ள மேலே குறிக்கப்பட்டுள்ள ஜோதிட செய்யுளும் சுலோகமும் எடுத்துத் தெளிவாகக் காட்டுகின்றது. மனிதன் தன்னுடைய எல்லா சாமர்த்தியங்களினலும் புத்திதனத்தாலும் விதியை வெல்லவாவது அல்லது தடுக்கவாவது பிரயத்தனஞ் செய்ய முடியுமே தவிர அதைப்பூராகவும் தடுப்பது அதிக பெரும்பாலும் அசாத்தியமான காரியமே ஒழிய சுலபமான காரியம் அல்லவேயல்ல வென்று இந்த இறந்துபோன நோயாளியின் திருஷ்டாந்தரம் (Case or instance) ஒருவாறு எடுத்துக் காட்டுகின்றது.

ஜாதகம்

குரு		ராகு	
	இராசி		
	சக்கரம்		சுக்கிரன்
லக்கினம்	சந்திரன் சனி கேது	புதன்	சூரியன் அங்காரகன்

4. மேலே கொடுக்கப்பட்டுள்ள பெண் ஜாதகம் கிறிஸ்து பிறந்த ஆயிரத்தித் தொள்ளாயிரத் திருபத்தேழாவது வருஷத்தில் அக்டோபர் மாதத்தில் இரண்டாந் தேதியன்று (2-10-1927 A.D.) பிறந்து கிறிஸ்து பிறந்த ஆயிரத்தித் தொள்ளாயிரத்து நாற்பத்தெட்டாவது வருஷத்தில் ஜூலை மாதத்தில் (July 1948 A.D.) விதவையாகிவிட்ட ஒரு ஸ்திரீயினுடைய நிரயன ஜாதகம் ஆகும். ஜனன நட்சத்திரம் கேட்டை நான்காம் பாதம் ஆகும். தனுசில் ஜன்ம லக்கினமும், மீனத்தில் குருவும், ரிஷபத்தில் இராகுவும், சிம்மத்தில் சுக்கிரனும், கன்னியில் சூரியனும் அங்காரகனும், துலாத்தில் புதனும், விருச்சிகத்தில் சந்திரனும் சனியும் கேதுவும் ஆகும். கீரனூர் நடராஜர் என்பவரால் எழுதப்பட்டு 1902 A.D. ஆவது வருஷத்தில் அச்சிடப்பட்ட தமிழ் ஜாதகலங்காரம் என்ற புத்தகத்தில் ஸ்திரீ ஜாதகமாகச் சம்மந்தப்பட்ட நூற்றைம்பத்தாறுவது பக்கத்திலுள்ள எண்ணூற்றெண்பதாவது செய்யுள் கீழ் கண்ட செய்யுள் ஆகும்.

> " இடு செவ்வாய் கதிர்கூடி யெங்கே நின்றாலும்
> இவளும் வாலிபந் தன்னி லமங்கலையே யாவள் "
> ....
> கொடுமை யுள்ளோர் பலர் ஏழா மிடத்திருக்கிற் பார்க்கில்
> கொழுநன் வாலிபத் திறப்பன்....................

இந்தச் செய்யுளின் அர்த்தம் பின்வருமாறு ஆகும். செவ்வாய் என்ற அங்காரகனும் கதிர் என்ற சூரியனும் ஒன்றாய்க் கூடிக்கொண்டு எந்த வீட்டிலாவது இருந்தாலும் ஜாதகி வாலிப வயதில் அஃதாவது தன்னுடைய இளம பிராயத்திலேயே விதவைத் தன்மையை அடைந்து விடுவாள். பல பாபக் கிரகங்கள் ஏழாவது பாவத்தில் இருந்தாலும் அல்லது இந்த ஏழாவது பாவத்தைப் பார்த்தாலும் கொழுநன் என்ற ஜாதகியினுடைய புருஷன் தன்னுடைய வாலிப வயது என்ற இளம் பிராயத்திலேயே இறந்து விடுவார். இந்த ஜாதகத்தில் இந்தச் செய்யுளில் கண்ட பிரகாரம் சூரியனும் அங்காரகனும் ஒன்றாய்க்கூடி ஒரு வீட்டில் இருக்கின்றார்கள். இந்த வீடு பத்தாவது

பாவமாகும். போக ஸ்தானமாகிய சுக ஸ்தானமாகிய நான்காவது பாவத்தைப் பத்தாவது பாவத்தில் சூரியனும் அங்காரகனும் இருந்துகொண்டு பார்க்கின்றார்கள். ஆகையால் இந்த ஜாதகி தன்னுடைய இளம் பிராயத்திலேயே உண்மையில் விதவையாகிவிட்டாள். செய்யுளில் சொல்லியிருந்ததும் ஜோதிட சாஸ்திரம் உண்மையானது என்று ருசுவு செய்யப் பலித்துவிட்டது. ஜன்ம லக்கினத்தைக்கொண்டு ஜாதகங்களின் பலா பலன்களைச் சொல்லவேண்டிய வழி பிரகாரமே சந்திரன் வீட்டையும் லக்கினமாக வைத்துக்கொண்டு அஃதாவது சந்திர லக்கினத்தைக்கொண்டும் பலா பலன்களைச் சொல்லவேண்டும் என்றும் பல ஜோதிட சாஸ்திரக் கிரந்தங்களில் சொல்லியிருக்கின்றது என்ற விஷயம் எல்லோருக்கும் தெரிந்த விஷயமே யாகும். இந்த உதாரண ஜாதகத்தில் சந்திரனுக்கு அஃதாவது சந்திர லக்கினத்திற்கு ஏழாவது வீட்டில் இராகு இருக்கின்றார். இந்த ஏழாவது வீட்டைச் சனியும் கேதுவும் பார்க்கின்றார்கள். ஏழாவது வீடு என்பது புருஷனுடைய வீடு ஆகும், ஆகையால், இந்தப் பாடலில் கண்ட பிரகாரம் பல பாபக் கிரகங்கள் ஏழாவது பாவத்தைப் பார்க்கின்றார்கள். ஒரு பாபக் கிரகமும் ஏழாவது பாவத்தில் இருக்கின்றது. ஆகையால், இந்தச் செய்யுளில் சொல்லியுள்ள பிரகாரமே இந்த ஜாதகியின் புருஷன் இளம் பிராயத்திலேயே இறந்து விட்டார். இந்தப் பாடலின் பின் பாகத்தால்கூட ஜோதிடத்தின் உண்மை ருசுவு செய்யப்பட்டது.

ஜாதகம்

அங்காரகன் ராகு		குரு சுக்கிரன்	சூரியன்
	இராசி		சந்திரன் புதன்
	சக்கரம்		
	லக்கினம்		சனி கேது

5. மேலே கொடுக்கப்பட்டுள்ள ஆண் ஜாதகம் கிறிஸ்து பிறந்த ஆயிரத்தெண்ணூற்றித் தொண்ணூற்றி நான்காவது வருஷத்தில் ஜூலை மாதத்தில் ஐந்தாந் தேதி (5-7-1894 A.D.) யன்று பிறந்தவருடைய நிரயன ஜாதகம் ஆகும். விருச்சிகத்தில் ஜன்ம லக்கினமும், மீனத்தில் அங்காரகனும் இராகுவும், ரிஷபத்திற் குருவும் சுக்கிரனும், மிதுனத்தில் சூரியனும், கடகத்தில் சந்திரனும் புதனும், கன்னியில் சனியும் கேதுவும் ஆகும். ஜனன நட்சத்திரம் ஆயில்யம் இரண்டாம் பாதம் ஆகும். ஒரு விருச்சிக ஜன்ம லக்கின ஜாதகத்தில் நான்காவது பாவத்திற்கு அதிபதியாகிய சனியை அங்காரகன் பார்த்தாலும் அல்லது லக்கினாதிபதியாகிய அங்காரகனைச் சனி

பார்த்தாலும் ஜாதகருடைய தாயார் நீண்ட ஆயுளை உடையவள் என்றும், ஜாதகருடைய தகப்பனார் முதலில் இறந்து விடுவார் என்றும், பிறகு தாயார் இறந்து விடுவாளென்றும், ஜாதகர் வீடு நிலங்கள் முதலியவைகளைச் சுயார் ஜிதமாகவே சம்பாதிப்பார் என்றும், இவர் மார்நோய் அல்லது உஷ்ண வாய்வு தேகத்தையுடையவர் என்றும், வாகனங்களை உடையவர் என்றும் ஜாதகருடைய வித்தைக்குத் தடங்கலுண்டாகும் என்றும், சமஸ்கிருதம் பிரியமாய்ப் பேசுவார் என்றும், ஜோதிட சாஸ்திரம் அறிந்தவரென்றும், நீச்ச அரசனிடம் உத்தியோகஞ்செய்பவர் என்றும் சுக்கிர நாடியின் சத்து அல்லது திரட்டு (Extracts from Sukra Naadi) என்று இப் பலா பலன்கள் (C.G. ராஜன் B.A , அவர்களால் எழுதப்பட்டு 1939 A. D.-ஆவது வருஷத்தில் முதலாவது பதிப்பாகப் பதிப்பிக்கப்பட்ட இராஜ மனோரஞ்சிதம் ஒராவது மலர் என்ற புத்தகத்தில் 301, 399, 321-ஆவது பக்கங்களில் முறையே 13, 44, 115-ஆவது அயிட்டங்களாகவும், 1954 A.D-ஆவது வருஷத்தில் இரண்டாவது பதிப்பாகப் பதிப்பிக்கப்பட்ட இதே புத்தகத்தில் 199, 204, 205, 212-ஆவது பக்கங்களில் முறையே 13, 44, 115-ஆவது அயிட்டங்களாகவும்) கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த உதாரண ஜாதகத்தில் ஜன்ம லக்கினாதி பதியாகிய அங்காரகனும் நான்காவது பாவாதிபதியாகிய சனியும் ஒருவரை யொருவர் பார்த்துக்கொள்ளுகின்றார்கள். மேலே சொல்லியுள்ள பலா பலன்களில் ஒவ்வொரு விஷயமும் ஆச்சரியபடத்தக்கப்படியாக இந்த ஜாதகருக்கு நடந்துவிட்டது, நடக்கின்றது. இந்த விஷயங்கள் ஆகஸ்மிக மான சம்பவங்கள் (Random shots) என்றும் அதிருஷ்டமான தாக்குகள் (Lucky hits) என்றும் சொல்லத் தகுந்தவைகள் அல்ல. ஜோதிட சாஸ்திரத்தின் விரோதிகள் பலித்துவிட்ட பலா பலன்களை இவ்விதமான ஆகஸ்மிகமான சம்பவங்கள் (Random shots) என்றும் அதிருஷ்டமான (Lucky hits) என்றும் வெகு சுலபமாகச் சொல்லித் தள்ளிவிட்டு ஜோதிடத்தை தூஷணமும் பரிகாசமுஞ் செய்வதில் இறங்கிவிடுகின்றார்கள் (Indulge in Railleries against astrology.) இவ்விதஞ் செய்வது தவறுதலான செய்கையே என்று இந்த உதாரண ஜாதகம் எடுத்துக்காட்டுகின்றது.

ஜாதகம்

		குரு	லக்கினம் ராகு
சூரியன் சுக்கிரன்	இராசி சக்கரம்		
புதன்			
சனி கேது	சந்திரன்		அங்காரகன்

6. மேலே கொடுக்கப்பட்டுள்ள ஆண் ஜாதகம் கிறிஸ்து பிறந்த ஆயிரத்தெண்ணூற்றெழுபத்தோராவது (1871 A.D.) வருஷத்தில் பிறந்து இப்போது இறந்து விட்டிருக்கின்ற ஒருவருடைய நிரயன ஜாதகமாகும். மிதுனத்தில் ஜன்ம லக்கினமும் இராகுவும், கன்னியில் அங்காரகனும், விருச்சிகத்தில் சந்திரனும், தனுசில் சனியும் கேதுவும், மகரத்தில் புதனும், கும்பத்தில் சூரியனும் சுக்கிரனும், ரிஷபத்தில் குருவும் ஆகும். ஜன்ம நட்சத்திரம் கேட்டை நான்காம் பாதம் ஆகும். இந்த ஜாதகர் சிறிய கைக் குழந்தையாக விருந்தபோதே இவருக்குச் சுகர் நாடி (என்ற சுகர்வாக்கியம்) என்ற தமிழ் ஜோதிட நாடி சாஸ்திரத்திலிருந்து பலா பலன்கள் எழுதி வாங்கப்பட்டன. கீழே குறிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு விஷயமும் இந்த நாடியில் முன்னடியாக சொல்லப்பட்டிருந்த பிரகாரம் மிகவும் ஆச்சரியப் படத் தக்கபடி பலித்து விட்டன.

(1) இந்த ஜாதகர் கலியாணமாகாத ஒரு ஸ்திரீக்குப் பிறந்த வைப்பாட்டி பிள்ளையாவார் (A bastard,). இவருடைய தகப்பனார் இந்த ஜாதகர் பிறந்தபோது கலியாணமாகாதவராக விருந்து இந்த ஜாதகர் பிறந்த பிறகு விவாகஞ் செய்து கொண்டவராவர்.

(2) இந்த ஜாதகருடைய தகப்பனாரின் விவாகமான மனைவிக்குப் பிறந்த பிள்ளைகள் தங்களுடைய தகப்பனாருடைய பிதுரார்ஜ்ஜித சொத்தைப் பகிர்ந்துக்கொண்டு பாகப் பிரிவினையைச் செய்த காலத்தில் இந்த ஜாதகர் இவர்களுக்கு மிகவும் உதவியாக இருப்பார். ஆனால், இவருக்குத் தன்னுடைய தகப்பனாருடைய சொத்தில் ஒன்றும் இந்தப் பங்கு பாகத்தினால் இடைக்காது.

(3) இந்த ஜாதகர் ஜோதிட சாஸ்திரம் தெரிந்தவராகவிருப்பார்.

(4) இந்த ஜாதகருக்கு விவாகமான மனைவி ஒன்றேயாகும்; ஆனால் இவர் சந்திர தசை காலத்தில் சிறிது காலம் மாத்திரம் ஒரு வைப்பாட்டியை வைத்துக்கொண்டிருப்பார்.

(5) குரு பன்னிரண்டாவது பாவத்தில் இருப்பதால் இந்த ஜாதகர் ஒரே ஒரு ஆண் குழந்தையை யுடையவராவர். இந்த ஆண் குழந்தையும் குழந்தைப் பருவத்திலேயே இறந்துவிடும். இந்த ஜாதகருடைய மனைவிக்கு ஏழு பெண் குழந்தைகளும், ஒரு ஆண் குழந்தையும் பிறக்கும், இரண்டு கர்ப்பப் பிரஷ்டங்களும் (Two abortions) நேரிடும். ஆகையால் இந்த மனைவிக்கு மொத்தத்தில் பத்து கர்ப்பங்கள் நேரிடும்.

(6) (a) ஜாதகருக்கு இருபந்தைந்தாவது வயது நடக்கும்போது சுக்கிர தசையின் பிற் பாகத்தில் தன்னுடைய விவாகமான மனைவிக்கு நீண்ட ஆயுளையுடைய ஒரு பெண் குழந்தை பிறக்கும்.

(b) உடனே கொஞ்ச காலத்திற்குள் இன்னொரு பெண் குழந்தை பிறக்கும். இந்தக் குழந்தை அற்பாயுளை உடையதாகும். இது தனக்கு விவாகமான பிறகு ஜாதகருடைய சந்திர தசையில் இறந்துபோய் விடும்.

(c) இந்த ஜாதகருக்கு முப்பதாவது வயதில் ஒரு பெண் குழந்தை பிறக்கும். இது நீண்ட ஆயுளையும் பாக்கியத்தையும் உடையதாக விருக்கும்.

(d) இந்த ஜாதகருக்கு முப்பத்திரண்டாவது வயதில் இன்னொரு பெண் குழந்தை பிறக்கும். இந்தக் குழந்தை கலியாணம் ஆகாமலே ஜாதகருடைய நாற்பத்தைந்தாவது வயதில் இறந்துபோய்விடும்.

(e) ஜாதகருக்குத் தன்னுடைய முப்பத்தைந்தாவது வயதில் இன்னொரு பெண் குழந்தை பிறக்கும். இந்தக் குழந்தை நீண்ட ஆயுளை உடையதாகும்.

(f) அடுத்த வருஷத்தில் ஜாதகருடைய மனைவிக்குக் கர்ப்பப் பிரஷ்டம் (Abortion) நேரிடும்.

(g) ஜாதகருக்குத் தன்னுடைய முப்பத்தெட்டாவது வயதில் ஏழாவது கர்ப்பத்தில் உண்டான ஒரு பெண் குழந்தை ஏழாவது குழந்தையாகப் பிறக்கும். இந்தக் குழந்தை சீக்கிரத்தில் இறந்துவிடும்.

(h) அடுத்த வருஷத்தில் அஃதாவது ஜாதகருக்கு முப்பத்தொன்பதாவது வயதில் ஒரு ஆண் குழந்தை பிறந்து சீக்கிரத்தில் (அஃதாவது ஜாதகருக்கு நாற்பதாவது வயதில்) இறந்துவிடும்-

(i) ஜாதகருக்கு நாற்பத்திரண்டாவது வயதில் ஒரு பெண் குழந்தை பிறக்கும், இது நீண்ட ஆயுளை உடையதாகவிருக்கும்.

[j] ஜாதகருடைய மனைவிக்குப் பத்தாவது கர்ப்பம் நேரிட்டு இது பிரஷ்டமாகிப் போய்விடும்.

(k) ஜாதகருக்குத் தன்னுடைய ஐந்தாவது புத்திரியினுடைய புருஷனால் அதிக நன்மைகளும் உதவிகளும் உண்டாகும். இந்த ஜாதகருக்கு ஆண் சந்ததி இல்லாத காரணத்தினால் தன்னுடைய சொத்துக்களை இந்த மருமகனுக்கு இனாமாகக் கொடுத்துவிடுவார்.

(l) ஜாதகர் தன்னுடைய நாற்பத்திரண்டாவது வயதில் தெய்வீக ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்து புண்ணிய தீர்த்தங்களிலும் நதிகளிலும் ஸ்நானஞ் செய்வார்.

(m) ஜாதகர் தன்னுடைய நாற்பத்தேழாவது வயதிலிருந்து மிகவும் தெய்வ பக்தியுள்ளவராக மாறிவிடுவார்.

இந்த ஜாதகத்தில் முந்தியாகவே சொல்லப்பட்ட ஒவ்வொரு விஷயமும் அது சம்பவிக்கின்ற காலமும் மிகவும் ஆச்சரியகரமாகவும் உண்மையாகவும் நடந்தேறிவிட்டன. இவ் விஷயங்கள் ஆகஸ்மிகமான சம்பவங்கள் (Randon shots) என்றும், அதிருஷ்டமான தாக்குகள் (Lucky hits) என்றும் அல்லது சாமான்யமான புத்தியையுடைய ஒரு சுறுசுறுப்பான மனிதனால் உத்தேசிக்கக் கூடியவைகள் என்றும் எவ்விதமான மனக் கற்பனை அல்லது கற்பனு சக்தியாலும் (by any stretch of imagination) நினைக்கக்கூடியவைகள் அல்ல. இதுவரையிலும் இங்கு கொடுக்கப்பட்ட உதாரணங்கள் ஜோதிட சாஸ்திரம் ஜனங்களுக்கு நம்பக்கூடிய ஒரு வழிகாட்டி (a reliable guide to humanity) என்று ஜோதிட சாஸ்திரத்திற்கு அநுகூலமாக ஏராளமான வரையிலும் எடுத்துக்காட்டுகின்றனவாகும். இன்னம் அநேகமான உதாரணங்களை நாம் எடுத்துக் காட்டக் கூடும். ஆனால், இவ்விதமாகச் செய்தால் விஷயங்களும் பக்கங்களும் அதிகப்பட்டுவிடும், என்ற அச்சத்துடன் இத்துடன் இதை நிறுத்தியிருக்கின்றேன்.

எல்லா விஞ்ஞான சாஸ்திரங்களையும் (Sciences), எல்லா விஷய ஞான வற்பாடுகளையும் (Systems of knowledge) விட ஜோதிடசாஸ்திரம் மிகவும் கஷ்டமானது என்று இப்போது ருஜுபடுத்தப்படும். நம்முடைய பழைய காலத்து மஹரிஷிகளும், ஞானதிருஷ்டியையுடைய மேதாவிகளும் நான்கு இலட்சத்தி ஐம்பது ஆயிரம் சுலோகங்களை ஜோதிட சாஸ்திரத்தைப்பற்றி உண்டு பண்ணியிருக்கின்றார்கள் என்ற விஷயம் அடிக்கடி சொல்லப்பட்டு வருகிறது. இவர்களும் எண்ணிக்கையில் பதினெட்டு பெயர்களுக்குக் குறையாமல் இருந்து வருகின்றார்கள். இவர்கள் 1 சூரியா, 2 பிரமன், 3 நாரதர், 4 வஸிஷ்டர், 5 வியாஸர், 6 அத்திரி, 7 பராசரர், 8 காஸ்யபர், 9 கர்கர், 10 மரீஷி, 11 மனு, 12 அங்கீரஸர், 13 லோமஸர், 14 பௌலிஷர், 15 ஸ்யவனர், 16 யவனர், 17 இரண்டாவது மனு, 18 சௌனகர், ஆகபதினெண்மர் ஆவர். இந்த பதினெட்டு பூர்வீக ஜோதிட கிரந்தகர்த்தர்களின் முழு கிரந்தங்களும் குறைவில்லாமல் நாளது வரைக்கும் கிடைக்கப்படவில்லை. இங்கும் அங்கும் இவர்களுடைய கிரந்தங்களின் சில பாகங்கள்தான் கிடைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஜோதிடருடைய குடும்பத்திலும் புழங்கி வருகின்ற பெயரையுடைய வராஹமிஹிரர் என்ற புகழ்பெற்ற ஜோதிட கிரந்த கர்த்தரின் காலத்திற்கு முந்தியே இவர்களால் செய்யப்பட்ட கிரந்தங்களின் பெரும்பாண்மையான பாகங்கள் இனிமேல் மீட்கமுடியாத கிடைக்கமுடியாத தன்மையில் இழந்துபோய் விடப்பட்டன அல்லது அழிந்துபோய்விட்டன. இந்த மேதாவிகளின் சிறந்த கூட்டமாகிய பதினெட்டு ரிஷிகளுக்குப் பிறகு வந்த புகழ்பெற்ற ஜோதிட வித்வான்கள் (1) தேவஸ்வாமி, 2 சித்தசேனர், 3 விஷ்ணுகுப்தர், 4 மயன், 5 மணித்தர், 6 சத்தியாச்சாரியார் முதலிய இன்னம் அநேகருடைய கூட்டம் ஆகும். இவர்கள் எல்லோரும் மேற்கண்ட பதினெட்டு ரிஷிகள் எழுதிய கிரந்தங்களை அனுசரித்துச் சிறிய ஜோதிட புத்தகங்களை எழுதியவர்களும் வராஹமிஹிராச்சாரியாருக்கு முந்திய காலத்தில் இருந்த மிகவும் படித்த ஜோதிட சாஸ்திரிகளாவார்கள். இவர்கள் எழுதிய சிறிய புத்தகங்களில் கூட அநேகம் அழிந்து போய்விட்டன. இந்தக் கிரந்த கர்த்தர்களுக்குப் பிறகு பிறந்தவராகிய வராஹமிஹிராச்சாரியார் என்பவர் தனக்கு முந்தின ஜோதிட சாஸ்திரிகளால் எழுதப்பட்ட கிரந்தங்களின் சிலபாகங்களை ஒன்றாகச் சேகரித்து ஒழுங்குபடுத்தி ஒரு மிகவும் மகத்தானதும் ஞாபகார்த்தமானதுமான கிரந்தமாகிய (Monumental work) பிருஹத் ஜாதகம் என்ற ஜோதிட கிரந்தத்தை எழுதினார். இவர் ஜோதிட சாஸ்திரத்தின் இதர பிரிவுகள் அல்லதுவகுப்புகளையும்பற்றி இதர சில புத்தகங்களையும் எழுதினார். வானசாஸ்திரத்தைப்பற்றியும் எழுதியிருக்கின்றார். இந்த எல்லாக் கிரந்தங்களுக்கும் தேவையான விஷயங்களை தனக்கு முன்னே அநேக நூற்றாண்டு வருஷங்களில் இருந்த ஜோதிடர்கள், வானசாஸ்திரிகள் ஆகிய இவர்களுடைய கிரந்தங்களில் இருந்து சேகரித்தார். இவர் கிறிஸ்து பிறந்த ஆறுவது நூற்றாண்டில் ஜீவித்திருந்தவர் என்று பொதுவாக எல்லோரும் அபிப்பிராயப் படுகின்றார்கள். ஆனால், இப்போது இருக்கின்ற சில காலவரை நிர்ணய ஆராய்ச்சியாளர்கள் (Research scholars of chronology) இவர் கிறிஸ்து பிறப்பதற்கு முன்னே ஓராவது நூற்றாண்டில் ஜீவித்திருந்தார் என்று அபிப்பிராயப்பட்டுக் கொண்டு இவருக்கு

இன்னம் அதிகமானப் பூர்வீகத் தன்மையைக் (greater antiquity) கொடுக்கப் பார்க்கின்றார்கள். வராஹமிஹிரருக்குப் பிற்காலத்தில் அநேக ஜோதிடர்கள் தோன்றினார்கள். இவர்கள் தங்களுக்கு முன்னே இருந்த அநேக பூர்வீக ஜோதிடர்களின் போதனை விஷயங்களையும், கொள்கைகளையும் தங்களுடைய புத்தகங்களில் உபயோகித்தார்கள். மேலும், இவர்கள் தங்களுடைய நுட்பமான சோதனை, ஆராய்ச்சி (Research) என்பதனாலும், சொந்தமான அநுபவத்தினாலும் (own experience) ஏற்பட்ட சில விஷயங்களையும், நம்முடைய பூர்வீகமான மூலக்கிரந்தகர்த்தர்கள் நமக்குப் பூர்வீகமான ஆஸ்தியாக விட்டுவிட்டுப்போன சோதிட சாஸ்திர ஞான நிதியுடன் (Fund of astrological knowledge) சேர்த்துக்கொண்டார்கள். காகிதம் செய்தல், அச்சிடுதல் ஆகிய இவைகளைக் கண்டுபிடித்தற்கு முந்தியுள்ள காலங்களில் சுலோகங்களை ஒரு ஜோதிடர் இன்னொரு ஜோதிடரிடமிருந்து வாய்ச்சாவாகக் கற்றுக்கொள்ளுகின்ற பரம்பரை வழக்கத்தினால் ஏற்படக்கூடிய சில குற்றங்களாலும், செல்லு அடித்துவிட்டதாலும் அல்லது காலாகால வரையாலும் கெட்டுப்போய்விட்ட பனை ஓலைகளிலிருந்து சுலோகங்களை எழுதி நகல் எடுத்ததாலும் பூர்வீக ஜோதிட கிரந்தகர்த்தர்கள் அல்லது இவர்களுக்குப் பிந்தி வந்த கிரந்தகர்த்தர்கள் ஆகிய இவர்களுடைய ஜோதிட சாஸ்திர கொள்கைகளும், விதிகளும், போதனைகளும் சில மாறுதல்களையும் வித்தியாசங்களையும் அடையப்பட்டன. ஆகையால் தற்காலத்திய ஜோதிட சாஸ்திர புத்தகங்களுக்குள்ளே ஒன்றுக்கொன்று சில விஷயங்களில் வித்தியாசமாகவும், எதிரிடையாகவும் இருப்பது ஆச்சரியப் படத்தக்கதல்ல. இது சாதாரணமான விஷயமாகும். இப்படிப்பட்ட விஷயங்கள் சிற்சிலவாகவேதான் இருக்கின்றன, அதிகமானவையாக விருக்கவில்லை. பூர்வீகமான உண்மையான, நம்பத்தக்க கிரந்தங்களின் அசலுடன் பிழையான விஷயங்களை நன்றாகவும் ஜாக்கிரதையுடனும் ஒற்றுப்பார்ப்போமானால் இப் பிழைகளில் அநேகமானவற்றைத் திருத்தி விடமுடியும். மிகவும் ஜன சம்மதமுள்ள, வழக்கத்திலுள்ள (the most popular) புத்தகங்களும் மிகவும் நிலையான விலையுள்ள, மதிப்புள்ள (the most standard) புத்தகங்களும் பின்வருவனவாகும். இவைகள், 1 ஜாதகசத்தியாச்சாரீயம் என்ற சத்தியாச்சாரியாருடைய ஜாதக பஞ்ச சித்தாந்தம், 2 வராஹ மிஹிரருடைய பிருஹத் ஜாதகம், 3 கல்யாணவர்மா என்பவருடைய சாராவளி, 4 ஹோராசாரம், 5 ஜாதகாபரணம், 6 ஹோரார ரத்தினம், 7 சர்வார்த்த சிந்தாமணி, 8 ஜாதகபாரிஜாதம், 9 பல தீபிகை, 10 ஸ்ரீபதி பத்ததி, 11 பராசர ஹோரை, 12 ஜாதகசார தீபம், 13 ஜாதகதத்வம், 14 சுகப் பிரமரிஷியின் ஜாதகாலங்காரம், 15 ஜயமுனி சூத்திரம், 16 ஜாதக சந்திரிகை முதலியன ஆகும். இந்தக் கிரந்தங்கள் எல்லாம் ஒரு ஜாதகத்தின் துவாதச பாவ பலாபலன்கள் (Judicial astrology) விஷயமாகச் சமஸ்கிருத பாஷையில் உள்ள கிரந்தங்களாகும். இந்த சமஸ்கிருத கிரந்தங்களையும் இன்னம் அநேகமான இதர சமஸ்கிருத கிரந்தங்களையும் அனுசரித்து எழுதப்பட்ட அநேக தமிழ் ஜோதிட சாஸ்திர கிரந்தங்களும் இருக்கின்றன. இவைகளில் மிகவும் உபயோககரமாயும் ஜன சம்மதமுள்ளவைகளாயும் வழக்கத்திலுள்ளவைகளாயும் உள்ளவைகள், 1 கீரனூர் நடராஜர் தமிழில் எழுதப்பட்ட ஜாதகாலங்காரம், 2 ஜாதக சிந்தாமணி, 3 அகஸ்தியரால் செய்யப்பட்ட மணிகண்ட கேரளம், 4 துய்ய கேரளம், 5 வீமேஸ்வர உள்ளமுடையான், 6 குமாரஸ்வாமீயம், 7 புலிப்பாணி ஜாதகம், 8 ஜோதிடக் களஞ்சியம், 9 சுகர்வாக்கியம், 10 சங்கராச்சாரீயம், 11 மேலே முன்னமே சொல்லப்பட்ட சமஸ்கிருத கிரந்தங்களின் அசல் தமிழ்மொழி பெயர்ப்புகளாகிய தாண்டவமாலை, பல தீபிகை, சாராவளி, பிருஹத் ஜாதகம், ஹோரா சாஸ்திரம், ஜாதக பாரிஜாதம், ஜயமுனி சூத்திரம் ஆகிய முதலியவை ஆகும். இந்தச் சப்தரிஷி நாடியின் வியாக்கியானத்தில் நான் உபயோகப்படுத்தியிருக்கின்ற ஜோதிட புத்தகங்களின் ஒரு லிஸ்ட்டு என்ற ஜாபிதாவை (a list of books)த் தனியாக கொடுத்திருக்கின்றேன். இங்கு மேலேசொல்லப்பட்டுள்ள புத்தகங்களில் அநேக புத்தகங்கள் இந்த ஜாபிதாவில் காணப்பட்டிருக்கின்றன.

ஜோதிட சாஸ்திர விஷயமாக ஏற்படுத்தப்பட்ட சுலோகங்கள் முந்தியே சொல்லப்பட்ட பிரகாரம் இலட்சக்கணக்கானவைகளாக இருப்பதால் ஒருவர் எவ்வளவு பெரியவராக இருந்தபோதிலும் அல்லது, வாசித்தவராக விருந்தபோதிலும் இந்தச் சுலோகங்களை எல்லாம் மனப்பாடமாக வரப் படுத்திக்கொள்ளுவதாவது அல்லது ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுவதாவது சாத்தியமான காரியமாகாது. ஒவ்வொரு ஆயிரம் சுலோகங்களுக்கு ஒரு புத்தகமாகப் புத்தகங்களை உண்டுபண்ணினாலுங்கூட, மொத்த புத்தகங்களும் சுமார் நானூற்றைம்பது புத்தகங்களாகும். இந்தப் புத்தகங்களை எல்லாம் ஒரு ஜோதிடர் வாசித்திருப்பார் என்று நாம் நினைப்பது உசிதமானதல்ல. ஒரு மனிதருக்கு ஒரு ஜாதகம் இருக்கவேண்டும் என்று நாம் எண்ணுவோமானால் உலகத்தில் ஒரு குறித்த காலத்தில் எத்தனை கோடி ஜனங்கள் இருக்கின்றார்களோ அத்தனை கோடி ஜாதகங்கள் இருக்கவேணும். ஒவ்வொரு ஜாதகமும் ஒப்பற்ற தனிமையான ஜாதகமே (unique horoscope) ஆகும். ஆயிரத்துத் தொளாயிரத்தைம்பத்து நான்காவது (1954 A.D.) வருஷத்தில் இந்தியாவின் ஜனத்தொகை சுமார் முன்னூற்றெழுபத்தேழு (377 millions) மில்லியன்ஸ்கள் என்ற தமிழ் முப்பத்தேழு கோடிகள் ஆகும். ஒரு வருஷம் முந்நூற்றறுபத்தைந்தே கால் (365¼ days in a year) நாட்களையுடையதென்றும், மனிதனுடைய பூரணமான வயது நூறு வருஷங்கள் அல்லது நூற்றிருபது வருஷங்கள் என்றும் பாவிப்போமானால் ஒருநாளில் இந்தியாவில் மாத்திரம் ஒரு லக்கினத்தில் எண்ணூற்றறுபது (860 persons) அல்லது எழுநூற்றி பதினேழு (717 persons) பேர்கள் முறையே பிறந்திருக்கவேண்டும். இந்து தேசத்து நவக்கிரகங்கள், லக்கினம் ஆகிய இவைகளில் இராசி நிலைமையை மாத்திரம் கவனிப்போமானால் 860 அல்லது 717 பேர்கள் ஒரேவிதமான ஜாதகத்தையும், ஆனால், வெவ்வேறான பலாபலன்களையும் உடையவர்களாகவிருக்கக்கூடும். ஒவ்வொரு லக்கினத்திலும் உள்ள க்ஷணங்களை அநுசரித்து இவ்விதமான வித்தியாசங்களையுடைய ஜாதகங்கள் இருக்கக்கூடும். இவ்விதமாக அநேக ஜாதகங்கள் இருக்கும் போதும், எந்த ஜாதகம் எந்த நபருடையது என்று உனக்குத் தெரியாமல் இருக்கும்போதும், ஒரு ஜாதகருக்கு எவ்விதமாகப் பலாபலன்களைத்

தெரிந்தெடுத்துச் சொல்லமுடியும் என்று ஜோதிட சாஸ்திரத்தின் விரோதிகள் ஒரு வாக்குவாதத்தை அடிக்கடி கிளப்பிவிடுகின்றார்கள் (trot out an argument). ஜோதிட சாஸ்திரம் ஒரு ஜாதகத்தின் லக்கினத்தைப் பலவிதமான பாகங்களாகப் பங்கிடுகின்றது என்று நமக்குத்தெரியும். இவ்விதமான ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு ஜாதகத்தையும் உடையவருக்குப் பொருத்தமுள்ளதாகும். சத்தியாச்சாரியாரால் செய்யப்பட்ட துருவ நாடி அல்லது சத்திய சம்ஹிதை நாடி என்பது ஒவ்வொரு லக்கினத்தையும் முன்னூற்றறுபது சூட்சுமமான பாகங்களாகப் பங்கிடுகின்றது. ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு விநாடி என்ற கால அளவிற்கு அல்லது இருபத்து நான்கு செக்கண்டுகளுக்கு உரியதாகும். சுக்கிரநாடி என்பது இன்னம் அதிக துல்லிபமான பாகங்களாக ஒரு லக்கினத்தை பங்கிடுகின்றது. அஃதாவது ஒரு லக்கினத்தை அறுநூறு சூட்சுமமான பாகங்களாகப் பங்கிட்டு இவ்விதமாக வருகின்ற ஒவ்வொரு நாடி அம்சத்திற்கும் (1) விப்ர காலம் (பிராமண காலம்), (2) க்ஷத்திரிய காலம், (3) வைசிய காலம், (4) சூத்திர காலம் என்று நான்குவிதமான காலப்பெயர்களை நூற்றைம்பது நாடி அம்சங்களுக்கும் கொடுக்கின்றது. இவ்விதமாக நமது நாடி ஜோதிடர்கள் ஜோதிட சாஸ்திரத்தின் நாஸ்திகருடைய (Sceptics of Astrology) வாதங்களையும் ஆட்சேபனைகளையும் எதிர்பார்த்திருக்கின்றார்கள் என்று தெரியவருகின்றது. இவ்விதமான மிகவும் சூட்சுமமான ஜாதகங்களுக்குக்கூட பலாபலன்களைச் சொல்லுவதற்காக அதிக விஸ்தாரணமான, விரிவான விதிகளையுங் கொடுத்திருக்கின்றார்கள் நமது ஜோதிட சாஸ்திரிகள். கிரகங்களினுடைய பலாபலன்கள், இராசிகளில் இவைகளின் ஒன்றுக்கொன்றுள்ள நிலைகளையும், லக்கினத்தையும், இராசி மண்டலத்திலுள்ள நிலையான நட்சத்திரங்களின் நிலையையும், கிரகங்களின் வலிவுகளையும், பார்வைகளையும் ஆகிய இவைகள் எல்லாவற்றையும் அநுசரித்து நடக்கின்றன. ஒரு கிரகத்தினுடைய பலம் (strength of a planet) இருபத்து நான்குவித அம்சங்களை அனுசரித்திருக்கின்றது. இந்த 24 வித அம்சங்களும் ஸ்ரீபதிபத்ததி என்ற சமஸ்கிருத கிரந்தத்திலும் இதை அநுசரித்து என்னால் தமிழில் எழுதி அச்சிடப்பட்ட ' ஜாதக கணிதம் என்னும் ஜோதிட கிரகசட்பலம் ஆயுள் கணிதம் பாகம் ஒன்று " என்ற புத்தகத்திலும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்விதமான 24 வித அம்சங்களையும் கணிக்க ஒரு நாணயமான, உண்மையான ஜோதிடருக்கு அநேகநாட்கள் செல்லும். ஆகையால் ஒரு ஜோதிடர் பலாபலன்களைச் சொல்லத் துணிவதற்கு முந்தி அநேகவிதமான மேற்சொல்லிய அம்சங்களை எல்லாம் கணித்தும் கவனித்தும் யோசனை செய்யவேண்டியது அவசியமாகவிருக்கின்றது. ஆகையால், இனிமேல் வரப்போகின்ற பலாபலன்களை ஜோதிடத்தைக்கொண்டு சொல்லுவது ஒரு கேலி, பரிகாசம் பண்ணுதல் (joke) அல்லது ஒரு சுலபமான கருமம், கிரியை அல்லது செய்கை (an easy performance) அல்ல. இது மிகவும் கஷ்டமான காரியம். ஒருவருடைய வாழ்நாளில் இனிமேல் நடக்கப்போகின்ற ஒரு ஸ்தூலமான விஷயத்தை (broad detail of a life) க்கூட முன்னடியாகவே ஜோதிட சாஸ்திரத்தில் சொல்லியுள்ள வழிகள் பிரகாரம் சொல்லுவதற்கு அதற்குத் தேவையான கணிதங்களைச் செய்யக்

குறைந்த பட்சம் சுமார் இருபது இருபத்தைந்து நாட்கள் வரையினும் ஒரு ஜோதிடருக்குப் பிடிக்கும். இவ்விதமாக ஸ்தூலமான விஷயத்தைக்கூட சொல்லுவதற்கு ஒரு ஜோதிடர் தன்னுடைய ஞாபக சக்தியையே மாத்திரம் பூராகவும் நம்புவதற்ில்லை (Cannot rely wholly on his memory only) இவர் அநேக ஜோதிட சாஸ்திர புத்தகங்களைப் படித்துப்பார்த்து தான் ஆராய்ச்சி செய்கின்ற ஜாதகத்தில் சில மூன்று, நான்கு முதலிய கிரகங்கள் இருக்கின்ற நிலையைப்போலவே புத்தகங்களில் கிரக நிலைகள் அகப்படுகின்றனவா என்று கஷ்டப்பட்டுத் தேடிப்பார்க்கவேண்டியதாகவிருக்கின்றது. ஏனென்றால் ஒவ்வொரு விதமான கிரகநிலையும் ஒன்றுக்கொன்று வித்தியாசமுள்ள பிரத்தியேகமான பலாபலன்களையே தருகின்றன. ஆகையால் ஒரு ஜாதகத்தைக் கொடுத்தவுடனே, இடம், காலம் ஆகிய இவைகளைக் கவனியாமல் தனக்குத் தெரிந்த சில பாடல்களைச் சொல்லிக்கொண்டு உடனே பலாபலன்களைச் சொல்ல ஆரம்பித்துவிடுகின்ற ஜோதிடரைக் கேட்பதும் நம்புவதும் புத்தியுள்ள காரியமாகாது. இந்த ஜோதிடர் பாடுகின்ற பாடல் இந்த ஜாதகத்திற்குப் பொருந்தாமலும் அல்லது கால்வாசி, அரைவாசி, அல்லது முக்கால்வாசிதான் பொருத்தமுடையதாகவுங்கூட இருக்கக்கூடும். இந்தப் பாடலில் சொல்லிய விஷயங்கள் அல்லது அம்சங்கள் எல்லாம் பூராகவும் ஆராய்ச்சி செய்கின்ற ஜாதகத்தில் இருந்தால் மாத்திரந்தான் இந்தப்பாடலிலுள்ள பலாபலன்கள் முழுவதும் இந்த ஜாதகத்திற்குப் பலிக்கும், இல்லாவிட்டால் எவ்வளவு வித்தியாசமுண்டோ அவ்வளவுக்கவ்வளவு பலன்களிலும் தவறுதல் அல்லது வித்தியாசம் ஏற்படக்கூடும்.

ஒரு ஜாதகரின் வாழ்நாளில் சம்பவிக்கக்கூடிய விஷயங்களைப்பற்றிச் சொல்லுகின்ற ஜோதிடத்தின் பாகத்திற்குப் பலபாகம் என்று சொல்லப்படும். இதற்கே நியாயஸ்தலத்துக்கடுத்த அல்லது நீதிப் பிரமாணமான ஜோதிடம் (Judicial Astrology) என்றும் சொல்லலாம், ஏனென்றால் ஒரு ஜாதகருக்கு நடக்கப்போகின்ற ஏதாவது ஒரு விஷயத்தைப்பற்றி விசாரணை செய்யும்போது ஜோதிடர் ஒரு நியாயாதிபதியைப்போலவே (a judge) இந்த ஜாதகத்தைப் பற்றி விசாரணையும் பரிசோதனையுஞ் செய்கின்றார். இங்கு கிரகங்கள் சாட்சிக்காரர்களாக விருக்கின்றார். ஜோதிடர் நியாயாதிபதியாகின்றார். எந்த விஷயத்தைப்பற்றி ஜோதிடர் விசாரணை செய்கின்றாரோ அந்த விஷயத்தைப் பற்றிய கிரகங்கள், வீடுகள் அல்லது பாவங்கள் ஆகிய இவைகள் கொடுக்கும் வாக்குமூலத்தை அல்லது சாட்சியை ஜோதிடர் கவனிக்கவேண்டியதாகவிருக்கின்றது. கிரகங்களின் வலிவு அல்லது பலம், கிரகங்களின் திருஷ்டி என்கிற பார்வை, கிரகங்களுக்குள் ஒன்றுக்கொன்று விரோதமாக அல்லது ஒற்றுமையாக நடந்துகொள்கின்ற தன்மை, இவைகளின் அநேக விதமான சமயங்கள், சேஷ்டைகள், அவஸ்தைகள், ஆகிய இவைகளையும் இன்னம் இதர அநேக அம்சங்களையும் ஜோதிடர் கவனிக்கவேண்டும், ஒரு கிரகம் கொடுக்கின்ற சாட்சியத்தைத் (Evidence of a planet) தனியே பரிசோதிக்கவேண்டும். மேலும் இந்த சாட்சியத்தையே மற்றக் கிரகங்கள் கொடுக்கின்ற சாட்சியத்துடன் ஒற்றுப் பார்க்கவேண்டும். இவ்விதமாகக் கிரகங்கள் கொடுக்கின்ற எல்லா

Sapta—9a

சாட்சியங்களையும் (pieces of evidence) ஒன்றுக்கொன்று ஒற்று பார்க்க வேண்டும். ஒரு நியாயாதிபதி எந்த சாட்சிக்காரரை நம்பலாம்; எந்தச் சாட்சிக்காரரை நம்பக்கூடாது என்று யோசனை செய்து தீர்மானிப்பது போலவே ஜோதிடர் எந்தக் கிரகத்தின் சாட்சியத்தை நம்பலாம், எந்தக் கிரகத்தின் சாட்சியத்தை நம்பக்கூடாது என்று யோசனை செய்து தீர்மானிக்க வேணும். ஒரு நியாயாதிபதி தன்னுடைய கோர்ட்டில் இரு கட்சிக்காரர்களின் வக்கீல்கள் எடுத்துக்காட்டுகின்ற சட்ட புத்தகங்களின் ஆதாரங்களையும் வக்கீல்களின் வாதங்களையும் கேட்பது போலவே ஜோதிடரும் ஒரு விஷயத்தைப் பற்றி அநுக்கூலமாகவும் பிரதிகூலமாகவும் ஜோதிட புத்தகங்களில் இருக்கின்ற விதிகளையும், கொள்கைகளையும், தானே தேடிப்பார்த்து ஆராய்ச்சி செய்து யோசனை செய்யவேணும். இவ்விதமாகச் சகல அம்சங்களையும் ஜோதிடர் ஆராய்ச்சி செய்து ஒரு தீர்மானத்திற்குக் கடைசியாக வரவேணும். இவ்விதமாகத் தீர்மானத்திற்கு ஜோதிடர் வருவதற்கு இவர் ஒரு நியாயாதிபதியைப்போலவே கீழ்கண்ட யோக்கிய தாம்சங்களை (Qualifications) உடையவராகவே இருந்தே தீரவேண்டும். ஜோதிடர் ஜோதிட சாஸ்திரத்தை நன்றாகப் படித்திருந்தவராகவிருக்க வேணும். அறிவுக்கூர்மை, சூக்ஷ்மபுத்தி (Acumen) என்றதை உடையவராகவிருக்கவேணும். பகுத்தறிவு, மனக்கூர்மை (Powers of discrimination) நியாயக்கோவை, ஊகை (Powers of reasoning). தீர்க்கமான நடுத்தீர்ப்பு (Powers of sound judgment) ஆகிய இவ்விதமான சிறந்த யோக்கிய தாம்சங்களையும் ஜோதிடர் உடையவராக விருக்கவேணும். இவ்விதமான சக்திகளை ஒரு ஜோதிடர் உடையவராக விருந்தால்தான் பலிக்கக்கூடிய விதமாகப் பலாபலன்களைச் சொல்லும்படியான மிகவும் கஷ்டமான வேலையைச் செய்ய லாயக்குள்ளவராவார். ஒரு நியாயத் தீர்ப்பைச் செய்கின்ற கோர்ட்டு என்ற நியாய சபை எல்லாக் காலங்களிலும் எல்லாவிடங்களிலும் கூடித் தன்னுடைய காரியங்களை நடத்தக்கூடாது. ஆனால் இது ஒரு குறித்த காலத்திலேதான் ஒரு குறித்தவிடத்திலேதான் தன்னுடைய அலுவல்களைச் செய்யவேணும். இவ்விதமாகவே ஜோதிடருடைய கோர்ட்டும் ஒரு குறித்த காலத்திலும் ஒரு குறித்தவிடத்திலுந்தான் நடைபெற வேண்டும். ஜோதிடர் தன்னுடைய கோர்ட்டை அல்லது ஜோதிடசபையை இரவிலும், அசிங்கமான, அசுத்தமான, அருவருப்பான (Filthy, dirty and nasty) இடங்களிலும் நடத்தக்கூடாது. ஜோதிடர் அசுத்தமாகவும், அசௌக்கியமாகவும், தெய்வபக்தியில்லாதவராகவும் (Untidy, unwell, and irreligious) இருக்கக்கூடாது. நமது மகரிஷிகள் சொல்லியுள்ள நிபந்தனைகளையும், நிர்பந்தங்களையும் கட்டளைகளையும் (Restrictions and injunctions) ஜோதிடர் வெகு ஜாக்கிரதையாக அநுஷ்டித்து வருபவராக விருக்கவேணும். நமது மகரிஷிகளும் பூர்வீக ஜோதிட சாஸ்திர கிரந்த கர்த்தர்களும் ஜோதிடம் சொல்லுவதற்கு எந்தெந்த காலங்கள் எந்தெந்த விடங்கள் தகுதியுள்ளவைகள் என்று சொல்லப்பட்டிருக்கின்றனவோ அந்த வேளைகளிலும் இடங்களிலுந்தான் ஜோதிடர் பலாபலன்களைச் சொல்ல ஆரம்பிக்கவேணும். ஜோதிடர் தெய்வ பக்தியுடையவராகவிருக்கவேணும், அல்லது இவரிடத்தில் தெய்வாம்சம் என்ற தெய்வீகத் தன்மை ஒரு துளி

யாகிலும் ஒரு அணுவளவாகிலும் (An iota of divinity) இருக்கவேணும். இதுவரையிலும் மேலே சொல்லப்பட்ட குணதிசயங்களும் யோக்கியதாம்சங்களும் ஜோதிடரிடம் இருந்தே தீரவேண்டும். இவைகளை எல்லாம் ஒரு ஜோதிடர் அடைந்திருப்பது இவருக்கு மிகவும் கஷ்டமான காரியங்களாகவே தோன்றும். ஜோதிட சாஸ்திரத்தைக் கொண்டு பலாபலன்கள் சொல்லவேண்டுமானால் இவ்விதமான வழியையே அனுசரிக்கவேண்டும். தன்னுடைய ஜாதகம் விஷயமாக ஒரு ஜோதிடரைப் பலாபலன்களைப்பற்றிக் கேட்கின்றவர் இந்த ஜோதிடர் தனக்குச் சொல்லிய பலாபலன்களில் ஏதாகிலும் தவறிப்போனால் இவ்விதமான சுலபமான விஷயத்தில் ஏன் இவர் தவறிப்போகக்கூடும் என்று தன்னுடைய அறியாமைத் தன்மையால் ஜோதிடரை இவர் ஒரு உபயோகமே இல்லாதவர், இவர் ஒன்றுக்குமே உதவமாட்டார் என்று உடனே சொல்லி இவரைக் கண்டனமும் தூஷணமும் செய்துவிடுவது சகஜமாகவிருந்து வருகின்றது. ஆனால் ஒரு பெரிய நியாயாதிபதி (A great legal judge) தவறுதலான தீர்ப்பைக் கொடுத்துவிட்டு இந்தத் தீர்ப்பு அபீல் கோர்ட்டில் அ.:.தாவது மேல் கோர்ட்டில் தவறுதலானது என்று சொல்லித் தள்ளிவிடப் பட்டால் கீழ் கோர்ட்டு நியாயாதிபதியை ஜனங்கள் இந்தத் தீர்ப்பு வேலைக்கு இவர் லாயக்கானவர் அல்ல என்று உடனே எண்ணிச் சொல்லாமல் இவர் பக்கமாகப் பரிந்து பேசி இவர் இப்படிச் செய்தது தீர்மானத்தில் ஒரு தப்பிதமே (Error of judgment) யன்றி வேறொன்றும் இல்லை என்று சொல்லி மொழிவிட ஜனங்கள் பார்ப்பது சகஜமாகவிருக்கின்றது. ஒரு தவறுதலான தீர்ப்பை ஒரு நியாயாதிபதி செய்வாரானால் நியாயாதிபதியைக் கண்டிக்கவேணுமே தவிற நியாய சட்டம் கண்டனப் படுத்தப்படுவதற்கு லாயக்கானதல்ல. இவ்விதமாகவே ஒரு ஜோதிடர் தவறுதல் செய்துவிட்டால் ஜோதிடரைக் கண்டிக்கவேண்டுமே தவிர ஜோதிட சாஸ்திரம் கண்டனஞ் செய்யப்படுவதற்கு லாயக்கானதல்ல.

ஜோதிட சாஸ்திரம் பலவிதமான பாகங்களாகப் பிரிக்கப்படும். இந்தப் பாகங்களில் பலபாக ஜோதிடம் (Judicial Astrology) சேர்ந்ததாகும். இந்தப் பலபாக ஜோதிடத்தில் கூட இரண்டு வகைகள் இருக்கின்றன. ஒன்று சாதாரண ஜோதிடம் அல்லது ஹோரா சாஸ்திரம் என்று சொல்லப்படும். மற்றொன்று நாடி ஜோதிடம் என்ற நாடி சாஸ்திரம் என்று சொல்லப்படும். இவ்விரண்டு வகைகளுக்கும் முக்கியமான வித்தியாசம் பின்வருகின்றதாகும். நாடி சாஸ்திரம் என்பது நான் மேலே முன்னமே சொல்லியிருக்கின்ற பிரகாரம் ஒரு லக்கினத்தையும் இராசியையும் நூற்றைம்பது சம பாகங்களாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்தையும் நாடி அம்சம் என்று சொல்லுகின்றது. துருவ நாடியும் சத்திய சம்ஹிதை நாடியும் ஒவ்வொரு நாடி அம்சத்தையும் மறுபடியும் இரண்டு சமபாகங்களாகப் பங்கிட்டு இவைகளுக்கு நாடி அம்சத்தின் பூர்வபாகம் என்ற முன்பாகம் என்றும் உத்தரபாகம் என்ற பின் பாகம் என்றும் பெயரிட்டிருக்கின்றது. அறுபது நாழிகைகள் கொண்ட ஒரு தினத்தில் இராசி மண்டலத்திலுள்ள பன்னிரண்டு இராசிகள் அல்லது

லக்கினங்கள் ஒரு தடவை உதயமாகின்றன. இந்த அறுபது நாழிகைகளைப் பன்னிரண்டு லக்கினங்களுக்கும் சமமாகப் பங்கிடப்பட்டிருக்கின்றது. ஆகையால் ஒவ்வொரு லக்கினத்திற்கும் ஐந்து நாழிகை அல்லது முன்னூறு விநாடிகள் வரும். ஆகையால் மொத்தமாகவுள்ள நூற்றைம்பது நாடி அம்சங்களின் மொத்த பாகங்களாகிய முந்நூறு பாகங்களுக்கு இந்த முன்னூறு விநாடிகளும் பங்கிடப்பட்டிருக்கின்றன. இவ்விதமாகச் செய்யவே ஒவ்வொரு நாடி அம்சபாகத்திற்கும் ஒரு விநாடியாக ஏற்படும். நூற்றைம்பது நாடி அம்சங்களில் உள்ள ஒவ்வொரு நாடி அம்சத்தையுஞ் சுக்கிர நாடி நான்கு உள் பாகங்களாகப் பிரிக்கின்றது. ஒவ்வொரு உள் பாகமும், நான்கு காலங்கள் என்று சொல்லப்பட்ட விப்ரகாலம், க்ஷத்திரிய காலம், வைசியகாலம், சூத்திர காலம் என்ற காலங்களில் ஒன்றுக்கு உரியதாகும். ஆகையால் இவ்வித மான ஒவ்வொரு உள் பாகமும் ஒவ்வொரு அரைவிநாடிக்கு உரியதாகும். இவ்விதமாகவே ஒரு கிரகம் இருக்கின்ற இராசிகூட, நாடி அம்சபாகங்க ளாகப் பங்கிடப்பட்டு கிரகங்கள் இந்த இந்த, அல்லது பலான பலான நாடி அம்சங்களில் இருக்கின்றன என்று சொல்லப்பட்டு வருகின்றன. இது தான் நாடி ஜோதிடத்தின் சாதாரணமான வழி வகை உபாயம் (Scheme) ஆகும். இவ்விதமாக ஒரு லக்கினத்தை அல்லது கிரகங்கள் இருக்கும் ராசிகளை முந்நூறு அல்லது அறுநூறு நுட்பமான பாகங்களாசப் பங்கிட்டு இவைகளில் கிரகங்கள் இருப்பதால் ஏற்படக்கூடிய நுல்லியமான பலாபலன் களைச் சொல்லுவதற்காக ஜோதிட சாஸ்திர விதிகள் மிகவும் விஸ்தார மாகவும் ஏராளமாகவும் ஒரு காலத்தில் இருந்திருக்க வேண்டும் என்று தோற்றுகின்றது. ஒரு ஜாதகத்தின் மிகவும் நுண்ணிய, சூட்சமமான விஷயங்கள் (Minute details of a life) இந்த துருவநாடி சுக்கிரநாடி ஆகிய இவைகளில் காரணங்களுடனும் மேற்கோள்களுடனும் சொல்லப் பட்டிருக்கின்றன. இந்தக் காரணங்களில் அல்லது மேற்கோள்களில் இருந்து மேற் சொல்லிய விதிகளின் சில உதாரணமான அல்லது மோஸ்தரான, அல்லது மாதிரியான விஷயங்கள் (Samples) புலப்படு கின்றன. இந்த நாடிகளைப்போன்ற நாடிகளின் கிரந்தகர்த்தர்கள் ஜோதிட சாஸ்திரத்தின் விதிகளும் அல்லாமல் இயற்கையுணர்வு, சகச ஞானம் (Intuition), உள்ளாராய்வு (Insight) ஆகிய இவைகளையும் உபயோகப்படுத்தி இந்த நாடிகளில் சொல்லியுள்ள மிகவும் நுட்பமான, நுண்ணிய, சூட்சுமமான விஷயங்களைச் சொல்லியிருக்கவேணும் என்று தோற்றுகின்றது. சத்தியமஹரிஷி அவர்களே தன்னுடைய ஜோதிட வித்தையின் உதவியாலும் இயற்கையுணர்வு, சகசஞானம் (Intution) என்றதின் உதவியாலும் பலாபலன்களைச் சொல்லப் போவதாகத் தன்னுடைய நாடியில் தெரிவித்திருக்கின்றார். நாடி ஜாதகங்களில் அடிக்கடி சொல்லப்பட்டிருக்கின்ற மிகவும் ஆச்சரியப்படத் தக்க நுண்ணிய நுட்பமான விஷயங்களை ஜோதிட சாஸ்திரத்தின் உதவி ஒன்றையே கொண்டு சொல்லுவது அசாத்தியமான காரியமே ஆகும். தற்காலத்தில் அநேகவிதமான நாடி சாஸ்திரங்கள் புழக்கத்திலிருந்து வருகின்றன. இவைகளில் மிகவும் முக்கியமானவைகளாயும் ஜன சம்மதமானவைகளா யும் வழக்கத்திலுள்ளனவாயும் (the most important and popular) உள்ளவைகள் (1) இந்தச் சப்தரிஷிநாடி (என்ற சப்தரிஷி வாக்கியம்) (2) துருவநாடி அல்லது ஸத்யஸம்ஹிதைநாடி, (3) சுகர்வாக்கியம், (4) சுக்கிர நாடி, (5) பிருகுஸம்ஹிதாநாடி முதலியனவாகும். பரமேஸ்வரருடைய மனைவியாகிய பார்வதியம்மனின் அக்ராஸனத்தின் கீழ் நடத்தப்பட்ட சப்த ரிஷிகளின் ஜோதிட சாஸ்திர கொலுவில் இந்த சப்தரிஷிகளாலும் பார்வதி யம்மையாலும் இந்தச் சப்தரிஷி நாடி உண்டாக்கப்பட்டதாகும். அக்கிரா சனாதிபதியாகிய பார்வதியம்மையார் ஒருவருடைய ஜாதகத்தின் கிரகநிலை யையும், லக்கினத்தையும் சப்தரிஷிகளுக்கு எடுத்துச் சொல்லி இவர்களைப் பலா பலன்களைச் சொல்லும்படியாகக் கேட்கின்றார். இவ்விதமாகப் பார்வதி யம்மையார் கேட்ட உடன் ஒரு ரிஷி பலன் சொல்லவாரம்பித்து மேல்மேலும் பலாபலன்களைச் சொல்லிக்கொண்டே போகின்றார். ஜாதகருடைய மனைவியின் ஆயுள், அல்லது இவருக்கு ஆண் குழந்தை பிறத்தல், அல்லது இவருடைய ஆயுள் அல்லது இன்னம் சில விஷயங்கள் ஆகிய இவைகளைப் பற்றி அபிப்பிராயபேதம் ஏற்படுவதற்குச் சந்தர்ப்பம் உண்டாகும்போது இந்த அபிப்பிராய பேதத்தையோ அல்லது சந்தேகத்தையோ யாருடைய ரிஷியானவர் பலாபலன்களைச் சொல்லிக்கொண்டே போகின்ற ரிஷியைத் தடுத்துக் கேள்விகளைக் கேட்கின்றார். இதன் பேரில் ரிஷிகளுக்குள் வாக்குவாதம் நடக்கின்றது. இந்த வாக்குவாதத்தில் இதர ரிஷிகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ரிஷிகள்கூட கலந்துகொள்ளுகின்றார்கள். இவர்கள் தங்கள் தங்களுடைய அபிப்பிராயங்களைத் தகுந்த காரணங்களுடன் சொல்லி வாதாடுகின்றார்கள். கடைசியாகச் சந்தேகமான விஷயத்தைப் பற்றி எல்லா ரிஷிகளுஞ் சேர்ந்து ஒரு தீர்மானத்திற்கு வருகின்றார்கள். இவர்கள் ஒருவிதமான தீர்மானத்திற்கும் வராமல் முடிவில்லாமல் வாதாடிக்கொண்டே இருந்தால் பார்வதியம்மையார் இந்த வாக்குவாதத் தில் பிரவேசித்து தன்னுடைய அபிப்பிராயத்தைக் கடைசித் தீர்மானமாகச் சொல்லி இந்த வாதத்தை நிறுத்திவிடுகின்றார். சில சமயம் அடிஸ்ஸன் (Addison) என்ற பண்டிதருடைய ஸர்ரோஜர்டி காவர்லி (Sir Roger de Coverley) என்பவர் தான் வழக்கமாய்ச் சொல்லுவதைபோல இருகட்சிக் காரர்களின் பக்கத்திலும் அல்லது சார்பிலும் அதிகமான விஷயங்கள் சொல்லக்கூடும் என்றும் பார்வதியம்மையார் சொல்லுவதுண்டு; அல்லது ஒரு சமயம் வாதஞ்செய்கின்ற ரிஷிகளுக்குள் முக்கியமாய் வாதாடுகின்ற இரண்டு ரிஷிகளும் ஒரு விதத்தில் பலனைச் சரியாகவே சொல்லி இருக்கின் றார்கள் என்றும் பார்வதியம்மையார் சொல்வதுண்டு. உதாரணமாக "ஜாதகருக்கு ஒரு மனைவியா, இரண்டு மனைவிமார்களா என்ற விஷயத்தைப் பற்றி ரிஷிகள் முடிவிற்கு வராமல் வாக்குவாதஞ் செய்துகொண்டிருக்கும் போது இரண்டு ரிஷிகள் சொல்லுவதும் சரியானவைகளே, ஜாதகர் இரண்டு மனைவிமார்களை உடையவராவர், ஆனால் இவர்களில் ஒருத்தி சாஸ்திர விதிப் பிரகாரம் கலியாணஞ் செய்யப்பட்டவளாவள், மற்றொருத்தி வைப்பாட்டியாய் இருந்த போதிலுங்கூட விவாகஞ் செய்யப்பட்ட மனைவியைப் போலவே ஜாதகருடன் இருந்துவாழ்வாள்" என்று பார்வதியம்மையார் தன்னுடைய அபிப்பிராயத்தைத் தீர்மானமாகத் தெரிவிப்பதுண்டு.

நான் இனிமேல் இந்த நாடியைப் பற்றியும் இதன் செய்வகையைப (technique) பற்றியும் கூடியமட்டும் விரிவாகப் பரிசோதனை செய்யப் போகிறேன். ஜாதக பலாபலன்களைச் சொல்வதில் தலையிட்டுள்ள ரிஷிகளின் சங்கியையிலிருந்து இந்த நாடிக்குப் பெயர் கொடுக்கப் பட்டிருக்கின்றது. அஃதாவது ஏக காலத்தில் ஏழு ரிஷிகள் ஜாதகத்தை ஆராய்ச்சி செய்வதால் இந்த நாடிக்குச் சப்தரிஷி நாடி என்று பெயர் கொடுக்கப் பட்டிருக்கின்றது. ரிஷிகள் அநேகம் பேர்கள் இருந்திருக்கின்றார்கள். 1935-ம் வருஷத்தில் அச்சிட்ட ஜூபிலி தமிழ்ப் பேரகராதியில் 400-ஆவது பக்கத்தில் கொடுத்துள்ள பிரகாரம் நான்கு விதமான "சப்தரிஷி கூட்டங்கள்" இருக்கின்றன. இவைகள் I (1) அத்திரி, (2) ஆங்கிரஸர், (3) கௌதமர், (4) ஸமத்க்னி, (5) பாரத்துவாசர், (6) வசிஷ்டர், (7) விஸ்வாமித்திரர்; II (1) அகத்தியர், (2) ஆங்கிரஸர், (3) கௌதமர், (4) காசிபர், (5) புலத்தியர், (6) மார்க்கண்டர், (7) வசிஷ்டர்; III (1) மரீசி, (2) ஆங்கிரஸர், (3) புலவகர், (4) வசிஷ்டர், (5) அத்திரி, (6) புலத்தியர், (7) கிரது; IV (1) காசிபர், (2) அத்திரி, (3) பரத்துவாசர், (4) விஸ்வாமித்திரர், (5) கௌதமர், (6) ஸமதக்னி, (7) வசிஷ்டர் ஆகும். இந்த நாடியில் கீழ்கண்ட ரிஷிகள் இந்த ஜோதிடக் கொலுவில் கூடிக்கொண்டு ஜாதகத்தின் பலாபலன்களைச் சொல்லுவதில் கலந்து கொள்ளுவதாகக் கண்டிருக்கின்றது. (1) வசிஷ்டர்—666-ஆவது பக்கம், 34 ஆவது செய்யுளைப் பார்க்கவும், (2) அகஸ்தியர்—655 ஆவது பக்கம், 2 ஆவது பாடல், (3) பராசரர்—658 ஆவது பக்கம் 13 ஆவது பாடல், (4) பிருகு—699 ஆவது பக்கம், 11 ஆவது பாடல், (5) கௌசிகர்—731 ஆவது பக்கம், 2 ஆவது பாடல், 2 ஆவது பக்கம், 2 ஆவது பாடல், (6) அத்திரி—641 ஆவது பக்கம், 15 ஆவது பாடல், (7) ஜயமுனி—613-ஆவது பக்கம், 30 ஆவது பாடல், (8) புஜண்டர்—613 ஆவது பக்கம், 30 ஆவது பாடல், (9) விருத்தர்—824 ஆவதுபக்கம், 23ஆவது பாடல், (10) அருவர்—609 ஆவது பக்கம், 18 ஆவது பாடல், (11) ஜடைமுனி—714 ஆவது பக்கம், 21 ஆவது பாடல், (12) தேவகுரு அல்லது சுரகுரு—1031 ஆவது பக்கம், 2 ஆவது பாடல் பார்க்கவும். ஆகையால் இந்த ஜோதிடக் கொலுவில் (Astrological Session) ஒன்றிற்கு மேற்பட்ட சப்தரிஷி கூட்டத்தில் சேர்ந்த ரிஷிகள் கலந்துகொண்டு பலாபலன்களைச்சொல்லுவதில் பங்கெடுத்துக்கொள்ளுகின்றார்கள் என்று தெரியவருகின்றது. இந்த சப்த ரிஷிகளினுடைய மேதாவி கூட்டத்தில் (Galaxy of Rishis), அபாரமான அநுபவங்களையும் விவேகத்தையும் (Vast experiences and knowledge) மிகவும் பிரகாசமான பெருந்திறமையுள்ள, புத்தியையும் (brilliant intellect) உடைய பல சிறந்த ரிஷி புங்கவர்கள் இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட ரிஷிகள்கூட, பலாபலன்களைச் சொல்லுவதில் சில கஷ்டமான, சிக்குமுக்கான விஷயங்களில் (intricate points) திணறிப்போய்த் தடுமாற்றம் அடைந்து சந்தேகமான (doubtful), இரண்டில் ஒன்றான (alternate), ஒரு ஷரத்தின்மீது நடக்கக்கூடியதான (conditional) பலாபலன்களைச் சொல்லி இருக்கின்றார்கள். இதனால் சாதாரண மனுஷனுகிய ஜோதிடர் ஒருவருடைய ஜாதகத்தின் பலாபலன்களைச் சொல்லுந் தன்னுடைய தொழிலில் தனக்கு உண்டாகின்ற பெரிய பெரிய கஷ்டங்களையும் சிக்கல்களையும் இந்த ரிஷிகளே

எடுத்துக் காட்டியிருப்பது போல இந்த விஷயம் தெரிவிக்கின்றது என்று நாம் கருதக்கூடும். இவ்விதமாகச் சந்தேகமான, இரண்டில் ஒன்றான, ஒரு ஷரத்தின்மீது நடக்கக்கூடியதான பலாபலன்கள் விஷயமாகக் கீழ் கண்டுள்ள உதாரணங்களைக் கவனிக்கவும். (1) 606 வது பக்கம், 5-வது பாடல், (2) 613-வது பக்கம், 29-வது பாடல், (3) 73-வது ஜாதகம், 19-வது பாடல், (4) 906-வது பக்கம், 14-வது பாடல், (5) 98-வது பக்கம், 11-வது பாடல், (6) 21-வது பக்கம், 30-வது பாடல், (7) 18-வது பக்கம், 17-வது பாடல், (8) 48-வது பக்கம், 28-வது பாடல் ஆகிய இவைகள் உதாரணங்களாகும். 606-வது பக்கத்தில் 5-வது பாடலில் ஜாதகருடைய தகப்பனுருக்கு இன்னம் அதிகமான சகோதரர்களும் சகோதரிகளும் பிறந்தாலுங்கூட இவர்கள் சீக்கிரத்தில் இறந்து விடுவார்கள் என்றும் இந்த ஜாதகருக்கு இளைய சகோதரர்களும் இளைய சகோதரிகளும் கிடையாதென்றும், ஒரு சமயம் இவர்கள் பிறந்தாலும் இவர்கள் சீக்கிரம் இறந்து விடுவார்கள் என்றும் சொல்லி இருக்கின்றது. இது சந்தேகமான இரண்டில் ஒன்றான பலனைப்பற்றிய உதாரணமாகும். 611, 612, 613-வது பக்கங்களில் 25, 27, 29-வது செய்யுள்களில் ஜாதகருக்கு இரண்டு மனைவிமார்கள் உண்டென்றும், இந்த ஜாதகர் தன்னுடைய முற்பிறப்பில் தான் செய்த கெட்ட கர்மாவின் பயனுகவும், பாபங்களாலும், தோஷங்களாலும் இவருடைய சந்ததிகள் விருத்தியாகமாட்டார்கள் என்றும், ரிஷிகள் சொல்லியுள்ள போதனை (advice) பிரகாரம் ஜாதகர் பிராயச்சித்தங்களை, பாபநாசத்திற்கான பரிகாரங்களை (expiatory ceremonies) செய்வாராகில் இவருக்கு ஒரே ஒரு மனைவிதான் சம்பவிப்பாள், இவருடைய குழந்தைகளும், இவருடைய குடும்பத்தையும், சம்பத்தையும் பற்றிய சகலமும் விருத்தியடையும் என்றும் ரிஷிகள் அறிவித்த சாந்திகளை இவர் செய்யாவிட்டால், இவருடைய மனைவி உண்மையிலே இறந்துவிடுவாள் என்றும் இவருடைய சந்ததிகள் உண்மையாக விளங்கமாட்டார்கள், நன்றாக விருத்தியாக மாட்டார்கள் என்றும் சொல்லி இருக்கின்றது. இப்படிச் சொல்லியிருப்பது ஒரு ஷரத்தின்மீது நடக்கக்கூடியதான பலனைப் பற்றிய உதாரணமாகும்.

இந்த நாடியில் நான் இதுவரையிலும் பார்த்த ஜாதகங்களிலிருந்து, பார்வதியம்மையார் அம்சைச் சக்கரத்தில் கிரகங்கள் இருக்கின்ற நிலைகளையாவது அல்லது வழக்கமான சோடச வர்க்கங்கள் என்று சொல்லப்பட்ட வர்கச் சக்கரங்கள் முதலியவைகளில் உள்ள கிரக நிலைகளையாவது, ரிஷிகளுக்குத் தெரிவிப்பது கிடையாதென்று தோற்றுகின்றது. ஆகையால் உள்ளே அதிகமாக நுழைந்து பார்க்காமல் மேலேயே பார்த்துவிட்டு அல்லது ஆராய்ச்சி செய்துவிட்டுபோகின்ற ஒருவர், கிரகங்கள் பலவிதமான வர்க்கங்களில் இருக்கின்ற நிலைகளை அல்லது ஸ்திதிகளைக் கணிக்காமலும் அல்லது எந்த மார்க்கத்திலாகிலும் தெரிந்து கொள்ளாமலும் மிகவும் ஆச்சரியகரமான பலாபலன்களைச் சொல்லியிருக்கின்றார்கள் என்றும் அபிப்பிராயப்படுவதற்குக் காரணம் இருப்பதாகத் தோன்றுகின்றது. ஆனால் மிகவும் ஜாக்கிரதையாகவும் ஊக்கமாகவும் பரிசோதனை செய்து பார்ப்போமானால், ரிஷிகள் பலாபலன்களைச் சொல்லுவதற்காகத் தேவையான சகலவிதமானவைகளையும்

வர்க்கங்களையும் கணிதங்கள் மூலமாகவும் அல்லது இயற்கையுணர்வு என்ற சகச ஞானசக்தியாலும் (intuition) தெரிந்து கொண்டே பலாபலன்களைச் சொல்லி இருக்கின்றார்கள் என்று சந்தேகத்திற்கிடமில்லாத விதமாகத் தெரியவருகின்றது. உதாரணமாக 665 ஆவது, 666 ஆவது பக்கங்களில், 35 ஆவது பாடல்களில் ஜாதகர், தன்னுடைய ஐந்தாவது வயது முதல் ஐம்பதாவது வயது வரையிலுள்ள காலம் வரையிலும் அதிருஷ்டமுள்ளவராகவே (fortunate) விருப்பார் என்று அகஸ்திய முனிவர் சொல்லும்போது வசிஷ்ட முனிவர் இதனை ஆக்ஷேபித்து குருவும் சனியும்கூடி ஆறுவது பாவத்தில் இருப்பதால் ஜாதகருக்குக் கெடுதிகளும் துரதிருஷ்டமும் உண்டாகும் என்று சொல்லவே, குரு தேவலோகாம்சத்தில் இருப்பதால் நல்ல பலன்களே உண்டாகும் என்று ஆக்ஷேபணைக்குப் பதில் சொல்லி இருக்கின்றார். தேவலோகாம்சம் என்பது பலவிதமானவர்க்கங்களில் ஏழு வர்க்கங்களிலும் ஒரே இராசியில் ஒரு கிரகம் இருப்பதினால் உண்டாகின்ற ஒரு விதமான நல்ல அம்சமாகும். இது விஷயமாகச் சர்வார்த்த சிந்தாமணியில் ஓராவது அத்தியாயத்தில் இருபதாவது சுலோகம், ஜாதகபாரி ஜாதத்தில் ஓராவது அத்தியாயத்தில் நாற்பத்தாறுவது சுலோகம், ஆகிய இவைகளைப் பார்க்கவும். ஒவ்வொரு ஜாதகத்திலும் இந்த நாடியானது கீழ்கண்ட விஷயங்களைப் பற்றிப் பெரும்பாலும் தவறிடாமல் சொல்லுகின்றது.

“ பெற்ற தாய் தந்தை யோகம் பேதையர் புத்திர் யோகம்
சுத்தமாய் முன்பின் ஜன்மம் செப்புவோ மிந்நூல் தன்னில் ”

இதனுடைய அர்த்தம் பின்வருமாறு ஆகும். ஜாதகரைப் பெற்றெடுத்த தாயார், தகப்பனார் ஆகிய இவர்களுடைய யோகம், ஜாதகருடைய மனைவி, சந்ததிகள், ஆகிய இவர்களுடைய யோகம், முன் ஜன்மம், பின் ஜன்மம், ஆகையால் இவைகள் எல்லாவற்றையும் பற்றியும் இந்தச் சாஸ்திரத்தில் சுத்தமாகவும் பிழையில்லாமலும் சொல்லுகின்றோம். 708-வது பக்கம், 3-வது பாடல், 746-வது பக்கம், 3-வது பாடல், 759-வது பக்கம், 3-வது பாடல், 1092-வது பக்கம், 3-வது பாடல், ஆகிய இவைகளை வாசிக்கவும். இந்த விஷயங்கள் எல்லாவற்றையும், இவ்விஷயங்கள் போன்ற ஜாதகருடைய சகல விஷயங்களையும் சாந்திகளைப் பற்றியும், சில நோய்கள் விஷயமாய் வைத்திய முறைகளையும் ஆகிய இவைகள் எல்லாவற்றையும் இந்த நாடி சொல்லுகின்றது. முன் ஜன்மம் சம்பவித்த இடத்தைப்பற்றியும் பின்ஜன்மம் சம்பவிக்கப்போகின்ற இடத்தைப் பற்றியும் ஒரு குறிப்பாகத் தவறாமல் சொல்லிவரும்போது இந்த ஜன்மம் சம்பவித்த இடத்தை மாத்திரம் குறிப்பாகச் சொல்லாமல் விட்டுவிடுவதற்குக்காரணம் என்னவென்று ஒரு வியப்படையக்கூடும். உதாரணங்களுக்காகப் பின்வருவனவற்றைப் பார்க்கவும். 574-வது பக்கம், 44-வது பாடல், 11-வது பக்கம், 42-வது பாடல், 12-வது பக்கம், 47-வது பாடல், 797-வது பக்கம், 10-வது பாடல், 1100-வது பக்கம், 22-வது பாடல் ஆகிய இவைகளைப் பார்க்கவும், முன் ஜன்ம இடங்களும் பின் ஜன்ம இடங்களும் பெரும்பாலும் இந்தியா தேசத்திலேயே இருக்கின்றன. உதாரணமாக இவைகள் காஞ்சீவரம், திருவண்ணாமலை, ஸ்ரீரங்கம், திருப்பதி, திருக்கழுக்குன்றம், மதுரை, துவாரகாபுரி, தக்கோலம், குடகுநாடு, விருஞ்சிநாடு முதலியனவாகும். ரிஷிகளுக்கு விரோதமில்லாமல் இவர்களுக்கு அநுகூலமான இந்த ஜன்ம இடத்தைப்பற்றிய ஒரு காரணத்தை நான் யூகித்திருக்கின்றேன். ஆனால் இந்தக் காரணத்தைப் பற்றி எனக்குப் பூரண நம்பிக்கையில்லாமல் இன்னும் கொஞ்சம் சந்தேகம் இருப்பதால் நான் இதை இங்கு தெரிவிக்கத்துணியவில்லை. இந்த ஜன்ம இடத்தைத் தெரிவிக்காமல் ரிஷிகள் விட்டுவிடுவதற்கு இவர்கள் ஒரு காரணத்தை வைத்துக்கொண்டிருக்க வேண்டும் என்று தோற்றுகின்றது. இந்தக் காரணத்தை இந்தப் புத்தகத்தை வாசிப்பவர்களே யூகிக்கட்டும் என்று இந்த விஷயத்தை இத்துடன் விட்டுவிடுகின்றேன்.

பலவிதமான வருஷங்கள் வித்தியாசமான கால அளவுடன் இருந்து வருகின்றன. இவைகள் (1) முன்னூற்றைம்பத்து நான்கு நாட்கள் கொண்ட சாந்திரமான வருஷம், (2) முன்னூற்றறுபது நாட்கள் கொண்ட சாவன வருஷம், (3) முன்னூற்றறுபத்தைந்தேகால் நாட்கள் கொண்ட சௌரமான வருஷம் முதலியன ஆகும். ஜாதகத்தின் பலாபலன்கள் நடக்கும் காலத்தைக் குறிப்பிடுவதற்காக உபயோகப்படுத்தப்பட்டுவருகின்ற உடுமகாதசை என்ற நக்ஷத்திரத்தை அநுசரித்த தசைகளில் சாவன வருஷம் சௌரமான வருஷம் என்ற இவ்விரண்டுவித வருஷங்களில் எந்த வருஷ காலத்தை உபயோகிக்கப்பட்டிருக்கின்றது என்பது இப்போது ஆராய்ச்சி செய்வதற்கு ஒரு லாயக்கான கேள்வியாகும். இந்தக் கேள்வி விஷயமாகச் சுமார் முப்பது வருஷங்களுக்கு முந்தி “இந்து பத்திரிகையில்” மனவெழுச்சியான (heated) உற்சாகத்தைத் தரக்கூடிய தீவிரமான (lively) காரசாரமான ஒரு வாக்குவாதம், தர்க்கம் (controversy) நடந்தது ; இதில் வேதாரண்யத்தில் வாசஞ்செய்து கொண்டிருந்த ஸ்ரீரமண சாஸ்திரி அவர்கள், ஸ்ரீ இராகவேந்திரபட் அவர்கள், இரங்கோனில் இருந்த ஸ்ரீ பரமேஸ்வர ஐயர், ஆகிய அக்காலத்து மேதாவிகளான ஜோதிட சாஸ்திரிகள் உள்பட இன்னம் பல ஜோதிட சாஸ்திர மேதாவிகள் கலந்து கொண்டார்கள். இந்த வாக்குவாதம் ஒரு முடிவிற்கும் அல்லது தீர்ப்பிற்கும் வராமலேயே அநேக நாள் இந்த “இந்து நித்திய பத்திரிகை” மூலமாக நடந்து கொண்டுவரவே பத்திரிகைக்குச் சொந்தக்காரர் இந்த வாக்குவாதத்தை நிறுத்தி விடுவதற்காகப் பத்திரிகையில் இது விதமாகப் பிரசுரஞ் செய்வதை நிறுத்தி விட்டார். இந்தக் கேள்வி அல்லது பிரச்னை (this question) இதற்குப் பிறகு பத்திரிகைகளில் பல தடவைகளிலும் சில சமயங்களில் ஜோதிட பல கலை திரட்டுகளிலும் (astrological magazine) ஜனங்களால் கேட்கப் பட்டிருக்கின்றது. ஆனால் இது இன்னம் விவாதஞ் செய்யக்கூடிய கேள்வியாகவே இருந்து வருகின்றது (this question is still a moot-point). உடுமகாதசைக்குள்ளேயே இருக்கின்ற சாக்ஷி (internal evidence) சாவன வருஷ காலத்திற்கு அநுகூலமானதாகவே இருக்கின்றது. ஏனென்றால் உடுதசையைப் புக்திகளாகவும் அந்தரங்களாகவும் பங்கிடுவதற்கு ஒரு வருஷத்தைப் பன்னிரண்டால் பெருக்கி மாதமாகவும், ஒரு மாதத்தைக் முப்பதால் பெருக்கி நாட்களாகவும் வெகு சூக்ஷமாகப்பங்கிட்டு இருக்கின்றது. பன்னிரண்டை முப்பதால் பெருக்க முந்நூற்றறுபது வருகிறது. இந்த முந்நூற்றறுபது நாட்கள்

தான் ஒரு சாவன வருஷத்தில் இருக்கின்றன. பலதீபிகை என்ற ஜோதிட புத்தகத்தில் பத்தொன்பதாவது அத்தியாயத்தில் நான்காவது சுலோகத்தில் சௌரமான வருஷத்தையே உடுதசை விஷயத்தில் உபயோகப் படுத்த வேண்டும் என்று ஸ்திரமாகவும் சந்தேகமறவும் சொல்லி இருக்கின்றது. இந்த ஒரு வருஷகாலம் என்பது சூரியன் ஆகாயத்தில் கிராந்தி மண்டலத்தில் (ecliptic) ஒரு குறித்த இடத்திலிருந்து புறப்பட்டு பூர்த்தியான ஒரு சுற்றைச் சுற்றி மறுபடியும் அதே குறித்த விடத்திற்கு வரச் சொல்லுகின்ற காலமே ஆகும் என்று இந்தப் புத்தகத்தின் ஆசிரியரான மந்திரேஸ்வரரால் சொல்லப்பட்டிருக்கின்றது. கிரகங்களின் ஷட்பலங்களையும், பாவ பலங்களையும், இவைகளின் மூலமாய் ஆயுளையும் நிர்ணயிக்கின்ற கணித வழியில் முந்நூற்றறுபது நாட்கள் கொண்ட சாவன வருஷத்தையே ஸ்ரீபதி என்றவர் தன்னுடைய ஸ்ரீபதி பத்ததி என்ற ஜோதிட கணித சாஸ்திரத்தில் அங்கீகரித்திருப்பதாகத் தோற்றுகின்றது. உடுதசை வருஷங்களுக்கு முந்நூற்றறுபத்தைந்தே கால் நாட்கள் வீதம் கணக்கிடக்கூடாது என்றும், ஆயுள் கணிதத்தில் முதலில் கணிதம் செய்யும் போதெல்லாம் கணித வகையில் ஒரு வருஷத்திற்கு முந்நூற்றறுபது நாட்கள் வீதம் கணிக்க வேண்டும் என்றும் இவ்விதமாகக் கணித்து வருகின்ற தசையின் அளவை மாத்திரம் சாதாரணமாக ஜனங்களுடைய வழக்கத்தில் இருந்து வருகின்ற முந்நூற்றறுபத்தைந்தேகால் நாட்கள் கொண்ட சௌரமான வருஷ கணக்கில் ஆயுளை அறிவதற்காகவே முந்நூற்றறுபத்தைந்தேகால் நாள் கொண்ட சௌரமான வருஷமாக மாற்ற வேணும் என்ற அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கின்றார் என்று சிலர் அபிப்பிராயப்படுகின்றார்கள். உடுமகா தசையை உண்டு பண்ணிய காரணங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்கின்ற ஆராய்ச்சியாளர்கள் (research scholars who desire to explain the rationale of udu-dasa system) முந்நூற்றறுபத்தைந்தேகால் நாட்கள் கொண்ட சௌரமான வருஷத்தையே அங்கீகரிப்பதைப் போலத் தோற்றுகின்றது. இந்த சப்தரிஷி நாடி முந்நூற்றறுபத்தைந்தேகால் நாட்கள் கொண்ட ஒரு (சௌரமான) வருஷத்தையே சந்தேகமில்லாமல் ஸ்பஸ்டமாகவும் திட்டமாகவும் (definitely) உபயோகப்படுத்தி இருப்பதாகத் தான் தெரியவருகின்றது. இதைப் பற்றி இந்தப் புத்தகத்தில் நெ. 103-வது பக்கத்தில் நாற்பத்திரண்டாவது பாடலின் கீழ் கொடுத்துள்ள வியாக்கியானத்தையும், 1136-வது பக்கத்தில் முப்பத்திரண்டாவது பாடலின்கீழ் கொடுத்துள்ள வியாக்கியானத்தையும் வாசிக்கவும். மேலும், இந்த நாடி ஒரு ஜாதகருக்கு உண்டாகக்கூடிய நோய்களின் பெயரையும், இந்த நோய்கள் நிவர்த்தியாவதற்காக உபயோகப்படுத்தவேண்டிய அல்லது பிரயோகஞ் செய்ய வேண்டிய மருந்துகளையும், இம் மருந்துகளைச் செய்ய வேண்டிய முறைகளையும் தெரிவிக்கின்றது. 5, 11, 12-வது பக்கங்களில் 17, 43-முதல் 47-வது வரையிலுமுள்ள பாடல்களை வாசிக்கவும். இந்தச் செய்யுள்கள் ஒரு ஷரத்தின்பேரில் உண்டாகின்ற பலன்களைப் (conditional prediction) பற்றிச் சொல்லுகின்றதற்குக்கூட உதாரணமானவைகள் என்று கருதலாம். ஏகாதசி அமாவாசை ஆகிய இப்படிப்பட்ட விரததினங்களில் ஒரு ஸ்திரீயுடன் சம்போகஞ் செய்கின்ற ஒரு புருஷன், ஸ்திரிரோகம், கிரந்திரோகம், காரக

ரோகம், மேகரோகம் ஆகிய இந்த ரோகங்களினால் தண்டிக்கப்பட்டுக் கஷ்டங்களை அநுபவிப்பார் என்று இந்த நாடி தெரிவிக்கின்றது. இதைப் பற்றி ஐந்தாவது பக்கத்திலுள்ள பதினேழாவது செய்யுளைப் பார்க்கவும்.

ஜீவாத்மா அல்லது பிராணன் (soul) என்றது ஒன்று உண்டு என்றும், இதற்கு முற்பிறவிகளும் பிற்பிறவிகளும் (previous births and subsequent births) உண்டு என்றும், இதற்குப் பூர்வகர்மா (past karma) என்பது உண்டு என்றும், கர்மாவைப்பற்றியவாதம் அல்லது கோட்பாடு அல்லது விஞ்ஞானம் (Theory of Karma) என்றதைப்பற்றியும் நம்பிக்கையை ஜனங்களுக்கு ஊட்டுகின்ற உதாரணங்கள் இந்த நாடியில் எங்கு பார்த்தாலும் ஏராளமாக மலிந்தும் மிகுந்தும் கிடக்கின்றன. ஜீவாத்மா வைப்பற்றியும், ஜீவாத்மா ஒன்றே என்றும் அது பரமாத்மாவேயாகும் என்றும் (Monism), ஜீவாத்மாக்கள் பல உளவென்றும் (Dualism Pluralism) கர்மாவைப் பற்றிய வாதம் அல்லது விஞ்ஞானம் (Theory of Karma) ஆகிய இவைகளைப் பற்றியும் இந்து தேசத்திய வேதாந்தம், தத்துவ ஞானம் என்ற அறுவகை வேதாந்தங்களும் (Six Systems of Hindu Philosophy) ஆராய்ச்சி செய்திருக்கின்றன. ஒரு ஆத்மாவின் முதல் முதல் கர்மா என்பது எக்காலத்தில் எவ்விதத்தால் ஏற்பட்டதென்று யாராலும் எல்லோருக்கும் திருப்திகரமாய் இருக்கும்படிச் சொல்ல முடியாத விஷயம் என்று ஒரு தற்காலத்திய சிறந்த பண்டிதர் தன்னுடைய தத்துவ ஞான சாஸ்திர புத்தகத்தில் (A book on Philosophy) சொல்லியிருப்பதை நான் படித்திருக்கின்றேன். இந்த உலகத்தில் ஒரு மனிதர் தான் தன்னுடைய பூர்வ ஜன்மத்தில் அல்லது இந்த ஜன்மத்தில் செய்த கர்மத்திற்குத் தகுந்தபடியாகவே சுகத்தையும் கஷ்டத்தையும் அனுபவிக்கின்றார். ஒரு மனிதர் இரண்டு மனைவிமார்களை அல்லது ஒரு மனைவியையும் ஒரு வைப்பாட்டியையும் அடைவது ஒரு மனிதர் தனக்குப் புத்திரர்கள், சகோதரர்கள், பிதுரார்ஜித சொத்துக்கள் ஆகிய இவைகள் இல்லாமலிருப்பது, ஒரு மனிதர் தன்னுடைய மிகவும் இளம் பிராய வயதிலேயே தன்னுடைய மாதாவை இழந்து விடுவது, ஒரு மனிதர் தனக்கு ஒரு குடும்பம், வீடு இல்லாமல் ஒரு பைத்தியக்காரரைப் போலவும் நாடோடியைப் போலவும், பிச்சைக்காரனைப்போல அங்கும் இங்கும் ஓடி அலைந்து திரிவதும், ஒரு மனிதர் மிகவும் குரூரமான, பயங்கரமான ரோகத்தினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதும், இவைகளைப் போன்ற இன்னம் பலவிதமான கஷ்டங்களும், ஆகிய இவைகள் எல்லாம் இந்த சப்தரிஷி நாடியில் ஒருவருக்குத் தான் பெரும்பாலும் முன் ஜன்மத்தில் செய்த அல்லது அடையப்பட்ட கர்மா அல்லது பாபம் அல்லது தோஷம், அல்லது சாபம் ஆகிய இவைகளின் பயனாகவும், சிறும்பாலும் இந்த ஜன்மத்தில் கடந்துபோன வருஷங்களில் தான் செய்த அல்லது அடையப்பட்ட கர்மா அல்லது பாபம், அல்லது தோஷம் அல்லது சாபம் ஆகிய இவைகளின் பயனாகவும் உண்டாகின்றன என்றே சொல்லியிருக்கின்றது. ஒரு மனிதர் தன்னுடைய முன் ஜன்மத்தில் பாபங்களைச் செய்து சாபங்களை அடைந்த பயனை அதே ஜன்மத்திலேயே தன்னுடைய வாழுளின் கடைசி காலத்தில் கொஞ்சமாகக் கஷ்டத்தை அடைந்துவிட்டுத் தன்னுடைய தற்கால ஜன்மத்தில் அதிகமான

கஷ்டங்களை அநுபவிக்கின்றார் என்று இந்தச் சப்தரிஷி நாடியிலிருந்து சுத்தமாகத் தெரியவருகின்றது. ஒரு மனிதர் தன்னுடைய முன் ஜன்மத்தில் வழிநடை மார்க்கத்தில் வழிநடை யாளர்கள் தங்களுடைய தாகத்தைத் தீர்த்துக் கொள்ளுவதற்காகத் தண்ணீர் பந்தலை அமைத்து நீர்மோர் கொடுப்பது, கோயில்களில் தேவ கைங்கரியங்களைச் செய்தல் அல்லது ஜனங்களுக்கு இவர்களுடைய கஷ்ட காலங்களில் சேவைபுரிதல், ஒரு மனிதர் தன்னுடைய முன் ஜன்மத்தில் புண்ணிய தீர்த்தங்களுக்கும் தெய்வீக ஸ்தலங்களுக்கும் சென்று அவ்விடத்தில் புண்ணிய நதிகள், தீர்த்தங்கள் ஆகிய இவைகளில் ஸ்நானஞ் செய்தல், ஆகிய இப்படிப்பட்ட நல்ல காரியங்கள் தர்ம காரியங்கள் ஆகிய இவைகளைச் செய்தலின் பயனாக இந்த ஜன்மத்தில் உயர்ந்த குலத்தில் பிறத்தல், நல்ல அந்தஸ்தையும் உயர்ந்த பதவியை அடைதல் அதிக பாக்கியத்தையும் சம்பத்தையும் அடைதல், முன் ஜன்மத்தில் தன்னால் உதவி செய்யப்பட்டவர்களால் இந்த ஜன்மத்தில் தான் உதவி செய்யப்படுவது ஆகிய இவைகள் எல்லாம் சம்பவிக்கின்றன என்று இந்த நாடியில் இருந்து தெரியவருகின்றது. உதாரணமாக :—

(1) தன்னுடைய முன் ஜன்மத்தில் ஒரு பிராமண ஸ்திரீயையும் இவளுடைய குழந்தைகளையும் தங்களுடைய வழிநடை மார்க்கத்தில் திருடர்களிடத்தில் சிக்கிக் கொண்டு கஷ்டப்படாமல் இருக்கும்படியாகக் காப்பாற்றின ஒரு மனிதருக்கு இந்த ஸ்திரீயே இந்த ஜன்மத்தில் இரட்டைப் பிறவி சகோதரியாகப் பிறந்து இவரை ஆதரித்து வருகின்றாள். இது விஷயமாகப் பத்தாவது பக்கத்தில் 37-வது முதல் 39-வது பாடல் வரையிலுமுள்ள பாடல்களை வாசிக்கவும்.

(2) தன்னுடைய புருஷன் தன்னுடைய பூர்வ ஜன்மத்தில் இறந்துவிட்டபிறகு தன்னுடைய பணத்தை ஒரு மனிதனிடம் பாதுகாப்பிற்காக கொடுத்துவைத்துப் பிறகு இந்த மனிதர் இந்தப் பணத்தை ஏமாற்றிவிட்டுத் தானே அநுபவித்த பயனாக இவர் தன்னுடைய மறு ஜன்மத்தில் இந்த ஸ்திரீக்கு இவளுடைய பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்காக இவளை இவர் இந்த ஜன்மத்தில் விவாகஞ் செய்து கொள்ளுகின்றார். இது விஷயமாக 797-வது பக்கத்தில் 11, 12, 13-வது செய்யுள்களைப்பார்க்கவும்.

(3) ஒரு ஏழை ஸதிரீ திக்கற்றவளாகி ஒரு மனிதரிடம் சென்று அவரிடத்தில் வேலைக்காரியாக வேலை செய்வதாக ஒப்புக் கொண்டு இவரிடத்தில் சில காலம் இருந்து பிறகு இவர் வீட்டில் இல்லாத சமயம் பார்த்து இவருடைய பணம், நகைகள் ஆகிய இவைகளை எடுத்துக் கொண்டு ஓடிப் போய் மறைந்து விடவே இவளை இவர் ஒரு விநாயகருடைய கோயிலின் முன்பாகச் சாபித்தார். இதன்பயனாக இவள் தன்னுடைய மறு பிறப்பில் இந்த மனிதருக்குத் தன்னுடைய மறு பிறப்பில் வைப்பாட்டியாக வந்து அமைகிறாள். இது விஷயமாக 1000, 1001, 1002-வது பக்கங்களில் 23, 24, 25, 26-வது செய்யுள்களை வாசிக்கவும்.

(4) தன்னுடைய முன் ஜன்மத்தில் ஒரு விவாகமான ஸ்திரீ உற்சவ காலத்தில் ஒரு கோவிலுக்குத் தன்னுடைய புருஷனுடன் சென்று கடவுளைத் தரிசித்துப் பிறகு கடை வீதிக்குப்போய் ஒரு வியாபாரியினுடைய கடையில் கூட்டம் அதிகமாவிருக்கும்போது மஞ்சள், சீப்பு, குங்குமம் இவைகளை வாங்கிக்கொண்டு இவைகளின் கிரயத்தை இந்த வியாபாரிக்குக் கொடுக்காமல் ஏமாற்றி ஒரு புள்ளிமானைப் போலப் பறந்தோடி மறைந்து போய்விடவே வியாபாரி இவள் பணங்கொடுக்காமல் போய்விட்டதைப் பின்னால் தெரிந்து கொண்டு இவளைத் தேடிப்பார்த்தும் இவள் அகப்படாமல் போய்விடவே இவளை இந்த வியாபாரி சபித்து விட்டதின் பயனாக இவள் அதே ஜன்மத்தில் இவள் வாங்கின வஸ்துக்கள் செலவாகிவிடுவதற்கு முன்னமே தன்னுடைய புருஷனை இழந்து தன்னுடைய மறு ஜன்மத்தில் விதவைத்தன்மையால் கடினமாகத் தண்டிக்கப்பட்டாள். ஒரு ஸ்திரீ விதவையாவதற்கு இப்படிப்பட்ட பாபத்தை அல்லது கெட்ட கர்மத்தை தன்னுடைய முன் ஜன்மத்தில் செய்து விட்டதாக இந்த நாடியில் அடிக்கடியும் நிலையாகவும் ஒரே மாதிரியாகவும் (in a stereo-typed manner) சொல்லியிருக்கின்றது. இவள் செய்த பாபம் ஒரு சிறிய அல்லது அற்பமானதாகத் தோற்றக்கூடும்; ஆனால் இதற்கு விதித்துள்ள தண்டனையானது குற்றத்திற்கு தகுந்தபடியாக வில்லாமல் மிகவும், பெரியதாகவும், கொடுமையானதாகவும் இருப்பதைப்போல தோற்றக் கூடும். ஆனால் இந்த அற்பமானதாகத் தோற்றுகின்ற குற்றத்தைச் செய்யத் தேடிக்கண்டெடுத்த காலமானது கோயிலுக்குப் போய்த் திரும்பிவந்த உடனேயுள்ள தெய்வீக சம்மந்தமான உற்சவகாலமாக விருப்பதால் இந்தச் சிறிய குற்றமும் பெரிய குற்றமாகவே ஆய்விட்டது போலும் தோற்றுகிறது. இதைப் பற்றி (1) 39-வது ஜாதகம், 16, 17, 18-வது செய்யுள்கள், (2) 37-வது ஜாதகம், 14, 15, 16, 17, 18-வது செய்யுள்கள், (3) 787-வது பக்கம் 16, 17, 18, 19-வது செய்யுள்கள், (4) 1014-வது பக்கம் 27-வது செய்யுள், (5) 1079-வது 17-வது செய்யுள், (6) 1215-வது பக்கம் 42-வதுசெய்யுள் ஆகிய இவைகளை வாசிக்கவும்.

(5) தன்னுடைய முன் ஜன்மத்தில் ஒரு மனிதர் தன்னுடைய வீட்டில் மனைப்பாம்பாக நெடு நாளாக வாசஞ்செய்து கொண்டிருந்த ஒரு பாம்பைப் புல்லாங் குழல் மூலமாக வாத்தியத்தை உண்டாக்கி அதனைத் தான் ஒளித்துக்கொண்டிருக்கின்ற விடத்தைவிட்டு வெளியே வரும்படியாக ஏமாற்றி அதனை வாத்தியத்தினால் மயக்கிப் பிறகு அதனை தடியால் அடித்துக் கொன்று அதனை எமலோகத்திற்கு அனுப்பிவிட்ட பாபத்தின் பயனாக இந்த மனிதருக்கு இந்த ஜன்மத்தில் குழந்தைகளில்லாமலும் அல்லது குழந்தைகள் பிறந்து நாசமடையும்படியாகவும் தோஷம் வந்து சம்பவித்து விடுகின்றது. இவ்விதமாக ஜாதகத்தில் ஐந்தாவது பாவத்தில் அல்லது வீட்டில் இராகு அல்லது கேது இருந்தாலும் அல்லது இந்த ஐந்தாவது பாவத்தை இந்தக் கிரகங்கள் பார்த்தாலும், அடிக்கக்கடி பலவிடங்களில் ஒரேமாதிரியாகவும் நிலையாகவும் (in a stereo-typed manner) சொல்லியிருக்கின்றது. இது சம்பந்தமாக (1) 48-ஆவது பக்கம் 26-வது பாடல், (2) 101-வது பக்கம், 23-வது பாடல், (3) 1042-வது பக்கம், 37-வது பாடல்,

(4) 1056-வது பக்கம், 22-வது பாடல், (5) 1057-வது பக்கம், 29-வது பாடல், (6) 1213-வது பக்கம், 34-வது பாடல், (7) 1231-வது பக்கம், 38-ஆவது பாடல், (8) 48-வது பக்கம், 26, 27 ஆம் பாடகள், (9) 43-வது பக்கம் 24-வது பாடல் ஆகிய இவைகளை வாசிக்கவும்.

(6) தன்னுடைய முன் ஜன்மத்தில் ஒரு மனிதர் ஒரு ஸ்திரீயுடன் ஒழுங்கற்ற முறையில் சம்போகஞ் (illicit intercourse) செய்யவே இதனால் இவளுக்குக் கர்ப்பந்தரித்து இந்தக்கர்ப்பத்தை இவர் அழிக்கப் பிரயத்தனப்பட்டு மருந்தை இவளுக்குக் கொடுக்கவே இவள் இவருடைய நல்ல எண்ணத்தினாலோ அல்லது கெட்ட எண்ணத்தினாலோ இறந்துவிட்டதால் இந்தப் பாபத்தின் பயனாக இவருக்குத் தன்னுடைய இந்த ஜன்மத்தில் மனைவி மக்கள் இறந்து இவர் இதனால் கஷ்டத்தை அனுபவிக்கின்றார். இது சம்மந்தமாக (1) 1131-வது பக்கம், 24-வது செய்யுள், (2) 5-வது பக்கம், 14-வது பாடல், (3) 20-வது பக்கம், 26, 27-வது பாடல்கள், (4) 22-வது பக்கம், 26-வது பாடல், (5) 643-வது பக்கம், 21, 22-வது பாடல்கள், (6) 714-வது பக்கம், 19-வது பாடல், (7) 870-வது பக்கம், 21-வது பாடல், (8) 1133-வது பக்கம், 20-வது பாடல் ஆகிய இவைகளை வாசிக்கவும்.

(7) தன்னுடைய முன் ஜன்மத்தில் ஒரு மனிதர் தன்னுடைய பிதுரார்ஜித சொத்தைத் தன்னுடைய சகோதரர்களுடன் பாகப்பிரிவினை செய்து கொள்ளும்போது தன்னுடைய சகோதரர்களை மோசஞ் செய்து விட்டதோஷத்தின் பயனாக இவர் இந்த ஜன்மத்தில் பிதுரார்ஜிதமும் சகோதரர்களும் இல்லாமல் தண்டிக்கப்படுகின்றார். இதுவிஷயமாக (1) 611-வது பக்கம், 23-வது பாடல், (2) 1065-வது பக்கம், 9-வது பாடல் ஆகிய இவைகளை வாசிக்கவும்.

(8) தன்னுடைய முன் ஜன்மத்தில் ஒரு மனிதர் இராஜாங்கத்தில் ஒரு பொறுப்புள்ள அதிகாரமான வேலையில் அதிகாரியாக இருந்து கொண்டு நீதியைச் செலுத்தவேண்டிய நிலையில் இருந்தபோது, ஒரு ஸ்திரீயை ஒரு புருஷன் பலாத்காரமாக அல்லோகலஞ் செய்து இவளுடைய கற்பை அழித்ததனால் இவள் தன்னுடைய சகோதரர்களிடஞ் சொல்லி இவர்களுடைய உதவியுடன் இந்த அதிகாரியிடம் பிராது கொடுத்தபோது, இந்த அதிகாரி குற்றஞ் செய்தவரை வரவழைத்து விசாரித்து நடந்தது உண்மைதான் என்று தெரிந்துகொண்டு, குற்றவாளியிடம் லஞ்சமாகக் (கைக்கூலியாக)ப் பணத்தை வாங்கிக்கொண்டு இந்த ஸ்திரீயும் இவளுடைய சகோதரர்களும் அதிசயிக்கும்படியாக, இவளுடைய பேரிலேயே குற்றதைச் சாட்டிய தோஷத்தின் பலனாக இந்த அதிகாரியான இந்த மனிதர் தன்னுடைய இந்த ஜன்மத்தில் சகோதரிகள், சகோதரர்கள் இல்லாமல் தண்டிக்கப்படுகின்றார். இது விஷயமாக 572-வது பக்கம், 35, 36, 37, 38-வது பாடல்கள்; (2) 725-வது பக்கம், 15-வது பாடல் (3) 1184-வது பக்கம், 17, 18-வது பாடல்கள்; (4) 1211-வது பக்கம், 26-வது பாடல், ஆகிய இவைகளை வாசிக்கவும்.

(9) ஒரு நபர் (ஆண் அல்லது பெண்) தன்னுடைய முன் ஜன்மத்தில் தன்னிடம் ஒரு ஏழை ஸ்திரீ வந்து தன்னுடைய பசியால் துன்பப்படுகின்ற குழந்தைக்குச் சாதங் கொடு என்று கேட்டபோது இந்த ஏழை ஸ்திரீக்கு சாதத்தை கொடுக்க மறுத்து விட்டதோஷத்தின் பயனாகவும், அல்லது ஒரு தாயில்லாத கைக் குழந்தைக்காகச் சுத்தான கலப்பில்லாத பசும் பாலை விற்க மறுத்துவிட்ட பாவத்தின் பலனாகவும் அல்லது பசும்பாலுடன ஜலத்தைக் கலந்தோ அல்லதுமட்டமான அல்லது கீழ்த்தரமான இதற விதமான பாலைக்கலந்தோ ஏமாற்றின பாபத்தின் பயனாகவும் இந்த நபர் முன் ஜன்மத்தின் கடைசி காலத்தில் தன்னுடைய குழந்தைகளை இழந்தும் தன்னுடை இந்த ஜன்மத்தில் குழந்தைகள் இல்லாமலும் அல்லது பிறந்து இறந்தும் போவதால் தண்டிக்கப்படுகின்றார். இது விஷயமாக (1) 1056-ஆவது பக்கம், 25-ஆவது பாடல், (2) 1213-ஆவது பக்கம் 32-ஆவது பாடல், (3) 838-ஆவது பக்கம், 20, 21-ஆவது பாடல்கள், (4) 907-ஆவது பக்கம், 19-ஆவது பாடல் ஆகிய இவைகளை வாசிக்கவும்.

(10) ஒரு மனிதர் தன்னுடைய முன் ஜன்மத்தில் ஒரு சாதுக்கு அல்லது பரதேசிக்கு அல்லது சந்நியாசிக்கு சாப்பாடு அல்லது இரவில் தங்கியிருந்து போவதற்காக இடம் கொடுக்காமல் இவரிடத்தில் இவருடைய மனம் புண்படும்படியாக் கெட்ட விதத்தில் இந்த மனிதர் நடந்து கொண்டதால் இவரை இவர் சபிக்கவே இந்தச் சாபத்தின் பயனாக இந்த மனிதர் தன்னுடைய இந்த ஜன்மத்தில் மிகவும் அதிகமான கஷ்டங்களை அனுபவிக்கின்றார். இது விஷயமாக (1) 59 ஆவது பக்கம், 19 ஆவது பாடல்; (2) 1055-ஆவது பக்கம், 19, 20, 21-ஆவது பாடல்கள் ஆகிய இவைகளை வாசிக்கவும்.

(11) ஒரு ஸ்திரீ தன்னுடைய பூர்வ ஜன்மத்தில் தன்னுடைய புருஷனுடைய சகோதரனுடைய மனைவியின் பேரில் பொய்யாக ஒரு குற்றத்தைச் சாட்டின பாபத்தின் பயனாக இவள் இந்த ஜன்மத்தில் சகோதரிகள் இல்லாமலும் அல்லது இவர்களை இழந்தும் போவதால் தண்டிக்கப்படுகின்றாள். இது விஷயமாக (1) 751-ஆவது பக்கம், 21-ஆவது பாடல்; (2) 1084-ஆவது பக்கம், 34-ஆவது பாடல் ஆகிய இவைகளை வாசிக்கவும்.

(12) ஒரு மனிதர் தன்னுடைய ஒரு ஜன்மத்தில் புராணங்களையாவது வேதங்களையாவது வாசிக்காமலும் ஓதாமலும் இருந்ததால் அல்லது ஒரு ஸ்திரீ தன்னுடைய ஒரு ஜன்மத்தில் விரதங்களையும், தெய்வீகசம்மந்தமான சடங்குகளையும் கிரிகைகளையும் அலட்சியஞ் செய்து விட்டாலும் அல்லது சரிவர நடத்தாவிட்டாலும், இந்த நபர் தன்னுடை அடுத்த பிறப்பில் தாழ்ந்த குலத்தில்போய் ஜனிக்கும்படியாக நேரிட்டுவிடுகிறது. இது விஷயமாக 1083-ஆவது பக்கத்தில் 33-ஆவது பாடலைப் பார்க்கவும்.

(13) ஒரு ஸ்திரீ தன்னுடைய பூர்வ ஜன்மத்தில் கர்வத்தினலாவது அல்லது இருமாப்பினலாவது தன்னுடைய வீட்டின் பிழக்கடையிலுள்ள மரத்தின் பேரில் வாசஞ் செய்து கொண்டிருந்த ஒரு முனியேஸ்வரரைத் தொழாமலும் அல்லது இவருக்குப் பூஜைபோடாமலும் இருந்த தோஷத்

தின் பயனாக இந்த ஜன்மத்தில் கர்ப்பப்பிரஷ்டத்தினாலாவது, அல்லது குழந்தைகள் நஷ்டமாகி போவதினாலாவது அல்லது இந்த முனீயேஸ்வரரே இவனைப் பிசாசுபோலப் பிடித்துக்கொள்வதினாலாவது தண்டிக்கப்படு கின்றான். இது சம்மந்தமாக (1) 688-ஆவது பக்கம், 25, 26, 27, 28-ஆவது பாடல்களையும், (2) 738-ஆவது பக்கம் 20-ஆவது பாடல் (3) 907-ஆவது பக்கம், 18-ஆவது பாடல் ஆகிய இவைகளை வாசிக்கவும்.

(13) (a) ஒரு மனிதர் தன்னுடைய முன் ஜன்மத்தில் வெகு நாளாக ஒரு முனியேஸ்வரர் வாசஞ் செய்து கொண்டிருந்த ஒரு மரத்தை வெட்டிவிட்டு இதனால் இவருடைய வாசஸ்தலத்தை இவர் இழந்துவிடும்படி செய்த பாபத்தின் பயனாக இந்த மனிதர் தன்னுடைய இந்த ஜன்மத்தில் வீடில்லாமலும் குழந்தைகள் இல்லாமலும் இருக்கும்படியாகத் தண்டிக்கப்படுகின்றார். இது விஷயமாக ஆவது பக்கத்தில் ஆவது பாடலைப்பார்க்கவும்.

(14) ஒரு நபர் தன்னுடைய முன் ஜன்மத்தில் தன்னுடைய வீட்டின் எறவாணத்தில் ஒரு ஊர்க்குருவி கூண்டு கட்டி அதில் குஞ்சு பொறித்து இக்குஞ்சுகளுக்கு இரக்கை பூராகவும் முளையாமல் இருக்கும்போது இக் கூண்டை இக் குஞ்சுகளுடன் அழித்துவிடவே இந்தப் பாபத்தின் பயனாக இவர் தன்னுடைய இந்த ஜன்மத்தில் தன்னுடைய குழந்தைகள் இறநது இதனால் தண்டிக்கப்படுகின்றார். இது விஷயமாக (1) 739-ஆவது பக்கம், 22 ஆவது பாடல்; (2) 750-ஆவது பக்கம், 20 ஆவது பாடல் ஆகிய இவைகளை வாசிக்கவும்.

(15) ஒரு மனிதர் தன்னுடைய பூர்வ ஜன்மத்தில் தன்னுடைய தாயாரின் பேரில் தன்னுடைய மனைவி செய்து கொண்ட பிரயாதின பேரில் தன்னுடைய தாயாரைக் காலால் எட்டி உதைத்தப் பாபத்தின் பயனாக இவர் தன்னுடைய இந்த ஜன்மத்தில் உதைத்தகால் நொண்டியாகப் போகும் படியாய்த் தண்டிக்கப்படுகின்றார். இது சம்மந்தமாக 790-ஆவது பக்கம், 28, 29, 30-ஆவது செய்யுள்கள்; (2) 840-ஆவது பக்கம், 25, 28-ஆவது செய்யுள்கள் ஆகிய இவைகளை வாசிக்கவும்.

(16) ஒரு மனிதர் தன்னுடைய முன் ஜன்மத்தில் வட்டி வியாபாரஞ் செய்து கொண்டு ஏழைகள் விஷயத்தில் பொய்யான கணக்கை எழுதி இவர்களை ஏமாற்றி விட்டப்பாவத்தின் பயனாக இவர் அந்த ஜன்மத்திலேயே பொருள்களை எல்லாம் இழந்து இந்த ஜன்மத்தில் கூட அதிக கஷ்டங்களை ஒருவர் கீழ் இருந்து அனுபவிக்கும்படியாய்த் தண்டிக்கப்பட்டார். இது விஷயமாக 60-ஆவது பக்கத்தில் 21, 22, 23, 24-ஆவது செய்யுள்களை வாசிக்கவும்.

(17) ஒரு மனிதர் தன்னுடைய முன் ஜன்மத்தில் ஒரு பிராமணருடன் சிநேகஞ் செய்து கொண்டு இவருக்குப் பணத்தைக் கடனாகக் கொடுத்து ஒரு பத்திரத்தை எழுதி வாங்கிக்கொண்டு பிறகு இவருடைய வீட்டிற்குப் போய்வந்து கொண்டிருக்கையில் ஒருநாள் இவருடைய மனைவியின் பேரில் காம ஆசையை, மையலை உடையவராகி இனிமையான வார்த்தைகளைச் சொல்லி அழைக்கவே இந்த ஸ்திரீ இசையாமல் இருந்துவிடவே இந்த மனிதர் கோபங் கொண்டு கோர்ட்டில் பத்திரத்தைத் தாக்கல் செய்து இந்த

பிராமணருடைய வீடு சொத்து எல்லாவற்றையும் அபகரித்துக் கொண்டு பிராமணரை வீட்டை விட்டு ஓட்டிவிடவே இந்த பிராமண ஸ்திரீ இதன் பேரில் சாபங்கொடுத்துவிடவே இந்தச் சாபத்தின் பயனாக இந்த மனிதர் தன்னுடைய முன் ஜன்மத்தின் கடைசிகாலத்தில் தன்னுடைய செல்வங்கள் எல்லாம் அழிந்து கஷ்டப்பட்டது மன்றி இந்த ஜன்மத்தில் கூட இந்த மனிதர் அநேக கஷ்டங்களை அடைந்து, திரிந்து அலைந்து மனைவியால் சுகத்தை அடையாமல் காசநோய் ஏற்பட்டு அந்நிய தேசத்திற்குப் போய்விட்டார். இவ்விதமாக இவர் தண்டிக்கப்பட்டார். இது விஷயமாக 1066, 1067, 1068-ஆவது பக்கங்களில் 12, 13, 14, 15, 16, 17-ஆவது பாடல்களைவாசிக்கவும்.

(18) ஒரு மனிதர் தன்னுடைய முன் ஜன்மத்தில் ஏழைகளுக்குக் கொஞ்சமாகப் பணத்தைக் கடனாகக் கொடுத்து இவர்களுடைய பூமிகளை அபகரித்துக் கொண்ட பாபத்தின் பயனாக இவர் இந்த ஜன்மத்தில் வீடு இல்லாமலும் வனவாசமாக விருந்து வாழவும் நேரிடும்படியாகத் தண்டிக் கப்பட்டார். இது விஷயமாக 916 ஆவது பக்கத்தில் 7, 8, 9, 10-ஆவது பாடல்களையும் வாசிக்கவும்.

(19) ஒரு ஸ்திரீ தன்னுடைய பூர்வ ஜன்மத்தில் ஒரு பூனையை வெந்நீரில் போட்டு அதைத் துன்பப்படுத்திய பாபத்தின் பயனாக இந்த ஜன்மத்தில் இவருடைய உடம்பெல்லாம் வெண்மேக நோய் உண்டாகிவிட்டது. இதன் விஷயமாக 88-ஆவது பக்கத்திலுள்ள 13, 14-ஆவது செய்யுள்களை வாசிக்கவும்.

(20) ஒரு மனிதர் தன்னுடைய முன் ஜன்மத்தில் தன்னுடைய கிராமத்திலுள்ள ஒரு நதியின் அருகில் இருந்த ஒரு அரசமரத்தின் கீழ், இங்கு விநாயகர் கோயிலும் நாகப் பிரதிஷ்டையுங்கூட இருக்கின்றன என்று கவனியாமல் இவைகளை அலட்சியஞ் செய்துவிட்டு, ஒரு விதவை ஸ்திரீயுடன் இரவில் சம்போகஞ் செய்தார். இதனால் இவளுக்கு ஏற்பட்ட கர்ப்பத்தையும் அழித்து விட்டு இவளையும் சாகும்படிச் செய்துவிட்டார். இந்தப் பாவத்தின் பயனாக இவருக்குப் அந்த ஜன்மத்திலேயே புத்திர தோஷம் ஏற்பட்டுவிட்டது. இவ்விதமாக இவர் தண்டிக்கப்பட்டார். இது விஷயமாக 101-ஆவது பக்கத்திலுள்ள 21, 22, 23-ஆவது செய்யுள்களை வாசிக்கவும்.

(21) ஒரு மனிதர் தன்னுடைய முன் ஜன்மத்தில் ஒரு பிராமணரின் சிநேகிதராக விருந்து பணம் விஷயத்தில் பொய் கணக்கு எழுதி இந்தப் பிராமணரைக் கஷ்டப்படுத்திவிடவே இந்தப் பிராமணர் சாபங்கொடுக்கவே இந்தச் சாபத்தின் பயனாக இந்த மனிதர் இந்த ஜன்மத்தில் தன்னுடைய வீட்டை விட்டு நீங்கி எந்த வேலையைச் செய்த போதிலும் அது கத்தரித்தப் போய் கஷ்டத்தை யனுபவித்து இரண்டு மனைவிகளையும் அடைந்து விட்டார். இது விஷயமாக 1012 ஆவது பக்கத்திலுள்ள 19, 20, 21, 22 ஆவது செய்யுள்களை வாசிக்கவும்.

(22) ஒரு மனிதர் தன்னுடைய முன் ஜன்மத்தில் ஏழைகள் விஷயத்தில் கணக்கில் மோசஞ் செய்து இவர்களுக்குத் துன்பத்தை விளைவித்தப் பாபத்தின் பயனாக இந்த ஏழைகள் இந்த மனிதருக்கு இந்த ஜன்மத்தில்

குழந்தைகளாகப் பிறந்து இவருக்கு அதிக மனக்கவலேயையும கஷ்டத்தையும் விளைவித்து விட்டார்கள். இது விஷயமாக 39 ஆவது ஜாதகத்தின் 28 ஆவது பாடலே வாசிக்கவும்.

(23) ஒரு மனிதன் தன்னுடைய முன் ஜன்மத்தில் ஒரு மாரியம்மன் கோயிலுக்கு இவருடைய தகப்பனர் இரண்டு விளக்குகளே ஏற்றி வைத்துத் தருமஞ் செய்து வந்ததை ஒரு விளக்கை நிறுத்திவிட்டு தர்மத்தைப் பங்கப் படுத்தின தோஷத்தின் பயனுக இந்த மனிதருக்கு இந்த ஜன்மத்தில் ஒரு கண் ஊனமாகப் போய்விட்டது. இவ்விதமாக இவர் தண்டிக்கப்பட்டார். இது விஷயமாக 38-ஆவது ஜாதகத்தின் 27,29, ஆவது-செய்யுள்களே வாசிக்கவும்.

(24) ஒரு மனிதர் தன்னுடைய முன் ஜன்மத்தில் ஒரு ஏழை விவாகஞ் செய்து கொள்வதற்காக ஒரு மங்கலியத்தை அல்லது பணத்தைக் கொடுக்கின்றேன் என்று சொல்லி விவாகம் நெறுங்கின காலத்தில் இந்த ஏழையை ஏமாற்றி விட்ட தோஷத்தின் பயனுக இந்த மனிதர் மாங்கல்யம் கொடுக்காததால் முன் ஜன்மத்தின் கடைசி காலத்தில் தன் மனேவியை இழந்ததுமன்றி மாங்கல்யமும் பணமும், கொடுக்காததால் இந்த ஜன்மத்தில் இரண்டு மனேவியரை அடைய நேரிட்டு விட்டது. இது விஷயமாக 50 ஆவது ஜாதகத்தில் 26 ஆவது பாடல், 643, 644 ஆவது பக்கத்திலுள்ள 23, 24, 25, 26 ஆவது பாடல்களேயும் வாசிக்கவும்.

(25) ஒரு மனிதர் தன்னுடைய முன் ஜன்மத்தில், சிவ பெருமானேப் பூஜை செய்வதற்காக ஒரு பரதேசி புஷ்பங்களேக் கொண்டு போகும்போது இவரை வழி மறித்து இந்தப் புஷ்பங்களேப் பிடுங்கிக்கொண்டு போய்த் தன்னுடைய மனேவிக்குக் கொடுத்து இவளுடன் சம்போகஞ் செய்த பாவத்தின் பயனுக முன் ஜன்மத்தின் கடைசி காலத்தில் இவர் தன் பாரியை இழந்துவிட்டதுமன்றி இந்த ஜன்மத்தில் கூட இவருக்கு முதல் மனேவி இறந்து இரண்டாவது மனேவி நேரிட்டாள். இவ்விதமாக இவர் தண்டிக்கப் பட்டார். இது விஷயமாக 50 ஆவது ஜாதகத்தில் 28, 30, ஆவது செய்யுள்களே வாசிக்கவும். மேலும் இவ்விதமாகவே மல்ர்களே வேசிக்குக் கொடுத்து விட்ட தோஷத்தினல் இரண்டு மனேவிமார்கள் ஏற்பட்டுவிட்ட விஷயமாக 611 ஆவது பக்கத்திலுள்ள 22, 23 25 ஆவது செய்யுள்களேயும் வாசிக்கவும்,

(26) ஒரு மனிதர் தன்னுடைய முன் ஜன்மத்தில் தெய்வங்களுக்காகச் சுற்றி விட்டுவிடப்பட்ட ஒரு எருதை ஏரில் பூட்டி உழுத பாபத்தின் பயனுக இவருக்குத் தன்னுடைய இந்த ஜமைத்தில் புத்திர தோஷமும் களத்திர தோஷமும் ஏற்பட இது பலகாரணங்களில் ஒரு காரணமாகச் சம்பவித்து விட்டது. இது விஷயமாக 571, 572, ஆவது பக்கங்களிலுள்ள 31, 34 ஆவது செய்யுள்களே வாசிக்கவும்.

(27) ஒரு ஸ்திரீ தன்னுடைய முன் ஜன்மத்தில் கன்றுக்குட்டிக்காகப் பாலே விடாமல் எல்லாப்பாலேயும் கறந்து விட்டதோஷத்தின் பயனுக இவள் தன்னுடைய முன் ஜன்மத்தில் கடைசி காலத்தில் மனத்தில் துன்பத்தையடைந்து கஷ்டங்களேயும் அநுபவிக்க நேரிட்டு விட்டது. இது விஷயமாக 907 ஆவது பக்கத்திலுள்ள 19 ஆவது பாடலேப் பார்க்கவும்.

(28) ஒரு மனிதர் தன்னுடைய முன் ஜன்மத்தில் ஒரு ஸ்திரீயின் பேரில் குற்றமான வார்த்தைகளேச் சொன்ன பாபத்தின் பயனுக இவர் இந்த ஜன்மத்தில் சகோதரியில்லாதவராகத் தண்டிக்கப்பட்டார். இது விஷயமாக 941 ஆவது பக்கத்திலுள்ள 7, 8, 9 ஆவது செய்யுள்களே வாசிக்கவும்.

(29) ஒரு ஸ்திரீ தன்னுடைய முன் ஜன்மத்தில் ஒரு போஜன பந்தியில் பரிமாறுதலில் வஞ்சனே செய்த பாபத்தின் பயனுக இவள் இந்த ஜன்மத்தில் புருஷனுடைய சுகமும் மற்ற சௌசியங்களும் இல்லாதவளாகத் தண்டிக்கப்பட்டாள். இது விஷயமாக 1080 ஆவது பக்கத்திலுள்ள 20, 21, 22 ஆவது செய்யுள்களே வாசிக்கவும்.

(30) ஒரு மனிதர் தன்னுடைய முன் ஜன்மத்தில் அரசாங்கத்தார் முன்னிலேயில் (கோர்ட்டில்) பொய் சொல்லிய பாபத்தின் பயனுக இவர் இந்த ஜன்மத்தில் புத்திர தோஷத்தையும் மனேவி தோஷத்தையும் ஆண் சகோதரங்களின் தோஷத்தை அடையும்படியாகத் தண்டிக்கப்பட்டார். இது விஷயமாக 1163, 1164 ஆவது பக்கங்களிலுள்ள 30, 31, 32 ஆவது செய்யுள்களே வாசிக்கவும்.

இவ்விதமாக இந்த நாடி சாஸ்திரம் இதில் உபயோகப்படுத்தியிருக்கும் கர்மாவைப் பற்றிய செய்வகையை (Technique of Karma) எடுத்துக்காட்டியிருக்கின்றது. சில சமயங்களில் ஒருவருடைய பூர்வ ஜன்மத்தின் பாபமானது இவரைப் பல பின் ஜன்மங்களில் உபத்திரவப்படுத்துகின்றது.

இந்த நாடி சாஸ்திரம் மதம் சம்மந்தமாகவும், நீதி சாஸ்திரம் அல்லது தர்மசாஸ்திரம் விஷயமாகவும் போதனுவிதிகளேப் புகட்டுவதில் அதிகமாகப் பயன்படக்கூடியதாக விருக்கின்றது. இதனே வாசிப்பவர்களுக்கு இது மிகவும் நல்ல மத சம்மந்தமான அல்லது நல்ல நடவடிக்கை, ஒழுக்கம், நீதிநூல் ஆகிய இவைகள் சம்மந்தமான பாடங்களேப் போதிக்கக்கூடியதாக விருக்கின்றது. ஒருவர் கடவுளேத் தொழுது இவருக்குக் கோயிலில் தொண்டு செய்து கொண்டும், சந்நியாசிகளேயும், கடவுளின் சிஷ்யர்களேயும் அடியர்களேயும், தெய்வீகச் சம்மந்தமான மனப்பான்மையை யுடையவர்களேயும் போஷித்தும், அல்லது நல்ல வாழ்க்கையை நடத்திக் கொண்டும் பொய் பேசாமல் உண்மையையே அநுசரித்துக்கொண்டும், தரும காரியங்களேச் செய்து கொண்டும், ஜனங்களுக்குச் சாப்பாடு போடுதல் முதலிய தொண்டுகளேயும் சேவைகளேயும் செய்து கொண்டு வந்தால் இவர் இந்த ஜன்மத்திலாவது அல்லது மறு பிறப்பிலாவது சகல சம்பத்துக்களேயும், பாக்கியங்களேயும், சுகங்களேயும், போகங்களேயும் அநுபவித்தே தீர்வார் என்ற ஒரு நம்பிக்கையை இதை வாசிப்பவருக்குப் புகட்டி மனத்தில் பதியவைக்கின்றது. இந்தச் சாஸ்திரத்தின் நோக்கத்தையும் கருத்தையும், உபயோகத்தையும் பற்றிச் சப்தரிஷிகளே பகிரங்கமாகவும் வெளிப்படையாகவும் இந் நாடியிலேயே கீழ்கண்ட செய்யுள்களில் சொல்லியிருக்கின்றுர்கள்.

நெ. 12 ஆவது ஜாதகத்தின் 31, 32 ஆவது செய்யுள்கள்.

31. " சொற்பிதை நம்பி பாலன் சுகமுடன் செய்வானுகில்
விற்புரு வத்தாய்க் கேளும் இளமாரக் கண்டன் போலே "

32. "ஆயுளும் விருத்தியாகி அஷ்ட ஐச்வரிய முண்டாய்
நேயமாய் வாழ்வா னென்று நிகழ்த்திய மொழி குன்ருது
நாயமாம் உலகோர்க் கிந்நூல் வெளியிட யாவும் சொன்னேம்
மாயமாய் நம்பினேர்க்குக் கைலாயம் சாட்சியாமே"

சப்தரிஷிகள் சொல்லியவைகளை ஜனங்கள் நம்பி இவைகளை அநுஷ்டிப்பார்களேயானுல் அல்லது இவைகள் பிரகாரம் தங்களுடைய வாணுட்களைக் கழிப்பார்களேயானுல் இவர்களுக்கு உண்மையாகவே கைலாய பதவி கிடைக்கும் என்பது ஒரு சித்தாந்தமாகும். உலகத்தில் சில விஷயங்களைக் காரணங்களைக் காட்டி மனிதரால் ருசுவு செய்யக்கூடும் ; ஆனுல் சில விஷயங்களை இவ்விதமாக ருசுவு செய்யமுடியாது, ஆகையால் இப்படிப்பட்ட விஷயங்களில் நம்பிக்கை (Faith)யைக் கொண்டே கடைதேர வேண்டும் என்பதும் ஒரு சித்தாந்தமாகும். ஆகையால் இங்கு சப்தரிஷிகள் சொல்லிய அருள் வாக்கை நாம் நம்புவது நமக்கு நன்மையைப் பயக்கும் என்பதும் ஒரு சிந்தாந்தமேயாகும்.

பிரமலிபி, தெய்வ நியமம், தலைவிதி (Fate or Destiny) என்பது எவராலும் மாற்றக்கூடாத தன்மையையுடைய தல்லவென்றும், ஒரு மனிதர் தன்னுடைய சுவேச்சை, இச்சா சக்தி பிரயோகம் (Freewill or Volition) என்பதனுல் தலைவிதியை மாற்றி விடுஞ் சக்தியையுடையவர் என்றும் இந்த நாடி எடுத்துக் காட்டுகின்றதாகும். இந்த நாடி அநேக பாபங்களுக்குப் பரிகாரங்களை எடுத்துக் காட்டியிருக்கின்றது. தன்னுடைய வாணுளில் நடக்கப்போகின்ற சில விஷயங்களின் போக்கையும் கெடுதிகளையும் ஒரு மனிதர் மாற்றி விடக்கூடும், விலக்கிவிடக்கூடும் என்றும் இந்த நாடி தெரிவித்திருக்கின்றது. இது சம்பந்தமாக (1) 614 ஆவது பக்கம் 34 ஆவது செய்யுள், (2) 1041, 1043 ஆவது பக்கங்களிலுள்ள, 34, 42 ஆவது பாடல்களையும், (3) 21 ஆவது பக்கம், 29 ஆவது செய்யுளையும் வாசிக்கவும். சில விஷயங்களில் சில பாபங்கள் அல்லது தோஷங்கள் எவ்வித பரிகாரத்தாலும் மனித செயலாலும், சாந்தப்படுத்த முடியாதபடியாகவும் விலக்கப்பட முடியாதபடியாகவும் குறைக்கப்படமுடியாததாகவும் அவ்வளவு வலிவானவைகளாக விருக்கின்றன என்றும் இவைகளின் பயனை மனிதன் அநுபவித்தே தீரவேண்டுமென்றும் பகிரங்கமாகவும் வெளிப்படையாகவும் இந்த நாடி சொல்லியிருக்கின்றது. இது விஷயமாக 1134-ஆவது பக்கம் 24 ஆவது செய்யுளை வாசிக்கவும். (என் கண்களுக்கு இது வரையிலும் புலப்பட்ட வரையிலும்) ஒரு மனிதர் தன்னுடைய முன்ஜன்மத்தில் தான் செய்த பாபங்களுக்குகாகப் பரிகாரங்களையும் சாந்திகளையும் (expiatory ceremonies) செய்யவேண்டும் என்று இந்த நாடி சொல்லியிருக்கின்றதே தவிர ஒரு குறித்த கிரகத்தினுடைய கோபத்தைத் தணித்து அதைத் தனக்கு அநுக்கூலமாக விருக்கும்படியாக அதனுடையகோபத்தைத் தணிக்கவோ அல்லது அதைத் திருப்தி செய்து சாந்ததப்படுத்துவோ கிரிகைளையும் சடங்குகளையும் (Propitiatory Ceremonies) சொல்லவேயில்லை. இந்தக் கிரகத்தைத் திருப்த்தி செய்ய இவ்விதமான தான்ய வகையராவை பருப்பு வகையராவை (Grains cr Pulses) பலிதானத்தை (Sacrifice)கொடுக்கவேண்டும் என்று இந்த நாடி சொல்லவில்லை. தான்ய வகையராக்களைப்பற்றி ஒரு ஜோதிடர் தன்னை வந்து பரிகாரங்கள்விஷயமாகக கேட்கின்றவர்களுக்குச் சொல்லுவது பெரும்பாலும் சகஜமாகவிருந்து வருகின்றது. ஒரு கோவிலிலுள்ள நவக்கிரக பீடத்தை இத்தனைதடவை சுற்றிவரவேண்டும் என்று ஒரு ஜோதிடர் சொல்லுவதுபோல இந்தநாடி நவக்கிரக சாந்தியைப்பற்றிச் சொல்லவில்லை.இவைகள் எல்லாம் கிரகங்கள் தங்களுடைய சக்திகளை ஒரு மனிதர் பேரில் செலுத்தி இவரை ஆட்டிவைக்கின்றனவா அல்லது நமக்குத்தெரியாத புரியாத சில கடவுள்களின் அல்லது சக்திகளின் (Unknown Gods or Powers) காரகர்கள் அல்லது செய்பவர்கள், அல்லது பிரதி புருஷர்கள் (Agents) ஆகவே மாத்திரம் நடந்துகொண்டு பலாபலன்களைத் தாங்களே உண்டு பண்ணுமற் இப்பலாபலன்கள் இவ்விதமானவை இவ்விதமானவை என்று மாத்திரம் எடுத்துக் காட்டுகின்றனவா என்று தொல்லையை அல்லது வருத்தத்தை உண்டாக்குகின்ற பிரச்னை (Vexed Question) யைப்பற்றிக் கொஞ்சம் தெரிவிக்கின்றன. இந்தப் பிரச்னை விஷயமாய் பலபத்திர ஜோதிடாசிரியர் என்பவர் தன்னுடைய "ஹோரா ரத்தினம்" என்ற சமஸ்கிருதபாஷையிலுள்ள ஜோதிடக் கிரந்தத்தில் கூடிய மட்டும் விஸ்தாரமாகச் சொல்லியிருக்கின்றார். இந்த நாடி, கிரகங்கள் பலாபலன்களை காட்டுகின்றன, தெரிவிக்கின்றனவே தவிர பலா பலன்களைத் தாங்களே உண்டு பண்ணுவது கிடையாது என்றே தெரிவிக்கின்றது.

மேலும் 93-ஆவது நெம்பருள்ள ஜாதகத்தில் 1092-ஆவது பக்கத்தில் உள்ள மூன்ருவது செய்யுளிலிருந்து பின் வரும் விஷயம் தெரிவதைப் போலத் தோற்றுகின்றது. ஒரு ஜோதிடர் தெய்வீக சம்மந்தமான ஒரு விடத்தில் அல்லது தன்மையில் இருந்துகொண்டு Religi. (ous atmosphere) தெய்வத்தின் அருளால் (devine grace) அல்லது ஒரு தேவதை அல்லது ஒரு கடவுளின் பார்வையின் கீழ் (under the aegis of some God or Goddess) அல்லது ஒரு ரக்ஷணைக் கர்த்தாவாகவிருக்கின்ற தெய்வ பலத்துடனுவது (Inspiration of patron or guardian sprit) பலா பலன்களைச் சொல்லவேண்டும். ஒரு மனிதருடைய வாணுளில் சம்பவிக்கப் போகின்ற ஒரு விஷயத்தையோ அல்லது சம்பவத்தையோபற்றி முந்தியே ஜோதிடத்தின் மூலமாகச் சொல்லவேண்டுமானுல் அநேக ஜோதிட அம்சங்களையும் (several astrological factors or points) கவனித்து ஆராய்ச்சி செய்யவேணும். இவ்விதமாக ஆராய்ச்சி செய்வது ஒரு ஜோதிட நிபுணருக்குக் கூட மிகவும் கஷ்டமான திகைப்பிக்கும்படியான சாஸ்திரமாக (a very (difficult and bewildering system of knowledge) ஜோதிட சாஸ்திரம் இருக்கின்றதென்று நான் முன்னமே மேலே ஒரு விடத்தில் ஒரு பகுதியில் (a paragraph) சொல்லியிருக்கின்றேன். சில சமயங்களில் ஜாதகருடைய ஆயுள் மனைவிமார்களின் எண்ணிக்கை, விவாக காலங்கள், ஹிந்துக்கள் மிகவும் முக்கியமானதாகப் பாராட்டி வருகின்ற இறந்தவருடைய கர்ம காரியங்களை (funeral obsequies) செய்ய புத்திரன் உண்டா இல்லையா என்பது, ஆகிய இவ் விஷயங்களைப்பற்றிய பிரச்னைகள் (questions) மிகவும் அனுபவமுள்ள, அல்லது நிபுணராகவுள்ள ஜோதிட

சாஸ்திரிக்குகூட மிகவும் கஷ்டமான அல்லது திகைக்கும்படியாகச் செய்கின்ற (baffling) பிரச்னைகளாக நேரிட்டுவிடுகின்றன. இப்படிப்பட்ட பிரச்னைகள் சப்த ரிஷிகளுக்குக் கூட சில சமயங்களில் மிகவும் கஷ்டத்தையும் கலக்கத்தையும் உண்டுபண்ணுகின்ற பிரச்னைகளாக நேரிட்டுவிடுகின்றன. ஆகையால் பல ரிஷிகள் இந்த நாடியில் பலவிதமான அபிப்பிராயங்களைத் தங்கள் தங்களுடைய அபிப்பிராயங்களாகத் தெரிவித்து ஒருவருடன் ஒருவர் வாதாட்டஞ்செய்ய வேண்டியதாக நேரிட்டுவிடுகிறது. இப்படிப்பட்ட அசந்தர்ப்பமான சமயத்தில் தலைமையை வகித்துள்ள பார்வதியம்மையார் இந்த வாதாட்டத்தில் கலந்து கொண்டு தன்னுடைய அபிப்பிராயத்தை முடிவு தீர்மானமாகச் சொல்ல நேரிட்டுவிடுகின்றது. இது விஷயமாக (1) 1129-ஆவது பக்கத்தில் 15, 16-ஆவது பாடல்கள் (2) 1146-ஆவது பக்கங்களில் 18, 19, 20-ஆவது பாடல்கள் (3) 1262-ஆவது பக்கத்தில் 25, 26-ஆவது பாடல்கள், (4) 1041, 1042, 1043-ஆவது பக்கங்களில் 34 முதல் 42 வரையுள்ள பாடல்கள், (5) 1054, 1055, 1056, 1057-ஆவது பக்கங்களில் 16 முதல் 29 வரையுள்ள பாடல்கள், (6) ரிஷிகளினுடைய வாதத்தில் பார்வதியம்மையார் பிரவேசித்து கலந்து கொண்டு தன்னுடைய தீர்மானத்தைத் தெரிவிக்கும் விஷயமாக 71-ஆவது நம்பருள்ள ஜாதகத்தில் 815 ஆவது பக்கத்தில் உள்ள 21-ஆவது இருபத்தோராவது) செய்யுள், ஆகிய இவைகளை எல்லாம் வாசிக்கவும். இந்த சப்த ரிஷிகள் தாங்கள் சொல்லிய பலன்களையெல்லாம் பொய்த்துப் போகாமல் உண்மையாக நடந்தே தீரும் என்று சொல்லியிருக்கின்றார்கள். ஏனென்றால் இவைகளை இவர்கள் பார்வதியம்மையின் அருளால் அஃதாவது தேவதையின் அருளால் சொல்லியிருக்கின்றார்கள் என்பதாம். ஆகையால் ஜோதிடர் ஒருவர் ஜோதிட சாஸ்திரத்தில் மாத்திரம் நல்ல திறமையை அடைந்திருந்தால் மட்டும் போதாது, இவர் நன்னடக்கையும், ஒழுக்கத்தையும், சன்மார்க்கத்தையும், தெய்வபக்தியையும், பரிசுத்தத்தையும், உண்மை கைபிடித்தலையும் உடையவராகவுங்கூட இருந்தே தீரவேண்டும் என்று ஜனங்களுடைய பொதுவான அபிப்பிராயமாக விருந்துவருகின்றது. ஜோதிடரித்தில் ஒரு இம்மி அளவாகினும் தெய்வீகத் தன்மை அல்லது தெய்வக் கடாக்ஷம் இருந்தே தீரவேண்டும். ஒரு ஜோதிடர் கிரகங்களினுடைய நிலைகளையும், இவைகள் ஒன்றிற்கொன்று ஒற்றுமையாகவிருப்பதையும், விரோதமாகவிருப்பதையும் இவைகளின் பலாபலங்களையும் இன்னும் வேண்டிய பலவிதமான ஜோதிட அம்சங்களையும் கவனித்துநன்றாக ஆராய்ச்சிசெய்து கிரகங்களினுடைய இராசிகளினுடைய பாவங்களினுடைய மொத்த பலங்களையும் ஒன்றாகச் சேர்த்துத் திரட்டி பலன் சொல்லத் தீர்மானிக்கும்போது இவர் ஒரு குறித்த விஷயத்தைப்பற்றித் தீர்மானத்திற்கு வருவதில் ஏதாகிலும் சந்தேகங்கள் ஏற்பட்டு இவர் திகைத்து தடுமாறி நிற்கின்ற காலத்தில் இவரிடத்திலுள்ள தெய்வீக தன்மை அல்லது தெய்வசக்தி அல்லது தெய்வ கடாக்ஷம் இவருக்கு உதவியாக வந்து நின்று இவரைச் சரியான தீர்மானத்திற்கு வரும்படித் தானே இவரையும் அறியவொட்டாமல், செய்துவிடும். இது தான் தெய்வ சக்தியின் மகிமையாகும். ஜாதகருடன் கூடப் பிறந்தவர்கள்

மொத்தம் இத்தனை பேர்கள் என்றும் இவர்களில் இத்தனை பேர் ஆண் என்றும் இத்தனை பேர் பெண் என்றும் இவர்களில் தற்காலம் இத்தனை பேர் உயிருடன் இருக்கின்றார்கள் என்றும், இத்தனை பேர் இறந்துவிட்டார்கள் என்றும் ஆகிய இவ்விஷயங்களையும் ஜாதகருடைய தகப்பனார், தாயார், மனைவி ஆகிய இவர்களுக்குக்கூட இவ்விதமான சகோதரபாவ விஷயங்களையும், இதுவரையிலும் ஜாதருக்கு நடந்தேறிவிட்ட பலாபலன்களையும் பற்றிக் கேட்பவர் மிகவும் ஆச்சரியப்படத்தக்க விதமாகப் பலாபலன்களை மிகவும் சரியாகவே இருக்கும்படியாக நடந்துவிட்ட விஷயங்களை எல்லாம் ஒரு ஜோதிடர் தெய்வசக்தி அல்லது கடாக்ஷம் அல்லது எட்சணி தேவதையின் உதவியில்லாமல் பெரும்பாலும் சொல்லவே முடியாத காரியமாகும். இவ்விதமாக ஜோதிடருக்குத் தெய்வீகத் தன்மையாவது, அல்லது தெய்வானுகூலமாவது இல்லாவிட்டாலும் ஜோதிடருக்கே காலம் நல்லபடியாகவும் அதிருஷ்டமாகவும் இல்லாவிட்டாலும் இவர் ஜாதகத்தைக் கொண்டு ஆராய்ச்சி செய்து சொல்லும் போது இவருடைய மனத்திற்குத் தவறான அபிப்பிராயங்களே ஏற்பட்டுப் பலாபலன்கள் பெரும்பாலும் பலிக்காமலே போய்விட நேரிடும். இவ்விதமாகவே அதிக அனுபவமுள்ள பெரியோர்கள் ஜோதிட சாஸ்திரத்தைப் பற்றிச் சொல்லுகின்றார்கள். இரண்டுடன் மூன்றைக் கூட்டின தொகை ஐந்து என்று சொல்வதுபோலும், அல்லது ஒரே ஒரு விடையை (answer) உடைய ஒரு கணித சம்பந்தமான கணக்கைக் கணிப்பது போலும் அல்லாமல் ஜோதிடத்தில் ஒரு விஷயமாகத் தீர்மானத்திற்கு வருவது சாதாரணமாய் மிகவும் கஷ்டமானதேயாகும். மேலும் ஜோதிட பலாபலன்களைச் சொல்லுகின்ற இடமும் தகுந்த இடமாகவே அஃதாவது பரிசுத்தமான, திவ்வியமான புண்ணியமான (Sacred place) தெய்வ சம்பந்தமான (Religious place) இடமாகவே இருக்கவேண்டும். ஒரு மிகவும் அசுத்தமான அசிங்கமான, துராச்சாரமுள்ள (filthy place) விடத்திலாகினும் அல்லது ஒரு கோயிலில் இருந்தாகினும் மூன்றையும் ஐந்தையும் கூட்டினால் மொத்தம் எட்டே ஆகும். ஆனால் ஜோதிடம் மூலமாய் ஆராய்ச்சி செய்து ஒரு விஷயமாகத் தீர்மானத்திற்கோ அல்லது அபிப்பிராயத்திற்கோ வருவது இவ்விதமாக இடத்தை அனுசரிக்காமல் இல்லை. இது இடத்தின் பரிசுத்தத்தையும் நிலைமையையும் அனுசரித்தே இருக்கின்றது. ஆனால் இவைகளைப்பற்றிச் சொல்லும்போது நான் அதிகப்படுத்தி, அல்லது மிகைப்படுத்தி சொல்லுவது போலத் (over-shoot the point) தோன்றக்கூடும். இவைகளை நான் என்னுடைய நீண்டகால ஜோதிட அனுபவத்தையும் பழக்கத்தையுங் கொண்டே சொல்லத் துணிந்திருக்கின்றேன். இனிமேல் நடக்கப்போகின்ற அல்லது பின்னால் நிகழ்கின்ற விஷயங்கள் அல்லது பலாபலன்கள் சம்மந்தப்பட்டவரையிலும் ஜோதிட சாஸ்திரம் இரஸாயன சாஸ்திரம் (Chemistry) பௌதிக சாஸ்திரம் (Physics) கணித சாஸ்திரம் (Mathematics) ஆகிய இந்தச் சாஸ்திரங்களைப் போல ஒரு சரியான விஞ்ஞான சாஸ்திரம் (Exact science) அல்ல. இந்த மூன்று சாஸ்திரங்களிலும் ஒரு கணக்கைப் போடுவதிலோ அல்லது ஒரு விஷயத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்வதிலோ எப்படிப்பட்டக் கஷ்டமான நிலை

ஏற்பட்ட போதிலும் தெய்வ கடாக்ஷம் என்பது இல்லாமலேயே தானுகவே ஒருவர் அதிலிருந்து தப்பித்துக் கொண்டு நெளிந்து வரமுடியும் (Can wriggle out of any difficult position); ஆனுல் ஜோதிட சாஸ்திரம் சரியான விஞ்ஞான சாஸ்திரமாகவில்லாமல் (not an exact science) இந்த சரியான சாஸ்திரத்திற்கு மிகவும் நெருங்கின நிலையில் (a very close approach to an exact science) இருப்பதால் இந்த ஜோதிட சாஸ்திரத்தின் பிரச்னையில் மிகவும் கஷ்டமான நிலை ஏற்படும் போது இரண்டு கிரகங்களுக்கு மேற்பட்ட கிரகங்களின் கூட்டக் கிரக யோகம் உள்ள ஜாதகங்கள் சம்பந்தப்பட்ட வரையில் எவ்வளவு கணிதம் செய்திருந்த போதிலும் ஒரு ஜோதிடர் தெய்வ கடாக்ஷம் என்பது இல்லாமல் தானுகவே சரியான தீர்மானத்தையோ அபிப்பிராயத்தையோ பெரும்பாலும் அடைய முடியாது என்பது அனுபவ சித்தாந்தமேயாகும்.

நாம் இனிமேல் இந்த சப்தரிஷி நாடியை உண்டுபண்ணுவதற்காகச் சப்த ரிஷிகள் தங்களுடைய சம்மேளனம் என்ற ஆலோசனைக் கூட்டத்தை (conference) எவ்விடத்தில் நடத்தினர்கள் என்ற விஷயத்தைப்பற்றிப் பரிசீலனை செய்து பார்க்கலாம். இந்த ரிஷிகள் எல்லாம் இந்து தேசத்திய ரிஷிக்கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்குச் சந்தேகம் ஒன்றுமே கிடையாது. " வடதிசை காஞ்சிதன்னில் வைசிய குலமே தோன்றி " என்ற வரி ஆயிரத்திருபத்தாருவது பக்கத்திலுள்ள பதினெட்டாவது செய்யுளில் நான்காவது வரியாக இருக்கின்றது. செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள காஞ்சீவரம் தாலூக்காவின் ஒரு பெரிய பட்டணமாகிய காஞ்சீவரம் என்ற கஞ்சி அல்லது காஞ்சி என்ற நகரத்திற்குத் தெற்கிலுள்ள ஒரு இடத்தில் சபத்ரிஷிகளின் சம்மேளனம் நடந்திருக்கவேண்டும் என்று இந்த வரியிலிருந்து தெரியவருகின்றது. மேலும் இந்தியாவில் அநேக பட்டணங்கள் இருந்த போதிலும் " கஞ்சியை " ஒரு குறிப்பாகத் தெரிவித்திருப்பதால் சம்மேளன இடம் இதற்கு அருகிலேயே இருக்கவேண்டும் என்று விளங்குகின்றது. பிருதுவிஸ்தலம் என்றால் கஞ்சியே யாகும். இந்த நாடியில் வெளிப்படையாகவோ அல்லது பிருதிவிஸ்தலம் என்று சொல்லி ஊரை யூகிக்கும்படியாகவோ கஞ்சியைப்பற்றிய குறிப்புகள் அநேகம் இருக்கின்றன, அல்லது இந்த கஞ்சியின் ஒரு சிறிய பாகம் இருக்கின்ற வேகவதி நதியைப் பற்றிய குறிப்புகள் (references) இருக்கின்றன. இவ்விதமான குறிப்புகள் இது வரையிலும் அச்சிடப்பட்ட இந்த நாடியின் பாகங்களிலும் (volumes) இனி வெளிவரப்போகின்ற பாகங்களிலும் மலிந்து கிடக்கின்றன. மேலும் இந்த நாடியில் கஞ்சியிலுள்ள வரதர்கோயில், குமரகோஷ்டம் முதலிய இன்னும் சில கோயில்களைப்பற்றிய குறிப்புகள் இருக்கின்றன. என்னுடைய சொந்த அனுபவத்தைப்பற்றி நான் இங்கு சில விஷயங்களைச் சொல்லவேண்டிய அவசியம் நேரிட்டிருப்பதால் என்னை மன்னிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகின்றேன். இந்த விஷயங்கள், சப்தரிஷிகளின் சம்மேளனம் நடந்த இடத்தைப்பற்றி ஆராய்ச்சியைத் தற்காலத்தில் செய்கின்ற அல்லது பிற்காலத்தில் செய்யப்போகின்ற ஆராய்ச்சியாளர்களுக்கு (Research scholars) மிகவும் உபயோகமாகவிருக்கும் என்ற எண்ணத்துடனே என்னுடைய

சொந்தமான குறிப்புகளையும் (Personal references) அநுபவங்களையும் இங்கு சொல்லியிருக்கின்றேன். என்னுடைய தகப்பனர் ஒரு கவர்ன்மெண்டு வேலைக்காரராகவிருந்து பென்ஷன் (Pension) பெற்றவர். இவர் சென்னைப் பட்டணத்தில் வசித்திருந்தவர். இவர் ஒரு பெரிய ஜோதிட வித்தியாதுரர் என்ற ஜோதிடக் கல்விப்பிரியர் (amateur astrologer). இவர் தன்னுடைய அறுபத்தைந்தாவது வயதில் 1921 A.D-இல் இறந்துவிட்டார். இவருடைய மனைவியார் வீடு கஞ்சி ஆகும். இவருடைய சட்டகருடைய (மனைவியின் சகோதரியின் புருஷருடைய) வீடு வந்தவாசி கிராமம் ஆகும். வந்தவாசி என்ற கிராமம் கஞ்சியிலிருந்து சுமார் இருபத்துநான்கு மைல் தூரத்திலிருக்கின்றது. இவ்விரண்டு ஊர்களுக்கும் சுமார் மத்தியில் பன்னிரண்டாவது மைலில் பெருநகர் (பென்னகர்) என்ற ஒரு பெரிய கிராமம் இருக்கின்றது. இது காஞ்சீவரம் தாலூக்காவைச் சார்ந்த உத்திரமேரூர் (உத்திரன் பேரூர்) என்ற சப்-தாலூக்காவில் இருக்கின்றது. இந்த பென்னகர் என்ற கிராமம் இந்த நாடியிற்குறித்துள்ளபடிக் கஞ்சிக்குத் தெற்கில் இருக்கின்றது. பஸ் இல்லாத காலத்தில் கஞ்சியிலிருந்து பெருநகருக்குப் போகின்ற காலாட்கள் அல்லது மாட்டுவண்டியில் செல்லுகின்ற பிரயாணிகள் இந்த பெருநகரில் தங்கித் தாங்கள் கொண்டுபோகும் கட்டுசாதத்தைச் சாப்பிட்டுவிட்டு இளைப்பாறி பிறகு தங்களுடைய பிரயாணத்தை மறுபடியும் ஆரம்பிப்பதுண்டு. என் தகப்பனர் காஞ்சீபுரத்திலிருந்து வந்தவாசிக்கு அநேகதடவைகளில் பெருநகர் வழியாகச் சென்றிருக்கின்றூர். இந்த சப்த ரிஷி நாடியின் ஓலைப்புத்தகங்களை வைத்திருந்த சொந்தக்காரராகிய பொன்னம்பல பண்டாரம் என்ற ஒரு வள்ளுவர் இந்தப் பெருநகரில் வாசஞ் செய்து கொண்டிருந்தார். இந்தப் பண்டாரத்திடம் என் தகப்பனர் பல தடவைகளில் சென்று ஜோதிட சாஸ்திரவிஷயமாகக் கலந்து பேசி இருக்கின்றூர். இந்தப் பொன்னம்பலப் பண்டாரம் என்பவர் ஜோதிட சாஸ்திரத்தை நன்ருகப் படித்த ஒரு நிபுணர் (expert). இவர் " தமிழ் ஜாதகாலங்காரம், மணிகண்ட கேரளம், துய்யகேரளம், வீமேஸ்வர உள்ளமுடையவன், ஜாதக சிந்தாமணி, வள்ளுவமாலை, தாண்டவமாலை, புலிப்பாணி ஜோதிடம், குமாரசாமியம் " முதலிய ஜோதிடக் கிரந்தங்களை நன்ருகப் படித்து மனப்பாடம் பண்ணிவைத்திருந்த ஒரு சிறந்த ஜோதிடராவர். இவர் அதிகமான தெய்வபக்தியையுடையவராக விருந்தார். இவர் தன்னுடைய கிராமத்திலுள்ள பெரிய ஏரியிலுள்ள அல்லது குளத்திலுள்ள ஜலத்தில் அனேகமணி காலம்வரையிலும் பூஜை செய்வதுண்டு. இவர் தமிழில் ஒரு வாசித்தறிந்த நல்ல பண்டிதராகவும் இருந்தார். இவர் ஒரு உபவாசியாகவும் இருந்தார். இவர் எக்ஷணிதேவதை என்ற ஒரு தேவதையைத் தனக்கு உதவியாக உபயோகப்படுத்திக்கொண்டுவந்தார். இந்தப் பண்டாரத்தினுடைய மார்பில் தொங்கிக்கொண்டிருந்த லிங்கத்தை இந்தப் பண்டாரம் ஏரியில் அல்லது குளத்தில் உள்ள ஜலத்தில் தன்கையின் உள்ளங்கையில் வைத்துக்கொண்டு ஜபம் அல்லது பூஜை செய்யும்போது இந்த லிங்கமானது உள்ளங்கையிலிருந்து தானுகவே மேலே எகிறி எகிறித் துள்ளித் தன்னுடைய உள்ளங்கையிலேயே மறுபடியும் விழுவதை என் தகப்பனர் பலதடவைகளில் பார்த்திருந்ததாக என்னிடஞ் சொல்லியிருக்கின்றூர். இவ்விதமான உபவாசியாக இந்தப் பண்டாரம் இருந்தார். மேலும் இவர் யாதொரு சிரமமுமில்

லாமலே வெகு சுலபமாகப் பாட்டுகளை நினைத்தபோது நினைத்தவிடத்திலேயே கட்டக்கூடிய வித்தையைப் படித்திருந்தவராகவும் இருந்தார். (He could compose Tamil stanzas extempore very easily). இவர் நடந்தேறிவிட்ட பலாபலன்களை (past events of a native's career) ஒரு ஜாதகத்தைப் பார்த்து மிகவும் ஆச்சரியப்படத்தக்கபடி சொல்லக்கூடிய திறமைவாய்ந்தவராகவும் இருந்தார். ஆகையால் இவருக்கு எங்குபார்த்தாலும் நல்ல பெயரும் கீர்த்தியும் இருந்தது. இவர் காஞ்சீபுரத்திலிருந்து சுமார் முப்பது மைல் தூர அரைவிட்டமுள்ள ஒரு வட்டாரத்தில் (within a circle of a radius of thirty miles) உள்ள இடங்களுக்குப் போய் ஜனங்களுக்கு ஜாதகங்களைப் பார்த்து பலாபலன்களைச் சொல்லிக்கொண்டு ஜீவனஞ்செய்துவந்தார். இவர் காஞ்சீபுரத்திற்கும் இதற்கு அடுத்தாற்போலுள்ள கிராமங்களுக்கும் இவர் அடிக்கடி போவதுண்டு. இவர் தன்னுடைய அதிக முதியவயதில் சுமார் 1912 A.D. வருஷத்தில் இறந்துவிட்டார். இவருக்குக் கனகசபை பண்டாரம் என்ற ஒரே ஒரு குமாரர் இருந்தார். இவருக்கு ஜோதிடத்தில் இவருடைய தகப்பனருக்கு ஜோதிடத்தில் இருந்ததுபோல அவ்வளவு சிரத்தையும் வித்தையும் வாசிப்பும் கிடையாது. ஆகையால் இவர் ஒரு சிறிய மளிகை கடையை வைத்துக்கொண்டு ஜீவனஞ்செய்துவந்தார். 1881 A.D. வருஷத்தில் பிறந்து 1955. A.D. வருஷத்தில் இறந்துபோன என்னுடைய மூத்தசகோதரருடைய ஜாதகத்திற்கு என் தகப்பனர் 1911 A.D. வருஷத்தில் பொன்னம்பல பண்டாரமிடமிருந்து இந்த சப்தரிஷி நாடி பலாபலன்களை எழுதி வாங்கிக்கொண்டுவந்தார். இவ்விதமாக எழுதிக்கொண்டுவந்த ஜாதகம் "சாதாரணஞூ மாசி மாதம் 1-தேதி ஆதிவாரம், பெண்ணகரில் எழுதியது, 12–2–11" என்ற தேதி, இடம், ஆகிய இவ்விவரங்களுடன் இருக்கின்றது. இது என்னுடைய தகப்பனருடைய கையெழுத்திலேயே இருக்கின்றது. இது என்னிடத்தில் இன்னம் இருந்துவருகின்றது. இந்தப் பொன்னம்பலப் பண்டாரம் மேற்கண்ட 1911 A.D.-ஆம் வருஷத்திற்கு பிறகு சுமார் ஒருவருஷம் பொருத்து இறந்துவிட்டார். என் தகப்பனருக்குச் சினேகிதரும் ஜோதிடம் தெரிந்தவருமாய் இருந்த காலஞ்சென்ற பங்களூர் ஸ்ரீ இராஜூ முதலியார் என்பவர் என்னுடைய வீட்டிற்கு ஜோதிட சம்மந்தமாக அடிக்கடி வந்து திண்ணையின்மேல் உட்கார்ந்துகொண்டு தன்னுடைய ஜோதிட சம்மந்தமான வேலைகளைச் செய்துகொண்டு அதிகமான காலத்தைக் கழிப்பதுண்டு, சில சமயங்களில் இவர் என் வீட்டிலேயே சாப்பிடுவதுமுண்டு. இப்படிப்பட்ட நிலையில் என் வீட்டிற்கு வரும் தபால் காகிதங்களை இவர் போஸ்டுமென் (Post-men or Post peons) என்பவர்களுடமிருந்து வாங்கிக்கொள்ளுவதுண்டு. இவருக்கு ஜோதிடந்தவிர வேறே ஜீவனங் கிடையாது. ஆகையால் இவர் தான் ஜீவனஞ்செய்வதற்காக இந்தச் சப்தரிஷிநாடியை வாங்கிவரும்படியாக என் தகப்பனரை அடிக்கடித் தூண்டிக்கொண்டிருந்தார். மேற்சொன்ன கனகசபை பண்டாரத்தை இவருடைய தகப்பனர் பொன்னம்பல பண்டாரம் இறந்துவிட்ட பிறகு என் தகப்பனர் பார்த்தபோது இவர் தனக்கு ஜோதிடத்தில் பரீட்சையும் சிரத்தையும் இல்லாமல் இருந்தபடியால் இந்த நாடியை விற்றுவிடுவதாக இவர் சொல்லிக்கொண்டிருந்தார். ஆயையால் இராஜூ முதலியாரின் தூண்டுதலின்பேரில் என் தகப்பனர் பெருநகருக்குப் போய் கனகசபை பண்டாரத்

தைக் கண்டு இந்த சப்தரிஷி நாடியை வாங்குவதற்காகச் சுமார் 200 ரூபாய்க்கு விலைபேசி தீர்மானஞ்செய்துவிட்டுத் தேவையான பணத்தை அனுப்பும்படியாகப் பெருநகரில் இருந்து என் தமயனருக்கு கார்டை எழுதி தனக்கு பணத்தை அடுத்த வியாழக்கிழமைக்குள் அனுப்பவேண்டும் என்றும், இவ்விதமாகப் பணம் வியாழக்கிழமைக்குள் தனக்கு வந்து சேராவிட்டால் தானே சென்னைக்குவந்து பணத்தை வாங்கிக்கொண்டு மறுபடியும் பெருநகருக்கு போவதாகவும் எழுதியிருந்தார். தெருத் திண்ணையின்பேரில் உட்கார்ந்துகொண்டிருக்கும் மேற்கண்ட இராஜூ முதலியார் இந்தக் கார்டை போஸ்டுமென் (Postman) இடமிருந்து வாங்கிக்கொண்டு எங்கள் வீட்டில் கொடுக்காமலும், விஷயத்தைத் தெரிவிக்காமலும் ஜோதிடம் தெரியாத சென்னையில் இருந்த ஒரு ஸ்ரீ கிருஷ்ணசாமி பிள்ளையிடம் பணம்விஷயமாய் ஏற்பாடுசெய்துகொண்டு என் தகப்பனர் சென்னைக்கு வெள்ளிக்கிழமை திரும்பிவந்துவிட்ட விஷயத்தைத் தெரிந்துகொண்டு இந்தக் கிருஷ்ணசாமி பிள்ளையுடன் இந்த இராஜூ முதலியார் பெருநகருக்குப் போய் அதிகவிலையைக் கொடுத்து இந்த சப்தரிஷிநாடி ஓலைப்புத்தகங்களை வாங்கிக்கொண்டு சென்னபட்டணத்திற்குத் திரும்பி வந்து சேர்ந்துவிட்டார். இந்தவிஷயம் ஒன்றுமே தெரியாத என் தகப்பனர் மறுபடியும் அடுத்தவாரம் பெருநகருக்குத் தேவையான பணத்துடன் போய்க் கனகசபை பண்டாரத்தைப் பார்த்தபோது "உம்முடைய சிநேகிதராகிய இராஜூ முதலியார் ஒருவருடன் கூடவந்து எல்லா ஓலைப்புத்தகங்களையும் அஃதாவது சுமார் பதின்மூன்று பெரிய புத்தகங்களையும் அதிகவிலைகொடுத்து வாங்கிக்கொண்டுபோய்விட்டார். உமக்காக ஒரு சிறிய ஓலைப்புத்தகத்தை அவர்களுக்குத் தெரியாமல் வைத்திருக்கின்றேன், இதை உமக்குக் கொடுக்கின்றேன்" என்று கனகசபை பண்டாரம் சொல்லவே என் தகப்பனர் திகைத்துவிட்டார். பிறகு இந்த சிறிய ஒரு ஓலைப்புத்தகத்தை ரூபாய் எட்டு கொடுத்து வாங்கிக்கொண்டு திரும்பி பட்டணம் வந்து சேர்ந்துவிட்டார். இந்த சிறிய ஓலைப்புத்தகம் என்னிடம் சென்றவருஷம் வரையிலும் இருந்து பிறகு இதை நான் சென்ற வருஷம் சென்னை கவர்ன்மெண்டு ஓரியண்டல் மானஸ்கிரிப்ட்டு லைப்ரரிக்கு (Government Oriental Manuscript Library, Madras) இனமாகக் கொடுத்துவிட்டேன். இந்த இராஜூ முதலியாரும் இவருக்குப் பணம்கொடுத்து உதவி புரிந்த கிருஷ்ணசாமி பிள்ளையும் சென்னை ஏகாத்தா கோயில் தெருவில் கிருஷ்ணசாமி பிள்ளை குடியிருந்த வீட்டில் தெருவு பக்கத்தில் ஒரு அரையில் "சப்தரிஷி ஜோதிடநிலையம்" என்று ஒரு அலுவகத்தை (Office) ஏற்படுத்தி சுமார் ஆறுமாதகால வரையிலும் வியாபாரத்தை நடத்திவந்தார்கள். எனக்கு ஜோதிடத்தின்பேரில் கொஞ்சம் விருப்பம் இருந்ததால் இந்த ராஜூ முதலியார் திண்ணையின்பேரில் உட்கார்ந்துகொண்டு இருக்கும்போது நான் இவருக்கு உதவி சிஷியனகவிருந்து (Assistant) உதவிசெய்வதுண்டு. இவர் ஏகாத்தாகோயில் தெருவில் தன் வியாபாரத்தை நடத்திவந்தபோது நான் இவரிடம் போவதுண்டு. இவ்விதம் சென்று இந்த சப்தரிஷிநாடி ஜாதகங்களுக்கு இன்டெக்ஸ் என்ற அட்டவணை (Index of horoscopes) தயார்செய்தபோது நான் இவருக்கு உதவிசெய்துவந்தேன். இவருடைய அனுமதியின் பேரில் அட்டவணையின் நகலை என் உபயோகத்திற்காக ஒன்று 1912 A.D.யில் தயார்செய்துகொண்டேன். இந்த அட்டவணையின் நகலைக் காப்பிசெய்து

கொள்ளும்படியாக ஓரியண்டல் மானஸ்கிரிப்ட்டு லைப்ரரிக்கு நான் சென்ற வருஷம் கொடுத்து லைப்ரரி உத்தியோகஸ்தர் ஒரு நகலைத் தயாரித்து லைப்ரரியில் வைத்திருக்கின்றார். பெருநகரிலிருந்து ஓலைப் புத்தகங்கள் வந்தபோது ஜாதகங்கள் லக்கினவாரியாக இப்புத்தகங்களில் இல்லாமல் இருக்கவே 1912. A.D.-ல் இந்த ஜாதகங்களை லக்கினவாரியாக அடுக்கி ஒவ்வொரு லக்கினத்திற்கும் ஒவ்வொரு புத்தகமாகப் பன்னிரண்டு புத்தகங்களாக அக்காலத்தில் பிரித்து தயார்செய்து வைத்தோம். மேற்சொல்லிய சுமார் ஆறு மாதகாலம் பொறுத்து கிருஷ்ணசாமி பிள்ளையும் இராஜு முதலியாரும் இந்த நாடிவிஷயமாகச் சண்டைபோட்டுக்கொண்டார்கள். பிறகு கிருஷ்ணசாமிபிள்ளை இந்தப் பன்னிரண்டு சப்தரிஷிநாடி ஓலைப்புத்தகங்களை இராஜு முதலியாரிடமிருந்து பிடுங்கிக்கொண்டு சென்னை கவர்ன்மெண்டு ஓரியண்டல் மானஸ்கிரிப்ட்டு லைப்ரரிக்கு 1913-ல் அல்லது 1914 A.D. யில் விற்றுவிட்டார். இந்தநாடி பெருநகரில் இருந்து லைப்ரரிக்கு வந்து சேருகின்ற வரையிலும் இதனுடைய சரித்திரத்தை இங்கு இவ்விதமாக நான் சொல்லியிருக்கின்றேன். இந்த நாடிப் புத்தகங்களுக்கு 1912. A.D-ல் அட்டவணை தயார் செய்தகாலத்தில் இந்த நாடிப் புத்தகங்களிலுள்ள சில ஜாதகங்களையும் என்னிடத்திலிருந்த ஒரு ஓலைப் புத்தகத்திலிருந்த சில ஜாதகங்களையும் நான் சில சமயங்களில் படிப்பதுண்டு. காஞ்சீபுரத்தைப்பற்றி இந்த நாடியில் அடிக்கடி குறிப்புகள் (References) இருக்கின்றன என்ற விஷயம் எனக்கு இவ்விதமாகத் தெரியும். பிறகு பெருநகர் கிராமம் அடங்கியுள்ள உத்திரமேரூர் சப் தாலூக்காவிற்கு நான் 1932.A.D.-யில் டிப்டி தாசில்தாராக வந்து வேலைபார்த்தகாலத்தில் பெருநகர் கிராமத்தில் நான் முகாம் செய்வதுண்டு. இவ்விதமாக முகாம் செய்தபோது ஒருதடவை மேற்கண்ட கனகசபை பண்டாரத்தை விசாரித்தேன். இவர் என்னைவிட வயதில் பெரியவர். இவருடைய தகப்பனாராகிய பொன்னம்பல பண்டாரத்தின் பந்துவும் சினேகிதருமாகிய ஒருவர் பங்களூரில் இந்த சப்தரிஷிநாடியின் அசலை அனேக ஓலைப்புத்தகங்களாக வைத்திருந்தார் என்றும், இதிலுள்ள நாட்டுச் சிறப்பு, நகரச்சிறப்பு முதலியவைகளைப் படித்துப்பார்த்துக் காஞ்சீபுரத்திற்குச் சுற்றுப்பக்கங்களிலுள்ள கிராமங்களைச் சம்மந்தப்பட்ட ஜாதகங்களின் நகலை மாத்திரம் இவர் தகப்பனாரும் இவரும் தயார்செய்துகொண்டதாகவும் இவர் என்னிடம் சொன்னார். இவ்விதமாக இவர் என்னிடம் தெரிவித்தது உண்மையாகவே இருந்தால் இதுதான் இந்த நாடியில் அதிகப்படக் காஞ்சீவரத்தைப்பற்றிய குறிப்புகள் (References) இருப்பதற்குக் காரணமாகும் என்று தோற்றுகின்றது. நான் இங்கு வேணுமென்றே இவ்விஷயங்களை விவரமாகச் சொல்லியிருக்கின்றேன். இந்த நாடியின் இதற்கு முந்திய சரித்திரத்தைப்பற்றியும், இந்த நாடியில் சொல்லியுள்ள சப்தரிஷிகளின் சம்மேளனம் நடந்த இடத்தைப்பற்றியும் (Venue of conference) இனிமேல் ஆராய்ச்சி செய்கின்ற ஆராய்ச்சியாளர்களுக்கு (Research–scholars) நான் இதுவரையிலும் சொல்லிவந்த விஷயங்கள் உபயோகமாகவிருக்கும் என்று நம்பியே இவ்விஷயங்களை இங்கு தெரிவித்திருக்கின்றேன். இந்த நாடியில் இது வரையிலும் நான் பார்த்த ஜாதகங்களில் இரண்டு மூன்று ஜாதகங்களின் பாஷை விஷயமான நடை நொடி பாவனைகளுக்கும் (Style of language, etc) பெரும்பான்மையான இதர

ஜாதகங்களில் உள்ள ஒரேவிதமான நடை நொடி பாவனைகளுக்கும் அதிகமான வித்தியாசங்கள் இருக்கின்றன. ஆகையால் ஜோதிட சாஸ்திரத்திலும் பாட்டு கட்டுவதிலும் கைதேர்ந்தவராகவிருந்த பொன்னம்பல பண்டாரமே இந்த இரண்டு மூன்று ஜாதகங்களையும் முதலிலிருந்து தயாரித்து எழுதியிருக்கக்கூடுமென்று எண்ணுவதற்கு ஏற்படுகின்றது.

மேலும் நம்முடைய தேசத்தாரின் கௌரவமும் மகிமையுமான (glory of our nation) பழைய காலத்திய வித்தையையும் ஞானத்தையும் (culture and learning) காப்பாற்றுவதில் அக்கரை எடுத்துக் கொண்டிருக்கிற தயாள குணத்தையும் தரும குணத்தையுமுடைய தற்கால அரசியல் பொது மக்களுடை பணத்தை மதிப்பிடத் தகுந்த அளவிற்கு நன்மார்க்கத்தில் பொது நன்மைக்காகச் செலவு செய்து அச்சிட்டு வருகின்ற இந்த சப்தரிஷி நாடியின் உபயோகத்தைப்பற்றி நான் இரண்டொரு வார்த்தைகளைச் சொல்ல விருப்பமுடையவனாக விருக்கின்றேன். இராஜ்ஜிய நிர்வாக நூலில் (Science of economics) அருமையான தன்மையும் உபயோகமும் (Rarity and utility) ஒரு வஸ்துவின் மதிப்பை நிர்ணயிக்கின்றன. இந்தச் சப்தரிஷி நாடியானது பூர்வீகமான நாடிகளிலும் அருமையான நாடிகளிலும் ஒன்றாகவும் இது சென்ற அநேக நூற்றாண்டுகளாகத் தன்னுடைய பெருமையை யுடையதாக விருந்து வருகின்றது. துருவநாடி அல்லது சுகர் நாடி அல்லது இதர எந்த நாடியாவது ஒருவருடைய விளைவு அல்லது உற்பத்தியேயாகும். ஆனால் இந்தச் சப்தரிஷி நாடியோ ஏழு பிரகாசமான புத்தியையுடைய மேதாவிகளின் கூட்டு உற்பத்தியேயாகும் (is the joint product of seven brilliant intellects). ஆகையால் ஒரு மனிதருடைய வாழ்க்கையில் சம்பவிக்கக்கூடிய பலாபலன்கள் விஷயமாக ஜோதிட ஆகாயத்தில் மிகவும் பிரகாசமான நட்சத்திரங்களாக விளங்குகின்ற ஏழு மேதாவிகளின் மிகவும் உயர்ந்த, நன்றாக ஆலோசனை செய்து அறிவிக்கப்பட்ட அபிப்பிராயங்களை இந்தச் சப்தரிஷி நாடி உடையதாக விருக்கின்றது. ஆகையால் இந்த நாடியை விட இதர எந்த நாடியும் அதிகமான கௌரவத்திற்கும், மதிப்பிற்கும் லாயக்கை உடையதாக விருக்கவில்லை. இந்த நாடி சாஸ்திரத்திலுள்ள ஒவ்வொரு ஜாதகமும் இதனுடைய சொந்தக்காரருக்கு (Native or owner of the horoscope) தன்னுடைய பிற்கால வாழ்க்கையில் ஒருவழி காட்டும் நட்சத்திரமாகவும் (a guiding-star) அல்லது தன்னுடைய இருண்ட பிற்கால வாழ்நாள் வழியை அல்லது மார்க்கத்தைப் பிரகாசப் படுத்துகின்ற ஆகாச தீபமாகவும் (a beacon light in the dark path of his future life) இருந்து கொண்டு இவருக்கு அதிகமாக உபயோகப்படக்கூடியதாகவும் மதிப்புள்ளதாகவும் இருக்கின்றது. பின்னால் நடக்கப்போகின்ற சம்பவங்களை இவருக்கு முந்தியே தெரிவித்து தன்னுடைய வாழ்நாள் பிரயாணத்தில் மிகவும் ஜாக்கிரதையாக நடக்கும்படி இந்த நாடி இவருக்கு உபயோகப்படும். இவர் தன்னுடைய பிற்காலத்திய வாழ்க்கையில் சம்பவிக்கக்கூடிய அதிருஷ்டம், தரித்திரம், சந்தோஷம், துக்கம், சுகம், கஷ்டம், ஆகிய இவைகளை முன்னடியாகவே தெரிந்து கொண்டு இவைகளுக்குத்தக்கபடி நடந்து கொள்ளவும் அல்லது இவைகளை விலக்கத்தகுந்த காரியங்களைச் செய்து கொள்ளவும் இந்த நாடி இவருக்கு மிகவும் உபயோகமுள்ளதாகும். இவருக்குப் பிற்காலத்தில் எதாகிலும் ஒரு கஷ்டம் நேரிடப்போவதாக

விருந்தால் இவர் இதை ஜோதிடத்தின் மூலமாக முந்தியே தெரிந்துகொண்டு இதற்காக இவர் தன்னுடைய மனதைத் திடப்படுத்திக்கொண்டு தைரியமாகவிருக்கக்கூடும். இந்த கஷ்டம் இவருக்கு உண்மையிலேயே நடக்கும்போது இந்தக் கஷ்டத்தின் கொரேமான தாக்குதலை இவருடைய மனது சகித்துக்கொள்ளுந் திறமையை அடைந்துவிடும். ஆனால் இந்தக் கஷ்டத்தில் தாக்குதல் இவருக்கு முந்தியே தெரியாமல் திடீரென்று நேரிடுமானால் இந்தத் தாககுதலை இவருடைய மனது தாங்கமுடியாத நிலையிலிருந்து மிகவும் துன்பத்தைப் பெரும்பாலும் அடையும். ஒரு மனிதர் தனக்கு இனிமேல் வரப்போகின்ற நல்ல காலத்தையும் சுகபோகங்களையும் ஜோதிடத்தின் மூலமாக முந்தியே தெரிந்துகொண்டால், இவைகள் உண்மையில் நடக்கும்போது இவைகளால் உண்டாகும் சந்தோஷமும் சுகமும் இவைகளை இவர் எதிர் பார்த்திருந்த காரணத்தினால் பல மடங்கு அதிகப்பட்டுவிடும். இவ்விதமாக இந்த நாடி ஜாதகருக்கு அல்லது ஜனங்களுக்கு மிகவும் உபயோகரமாகவிருக்கும். ஒரு சமயம் இந்த நாடியிலுள்ள ஜாதகங்கள் இறந்து விட்டவர்களுடைய ஜாதகங்களாகவோ அல்லது இனி வரப்போகின்ற இரண்டொரு தலைமுறைக்குள்ளே பிறக்கப்போகின்றவர்களுடைய ஜாதகங்களாகவோ இருக்காமல் இருந்தாலுங்கூட ஜோதிட சாஸ்திரம் ஒரு சிறந்த கம்பீரமான (noble) அல்லது கௌரவமான, மேலான (sublime) கலையாகக் கருதி இதில் பற்றுள்ளவர்களுக்கு இந்த நாடி கீழ்க்கண்ட விதமாக மிகவும் உபயோகமுள்ளதாகவும் பயன்படக்கூடியதாகவும் இருக்கும். ஜோதிடத்தில் கெட்டிக்காரராக விருக்கின்றவர்களுக்குங்கூட அல்லது ஜோதிட சாஸ்திரத்தைக் கற்றுக் கொள்ளுகின்றவர்களுக்குங்கூட இந்த நாடியிலுள்ள ஒவ்வொரு ஜாதகமும் உதாரண ஜாதகமாக (Illustrative horoscope) உபயோகப்படும். பூர்வ நிதர்சனம், பிரமாணம், திருஷ்டாந்தம், அல்லது உதாரணம் என்ற உலகத்தில் (World of precedents or examples) நாம் ஜீவித்து வருகின்றோம். இந்த திருஷ்டாந்தங்களும் உதாரணங்களும் ஒவ்வொரு தொழிற்றுறையிலும் செய்கைத் துறையிலும் ஜனங்களுக்கு மிகவும் பயனளிக்கக்கூடியனவாக விருக்கின்றன. உதாரணமாக ஒரு விஷயமானது அல்லது பிரசினமாவது (a problem) தனக்குப் புதியதாகவும் அல்லது தான் இதற்கு முந்தி அநுபவித்திராதபடியும் தோன்றுமானால் ஒரு கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர் அல்லது இன்னும் வேறொருவர் தன்னுடைய அறியாமையான நிலைமையில் தனக்கு வழிகாட்டியாகவிருக்கின்ற பூர்வ திருஷ்டாந்தம் அல்லது உதாரணத்தை (precedent)-த் தேடிப் பார்க்கின்றார், தங்களுக்குத் தெரியாத அநேக விஷயங்களில் பூர்வ திருஷ்டாந்தம் அல்லது உதாரணம் ஜனங்களுக்கு அதிக நன்மையைச் செய்கின்றதாகும். ஜோதிட சாஸ்திரம் அநுபவித்தின் பேரில் உண்டாக்கப்பட்ட சாஸ்திரம் என்று நான் முன்னமே தெரிவித்திருக்கின்றேன். புதியதாக பரிசீலனை செய்கின்ற ஒரு ஜாதகத்தில் இரண்டு கிரகங்களின் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட கிரகங்களின் சம்பந்தமான ஒருவித தோற்றம் அல்லது அமைப்பு அல்லது நிலைமை (configuration) ஏற்படுமானால், இந்தத் தோற்றத்திற்கு ஒரு பூர்வ திருஷ்டாந்தம் அல்லது உதாரணம் (precedent) இருந்தால் அஃதாவது இதே விதமான தோற்றம் அல்லது அமைப்பு (similar configuration) இந்த சப்தரிஷி நாடியிலுள்ள

எந்த ஜாதகத்திலும் இருக்குமானால், இந்தத் தோற்றம் அல்லது அமைப்பிற்குச் சப்தரிஷி நாடியில் சொல்லியுள்ள பலாபலன்களை ஒரு ஜோதிடர் தான் ஆராய்ச்சி செய்கின்ற ஜாதகத்திற்குக்கூடச் சுலபமாகவும் உடனேயும் சொல்லக்கூடும். இவ்விதமாக இந்த நாடியினால் இவருக்குச் சிரமக்குறைவு படுவதுமன்றிப் பலாபலன்களை முன்னடியாகத் தெரிவிப்பதில் நேர்மையும் பிழையின்மையும் (accuracy in prediction) அதிகப்படும். மேலும் இந்த நாடியிலுள்ள ஜாதகங்களில் உற்சாகத்தைப் புகட்டுகின்ற நற்போதனையான தர்க்கங்கள் பல உள (There are many lively and instructive discussions) ஒரு ஜோதிடர் சப்தரிஷிகளுக்குள் ஏற்படும் இந்த தர்க்கங்களின் போக்குகளையும், நோக்கங்களையும் (Trends of discussion) பரிசீலனையிலுள்ள ஒரு விஷயத்திற்கு அநுகூலமாக அல்லது பிரதிகூலமாகத் தாங்கள் சொல்லும் காரணங்களையும் இவர்கள் கடைசியாக ஒரு முடிவிற்கு வருகின்ற தீர்மானத்தையும் கவனிப்பாராகில் இவர் தான் ஜோதிட ஆராய்ச்சி செய்யும் போது தனக்குங்கூட இதே விதமான சங்கடமான நிலைமை ஏற்படுமானால், இவர் ரிஷிகள் உபயோகப்படுத்திய காரணங்களையே உபயோகப்படுத்தித் தன்னுடைய முடிவான அபிப்பிராயத்தையும் அடையக்கூடும். (1) ஒரு ஜாதகருடைய ஆயுள், (2) இவருக்கு ஏற்படக்கூடிய மனைவிமார்களின் எண், (3) இவருக்கு நிலைத்திருக்கும் குழந்தைகள், (4) இவருக்கு உண்டாகும் நல்ல அதிருஷ்டம் துரதிருஷ்டம், நல்லயோகம், கெட்டயோகம் ஆகிய இவைகள் விஷயமான பிரசினைகளைப்பற்றி இந்த நாடியில் அடிக்கடி தர்க்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த விஷயங்கள் ஒருவருடைய வாழ்நாளில் சம்பவிக்கக்கூடிய முக்கியமான விஷயங்களாகும். ஆகையால் இவைகள் ஒவ்வொரு மனிதரும் முந்தியாகவே தெரிந்துகொள்ள அதிக அவா அல்லது ஆசை உடையவராக விருக்கின்றார். இந்த நாடியில் நடக்கின்ற வாக்குவாதங்களை ஒரு ஜோதிடர் ஜாக்கிரதையாகவும் ஊக்கத்துடனும் கவனிப்பாராகில், இவர் அதிகமான நன்மையை அடைவார்; இவருக்கு அதிக அநுபவமுண்டாகும்; பலன் சொல்லுவதில் இவருக்கு அதிகத் திறமை ஏற்படும்; பலாபலன்களை உண்மையாகவும் சரியாகவும் சொல்லக்கூடியவர் என்ற பெயரும் கீர்த்தியும் அடைந்து இவர் ஜனங்களிடத்தில் அதிக மதிப்பை உடையவராக இவர் இந்த நாடியால் விளங்குவார். மேலும் இந்த நாடி, ஜோதிட சாஸ்திரம் தெரியாத ஜனங்களுக்கும், ஜோதிட சாஸ்திரத்தில் அக்கரையே அல்லது இச்சையே இல்லாத எல்லா பாமர ஜனங்களுக்குங்கூட இந்தச் சப்தரிஷி மிகவும் உபயோகமானதேயாகும்; ஏனென்றால் இதில் மதச் சம்பந்தமாகவும், நீதி நூல், தர்ம சாஸ்திரம், நல்லொழுக்கும், சன்மார்க்கம் ஆகிய இவைகள் சம்பந்தமாகவும் அநேக சிறந்த மதிப்புள்ள நல்ல போதனைகள் (many valuable lessons) எவ்விடத்தில் பார்த்தாலும் மலிந்து கிடக்கின்றன. இந்த நாடியை ஒரு முறை படிக்கின்ற ஒவ்வொருவரும் மனித வாழ்க்கை விஷயமாகப் புதிய நல்ல கொள்கைகளையும் அபிப்பிராயங்களையும் அடைந்து ஒரு புதிய மனிதராகவே இந்த நாடியின் பயனுக்கிளம்பி வெளியே ஜனங்களுக்குத் தோற்றுவார். இந்த நாடியில் சொல்லியுள்ள நல்ல கொள்கைகளையும், போதனைகளையும் இவர் அடைந்தே தீருவார் என்பதற்குச் சந்தேகமே இராது. இந்த நாடியை வாசிப்பதால் இவர் தெய்வீகத் தன்மையை உடையவராகவும், சன்மார்க்கத்தையும் நல்

லொழுக்கத்தையும் அநுசரிப்பவராகவும், கடவுளிடத்தில் பயபக்தியுடையவராகவும், தயாள குணமும் தருமகுண முடையவராகவும், பிறருக்கு உபகாரஞ் செய்கின்ற தன்மையையுடையவராகவும் மாறிப்போய் விடுவார். இவ்விதமாக ஜோதிடந் தெரியாத சாதாரண பாமர ஜனங்களுக்குக்கூட இந்த நாடி ஒருவித தர்ம சாஸ்திர நீதி சாஸ்திர நூலாகி இவர்களைச் சீர்திருத்தஞ் செய்கின்ற ஒரு அரிய பெரிய கருவி அல்லது சாதனம் (a great moral reform) ஆகும். இவ்விதமாக இந்த நாடி உலகத்திலுள்ள எல்லோருக்கும் போதனு விருத்தி சம்பந்தமான மதிப்பையுடையதாகும்; இதன் விஷயமாகச் சர்க்காரால் செலவு செய்யப்பட்ட பணம் நல்ல மார்க்கத்திலேயும் மேன்மையான ஒரு நல்ல விதமாகவும், சகல ஜனங்களுடைய அபிவிருத்திக்காகவும் செலவு செய்ததாகவே கருதப்படுவதற்கு யாதொரு சந்தேகமும் கிடையாது என்று திண்ணமாகவும் உறுதியாகவும் சொல்லக் கூடும். இந்தச் செலவையும் ஐந்து வருஷ சீர்திருத்தத் திட்டம் (Five year plan) என்ற விஷய நோக்கத்திலேயே கூட செலவு செய்ததாகக் கருதுவதற்கு இடந்தரும். அச்சிடுவதற்கு லாயக்கான கிரந்தங்களில் இந்த நாடி சாஸ்திரத்தைத் தேர்ந்தெடுத்த கனவான்களும் சீமான்களும் (gentlemen) இந்த சப்தரிஷி நாடியைப் பதிப்பிடுவதற்காகத் தகுந்த பதிப்பாசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதையும் தடுக்கக்கூடிய விலக்கக்கூடிய பிழைகள் கூடியமட்டும் இராமல் அச்சிடுவதையும், தன்னுடைய பலவிதமான, பொறுப்புள்ள கஷ்டமான அலுவல்களுக்குள்ளே, ஒரு சிறந்த அலுவலாகக் கருதி அதிக சிறத்தையும் ஊக்கத்தையையும் செலுத்திய கியூரேடர் ஸ்ரீ T. சந்திரசேகர திட்சிதர் எம். எ , எல். டி. (Curator, Sri T. Chandrasekara Dikshitar, M.A.L.T.) அவர்கள், இதில் சம்மந்தப்பட்ட இன்னும் பெரிய மேல் அதிகாரிகள் முதலியோரும் விசேஷ நன்றி பாராட்டப்படத் தக்கவர்களாக விருக்கின்றார்கள். இவ்விதமாக இவர்களைப் பாராட்ட, இந்த நூலால் அதிக நன்மையை அடையப்போகின்ற பொது ஜனங்களும் கடமைப்பட்டிருக்கின்றார்களேயாகும். இந்தப் பொதுஜன உபகாரிகள் நீண்ட ஆயுளை உடையவர்களாகி இது போன்ற சர் காரியங்களை இன்னம் இன்னம் அதிகமாகச் செய்வதுடன், இவர்கள் தங்களுடைய வாணுட்களுக்குப் பிறகுகூட அழியாத கீர்த்தியையும் பெயரையும் நீடூழி காலம் யுடையவர்களாகவும் இருக்கக்கூட கடவுள் அருள் செய்வார் என்று பிரார்த்திக்கப்படுகின்றது. மிகவும் சிறந்த மதிப்புள்ள இந்த சப்தரிஷி நாடி நூலை அச்சிட்டு வெளிப்படுத்திய அதிகார கனவான்களின் கூட்டத்திற்கும் (coterie of official gentlemen), ஜோதிட சாஸ்திரத்தின் பூர்வீகமான கிரந்த கர்த்தர்களுக்கும் சப்தரிஷிகளுக்கும் என்னுடைய அன்பார்ந்த வந்தனத்தையும் நமஸ்காரத்தையும் (Salutation) தாழ்மையுடன் இதனுல் நான் தெரிவிக்கின்றேன்.

C. G. ராஜன்

(என்ற C. கோவிந்தராஜன்)

சென்னை, 1956-ம்வுப ஜூன்மீ 24உ.

ஸ்ரீ:

ஸப்தரிஷி நாடி.

Vol. IV.

கடக லக்னம்.

ஜாதகம் 1.

1. பொன்விடை மதியும் தேளில் புகர்சாடி பூமன் மானில்
மன்புதன் ராகு கெண்டை மந்தனும் சிகியும் பெண்ணில்
துன்ரவி ஆட தாகத் துலங்கிட ஜன்மம் நண்டு
இன்னவாறு நவக்கோள் நின்றுல் இயம்புவீர் பலனைத் தானே.

புதன் ராகு	சூரியன்	குரு	
சுக்கிரன்	இராசி சக்கரம்		லக்னம்
செவ்வாய்			
	சந்திரன்		சனி கேது

ஸ்வஸ்தி ஸ்ரீ ஜய வருஷம் சித்திரை மாதம் திங்கட்கிழமை பகல் நாழிகை 17-க்கு மேல் 22-க்குள் ஜெனனம்.

ஆங்கிலத் தேதி 23–4–1894.

நவக்கிரஹங்களின் பாதசாரம்.

அசுவினி 4-இல் சூரியன். கேட்டை 1-இல் சந்திரன். அவிட்டம் 1-இல் செவ்வாய். ரேவதி 1-இல் புதன். ரோஹிணி 1-இல் குரு. பூரட்டாதி 2-இல் சுக்கிரன். சித்திரை 2-இல் சனி. ரேவதி 1-இல் ராஹு. ஹஸ்தம் 3-இல் கேது.

நக்ஷத்திரம் கேட்டை. புத தசையில் இருப்பு வருஷங்கள் பதினாறு, மாதங்கள் ஏழு, நாட்கள் ஆறு.

1. குரு விருஷபத்திலும், சந்திரன் விருச்சிகத்திலும், சுக்கிரன் கும்பத்திலும், அங்காரகன் மகரத்திலும், புதனும், ராகுவும் மீனத்திலும், சனியும், கேதுவும் கன்னியிலும், சூரியன் மேஷத்திலும், உதய லக்கினம் கடகமுமாக இவ்வாறு நவக்கிரஹ நிலைகள் இருக்க, இச் ஜாதகபலனைக் கூறுவீர்களாக.

2. காதலி கேட்கும் போது கௌசிகர் சொல்லு கின்றார்
மேதினி லாண்பால் ஜன்மம் விளம்புமில கீழ்மேல் வீதி
கோதிலாத் தெற்கு வாசல் குறைதலை மாரி மேற்கில்
நீதியாய்க் குணக்கில் காளி நிகழ்த்துவோ மிதுவல் லாமல்.

2. இவ்வாறு உமைதேவி கேட்கும்போது கௌசிகர் என்ற முனிவர் பதிலளிக்கின்றார். இவ்வாறு கிரஹ நிலையில் ஆண் குழந்தை ஜனிப்பான். வீதி, கிழக்கு மேற்கில் அமைந்திருக்கும். அவன் ஜனித்த வீடு தெற்கு நோக்கி இருக்கும். வீட்டிற்கு மேற்குத் திசையில் மாரியம்மன் கோயிலும், கீழ்த்திசையில் பத்திரகாளிகா தேவியின் ஆலயமுமிருக்கும். மேலும் பலன்களைச் சொல்லுகின்றோம்.

3. வடகீழ்ப் பால் கணேசன் வாசம் வடக்கினில் ஓடை காணும்
திடமுள சோலை யுண்டு தக்ஷிணம் நதியு முண்டு
அடவுடன் சிற்றூர் தன்னில் அணுகிய கூரை வீட்டில்
இடமது இரண்டு பாகம் பாலனு மூதிப்பா னென்றோம்.

3. வட கிழக்கில் ஸ்ரீகணேசரின் ஸந்நிதியும், வடதிசையில் ஓர் ஓடையும் இருக்கும். தென் திசையில் அடர்ந்த சோலையும் ஒரு நதியும் இருக்கும். இவ்வாறு சுற்றுப்புறங்கள் அமைந்த ஒரு சிறிய கிராமத்தில் கூரை வீட்டில் இடது பக்கத்திலுள்ள இரண்டாவது அறையில் அப்பாலகன் பிறந்திருப்பான்.

4. உதிப்பனும் தீயின் வம்சம் [1] ஊமையே கேட்பாய் யோகம்
பதித்திடு தந்தை யோகம் பருகிய அன்னை யோகம்
விதித்திடு களத்ர புத்ரர் விளங்கிய முன்பின் ஜன்மம்
கதித்திடு துணைவர் யோகம் கழறுவோ மிந்நூல் தன்னில்.

4. உமாதேவியே! இப்பாலகன், வன்னிய குல க்ஷத்திரியர் என்று சொல்லப்படும் சாதியில் பிறந்திருப்பான். மேலும், இவனுடைய தந்தை, தாய், மனைவி, சந்ததி, முற்பிறவி, மறுபிறவி, ஸஹோதரர்கள் இவர்களைப் பற்றி இந்நூலில் சொல்லுகின்றோம். கேளுங்கள்.

5. தந்தையின் குணத்தை யாங்கள் சாற்றுவோம் சிவந்த மேனி
பந்தமாய் ஒடிச்சல் தேகி பாரினில் ஊகை சாலி
சந்ததம் பித்த ரோகி தாட்சிண்யன் ஊக சாலி
வந்தவர்க் கன்ன மீவன் மனவர்ம மில்லா னென்றோம்.

---

[1] உமை என்பது யாப்புநோக்கி ஊமையென நீண்டது.

5. இப்பாலகனது பிதா சிவந்தசரீரமுடையவன். அவனது உடல் மெலிந்திருக்கும். மிக்க மதியூகம் உள்ளவன். எப்பொழுதும் பித்தரோகத்தால் கஷ்டப்படுவான். எல்லோருக்கும் நல்லவனாக நடந்துகொள்வான். தன் வீட்டிற்கு வந்தவர்களுக்கு இல்லையென்று சொல்லாமல் அன்னதானம் செய்வான். மனத்தில் ஒருவரிடத்தும் பகைமையைக் கொள்ளாதவன்.

6. நகைவான் தனவா னாகும் எவர்க்குமே நண்ப னாகும்
நாகரி கங்க ளுள்ளான் நற்பந்து மெச்ச வாழ்வன்
பாகமாய்ப் பேச வல்லன் பாரிய நிஷ்ட முள்ளான்
ஓகையாய்ப் பூமி சேர்ப்பன் மைத்துன னில்லா னென்றோம்.

6. அன்னதானம் தவிர, மற்ற தானங்களையும் செய்பவன். பணக்காரன். உயர்வு தாழ்வு பாராட்டாமல் எல்லோரிடத்திலும் நண்பனாகப் பழகும் சுபாவமுள்ளவன். நாகரிகமாக நடந்துகொள்வான். பந்துக்கள் கொண்டாடும்படி வாழ்க்கை நடத்துவான். அழகாகப் பேசுவான். மனைவியினிடத்தில் அன்புள்ளவன். ஏராளமாக நிலங்களைச் சேர்ப்பான். மைத்துனன் இல்லாதவன். (அஃதாவது இப்பாலகனுக்கு மாமன் இல்லை என்பது கருத்து.)

7. ஆள்கார ருடைய னாகும் அதிகார மில்லான் நல்லன்
நீள்புவி யதிகம் சேர்ப்பன் நித்தியம் சிவத்தைப் பேணும்
சீலமு மில்லா னென்றோம் சித்தினி சாதி யாவன்
ஏலவே அற்ப வஸ்து இவனுமே விரும்பு வானும்.

7. மிக்க சேவகர்களை உடையவன். ராஜாங்க உத்யோகத்தில் இருக்கமாட்டான். பூமியைச் சேர்ப்பதில் ஊக்கமுள்ளவன். எப்பொழுதும் பரமசிவனைத் தியானிப்பான். (அஃதாவது சைவமதத்தைச் சார்ந்தவன் என்பது கருத்து.) சீலமுள்ளவன். சித்தினி என்ற ஒருவகை மனிதன். (இவன் மிருதுவான தன்மையும் நடத்தையும் வாய்ந்தவன். சண்டையிடும் குணமில்லாதவன் என்பது கருத்து.) முன்னோர்கள் கையாண்ட பொருள் மிகச் சிறியதாக இருப்பினும் அதைப் பெரியதாக எண்ணி விரும்பும் சுபாவமுள்ளவன்.

8. இன்னவன் செங்கை தன்னில் இலங்கிடு மச்ச ரேகை
மன்னவன் விரலில் தோடம் வந்திடும் இதுவல் லாமல்
சொன்னசொல் கேட்பா னாகும் துராசையு மில்லா னாகும்
பன்னியே பேச வல்லான் பார்வதி மேலுங் கேளே.

8. இப்பாலகனின் பிதாவின் கையில் மச்ச ரேகை விளங்கும். விரலில் தோஷம் ஏற்படும். பிறர் சொல்லும் வார்த்தையைச் செவி சாய்த்துக் கேட்பான். கெட்ட ஆசை யில்லாதவன். மேலும், தான் பேசவிரும்பும் விஷயத்தை நன்றாக விவரித்துப் பேசும் இயல்புள்ளவன்.

9. காரக தேக முள்ளான் கனத்தவர் நேசங் கொள்வன்
ஏருகள் விருத்தி செய்வன் இவனுக்கு மூல ரோகம்
கூறு முன் கோபம் கொஞ்சம் குடும்பத்தை விருத்தி செய்வன்
தேரிய வழியில் நிற்பான் தீரனும் தியாகி யாமே.

9. காரக தோஷமுள்ள சரீரம் வாய்ந்தவன். பெரிய மனிதர்களுடன் நட்புக் கொள்வான். ஏர்காளைகளை நன்ருக வளர்ப்பான். மூலரோகமும் இருக்கும். சிறிது முன்கோபியாவான். குடும்பத்தைப் பலத்துறைகளிலும் விருத்திசெய்வான். பழைமையான பழக்கவழக்கங்களை அனுஷ்டிப்பான். மிக்க தைரியசாலியாகவும் பிறருக்காகத் தன் சுகத்தை இழப்பவனுகவும் இருப்பான்.

10. இப்படி முனிவர் கூற ஈச்வரி கேட்க லுற்ருள்
செப்புவாய் ரோகம் வந்த சேதியைச் சொல்லு மென்ன
அப்பணி சடையோன் தேவி அருளுவோங் கேளு மம்மா
மெய்ப்புடன் முன்னூழ் தன்னில் மேவின தோஷத் தாலும் ;

10. பார்வதிதேவி கேட்கின்ருள். இவனுக்குப் பிணி வரக் காரணம் யாது? சொல்லும், எனப் பார்வதி கேட்குங்கால், முனிவர் கூறுகின்ருர். தேவியே! கேளுங்கள். இவனுக்கு நோய் வரக் காரணம் முன் பிறவியில் செய்த பாவத்தாலும் ;

11. இச் சென்மம் தன்னி லேதான் இலகிய வினையி ஞலும்
உச்சித பிணியும் நேரும் உரைக்கிருே மந்தச் சேதி
அச்சுதன் தங்கை யாளே அவனுடை முன்ஜன் மத்தை
மிச்சமாய்ச் சொல்லு கின்றேன் மெல்லியே மேலுங் கேளே.

11. இந்த ஜன்மத்தில் செய்த வினையாலும் உச்சிதபிணியும் (தலையுச்சியில் ரோகம் அல்லது எச்சிலால் வரும் க்ஷயம் முதலிய நோய்) அவனுக்கு வந்திடும். முன் ஜன்மத்தைப் பற்றிய வரலாற்றைக் கூறுகின்றேன். கேளுங்கள்.

12. இன்னவன் முன்ஜன் மத்தை இயம்புவோம் தவளே தென்பால்
நன்னிய பேரூர் தன்னில் நாயகர் மிலேச்சர் வம்சம்
தன்னிலே யுதித்து மேலும் தனம் பூமி யுள்ளா ஞகி
அன்னவன் மனைவி யோடு அனேகமாய்ச் செட்டு செய்து ;

12. இவன் முன் ஜன்மத்தில் ஒரு பெரிய கிராமத்தில் மிலேச்சர் வம்சத்தில் பிறந்து, நிலமும் பணமும் உள்ளவனுக இருந்து, தன் மனைவியோடு வாழ்ந்து வந்தான். அவன் வியாபாரம் செய்து வருகையில் ;

13. பிரபல கீர்த்தி யாகிப் புத்திர ருள்ளா ஞகி
வருவோர்க்கு அன்ன மீந்து வாழ்ந்திடு நாளிலே தான்
உரிமையாய் வந்த ஊழை உரைக்கிருேம் கேளு மம்மா
பெருவயி ரோனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

13. இவன் நற்புகழ் உள்ளவனுகவும். புத்திர பாக்யம் பெற்றவனுகவும், வீடு நாடிவருபவர்களுக்கு அன்னமிடுபவனுகவும் வாழ்ந் திருக்கையில், இவனுக்கேற்பட்ட வினையைச் சொல்லுகின்றேன். விஞயகரை உலகுக்கீந்த பார்வதி தேவியே! கேட்டருளவேண்டும்.

14. அந்நகர் கோரி [1] தன்னில் ஆளனி ல்லாத பெண்ணை
இன்னவன் போகம் துய்த்தான் இவளுக்குக் கருவு தங்கிக்
கன்னிக்குக் கர்ப்ப முற்ற காளையு மவிழ்த மீய
நன்னிய கர்ப்பம் நீங்கி நங்கையு மரண மானுள்.

14. இவன் அவ்வூரிலுள்ள கோரியில் கணவனில்லாத ஒரு பெண்ணுேடு போகம் செய்ய, அவளுக்குக் கர்ப்பம் ஏற்பட, அதைக் கலைப்பதற்காக அவளுக்கிவன் மருந்து கொடுக்க, கருவும் சிதைந்தது. அந்தக் கைம் பெண்ணும் இறந்தாள்.

15. ஆகையா லந்த தோஷம் அணுகிற்று இவனுக் கம்மா
யோகமும் நீங்கிப் பின்பு உலகினில் தரித்திர ஞகி
வேகமா நதியின் பக்கல் விளங்கிய காஞ்சி தன்னில்
ஏகமா தீர்த்தம் கீழ்ப்பால் இக்குல ஆல யத்தில் ;

15. பார்வதி தேவியே! இச்செயலால் இவனுக்கு தீய பாபமேற்பட்டது ஆகையால் அவனனுபவித்துவந்த யோகம் நீங்கி ஏழையானுன். வேகவதி நதியின் கரையில் அமைந்துள்ள காஞ்சிமாநகரில் இவர்கள் குலத்து ஆலயத்தில் ;

16. தீபங்கள் பார்த்து வந்து திரிகாலம் ஜலம் கொணர்ந்து
கோபமில் லாத யோகம் கூறுவோர்க் களித்து வந்தான்
ஆவலாயத் தரும வேலை அவனுமே நடத்தி வந்து
பாவங்கள் சிலது நீங்கிப் பாரினில் மரண மாகி;

16. தீபங்களை ஏற்றிவைத்தும்; அங்கு நல்லுபதேசம் செய்யும் பெரியோர் களுக்குத் தண்ணீர் முதலியவை கொணர்ந்தும் வாழ்நாளைக் கழித்தான். மிக்க சிரத்தையோடும் ஆவலோடும் மற்றைய தருமவேலைகளையும் செய்து வந்தமையால் இவனது பாவங்கள் நீங்கின. சிறிதுகாலத்திற்குப் பிறகு மரணத்தை இவன் அடைந்து,

17. கஞ்சனுல் வரையப் பட்டுக் காளையு மிச்சென் மத்தில்
மிஞ்சிய சத்திரிய வம்ச மீதினி லுதித்தா னென்ருேம்
தஞ்சமா யிச் சென்மத்தில் சார்ந்ததோர் வினையைக் கேளாய்
அஞ்சாமல் ஏகாதசி அமாவாசை காலம் தன்னில்,

17. இச்சென்மத்தில் மேலே சொல்லப்பட்ட வன்னியகுல க்ஷத்திரிய வமிசத்தில் பிறந்து வாழ்க்கையை நடத்துகையிலேற்பட்ட பாவத்தைச் சொல்லுகிருேம். கேட்டருளவேண்டும். ஏகாதசியிலும் அமாவாசையிலும் இவன் சிறுதும் பயமின்றி ;

---

[1] கோரி: பிரேதத்தைப் புதைத்த இடம், மசூதி.

18. போகங்கள் துய்த்து வந்தான் புகலிரு வினையி னாலே
மேக ரோகங்க ளுண்டு வித்தகன் தனக்கு மேதான்
பாகமாய்ச் சாந்தி தானும் பகருவோம் பின்னாலே
தோகை வாகனனைப் பெற்ற சுந்தரி யாளே கேளாய்.

18. தன் மனையாளுடன் போகங்களை யனுபவித்தான். ஆகையால் இவ னுக்கு மேகரோகங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்நோய்கள் இவனை விட் டகல தக்க சாந்தி பரிஹாரங்களைப் பிறகு கூறப்போகின்றோம். முருகக் கடவுளை பெற்ற தேவியே! மேலும் கேளுங்கள்.

குறிப்பு.—இதுவரை கடக லக்னத்தில் பிறந்த பாலகனது தந்தையைப் பற்றிக் கூறினர். இனி, இப்பாட்டினால் ஸஹோதரர்களைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்லுகிறார்.

19. இன்னவன் துணைவர் தம்மை இயம்புவோ மிருநான் காகும்
தன்னிலே ஆண்பா லொன்று சாற்றினோம் தீர்க்க மாகும்
உன்னித அவன் குணத்தை உரைக்கிறோ மிரண்டாம் பாகம்
மன்னுமிக் குணத்தா னுக்கு முந்தனு மாறுஞ் ஜன்மம்.

19. இந்தப் பாலகனின் ஸஹோதரர்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். எட்டு ஸஹோதரர் ஒரு ஆண் ஸஹோதரர் தீர்க்கமாவர். அந்த ஆண் ஸஹோ தரனின் குணங்களை இரண்டாம் பாகத்தில் சொல்லுகின்றோம். இந்த ஜாதகனுக்கு அவன் ஸஹோதர வரிசையில் ஆறுவதாக ஜனிப்பான்.

20. உதிப்பனோ மிவனே யென்றோம் உரைக்கிறோ மிவன்கு ணத்தை
நிதம் சுக புசிப்பா னாகும் கீழ்நிலம் விருத்தி செய்வன்
ததிநெய்பா லிஷ்ட முள்ளான் சஞ்சல மில்லா னாகும்
பதியது புதிதாய்ச் செய்வன் பாரினில் கீர்த்தி யேற்பன்.

20. இவ்வாறன கிரஹநிலையில், கடக லக்னத்தில் பிறந்த பாலகனின் குணத்தைக் கூறுகின்றோம். எப்பொழுதும் சுகத்தையனுபவிப்பான். நிலங்களை மேன்மேலும் விருத்தி செய்வான். தயிர், நெய், பால் இவை களில் மிக்க ஆசையுள்ளவனாக இருப்பான். மனத்தில் குழப்பமில்லாதவன். தான் வசிக்கும் வீட்டைப் புதிப்பிப்பான். நற்புகழ் உள்ளவனாவான்.

21. கல்வியு முடைய னாகும் காதலி யிஷ்ட முள்ளான்
இல்லையென் றுரைக்க மாட்டான் யாரையும் சினேகம் கொள்வன்
நல்லவ னாகி வாழ்வன் நற்பசு விருத்தி யுள்ளான்
சொல்லுமெய் நெறியுள் ளோனும் சீலனும் சிவந்த மெய்யன்.

21. கல்வியறிவு உடையவன். மனையாளிடத்தில் மிக்க காதல் கொண்ட வன். உதவியை நாடுபவர்களுக்கு இல்லை என்று கூறமாட்டான். எல் லோரிடத்திலும் நட்பு கொள்ளும் இயல்புள்ளவன். நல்லவன். பசுக்களை வளர்ப்பான். உண்மை பேசுபவன். சீலமுள்ளவன் அவன் தேஹம் சிவந்த நிறமுள்ளதாகும்.

22. தேகமும் ஒடிச்ச லுள்ளான் சீக்கிர நடையு முள்ளான்
போகவானு மூகை சாலி புண்ணிய மனத்த னாகும்
மோகமாய்த் தீர்த்தம் தோய்வன் மொழிகுவான் கட்டு வார்த்தை
தோகையர் மோக வானும் சுந்தரி யின்னம் கேளே.

22. மேலும், தேஹம் மெலிந்திருக்கும். அவனது நடை வேகமாக இருக்கும். நற்சுகங்களை அனுபவிப்பான். ஸமயோசித புத்தி யுடையவன். மனத்தூய்மை வாய்ந்தவன். புண்ணிய தீர்த்தங்களில் ஆசையோடு நீராடு வான். அவன், பேசுகையில், அடுக்குச் சொற்களை உபயோகிப்பான். பெண்க ளிடத்தில் ஆசை கொண்டவன். [ஆனால் தீயச்செயலில் இறங்கமாட்டான் என்பது கருத்து.]

23. இன்னன்ன இருபிறப்பு இசைத்திட்டோம் இளையோ னாகும்
கன்னலா மொழியு முள்ளான் காலனை யொத்த தேகன்
முன்னமே கோபமுள்ளான் முயற்சியா யாள்கள் சேர்ப்பன்
வன்மமு மில்லா னாகும் வண்டிவா கனமு முள்ளான்.

23. இவன் குழந்தைகளின் வரிசையில் இரண்டாமவனுவான. [அஃதா வது இவனுக்கு மூத்த ஸஹோதரி ஒருத்தி உண்டு.] சர்க்கரைப்போல் இனிய மொழிகளைப் பேசுபவன். திடமான உடலமையைப் பெற்றவன். கொஞ்சம் முன்கோபி. நம்பிக்கைவாய்ந்த சேவகர்களைத் தேர்ந்தெடுப்பான். மனத்தில் பகைமை யில்லாதவன். வண்டியும், மற்றைய சாதனங்களு முள்ளவன்.

24. ஜாதகன் துணைவர் தம்மைச் சாற்றுவோ மிருமூன்றாகும்
மேதினில் ஆண் பாலுந்தான் விளங்காது என்று சொன்னோம்
தீதிலாப் பெண்பால் நான்கு தீர்க்கமாம் என்று சொன்னோம்
கோதிலாத் துணைவர் சேதி கூறுவோம் மூன்றும் பாகம்.

24. ஜாதகனின் ஸஹோதரிகள் அறுவர். ஸஹோதரன் ஒருவன். அவனுக்கு ஸந்ததி இராது. ஆறு ஸஹோதரிகளில் நால்வர் தீர்க்காயு ளுடன் ஜீவித்திருப்பார்கள். இவர்களைப் பற்றிய மற்றைய வரலாறுகளை மூன்றும் பாகத்தில் சொல்லுகின்றோம்.

25. இவனுடை மணத்தின் காலம் இயம்புவோ மொரு பாணறில்
அவனியில் உள்ளூர் தன்னில் அவன் துணைவி வர்க்கந்தன்னில்
பவமுள கன்னி தன்னை பாலகன் மணமே கொள்வன்
நவனியில் புத்ர பாகம் நாட்டுவோம் கேளு மம்மா.

25. இவனது விவாஹத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம் இவனுடைய சொந்த ஊரிலேயே அவளும் உதித்திருப்பாள். மேலும் நல்ல அழகு வாய்ந்தவள், இவனுக்கு அந்தப்பெண் முன்பே உறவாக இருப்பாள். [ஸஹோதரியின் குடும்பத்தில் பிறந்திருப்பாள்].

26. புத்திர விருத்தி தன்னைப் புகலுவோம் ஆண்பா லொன்று
சத்தியும் மூன்று மாகும் சதமாகும் நான்கும் தானும்
சித்தமாய் மூன்று நஷ்டம் செப்புவோ மிவனுக் கம்மா
அத்தியைப் பெற்ற மாதே அம்பிகை யாளே கேளாய்.

26. புத்திர விருத்தியைச் சொல்லுகின்றேம். ஆண் ஒன்று. பெண்கள் மூவர். இந் நால்வரும் தீர்க்காயுளுடன் இருப்பார்கள். விநாயகக் கடவுளைப் பெற்ற பார்வதி தேவியே ! இவர்களைத் தவிர மூன்று குழந்தைகள் பிறந்து இறந்துவிடும்.

27. மாதிரு குணத்தை யாங்கள் வரைகிறே மிருநி றத்தாள்
மேதினில் ஒடிச்சல் தேகி வித்தகி பொறுமை சாலி
தீதிலா குணத்தா ளாகும் சேயர்மேல் பிரிய முள்ளாள்
சூதுக ளெண்ணு நெஞ்சம் தோகையு மதிர்ஷ்ட முள்ளாள்.

27. இப்பாட்டில் இவன தாயைப்பற்றி சொல்லுகிறேம். கருத்த மேனியாள். மெல்லியவள். பொறுமை குணம் வாய்ந்தவள். நற்குணம் உடையவள். குழந்தைகளை பிரியமாக வளர்ப்பாள். கள்ளம் கபடம் இல்லாதவள். மிக்க அதிருஷ்டமுள்ளவளாகவுமிருப்பாள்.

28. குடும்பத்தை ஆதரிப்பாள் குற்றங்கள் எண்ணு நெஞ்சம்
அடை மொழி கூறுளாகும் அன்னங்கள் போட வல்லாள்
நடையது நல்ல தாகும் நாதனுர் பக்தி யுள்ளாள்
தடை சொல்லாள் வரனுக் கேதரன் தாய்வர்க்க மீனமுள்ளாள்.

28. தனது குடும்பத்தை சரிவர பார்த்துக்கொள்வாள். பிறர் குற்றங்களைக் கவனிக்காதவள். அழகாக சித்திரித்துப் பேசுபவள். வந்தவர்களுக்கு அன்னமிடும் இயல்புள்ளவள். நடை அழகுள்ளவள். கணவனிடத்தில் பக்தி கொண்டவள். ஆகையால் கணவன் சொன்ன வார்த்தைக்குத் தடை சொல்லாதவள். தாய் வர்க்கத்தில் வமிச விருத்தி இல்லாதவள்.

29. இன்னவள் துணைவர் தம்மை இசைகிறேம் ஆண்பா லொன்று
கன்னியு மவ்வா றுகும் கழறினே மிரண்டு தீர்க்கம்
பின்னமாம் மற்ற வைந்தும் பலக்காது என்று சொன்னேம்
உன்னித மவள் குடும்பம் உரங்கிடும் என்று சொன்னேம்.

29. இவளுக்கு ஸஹோதரன் ஒருவன், ஸஹோதரிகள் ஆறு. இவர்களில் இருவருடைய வமிசம் விருத்தியாகும். மீதி ஐவரும் வமிசமற்றவர்களாவார்கள். ஆகவே இவள் பிறந்த குடும்பம் விருத்தியடையாது.

30. ஜயமுனி எழுந் திருந்து திடுக்கென உரைக்க லுற்றுர்
நவமதில் புந்தி நீச்சம் நற்கருங் கோளும் கூட
தயையுட னஷ்ட மத்தோன் சனியாகி யவரைப் பார்க்க
வியமான மாமன் தன்னை விளம்பினீர் தீர்க்க மாக.

30. "ஜயமுனி" என்பர் திடீரென தனது ஆசனத்திலிருந்து எழுந்து ஆக்ஷேபிக்கின்றுர் இந்த கடக லக்னத்திலுதித்த பாலகனுக்கு மாமன் இருப்பதற்குக் காரணம் இல்லையே ! ஏனெனில் மாதுலகாரகன் என்று சொல்லப்படும் புதன் ராகுவுடன்கூட ஒன்பதாமிடத்தில் நீசனுக இருக்கின்றுன் மேலும் எட்டாமிடத்திற்கு அதிபதியான சனியினுல் பார்க்கப்படுகின்றுன். ஆகவே இந்த ஜாதகனுக்கு மாமன் கிடையாதென்று சொல்ல வேண்டும். எக்காரணம்பற்றி ஆண்பால் ஒன்று எனச் சொன்னீர்கள் ?

31. எப்படிச் சொன்னீ ரையா என்றுமே கேட்கும் போது
செப்புவார் விச்வா மித்திரர் ஜாதகன் ஜனிக்கா முன்னம்
ஒப்புடன் மாமன் தானும் உரைந்தனன் சோங்கின் மேலே
மெய்ப்புடன் செல்வா ருகும் மேவியே மரண மாவான்.

31. என்றிவ்வாறு ஜயமுனிவர் ஆக்ஷேபம்செய்ய விச்வாமித்திர முனிவர் பதிலுரைக்கின்றுர். இந்த ஜாதகன் பிறப்பதற்குமுன்பே இவன் மாமன் ஒரு படகின்மேலே ஏறிச் செல்லும்போது மரணமடைந்தான். ஆகையால் ஆண்பால் ஒன்று எனக்கூறியதில் தவறு இல்லை. ஆனுல் புதன் நீசனுக இருப்பதாலும் சனியினுல் பார்க்கப்படுவதாலும் இவன் மாமன் இறந்தான். ஆகையால் இவன் பிறந்த குடும்பம் விளங்கவில்லை என்று கூறியதும் உண்மைதான். இவ்வாறு விசுவாமித்திர முனிவர் ரிஷிகளுக்குள் ஏற்பட்ட விவாதத்தில் தீர்மானம் செய்தார்.

32. அவனுட குடும்பச் சேதி அரைகிறேம் இல்லம் பாழாம்
நவனியில் இவனுர் செல்வர் நசித்திடும் யாவும் தானும்
பவமுள மாது வுக்கு பகருவோம் முன் சென்மத்தை
தவமுடை யோரைக் காக்கும் தயாபரி மேலுங் கேளே.

32. ஆகவே கருணையுள்ள பார்வதி தேவியே ! அந்த மாமன் அல்பாயுளுள்ளவனுக இறந்தமையால் அவன் வீடு பாழாயிற்று. சொத்துக்கள் யாவும்சிதைந்தன. ஆயினும் இவனுடைய [தாயின்] முன் ஜன்மத்தைப் பற்றி செப்புகின்றேம். கேட்டருள்வீர்களாக.

33. சோழ நாட்டதனிலே தான் செழிப்புள்ள ஆழி தன்னில்
நேயமாய்ச் சூத்ர வம்சம் நிகரில்லா பூமி பெற்று
ஆயவே புத்திர ருண்டாய் ஐயங்கள் அதிகம் செய்து
தீயமாம் குண மில்லாமல் செல்வதி வாழ்ந்தா ளென்றேம்.

33. இவள் சோழ நாட்டில் செழிப்புள்ள ஒரு கிராமத்தில் சூத்திர வமிசத்தில் பிறந்து, ஏராளமான பூமியை அடைந்து, புத்திர பாக்கியத்தையும் பெற்று, நிறையதானங்கள் செய்து தீய குணங்களில்லாதவளாக வாழ்ந்து வந்தாள்.

34. வருவோர்க்கு அன்ன மீந்து வள்ளல்மேல் பக்தி யுண்டாய்
திருமகள் விலாசம் பூண்டு தேவியும் வாழ்ந்து பின்பு
மறுமையி லடைந்து பின்பு வந்தவ ளிவளே யென்றேம்
அருமையாய்பின் சென்மத்தை அரைகிறேம் கேளுமம்மா.

34. வருவோர்க்கு அன்னதானம் செய்தும், கடவுளிடத்தில் பக்தி கொண்டும், லக்ஷ்மீகடாக்ஷத்தினுல் ஏராள சொத்தை அடைந்து அந்த சோழ நாட்டிலே வாழ்ந்த பிறகு இச் ஜன்மத்தில் இவனை புத்திரனுக அடைந்தாள். இவனுடைய பின் சென்மத்தைப் பற்றிக் கூறுகின்றேம்.

35. தனிகையின் மலைக்குக் கீழ்பால் சாற்றிய பேரூர் தன்னில்
அனையவே கங்கை வம்சம் அவளுமே யுதித்து மேலும்
இணையிலா செல்வம் பெற்று இவளுமே வாழ்வா ளாகும்
கனமுடன் சாதகர்க்குக் கழறுவோம் முன் சென்மத்தை.

35. திருத்தணி மலைக்கு கீழ்புரம் உள்ளதோர் பெரிய ஊரில் கங்கை வமிசத்தில் இவள் பிறந்து பெரும் செல்வம் படைத்து சிறப்புடன் வாழ்வாள் கடகலக்ன மகனின் முன் ஜன்மத்தைப்பற்றி சொல்லுகின்றேம்.

36. சாதகன் முன் சென்மத்தைச் சாற்றுவோ மருணை கீழ்பால்
நீதியாய்ப் பேரூர் தன்னில் நிமலனு மிக் குலத்தில்
வேதனை யில்லாதாகி விளைபுல மதிகம் பெற்று
கோதிலா செட்டு செய்து குலத்துக்குத் தலைவனுகி
நீதியாய் வாழ்ந்தா னென்றேம் நிமலியே மேலுங் கேளே.

36. இச் ஜாதகன் திருவண்ணுமலைக்குக் கீழ்புறம் உள்ளதோர் நல்லூரில் இதே குலத்தில் பிறந்து, சிறிதும் கஷ்டமின்றி அதிக நிலங்களை அடைந்தும், வியாபாரம் செய்தும் வாழ்ந்து வந்தான். இவன் அவன் உதித்த குலத்திற்குத் தலைவனுகவும் விளங்கினுன்.

37. மனைவி மைந்தரு முண்டாகி மகிழ்ச்சியாய் வாழு நாளில்
அனையவே ஊழி தானும் அரைகிறே மிவனுக்கே தான்
கனமுள மார்க்கம் தன்னில் கள்ளரால் பயந்துமே தான்
வனிதையர் பிரும்ம மாது வரவவை இவனுங் கண்டு.

37. மனைவியோடும் மைந்தர்களுடனும் சுகித்து வாழ்ந்திருக்கும் காலத்தில், பாதையில் பிரம்ம மாது ஒருத்தி திருடர்களுக்கு பயந்து ஒடி வருவதைப் பார்த்து,

38. ஆதரித் தானு மந்த அதிதியும் மதலை தன்னை
வேதனை யில்லா தாகி வஸ்திரம் பொருளு மீந்து
நீதியா யுபசரித்தான் நிமலியும் சொல்லுகின்ருள்
தீதிலா மறு சென்மத்தில் துணைவியா யுதிப்பேனென்ருள்.

38. அவளையும், அவளது குழந்தையையும் கவலையில்லாதவர்களாகச் செய்து, வஸ்திரத்தையும் பொருள்களையும் அவர்களுக்குக் கொடுத்து உதவினுன். இவ்வாறு உபசரிக்கப்பெற்ற அவள் மறு ஜன்மத்தில் நான் உனக்கு சகோதரியாக வருவேன் என்ருள்.

39. ஆகையா லந்தமாது அம்மொழி தப்பாமல் தான்
பாகமா யிவனின்கூட பிறந்தனளிரட்டை சென்மம்
மோகமாய் சாதகர்க்கு மொழிகிறே மச்சென் மத்தில்
தோகைவா கனத்தோனுக்குத் திருப்பணி அனந்தம் செய்து.

39. அவளும் சொன்ன வார்த்தை தப்பாமல் இவனுடன் பிறந்தாள். அச் ஜன்மத்தில் இச் ஜாதகர் செய்த நற்காரியத்தைச் சொல்லுகின்றேம். மயில் வாஹனனுகிய ஸ்ரீ சுப்பிரமணிய பகவானுக்கு ஏராளமான கைங்கர்யம் செய்து.

40. மரணமு மாகி யேதான் வந்தவ னிவனே யென்றேம்
பெருமுனி யிவ்வாறு கூற பார்வதி கேட்க லுற்ருள்
அருமையாய்க் கரும காலம் அறிவிப்பீ ரென்று கேட்கத்
திறமையாய்ச் சொல்லு கின்றேம் தேவியே கேளு மம்மா.

40. மரணத்தை அடைந்து இப்பொழுது இங்குவந்து உதித்தான். என்றிவ்வாறு முனிவர் கூற பார்வதி வினவினுள். இவனது கருமகாலத்தைச் சொல்லுங்கள். முனிவர் கூறுகின்ருர்.

41. தந்தையின் மரண காலம் சாற்றுவோம் முப்ப தாண்டில்
வந்திடும் புகரிலேதான் மதிபுசிப் பதனில் கண்டம்
பிந்திய மாதரு வுக்குப் பேணவே முப்பா னென்பான்
முந்திய புகரில் மந்தன் முயற்சியாய்ப் புசிக்கு நாளில்;

41. இந்த ஜாதகனின் முப்பதாவது வயதில் இவனுடைய தந்தை மரணமடைவான். இவனுக்குச் சுக்கிரதசையில் சந்திரபுக்தி நடைபெறும்போது இவன் தந்தைக்குக் கண்டம் (பெரிய ஆபத்து) ஏற்படும். இவனது 39-வது வயதில் இவன் தாய் மரணமடைவாள். அப்பொழுது இந்த ஜாதகனுக்குச் சுக்கிரதசையில் சனிபுக்தி நடைபெறும்.

42. சாதகன் மரண காலம் சாற்றுவோம் அறுபான் மூன்றில்
மேதினி லானி மாதம் வளர்பிறை சதுர்த்தி தன்னில்
கோதிலா மரண மாவன் கூறுவோ மிவன் பின்ஜன்மம்
மாதவர் போற்று கின்ற விரிஞ்சி நாடதனி லேதான்.

42. ஜாதகனின் மரண காலத்தையும் சொல்லுகின்றேம். அறுபத்து மூன்றும் வயதில் ஆனிமாதத்தில் சுக்லபக்ஷத்தில் சதுர்த்தி திதியில் இவன் மரணமடைவான். இவனது மறு ஜன்மத்தைப்பற்றியும் கூறுகின்றேம். முனிவர்கள் போற்றும் விரிஞ்சிநாட்டிலே.

43. வைசிய குலமு தித்து மனைவிமைந்தருமு ண்டாகி
அதிகமாய்ச் செட்டுச் செய்து அதிபனுமே வாழ்வா னுகும்
சதியிலா முனிவர் கூறச் சாற்றுவா னம்மன் தாமும்
விதியினுல் தந்தை ஊழை விளம்பிபுவீர் அதற்குச் சாந்தி;

43. வைசிய சாதியில் பிறந்து, மனைவியையும் புத்திர பாக்கியத்தையும் அடைந்து, வியாபாரத்தை விசேஷமாகச்செய்து, மிக்க சுகித்து வாழ்வான். இவ்வாறு முனிவர் கூறியதும், பார்வதிதேவி வினவுகின்ருள். இவனுடைய தந்தையின் வினைகளைப்பற்றிச் சொன்னீர்கள். அவைகளுக்குத் தக்க சாந்தி பரிஹாரங்களையும் சொல்லுங்கள், என்று;

44. சொல்லுவீ ரென்று கேட்கச் செப்புவார் விச்வா மித்திரர்
இல்லத்தில் கிரஹ சாந்தி இவனுமே செய்து பின்பு
நல்லதோர் வங்க பஸ்மம் நாயகன் புசிப்பா னுகில்
நில்லாது ரோகம் தானும் நிமலியே மேலுங் கேளே.

44. இவ்வாறு உமாதேவி கேட்டவுடன், விசுவாமித்திரமுனிவர் கூறுகின்றார். இவன் சாஸ்திரமுறைப்படி வீட்டில் நவக்கிரஹ சாந்திசெய்து, அதற்குப்பிறகு நல்ல முறையில் செய்யப்பட்ட வங்கபஸ்பத்தை முறைப்படி உட்கொள்ளுவானாகில் இவனுக்கு முன்சொன்ன நோய்கள் நீங்கும். மேலும் சொல்லுகிறோம், கேட்டருள்வீராக.

45. மருந்துளவ் விதங்கள் செய்யும் வகைதனைச் சொல்லு மென்ன
அறைகிறோம் வெள்வங் கத்தை அரைப்பொடி போலச் செய்து
கருநெச்சி மூலி யாலே கஜகுழி புடங்கள் வைக்கப்
பெருமையா யவிழ்த மாகும் பின்புதான் சொல்லக் கேளாய்.

45. வங்கபஸ்பம் செய்யும் முறையைச் சொல்லும், என பார்வதி கேட்க, முனிவர் சொல்லுகின்றார். வெள்வங்கத்தைப் பொடியாகச்செய்து, கருநெச்சி வேருடன இரண்டு முழம் ஆழமுள்ள குழியில் வைத்துப் புடம் செய்தால் அது சிறந்த மருந்தாகும்.

46. சத்தியைப் பூசை செய்து சர்க்கரை யதனைச் சேர்த்துப்
பத்திய மில்லா தாகிப் பகருவாய் திங்க ளொன்று
சுத்திய வினையும் நீங்கும் சுந்தர தேக மாகும்
அத்தியைப் பெற்ற மாதே அருளுவோம் கேளு மம்மா.

46 பிறகு சக்திதேவியைப் பூசைசெய்து, வங்கபஸ்மத்துடன் சர்க்கரையைக் கலந்து, ஒரு மாதகாலம் புசிக்கவேண்டும். இவ்வாறு செய்தால், ஸ்ரீ விநயகரைப்பெற்ற தாயே ! அவனது வினைதீர்ந்து உடல் அழகுபெறும்.

47. சொற்படி செய்யா னுகில் தொடர்ந்த நோய் விருத்தி யாகும்
சொற்படி செய்வா னுகில் தூசுபோல் வினைகள் நீங்கும்
மெய்ப்புட னிவன்பின் ஜன்மம் விளம்புவோம் தணிகை தன்னில்
உற்பன வம்சத் தில்தான் உதிப்பனு யிவனே யம்மா.

47. இவ்வாறு செய்யாவிடில் வியாதி வளரும். நாம் சொன்னபடி சாந்திகளைச்செய்து மருந்தையும் புசிப்பானுகில் வினைகளும் தீரும். வியாதியும் நீங்கும். இவனுடைய மறுஜன்மத்தைக் கூறுகின்றோம். திருத்தணி க்ஷேத்திரத்தில் உத்தம வமிசத்தில் பிறப்பான்.

குறிப்பு.—இதுவரையில் கடக லக்கின ஜாதகனின் தந்தையைப்பற்றிக் கூறிவிட்டு இனிச் சில பாசுரங்களால் கடகலக்கினத்திலுதித்த ஜாதகனின் யோக பாவங்களைப் பேசுகிறார்.

48. ஜாதகன் யோகச் சேதி சாற்றுவோம் ஜனனம் தொட்டு
மேதினில் மரண மட்டும் வளர்பிறை போல செல்வம்
கோதிலா வறுமை யில்லான் குடும்பங்கள் சுபிக்ஷ முள்ளான்
தீதான குணங்க ளில்லான் ஜனங்களுக்குதவி செய்வன்.

48. இந்த ஜாதகனது பிறவி முதல் மரணம் வரையிலுள்ள யோகங்களைக் கூறுகின்றோம். இவனது செல்வம் வளர்பிறைச் சந்திரன்போல வளரும்.

ஆகையால் வறுமை இல்லாதவன். இவனது குடும்பத்தில் சிறிதும் ஆபத்து நேராது. குடும்பம் செழித்திருக்கும். தீயகுணங்களில்லாதவன். பொது மக்களுக்குப் பேருதவி செய்வான்.

49. தந்தையி னுஸ்தி தன்னைத் தானவன் விருத்தி செய்வன
சொந்தமாய் விசேஷ பூமி சுந்திரன் சேர்ப்பா னுகும்
தன்தனம் பூமி வீடு சகலமு மீராயி ரம்பொன்
ஈந்தையே இவனுக் குண்டாம் ஈசுவரி மேலுங் கேளே.

49. மேலும் தந்தையின் சொத்துக்களையும் விருத்தி செய்வான். தன் முயற்சியாலும் ஏராள பூமிகளைச் சேர்ப்பான். தான் சம்பாதித்த பணம்; நிலம் வீடு இவைகளின் மதிப்பு இரண்டாயிரம் பொன் [சுமார் ரூபாய் இருபதாயிரம்]. மேலும் கேளுங்கள்.

50. பிறந்தசேய் ஜனனகாலம் புதன்தசை யீரெட் டாண்டும்
நிறைந்திடு திங்கள் எழும் நாளது இருமூன் ருகும்
இருந்திடு பலனைக் கேளாய்ச் சித்திர வீடு செய்வன்
வரவர பூமி சேரும் வருந்துணை வர்க்கு மேதான்.

50. இவன் பிறந்த சமயத்தில் புதன்தசையில் மீதி வருஷம் 16, மாதம் ஏழு, நாள் 6. [ஆகவே கேட்டை நக்ஷத்திரத்தில் பிறந்தவன் என அறிய வேண்டும்.] இந்த புதனது தசையில் விசித்திரமான வீடு கட்டுவான். மேன்மேலும் பூமி சேரும். இவனது ஸகோதரர்களுக்கும் பூமி சேரும்.

51. சுபமுண்டு சாத கர்க்குச் சொற்பநோய் வந்து தீரும்
தவவித்தை அதிகம் நேரும் தந்தைக்கு ரோகம் காணும்
நவமணி சாந்தி யாலே நாடாது ரோகம் தானும்
அவனியில் பொருள்மூ லத்தால் அவன்பந்து விரோதம் காணும்.

51. ஜாதகனுக்கு மேன்மேலும் சுபங்கள் உண்டாகும். சிறிது நோயும் வரும். ஆனால் ஸ்திரமாக இராது. நல்ல கல்வியறிவு உடையவனாக இருப்பான். தந்தைக்கு முன் சொன்ன ரோகங்கள் நேரும். நவக்ரஹ சாந்தி செய்தால் நோய் நாடாது. ஆனால் இந்த ஜாதகனுக்கும் இவன் உறவினர்களுக்கும் பொருள் காரணமாக கலஹமுண்டாகும்.

ஜாதகம் 2

1. மந்திரி மதியும் வீணை மந்தனும் மேரு வாகப்
புந்திபான் சேயும் கெண்டை புகர்சாடி கருங்கோள் நீசம்
பந்தமாய்க் கேது உச்சம் பகர்ந்தது கடகம் ஜன்மம்
இந்தவாறு கிரகம் நின்ருல் இயம்புவீர் பலனைத் தானே.

புதன் சூரியன் அங்காரகன்		ராகு	குரு சந்திரன்
சுக்கிரன்	இராசி சக்கரம்		லக்கினம்.
சனி	கேது		

ப்ரஜோத்பத்தி வருஷம் பங்குனி மாதம் 7-ஆந் தேதி திங்கட்கிழமை பகல் நாழிகை 18-க்கு மேல் 23-க்குள் ஜனனம்.

ஆங்கிலத் தேதி 18–3–1872.

நவக்கிரஹங்களின் பாதசாரம்.

உத்திரட்டாதி 1-இல் சூரியன். புனர்வஸு 1-இல் சந்திரன். ரேவதி 2-இல் செவ்வாய். உத்திரட்டாதி 4-இல் புதன். புனர்வஸு 3-இல் குரு. அவிட்டம் 4-இல் சுக்கிரன். உத்திராடம் 1-இல் சனி. மிருகசீரிஷம் 1-இல் ராஹு, கேட்டை 3-இல் கேது.

நக்ஷத்திரம் புனர்வஸு. குருதசையில் இருப்பு வருஷங்கள் பதினைந்து, மாதங்கள் எட்டு.

1. குருவும் சந்திரனும் மிதுனத்திலும் ‘சனி தனுஸிலும், புதன் சூரியன் அங்காரகன் மீனத்திலும், சுக்கிரன் குடும்ப ஸ்தானத்திலும், ராஹு விருஷபத்திலும், கேது விருச்சிகத்திலும், லக்கினம் கடகமாகவும் இருக்க, பலனைச் சொல்லுவீர்களாக, என்று உமாதேவி வினவினுள்.

2. பாலக ருணும் ஜன்மம் பகருவோ மிவன்த னில்லம்
கோலமாய்க் கீழ்மேல் வீதி குபோன்தன் வாடை யாகும்
மாலவன் மேற்கில் தங்கும் மாகாளி தெற்கில் நிற்கும்
சீலமா யீசன் காளி செப்புவோ மூத்தி ரத்தில்.

2. இக்கிரஹ நிலையில் பிறந்தவன் ஆணுகும். வீதி கிழக்கு மேற்கில் அமைந்திருக்கும். பிறந்த வீடு வடக்கு வரிசையிலிருக்கும் (தெற்கு நோக்கி இருக்கும் என்பது கருத்து) விஷ்ணு ஆலயம் மேற்கிலும் காளிகோயில் தெற்குத் திசையிலுமிருக்கும். அவன் பிறந்த வீட்டிற்கு வடக்கில் சிவன் காளிதேவி இவர்களின் கோயில்களும் இருக்கும்.

3. நந்தியும் மாரி கன்னி தடாகமும் வடமேல் தங்கும்
இந்தவா றடையா ளத்துள் இலகிய சமவூர் தன்னில்
சந்ததம் கங்கை சேயாயத் தானவ னுதிப்பா னுகும்
வந்தவன் ஜனன யோகம் வரைகிறோம் கேளும் தாயே.

3. வடமேற்கில் பிள்ளையார், மாரியம்மன், துர்க்கை இவர்களது கோயில் களும், ஒரு குளமும் உண்டு. இவ்வாறு அடையாளமுள்ள ஓர் ஊரில் வேளாளகுலத்தில் இந்த ஜாதகன் ஜனிப்பான். இவனது யோகத்தைச் சொல்லுகிறோம். கேளுங்கள், தாயே !

4. தந்தையின குடும்ப வர்க்கம் சாற்றுவோ மாண்பால் மூன்று
வந்திடும் கன்னி ரண்டு வரைகிறோம் தீர்க்க மாக
நொந்திடு மற்ற வெல்லாம் நுவலுவோம் பிதாகு ணத்தை
எந்தையே ஊகை சாலி இருநிறம் கிருஷி செய்வன்.

4. தந்தையின் குடும்ப வர்க்கத்தைபபற்றிச் சொல்லுகிறோம். ஆண்கள் மூவர். பெண்கள் இருவர். இந்த ஐவரும் தீர்க்காயுளுடன் வாழ்வார் கள். மற்றவர் இருக்கமாட்டார்கள். பிதாவின் குணத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். அவன் (தந்தை) மிகவும் மதியூஹம் வாய்ந்தவன். கருத்தமேனியான். கிருஷி செய்பவன்.

5. சிரமுகம் வடிவு முள்ளான் சேயிழைப் பிரிய னுவன்
விரைவினில் நடக்க வல்லன் விளைபுலம் விருத்தி செய்வன்
பெரியவ ருறவு கொள்வன் போஜனப் பிரிய னுகும்
நெறியுளான் கீர்த்தி மானும் நிமலியே மேலுங் கேளே.

5. அழகு வாய்ந்த வதன முள்ளவன். பெண்களிடம் அன்பு லடயவன். வேகமாக நடக்கும் இயல்புள்ளவன். பெரியோர்களின் நட்புக்கொண்டவன். ஆஹாரத்தில் மிக்க விருப்பமுடையவன். விதிப்படி கடமைகளைச் செய்பவன். புகழுள்ளவனுகவும் இருப்பான். மேலும் கேளுங்கள்.

6. குடும்பத்தை வேறு செய்வன் கோவுகள் விருத்தி யுள்ளான்
திடமான குடும்பி யாகிச் சிதறிடும் பாகம் நான்காய்
உடனேதா ஞெருவன் வேறாய் உறைகுவான் என்று சொன்னேம்
அடவுடன் சிலநாள் தன்னில் அவர்களும் சீர ழிப்பார்.

6. குடும்பத்தைப் பிரிப்பான். பசுக்களை நன்றாக வளர்ப்பான். தான் ஒரு பெரிய குடும்பமுடையவனுகி, நான்காக பிரிக்கப்பட்ட சொத்தில் ஒரு பாகத்தை அடைந்து வாழ்வான். சில நாட்களுக்குப் பிறகு மற்றைய மூன்று ஸஹோதரர்களும் விளங்கமாட்டார்கள்.

இது முதல் 8 கவிகளால் சாதகனின் குணங்களைக் கூறுகின்றார்.

7. ஜாதகன் நிறங்கு ணத்தைச் சாற்றுவோம் மால்நி றத்தன்
மேதினில் கோஞ்சை போல வித்தகன் தோன்று வானும்
எதவே யழுத்த நெஞ்ஜன் இனசனப் பிரிய னுவன்
............கள் தன்னில் பொருந்திடுங் குற்ற முள்ளான்.

7. ஜாதகன் கருத்த மேனியன். மிக்க அறிவாளி. பிறரால் அறிய முடியாத நெஞ்சம் படைத்தவன். உறவினர்களிடத்தில் அன்புகொண்டவன்.

குறிப்பு.—நான்காவது வரிக்கு மூலபாடம் தெளிவாக இல்லாததால் பொருள் எழுதப்படவில்லை.

8. முகமதில் வடிவு முள்ளான் முன்கோப முடைய னுகும்
வகையான வார்த்தை சொல்வன் வர்மவான் காத நெஞ்சன்
ஜகமதில் கிருஷி செய்வன் சேயிழைப் பிரிய னுவன்
பகைவரை ஜயிப்பா னுகும் பந்துவும் பகையே யாகும்.

8. முகத்தில் அழகு பொருந்தியவன். முன் கோபி. பொருத்தமான வார்த்தைகளைப் பேச வல்லான். அஞ்சாத நெஞ்சம் படைத்தவன். அவனுடைய தொழில் விவசாயம். பெண்களிடம் விசுவாசமுள்ளவன். எதிரிகளை வெல்லும் திறமைசாலி. உறவினர்களும் இவனுக்கு விரோதிகளாவார்கள்.

9. நித்திரைப் பிரிய னுவன் நீரினிற் றேய வாஞ்சை
சத்தியம் தப்பா னுகும் சரசமாய்ப் பேச வல்லான்
உத்தம றுறவு கொள்வன் ஓங்கிடும் பூமி தானும்
பித்தசூ டுடைய தேகன் பிறர்சொல்லைக் கேட்பா னுமே.

9. நிம்மதியாக உறங்குவதில் ஆசையுள்ளவன். தீர்த்தம் ஆடுவதிலும் விருப்பங்கொண்டவன். மெய் பேசுபவன். சாதுர்யமாகவும் பேசுவான். பெரியோர்களுடைய உறவு ஏற்படும். இவனுக்கு அதிகமாக நிலம் சேரும். இவனது உடல் பித்தத்தினுலும் உஷ்ணத்தினுலும் பாதிக்கப்படும். பிறர் வார்த்தைகளைக் கேட்டு அதன்படி நடப்பவன்.

10. ருத்திர ரேகை யுள்ளான் நுவனுப தேசம் கொள்வன்
அத்திமா முகனைப் போற்றும் அரனடி யார்கள் மீதும்
பத்தியு முடைய னுகும் பாலரின் கலப்பு முள்ளான்
நித்தியம் சீல னுவன் நேமியில் வசையும் கூருன்.

10. இவனது கையில் ருத்திர ரேகை இருக்கும். பெரியோர்கள் செய்யும் உபதேசங்களை மனத்தில் தரிப்பான். விநாயகரையும் பரமசிவனையும் தியானிக்கும் அடியார்களிடத்தில் பக்தியுள்ளவன். பாலர்களுடன் கலந்து பழகும் இயல்புடையவன். எப்பொழுதும் நல்ல நடத்தை உள்ளவன். பிறரைப் பழிக்கும் சுபாவமில்லாதவன்.

11. ஆவலாய்ப் பசித்தோர்க் கன்னம் அன்புட னீய வல்லன்
பூவினில் பின்னல் யோகம் பொருந்திடும் பாக்கிய முள்ளான்
தேவதா பக்தி கொள்வன் சொப்பன மரிபோல் காண்பன்
காவிய மறிய வல்லன் கணக்கினி லூகை வானும்.

11. பசித்தவர்களை அன்னமிட்டு உபசரிப்பான். இவனது பிற்கால வாழ்க்கையில் விசேஷ யோக முண்டு. தைவபக்தி யுடையவன். குதிரைபோல் கனவு காண்பான். காவியங்களிலும் கணிதத்திலும் இவனது மேதை விளங்கும்.

குறிப்பு.—குதிரைக்கனவு: கற்பனை உலகில் ஸஞ்சரிப்பது. மனத்தில் ஆகாசக் கோட்டைக் கட்டுவது.

12. துணைவர்க ளாண்பா லொன்று சோதரி அவ்வாறு தீர்க்கம்
பிணையாகு மற்ற வெல்லாம் பின்புவந் தார்க ளென்றேம்
கணமுடன் துணைவர் சேதி கழறுவோம் கல்வி மானும்
இணையிலாத் தந்திர வார்த்தை இன்பமாய்க் கூறு வானும்.

12. இந்த ஜாதகனுக்கு ஒரு ஸஹோதரன், ஒரு சகோதரி உளர். இவர்க ளெல்லோரும் நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள். மற்றவர்கள் நீடித்து வாழமாட்டார்கள். இவனுடைய ஸஹோதரன் சிறந்த கல்விமானுக இருப்பான். நிகரற்ற தந்திரசாலியாகவும் இனிமையாகப் பேசுகின்றவனுகவும் இருப்பான்.

13. காதக மனத்த னுகும் காதலி பட்ச முள்ளான்
தூதுகள் செல்வா னுகும் துருசான குணத்த னென்றேம்
பாதகம் செய்வா னுகும் பாவையர் மோக னுவன்
மேதினில் சிலநாள் ஒன்ருய் வாழ்வனு மென்று சொன்னேம்.

13. கொடிய நெஞ்சம் படைத்தவன். மனைவியிடத்தில் மோஹங் கொண்டவன். தூது செல்வான் [பிறதேசங்களுக்குத் தனது நாட்டுப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுத் தூதனுகச் செல்வான்]. கபடமான எண்ணங்கள் உடையவன். பாவங்களையும் செய்வான். பொதுவாகப் பெண்கள் பித்தன். இவ்வாறு குணம் படைத்த ஸஹோதரனும் மேற்சொன்ன கடகலக்கினத்தி லுதித்த ஜாதகனும் சிறிதுகாலம் ஒரே குடும்பமாக வாழ்வார்கள்.

14. தேகமே வலிவு முள்ளான் தீரனும் மனைவி ஒன்று
பாகமாய்ப் புத்திர பாவம் பகருவேர் மாண்பால் ரண்டு
தோகைய ரவ்வா ருரும் சொல்லுவோம் வயது தீர்க்கம்
போகவா ரிதியைப் பெற்ற புண்ணிய சாலி கேளே.

14. இந்த ஜாதகனுக்கு உடல்வலிமை பொருந்தியதாக இருக்கும். தைரியசாலி. ஒரே மனைவி. புத்திர பாவத்தைப்பற்றிச் சொல்லுகின்ருேம். ஆண்கள் இருவர். பெண்கள் இருவர். இவர்கள் எல்லோரும் நீண்ட ஆயுள் உடையவர்களாக வாழ்வார்கள்.

15. சாதகன் மணத்தின் காலம் சாற்றுவோ மிருபான் மூன்றில்
கோதிலாத் தக்ஷி ணத்தில் கோதையும் வருவா ளாகும்
மேதினில் அவள்தன் சேதி விளம்புவோ மிருநி றத்தள்
போதவே உயர மில்லாள் பொருந்துநல் மனத்த ளாகும்.

15. இந்த ஜாதகனுக்கு இருபத்து மூன்றும் வயதில் விவாஹம் நடைபெறும். இவன் ஊருக்குத் தென் திசையில் அப்பெண் ஜனித்திருப்பாள். அவளது நிறம் கருப்பு. அதிக உயரமில்லாதவள். நல்ல மனம் படைத்தவள்.

16. மனமது அழுத்த மில்லாள் மங்கைமுன் கோபி யாவள்
இனஜன மெச்ச வாழ்வள். இவள் மூலச்சூடு முள்ளாள்
வினையிலாள் அடக்க முள்ளாள் வித்தகி தர்ம சிந்தை
தனம்பணி பின்னு முள்ளாள் சத்தியே சேட்டி டாயே.

16. கள்ளம் கபடமில்லாத மனத்தள். சிறிது முன் கோபி. பந்துக்கள் போற்றும் வகையில் வாழ்வாள். மூலச் சூட்டு நோயுள்ளவள். பாவமில்லாதவள். பெரியோர்களிடத்தில் அடக்கமுள்ளவள். மிக்க சாமர்த்தியசாலி. தரும சிந்தை உள்ளவள். ஏ பார்வதி தேவியே! இவளுக்குச் செல்வம், நகைகள் முதலியன பிற்காலத்தில் விசேஷமாக ஏற்படும்.

குறிப்பு.—14-ஆவது பாட்டில் கூறப்பட்ட புத்திர பாவத்தை இப் பாசுரத்தில் சில காரணங்களால் ஆக்ஷேபிக்கின்ருர்.

17. இன்னவாறு தனக்குப் புத்திரர் இயம்பவே பலத்தைக் காணேம்
தன்னிலே உதித்தா லுந்தான் தங்காது என்று சொன்னேம்
என்ன காரணத் தினுலே இலகாது மதலை தானும்
மன்னிய அஞ்சில் கேதும் மழைக்கைந்தோன் எட்டில் நிற்க.

17. இந்த ஜாதகனுக்குப் புத்திரபாக்கியம் உண்டெனச் சொல்லக் காரணமில்லை. பிறந்தாலும் நீடித்து உயிர் வாழாது. ஏனெனில், புத்திர பாவமென்றுக் கூறப்படும் ஐந்தாமிடத்தில் கேதுவும் எட்டாமிடத்தில் சுக்கிரனும் இருப்பதால் இந்த ஜாதகனுக்குப் புத்திரர் பிறக்கக் காரணமில்லை.

குறிப்பு.—புத்திர பாவத்தைப் பரிசீலனை செய்யும்போது லக்கினம், லக்கினுதிபதி, குரு இவர்களுக்கு ஐந்தாமிடம், அவைகளுக்கு அதிபர்கள் பலம் பெற்றிருக்கவேண்டும். ஆகவே, குருவிற்கு ஐந்தாமிடத்ததிபன் சுக்கிரன் எட்டில் இருப்பது புத்திர தோஷமாகும் என்பது கருத்து.

18. மதலைகள் தோஷ மென்றேம் மாமுனி சொல்லு கின்ருர்
நிதிகுரு சுகஞ்சே....னெட்டில் நின்றுமே குருவும் பார்க்கப்
பதியோனும் திருஷ்டி யாகப் பஞ்சம ஞெனபா னேறச்
சதமுடன் மதலை தோன்றும் ஜயமுனி சொல்லு கின்ருர்.

18. இவ்வாறு புத்திரதோஷங்கள் இருப்பினும் எட்டாமிடத்தில் இருக்கும் சுக்கிரனை குரு பார்ப்பதாலும், எட்டா மிடத்ததிபனை சனி பார்ப்பதாலும், பஞ்சமாதிபதி அங்காரகன் பாக்கியஸ்தானம் என்று சொல்லபடும் ஒன்பதில் இருப்பதாலும் புத்திரர்கள் நிச்சயம் உண்டு.

ஜயமுனி முன் ஜன்மத்திலேற்பட்ட வினையைக் கூறுகின்ருர் :—

19. கருமத்தோன தனக்குப் பத்தில் காரியு மிருப்ப தாலே
உரைக்கிறே முன்னூழ்த் தோடம் உத்தமன் தன்னைச் சேர்ந்து
வருவதால் சுதர்கள் தோஷம் வரைகுவீ ரந்தச் சங்கை
திறமையாய்ச் சொல்லு கின்றேன் தேவியே கேட்டி டாயே.

19. கருமாதிபதி அங்காரகனுக்குப் பத்தில் சனி இருப்பதால் முன் ஜன்ம தோஷமுண்டு. அஃது என்ன வினை ? எனப் பார்வதி தேவி கேட்க, முனிவர் சொல்லுகின்ருர்.

20. இச்சுதன் முன்னு டன்னில் இருந்திடம் ஜநநம் சொல்வேன்
உச்சித வடனு டன்னில் உயருவான் காஞ்சி உத்ரம்
மெச்சிடும் சிற்றூர் ஒன்றில் வியப்புறு ரெட்டி யாகி
இச்சையாய்ப் பூமி யுண்டாய் எழிலுள தனங்கள் பெற்று ;

20. முன் ஜன்மத்தில் ஸ்ரீ காஞ்சிக்கு வடக்கிலுள்ள ஒரு சிறிய ஊரில் ரெட்டியார் வமிசத்தில் பிறந்து பூமியையும் பணத்தையும் அடைந்து சிறந்து விளங்குவான்.

21. ஓங்கிட வாணி பங்கன் உயர்பல வினத்தால் செய்து
தீங்கிலா தரும வானும் ஜகமதில் கீர்த்தி பெற்றுப்
பாங்கியர் மதலை யுண்டாய்ப் பாலகன் வாழு நாளில்
தாங்கியே வந்த ஊழைச் சாற்றுவோம் கேளும் தாயே.

21. பலதுறைகளிலும் வியாபாரம் செய்து, பல தரும காரியங்களையும் நடத்தி, புகழ் உள்ளவனுக இருந்தான். மனையாள் குழந்தைகள் இவர்களுடன் கூடி வாழும் நாளில் இவனுக்கேற்பட்ட ஊழ்வினையைச் சொல்லுகின்ருேம்.

22. தன்னுடைக் குலத்தி லேதான் தழைத்திடுங் கன்னி ஒன்று
வின்மைமாய்ப் போகம் துய்க்க வீரியன் மனத்தி லெண்ணி
அன்னவள் தனக்கு மேதான் அன்புட னிதங்கள் கூறி
என்னைநீ சேர்வா யானல் இயல்பெலா முனக்கே யீவேன்.

22. அவ்வாறு வாழும் நாளில் இவர்கள் சாதியைச் சேர்ந்த ஓர் அழகான யுவதியைக் கண்டு, அவளிடம் இனிமையாகப் பேசி, தன்னிஷ்டத்திற்கு அவள் தாழ்ந்தாளாகில் அவளுக்கே எல்லாச் செல்வத்தையும் கொடுப்பேன், என்றும் சொன்னுன்.

23. என்றுமே கேட்கும் போது எழிலுள மங்கை தானும்
குன்றிய மனத்தா ளாகிக் கொண்டவன் தன்பால் சொல்ல
இன்றிவ ரிருவருக்கும் இணையிலா விரோத முற்........
....ன்றவன் தனவான் தன்னே அதிகமா யேச லுற்ருன்.

23. இவ்வாறு மொழிந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் அந்த அழகி, மனம் குன்றி, தன் கணவனிடம் இவ்வரலாற்றைச் சொல்ல, அவனுக்கும் இந்த ஜாதகனுக்கும் பகைமை உண்டாகி, அவளது கணவன் இவனே ஏசினான்.

24. தனவானும் மர்ம மாகத் தானவ னிருந்தா னென்றேம்
தினமதை மனத்தி லெண்ணிச் சிலநாட்கள் கழித்துப் பின்பு
அனையவெவ் விதத்தி னலே அவன்பேரில் வழக்குக்கொண்டு
இணையான பூமி யெல்லாம் இவனுமே பறித்துக் கொண்டான்.

24. ஏசலைக் கேட்ட இந்த ஜாதகன் கபடமாக மனத்திலேயே பகைமையை மறைத்துவைத்துக்கொண்டிருந்து, எவ்வழியாகிலும் இவனது சொத்தை அபஹரிக்க வேண்டு மென்றெண்ணி, ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டு, இவன்பேரில் வழக்கு நடத்தி, பூமி எல்லாவற்றையும் கவர்ந்தான்.

25. பூமியும் தோற்று மேதான் புகலுவான் ஏழை தானும்
சேமமாங் குடும்பமெல்லாம் சிறுத்திடும் இதுவல் லாமல்
பூமியில் மறு ஜன்மத்தில் பிறந்துமே மனேவி மைந்தர்
தீமைக ளடையு மென்று தன்குலத் தெய்வம் தன்னே ;

25. இவ்வாறு பூமியை இழந்த அவன் (யுவதியின் கணவன்), ஏழையாகி, மிக்க துயரமடைந்து, என்னைப்போல் இந்த ஜாதகனும் சீரழிந்து, மறுஜன்மத்திலும் இவனது மனைவி மக்கள் துன்பமடையமாட்டார்களா என்று எண்ணி தன் குல தெய்வத்தை ;

26. சதாநினைத் திட்டு மேதான் சஞ்சல வருத்த முற்றுர்
இதுவன்றி யின்னு மொன்று இயம்புவோம் கேளுந் தாயே
மதிநுதல் விதவை மாதை மாரனும் சிநேகம் செய்து
நிதமுமே போகம் துய்த்து நேமியில் வாழ்ந்து வந்தான்.

26. எப்பொழுதும் தியானித்திருந்தான். மிக்க வருத்தத்திலாழ்ந்தான். இந்த ஜாதகன் புத்திர தோஷத்திற்கு இஃது ஒரு காரணமாயிற்று. மற்றுமோர் காரணத்தைக் கூறுகின்றேம். தாயே! கேட்கவேண்டும். இந்த ஜாதகன் முன்ஜன்மத்தில் (ரெட்டியார் வமிசத்திலுதித்திருக்கும் காலத்தில்) கைம்பெண்ணுடன் கள்ள நட்புக்கொண்டு சுகமாக வாழ்ந்து வந்தான்.

27. போகத்தால் கருவு நேர்ந்து பின்பதை அழிக்க வேண்டி
வாகையாய்ப் பண்டி தங்கள் அநேகமாய்ச் செய்யும் போது
தோகையும் மரண மானுள் தொடர்ந்தது இவனுக் கேதான்
யோகமும் குறைவு நேர்ந்து உண்டியும் குறைச்ச லாகி ;

27. அவ்வாறிருக்கையில் அவளுக்குக் கர்ப்பமேற்பட, அதை அழிப்பதற்காகப் பல வகைகளில் வைத்தியம் செய்யும்போது, அக்காரணம் பற்றியே அந்தப் பெண் இறந்தாள். அந்தப் பாவமும் இவனைச் சூழ்ந்தது. அந்த ஜன்மத்திலேயே இவனுக்கிருந்த யோகம் குன்றி, உணவு மின்றி ;

28. மரணமே யாகியேதான் மறலியின் பதிக்குச் சென்று
நரகதில் சின்னுள் நின்று நாற்றலைக் கஞ்சன் தம்மால்
வரையவே யிக்கு லத்தில் வந்தவ னிவனே யென்றேம்
அறைகிறே முன்னூழ்ச் சாபம் அனுகிற்று என்று சொன்னேம்.

28. காலக்கிரமத்தில் மரணமடைந்து, யமலோகம் சென்று, அங்குச் சில நாள் நரகவேதனையை அனுபவித்து, பிரம்மாவினுல படைக்கப்பட்டு இக் குலத்தில் தோன்றினான்.

29. பாரியும் மக்க ளுக்கும் பகருவோம் தோஷம் தானும்
கூறுவோ மதற்குச் சாந்தி கோபங்கள் நீங்கு கின்ற
சீருடன் தணிகைக் கேதான் தேவியும் தானு மாக
ஈரஞ்சு கார்த்தி கைக்கு இடைவிடா சென்று வந்து

29. ஆகவே மனைவிக்கும் மக்களுக்கு மேற்பட்ட தோஷத்திற்கு சாந்தியைக் கூறுகின்றேம். பெருமை பொருந்திய திருத்தணிகை க்ஷேத்திரத்திற்கு இவனும் இவனது மனைவியும் பத்து கிருத்திகை இடைவிடாமல் போகவேண்டும்.

30. வட்டிக்கு ஒருநாள் சென்று வறுமுகர்க் கர்ச்சித் தேத்தித்
திட்டமா யிருபத் தேழு சங்கமர்க் கன்ன மீந்து
அட்டியில் லாமலேதான் அது முதல் கார்த்தி கைக்கு
இட்டமாய் விரதம் பூண்டு ஈசன்தன் அடியா ருக்கும்.

30. மேலும் ஒரு முறை திருத்தணிகைக்குச் சென்று; ஆறுமுகக் கடவுளுக்கு அபிஷேகம் அர்ச்சனை முதலியவைகளைச் செய்து, இருபத்தேழு சிவனடியார்களுக்கு அன்னமிடவேண்டும். அது முதல் கிருத்திகை விரதம் அனுஷ்டிக்க வேண்டும்.

31. மறவாமல் ஒருவ ருக்கு அன்னமும் அளிப்பா னகில்
வருமனை தீர்க்க மாகும் மைந்தருற் பத்தி விருத்தி
குறையென்று செய்யா னகில் குலமது சீர ணிக்கும்
பெருமையாய்ச் செய்வா னகில் பேசுவோம் மதலை தன்னே.

31. மேலும் கிருத்திகை யன்று ஒரு சிவனடியார்க்காகிலும் அன்னமிடவேண்டும். இவ்வாறு பக்தி சிரத்தையோடு ஒருவித குற்றங்களும் நேராதபடி செய்தால் நிச்சயம் புத்திரவிருத்தி யுண்டு. மேற்சொன்ன விரதங்களைச் செய்யாவிடின் சந்ததியில்லை யென்றே சொல்லவேண்டும்.

32. ஆணது ஒன்றே தீர்க்கம் அக்கன்னி இரண்டு மாகும்
தோணவே மாதுர் சேதி செப்புவோ மினிமே லேதான்
காணவே மால்நிறத்தாள் கலவர புத்தி யுள்ளாள்
வேணுகோ பாலன் தங்கை வித்தகி கேட்டி டாயே.

32. இவனுக்கு ஆண் சந்ததி ஒன்று ஸ்திரமாக இருக்கும். பெண்கள் இருவர் ஸ்திரமாக வாழ்வார்கள். இவனது தாயின் வரலாற்றைக் கூறு கின்றோம். நாராயணன் தங்கையாகிய பார்வதியே! கேளுங்கள்.

33. முன்கோபம் பித்த தேகி மூலச்சூ டுடைய ளாகும்
தன்சொலே மேன்மை யாகச் சாதிப்பாள் வாயு ரோகி
அன்னவள் கவடு கொஞ்சம் அன்புள மனத்தா ளாகும்
சொன்னசொல் தவரு ளாகும் சுந்தரி கேட்டி டாயே.

33. முன் கோபம் உடையவள். பித்த ரோகத்தால் கஷ்டப்படுவாள். மூலச் சூடும் இருக்கும். தான் சொல்லுவதே சரியென்று சாதிப்பாள். வாயுரோகமும் இருக்கும். கபடமுள்ளவள். பிறரிடம் அன்பும் கொண்டவள் தான். சொன்ன வார்த்தைப்படி நடப்பாள். மேலும் கூறுகின்றோம்..

34. அவளுடைத் துணைவர் தம்மை அறைகிறே மாண்பால் ரண்டு
பவமுள கன்னி ஒன்று பகருவோம் தீர்க்க மாக
நவனியில் சிலவே நஷ்டம் நாட்டுவோ மிவளுக் கேதான்
கவனமாய் குடகு திக்கில் காதலி வர்க்கம் என்றோம்.

34. அவளுடைய சகோதரர்களைப்பற்றிச் சொல்லுகிறோம். ஆண் இரண்டு. பெண் ஒன்று. இதற்கு மேல் ஜனித்தாலும் நிலைத்திராது. இவள் ஜனித்த ஊர் மேற்கு திக்கில் இருக்கும்.

35. மாத்ரு முன் ஜன் மத்தை வரைகிறோம் தொண்டை நாட்டில்
மேதினில் வன்னிய வம்சம் மீதினி லுதித்தா ளென்றோம்
தோதாக வாடை நெய்து தொல்புவி மீதி லீவள்[1]
தீதுக லில்லா ளாகித் தெய்வங்கள் பக்தி கொண்டு.

35. இவளது பூர்வ ஜன்மத்தில் தொண்டை நாட்டில், வன்னிய வம்சத் தில் அப்பொழுது ஆடைகள் நெய்து விற்று, அதனுல் வாழ்க்கை நடத்தி வந்தாள். ஒரு பாவத்தையும் செய்யாதவள். தெய்வபக்தியுடையவளாக வும் இருந்தாள்.

36. அந்நகர் பிடாரி மாரி ஆலயம் தீபம் வைத்து
இன்னவள் மரண மாகி இக்குல முதித்தா ளென்றோம்
தன்னிலே யவன்பின் ஜன்மம் சாற்றுவோமவ்வூர் உத்ரம்
உன்னத கருமான் வம்சம் உதிப்பளா மென்று சொன்னோம்.

36. அவ்வூரிலுள்ள பிடாரி, மாரியம்மன் இவர்கள் கோயில்களில் தீபம் வைத்து, அதன் பயனுக ஐச்வர்யம் உள்ள குலத்தில் பிறந்தாள். இவள் அடுத்த ஜன்மத்தில் இப்பொழுது வாழ்க்கைப்பட்டிருக்கும் ஊருக்கு வடக்குத் திக்கிலுள்ள ஓர் ஊரில் விச்வகர்ம வமிசத்தில் பிறப்பாள்.

[1] யாப்புநோக்கி இவள் என்பது ஈவள் என நீண்டது.

37. தந்தையின் முன் ஜன்மத்தைச் சாற்றுவோம் காஞ்சி கீழ்ப்பால்
முந்திய பேரூர் தன்னில் முயன்றசெங் குந்த வம்சம்
தன்னிலே யுதித்து மேலும் சகலர்க்கு நல்லோ னுகிச்
சொந்தமாய்ச் செட்டு செய்து சுதர்களு மனைவி யுண்டாய்;

37. இந்த ஜாதகனின் தந்தை, முன் ஜன்மத்தில், காஞ்சீபுரத்திற்குக் கிழக்குத் திக்கிலுள்ள ஓர் ஊரில், செங்குந்த வமிசத்தில் பிறந்து, எல்லோ ருக்கும் நல்லவனுக வாழ்ந்தான். சொந்தமாக குலத்திற்கேற்ற வியாபாரம் செய்து, மனையாளுடனும் புத்திரர்களுடனும் வாழ்ந்து வருகையில்;

38. தாகப்பந் தலு மமைத்துச் சண்முகர்க் கடிமை யாகிப்
பாகமாய் வாழ்ந்து பின்பு பக்கசூ லைகளும் கண்டு
சோகமாய் மரண மாகிச் சுருதியின் தன்னு லேதான்
மோகமாய் வரையப் பட்டு முயன்றவ னிவனே யென்றோம்.

38. தண்ணீர்ப் பந்தல் வைத்தும், முருகக்கடவுளிடத்தில் பக்தியோடு அவருக்குப் பல தொண்டுகளைச் செய்தும் வந்தான். சிறிது காலத்திற்குப் பிறகு, பக்கசூலை கண்டதால் இவன் பரிதாபமாக மரணத்தையடைந்தான். வேதத்தில் சொல்லப்பட்ட தருமங்களை மிகவும் விருப்பத்தோடு செய்து வந்தான்.

39. பின் ஜன்மம் அவ்வூர் மேற்கில் பிறப்பனு மிக்கு லத்தில்
இன்பங்க ளதிக முண்டாய் ஈசன் மேல் பக்தி கொண்டு
அன்புடன் நல்லோ னுகி அதிகமாய்ப் பூமி பெற்றுத்
துன்பமில் லாமல் வாழ்வன் சுந்தரி கேட்டி டாயே.

39. அடுத்த ஜன்மத்தில் இவன் இப்பொழுது வசிக்கும் ஊருக்கு மேற்கில், இதே குலத்தில் பிறப்பான். அதிக இன்பங்களை அனுபவிப்பான் அந்த ஜன்மத்திலும் சிவனிடத்தில் பக்தியுடையவனுகவே இருப்பான். எல்லோருக்கும் நல்லவனுக நடந்துகொள்வான். அதிக பூமிகள் சேர்ந்து, கஷ்டங்களின்றிச் சுகமாக வாழ்வான்.

40. தந்தையின் மரண காலஞ் சாற்றுவோ மிரு பானுறில்
வந்திடு தேளின் மாதம் வரைகிறோம் கருமம் தானும்
பிந்திய அன்னைக் கேதான் பேசுவோம் முப்பா னுனில்
தந்தனுர் மாதம் தன்னில் தாய்க்குமே கருமம் செய்வான்.

40. இச் ஜாதகனின் தந்தையினுடைய மரண காலத்தைச் சொல்லு கிறோம். இந்த கடக லக்கினத்திலுதித்த இந்த மகனுக்கு 26-ஆவது வயது நடை பெறுங் காலத்தில் கார்த்திகை மாதத்தில் தந்தை மரணமடைவான். இந்த ஜாதகனின் தாய் இவனது 30-ஆவது வயது நடக்கும்போது மார்கழி மாதத்தில் மரணமாவாள்.

41. சாதகன் மரண காலம் சாற்றுவோம் அறுப தாண்டில்
மேதினில் மகர மாதம் வளர்பிறை பருவம் தன்னில்
தீதான வாயு ரோகம் சேர்ந்துமே மரண மாவான்
போதக வானை பெற்ற புண்ணிய சாலி கேளாய்,

41. ஏ பார்வதி தேவியே ஜாதகனின் மரண காலத்தைப் பற்றிக் கூறுகின்றோம். 60-வது வயதில் மகர மாதத்தில் வளர் பிறையில் வாயு ரோகத்தால் மரணமடைவான். விநாயகக் கடவுளைப் பெற்ற தாயே! கேட்பாயாக.

42. மறுஜன்ம வானைக் காவல் வைசிய குலமுதிப்பான்
பெருமையாய்ச் செட்டுச் செய்து பிசகிலா வாழ்வா னாகும்
அறைகிறோம் குடும்பச் சேதி ஆறுவ தாண்டு மட்டும்
குறைவிலை அதற்கு மேலே குடும்பமும் வேறதாகும்

42. இந்த ஜாதகன் மறுஜன்மத்தில் திருவானைக்காவில் வைசிய குலத்தினுதிப்பான். நன்றாக வியாபாரம் செய்து ஒரு குற்றமுமில்லாமல் வாழ்வான். இந்த ஜாதகன் ஜனித்து ஆறு ஆண்டுகள் வரையில் குடும்பம் ஒன்றாக இருக்கும். பிறகு குடும்பப் பிரிவினை நேரும். பிரிவினை ஏற்பட்டாலும் இவனது குடும்பத்திற்கு க்ஷேமம் குறையாது.

43. இன்னவன் பொதுயோ கத்தை இயம்புவோம் ஜனனம் தொட்டுத்
தன்னிலே முப்பா னுண்டும் சமரச யோக மென்றோம்
மன்னிய அதற்கு மேலே வளர்பிறை போல ஓங்கும்
உன்னத குடும்ப மாகும் உத்தமி கேட்டி டாயே.

43. இந்த ஜாதகனின் பொதுவான யோகத்தைச் சொல்லுகின்றோம். இவனுக்கு 30-ஆவது வயது வரை சாதாரண யோகங்களே [விருத்தியும் இல்லை குறையுமில்லை என்பது கருத்து]. அதற்குப் பிறகு வளர்பிறை சந்திரன் போல குடும்பம் விருத்தியை அடையும். உத்தமியே கேட்பாயாக.

44. பூமியு மதிகம் சேரும் பெரும் பொருள் விருத்தி யாகும்
நேமியில் சல்லிய மில்லான் நிகர்பந்து மெச்ச வாழ்வான்
தீமைகள் எண்ணு னாகும் செப்புவோம் நிதிநிட் சேபம்
காமனை யெரித்தோன் தேவி கனமுள குடும்பி யாவன்.

44. இவனுக்குப் பூமிகள் ஏராளமாகச் சேரும். இவனடையும் பொருள் அபிவிருத்தியடையும். கடன் இராது. இவனைப் பந்துக்கள் போற்றுவார்கள். பிறருக்குத் தீமைகளை நினைக்கமாட்டான். இவனுக்குப் புதையலும் கிடைக்கும். காமனை எரித்த சிவபிரானின் தேவியே! இவன் மேன்மை வாய்ந்த குடும்ப முள்ள வனுவான்.

45. அத்திரி முதலா யுள்ள அறுமுனி யிவ் வாறுகூற
வித்தகி கேட்க லுற்றாள் விளம்பினீர் நிதி நிட்சேபம்
எத்திசை எந்தக் காலம் இவனுக்கு நேரு மையா
சுத்தமாய்ச் சொல்லு மென்ன ஜயமுனி சொல்லு கின்றார்.

45. இவ்வாறு அத்திரி முதலிய முனிவர்களும் சொன்னவுடன் பார்வதி வினவுகின்றாள். இந்த ஜாதகனுக்கு நிதி கிடைக்குமென்று சொன்னீர்களே! அஃது எப்பொழுது எந்தத் திசையில் கிடைக்கும்? இவ் விஷயத்தை நிச்சயமாய்ச் சொல்லுங்கள் என. ஜயமுனி பதிலுரைக்கின்றார்.

46. தென்திசைப் புலத்திலேதான் செப்பினேம் அந்தச் சங்கை
அன்புடன் முப்பான் மூன்றில் அனுகிடும் புதையல் தானும்
இன்பங்கள் மிகவே நேரும் இடருகள் அதனுல் நீங்கும்
துன்பமில் லாமல வாழ்வன் துறவிகள் சொல்தப் பாது.

46. இவனுக்கு 33-ஆவது வயது நடக்கும்போது சொந்த மாகத் தென்திசையிலுள்ள நிலத்தில் புதையல் சிறிதும் சிரமமின்றிக் கிடைக்கும். இன்பங்களை ஏராளமாக நுகர்வான். நிதி கிடைத்த பிறகு சில இடையூறுகளும் நீங்கும். கஷ்டப்படமாட்டான். துறவிகளாகிய நாங்கள் சொன்ன வார்த்தை பொய்யாகாது. தாயே!

47. காதலி கேட்க லுற்றாள் கனத்ததோர் ஞாதி பாகம்
மேதினில் சேராதோ சொல் விரயத்தில் பொன் னேன் நிற்க
தீதான சனியு மாறில் சேர்ந்ததால் பலனைக் காணும்
மாதவர் போற்று மெங்கள் மங்கையே கேட்டி டாயே.

47. மேலும் பார்வதிதேவி கேட்கின்றாள். குரு 12-ஆமிடத்திலும் சனி 9-ஆமிடத்திலும் இருப்பதால் இவனுக்குப் பங்காளிகள் சொத்து சேராதோ? சொல்லுங்கள். முனிவர்கள் போற்றும் எங்கள் தாயே! சொல்லுகின்றோம் கேளுங்கள்.

48. ஒன்பதி லிரவி புந்தி உதிரத்தோன் சேர்ந்த தாலே
அன்புடன் ஞாதி பூமி ஆதிபம் தன்னை யீந்து
இன்பமாய்ச் சேரு மென்றோம் இதுவலால் சேரும் பூமி
துன்பமில் லாமல் சேர்ப்பன் சொன்னது தப்பா தாமே.

48. ஒன்பதாமிடத்தில் சூரியன் புதன் அங்காரகன் இவர்களிருப்பதா பங்காளிகள் தாமே இவனுக்குப் பூமியைப் பிரியமாகக் கொடுப்பார்கள். இதுவுமன்றி இவன் தனது முயற்சியால் கஷ்டமின்றிப் பூமியைச் சேர்ப்பான். இவ் வார்த்தைகள் தப்பாது நடைபெறும்.

49. பூமிகள் வீடு மாடு பூஷணம் பொருள்கள் யாவும்
நேமியி லையாயி ரம்பொன் நிகழ்த்துவோ மிவன்தன் பாகம்
தீமைக ளில்லை யம்மா சொன்னசொல் உறுதி யென்றோம்
வாமனன் தங்கை யாளே வரைகிறோம் விபரம் ரண்டில்.

49. இந்த ஜாதகனுடைய பூமி, வீடு, மாடு, நகை மற்றையபொருள்கள் இவைகளின் உத்தேச மதிப்பு ஐயாயிரம் பொன் [சுமார் ரூபாய் ஐம்பதாயிரம்] ஆகும். இவனுக்கு எவ்விதத்தீமையும் ஏற்படாது. சிறிதும் சந்தேகமில்லை. பார்வதி தேவியே! இந்த ஜாதகனைப்பற்றிய விசேஷ வரலாறுகளை இரண்டாம் பாகத்தில் உரைக்கின்றோம்.

50. பொன்தசை ஜனன காலம் புகலுவோம் பதினேந் தாண்டும்
அன்புடன் திங்க ளெட்டும் அறைகிறோம் பலனே யாங்கள்
துன்பமாம் குடும்பம் வேறு துணைவர்கள் விருத்தி யாகும்
இன்பமாய்ச் செலவ னேகம் இவனுக்கு ரோகம் வாய்க்கும்.

50. இந்த ஜாதகனுக்கு ஜனன காலத்தில் குருதசையில் 15 வருஷம் 8-மாதம் மீதமாகும் [ஆகவே இவனுக்கு ஜன்மநக்ஷத்திரம் புனர்வஸு] குடும்பத்தில் சில துன்பங்கள் நேரிடும். இந்த தசையில் சகோதர விருத்தி யுண்டு. இன்பமான செலவுகளும் [குடும்பத்தில் விவாஹம் முதலியன] நடைபெறும். இந்த சாதகனுக்கு நோயும் வரும்.

51. பந்துவில் சூத முண்டு பகைஞாதி வர்க்கம் சூதம்
இன்பமாய்ச் சுபமு முண்டு எழில்காலி சேத மாகும்
தன்னுடைத் தாய்தந்தைக்கு சஞ்சலம் பிணியு முண்டு
அன்புடன் விபர மாக அறைகிறே மிரண்டி லேதான்.

51. பந்து வருக்கத்திலும் பங்காளி வருக்கத்திலும் மரணத்தினுல் தீட்டு வரும். சுபங்களும் நடைபெறும். பசுக்கள் சேதமடையும். இவனுடைய தாய் தந்தையர்க்குக் கவலைகளும் நோய்களும் ஏற்படும். இவ் விஷயங்களைப் பற்றி விபரமாக இரண்டாம் பாகத்தில் சொல்லப்போகின்றேம்.

ஜாதகம் 3

1. மதியுமான் ராகு மீனம் மால்ரவி தெருக்கா லேற
நிதிகுரு நந்தி யாக நீர்புகர் மேருவாக
விதிசனி சிகியு மாது விளங்கிய சூரிதி தூக்கம்
அதிபனும் கடகம் ஜென்மம் வருவதால் பலன் சொல்வீரே.

ராஹு		குரு	
	இராசி சக்கரம்		லக்கினம்
சந்திரன்			
சுக்கிரன்	புதன் சூரியன்	செவ்வாய்	சனி கேது

விஜய வருஷம் கார்த்திகை மாதம் 1-ஆந் தேதி செவ்வாய்கிழமை இரவு நாழிகை 10-க்கு மேல் 15-க்குள் ஜனனம்.

ஆங்கிலத் தேதி 14-11-1893.

நவக்கிரஹங்களின் பாதசாரம்.

விசாகம் 4-இல் சூரியன். உத்திராடம் 4-இல் சந்திரன். சித்திரை 4-இல் செவ்வாய். கேட்டை 2-இல் புதன். கிருத்திகை 3-இல் குரு (வக்ரீ) பூராடம் 1-இல் சுக்கிரன். சித்திரை 2-இல் சனி. ரேவதி 3-இல் ராஹு. சித்திரை 1-இல் கேது.

நக்ஷத்திரம் உத்திராடம். சூரிய தசையில் இருப்பு மாதங்கள் ஐந்து.

1. சந்திரன் மகரத்திலும், ராஹு மீனத்திலும், புதன் சூரியன் விருச்சிகம் சுக்கிரன் தனுவிலும், சனி கேது கன்னியிலும், அங்காரகன் துலாத்திலும் இருந்து லக்கினம் கடகமாகவுள்ள ஜாதகத்திற்குப் பலனைச் சொல்லுவீர்களாக என உமாதேவி கேட்டாள்.

2. புண்ணிய வதியுங் கேட்க புயண்டரும் சொல்லு கின்றார்
திண்ணமா யாணும் ஜன்மம் ஜனித்தஇல் கீழ்மே லாகி
வண்ணமாய் வடக்குவாடை வரைகிறே மெதிர்வீ டில்லே
கண்ணிய காளி யீசன் கழறுவோம் கிழக்கி லேதான்.

2. இவ்வாறு உமாதேவி ஆஜ்ஞாபிக்க, புயண்டர் என்ற முனிவர் ஜாதகபலன்களைக் கூறுகின்றார். இந்த கிரஹ நிலையில் ஜனித்த குழந்தை நிச்சயமாக ஆண்தான். வீதி கிழக்கு மேற்காக அமைந்திருக்கும்.

பிறந்த வீடு வடக்கு வரிசையிலிருக்கும். [தெற்கு நோக்கியதாகும்.] இவ்வீட்டிற்கு எதிரே வீடிராது. வீட்டிற்குக் கிழக்குத் திக்கில் காளி கோயிலும், சிவன் ஆலயமும் உண்டு.

3. மாலவ னக்கினி தன்னி லமைந்திடும் தென்மேல் திக்கில்
நீலியு மாரி தங்கும் நேர்தந்தி மாரி மேற்கில்
சாலவே வாச மாகும் தடாகமும் அதன்மேல் தங்கும்
கோலமாய்ச் சிற்றூர் தன்னில் கூறுவோ மாதிரு இல்லம்.

3. விஷ்ணு கோயில் தென் கிழக்கு திசையில் அமைந்திருக்கும். தென் மேற்கில் காளிகோயிலும், மாரியம்மன் கோயிலும் இருக்கும். நேர் மேற்குத் திக்கில் விநயகர் ஆலயமும், மாரிகோயிலும் உண்டு. அவைகளுக்கும் மேற்கில் ஒரு குளம் இருக்கும். அவ்வாறமைந்த சிறிய ஊரில் ஜாதகன் தாயின் வீட்டில் ஜனித்திருப்பான். அவன் பிறந்த தாயின் வீட்டைப்பற்றிச் சொல்லுகின்றேம் கேளுங்கள், தாயே !

4. வருகுவான் கெட்டி வீட்டில் மாதிரு தந்தை யோகம்
வரும்புத்ர களத்ர யோகம் வருந்துணை முன்பின் ஜன்மம்
திருமகன் யோகம் தானும் செப்புவோ மிந்நூல் தன்னில்
அறுமுகன் தன்னைப் பெற்ற அம்மையே மேலுங் கேளே.

4. அவன் பிறந்த தாயின் வீடு திடமாக [கற்களால் கட்டப்பட்டதாக] இருக்கும். இந்நூலில் அவனுடைய தாய் தந்தை மக்கள் மனைவி சகோதரர் இவர்களுடைய யோகங்களையும், இப்பாலகனது யோகத்தையும் கூறப்போகின்றேம். அறுமுகக்கடவுளைப் பெற்றெடுத்ததாயே ! மேலுங் கேளுங்கள்.

5. தந்தையின் குணத்தை யாங்கள் சாற்றுவோம் சிவந்த மேனி
சிந்தையில் கபடு மில்லான் சீலனும் பக்தி யுள்ளான்
பந்தமாய்ச் சமதே கத்தன் பாரினிலுகை சாலி
சந்ததம் குணவானுகும் தாட்சிணியன் கனவா னுமே.

5. ஜாதகனின் தந்தை சிவந்த மேனியன், நெஞ்சில் கள்ள மில்லாதவன். நன்னடத்தையும் பக்தியும் உடையவன். கட்டான தேகம் வாய்ந்தவன். மதி நுட்பம் உள்ளவன். எப்பொழுதும் நற்குணம், தாக்ஷிண்யம், பெருமை இவைகள் உள்ளவனுகவே இருப்பான்.

6. துணைவரை ஆத ரிப்பான் சுத்தநன் மனத்த னுகும்
இணையிலாச் செல்வ முள்ளான் இன்பமாய் வார்த்தை கூறுவன்
அனையவே மாதுர் ரெண்டாம் அம்பிகை கேட்க வுற்ருள்
தனயனும் எந்த மாதுர் ஜனித்தவன் சொல்லு வீரே.

6. சகோதரர்களை ஆதரிப்பான். மனத் தூய்மை உள்ளவன். அதிகச் செல்வம் படைத்தவன். இனிமையாகப் பேசவல்லான். இவனுக்கு இரண்டு தாய்மார்களுண்டு. இவ்வாறு புயண்டர் சொன்னவுடன், இவன் எந்தத் தாய்க்கு ஜனித்தவன் சொல்லுங்களென, அம்பிகை வினவினுள்.

7. முதல்மாது தனக்குப் புத்திரர் முயலுவான் ஒருவன் என்றேம்
விதியினு லிரண்டாம் மாது விளம்பினன் இவனின் தந்தை
சதியிலா மனத்தா னுகும் சத்பாத்திரன் பெருமை யுள்ளான
ததிநெய்பா லிட்ட முள்ளான் சத்தியே மேலுங் கேளே.

7. இவன் முதல் தாயின் புத்திரன். தலைவிதி காரணமாக இரண்டாவது தாய் ஏற்பட்டாள். இப்பாலகனது தந்தை கபடமற்ற மனத்தானுகும். மிக்க நல்லவன். கௌரவ முள்ளவன். பார்வதி தேவியே ! மேலும், இவன் தயிர், பால், நெய் முதலிய சிறந்த ஆகாரப் பொருள்களில் இஷ்டமுள்ளவன்.

8. இவனுடைத் துணைவர் தம்மை யியம்புவா மாண்பா லொன்று
நவனியில் தீர்க்க மாகும் நசித்திடு மற்ற வெல்லாம்
தவசியே இவனுக் கேதான் ஜாதகன் பிறப்பா னுகும்
அவனியில் இவன்தன் சேதி யறைகிரேம் கேளு மம்மா.

8. இவனுடைய ஸஹோதரர்களைப் பற்றிச் சொல்லுகின்றேம். ஒரு ஸஹோதரன் அந்த ஸஹோதரன் தீர்க்காயுளுடன் வாழ்வான். பிறக்கும் மற்றைய சகோதரவர்க்கங்கள் எல்லாம் நிலைத்திரா. இவனுடைய வரலாறுகளைக் கூறுகின்றேம். கேளுங்கள் தாயே !

9. சிவந்திடு மேனி யாவன் தேகமும் சமம தாகும்
கவர்ந்திடான் அயலார் பொன்னைக் காரியச் சமர்த்த னுகும்
உவமையாய் வார்த்தை கூறுவன் உத்தமர்க் கினிய னுவன்
தவசி களுறவு கொள்வன் சந்தேக மனத்த னுமே.

9. கடகலக்கினத்திலுதித்த இந்த மகனது மேனி சிவந்திருக்கும். உடலும் கட்டாக இருக்கும் [உயரமும் நடுத்தரமாகும்]. பிறர் பொருளில் ஆசைவைக்கமாட்டான். தன் வேலையைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து நிறைவேற்றும் ஆற்றல் படைத்தவன். எவ்விஷயங்களையும் உவமை சொல்லி விளக்குவான். இவனிடம் மிக்க பெரியோர்களும் அன்புடன் நடப்பார்கள். தவசி [சன்னியாசி]களிடம் தொடர்புடையவனுக இருப்பான். இவ்வாறு குணங்கள் உள்ளவனுயினும் எதையும் சந்தேகப்படுவான். [சீக்கிரத்தில் ஒரு விஷயத்தையும் நம்பமாட்டான்].

10. பயிர்த்தொழி லுடைய னுவன் பந்துவும் மெச்ச வாழ்வன்
நயம்பட வார்த்தை சொல்வன் நாயகி பட்ச முள்ளான்
ஜயம் செய்வன் தொடுத்தவேலை சீக்கிர நடையு முள்ளான்
பயமுள மனத்தனுகும் பாரினில் கீர்த்தி எற்பன்.

10. இவனது தொழில் பயிரிடுவதாகும். உறவினர்கள் கொண்டாடும்படி வாழ்க்கையை நடத்துவான். நயமாகப் பேசும் இயல்புள்ளவன். மனைவியிடத்தில் அன்புள்ளவன். தான் ஆரம்பித்த வேலையில் நிச்சயமாக வெற்றியைக் காண்பான். இவனது நடை வேகமாக இருக்கும். பயப்படும் சுபாவ மூண்டு. தான் வசிக்கும் ஊரில் மிக்க புகழுள்ளவனுக இருப்பான்.

11. பூமியும் சேர்ப்பா னுகும் புத்திர ருடையனுகும்
தீமையு மெண்ணு னுகும் சிறுத்தவர்க் குதவி செய்வன்
காமியன் பித்த தேகி கணக்கினிலூகை வானும்
நேமியோர் மெச்ச வாழ்வன் நிருபர்க ளிஷ்ட னுவன்.

11. இந்த ஜாதகன் பூமிகளைச் சம்பாதிப்பான். இவனுக்குப் புத்திரபாக்கியம் இருக்கும். பிறர்க்குத் தீமையை மனத்தாலும் நினைக்க மாட்டான். எளியவர்களுக்குத் தேவையான உதவியைச் செய்வான். காமமுள்ளவன். பித்தநோயினுல் கஷ்டப்படுவான். கணிதத்தில் மதிநுட்பம் வாய்ந்தவன். இவனை எல்லோரும் கொண்டாடுவார்கள். அரசர்களும், அரசாங்க அதிகாரிகளும் இவன் சொற்படி நடப்பார்கள். [அவர்களையும் தன் வசப்படுத்தும் வல்லமை வாய்ந்தவன்.]

12. உலகுளோர்க் குதவி செய்வன் உண்மையாய் நடக்க வல்லான்
பலவித லாப முள்ளான் பகையிலான் எவர்க்கு நண்பன்
நலமான குடும்ப முள்ளான் நாதனுர் பக்தி யுள்ளான்
விலைமாதர் விருப்பம் கொள்வன் மெல்லியே மேலுங்கேளே.

12. பொதுமக்களுக்கு விஷேச உதவியைச் செய்வான். மனத்தில் எண்ணியதையே வாக்கினுல் சொல்லுவான். சொன்ன சொற்படியும் நடப்பான். பல வழிகளிலும் லாபத்தை அடைவான். இவனுக்குப் பகைவர்கள் இருக்கமாட்டார்கள். மேலும் பணக்காரர், ஏழை, பண்டிதர், பாமரர் என்ற வித்தியாசமன்றி எவர்க்கும் நண்பனுக இருப்பான். குடும்ப வாழ்க்கை மிக்க நிம்மதியுடன் இருக்கும். கடவுள் பக்தி உண்டு. இவ்வாறு குணங்கள் நிறைந்தவனுக இருப்பினும், விலைமாதர்களிடமும் நேசமுள்ளவனுக ஆவான். தேவியே மேலுங்கேளுங்கள்.

13. ஜாதகன் துணைவர் தம்மை சாற்றுவோம் மூன்று விருத்தி
அவனியில் யாவும் தீதாம் அறைகிறே மிவனுக் கேதான்
இவனுக்கு மூத்தோ ரில்லை இவனுமே ஜேஷ்ட னுகும்
தவமுடை யோரைக் காக்கும் தயாபரி மேலுங் கேளே.

13. கடகலக்கினத்தில் பிறந்த இந்த மகனுடைய சகோதரபாவத்தைப் பற்றிச் சொல்லுகின்றேம். சகோதரர் மூவராவர். அவர்கள் இவனுக்கு உதவி செய்யமாட்டார்கள். [சகோதர ஒற்றுமை இராதென்பது கருத்து.] இவனுக்கு மூத்தசகோதரன் இல்லை. இவனே மூத்தவன். தவசிகளைக் காக்கும் கருணைக்கடலே. தாயே! மேலும் சொல்லுகிறேம. கேளுங்கள்.

14. இன்னவன் ஜனன மிருப்பிட மதற்கு இசைக்கிறேம்
[கடிகை தூரத்தில்
மன்னிய தென்மேல் தந்தையின் ஊராம் வரைகிறேம்
[குணக்கு மேல் வீதி
தன்னிலே முந்தி வாடயாய்க் கீழ்ப்பால் தந்தியாம் தெற்கில் சலக்
[கரைவயல்களுண்டே
உன்னிய மேற்கில் காளியு மீசனு றைந்திடு சோலையும் ஊழி.

14. இந்தக் 4-ஆவது பாட்டில் கடகலக்கின ஜாதகனது தாய் வீட்டின் அமைப்பைப் பற்றிக் கூறினுர். [இம் மகன் தாய் வீட்டில் பிறந்தவனுகையால்] இப்பாசுரத்தில் அவன் தந்தையின் ஊர் வீட்டின் அமைப்பு முதலியவைகளைக் கூறுகின்ருர். இம் மகனது தாய் ஊருக்குத் தென்மேற்கில் ஒரு நாழிகையில் நடந்து அடையக்கூடிய தூரத்தில் இருக்கும். கிழக்கு மேற்கில் வீதி அமைந்திருக்கும். முதல் வரிசையில் இவனது தந்தையின் வீடு கிழக்குத் திக்கில் விநாயகர் கோயில். தெற்குத் திசையில் ஒரு நீர் நிலையும் வயல்களும் இருக்கும். மேற்கு திசையில் காளிகோயில், சிவபிரான் ஆலயம். ஒரு சோலை இவைகளும் இருக்கும்.

15. இன்னமும் பலதே வாச மிலகிடும் சோலை யுண்டு
உன்னித சமவூர் தன்னில் உறைகுவா னிவனின் தந்தை
அன்னையும் கேட்க லுற்றுள் அவனுக்குத் துணைவர் தோஷம்
என்னகா ரணத்தி னுலே இலகாது என்று சொன்னீர்.

15. அவ்வூரில் பல கோயில்களும் சோலைகளும் விளங்கிடும். அங்கு இவனது தந்தை வசிப்பான். இவ்வாறு சொல்லி முடித்தவுடன் பார்வதி தேவி வினவினுள். [8-ஆவது பாட்டில்] இவனுக்குச் சகோதர தோஷம் காரணம்பற்றி அதிக சகோதரரில்லை என்று சொன்னீர்களே. அதற்கென்ன காரணம் ? சொல்லுங்கள் என்ருள்.

16. கரியவன் சிகியி மூன்றில் கலந்துதா னிருப்ப தாலே
அரைகிறேம் துணைவர் தோஷம் அந்தணன் மூன்றைப் பார்க்க
விரைவினி லுதிக்கு மென்றேம் விளங்கினும் தோஷ மாகும்
குறையதைச் சொல்லு மென்ன கூறுவர் புயண்டர் தாமும்.

16. இவ்வாறு தேவி கேட்டவுடன் புயண்டர் பதிலுரைத்தார். சனியும் கேதுவும் ஆகிய இரு பாபகிரஹங்களும் சகோதர ஸ்தானம் என்று சொல்லப்படும் 3-ஆமிடத்தில் இருப்பதால், சகோதரர்களுக்கு அழிவு ஏற்படும். ஆயினும் 11-ஆமிடத்தில் இருக்கும் குருபகவான் சகோதர ஸ்தானத்தைப் பார்ப்பதால் சகோதர விருத்தி சீக்கிரத்திலேயே ஏற்படும், விளங்கவும் செய்யும். ஆயினும் அந்தப் பாவத்திற்குத் தோஷம் நிச்சயம் உண்டு. அத்தோஷத்தைச் சொல்லுங்களென பார்வதி கேட்க புயண்டர் மேலும் சொல்லுகின்ருர்.

17. புகருமே ஆறில் நிற்கப் பூமக னுலி லேற
வகையான மாதுர் வாலே வந்திடும் துணைவர் தோஷம்
பகைதனைச் சொல்லு மென்ன பத்தினி சேதி சொல்வேன்
இகபரம் விருப்பம் கொள்வள் இவளுமே சிவந்த மேனி.

17. மேலும் சுக்கிரன் 6-இல் செவ்வாய் 4-இல் இருப்பதும் 4-ஆவது ஸ்தானத்தில் பாபியான அங்காரகனும், அந்த ஸ்தானுதிபதியான சுக்கிரன் 6-இலும் இருப்பதாலும், தாயால் சகோதர தோஷம் நேரிடும். அவன் [இவனுடைய தாய்] இம்மை மறுமைக்கான தருமங்களைச் செய்வதில் விருப்பமுள்ளவள். அவளது மேனி சிவந்திருக்கும்.

18. அன்னம்போல் சாய லுள்ளாள் ஆசாரம் பொறுமை யுண்டு
கன்னென வார்த்தை கூறுவள் கணவனுக் கினிய ளாவள்
இன்னவள் தந்தைக் கேதான் இயம்புவேன் தாரம் மூன்று
தன்னிலே நடுமா துக்கு ஜனித்தவ ளிவளே யென்றேும்.

18. அன்னம் போன்ற நடையழகு உடையவள். தொன்று தொட்டு வந்த பழக்க வழக்கங்களை விடாதவள். பொறுமைசாலி. அவளது வார்த்தை அமுதம் போன்றது. கணவனிடத்தில் இனிமையாக நடந்துக் கொள்ளும் இயல்புள்ளவள். இவளுடைய தந்தைக்கு மூன்று மனைவி மார்கள். அவர்களில் இரண்டாவது மனைவிக்கு ஜனித்தவளிவள்.

19. இவளுடைத் துணைவா தம்மை இசைக்கிறேு மாண்பா லொன்று
நவனியில் தீர்க்க மாகும் நாயகன் சேதி கேளாய்
அவனியி லற்பபுத்தி அற்பரை நேசம் கொள்வன்
குவலினில் நிந்தை யுள்ளான் குலத்துக்குப் பகையு மாவன்.

19. இவளுடைய சகோதரரைப்பற்றிச் சொல்லுகின்றேும். இவளுக்கு ஒரு சகோதரன் உண்டு. அவன் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்திருப்பான். அவளது சகோதரனின் வரலாறுகளைச் சொல்லுகின்றேும் கேளுங்கள், தாயே! அவன் மிகவும் அற்ப புத்தி உடையவன். தன்னைவிடத் தாழ்ந்த வர்களிடமே நேசம் கொள்வான். கிராமத்திலுள்ளோர் எல்லோரும் இவனைப் பழிப்பார்கள். ஆகையால் இவனுல் இவனது குலத்திற்கே கேடு ஏற்படும்.

20. காமனை விருப்பங் கொள்வன் கண்ணினில் குற்ற முள்ளான்
சேமமாம் குடும்ப முள்ளான் சேட்டைக ளதிகம் செய்வன்
தீமையாம் குணத்த னுகும் செப்புமுன் கோபி யாவன்
பூமியும் விருத்தி செய்வன் பெண்களா லவமா னத்தன்.

20. காமமுள்ளவன். கண்ணில் தோஷம் [நோய்] ஏற்பட்டிருக்கும். [கண் ஊனமுள்ளவன் என்பது கருத்து] அல்லது அசூயையோடு பார்ப்பவன். இவனது குடும்பம் க்ஷேமமாக இருக்கும். தகாத செயல்களைச் செய்வான். தீய குணங்கள் உடையவன். முன் கோபியாகவும் இருப்பான். பூமியை நன்ருக அபிவிருத்தி செய்வான். பெண்களால் இவனுக்கு அவமானம் நேரிடும்.

21. இக்குண முடையோ னுக்கு இவளுமே உடன் பிறந்தாள்
மிக்கவே இவளின் ஊழை விளம்புவோம் விபர மாகத்
தக்கவே காஞ்சி தனனில் சௌராஷ்டிர குலமு தித்துத்
திக்கெலாம் பெருமை யுண்டாய்ச் சேயர்க ளுள்ளா ளாகி.

21. இப்படிப்பட்ட குணமுடையவனுக்கு இவள் சகோதரியாகப் பிறந்தவள். இவளுடைய முன்ஜன்ம வினைக்களை விஸ்தாரமாகச் சொல்லுகின்றேும். இவள் முன் ஜன்மத்தில் காஞ்சீபுரத்தில் சௌராஷ்டிர வமிசத்தில் பிறந்து பெருமையோடும் குழந்தைகளோடும் வாழ்ந்து வந்தாள்.

22. குறைவிலா வாழும் நாளில் கூறுவோ மூழி தானும்
விரைவினில் மார்ச்சா லத்தை மெல்லியு மடித்தா ளொன்றேும்
துரிதமா யிடைமு றிந்து துன்பங்கள் மிகவே கொண்டு
மறலியின் பதிக்குச் செல்ல வந்தது அந்த ஆணை.

22. ஒருவிதக் குறைபாடும் இல்லாமல் வாழுங் காலத்தில் ஏற்பட்ட வினையைச் சொல்லுகின்றேும். இவள் முன் ஜன்மத்தில் ஒரு பூனையைத் தடியால் அடிக்க, உடனே அதன் இடுப்பு முறிந்து, சொல்ல முடியாத துன்பங்களை அனுபவித்து, கடைசியில் யமன் உலகம் சென்றது. அந்தப் பாவம் இவளைப் பிடித்துக்கொண்டது.

23. ஆகையால் அச்ஜன் மத்தில் அந்திய காலந் தன்னில்
தோகைக்கு வாய் வாலே சோர்ந்தன கைகா லுந்தான்
பாகமாய் வியாதி யாலே பத்தினி மாண்டா ளென்றேும்
வாகையா யிச்ஜன் மத்தில் வந்தவ ளிவளே யாகும்.

23. ஆகையால், முன் ஜன்மத்திலேயே, இவள், கடைசி காலத்தில், வாயு ரோகத்தினுல் கை கால்கள் சோர்ந்து, செயலற்று, வெகு காலம் கஷ்டப்பட்டு கடைசியில் மரணத்தையும் அடைந்தாள். முன் ஜன்மத்தில் இக் குற்றம் செய்த மாதுதான் இந்த ஜன்மத்தில் நாம் சொல்லி வரும் கடக லக்கின மகனுக்குத் தாயாக வாய்த்திருக்கின்றுள்.

24. இச்சன்மம் தன்னி லேதான் இவளுக்கு முன்னும் தன்னில்
துச்சமாய் வாயு ரோகம் தோன்றிடு மிவளுக் கேதான்
கச்சணி ரோகம் தீரக் கழறுவாய் சாந்தி ஒன்று
எச்சாந்தி செய்தா லுந்தான் விலகாது வியாதி தானே.

24. அப் பாவம் மிகவும் கொடியதாகையால் இவளுக்கு இந்த ஜன்மத்திலும் அந்த வாயு நோய் தொடர்ந்து வந்து வாட்டும். இவ்வாறு புயண்டர் சொன்னவுடன் பார்வதி தேவி கேட்கின்றுள். அவளுக்கு வாத நோய் தீர, பரிகாரத்தைச் சொல்லுங்கள். எந்தச் சாந்தியைச் செய்தால் வியாதி இராது சொல்லுங்கள்.

25. மதலையும் விருத்தி தோஷம் மைந்தனும் விருத்தி யென்றீர்
விதங்களைச் சொலலு மென்ன விளம்புவார் புயண்டர் தாமும்
சதியான அஷ்ட மத்தோன் சனியாகி மூன்றில் சேர
விதியோனைக் குருவும் பார்க்க விளம்பினேும் வயது தீர்க்கம்.

25. புத்திர தோஷம் உண்டு என்றும் ஆனுல் இம் மகன் தீர்க்காயுளுடன் இருப்பான் என்றும், சொன்னீர்கள். அவைகளுக்குக் காரணத்தைச் சொல்லுங்களெனப் பார்வதி கேட்க, புயண்டர் பதில் சொல்லுகின்ருர். எட்டுக்கு உடைய சனி 3-இல் இருப்பதால் சகோதர விருத்தியில்லை. ஆயினும் குரு பார்ப்பதால் இந்த ஜாதகனுக்குத் தீர்க்காயுளுண்டு.

26. எந்தக்கா லத்தி லேதான் இவளுக்கு ரோகம் வாய்க்கும்
சந்திரன் தசையி லேதான் சடைநாகம் புசிப்பில் காணும்
அந்திய காலம் மட்டும் வாங்காது ரோகம் தானும்
முந்திய சாந்தி யொன்று மொழிகிறோம் கேளு மம்மா.

26. இந்த ஜன்மத்தில எந்தத் தசை, எந்தப் புக்தியில் இவளுக்கு வாயு ரோகம் ஏற்படும் என்று பார்வதி கேட்க, புயண்டர் சொல்லுகின்றார். சந்திர தசையில் கேது புக்தியில் இவளுக்கு வாதரோகம் ஏற்படும். இவளுடைய அந்திய காலம் வரையில் அது நீடித்திருக்கும். ஒரு சாந்தி சொல்லுகின்றோம். கேட்டருளவேண்டும், தாயே!

27. இன்னவள் தணிகைக் கேதா னீராறு மாதம் சென்று
உன்னத முருக னுக்கு உத்தமி அர்ச்சித் தேத்தி
மன்னிய மாத மோர்நாள் வருங்கார்த்தி தன்னி லேதான்
அண்ணலின் அடிமை யாயும் அவன்வேடங் கொண் டோருக்கு.

27. இவள் திருத்தணிகைக்கு ஒவ்வொரு கிருத்திகையிலும் சென்று, அங்கு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்வாமிக்கு அபிஷேகம் அர்ச்சனை முதலியவைகளைச் செய்யவேண்டும். இவ்வாறு பன்னிரண்டு கிருத்திகைகளிலும் [அதாவது ஒரு வருஷம்] பூஜை செய்யவேண்டும். மேலும் ஒவ்வொரு கிருத்திகையிலும் தான் பக்தி சிரத்தையுடன் முருகன் போல் வேஷம் பூண்ட அவனடியாராகிய,

28. அன்னங்கள் ஒருவர்க் கீய அப்பிணி சாந்த மாகும்
பிந்திய ஜன்மம் தோறும் பலக்காது வினைகள் தாமும்
சொன்னேனே யிதுவே யன்றிச் சுருதியும் வேறே யில்லை
கன்னென மொழியி னாளே கழறின மொழி குன்றாது.

28. ஒருவருக்கு அன்னதானம் செய்யவேண்டும். அவ்வாறு செய்தால் இந்தப் பிணி இந்த ஜன்மத்தில் இவளை வாட்டாது. பின் ஜன்மத்திலும் பலமாகத் தொடராது. வேறு பரிகாரங்கள் இல்லை. கரும்புபோன்ற மொழிகளைச் சொல்லுகின்ற மலைமகளே! நாங்கள் சொன்ன மொழி தவறாது.

29. ஜாதகன் மணத்தின் காலம் சாற்றுவோ மொருபா னாறில்
மாதிவள் குணக்கி லேதான் மாதுரு வர்க்கந் தன்னில்
கோதிலா வருவளாகும் கூறுவோ மவள்கு ணத்தை
வேதனை யெண்ணா நெஞ்சம் வித்தகி சிவந்த மேனி.

29. ஜாதகனுடைய விவாஹ காலத்தைச் சொல்லுகின்றோம். பதினாறுவது வயதில் விவாஹம் நடைபெறும். கிழக்குத் திசையில், இவனது மாத்ரு வர்க்கத்திலிருந்தே மனைவி வாய்ப்பாள். அவளது குணங்களைக் கூறுவோம். பிறர்க்குத் துன்பத்தை நினைக்காத நெஞ்சம் படைத்தவள். சிவந்த மேனியாள்.

30. நடையது நல்ல தாகும நனிமா யுரைப்பா ளாகும்
அடவுடன் வருவோ ருக்கு அன்னங்கள் போட வல்லாள்
........பக்தி கொள்வா ளாகும் மெல்லியும் யோக சாலி
திடமான குடும்ப முள்ளாள் செந்திரு வாச முள்ளாள்.

30. நல்ல நடையழகுடையவள். இனிமையாகப் பேசுவாள். எளிமையோடு வருபவர்களுக்கு அன்னமிடும் இயல்புள்ளவள்........பக்தி கொண்டவள். அவளுக்கு மிக நல்லயோகம் உண்டு. குடும்ப வாழ்க்கை குழப்பமின்றி நிம்மதி நிறைந்ததாயிருக்கும். மஹாலக்ஷ்மீ வாசம் பொருந்தியவள்.

31. புத்திர விருத்தி தன்னைப் புகனுவோ மாண்பால் ரண்டு
பத்தினி யிரண்டு மாகும் பகருவோம் நான்கும் தீர்க்கம்
சித்தமாய் மூன்று நட்டம் செப்புவோ மிவளுக் கேதான
வித்தகி தாரம் ஒன்றே விளம்புவோ மவனுக் கேதான்.

31. புத்திர பாவத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். ஆண்பால் இரண்டு, பெண்பால் இரண்டு ஆக இந் நான்கும் தீர்க்காயுளுடன் விளங்கும். இவர்களைத் தவிர, மூன்று குழந்தைகள் பிறந்து இறக்கும். ஸர்வேசுவரியே! (இந்த ஜாதகனுக்கு) மனைவி ஒருத்தியே.

குறிப்பு. "மூன்று நஷ்டம்" என்று சொன்னதால், இவனுக்கே இரண்டாவது மனைவி ஏற்பட்டு அவனுக்கு மூன்று குழந்தைகள் பிறந்து நஷ்டமாகுமோ என்று ஐய முண்டாவதால் அந்த சந்தேகத்தை நீக்குவதற்காக, தாரம் ஒன்றே என்று வற்புறுத்திச் சொன்னார். ஆகவே இவனுக்கு ஏழு குழந்தைகள் பிறக்கும் என்றறியவேண்டும்.

32. இவனுடை முன்ஜன் மத்தை யியம்புவோம் சோழ நாட்டில்
அவனியில் ஆழி உத்ரம் அணுகிய பேரூர் தன்னில்
சிவமதம் சூத்ர வம்சம் ஜனித்துமே பெருமை பூண்டு
நவனியில் கிருஷி யாலே நாயகன் கீர்த்தி பெற்று.

32. இவனுடைய முன்ஜன்மத்தைக் கூறுகின்றோம். இவன் சோழ நாட்டில் வடக்கே நீர் நிலை உள்ள பெரிய ஊரில் சிவமதத்தில் சூத்திர வமிசத்தில் பிறந்திருந்தான். அப்பொழுது இவன் பெருமையுள்ளவனாகவும், விவசாயம் செய்து அதனாலே மிக்கபுகழ் உடையவனாகவுமிருந்தான்.

33. சட்டநா தருக்கு ஊழி சதாவுமே செய்து வந்து
மட்டிலா அதிதி கட்கு அன்னங்கள் அன்பாய் யீந்து
இட்டபூஞ் சோலை வைத்து இவன்பல தீர்த்தம் தோய்ந்து
கட்டமில் லாமல் வாழ்ந்து காதலி மதலை யுண்டாய்...

33. சட்டநாதருக்கு [சீகாழியில் எழுந்தருளியிருக்கும் பரமசிவனுக்கு] எப்பொழுதும் தொண்டு செய்து வந்தான். மேலும் எண்ணிக்கையற்ற விருந்தாளிகளுக்கு மனமுவந்து அன்னமளித்தும் வந்தான்.

பல பூஞ்சோலைகளை ஈசன் பூசையின்பொருட்டு நிறுவினன். புண்ணிய தீர்த்தங்களில் நீராடினன். மனைவியோடும் மக்களோடும் கஷ்டமின்றிச் சுகமாக வாழ்ந்து வந்தான்.

34. சுகமுடன் வாழ்ந்து பின்பு சுரத்தினால் மரண மாகித்
தகைமையாய்க் ஈங்கை வம்சம் தானவ னுதித்தா னென்றேம
பகையில்லை முனஜன் மத்தில் பகருவோம் தந்தை ஜன்மம்
வகையுடன் சொல்லு கின்றேன் மங்கையே மேலுங் கேளே.

34. இவ்வாறு சுகமாக வாழ்ந்து வருகையில், அந்திய காலத்தில் சுரம் கண்டு இவன் இறந்தான். அவன்தான் இப்பொழுது வேளாள வமிசத்தில் (கடக லக்னத்தில்) உதித்திருக்கின்றான். முன்ஜன்மத்தில் இவனுக்குப் பகைவரும் இலர். பாவமும் இல்லை. இவனது தந்தையின் முன்ஜன்மத்தை விரிவாகச் சொல்லுகின்றோம். தாயே! கேளுங்கள்.

35. திருப்புலி யூரிலே தான் சேடர்தன் குலமு தித்து
விருப்பமாய் நெசவு செய்து விளைபுல மில்லா னாகி
மருமமாய்ச் செட்டுச் செய்து மதலைகள் மனைவி யுண்டாய்
இருக்கிற காலந் தன்னில் இயம்புவோ மூழி தானும்.

35. இவனுடைய தந்தை முன்ஜன்மத்தில் திருப்பாதிரிப்புலியூரில், சேடர் குல (நெசவாளர் குல)த்தில் பிறந்து, நிலமில்லாதவனாக, நெசவுத் தொழிலையே நடத்திவந்தான். மதியூகத்துடன் வியாபாரமும் செய்து வந்தான். அவன் மனைவி மக்களோடு சுகமாக வாழ்ந்திருக்கையில் அவனுக்கேற்பட்ட வினையைச் சொல்லுகின்றோம்.

36. தன்னிடம் வேலைக் காரர் சார்ந்தனர் அவர்தன் பாரி
அன்னம்போ லிருந்தாள் தானும் அவள் பேரில் மோகங்கொண்டு
பொன்னையு மீந்து போகம் புக்கினன் பலவந் தத்தால்
இன்னவள் வரனும் கேட்டு இருவர்க்கு விரோதமுற்று.

36. வேலைக்காரர்கள் பலர் அவனை அண்டிப்பிழைத்து வந்தார்கள். அவர்களில் ஒருவனது மனைவி அன்னம்போல் மிக்க அழகு வாய்ந்தவளாக இருந்தாள். அவளிடம் இவன் (தந்தை) மோகங்கொண்டு பொற்காசுகளைக் கொடுத்தும், பலாத்காரமாகவே இன்பத்தை நுகர்ந்தான். இச்செய்தியை அறிந்த அந்தப் பெண்ணின் கணவனுக்கும் இவனுக்கும் பகைமை உண்டாயிற்று.

37. மனைவியைத் துரத்தி விட்டான் மங்கையு மிவன்பால் சென்று
அனையவே உன்னா லேதான் அநேகமாய் நிந்தை யாகி
இனங்களும் பகைய தாகி இருக்கின்றேன் காப்பா யென்றாள்
வனிதையும் சொல்லும் போது மன்னனும் கூறு கின்றான்.

37. அந்த வேலைக்காரனும் தன் மனைவியை வீட்டிலிருந்து நீக்கிவிட்டான். ஆதலால் அவள் திக்கற்றவளாக இவனிடம் வந்து உன்னால்தான் எனக்குப் பழியும், இனசனங்களின் பகையும் ஏற்பட்டன. ஆகையால்

நீ உனது குற்றத்தை நன்குணர்ந்து என்னைக் கைவிடாமல் காப்பாற்ற வேண்டு மென்று பரிதாபமாகக் கேட்கும்போது இவன் கூறியபதிலைச் சொல்லுகின்றோம்.

38. என்மனை பொல்லா ளாவள் இடறுக ளதிகம் நேரும்
உன்னையே ஆத ரிக்க உடன்பட மாட்டே னென்றான்
இன்னவள் மனம்க லங்கி இயம்புவாள் சாபமே தான்
மன்னிய மறுஜன் மத்தில் மானிடராயு தித்து.

38. என் மனைவி மிகப் பொல்லாதவள். உன்னை ஏற்றுக்கொண்டால் அவளால் பல தீமைகள் நேரும். ஆதலின் உன்னை ஆதரிக்கமுடியாது என்றான். இவ்வார்த்தைகளைக் கேட்டு அவள் மனங்கலங்கிச் சாபமிட்டாள். அஃதாவது "மறுஜன்மத்தில் மனிதனாகவே பிறந்து

39. சதியின்தன் சுகமு மின்றி சஞ்சல மனத்த னாகி
விதியினால் வாழ்வா யென்று வேறொரு பக்கம் சென்றாள்
அதிபனு மச்சன் மத்தில் அந்திய காலந் தன்னில்
பதியினில் மனைவி மாண்டு பாலர்கள் விரோத முற்று.

39. மனைவியின் சௌக்கியமின்றி, மனத்தில் சஞ்சலங்களடைந்து வாழ்ந்திருப்பாய் என்று இவ்வாறு சாபமிட்டுச்சென்றாள். இவனும் அதே ஜன்மத்திலேயே அந்திய காலத்தில் மனைவியை இழந்து கஷ்டபட்டான். மேலும் இவனது மக்களுக்கும் இவனுக்கும் சண்டை உண்டாகி அவர்களும் இவனைக்கைவிட்டார்கள்.

40. தேசசஞ் சாரம் செய்து சென்றனன் காஞ்சி தன்னில்
பாசமாய்க் குமர கோட்டம் பதியினில் விடையும் செய்து
போசன மால யத்தில் பெற்றுமே முருக னன்பு
நேசமாய் வைத்து மேதான் நிமலனு மரண மானன்.

40. ஆகவே இவன் வீட்டைத் துறந்து பலதேசங்களில் சுற்றி விட்டு, காஞ்சீபுரத்தில் குமரகோட்டத்தில் எழுந்தருளி யிருக்கும் முருகனுக்குத் தொண்டு செய்தான். கடவுளுக்கு நிவேதனம் செய்யப்பட்ட ஆலயப் பிரசாதத்தையே உட்கொண்டான். முருகனிடத்தில் இடைவிடாது பக்தி செய்து முடிவில் மரணத்தையும் அடைந்தான்.

41. பிரமனால் வரையப் பட்டுப் பிறந்தவ னிவனே யென்றேம்
அருமை யிவ்வாறு கூற அம்பிகை கேட்க லுற்றாள்
திறமையாய் முன்ஜன் மத்தில் சேடர்தன் குலமு தித்து
பெருமையாய் மேழிச் செல்வர் பிறந்தகா ரணங்க ளென்ன.

41. பிறகு பிரம்ம தேவனால் இங்குப் பிறப்பிக்கப்பட்டான் என்று புயண்டர் சொல்ல, பார்வதிதேவி கேட்கலுற்றாள். முன் ஜன்மத்தில் சேடர் குலத்திலுதித்திருந்த இவன் இந்த ஜன்மத்தில் வேளாள வமிசத்தில் பிறக்கக் காரணம் என்னை? இவ்வாறு கேட்க, புயண்டர் பதில் சொல்லுகின்றார்.

42. கச்சியில் குமர கோட்டம் காவலன் புரிந்த புண்ணியம்
மிச்சமாய்க் கங்கை வம்ச மீதினி லுதித்தா னென்றோம்
துச்சமாய் முன்னூழ்ச் சாபம் தோன்றிற்று இச்சென் மத்தில்
நச்சுபோல் மனையா ளுக்கு நல்கிடும் ரோகம் தானே.

42. காஞ்சீபுரத்தில் குமரகோட்டத்தில் எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானுக்குப் பல தொண்டுகள் செய்த புண்ணியத்தின் பயனாக வேளாளகுலத்தில் பிறந்தான். ஆயினும் முன்ஜன்மத்தில் செய்த வினையின் விளைவாக இந்த ஜன்மத்தில் இவன் மனையாளுக்கு விஷம் போல் உயிரைமாய்க்கும் நோய் ஏற்படும்.

43. பின்ஜன்மம் காஞ்சி மேல்பால் பேரூரில் வைசியச் சேயாய்த்
தன்னிலே உதித்து மேலும் தனதானியச் செட்டு செய்து
இன்னவன் கீர்த்தி மானாய் இவனுமே வாழ்வா னாகும்
அன்னையே யாங்கள் சொல்லும் அருள்மொழிகுன்றா வென்றோம்.

43. இவன் மறு ஜன்மத்தில் காஞ்சீபுரத்திற்கு மேற்கில் ஒரு பெரிய ஊரில் வைசிய குலத்தில் உதித்து, தன தானிய வியாபாரம் செய்து, மிக்க புகழ் உள்ளவனாக வாழ்வான். தாயே! நாங்கள் சொல்லுகின்ற அருள்மொழிகள் ஒரு காலும் பொய்யாகா.

44. மாதிரு பின்ஜன் மத்தை வரைகிறோ மருணை தன்னில்
நீதியாய்ச் சைவ வம்சம் நிமலியு முதித்து மேலும்
வேதனை யில்லா தாகி வேண்டிய பணிகள் பெற்றுக்
கோதிலா வாழ்வா ளாகும் கூறுவோம் மேலுங் கேளே.

44. இந்தக் கடகலக்கின மகனது தாயின் பின்ஜன்மத்தைச் சொல்லுகின்றோம். இவள் திருவண்ணாமலையில் சைவவமிசத்தில் பிறந்து, வாழ்க்கையில் எவ்வித இடைஞ்சலும் இல்லாமல், பல தருமங்களைச் செய்து வெகு காலம் சுகமாக வாழ்ந்திருப்பாள். மேலும் சொல்லுகின்றோம். கேளுங்கள், தாயே!

45. தந்தையின் மரண காலம் சாற்றுவோ முப்பா னைத்தில்
சந்ததம் துலாமா தத்தில் சாற்றினோம் கர்மம் தானும்
முந்திய அன்னைக் கேதான் முயனுவோம் முப்பான் மூன்றில்
தன்தனுர் மாதம் தன்னில் சாற்றினோம் கண்டம் தானே.

45. தந்தையின் மரண காலத்தைப்பற்றி விளம்புகின்றோம். இந்த ஜாதகனது முப்பத்தைந்தாவது வயதில் ஐப்பசி மாதத்தில் தந்தை மரணமடைவான். தாயின் மரண காலத்தைக் கேளுங்கள். இந்த மகனது முப்பத்து மூன்றுவது வயதில் மார்கழி மாதத்தில் இவனது தாய் மரணமடைவாள்.

46. ஜாதகன் மரண காலம் சாற்றுவோ மறுபா னறில்
கோதிலாச் சிம்ம மாதம் குறைபக்கம் சதுர்த்தி தன்னில்
மேதினில் சூலை யாலே வித்தக னுடலம் வாடும்
போதக வானைப்பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

46. விநாயகரைப் பெற்ற பார்வதியே! இவனது மரண காலத்தை இயம்புகின்றோம். இவன் அறுபத்தாறுவது வயதில் ஆவணி மாதத்தில் தேய் பிறைச் சதுர்த்தியில் மரண மடைவான். மரணத்திற்குக் காரணமாக சூலை நோய் காணும். அதனால் இவனது உடல் மிகவும் வாடும். அதுவே இவனுக்கு முடிவு காலமாகும்.

47. மறுஜன்மம் உள்ளூர் தன்னில் வைசிய குலமு தித்துப்
பெருமையாய்ச் செட்டு செய்து பிஞ்ஞகன் தமைத்து தித்து
இருவினை யில்லா னாகி இவனுமே வாழ்வா னாகும்
பெருவயி றோனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

47. ஸ்ரீ கணபதியைப் பெற்ற தாயே! இவன் மறு ஜன்மத்திலும் இதே ஊரில் வைசிய குலத்தில் பிறந்து, பெருமையோடு வியாபாரம் செய்து, பரமசிவனை மனத்தினால் சிந்தித்தும், வாயினால் துதித்தும், பாவமற்றவனாகச் சுகமாக வாழ்வான்.

48. ஜாதகன் யோகச் செய்கை சாற்றுவோ மூகை சாலி
மேதினில் கல்வி யுள்ளான் விளைபுலம் விருத்தி செய்வன்
போதவே பாக்கிய வானும் பிழைகளும் செய்யா னாகும்
சூதிலான் கீர்த்தி கொள்வன் சுயபந்து மெச்ச வாழ்வன்.

48. ஜாதகனுடைய யோகங்களைச் சொல்லுகின்றோம். இவன் மிகவும் மதிநுட்பம் உள்ளவன். கல்வி உடையவனாகவும் இருப்பான். நிலங்களை அபிவிருத்தி செய்வான். போதுமான அளவிற்குச் செல்வம் படைத்தவன். குற்றங்கள் செய்யாதவன். நெஞ்சில் கள்ள மில்லாதவன். புகழ் பெற்றவனாகவும், உறவினர்களால் கொண்டாடப்படுபவனாகவும் வாழ்வான்.

49. அண்டினோர்க் குதவி செய்வன் ஆள்கார ருடைய னாகும்
எண்டிசை வறுமை யில்லான் ஈகைவான் எவர்க்கு நண்பன்
குண்டைகோ விருத்தி யுள்ளான் கோவலர் நேசம் கொள்வன்
உண்டியில் சுகமுமு ள்ளான் உத்தமி மேலுங் கேளே.

49. தன்னை அண்டியவர்களுக்கு மனமுவந்து உதவி செய்வான். நம்பிக்கைவாய்ந்த சேவகர்களும் இவனுக்குக் கிடைப்பார்கள். வறுமை இல்லாதவன். எருதுகளையும் பசுக்களையும் விருத்தி செய்வான். பெண்களிடம் அன்புள்ளவன். போஜன சௌக்கியம் இவனுக்கு இருக்கும். உத்தமியே! மேலும் கேளுங்கள்.

50. பாலகன் ஜனன காலம் பிரிதியின் தசையி லேதான்
கோலமா யிருப்பு மாதம் கூறுவோ மைந்த தாகும்
சாலவே சாத கர்க்குச் சுலபமாய் ரோக முண்டு
ஏலவே தந்தைக் கேதான் இயம்பினோ மலைச்சல் தானே.

50. பாலகன் ஜனித்த காலத்தில் சூரியதசையில் பாக்கி ஐந்து மாதங்களே. [ஆகவே இவன் உத்தராடம் நான்காம் பாதத்தில் பிறந்தான் என அறிக.] இந்தத் தசையில் ஜாதகனுக்கு நோயும், இவனது தந்தைக்கு வீண் அலைச்சல்களும் ஏற்படும். இவைகளே சூரியதசையில் முக்கியபலன்கள்.

51. மதிதசை காலந் தன்னில் மாதிரு பிணியும் காட்டும்
அதிகமாய்த் துணைவர் விருத்தி அழிந்திடும் குடும்பம் வேரும்
விதியினல் மாம னுக்கு வேணது நிந்தை யுண்டு
சதியுண்டு சூதம் காணும் தன்பந்து சுபமு முண்டே.

51. அடுத்து வரும் சந்திரதசையில் தாய்க்குப் பிணி தோன்றும். சகோதர விருத்தியும் உண்டு. சகோதரர்களுக்கு அழிவும் ஏற்படும். குடும்பப் பிரிவினை நடைபெறும். இவனது மாமனுக்கு அதிக நிந்தைகள் நேரிடும். வஞ்சனையும் சண்டைகளும் உறவினர் மரணமும் ஏற்படும். பந்து வருக்கத்தில் கலியாணம் முதலிய சுப சம்பவங்களும் நடைபெறும்.

52. தந்தையின் துணை வருக்குச் சந்ததி விருத்தி யாகும்
முந்திய பூமி சேரும் முயற்சியாய்த் தான்ய மோங்கும்
இந்ததோர் சாத கர்க்கு இடறுகள் வந்து நீங்கும்
சந்ததம் செலவு மாகும் சத்தியே மேலுங் கேளே.

52. தந்தையின் சகோதரர்களுக்கு வமிச விருத்தியுண்டாகும். இவனது குடும்பத்திற்குப் பூமிகள் சேரும். செய்யப்படும் முயற்சிகள் பலிதமாகும். தானிய சேமிப்பும் வளரும். இவனுக்கு இடறுகள் தோன்றி நீங்கும். குடும்பத்தில் செலவுகளும் அதிகமாகும். தேவியே ! மேலுங்கேளுங்கள்.

53. வித்தையும் நேரு மென்றேும் விரயமாம் துணைவ ரும்தான்
சித்தமாய்த் தந்தை வர்க்கம் சூதகம் உண்டு கண்டாய்
புத்தியில் விபர மாகப் புகலுவோம் இனிமே லாக
அத்தியைப் பெற்ற மாதே அம்பிகை யானே கேளாய்

53. இந்தச் சந்திரதசையில் இவனுக்குக் கல்வியில் அபிவிருத்தி உண்டாகும், சகோதரர்களுக்குச் சேதமும் நேரிடும். ஒவ்வொரு புக்திகளின் பலன்களைச் சொல்லும்போது இவைகளைப்பற்றி விஸ்தாரமாக விளம்புகிறேம். விஞயகரைப் பெற்ற தாயே ! இவனைப் பற்றிய இதரச் செய்திகளை இரண்டாம் பாகத்தில் கூறப்போகின்றேம்.

ஜாதகம் 4

1. சந்திரன் கேது தேளில் சனிசீயம் குருவும் சாடி
புந்தியும் புகரும் மேடம் பூமகன் வீணை புக்க
நந்தியில் இரவி ராகு நல்கிடும் சென்மம் வண்டி
இந்தவாறு கிரகம் நின்றுல் இயம்புவீர் பலனைத் தானே.

	புதன் சுக்கிரன்	சூரியன் ராகு	செவ்வாய்
குரு	இராசி சக்கரம்		லக்கினம்
			சனி
	சந்திரன் கேது		

கர வருஷம் வைகாசி மாதம் 11-ம் தேதி சனிக்கிழமை பகல் நாழிகை 8-30-க்கு மேல் 14-க்குள் ஜனனம்.

ஆங்கிலத் தேதி 23-5-1891.

நவக்கிரஹங்களின் பாதசாரம்.

கிருத்திகை 4-இல் சூரியன். விசாகம் 4-இல் சந்திரன். மிருகசீர்ஷம் 3-இல் செவ்வாய். பரணி 3-இல் புதன். பூரட்டாதி 1-இல் குரு. அசுவனி 3-இல் சுக்கிரன். பூரம் 2-இல் சனி. ரேஹிணி 2-இல் ராஹு. அனுஷம் 4-இல் கேது.

நக்ஷத்திரம் விசாகம். குரு தசையில் இருப்பு மாதங்கள் எழு, நாட்கள் பதினைந்து.

1. சந்திரன் கேது விருச்சிகத்திலும், சனி சிம்மத்திலும், குரு கும்பத்திலும், புதன் சுக்கிரன் மேஷத்திலும், செவ்வாய் மிதுனத்திலும், சூரியன் ராகு விருஷபத்திலும், இருக்கக் கடக லக்கினத்திலுதித்த இந்த ஜாதகனது பலன்களைச் சொல்லுவீர்களாக, என பார்வதி தேவி வினவினள்.

2. பார்வதி கேட்கும் போது பராசரும் கூறு கின்றர்
சீர்புக ழாண்பால் ஜனமம் செப்புவோம் பிறந்த இல்லம்
கூறிய வடதென் வீதி குடகுதன் வாச லாகும்
ஆறுமா முகன்தன் கோஷ்ட மழிந்திடும் வடகீழ் தன்னில்

2. இவ்வாறு பார்வதிதேவி கேட்க, பராசர முனிவர் பதில் கூறுகின்றார். இந்த கிரஹநிலையில் ஆண்மகவு ஜனித்திருக்கும். பிறந்த வீட்டைப் பற்றிச் சொல்லுகின்றோம். வீதி தெற்கு வடக்கில் அமைந்திருக்கும். வீடு மேற்குத் திசையை நோக்கி இருக்கும். வீட்டிற்கு வடகிழக்கில் சிதைந்த ஆறுமுகப் பெருமானது கோயில் இருக்கும்.

3. உத்தரம் தந்தி நிற்கும் உரைக்கிறோம் தெற்கில் அம்மால்
சித்தசன் தனையெ ரித்த தேவனு மேற்கில் தங்கும்
பக்தியாய்க் கிழக்குத் தெற்கு பாதையு முண்டு கண்டாய்
வித்தகி சோலே சூழி விளங்கிடும் சிற்றூர் தன்னில்.

3. நேர் வடக்கில் பிள்ளையார் கோயிலும், தெற்கில் விஷ்ணு கோயிலும், மேற்கில் பரமசிவன் கோயிலும் இருக்கும். இவ் வீட்டிற்குக் கிழக்கிலும் தெற்கிலும் பாதை யுண்டு. அவ்வூரில் சோலைகளும் நீர்நிலைகளும் இருக்கும். இப்படிப்பட்ட ஊரில் அவன் ஜனித்திருப்பான்:

4. நதிகுலம் தனிலு திப்பான் நாயகன் ஜன்ன யோகம்
மதிநுதல் மாதிர் யோகம் அவன்தந்தை துணைவர் யோகம்
சதியிலா களத்ர புத்ரர் சாற்றுவோ முன்பின் ஜன்மம்
விதியினல் கரும சாந்தி விளம்புவோ மிந்நூல் தன்னில்.

4. இவன் வேளாள குலத்தில் உதித்திருப்பான். இந்த நூலில் இவனது யோகத்தையும். தாய் தந்தை சகோதரர் களத்திரம் புத்திரர் இவர்களைப்பற்றியும், முன்பின் ஜன்மங்களையும், சாந்திகளையும் சொல்லப் போகின்றோம்.

5. தந்தையின் வர்க்கம் தன்னைச் சாற்றுவோ மிருநான் காகும்
நொந்திடும் சிலவே தாமும் நிகரமா யாண்பால் ரண்டு
எந்தையே பெண்பா லொன்று இயம்புவோம் தீர்க்க மாக
சந்ததம் பிதாகு ணத்தைச் சாற்றுவோம் கேளும் தாயே.

5. இவனுடைய தந்தையின் சகோதரவர்க்கத்தைச் சொல்லுகின்றோம். தந்தைக்கு எட்டுசகோதர சகோதரிகள் பிறப்பார்கள். அவர்களில் இரண்டு சகோதரர்களும் ஒரு சகோதரியும் நீண்ட ஆயுளுடன் இருப்பார்கள். தாயே! தந்தையின் குணத்தைச் சொல்லுகின்றோம். கேளுங்கள்.

6. இருநிறம் சமதே கத்தன் இன்பமாய் வார்த்தை சொல்வன்
பெருமவர் நேசம் கொள்வன் பிஞ்ஞகன் தனைத்து திப்பான்
உறன்முறை மெச்ச வாழ்வன் உறுதியா மனத்த னுகும்
குறுமுனி போலே கல்வி கூறுவானுகை சாலி.

6. கருத்த மேனியன். அவயவங்கள் தக்க அளவோடு அமைந்திருக்கும். இனிமையான வார்த்தைகளைப் பேசவல்லான் பெரியவர்களின் நட்பு இருக்கும். சிறந்த சிவபக்தன். இவனது குடும்ப வாழ்க்கை, உறவினர் மெச்சும் படி இருக்கும். மனத்திடம் வாய்ந்தவன். அகத்தியமுனிபோலக் கல்வியில் சிறந்தவன். மிக்க மதியூகம் உடையவன்,

7. பண்டிதம் ஞானம் கற்பன் பலருக்கு நல்லோ னுவன்
அண்டினேர்க் குதவி செய்வன் அனேகமாய்ப் பூமி சேர்ப்பன்
பெண்டிரால் கீர்த்தி கொள்வன் இருவித வார்த்தை சொல்வன்
துண்டமாய்ச் சொல்லு முள்ளவான் துணைவரை ஆத ரிப்பான்.

7. வைத்திய சாஸ்திரம் கற்பான். எல்லோருக்கும் நல்லவனுக நடந்து கொள்வான். தனனையண்டி யவர்களுக்கு உதவி செய்வான். ஏராளமான பூமியைச் சேர்ப்பான். பெண்கள் மூலம் புகழைப் பெறுவான். இரண்டு பொருள்களைத் தரும் (சிலேடை) வார்த்தைகளைப் பேச வல்லவன். அவனது வார்த்தைகள் கண்டிப்பாகவும் இருக்கும். சகோதரர்களை நன்கு ஆதரிப்பான்.

8. சித்திர வீடு செய்வன் சிறுத்தவர்க் குதவு வானும்
பத்தினி நேய னுகும் பணிதி களிச்சை யுள்ளான்
உத்தமர் நேயம் கொள்வன் உடலினில் பித்தச் சூடு
குற்றங்கள் வெளியி டாதான் குணமது சீல னென்றோம்.

8. அழகான வீடு கட்டுவான். எளியோர்களுக்கு உதவி செய்வான். மனைவியிடத்தில் அன்புள்ளவன். ஆபரணங்களில் ஆசையுள்ளவன். உத்தமருடன் நேசம் கொள்வான். சரீரத்தில் பித்தச் சூட்டினுல் தொந்தரவு ஏற்படும். தனது குற்றங்களையும் பிறர் குற்றங்களையும் யாரிடமும் வெளியிட மாட்டான். பொதுவாக நல்ல சீலவானுக இருப்பான்.

9. தந்தைநாள் பூமி யில்லான் தனமிலான் அலேச்ச லுள்ளான்
பிந்தியே பூமி சேர்ப்பன் புண்ணியம கொஞ்சம் செய்வன்
வந்தவர்க் கன்ன மீவன் மருமநூ லறிவா னுகும்
அந்திய காலந் தன்னில் அணுகிடும் [1] வாத சித்தி.

9. அவனுக்குப் பூர்விக நிலம் பணம் இவை இரா. பால்யத்தில் மிக்க அலேச்ச லுள்ளவனுகவும் இருப்பான். பிற்காலத்தில் தன் முயற்சியால் நிலங்களைச் சேர்ப்பான். அன்னதானம் செய்வான். வேதாந்த நூல்களைக் கற்றறிவான். இவனுக்கு முதுமைக் காலத்தில் வாத சித்தி வந்திடும்.

10. யோகநித் திரையும் கொள்வன் உத்தரம் ஆசானுலே
போகங்க ளனுப விப்பன் புத்திர ராசை யுள்ளான்
பாகமாய்ப் பேச வல்லன் படியாள்க ளுடைய னுகும்
ஆகம நுணுக்கம் தேர்வன் அம்பிகை யாளே கேளாய்.

10. அம்பிகையே! இவன் வட திசையில் ஒரு ஆசாரியன் மூலம் கடவுள் தியானத்தில் நன்ருக ஈடுபடுவான். இம்மையிலுள்ள சுகபோகங்களை நன்ருக அனுபவிப்பான். புத்திரர்களிடத்தில் மிக்க வாஞ்சையுள்ளவன். நன்ருகப் பேசுந் திறமையுமுண்டு. அனேக சேவகர்களை ஆதரிப்பான். மேலும் சாஸ்திரங்களின் தத்துவங்களை நன்கு அறிவான்.

---

[1], வாத சித்தம்—வாத நோய்.

11. இக்குண முடைய தந்தைக் கிவனுமே அஞ்சாம் ஜன்மம்
மிக்கவே யுதிப்பா னுகும் விளம்புவோ மவன்கு ணத்தைச்
சிக்கின மில்லா னுகும் தேவிமேல் பிரிய னுகும்
பக்குவ மாக வார்த்தை பகருவான் கோபி யாவன்.

11. இப்படிப்பட்ட குணங்களுள்ள தந்தைக்கு இந்த ஜாதகன் ஐந்தாவது குழந்தையாக செனிப்பான். இவனது குணவிசேஷங்களைச் சொல்லுகின்ரும். சிக்கன மில்லாதவன். மிக்க தாராளமாகச் செல வழிப்பான். தேவி பக்தனுக இருப்பான். கேட்பவர்கள் தன் வசமாகும்படி பேசுவான். கோபமும் உள்ளவன்.

12. மானிறம் ஒடிச்சல் தேகி மருமவான் கல்வி கொஞ்சம்
தேன்மொழி வார்த்தை சொல்வன் தியாகியாம் கீர்த்தி யேற்பன்
ஆனவர் நேசம் கொள்வன் அவனுகி சுகிபொ சிப்பன்
மான்விழி மார்கள நேயன் அடிமைக ளுடைய னுமே.

12. மாநிறமுள்ளவன். தேஹம் மெலிந்திருக்கும். சிறிது கபடமுள்ளவன். கொஞ்சம் கல்வியறிவும் உடையவன். தேன்போல இனிமையான வார்த்தைகளைப் பேசுபவன். கொடையாளி. புகழுள்ளவன். பெரியோர்களின் நேசம் உடையவன். மிக்க மதியூக முள்ளவன். இவ்வுலக சுகங்களை நன்ருக அனுபவிப்பான். பெண்களால் விரும்பத்தக்கவனுகவும் அநேக வேலையாட்கள் உடையவனுகவும் இருப்பான்.

13. தந்தைநாள் பூமி தன்னைத் தானவன் விருத்தி செய்வன்
பிந்தியும் பூமி சேர்ப்பன் பூஷண முடைய னுகும்
கந்தன்தன் பக்தி கொள்வன் காவலர் நேசம் கொள்வன்
நந்தியா வுடைய னுகும் நாயகி பூசை பூண்பன்.

13. பிதிரார்ச்சித நிலங்களை மேன்மேலும் அபிவிருத்தி செய்வன். மேலும் சொந்தமாக நிலங்களை வாங்குவான். ஆபரணங்களை சம்பாதிப்பான். ஸ்ரீ சுப்பிரமணியஸ்வாமியிடத்தில் பக்தி உடையவன். சேவர்களிடத்தில் அன்பு உடையவன். எருதுகள் பசுக்கள் இவைகளை உடையவன். பார்வதி தேவியின் பூசையிலும் ஈடுபடுவான். [தீக்ஷை கொள்வான் என்பது கருத்து.]

14. வயித்திய வாதம் செய்வன் மானில நல்லோ னுவன்
ஜயம்செய்வன் எடுத்த வேலை சீலனும் வறுமை யில்லான்
அயலாரால் பெருமை பூண்பன் அண்டினோர்த் தம்மைக் காப்பான்
பயமில்லா மனத்த னுகும் பாவத்திற் குட்ப டாதான்.

14. வைத்திய சாஸ்திரமறிந்தவன். அவன் வசிக்கும் ஊரில் நல்லவன் எனப் பெயரெடுப்பான். ஏற்றுக்கொண்ட வேலைகளில் வெற்றியைக் காண்பான். நல்ல நடத்தை உள்ளவன். ஏழ்மை இல்லாதவன். பிறரால் மிகவும் கௌரவிக்கப்படுவான். தன்னை அண்டியவர்களைக் காப்பாற்றுவான். அஞ்சாத நெஞ்சம் படைத்தவன். பாவச்செயலில் ஈடுபடமாட்டான்.

15. நெவுசக ளுடைய னுகும் நேமியில் செட்டுச் செய்வன்
வசையது கூறு னுகும் மருமத்தை வெளியி டாதான்
பசையான குடும்பி யாவன் பரவுபகார னுவன்
விசையான நடையு மாவன் மேதினில் டம்ப முள்ளான்.

15. நெசவுத்தொழில் உடையவனுவன். வியாபாரம் செய்வான். [செட்டாகச் செலவு செய்வான் என்றும் சொல்லலாம.] பிறரை நிந்திக்கமாட்டான். அந்நியர் சொன்ன ரஹஸ்யத்தை வெளியிடமாட்டான். சுபிக்ஷமான குடும்பமுள்ளவன். உபகாரம் செய்வான். வேகமாக நடக்கும் இயல்புள்ளவன். சிறிது ஆடம்பரமாகவும வாழ்க்கை நடத்துவான்.

16. இவனுடைத் துணைவர் தம்மை இசைக்கிரேம் மூத்தோ ராணும்
அவனியில்நே ரிலையோ ரில்லை அதன்பின்பு விருத்தி யென்ரேம்
பவமுள ஆண்பா லொன்று பாவையு மவ்வா ருகும்
இவைகளும் தீர்க்க மாகும் இனியவன் சேதி கேளாய்.

16. பார்வதி தேவியே ! இவனுடைய சகோதரர்களைப்பற்றிச் சொல்லுகிரேம். இவனுக்கு மூத்தசகோதரன் இல்லை. [இவனே மூத்தவன் என்பது கருத்து.] இவனுக்கு அடுத்துப் பிறக்கும் குழந்தையும் நீடித்திராது. அதன் பின் பிறக்கும் குழந்தை நீடித்திருக்கும். ஒரு சகோதரனும் ஒரு சகோதரியுமுண்டு. இவர்கள் தீர்க்காயுளுடன் விளங்குவார்கள். இனியவனுடைய வரலாற்றைச்சொல்லுகின்ரேம். கேளுங்கள்.

17. கல்விமானுகை சாலி கட்டுவார்த் தைகளும் சொல்வன்
இல்லையென் றுரைக்க மாட்டான் எதிரியை வசியம் கொள்வன்
சொல்லுமே நெறியுள் ளோனும் துணிவான மனத்தா னுகும்
நல்லவ னுகி வாழ்வான் நடனசங் கீத மிட்டன்.

17. கல்வியறிவு உள்ளவன். சிறந்த மதிநுட்பம் வாய்ந்தவன். அடுக்கான வார்த்தைகளைப் பேசும் இயல்புள்ளவன். தன்னை அடைந்து யாசிப்பவர்களுக்கு, இல்லை என்று சொல்லாமல் கொடுப்பான். தன் எதிரிகளை வசப்படுத்தும் சக்தி வாய்ந்தவன். தருமமார்கத்தில் செல்லுவான். மிக்க தைரியசாலி. எல்லோருக்கும் நல்லவனுக நடந்துகொள்வான். மேலும் நாட்டியம், சங்கீதம் இவைகளில் விருப்பமுள்ளவன்.

(வேறு·)

18. கைமுதலு முண்டாகும் யோகி யாவன்
கனம்பெரிய குடும்பமது கனத்தோர் நேசன்
மைவிழியார் பல மாத ரின்பம் தன்னில்
மையல்கொள்வான் நவதானியம் விருத்தி செய்வான்
உய்யும்வகை பண்டிதங்கள் கிருஷி யாலும்
உயர்நெசவால் மாந்தரிகம் செட்டு வாலும்
வையக மேல் பெருமை யுள்ளான் தந்தை மேலாய்
வாழ்குவான் கன்னிஜன்ம வருவா னென்ரேம்.

18. கையில் ரொக்கமாகப்பணம் சேரும். யோகியாகவும் இருப்பான். மேலும் அவனது குடும்பம் மிகவும் கௌரவம் வாய்ந்ததாக இருக்கும். கன தனவான்களின் நட்பும் உடையவன். பல அழகிகளின் நேசமுள்ளவ னுவான். ஏராளமான நவதானியங்களின் லாபமுடையவன். இவனது ஜீவனம், வைத்தியத்தாலும் சிருஷியாலும் நெசவாலும் மாந்திரிகத் தாலும் வியாபாரத்தாலும் நடைபெறும். மிக்க பெருமை வாய்ந்தவ னுக இருப்பான். தந்தையைக்காட்டிலும் மேலாக வாழ்வான். அவனது ஜென்மலக்கினம் கன்னியாகும்.

19. வருமனை யாள் ஒன்றுகும் உத்தர மென்றேரும்
ஆண்மதலை இரண் டென்றேரும் பெண்பால் மூன்று
திருமகளும் வாசமுளான் அதிதி நேயன்
சென்றிடங்கள் பெருமை யுளான் சிறப்பாய் வாழ்வன்
அறநெறியைக் கை விடான் வாத தேகி
ஆதரிப்பான் தமை யனேயே அரசு செய்வன்
இருகல்வி சிலநாட்கள் அன்னிய தேச
மேகுவான் சகடுபரி யெய்தும் தானே.

19. அவனுக்கு மனைவி ஒருத்தியே. அவள் வடதிசையில் பிறந்திருப் பாள். அந்த தம்பதிகளுக்கு இரண்டு பிள்ளைகளும் மூன்று பெண்களும் ஜனிப்பார்கள். அவனது வீட்டில் நிரந்தரமாக லக்ஷ்மி வாசம் செய்வாள். [எப்பொழுதும் செல்வம் நிறைந்தவன் எனபதுக் கருத்து]. விருந்தாளிகளை அன்புடன் உபசரிப்பான். சென்ற விடமெல்லாம் இவனுக்கு நல்ல மரியாதை களும் உபசாரங்களும நடைபெறும். வாழ்க்கையைச் சிறப்புடன் நடத்து வான். தருமத்தைக் கைவிடாதவன். வாதசரீரம் வாய்ந்தவன். தமையனை [கடகலக்கின மகனை] ஆதரிப்பான். ராஜாங்க உத்தியோகம் வஹிப்பான். இருவிதமான கல்விகளில் [ஆங்கிலம், தமிழ், ஹிந்தி, அல்லது தமிழ் இவ் வாறு இருகல்விகளில்] தேர்ச்சி பெற்றவனுவான். மேலும் வெளி நாடு களுக்கும் பிரயாணம் செய்வான்.

(வேறு.)

20. இன்னமும் விபரம் ரண்டில் இயம்புவோ மிவனுக் கேதான்
அன்னவன் மணத்தின் காலம் அறைகின்றேரும் ஒருபா னுறில்
கன்னிகை உத்த ரத்தில் காதலி மாதுர் வர்க்கம்
தன்னிலே வருவா ளாவள் சாற்றுவோ மவள்கு ணத்தை.

20. இன்னும் அதிக வரலாறுகளை இரண்டாம் பாகத்தில் சொல்லப் போகிறேம். கடகலக்கினத்தில் உதித்த நாங்கள் பலன்களைச் சொல்லுவ தற்கு ஆரம்பித்திருக்கும் இம்மகனுக்கு பதினுருவது, வயதில் விவாஹம் நடைபெறும். பெண் வடதிசையில் மாதுரு வர்க்கத்தில் ஜனிப்பாள். அவளது குணங்களைச் சொல்லுகின்றேம் கேளுங்கள்.

21. ஒடிச்சலாம் சிவந்த மேனி உரைக்குமுன் கோபி யாவள்
அடவுடன் புத்தி சாலி அலபரை உறவு கொள்ளாள்
நடக்கையும் நல்ல தாகும் நாதனுர் பக்தி பூண்பள்
விடவாக்கு பலித முண்டு வித்தகி மேலுங் கேளே.

21. அவளது உடல் மெல்லியதாக இருக்கும். நிறம் சிவப்பு. சிறிது முன்கோபி. புத்திவன்மையும் படைத்தவள். தன்னைவிடத் தாழ்ந்தவர் களிடம் நேசம் கொள்ளமாட்டாள். நல்ல நடத்தை உடையவள். கணவ னிடத்தில் விசேஷ பக்தி கொண்டவள். அவள் சொல்லும் தீங்கான சொற் கள் உண்மையாகும் [சுபவார்த்தைகள் பலிக்காது என்பது கருத்து].

22. மதலைகள் விருத்தி தன்னை வரையவே பலத்தைக் காணேம்
நதிசடை முனிவர் கூற நாயகி கேட்க லுற்றள்
எதுவிதக் கார ணத்தால் இலகாது மதலை யென்றீர்
அதுசேதி சொல்லு மென்ன அறைகிருர் பராசர் தாமே.

22. அவளுக்குப் புத்திரவிருத்தியைச் சொல்லுவதற்குத் தக்க காரணங் களைக் காணேம் என்று முனிவர் சொல்ல, பார்வதி, என்ன காரணத் தால் புத்திரவிருத்தி யில்லை. அதைப்பற்றிய விவரங்களைச் சொல்லுங்க ளெனக் கேட்க, பராசரமுனிவர் சொல்லுகின்ருர்.

23. அஞ்சினில் மதியும் நீசம் அவனுடன் கேது கூடித்
தஞ்சமா யிருப்ப தாலும் சேயவன் விரையம் புக்கத்
துஞ்சிடு மதலை யென்றேரும் ஜயமுனி கூறுகின்ருர்
மிஞ்சிய பத்தில் வெள்ளி மதிமகன் கூடி நிற்க

23. புத்திர பாவம் என்று சொல்லப்படும் ஐந்தாவது வீட்டில் சந் திரன் நீசனுகி தனக்குத் சத்துருவாகிய கேதுவுடன் இருப்பதாலும், புத்திர பாவத்திற்குடைய செவ்வாய் 12-இல் இருப்பதாலும் புத்திர விருத்தி இல்லை என்று சொன்னேம் ; என்றவுடன் ஜயமுனிவர் கூறுகின்ருர். கீர்த்தி ஸ்தானம் என்று சொல்லப்படும் பத்தாமிடத்தில் சுக்கிரனும் புதனும் இருப்பதாலும்.

24. இதுவன்றிப் பிறையோ னஞ்சி லிருப்பதால் மதலை யாலே
அதிபர்க்குக் கரும நேரும் அதற்குநேர் சுருதி சொல்வேன்
விதிநூலி லைந்தாம் பாவம் விளம்பினீர் விருத்தி யென்று
சதியினுல் முன்னூழ்த் தோஷம் சார்ந்ததால் சுதர்க ளீனம்.

24. மேலும், சந்திரன் ஐந்தாமிடத்தில் இருப்பதாலும் சாதகனுக்குப் புத்திரர்களால் ஈமச்சடங்குகள் நடக்கும். அவ்வாறே சாஸ்திரங்கள் சொல்லு கின்றன. விதிநூலில் ஐந்தாம்பாவத்தில் புத்திரன் ஒருவன் உண்டென் றும் சொன்னீர். ஆகவே, இங்கு எக்காரணம்பற்றிப் பிள்ளை இல்லை என்று சொல்லுகின்றீர் எனக் கேட்க, முன்ஜன்ம வினையினுல் புத்திரதோஷ முண்டு என்றுர்.

25. முன்வினை சொல்லு மென்ன மொழிகுவார் பராசர் தானும்
அன்னவ னாலங் காட்டுக் கருகினில் சிற்றூர் தன்னில்
பொன்தொழில் விஸ்வ வம்சம் பிறந்துமே மனைவி யுண்டாய்
இன்னவன் பந்து மெச்ச இவனுமே வாழு நாளில் ;

25. முன்ஜன்மத்தில் ஏற்பட்ட வினை என்ன என்று கேட்க, பராசர முனிவர் கூறுகின்றார். அவன் முன் ஜன்மத்தில் ஆலங்காடு என்கிற கிராமத்திற்கு அருகில் ஒரு சிறிய ஊரில் தங்கவேலை செய்யும் "விச்வகர்ம" சாதியில் பிறந்து, மனைவியோடு பந்துக்கள் மெச்ச வாழுங்காலத்தில் ;

26. தன்னுடை இல்லம் தன்னில் சர்ப்பமும் வாச மாகும்
மன்னிய ஓர்நாள் தன்னில் மகுடத்தால் வெளியில் செல்ல
இன்னவ னதனைக் கண்டு எமபுரம் சேர்த்து விட்டான்
தன்னிலே அந்தத் தோஷம் சார்ந்தது என்று சொன்னோம்.

26. அவனது வீட்டில் ஒரு சர்ப்பம் வாசம் செய்துவந்தது. அஃது ஒரு நாள் வெளியில் செல்லும்போது, இவன் அதைக்கண்டு அடித்து யமலோகத்திற்கு அனுப்பிவிட்டான். சர்ப்பத்தைக்கொன்ற தோஷம் உடனே இவனை வந்து அடைந்தது.

27. அந்திய காலம் தன்னில் அவன்சுத னில்லானுகிச்
சந்ததம் மறலி பக்கல் சார்ந்துபின் மறையோ னாலே
முந்திய வரையப் பட்டு முயன்றவ னிவனே யென்றோம்
இந்தவோர் ஜன்மம் தன்னில் இவனுக்கே சுதர்கள் தோஷம்.

27. அந்த ஜன்மத்திலேயே கடைசி காலத்தில் இவன் பிள்ளைகள் இல்லாதவனுக ஆகி மிகவும் வருந்தி, கடைசியாக இறந்து, இங்கு இப்பொழுது கடகலக்கினத்தில் பிறந்திருக்கின்றான். ஆகவே இவனுக்கு இந்த ஜன்மத்தில் மாத்திரம் புத்திரதோஷமுண்டு.

28. அந்தவோர் தோஷம் தீர அருளுவோம் சாந்தி தானே
முந்திய ரசதம் தன்னால் முயற்சியாய்ப் பணியும் செய்து
கந்தம்தாம் பூலம் சேர்த்து இளர்மறை யோருக் கீந்து
தந்தியும் சூழி மேற்கில் தங்கிடும் அதற்கு இன்னோன் ;

28. அந்தத் தோஷம் நீங்க ஒரு சாந்தியைச் சொல்லுகின்றோம்: வெள்ளியால் பாம்பு உருவம் செய்து, சந்தனம், தாம்பூலம், தக்ஷிணை இவைகளோடு, வேதங்களை நன்கு கற்றுணர்ந்த பிராம்மணருக்குக் கொடுக்க வேண்டும். மேலும் இவன் பிறந்த ஊரில் மேற்குத் திசையில் விநாயகர் கோயில் ஒன்றுண்டு. அக்கோயிலில் எழுந்தருளி இருக்கும் விநாயகருக்கு.

29. மூவாண்டு தீப மொன்று மேற்றியே வருவானுகில்
நேமியில் தோஷம் நீங்கி நேர்ந்திடும் மதலை தானும்
ஆவலா யாண்பாலொன்று அனுகிடும் பெண்பால் ரண்டு

29. மூன்று வருஷகாலம் இடைவிடாது ஒரு தீபம் ஏற்றி வருவானுகில், இவனுக்கிருக்கும் புத்திரதோஷம் நீங்கி ஒரு பிள்ளையும் இரண்டு பெண்களும் பிறப்பார்கள். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியின் அருளால் நாங்கள் சொன்ன வார்த்தை பொய்யாகாது.

30. தந்தையின் பூர்வம் தன்னைச் சாற்றுவோம் வள்ளூர் தன்னில்
முந்திய மறையோா வம்சம முயன்றுமே பெருமை பூண்டு
சந்தத மரசர் பக்கல் தானதி காரம் செய்து
வந்துமே மதலை யுண்டாய் வறுமைக ளில்லா னுகி ;

30. இவனது தந்தையின் முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவன் தந்தை, முன்ஜன்மத்தில், திருவள்ளூரில் பிராம்மண வமிசத்தில் பிறந்து, பெருமையோடு அரசரிடம் உத்யோகம்செய்து, வறுமை இல்லாமல், குழந்தைகளோடு சுகமாக வாழ்ந்துவரும் காலத்தில் ,

31. வாதரோகத்தினாலே மரணமே யாகியே தான்
வேதனல் வரையப் பட்டு விளங்கினு னிவனே யென்றோம்
மாதுவும் கேட்க லுற்றாள் மறைக்குல முதித்தா னிங்கு
நீதியாய்க் கங்கை வம்சம் நேர்ந்த காரணங்களென்ன.

31. வாதரோகத்தினால் கடைசியில் மரணமடைந்து, பிறகு வேளாள வமிசத்தில் பிறந்தான என்று சொல்ல, பார்வதி கேட்கலுற்றாள். முன் ஜன்மத்தில் அந்தணசாதியில் பிறந்த இவனுக்கு, இப்பொழுது வேளாள சாதியில் பிறப்பு எக்காரணத்தினால் நேர்ந்தது ? சொல்லுங்கள், என ;

32. மறைகளை விரும்பா னுகி அன்னவன் சீல மின்றி
தரைமன்னர் பக்கல் வாசம் சார்ந்ததா லிச்சென்மத்தில்
குறைந்தது ஜன்ம மென்றோம் குலவமிச் சென்மந் தன்னில்
மருமநூ லறிந்து மேலும் மானிலம் நல்லோனுயும்.

32. பிராம்மண வமிசத்தில் பிறந்தும் வேதாப்பியாசத்தில் விருப்பமில்லாதவனுகவும் நல்லொழுக்கமில்லாதவனுகவும் இருந்துகொண்டு, எப்பொழுதும் அரசர் பக்கலில் வாழ்ந்து, அவர்களுக்கே தொண்டுசெய்து வந்தான். ஆகவே முன்ஜன்மத்தில் பிராம்மணனுக இருந்தும் வேதம் ஓதாததாலும், நல்ல நடத்தை இல்லாததாலும் வேளாள வமிசத்தில் பிறந்தான். இச்சென்மத்தில் வேதாந்த நூல்களைக் கற்றறிந்தும், நல்ல நடத்தை உள்ளவனுகவும் இருப்பதாலும் ;

33. அரனடியார்மேல் சிந்தை ஆதலால் மறுஜன் மத்தில்
மறைக்குலம் காஞ்சி தன்னில் வந்துமே தனவா னுகி
அரனடி அர்ச்சித் தேத்தி அனுயாச மரண மேகி
அரன்பதி சேரு வானும் அம்பிகை மேலுங் கேளே.

33. சிவனடியார்களிடத்தில் பக்தியோடு இருப்பதாலும், மறு ஜன்மத்தில் காஞ்சியில் பிராம்மணர் குலத்தில் பிறந்து, பணக்காரனுகி, அப்

பொழுதும் பரமசிவனைப் பூசித்து, கடைசிக்காலத்தில் கஷ்டமின்றி மரணத்தை அடைந்து, சிவலோகத்திற்கு ஏகுவான். பார்வதி தேவியே! மேலும் கேளுங்கள்.

34. மாதுரு சிவந்த மேனி மருமமும் மூர்க்கம் கோபி
தீதிலா குணத்தா ளாகும் தேவதா பக்தி கொள்வள்
மாதுமே வந்து பின்பு வரனுக்கு யோகம் வாய்க்கும்
போதக வானை பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

34. இவனுடைய தாய் சிவந்த மேனியாள். கபடநெஞ்சம் கொண்டவள். பிடிவாத முடையவள். கோபமுடையவள். இவைகளைத் தவிர, நற்குணங் களும் வாய்ந்தவள். தேவதைகளிடத்தில் பக்தியுள்ளவள். இவள் இக்குடும் பத்தில் வாழ்க்கைப்பட்டபிறகு குடும்பத்திற்கு நல்ல க்ஷேமங்கள் ஏற்பட்டிருக் கும். ஸ்ரீ விநாயகக்கடவுளைப்பெற்ற பார்வதியே! மேலுங் கேளுங்கள்.

35. அவளுடைத் துணைவர்தம்மை அறைகிறோ மாண்பா லொன்று
அவனியில் கன்னி யவ்வாறு நாட்டுவோம் தீர்க்க மாக
இவளுடைப் பூர்வம் தன்னை இயம்புவோம் தவளை கீழ்ப்பால்
பவமுள அருகர் வம்சம் பாவையும் உதித்தா ளென்றோம்.

35. அவளுடைய சகோதரர்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். ஒரு சகோ தரனும், ஒரு சகோதரியுமுண்டு. அவர்கள் தீர்க்காயுளுடன் இருப்பார்கள். இவளுடைய முன்ஜென்மத்தைப் பற்றிச்சொல்லுகின்றோம். தவளகிரி என்று சொல்லப்படும் புண்ணிய க்ஷேத்திரத்திற்குக் கீழ்த்திசையில் சமணர் வமிசத் தில் உதித்தாள்.

குறிப்பு.—தவளகிரி என்பது சுப்பிரமணிய க்ஷேத்திரங்களுள் ஒன்று.

36. சுகமது குறைச்ச லாகிச் சுதர்கள்மேல் வெறுப்புண் டாக்கி
கதிதரு கடவுள் பக்தி கருதாமல் விரத மின்றிச்
சதியான மனத்தத்ளாகித் தன்வரன் முன்னே மாண்டு
விதியவன் வறையப் பட்டு விளங்கின ளிவளே யென்றோம்.

36. அந்தச் ஜென்மத்தில் சுகமில்லாதவளாக இருந்தாள். புத்திரர்க ளிடத்தில் வாஞ்சையில்லாதவளாகவும், நற்கதியைத் தரும் கடவுளிடத்தில் பக்தியற்றவளாகவும் இருந்து, தன் கணவன் இறப்பதற்கு முன்னமேயே இறந்து, மறுபிறவியில் இங்கு உதித்தாள்.

37. இந்தவோர்ஜன்மம் தன்னில் ஈன்றதோர் சுதர்கள் தோஷம்
முந்தியே நேரு மென்றோம் மொழிகிறோ மிவள்பின் ஜன்மம்
எந்தையே அவ்வூர் தன்னில் இவனுடைக் குடும்பம் தன்னில்
வந்துமே மகவாய்த் தோன்றி வாழ்வளா மென்று சொன்னோம்.

37. இந்த ஜன்மத்திலும் புத்திரதோஷம் ஏற்படும் என்றோம். மேலும்; இவளுடைய பின்ஜன்மத்தைச் சொல்லுகிறோம். இந்த கடகலக்கின குமாரனது குடும்பத்தில் குழந்தையாகப் பிறந்து வாழ்வாள்.

38. அன்னையின் மரண காலம் அறைகிறோ மிருபா னறில்
கன்னியின் மாதம் தன்னில் கழறுவோம் கருமம் தானும்
பின்னையும் தந்தைக் கேதான் பேசுவோம் முப்பா னலில்
உன்னித மகர மாதம் உரைத்திட்டோம் கண்டம் தானே.

38. இந்த ஜாதகனின் தாயின் மரணகாலத்தைச் சொல்லுகின்றோம். இவனுடைய இருபத்தாறாவது வயதில் புரட்டாசி மாதத்தில், தாய் மரணத்தை அடைவாள். தந்தையின் மரணத்தைக் கூறுகின்றோம். இந்த ஜாதகனுக்கு முப்பத்துநான்காவது வயதில் தை மாதத்தில் தந்தை மரண மடைவான்.

39. ஜாதகன் மரண காலம் சாற்றுவோ மறுபா னைந்தில்
மேதினி லானி மாதம் வளர்பிறை துவா தசி
சூதான பித்த வாயு தோன்றியே உடலும் வாடும்
பூதல மளந்தோன் தங்கை புண்ணிய சாலி கேளாய்.

39. ஜாதகனின் மாணகாலத்தைச் சொல்லுகின்றோம். ஜாதகன், தனது அறுபத்தைந்தாவது வயதில் ஆனி மாதத்தில் வளர்பிறை துவாதசி திதியில் மரணமடைவான். கொடிய பித்தவாயு ரோகம் தோன்றி உடலை வாட்டும். அதுவே இவனுடைய முடிவிற்குக் காரணமாகும். விஷ்ணுவின் தங்கையாகிய பார்வதி தேவியே! மேலும் கேளுங்கள்.

40. மறு ஜன்மம் காளத்தி தன்னில் மன்னர்தன் குலமு தித்துக்
கரிபரி யுடையா னுகிக் கனத்ததோர் கீர்த்தி பெற்றுத்
திருமகள் வாசம் பூண்டு செல்வனும் வாழ்வா னுகும்
அறுமுகன் தன்னைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

40. இவ்வாறு மரணமடைந்து மறுஜன்மத்தில் காளஹஸ்தி க்ஷேத் திரத்தில் க்ஷத்திரிய வமிசத்தில் பிறந்து, யானை, குதிரை முதலியவை உடையவனுவான். பெரிய புகழ் உள்ளவனுகவும், எப்பொழுதும் லக்ஷ்மீ வாசம் பொருந்தியவனுகவும் சிறந்து வாழ்வான். முருகனைப்பெற்ற பார்வதி தேவியே! சொல்லுகிறோம் கேளுங்கள்.

41. இன்னவன் யோகச் சேதி இயம்புவோம் வறுமை யில்லான்
அன்னவன் ஜனனம் தொட்டு ஐயிரண்டாண்டு மட்டும்
தன்னிலே சல்லிய மன்றிச் சாற்றுவோ மதின் மேலாக
மன்னிய சல்லிய நீங்கும் மங்கையுங் கேட்க லுற்றுள்.

41. இந்த கடகலக்கின ஜாதகனது யோகங்களைச் சொல்லுகின்றோம். வறுமை இல்லாதவன். இவன் பிறந்து பத்து வருஷங்கள் வரையில் குடும் பத்திற்குக் கடன்கள் இருக்கும். அதற்குமேல் கடன் நீங்கும் என்று சொல்ல பார்வதி தேவி கேட்கலுற்றுள்.

42. எப்படிச் சல்லிய நீங்கும் இயம்புவீர் முனியே யென்றுள்
செப்புவேன் கேளும் தாயே சிறந்ததோர் கிருஷி யாலும்
ஒப்புடன் தொழிலி னுலும் உரைக்கிறோம் ருணங்கள் தீரும்
மெய்ப்புடன் லாப மெய்தும் வித்தகி கேட்டி டாயே.

42. முனிவரே! எப்படி கடன் நீங்கும் என்று சொன்னீர்? எவ்வாறு நீங்கும் சொல்லும், எனப் பார்வதி கேட்க, முனிவர் சொல்லுகிறார். நல்ல விவசாயத்தாலும், தொழிலாலும் ஏராள வருமானம் அதிகமாகி ருணங்கள் தீரும்.

43. சல்லியம் எவ் விதத்தால் சார்ந்திடும் சொல்லு மென்ன
இல்லறத் தாலும் பூமி யிடர் தவிர்த்த தாலும் சேரும்
சொல்லுவோம் ஈரைந்தின்மேல் தொலேந்திடும் துன்பம் யாவும்
அல்லலும் அணு கிடாது அம்பிகை யாளே கேளாய்.

43. பார்வதி தேவி கேட்கலுற்ருள். எக்காரணத்தினுல் இவன் குடும்பத்திற்குக் கடன் ஏற்பட்டிருக்கும்? சொல்லுங்கள், என, முனிவர் சொல்லுகின்ருர். இல்லறத்தை நடத்தும்போது ஏற்படும் செலவுகளாலும், நிலங்களுக்கேற்பட்ட இடையூறுகளைத் தவிர்ப்பதற்கான செலவுகளாலும் கடன் ஏற்பட்டிருக்கும். இவன் பிறந்து பத்து வருஷங்களுக்குப் பிறகு கடன் இராது. மற்றைய தொல்லைகளும் நீங்கும். அதற்குப் பிறகு அல்லல் தொடராது.

44. தந்தையின் துணைவர் சேதி சாற்றுவீர் முனியே யென்றுள
பிந்தியே இருவர் தானும் பின்னல்போ லொன்றுய் வாழ்வர்
இந்தவாறு மன்ன னுக்கு இருபத்து மூன்றுண்டின் மேல்
சந்ததம் வேருய்ச் செல்வர் சங்கரி கேட்டி டாயே.

44. இவனது தந்தையின் சகோதரர்களைப்பற்றிய வரலாறுகளைச் சொல்லுங்கள் எனப் பார்வதி கேட்க, பராசரமுனிவர் சொல்லுகின்ருர். இவனுடைய தந்தைக்குப்பின் பிறந்த இரு சகோதரர்களுண்டு. இந்த ஜாதகனுக்கு இருபத்துமூன்ருவது வயதுவரையில் அவர்கள் எல்லோரும் மிக்க ஒற்றுமையுடன் வாழ்வார்கள். அதற்குமேல் குடும்பப் பிரிவினை ஏற்படும்.

45. இன்னமும் அவர்கள் சேதி யியம்பு வோம் விபரம் ரெண்டில்
இன்னவர் துணைவர் ஒன்ரு யிருப்பர்கள் பெருமை யாக
இன்னமும் பூமி யோங்கும் எத்திசை கீர்த்தி யேற்பர்
இன்னவன் தனக்கு யோகம் எய்திடும் பிறை போலேதான்.

45. அவர்களைப்பற்றிய விவரங்களை இரண்டாம் பாகத்தில் சொல்லப் போகின்ரும். இவனுடைய சகோதரரும் ஒற்றுமையுடன் ஒரே குடும்பமாக வாழ்வார்கள். இவன் பிறந்தபொழுது இருந்த பூமியைவிட அதிக பூமி சேரும். எல்லா இடங்களிலும் இவர்களுடைய கீர்த்தி பரவும். வளர்பிறைச் சந்திரன்போல இவனது யோகங்கள் வளரும்.

46. இவன்பிதா தனக்கு வாத மெய்திடு மென்று சொன்னீர்
அவனியில் எந்தக் காலம் அறிவிப்பீர் முனியே என்றுள்
நவனியில் இருபான் ரண்டில் நல்கிடும் வாத சித்தி
தவசியில் குடகு திக்கில் சாருவான் ஆசானுக.

46 இவனுடைய பிதாவிற்கு வாதநோய் ஏற்படும் என்று சொன்னீர். அஃது எப்பொழுது வரும்? அதைச் சொல்லுங்கள் எனப் பார்வதி தேவி கேட்க, முனிவர் சொல்லுகின்ருர். இந்த ஜாதகனது இருபத்திரண்டாவது வயதில் இவனுடைய தந்தைக்கு வாதநோய் வந்திடும். பிறகு தவசிபோல மேற்குத் திசையை அடைந்து ஆசானுக இருப்பான்.

குறிப்பு.—கீழ்வரும் பாட்டில் இந்த ஜாதகனது ஜனனகால தசையிருப்பையும், அத்தசையின் பொதுவான பலன்களையும் சொல்லுகின்ருர்.

47. பிறந்தசேய்தனக்கு ஜனன காலம் பொன்தசை தனிலிருப்புச்
சிறந்திடு திங்க ளேழும் சேருநாள் பதினைந் தாகும்
நிரையவே செலவு முண்டு நேர்ந்திடு ரோகம் தானும்
குறையான மனங்க ளுண்டு குலத்தினில் சூதம் காணும்.

47. இவனுக்கு ஜனன காலத்தில் குருதசையில் பாக்கி மாதங்கள் ஏழும், நாட்கள் பதினைந்துமாம். இந்தத் தசையில் அதிகச் செலவுகள் ஏற்படும். நோயும் வரும். மனத்தில கவலைகளும் ஏற்படும். பந்துவர்க்கத்தில் மரணமேற்பட்டுத் தீட்டும் நேரிடும்.

[இந்த ஜாதகன் விசாகம் நான்காவது பாதத்தில் பிறந்தவன்.]

48. முடவன்தன் தசையிலே தான் எய்திடும் துணைவர் விருத்தி
அடவுடன் துணைவர் சேதம் அதிகமாய்ச் சல்லியம் நேரும்
உடன் தந்தை துணைவருக்கு உறைந்திடும் சுபமும் தானும்
உடனுடன் சுதர்கள் தோஷம் உத்தமி கேட்டி டாயே.

48. குருதசையை அடுத்து வரும் சனிதசையில் சகோதர விருத்தியு முண்டு, சகோதர சேதமுமுண்டு. இவனது தந்தையின் சகோதரர்களுக்கு உலகவாழ்க்கையில் ஏற்படவேண்டிய சுபங்கள் ஏற்படும். அவர்களுக்கும் புத்திர தோஷமுண்டு.

[குறிப்.—"दिवार्कशुक्रौ पितृमातृसंज्ञितौ शनैश्चरेन्दू निशि तद्विपर्ययात्" என்ற பிருஹஜ்ஜாதக சுலோகத்தின்படி சனியும் பித்ருகாரகனுவதுபற்றி நல்ல சனி தசையில் தந்தை சகோதரர்களுக்கு நலமேற்படும் என்று கூறப் பட்டுள்ளது.]

49. சனிதசை முன் பாகத்தில் சாற்றினேம் பலன்க ளல்பம்
சனிதசை பின் பாகத்தில் சந்திரன் போல யோகம்
இனிமையாய் ருணங்கள் தீரும் எடுத்தகாரியம் ஜயங்கள்
கனமுள பொருளும் சேரும் காரிகை புகன்றிட் டோமே.

49. சனிதசையின் 19 வருஷங்களில் முன்பாகத்தில் [அஃதாவது முதல் 9½ வருஷங்களில்] பலன்கள் அல்பமாகவே நடைபெறும். சனிதசையின் பின் பகுதியில் வளர்பிறைச் சந்திரன் போல செல்வம் வளர்ந்து சுலபமாகக் கடன் நீங்கும். முயன்ற காரியங்கள் வெற்றியடையும். பார்வதி தேவியே! மதிப்பு வாய்ந்த பொருள்கள் சேர்ந்திடும்.

50. பலவித லாப மெய்தும் பாருகள் விளேவு மோங்கும்
கலவா புத்தி நீங்கும் காலாட்கள் விருத்தி யாகும்
நிலேமையாய்த் தொழிலு மோங்கும் நித்தியம் தனமு மெய்தும்
மலேயிறை மகளே பின்பால் வரைகிறோம் சித்திரங்கள்.

50. பலவிதப் பொருள்கள் கிடைக்கும். நிலங்கள் நன்ருகப் பலனேத் தரும். கலஹம் செய்யும் மனப்பான்மை குடும்பத்தில் ஒருவருக்கும் இராது. [அஃதாவது எல்லோரும் ஒற்றுமையாக வாழ்வார்கள் என்பது கருத்து.] வேலேயாட்கள் மேன்மேலும் சேருவார்கள். செய்யப்படும் தொழிலும் ஓங்கி வளரும். எப்பொழுதும் பணம் சேரும். பர்வதராஜனின் மகளே! இவனேப்பற்றிய விவரங்களேப் பின்னல் தெரிவிக்கின்றேம்.

ஜாதகம் 5

1. கடகமும் ஜனனமாக கதிர் புகர் புந்தி தங்க
விடராகு அரியில் புக்க வேந்தனும் சிகியும் சாடி.
முடவனு முச்சமாக மூன்றினில் குசனும் நிற்க
அடவுடன் மதியும் வீணே அறைகுவீர் பலனேத் தானே.

			சந்திரன்
குரு கேது	இராசி சக்கரம்		லக்கினம் சூரியன் புதன் சுக்கிரன்
			ராகு
		சனி	செவ் வாய்

1. பிரபவ வருஷம் ஆடி மாதம் 15-ஆந்தேதி திங்கட்கிழமை காலேயில் ஜனனம்.

ஆங்கிலத்தேதி—29-7-1867.

நவக்கிரஹங்களின் பாதசாரம்.

புஷ்யம் 4-இல் சூரியன், திருவாதிரை 3-இல் சந்தின், உத்திரம் 2-இல் செவ்வாய், ஆயில்யம் 2-இல் புதன் (வக்ரீ), சதயம் 3-இல் குரு (வக்ரீ), புனர்வஸு 4-இல் சுக்கிரன், விசாகம் 2-இல் சனி, பூரம் 4-இல் ராஹு, பூரட்டாதி 2-இல் கேது இலக்கினம் கடகம், சூரியன், புதன், சுக்கிரன், இவர்கள் கடகத்திலும், ராஹு சிம்மத்திலும், குருவும் கேதுவும் கும்பத்திலும், சனி துலாத்திலும், செவ்வாய் கன்னியிலும், சந்திரன் மிதுனத்திலும் இருந்தால் பலன்களேச் சொல்லுவீர்களாக, என்று பார்வதிதேவி வினவினுள்.

2. உத்திமி கேட்கும் போது ஓதுவார் விச்வா மித்திரர்
சித்தச ஞண்பால் ஜன்மம் ஜனித்தஇல் கீழ்மேல் வீதி
பத்தியாய்த் தெற்கு வாசல் ப்ரமனும் காளி மாமோன்
சத்தியே கீழ்ப்பால் சொன்னேம் சந்தியும் மாரி தும்பி.

2. இவ்வாறு பார்வதி தேவி கேட்டவுடன், விசுவாமித்திரர் சொல்லுகின்ருர். இவ்வாருன கிரஹநிலேயில் ஆண் குழந்தை ஜனிப்பான். ஜனித்திருக்கும் வீடு கிழக்கு மேற்காக அமைந்துள்ள வீதியில் தெற்கு நோக்கி இருக்கும். அவ் வீட்டிற்கு கீழ்த்திசையில் சிவபிரான், காளி, விஷ்ணு, சக்திதேவி இவர்கள் திருக்கோயில்கள் இருக்கும்.

3. தங்கிடும் வடமேல் திக்கில் சலக்கரை மேற்கில் நிற்கும்
பொங்மாய் நதியும் தெற்கில் போற்றுவோம் சிற்றூர் தன்னில்
மங்கையிவ் வடையா ளத்துள் மைந்தனும் பத்தாம் ஜனமம்
பொங்கமா யுதிப்பா னுகும் புகலுவோம் பலன்கள் தாமே.

3. வடமேற்குத்திசையில் பல வீதிகள் கூடுமிடமும் மாரியம்மன் விநாயகர் இவர்களுடைய கோயில்களும் இருக்கும். மேற்குத் திசையில் ஒரு நீர் நிலை இருக்கும். தென்திசையில் ஒரு நதியும் உண்டு. இவ்வடையாளங்களமைந்த ஒரு சிறிய ஊரில் இந்த ஜாதகன் அந்தக் குடும்பத்தில் பத்தாவது குழந்தையாக ஜனிப்பான். இவனது யோகங்களைக் கூறுகின்றேம்.

4. தானவன் ஜனனயோகம் சகோதர புத்திர யோகம்
மானமாய்த் தந்தை யோகம் மாதுரு களத்திர யோகம்
பான்மையாய் முன்பின் ஜன்மம் பகருவோ மிந்நூல் தன்னில்
வானவர் துதிக்கு மெங்கள் மங்கையே கேட்டி டாயே.

4. தேவர்கள் போற்றும் தேவியே! இந்நூலில் அவனது ஜனன யோகம், சகோதரர், புத்திரர், தந்தை, தாய், மனைவி இவர்களைப் பற்றியும், முன்பின் ஜன்மங்களைப்பற்றியும் சொல்லுகின்றேம்.

கீழ் வரும் இரண்டு பாடல்களால் தந்தையின் குணத்தைச் சொல்லுகின்றுர்.

5. தந்தையின் துணைவர் தம்மைச் சாற்றுவோ மாண்பா லொன்று
வந்திடும் கன்னி யவ்வாறு வழுத்திடும் தீர்க்க மாக
முந்திய பிதா குணத்தை மொழிகிறேம் சிவந்த மேனி
சந்தத மொடிச்சல் தேகி சமர்த்துளான் பொறுமை சாலி.

5. இவனது தந்தைக்கு ஒரு சகோதரனும் ஒரு சகோதரியுமுண்டு. அவர்கள் தீர்க்காயுளுடன் வாழ்வார்கள். இவனது தந்தையின் குணத்தைச் சொல்லுகின்றேம். சிவந்த மேனியான். மெலிந்த சரீரமுள்ளவன்- மிக்க சாமர்த்தியசாலி. பொறுமை குணம் நிறைந்தவன்.

6. பதமான வார்த்தை சொல்வன் பத்தினி நேய னுகும்
சதியிலா மனத்த னுகும் தந்தையி னுஸ்தி யில்லான்
மதிநுதல் மனையாள் இல்லம் வருவனும் சுகமுமுள்ளான்
ததிநெய்பா லிஷ்டம் சொல்வன் தன்தேகம் பித்த முள்ளான்.

6. நயமாகப் பேசும் இயல்புடையவன். மனைவியிடத்தில் அதிக அன்புள்ளவன். கள்ளமில்லா நெஞ்சன். பிதுரார்ஜித சொத்து இல்லாதவன். மனைவியின் பிறந்த வீட்டிற்கே வந்து ஸ்திரமாகத் தங்கி வாழ்க்கை நடத்துவான். சுகங்களை அனுபவிப்பான். தயிர், நெய், பால் முதலிய நல்ல ஆஹாரப் பொருள்களில் ஆசையுடையவன். பித்த தேகம் வாய்ந்தவன்.

7. இக்குண முடையோ னுக்கு இவனுமே யுதிப் பா னுகும்
மிக்கவே யவன்கு ணத்தை விளம்புவோம் சிவந்த மேனி
தக்கவே கல்வி கற்பன் சமதேகன் தந்திர வாதி
பக்குவ மான வார்த்தை பணத்தின்மே லிச்சை யுள்ளான்.

7. இப்படிப்பட்ட குணங்கள் உள்ளவனுக்கு இவன் புத்திரனுக உதிப்பான். இவனுடைய குணங்களையும் சொல்லுகின்றேம். சிவந்த சரீரம் வாய்ந்தவன். தகுந்த கல்வியைக் கற்பான். நடுத்தர உயரமுள்ளவன். தந்திரசாலி. வார்த்தைகள் மிகவும் பக்குவமாக [நயமாக] இருக்கும். பணத்தில் ஆசையுள்ளவன்.
[பணத்தில் அதிக ஆசையுள்ளவன் என்பது கருத்து.]

8. பதநடை தரள தந்தம் பங்கய ரேகை யுள்ளான்
விதவித வார்த்தை கூறுவன் விளங்கிடும் சாயல் நேத்திரம்
அதிகமா மாசை யுள்ளான் அவன்மனம் கபடு கொஞ்சம்
சதியான சொல்லு முள்ளான் தானிய விருத்தி செய்வன்.

8. அழகிய நடை உடையவன். முத்துப்போன்ற பற்களுள்ளவன். அவனது கையில் தாமரைரேகை விளங்கும். பிறரால் கையாளப்படாத அழகிய வார்த்தைகளைப் பேசுவான். கண் நோக்குச் சாய்ந்திருக்கும். எல்லாப் பொருள்களிலும் அதிக ஆசை கொண்டவன். சிறிது கபடமுள்ளவன். ஏமாற்றத்தைத் தரும் சொற்களையும் சொல்லுவான். தானியங்களை விருத்தி செய்வான்.

9. சித்திர வீடு முள்ளான் சீலவான் தெய்வ பக்தி
பத்தினி நேய னுவன் பதார்த்தங்கள் விருப்பங் கொள்வன்
நத்தினேர்க் குதவு வானும் நவிலுவான் கட்டு வார்த்தை
அத்தியைப் பெற்ற மாதே அறைகிறேம் கேளுங்களே.

9. அழகிய வீடு கட்டுவான். நன்னடத்தை உடையவன். தெய்வ பக்தியுள்ளவன். மனையாளிடத்தில் அன்புள்ளவன். காய்கறிகளில் இஷ்டமுள்ளவன். உதவியை எதிர்பார்ப்பவர்களுக்கு உதவுவான். அடுக்குச் சொற்களைச் சொல்லும் இயல்புள்ளவன். ஸ்ரீ விநாயகரைப் பெற்ற தாயே! மேலும் சொல்லுகிறேம். கேளுங்கள்.

10. இவனுடைத் துணைவர் தம்மை யியம்புவோம் ஆண்பால் ரண்டு
அவனியில் கன்னி மூன்று அறைகிறேம் தீர்க்க மாக
நவனியில் ஆறு நஷ்ட நவிலுவோம் மிவனுக் கேதான்
கவனமாய் ஆண்பால் ரண்டும் கழறுவோம் மூத்தோ ராக.

10. இவனுடைய சகோதரர்களைப் பற்றிச் சொல்லுகின்றேம். இரு ஆண் சகோதரர்களும் மூன்று சகோதரிகளுமுண்டு. இவர்கள் எல்லோரும் நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள். சகோதர வர்க்கத்தில் அறுவர் நஷ்டமாவர். இங்கு சொல்லப்பட்ட இரு ஆண்களும் இவனுக்குமூத்தவர்களாகவே இருப்பார்கள்.

11. மாதுரு குணத்தை யாங்கள் வரைகிறோம் சிவந்த மேனி
மேதினில் வாத தேகி விளங்கிடும் நற்கு ணங்கள்
தீதிலாக் குணத்தா ளாகும் திருமக ளொப்ப தாகும்
பாதக மெண்ணு நெஞ்சம் பந்துவுக் கினிய ளாகும்.

11. இப்பொழுது தாயின் குணங்களைச் சொல்லுகின்றோம். சிவந்த மேனியாள். வாததேகம் வாய்ந்தவள். ஒரு கெட்ட குணமும் இல்லாதவள். அது மாத்திரமின்றி நற்குணங்கள் நிறைந்தவள். மஹாலக்ஷ்மிக்கு ஒப்பானவள். பிறருக்குத் தீங்கு எண்ணமாட்டாள். உறவினர்களுக்குப் பிரியமானவள்.

12. அல்பரை உறவு கொள்ளாள் ஆண்மையு முடைய ளாகும்
விற்பன விவேக முள்ளாள் மேதினில் அன்ன மீவள்
பற்பல பணிக ளுள்ளாள் பஞ்சைமே லிரக்க முள்ளாள்
நற்புக ழாகி வாழ்வாள் நற்றந்தை யில்லம் நீங்காள்.

12. தன்னைவிடத் தாழ்ந்தவர்களிடம் தொடர்பு கொள்ளமாட்டாள். ஆண்களைப் போல பிறரை அடக்கி ஆளும் திறமையுடையவள். கல்வியறிவும், இயற்கையான பகுத்தறிவும் படைத்தவள். அன்னமிடும் இயல்புள்ளவள். பல வித ஆபரணங்களை உடையவள். ஏழைகளிடத்தில் இரக்கமுள்ளவள். பெரும் புகழோடுவாழ்வாள். மேலும், விவாஹத்திற்குப் பிறகும் தன் கணவனுடன் தன் பிறந்தகத்திலேயே சுகமாக வாழ்வாள்.

13. அவளுடைத் துணைவர் தம்மை அறைகிறோம் நான்க தாகும்
பவமுள ஆண்பா லொன்று பருகிடும் தீர்க்க மாக
நவனியி லந்த வர்க்கம் நசித்திடு மென்று சொன்னோம்
தவநிலை யோரைக் காக்கும் தயாபரி மேலுங் கேளே.

13. அவளுடைய சகோதரர்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். கூடப்பிறந்த நான்கு சகோதரருக்குள் ஆண் ஒன்று, பெண் மூன்றுகும். அந்தச் சகோதரன் நீண்ட ஆயுளுடன் வாழ்வான். ஆனால் அவனது சந்ததி ஓங்காது. தவசிகளைக் காக்கும் தேவியே ! கேளுங்கள்.

14. மாதுரு முன்ஜன் மத்தை வரைகிறோம் புதுவை தன்னில்
நீதியாய் வடுகர் வம்சம் நிமலியு முதித்தா ளென்றோம்
சூதுக வில்லா ளாகிச் சுதர்களு முள்ளா ளாகிப்
போதவே சுகங்க ளுண்டாய் பூஷண மதிகம் பெற்றாள்.

14. தாயின் முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். புதுவையில் நாயகர் வமிசத்தில் உதித்திருந்தாள். அந்த ஜன்மத்தில் கள்ளம் கபடம் இல்லாதவளாகவும், குழந்தைகளிடம் அன்புகொண்டவளாகவும் இருந்தாள். அதிக ஆபரணங்களை அடைந்து, இம்மையில் அனுபவிக்கவேண்டிய சுகங்களை நன்றாக அனுபவித்து வாழ்ந்து வந்தாள்.

15. வாளுமே முன்னே மாண்டு விதவையா யிருந்து மேதான்
பெருமையாய்த் தக்ஷிணத்தில புண்ணிய தீர்த்தம் தோய்ந்து
மருமமா தலங்கள் சென்று மங்கையு முள்ளூர் மீண்டு
சிறுமையென் றோர்க்கு அன்னம் செல்வியு மளித்தா ளென்றோம்.

15. கணவன் இவளுக்கு முன் இறக்கவே, இவள் விதவையாகி தென் தேசத்திலுள்ள புண்ணிய தீர்த்தங்களில் நீராடி, பல புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச் சென்று யாத்திரைகளை முடித்தாள். இவள் ஏழைகளுக்கு அன்னதானம் ஏராளமாகச் செய்தாள்.

16. மரணமே யாகி யேதான் குறைதலைக் கஞ்சன் தன்னல்
வறையவே யிக்கு லத்தில் வந்தவ ளிவளே யென்றோம்
அறைகிறோ மீவள்பின் ஜன்மம் அரங்கமா நகரி லேதான்
பெருமையாய்ப்பிரம்ம சேயாய்ப்பிறப்பவளே யிவளே யென்றோம்.

16. பிறகு மரணத்தை அடைந்து, பிரமனால் படைக்கப்பட்டு மீண்டும் இக் குலத்தில் ஜனித்தாள். இவளுடைய பின் ஜன்மத்தைச் சொல்லுகின்றோம். ஸ்ரீரங்கத்தில், பெருமை வாய்ந்த பிராமண குலத்தில் பிறப்பாள்.

17. பாக்கிய முள்ளா ளாகிப் பாலர்கள் சுகமு முண்டாய்
வாக்குச்சொல் மேன்மை யாக வாழ்ந்துபின் மரண மாகி
ஆக்கவே தேவ ராக அடைவளா ளிவளே யென்றோம்
மார்க்கமாய் தந்தை பூர்வம் வரைகிறோம் கேளு மம்மா.

17. அங்கும் ஐச்வரியம் படைத்தவளாக இருப்பாள். நல்ல சந்ததியும் உண்டு. சுகங்களையும் அனுபவிப்பாள். இவளுடைய சொல்லிற்கு விசேஷப் பெருமை இருக்கும். கடைசியில் மரணத்தை அடைந்து, தேவத் தன்மையைப் பெறுவாள். தந்தையின் முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம்.

18. தந்தையின் முன்ஜென் மங்கள் சாற்றுவோம் தொண்டை நாட்டில்
வந்தனன் இக்கு லத்தில் வன்மையாய்ச் செட்டு செய்து
முந்திய தனங்கள்பெற்று முயற்சியாய்க் குடும்பி யாகிப்
பந்தமாய் வாழு நாளில் பகருவோம் ஊழி தானே.

18. தந்தை முன்ஜென்மத்தில் தொண்டை நாட்டில் இதே வைசிய குலத்தில் பிறந்து, நன்றாக வியாபாரம் செய்து, அதிகச் செல்வத்தை அடைந்து, மனைவி மக்களுடன் வாழ்ந்தான். அப்பொழுது அவனுக்கேற்பட்ட ஓர் வினையைச் சொல்லுகின்றோம்.

19. பெரியவர் ஒருவர் வந்து பலியது கேட்கும் போது
பொருளது கொஞ்சம் தானும் பரமனும் பசியை....
விரைவினி லன்னம் கேட்க வைசியன் சொல்லு கின்றான்
தருவதற் கன்ன மில்லை தனம்வாங்கிச் செல்லு மென்றான்

19. வயதான கிழவர் ஒருவர் இவனுடைய வீட்டிற்கு வந்து சிறிது ஆகாரம் கேட்டார். அந்தச் சமயத்தில் அன்னமிருந்தும் அன்னமில்லை என்று பொய் சொல்லிவிட்டு. சிறிது காசு கொடுக்கிறேன் வாங்கிச் செல்லுங்கள், என்று சொன்னான்.

20. அப்போது அதிதி தானும் அநேகமாய்க் கோபங் கொண்டு
செப்புவார் மைந்தா நீயும் செல்வங்கள் குறைவு நேர்ந்து
ஒப்புடன் இல்லம் நீங்கி உறைகுவா யென்னைப் போலே
மெய்ப்புடன் இவ்வாறு சொல்லி வேறொரு இரகம் சென்றார்.

20. அப்பொழுது அதைக் கேட்ட அதிதி, மிக்க கோபம் கொண்டு பிள்ளாய் ! உனது செல்வமும் வீடும் நீங்கி, என்னைப் போல நீயும் ஆவாய், என்று சொல்லி வேறு வீடு சென்றார்.

21. இதுவன்றி இன்னமொன்று இயம்புவோம் லேவா தேவி
அதிபனும் செய்யு நாளில் வரைந்திட்டார் கணக்கில் சூது
சதியிலா ஏழை யோர்கள் தன்கணக் கதுபொ லிந்தார்
அதிகமாய்ப் பொருளைக் கேட்க அறைகுவார் ஏழை யோர்கள்.

21. இந்தப் பாவமுமின்றி, வேறு ஒரு பாவமும் இவனுக்கு ஏற்பட்டது. அதைச் சொல்லுகின்றோம். இவன் முன்ஜென்மத்தில் வட்டி வியாபாரம் செய்யுங் காலத்தில், ஏழைகளுடைய கணக்கில் சூது செய்து, அவர்களை அதிக பணம் கேட்க, அவர்கள் மிக்க வருத்தத்துடன் சொன்னார்கள்.

22. கணக்கினில் மோசம் செய்த கனமுள பாவிக் கேதான்
பிணக்குக ளதிகம் நேர்ந்து பெரும்பொருள் யாவும் போக்கி
இணக்கமாய் ஒருவர் கீழ்பாலிருந்துமே வாழ்வா யென்றும்
அணக்கவே மறு ஜன்மத்தும் அதுபோலே யாவா மென்றும்.

22. நீ ஏழைகளின் கணக்கில் மோசடி செய்த மகாபாவி யாகையால், உனக்குப்பல கஷ்டங்கள் ஏற்பட்டு, உன்னுடைய பொருள்கள் யாவும் நஷ்டமாகி, இந்த ஜன்மத்திலேயே ஒருவருக்குக் கீழ்ப்பட்டு வாழ்வாய். அவ்வாறே மறுஜன்மத்திலும் பிறர் கையை எதிர்பார்த்து வாழ்வாய், என்று ஒரு ஏழை சபித்தான்.

23. சொல்லிய ஏழை தானும் சொற்பப் பொன் தன்னை யீந்து
இல்லறம் சென்று ரென்றோம் இதுவிதத் தோஷம் தானும்
வல்லவன் தன்னைப் பற்றி வந்தது அந்தியத்தில்
புல்லியர் சொல்போ லாகி பிழைகளு மனந்த முண்டாய்.

23. இவ்வாறு சபித்த ஏழை அவன் கேட்டபடி [அவன் எழுதிய பொய்க் கணக்குப்படி] தன் கையிலிருந்த சிறிது பொன்னையும் கொடுத்துவிட்டு வீடு சென்றான். ஆகவே இவ்வித தோஷங்கள் இவனை முன் ஜன்மத் திலேயே பற்றிக்கொண்டன. ஏழை சொன்னதுபோல் ஏராளமாகப் பிழைகள் ஏற்பட்டு ;

24. ஒருவர்கீழ் வாழ்ந்தா னெனறோம் உத்தமன் மரணமாகி
விரைவில் பூவைசிய வம்சம் மீதினி லுதித்தா னம்மா
உரைந்தது முன்னாழ் சாபம் உத்தமன் தனக்குமே தான்
பெருமையாய் தந்தை யாஸ்தி பிழையது நேர்ந்த தென்றோம்.

24. பொருள்கள் எல்லாம் நஷ்டமாகி அந்திய காலத்தில் ஒருவர்கீழ் வாழ்ந்துவந்தான். கடைசியாக மரணமாகி இங்கு வைசிய குலத்தில் உதித்தான். முன்வினையினால் தந்தையின் சொத்தும் இவனுக்கு இச் ஜென்மத்தில் இல்லை.

25. மனைவியால் பெருமை பூண்டு வாழ்குவா னிவனே யென்றோம்
அனையவே இவன்பின் சென்மம் அத்தியின் வரதர் வாழும்
கனமுள நகரம் தன்னில் கத்திரி வம்சம் தன்னில்
தனிகனு முதிப்பா னரும் தனங்களு முள்ளா னுகி

25. ஆகையால் விவாஹத்திற்குப் பிறகு இவன் (தந்தை) மனையாள் பிறந்தகத்தில் [மாமனார் வீட்டில்] வாழ்வான் என்று முன்பு [6-வது பாட்டில்] சொன்னோம். மறு ஜென்மத்தில் ஸ்ரீவரதராஜஸ்வாமி எழுந்தருளியிருக்கும் பெருமை வாய்ந்த ஸ்ரீகாஞ்சியில் க்ஷத்திரிய வமிசத்தில் உதித்து பெரிய செல்வமுள்ளவனாக இருப்பான்.

26. இவனுமே பெருமை பூண்டு இசைகுவா னென்று சொன்னோம்
அவனியில் சாதகர்க்கு அறைகிறோம் மணத்தின் காலம்
நவனியில் இருபதாண்டில் நாயகி வருவா ளாகும்
கவனமா யவள் தன்சேதி கழறுவோம் கேளு மம்மா.

26. முன்சொன்ன கடக லக்கின மகன் மிக்க பெருமையுடன் வாழ்வான். அவனுடைய விவாஹ காலத்தைச் சொல்லுகின்றோம். அவனுடைய இருபதாவது வயதில் விவாஹம் நடைபெறும். மிக்க கவனத்துடன் அவனுடைய வரலாறுகளைச் சொல்லுகிறோம் கேளுங்கள் தாயே !

27. செவந்திடு மேனியாவாள் தேவியும் வாத தேகி
அவனியில் கோபம் கொஞ்சம் அவள் குடும்பங்கள் நாஸ்தி
நவனியில் பொருள் மேலிச்சை நன்னடை மர்ம முள்ளாள்
தவசியை உறவு கொள்ளாள் தக்கதோர் வார்த்தை யுள்ளாள்.

27. சிவந்த மேனியாள். வாயுதேகமும் சிறிது கோபமு முள்ளவள். அவள் பிறந்த குடும்பம் விளங்காது. எல்லாப் பொருள்களிடத்திலும் ஆசை உடையவள். நல்ல நடத்தை உடையவள். நெஞ்சம் கபடமுள்ளது. சன்னியாசிகளிடத்தில் பக்தி கொள்ளாதவள். சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்லும் இயல்புள்ளவள்.

28. துணைவர்க ளாண்பா லில்லை சுந்தரி மூவ ராகும்
கனமுட னிதன்மேல் தோன்றில் கனக்காது நசிக்கு மென்றோம்
இணையிலாவர்களாஸ்தி எய்திடும் பாதி தானும்
அனையவே யவள்தனில்லம் அறைகிறோ முத்திரத்தில்.

28. அவளுக்கு சகோதரன் இல்லை. சகோதரிகள் மூவர். இந்த எண்ணிச் கைக்கு மேல் அதிகம் தோன்றினும் நீடித்திராமல் நசிக்கும். அவளுடைய ஆஸ்தியில் பாதி இந்த ஜாதகனுக்குச் சேரும். அவர்களின் குடும்பத்தைப்பற்றி பின்பு சொல்லுகின்றோம்.

இந்தப் பாட்டிலும் அடுத்தப் பாட்டிலும் கடக லக்கின குமாரனது முன்ஜன்மத்தைச் சொல்லுகின்றார்.

29. ஜாதகன் முன்ஜன்மத்தை சாற்றுமா பலியின் பக்கல்
கோதிலா வன்னிய வம்சம் குலத்தினில் உதித்து மேலும்
மேதினில் பாக்கியம் பெற்று விளைபுல மதிக முண்டாய்
பாதக மில்லா னாகி பஞ்சைகட் குதவி யாகி

29. இந்த சாதகன் முன்ஜன்மத்தைச் சொல்லுகிறோம். இவன் மஹாபலிபுரத்தில் வன்னியகுல க்ஷத்திரிய வமிசத்தில் உதித்து பெரிய பணக்காரனாக இருந்தான். நிலங்களும் ஏராளமாக இருந்தன. சிறிதும் பாபச் செயல் செய்யாதவனாகவும் ஏழைகளுக்கு உதவி செய்பவனாகவும் வாழ்ந்துவந்தான்.

30. தானமும் தருமம் செய்து சகலர்க்கு நல்லோ னாகி
மான் மழுதரித்தோன் பூசை மகிழ்வுடன் செய்துவந்தான்
தேன்மொழி மனைவியுண்டாய் சேயர்க ளில்லானாகி
தானவன் வாழ்ந்துமே தான் சலிப்புடன் மரண மானான்.

30. ஏராளமான தான தருமம் செய்தான். நல்லவன் என்று எல்லோராலும் போற்றப்பட்டான். மான் மழு தரித்த பரமசிவனைப் பக்தி சிரத்தையுடன் பூசை செய்து வந்தான். இனிமையாகப் பேசுகின்ற மனையாளும் இருந்தாள். இவ்வளவு இருந்தும் புத்திரபாக்கியம் இல்லை. ஆகையால் மிக்க வருத்தத்துடனேயே மரணமடைந்தான்.

31. வந்தவ னிவனே யென்றோம் விரைகிறே மிவன் பின்ஜென்மம்
பந்தமால் மலைக்கு உத்திரம் பாலகன் ரெட்டி வம்சம்
சந்தத முதிப்பா னென்றோம் தனம் பூமி யுள்ளானாகி
சிந்தையு மகிழ்வு கொண்டு செல்வனு வாழ்வா னாமே.

31. அவன்தான் இங்கு கடகலக்கினத்தில் பிறந்திருக்கிறான். இவனது பின் சென்மத்தையும் கூறுகின்றோம். திருவேங்கடமலைக்கு வடதிசையில் ரெட்டி வமிசத்தில் பிறந்து பணம், பூமிகள் உடையவனாக இருப்பான். மிக்க மகிழ்ச்சியுடன் வாழ்க்கை நடத்துவான்.

32. இன்னவன் தனக்குப் புத்திர ரியம்புவோம் கேளும் தாயே
மன்னிய ஆண்பால் ரெண்டு வருங்கன்னி அவ்வாறுகும்
தன்னிலே நான்கும் தீர்க்கம் தங்காது மற்ற தெல்லாம்
அன்னையே நாங்கள் சொல்லு மருள் மொழி குன்றிடாது.

32. இவனுடைய புத்திரபாவத்தைப் பற்றிச் சொல்லுகிறோம் கேளுங்கள் தாயே! பிள்ளைகள் இரண்டு பெண்கள் இரண்டு. ஆக நான்கும் நீண்ட ஆயுளுடன் விளங்கும். இதற்குமேல் பிறக்கும் குழந்தைகள் நீடித்திராது. தாயே! நாங்கள் சொன்ன அருள்மொழி பொய்யாகாது.

33. தந்தையின் மரண காலம் சாற்றுவோ மிருபான் மூன்றில்
வந்திடும் தந்தை கண்டம் வரைகிறோ மிவனுக்கே தான்
பிந்திய அன்னைக்கே தான் பேசுவோ முப்பானாலில்
பந்தமாய் கண்ட நேரும் பகருவோம் விவரம் ரெண்டில்

33. இவனது தந்தையின் மரண காலத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவனது இருபத்து மூன்றுவது வயதில் இவனுடைய தந்தை மரணமடைவான். அன்னையின் மரணகாலத்தையும் சொல்லுகின்றோம். இவனுக்கு முப்பத்துநான்காவது வயது நடக்கும்போது இவனுடைய தாய் மரண மடைவாள். விவரங்களை இரண்டாம் பாகத்தில் சொல்லுகின்றோம்.

34. ஜாதகன் பொது யோகத்தைச் சாற்றுவோம் கிருஷி செய்வன்
சூதுகள் கொஞ்சம் செய்வன் துணைவர்க்குச் சமமாய் வாழ்வன்
மேதினில் பூமி தன்னை விரையங்கள் செய்யா னாகும்
கோதிலா சுலப ரோகங் கொண்டிடு மிவனுக் கேதான்.

34. சாதகனின் பொதுவான யோகங்களைக் கூறுகின்றோம். விவசாயம் செய்வான். சூதுகளும் செய்வான். சகோதரருக்குச் சமமான அந்தஸ்தில் வாழ்க்கையை நடத்துவான். பூமியைச் செலவு செய்யமாட்டான். கொஞ்சம் நோயுமுண்டு. [அதிகமிராது.]

35. காலிகள் விருத்தி யுள்ளான் கனத்ததோர் பொருளு மில்லான்
பாலர்கள் யோக வானும் பணிதிகள் சேர்ப்பா னென்றோம்
சீலமும் கொஞ்ச முள்ளான் சிறுதீனி விருப்பங் கொள்வன்
ஞாலமேல் சுகமு முள்ளான் நாயகி மேலுங் கேளே.

35. கால்நடைகளை விருத்தி செய்வான். விலையுயர்ந்த பொருள் ஒன்றும் இவனிடம் இருக்காது. இவனுடைய புத்திரர்கள் நல்ல யோக முள்ளவர்களாக இருப்பார்கள். அனேக ஆபரணங்களை அடைவான். கொஞ்சம் நல்ல நடத்தை யுள்ளவன்தான். சிற்றுண்டியில் அதிக விருப்ப முள்ளவன். சுகங்களையும் சிறிது அனுபவிப்பான். தேவியே! மேலும் சொல்லுகிறோம். கேளுங்கள்.

36. காதகம் கொஞ்ச முண்டு காதலி தன்னால் யோகம்
மேதினில் கீர்த்தி யேற்பன் வீண பவாத முள்ளான்
ஓதுவீர் குடும்பச் சேதி உரைக்கிறோம் கேளு மம்மா
கோதிலா முப்பா னேழில் குடும்பமு வேருய்ச் செல்வன்.

36. சிறிது பாபச் செயல்களைப் புரிவான். காதலியால் நல்ல யோகமுண்டு. கொஞ்சம் புகழுமுண்டு. ஆனால் வீணை அவதூறுகளும் ஏற்படும். குடும்பத்தைப் பற்றிய செய்தியைச் சொல்லுங்களெனப்பார்வதி கேட்க, முனிவர் சொல்லுகின்றார். இவனுடைய முப்பத்தேழாவது வயதில் குடும்பம் வேருகும்.

37. தரித்திர மில்லா ளுகும் தர்க்கங்கள் அதிகம் சொல்வன்
உரைத்திட்டோம் புத்தி யன்தான் ஊரெல்லாம் கீர்த்தி வானும்
நிறையவே குடும்பி யாகி தேர்பரி யுள்ளா ளுகி
குறைவிலா வாழ்வாகும் கோதையே ! கேட்டி டாயே.

37. பொதுவாக வறுமை யில்லாதவன். மேன்மேலும் யுக்திவாதங்கள் சொல்லும் இயல்புள்ளவன். இவனது புத்திரன் எல்லா இடங்களிலும் புகழ்உள்ளவளுக இருப்பான். பெரிய குடும்பியாவான். தேர் குதிரை முதலிய வாஹனங்களும் அவனுக்கிருக்கும். குறைவில்லாத குடும்பியாகி, சுகமாக வாழ்ந்திருப்பான். பார்வதியே ! கேள்.

38. காதலன் ஜனிக்கும் காலே கரும்பாம்பு தசையி ருப்பு
மேவிய ஆண்டு எட்டும் விளங்கிய திங்க ளொன்பான்
ஓதுவோம் பலனே யாங்கள் உறைந்திடும் துணேவர் விருத்தி
ஆவலாய்க் கலகம் கொஞ்சம் அவன்குடும் பங்கள் தன்னில்.

38. இந்த சாதகன் ஜனிக்கும் காலத்தில் ராஹு தசையில் பாக்கி இருப்பு வருஷம் எட்டு, மாதங்கள் ஒன்பது. இந்த தசையின் பலனேச் சொல்லுகின்ரேம். சகோதரவிருத்தி உண்டு. குடும்பத்தில் கலஹங்களும் நேரும்.

39. தந்தையும் தாயும் நோயும் சகோதர சேத மாகும்
சொந்ததன் வர்க்கம் சூதம் தோன்றிடும் தனங்கள் சேதம்
சந்ததம் தனங்கள் சேதம் தன்தேகம். நலிவு முண்டு
பிந்திய பாகம் தன்னில் பேசுவோம் விபர மாக

39. தந்தை தாய் இவர்கள் நோயினல் பீடிக்கப்படுவார்கள். சகோதரர்களுக்குச் சேதமும் ஏற்படும். நெருங்கிய பந்துவர்க்கத்தில் மரணம் ஏற்படும். எப்பொழுதும் பலவிதங்களிலும் பணத்திற்கு நாச முண்டாகும். இவனுடைய உடலிற்கும் நலிவு ஏற்படும். மற்றைய விபரங்களே இரண்டாம் பாகத்தில் சொல்லுகின்ரேம்.

ஜாதகம் 6.

1. பிறைமானில் சனியு மேரு புதன்புகர் கோல ஆக
குருபானு ராகு தேளில் குசனு சியம் சிங்யும் நந்தி
வருஞ்சென்மம் கடக மாக வறைகுவீர் பலனே யென்று
அரன்மாது கேட்கும் போது அத்திரி புகலு கின்ருர்.

		கேது	
	இராசி சக்கரம்		இலக்கினம்
சந்திரன்			செவ்வாய்
சனி	குரு சூரியன் ராஹு	சுக்கிரன் புதன்	

சார்வரி வருஷம் கார்த்திகை மாதம் 13-ந்தேதி செவ்வாய்க்கிழமை இரவு சுமார் பத்து நாழிகைக்கு மேல் செனனம்.

ஆங்கிலத் தேதி 27–11–1900.

நவக்கிரஹங்களின் பாதசாரம்.

அனுஷம் 3-ல் சூரியன். திருவோணம் 3-ல் சந்திரன். மகம் 3-ல் செவ்வாய். விசாகம் 3-ல் புதன் [வக்ரி]. கேட்டை 3-ல் குரு. சித்திரை 4-ல் சுக்கிரன். மூலம் 4-ல் சனி. அனுஷம் 2-ல் ராஹு, கிருத்திகை 4-ல் கேது.

1. சந்திரன் மகரம், சனி தனுஸ், புதன், சுக்கிரன் துலாம், குரு, சூரியன், ராஹு இவர்கள் விருச்சிகம், செவ்வாய் சிங்கம், கேது விருஷபம், இலக்கினம் கடகம். இவ்வாறு கிரஹ நிலேகள் இருக்கப் பலன்களேச் சொல்லுவீர்களாக, எனப் பார்வதி கேட்க, அத்திரி முனிவர் கூறுகின்ருர்.

வேறு

2. தானே ஆண்பால் செநநமுறும்
தந்தை யில்லம் தென்வாசல்
மானே கீழ்மேல் வீதியது
மருகில் சந்து நீரோடை
வானேர் புகழு மீசனுமே
வடபா● காளி தங்கிடுமே
பான்மை யாக மாரி தெற்கில்
பகர்வோம் தந்தி தென்மேற்கில்.

2. இந்தக் கிரஹ நிலையில் ஆண்குழந்தை ஜனிக்கும். ஜனித்திருக்கும் வீடு தெற்குநோக்கி இருக்கும். வீதி கிழக்கு மேற்காக அமைந்திருக்கும். சமீபத்தில், பல வீதிகள் கூடுமிடமும் ஓர் நீரோடையும் இருக்கும். வடதிசையில் தேவர்கள் போற்றும் பரமசிவனும் காளிதேவியும் எழுந்தருளியிருப்பார்கள். தெற்கில் மாரியம்மன் ஆலயமும், தென்மேற்கில் விநாயகர் கோயிலும் இருக்கும்.

3. சோலை சூழி தானுண்டு
சிற்றூர் வைசிய குலமென்றேம்
சால இரண்டாம் ஜனனமுமாய்
ஜனிப்பான் என்றேம் சங்கரியே
ஏல அன்னை தந்தைதுணை
யீன்ற சுதர்கள் மனையோகம
கால பலத்தை இந்நூலில்
கருதக் கேண்மோ காதலியே.

3. சுற்றிலும் சோலைகளுண்டு. அப்படிப்பட்ட சிறிய ஊரில் வைசிய குலத்தில் ஜனிப்பான். இவன் தன்னுடைய தாய் தந்தையர்களுக்கு இரண்டாவது பிள்ளையாவான். பார்வதிதேவியே! இவனுடைய தாய், தந்தை, சகோதரர், மனைவி, புத்திரர் இவர்களைப் பற்றிய செய்திகளை இந் நூலில் சொல்லுகின்றேம். கேளுங்கள். பார்வதியே!

4. ஈன்ற தத்தை குணங்கேளாய்
இன்பச் சொல்லன் இருநிறத்தன
குன்ரு மனத்தன் வறுமையிலான்
குலத்தோர் மதிப்புக் கொண்டிடுவன
கன்று காலி விருத்தியிலான்
கடவுள் பக்தி நிலம்சேர்ப்பன்
தனறி தன்னல் யோகமுறும்
சல்லியங் கொள்ளான் சங்கரியே.

4. தந்தையின் குணங்களை முதலில் சொல்லுகின்றேம். கேளுங்கள். இனிமையாகப் பேசுபவன். கருத்த மேனியன். உத்ஸாஹம் குன்ருதவன். வறுமை இல்லாதவன். தன் சாதியார் மதிப்பிற்குப் பாத்திரமானவன். கால்நடைகளை அபிவிருத்தி செய்யாதவன். கடவுளிடம் பக்தி கொண்டவன். பூமிகளைச் சேர்ப்பான். இப்படிப்பட்ட தந்தையினல் குழந்தைக்கு [இந்தக் கடக லக்கின புத்திரனுக்கு] நல்ல யோகமுண்டு. கடன் இராது. பார்வதியே!

5. சங்கை யறவே தான்புகலும்
சத்தான கட்டு வார்த்தைகளை
நங்கை மார்கள் மோகமுளான்
நாட்டில் வணிபம் தான்செய்வன்

கங்கை யணிந்தோன் தன்தொண்டு
கடந்தோர்க் கன்ன மீவனிவன்
தங்க முதவி சிலர்க்குச்செய்வன்
சகடு முடையன் சனிநாளில் ;

5. கேட்பவர்களின் சந்தேகங்கள் நீங்கும்படியாக அழகான வார்த்தைகளைப் பேசுவான். ஸ்திரீகளிடம் மோஹம் கொண்டவன். வியாபாரம் செய்வான். கங்கையைத் தரித்தவரான பரமசிவனுக்குத் தொண்டு செய்வான். துறவிகளுக்கு அன்னதானமும் செய்வான். சிலர்க்குப் பணம் கொடுத்தும் உதவி செய்வான். இவன் (இந்த ஜாதகன் தந்தை) சனிக் கிழமையில் ;

6. வருவான கொச்சை ராசிதனில்
மருவும் வாத சூடென்றேம்
அரிரேகையுமே கரத்திலுறும்
அல்பர் நேசம் செய்யாதான்
மறவான் உதவி ஈகைகொஞ்சம்
மன்னன் துணைஆண் காணுனும்
நெறியைக் காப்பன் பெண்ணிரண்டு
நிகழ்த்தக் கேண்மோ நிமலியரே.

6. மேஷலக்கினத்தில் தோன்றுவான். வாதசூடான தேஹம் அமைந்தவன். கையில் விஷ்ணுரேகை அமைந்திருக்கும். அல்பர்களிடம் நட்புக் கொள்ளமாட்டான். தான் பிறரிடமிருந்து அடைந்த உதவியை மறக்காதவன். ஈகை குணமும் உண்டு. இவனுக்குச் சகோதரர் இருக்க மாட்டார்கள். இரண்டு சகோதரிகளுண்டு. தருமநெறியைத் தவருமல் காப்பான். பார்வதி தேவியே ! மேலும் சொல்லுகிறேம் கேளுங்கள்.

வேறு

7. சொல்லியவிக் குணத்தானுக் கிந்தப் பாலன்
தோன்றுவான் இவன்குணத்தைச் செப்பக் கேண்மோ
எல்லை விருத்தி செய்திடுவன் கல்வி மானும்
இன்சொல்லன் இளைத்தோர்மேல் பிரியூ ளுகும்
வல்லியர்கள் மோகமுளன் மறுத்துக் கூருன்
வணிபங்கள் பலவாக மாரன் செய்வன்
இல்லமது வேறென்ருய்ச் செய்வா ளுகும்
இரணியங்கள் ரத்தினபணி யெய்து மென்றேம்.

7. மேலே சொல்லப்பட்ட குணங்கள் நிறைந்த தகப்பனுக்கு இந்தப் பாலன் பிள்ளையாகத் தோன்றுவான். இவனுடைய குணத்தைச் சொல்லுகின்றேம். நிலத்தின் எல்லைகளை விருத்தி செய்வான். [அஃதாவது நிலங்களைச் சேர்ப்பான்] கல்வி உடையவனுகவும், இன்சொல் சொல்லுபவனுகவும் இருப்பான். ஏழைகளிடத்தில் அன்புடையவன். பெண்களிடம் மோஹம்

கொண்டவன். பிறர் பேசியதை ஆக்ஷேபித்துப் பேசமாட்டான். அனேக வித வியாபாரங்களைச் செய்வான். இவன் ஜனித்த வீட்டைத் தவிர வேறு ஒரு வீட்டையும் நிர்மாணிப்பான் தங்கத்தையும் பலவித ரத்தின ஆபரணங்களையும் அடைவான்.

8. தந்தைமொழிக் கிடருரையான் உள்ளன் போடும்
சகடுடையன் சகலரையும் வசியம் கொள்வன்
வந்தவர்க் கன்னமீவன் மாமி ரெண்டு
வளர்சோலை கூவலது உண்டு செய்வன்
நிந்தையிலான் மாந்தளிர்போல் நிறத்த ளுகும்
நிதம்சீலன் சிவத்தொண்டு நிமலன் செய்வன்
கந்தன்மேல் பக்தியுளன் தலங்கள் செல்வன்
கடன்கொளான் இடுக்கமிலான் காம னெப்பான்.

8. தந்தையின் சொற்படி உள்ளன்போடு நடப்பான். வண்டி முதலிய வாஹன வசதிகள் உள்ளவன். எல்லோரையும் தன் வசப்படுத்துவான். இவனை அண்டியவர்க்கு அன்னதானம் செய்வான். இவனுக்கு மாமியர் இருவராவர். சோலைகளையும் கிணறுகளையும் நிறுவுவான். இவனை ஒருவரும் பழிக்கமாட்டார்கள். மாந்தளிர் போன்ற நிறமுடையவன். எப்பொழுதும் வழுவாத நன்னடத்தை யுள்ளவன். பரமசிவனுக்குத் தொண்டுகளைச் செய்வான். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியிடத்தில் விசேஷ பக்தி கொண்டவன். பல புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்வான். கடனில்லாதவன் வாழ்க்கையில் இடையூறுகளும் இரா. மன்மதனைப்போல அழகுள்ளவன்.

9. தன்துணைமுன் பெண்ணொன்று தீர்க்க மாகும்
சாற்றுகிறே மவள் குணத்தைச்சரச வார்த்தை
பொன்னிறமாம் கபடமிலாளுகை சாலி
புகழ்ந்தோரை ஆதரிப்பவள் புறஞ்சொல் லாதாள்
அன்னியர்கள் மதிக்கஉய்வள் வரனு மேற்கில்
அனுஜிடுமே சுதராண்பால் மூன்று என்றேம்
கன்னிமாரிருவரென்றேம் ஐந்தும் தீர்க்கம்
காதலியும் வறுமையிலாள் கனத்த புத்தி.

9. இப்படிப்பட்ட கடகலக்கின பாலகனுக்கு மூத்த சகோதரி ஒருத்தி உண்டு. அவள் நீண்ட ஆயுளுடன் இருப்பாள். அவளுடைய குணங்களைச் சொல்லுகின்றேம். சரசமாக வார்த்தையாடுபவள். பொன்போன்ற நிறமுடையவள். கபடமில்லாதவள். மதிநுட்பம் படைத்தவள். தன்னைப் புகழ்ந்தவர்களை மிகவும் ஆதரிப்பாள். மறைவில் ஒருவருடைய குற்றங்களையும் சொல்லாதவள். பிறர் மதிக்க வாழ்வாள். அவளுக்குக் கணவன் மேற்குத் திசையில் ஜெனித்திருப்பான். அவளுக்குப் பிள்ளைகள் மூவராவர் பெண்கள் இருவராவர். இவ்வைந்தும் நீடித்து வாழ்வர். அவள் சிறிதும் வறுமை இல்லாதவள். மேலும் விசால மனம் படைத்தவள்.

வேறு

10. இவன்பின்னுல் துணைபெண் ணென்று
இயம்புவோ மாண்பா லவ்வாறு
நவனியில் தீர்க்க மெய்தும்
நவிலுவோம் பிஙபால் சேதி
அவைநிற்க உதித்தோ னுக்கே
அறிவிப்போம் மணத்தின் காலம்
தவசியே யீரெட் டாண்டில்
தாய்வழி குடில் நேரும்.

10. இவனுக்குப் பின் பிறந்த சகோதரி ஒருத்திபுண்டு. அவ்வாறே சகோதரனும் ஒருவன். எல்லோரும் தீர்க்காயுளுடன் வாழ்வார்கள். அவர்களைப்பற்றிய விவரங்களைப் பின்பு தெரிவிக்கின்றேம். கடக லக்னத்தில் உதித்தவனுக்கு மணத்தின் காலத்தைச் சொல்லுகின்றேம். இவனுடைய பதினாறுவது வயதில் விவாஹம் நடைபெறும். பெண் மேற்குத்திசையில் தாய்வழி பந்துக்கள் குடும்பத்தில் ஜனித்திருப்பாள்.

வேறு

11. நேரு மாது குணம்கேளாய்
நீண்ட புத்தி யூகைமுண்டு
தேறினேர்க் கன்னந் தானீவள்
தீரன் மனம்போல் தானுய்வள்
வேறு நடக்கை காணுதாள்
விரத மேற்பள் வீண்வம்பு
கூறு ளென்றேம் சொல்லடக்கம்
குலத்தோர்க் கன்பள் கொடியிடையே.

11. இவன் மனைவியின் குணத்தைக் கூறுகின்றேம். தாயே! கேளுங்கள். நேர்மை உள்ளவள். சிறந்த மதியூகி. தன்னை வந்தடைந்த துறவிகட்கு அன்னமிடுவாள் மிக்க தைரியசாலி. கெட்ட நடத்தையில்லாதவள், கிருத்திகை விரதம், ஏகாதசி விரதம் போன்ற விரதங்களை அனுஷ்டிப்பாள். பிறரைப்பற்றி வம்பு பேசாதவள். அடக்கமான சொற்களைச் சொல்லுவாள். தன் உறவினருக்கு இனியவளாகவும் நடந்து கொள்வாள்.

12. இடையாட் கன்னை........கும்
இளைத்தோர்க் கன்னம் தானீவள்
சூடியாள் தனக்குச் சுதரேமு
தோன்று மதிலே ஆண்ரெண்டு
ஆடரம்பக் கன்னி மூன்றுமே
ஐந்து தீர்க்க மென்றுரைப்போம்
விடமு மைந்தி லிருப்பதனுல்
விரையம் முதலி ரண்டேயாம்.

12. தரித்திரர்களுக்கு உணவு அளிப்பாள். கணவனது குறிப்பறிந்து நடப்பவள். அவளுக்குக் குழந்தைகள் ஏழு பிறக்கும். அவைகளில் ஆண்கள் இரண்டும் பெண்கள் மூன்றும் தீர்க்கமாக இருக்கும். ஐந்தாமிடத்தில் ராஹு இருப்பதால் முதலிரண்டு குழந்தைகளும் நீடித்திரா. [புத்திரபாவம் என்று சொல்லப்படும் ஐந்தாமிடத்தில் பாபகிரஹங்களிருந்தால் புத்திர தோஷமுண்டு என்பது இங்கு அறியத்தக்கது.]

வேறு

13. அன்னைகுணம் கூறுகின்றோம் மாஞ்சி வப்பள்
அடைந்தோரை ஆதரிப்பள் அறிவோர் நேயள்
பொன்பணிக ளிச்சையுண்டு பொறுமை யுண்டு
பித்தபிணி பொருந்திடுமே வறுமை காணாள்
தன்துணைஆண் மூன்றென்றோம் கன்னி ரெண்டு
சாற்றுகிறோம் தீர்க்கமதாய்க் குடகு இல்லம்
அன்னவர் சின்னாளில் வேறுய்ச் செல்வர்
அவர்பலத்தைப் பின்பாலில் அறி விப்போம்யாம்.

13. இவனுடைய தாயின் குணத்தைக் கூறுகின்றோம். மாந்தளிர் போல் சிவப்பு நிறமுள்ளவள். அண்டியவர்களை ஆதரிப்பாள். அறிவாளிகளுடன் நட்பு இருக்கும். தங்க நகைகள் ஆசை உள்ளவள். பொறுமைசாலி. பித்த நோயால் பீடிக்கப்படுவாள். வறுமை இல்லாதவள். அவளுக்குச் சகோதரர்கள் மூவர். சகோதரிகள் இருவர். அவர்களெல்லோரும் நீடித்து வாழ்வார்கள். மேற்குத் திசையில் அவள் பிறந்த வீடு. அவள் சில நாட்களுக்குப் பிறகு வேறுக [தனியாக] வாழ்வாள். இந்த விவரங்களைப் பிறகு அறிவிக்கின்றோம்.

14. மாதுருதன் பூர்வமதை அறிவிப் போம்யாம்
ஆலங்காட் டதற்குக்கீழ்ப்பால் சிற்றூர் தன்னில்
நீதிலாக் கங்கைகுலம் தானு தித்துச்
சேயர்களு மனேகமதாய் அறத்தி லிச்சை
ஓதுவார் பத்தியதாய்ப் பவமில் லாமல்
ஒதுங்கினள் காலன்பதி வரன்முன் னுக
வேதனுமே வரையவந்தாள் வைசியச் சேயாய்
வித்தகியும் வறுமையிலாள் யோக சாலி.

14. தாயின் பூர்வ ஜன்மத்தைக் கூறுகின்றோம். ஆலங்காடு என்ற கிராமத்திற்குக் கீழ்த்திசையில் சிறிய ஓர் ஊரில் வேளாள குலத்தில் உதித்திருந்தாள். பல குழந்தைகளுடன் சுகமாக வாழ்ந்து வந்தாள். தருமத்தில் பற்றுள்ளவளாக இருந்தாள். பக்தியுடன் ஈசன் நாமங்களை ஓதினாள். இவ்வாறு இருக்கையில் பாவமில்லாதவளாய்த் தன் கணவன் இறப்பதற்கு முன்பே இவள் யமன் உலகை அடைந்தாள். பிறகு பிரம்ம தேவனுல் இங்கு வைசியகுலத்தில் பிறப்பிக்கப்பட்டாள். வறுமை இல்லாதவள். மிக்க அதிருஷ்டம் வாய்ந்தவள்.

வேறு

15. பின்ஜன்மம் மதுரை தன்னில்
பிறப்பளாம் சைவச் சேயாய்ப்
பொன்பொரு ளுடைய ளாகிப்
புகழ்ச்சியாய் வாழ்வா ளாகும்
தந்தையின் பூர்வம் தன்னைச்
சாற்றுவோம் பழனி தன்னில்
விந்தையாய் வடுகர் வர்க்கம்
மேவினு னென்று சொல்வோம்.

15. இவளுடைய பின்ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். மதுரை மாநகரில் சைவ வமிசத்தில் பிறப்பாள். அந்தச் ஜன்மத்திலும் பொன், வெள்ளி, புகழ் உள்ளவளாகி, சிறப்பாக வாழ்வாள். தந்தையின் முன்ஜன்மத்தைக் கூறுகின்றோம். பழனி க்ஷேத்திரத்தில் நாயக்கர் வமிசத்தில் பிறந்திருந்தான்.

16. அரசரால் தொழிலும் பெற்று அதிகார முடைய னுகி
வருமான மதலை யுண்டாய் வளமுள குடும்பம் பெற்றுத்
திருமகன் வாழு நாளில் செப்புவோ மூழி தானும்
குறையென்றோர்க் கிடைஞ்சல் செய்தான் கூறுவா ரேழையோர்
கள்.]

16. அப்பொழுது, அரசரால் ஜீவனத்தைப் பெற்று, அரசாங்க அதிகாரியாக விளங்கினான். சுபிக்ஷமான குடும்பத்தோடும் குழந்தைகளோடும் திருமகள் வாசம் பொருந்தி வாழும்நாளில், அவனுக்கேற்பட்ட பாவத்தைச் சொல்லுகின்றோம். அதிகாரச் செருக்கினால் தன்னிடம் குறையிரந்து வந்த ஏழைகளுக்கு இடைஞ்சல் செய்தான். ஏழைகள் மனம் வெறுத்துப் பின்வருமாறு கூறுவர்.

17. அதிகார பலத்தினாலே அடாவடி செய்த பாவி
வதிபன்பின் ஜன்மம் தன்னில் வர்க்கமும் நாஸ்தி யாகும்
சதியாகும் துணைஆ னுந்தான் தனியாக வாழ்வா யென்று
நிதியிலார் சொல்லிச் சென்றார் நேர்ந்தது அந்தத் தோடம்.

17. "அதிகார பலத்தினால் நீ அட்டூழியங்களைச் செய்தாய்; ஆகையால் பாவியாகிய உனக்கு மறு ஜன்மத்தில் சந்ததி யழியும். சகோதரனும் உனக்குத் துரோஹம் செய்வான். ஆகவே, நீ அவர்களை விட்டுத் தனியாக வாழ்வாய், என்று சொல்லிச் சென்றனர். அந்தப் பாவம் இவனைச் சார்ந்தது.

18. மாரனு மந்தி யத்தில் வளமுள தலங்கள் சென்று
தீரமாய்ச் சேது புக்கித் தேறினோர்க் கன்ன மீந்து
வீரியன் மரண மாகி வேதனுல் வரையப் பட்டுப்
பாரினில் வைசியச் சேயாய்ப் பிறந்தன னென்று சொன்னோம்.

18. அந்த ஜன்மத்தில் அந்திய காலத்தில் இவன் பல புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச் சென்றும், சேதுவில் நீராடியும், துறவிகளுக்கு அன்ன தானம் செய்தும் வந்தான். இறுதியில் மரண மடைந்து, பிரம்மதேவனுல் படைக்கப்பட்டு இங்கு வைசிய குலத்தில் பிறந்தான்.

19. வறுமையார் சாபம் போல வரன்தூணை ஆண்கா ணும்
பெறுந்தந்தை வர்க்கம் நாஸ்தி புகலுவோம் பால னுக்குக்
குறுமுனி புகலு கின்றூர் குமரனு முன்ஜன் மத்தில்
பெருநதி சேது சென்ற புண்ணிய பலத்தி னலே.

19. ஏழைகளின் சாபத்தால் ஆண் சகோதரர் உதவி இல்லை. தந்தை வருக்கமுமில்லை. இவ்வாறு சொன்னவுடன் அகஸ்தியமுனி ஒரு சந்தேஹத்தைத் தெளிவிக்கக் கோருகின்றூர். அஃதாவது, முன் ஜன்மத்தில் செய்த பாவத்திற்கு அவன் அந்த ஜன்மத்திலேயே அந்திய காலத்தில் புண்ணிய நதிகளிலும், சேதுவிலும் நீராடியதால் பரிகாரம் ஏற்பட்டிராதோ ? சொல்லுங்கள் என்பதாம்.

20. அச்சாபம் நீங்கா தோசொல் அகதியோர் சாபம் நீங்கா
மிச்சமாய்ச் சேது புண்ணியம் மேதினில் வறுமை காணுன்
நச்சணி பரம ருக்கு நல்கின நிதியின் புண்ணியம்
உச்சித யோகம் வாய்க்கும் உயர்மதி போல வோங்கும்.

20. சேது ஸ்நானத்தினுல் ஏற்பட்ட புண்ணியத்தின் பயனுக வறுமை இல்லாதவனுக இருப்பானே யல்லாமல், அச்சாபத்தின் கெட்ட பலனைத் தவிர்க்கமுடியாது. பரமசிவனுக்கு இவன் செல்வத்தை அர்ப்பணம் செய்தால் அந்தப் புண்ணியத்தினுல் வளர்பிறைச் சந்திரன் போல இவனது யோகம் ஓங்கிவளரும்.

21. மறுஜன்மம் கலிங்க நாட்டில் மாரனும் வைசியச் சேயாய்
உறைதவன் அரசு செய்து உத்தமன் வாழ்வா னுகும்
திருமகன் இச்சென் மத்தில் சிறுத்தோரை மோசம் செய்தும்
பெரும்பொரு ளாசை வைத்தும் பலவிதச் செட்டுச் செய்தும் ;

21. இவன் மறுஜன்மத்தில் கலிங்கதேசத்தில் வைசிய குலத்தில் பிறப்பான். அரசு செய்து சிறப்பாக வாழ்வான். இந்த ஜன்மத்தில், எளியவர்களை ஏமாற்றியும், பொருள்களில் பேராசையுடன் வியாபாரம் செய்தும் ;

22. இன்னவன் வாழ்வ தாலே இனிவரும் ஜன்மம் தன்னில்
மன்னர்தங் குலமு திக்கும் வகைதனைச் சொல்லு மென்ன
அன்னவ னிச்சென் மத்தில் அரன்தொண்டு புரிந்த புண்ணியம்
தன்குல முயர்வ தாகும் சங்கரி கேட்டி டாயே.

22. இவன் வாழ்க்கை நடத்தி வருவதால் மறு ஜன்மத்தில் எவ்வாறு அரசு செய்யும் குலத்தில் பிறக்க முடியும் ? அதன் காரணத்தைச் சொல்லும் எனப் பார்வதி கேட்க, முனிவர் பதில் கூறுகின்றூர். இந்த ஜன்மத்தில் இவன் பரமசிவனுக்கு பலவிதத் தொண்டுகள் செய்து, அந்தப் புண்ணியத்தின் பயனுக, மறு ஜன்மத்தில் உயர் குலப் பிறவியை அடைவான்.

23. ஜாதகன பூர்வம் சொல்வோ தண்டகா வனத்தி லேதான்
ஓதுவார் குலமு தித்து உயர்வான குடும்பி யாகித்
தீதுளோர்க் குதவி செய்து தேவியு மதலை யுண்டாய்ச்
சூதான கால ஞடு சென்றுமே பிரமன் லக்கம் ;

23. ஜாதகனுடைய பூர்வ ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். தண்டகவனத்தில் பிராம்மண வமிசத்தில் பிறந்து, மனைவியையும் புத்திரர்களையும் அடைந்து, சுகமாக வாழ்ந்து வந்தான். காலக் கிரமத்தில் மரண மடைந்து, மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு ;

24. வந்தவ னிவனே யென்றோம் மங்கையும் கேட்க லுற்றூள்
முந்தின ஜன்மம் தன்னில் உயர்மறைக் குலமு தித்தோன்
தன்குலம் தாழ்வ தாக ஜனிக்குங்கா ரணங்க ளெவ்வாறு
பந்தமா யந்தச்சேதி பகருவீர் முனியே நீர்தாம்.

24. இங்கு வைசிய குலமகனுகக் கடக லக்கினத்தில் பிறந்திருக்கிறுன், என்று முனிவர் சொல்ல, பார்வதிதேவி கேட்கலுற்றூள். முன் ஜன்மத்தில் வேதியர் குலத்தில் பிறத்தவன் இப்பொழுது வைசிய குலத்தில் பிறக்கக் காரணமென்ன ? முனிவரே ' அந்தச் செய்தியைச் சொல்லும், எனக் கேட்டாள்.

25. முனஜன்மம் வேதம் தன்னை உரையாத குற்றத் தாலே
இந்தவோர் குலத்தில் வந்தான் இயம்பவோ மிவனின் யோகம்
தந்தைமேல் வாழ்வா னுகும் தனம்பணி அதிகம் சேர்ப்பன்
விந்தையாய்ச் செட்டுச் செய்வன் வீண்பழி ஏற்கா னுகும்.

25. முனிவர் கூறுகின்றூர். முன்ஜன்மத்தில் பிராம்மண குலத்தில் பிறந்தும் வேதமோதாத குற்றத்தால் வைசிய குலத்தில் இப்போது பிறந்திருக்கிறுன். இவனுடைய யோகங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். தந்தையின் வாழ்க்கையைக் காட்டிலும் சிறப்பான வாழ்க்கையை நடத்துவான். செல்வத்தையும் ஆபரணங்களையும் மிக அதிகமாகச் சேர்ப்பான். பலர் மெச்சும்படி வாணிபம் செய்வான். கெட்ட பெயர் இவனுக்கு ஏற்படாது.

26. பிரபல பூமி சேர்ப்பன் புண்ணிய மனத்த னுகும்
அரன்தொண்டு புரிவா னுகும அவனியில் புகழு மேற்பன்
பறைபள்ளு உடைய னுகும் பசித்தோர்க்கு அன்ன மீவன்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

26. அதிகப் பூமியைச் சேர்ப்பான். மனத்தில் தூய சிந்தனை உள்ளவன். பரமசிவனுக்குப் பக்தியுடன் பணிகள் செய்வான். புகழுள்ளவனுவான். பல வேலையாட்களை உடையவன். பசித்தவர்க்கு அன்னதானம் செய்வான். ஸ்ரீவிநாயகரைப் பெற்ற தாயே! மேலும் சொல்லுகின்றோம், கேளுங்கள்.

27. முப்பது ஆறு ஆண்டில் மேடமா தத்திலே தான்
செப்புவோம் தந்தை கண்டம் குருதசை புகரின் புத்தி
ஒப்புடன் நடக்கு மென்றோம் உரைத்தது தப்பா தாமே
அப்பணி சடையோன் தேவி யருள்மொழி குன்றி டாது.

27. இவனுடைய தந்தையின் மரண காலத்தைச் சொல்லுகின்றோம். இவனுடைய முப்பத்தாறுவது வயதில் சித்திரை மாதத்தில் இவனுடைய தந்தை மரணமடைவான். அப்பொழுது இவனுக்குக் குருதசையில் சுக்கிர புக்தி நடைபெறும். பார்வதி தேவியே! நாங்கள் சொன்னமொழி தப்பாது நடக்கும்.

28. நாற்பது மூன்று ஆண்டில் [1]நற்றேளின் மாதம் தன்னில்
கூப்பிடு வானுங் காலன் குறித்ததோ ரன்னை தன்னை
ஏற்கவே குருவின் காலம் இசைநதசுக் கிரனின் புத்தி
தீர்ப்பாக நடக்கு மென்றோம் செப்பின மொழிகுன் றுவே.

28. இவனுடைய தாய் இவனது நாற்பத்துமூன்றும் வயதில் கார்த்திகை மாதத்தில் மரணமடைவாள். முன் பாட்டில் குருதசை சுக்ர புத்தியில் தந்தை மரணமாவான் என்று சொல்லி விட்டோம். இம் மொழிகள் தப்பா.

29. இருநான்குள் தந்தை அன்னை ஏகுவாள் கால னூடு
திருமகன் தனக்குச் சொல்வேன் புந்தியின் தசையே யாகும்
அறுபது ஏழு ஆண்டில் ஆவணி மாதம் தன்னில்
குறைபக்கம் சஷ்டி தன்னில் குறிக்கிறோ மார கங்கள்.

29. ஜாதகனது எட்டு வயதிற்குள் தந்தையின் தாய் (பாட்டி) மரண மாவாள். ஜாதகனின் மரண காலத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். அறுபத்தேழாவது வயதில் ஆவணி மாதத்தில் கிருஷ்ண பக்ஷத்தில் ஷஷ்டி திதியில் தந்தை மரணமடைவான். அப்பொழுது இவனுக்குப் புததசை நடைபெறும்.

30. இது மட்டில் ஜாத கர்க்கு எய்தாதோ மார கங்கள்
விதவிதப் பிணியும் நேரும் வெள்ளியும் நாலில் தங்க
அதுவினை நிவிர்த்தி யாகும் அலரிமுன் பனிபோல் நீங்கும்
துதிசெய்தோர் தம்மைக் காக்கும் தோகையே கேட்டி டாயே.

---

[1] கார்த்திகை மாதம்.

30. ஆனால், அதற்குமுன் மாரகம் ஒன்றும் இவனுக்கு ஏற்படாதோ? எனப் பார்வதி கேட்க, முனிவர் கூறுகின்றார். விதவிதமான பிணிகள் தோன்றும். ஆயினும் சுக்கிரன் நான்காமிடத்தில் இருப்பதால், சூரியனைக் கண்ட பனிபோல அவைகள் சீக்கிரத்தில் நீங்கும். தோத்திரஞ் செய்ப வர்களைக் காக்கும் பார்வதி தேவியே! மேலும் கேளுங்கள்.

31. ஜனித்திடுங் காலம் தன்னில் திருவோண மூன்றும் பாதம்
குனித்திடு மதியி ருப்புக் கூறுவோ மாண்டு நாலும்
கனமுடன் திங்க ளொன்றும் கழறுவோம் பலனை யாங்கள்
துணைவிருத்தி பூமி சேரும் சூதமாம் அன்னை வர்க்கம்.

31. இவன் ஜனித்த காலத்தில் சந்திரதசையில் இருப்பு வருஷங்கள் நான்கும், மாதம் ஒன்றுமாம். திருவோண நக்ஷத்திரம் மூன்றும் பாத மாம். இந்தத் தசையின் பொதுப் பலன்களைக் கூறுகின்றோம். சகோதர விருத்தியுண்டு. பூமிகள் சேரும். தாய் வருக்கத்தில் சூதகம் (அசுபம்) நேரும்.

32. தந்தைதாய்ப் பிணியும் கொஞ்சம் ஜாதகன் தனக்கு ரோகம்
நொந்திடும் காலி தானும் நீண்டதோர் கலகம் நேரும்
பிந்திய பாகம் தன்னில் பேசுவோம் விவர மாக
இந்திர னிறைஞ்சு மாதே இதுபூர்வ பாகந் தானே.

32. தந்தைக்கும் தாய்க்கும் நோய் வரும். ஜாதகனுக்கும் ரோகங் களேற்படும், கால் நடைகளுக்குச் சேத முண்டாகும். ஒரு வழக்கு, நீண்ட காலம் நடைபெறும். பார்வதி தேவியே! இது பூர்வபாக மகையால் சுருக்கமாகச் சொல்லி இருக்கின்றோம். பின் பகுதியில் விவரமாகக் கூறு கின்றோம்.

ஜாதகம் 7

1. பிறைவினே ராகு மேடம் புதன்குசன் பரிதி வண்டி
குருபுகர் கன்னி யாகக் கோலதில் கேது தங்கக்
கரியவன் மான தாகக் கடகமும் ஜன்ம மாக
உரைகுவீர் பலனே யென்று உத்தமி கேட்க லுற்ருள்.

	ராகு		சந்திரன்
	இராசி		லக்கினம் புதன் செவ்வாய் சூரியன்
சனி	சக்கரம்		
		கேது	குரு சுக்கிரன்

[1]. பவ வருஷம் ஆடி மாதம் 26-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலே யில் ஜனனம்.

ஆங்கில தேதி 9–8–1874.

நவக்கிரஹங்களின் பாதசாரம்.

ஆயில்யம் 3-ல் சூரியன். திருவாதிரை 4-ல் சந்திரன். புஷ்யம் 4-ல் செவ்வாய். புஷ்யம் 2-ல் புதன். உத்திரம் 4-ல் குரு. உத்தரம் 3-ல் சுக்கிரன். சிரவணம் 3-ல் சனி. அசுவினி 3-ல் ராகு. சுவாதி 1-ல் கேது.

1. சந்திரன் மிதுனத்திலும் ராகு மேஷத்திலும், புதன் செவ்வாய் சூரியன் கடகத்திலும், குரு சுக்கிரன் கன்னியிலும், கேது துலாத்திலும், சனி மகரத்திலும் இருந்து, இலக்கினம் கடகமாக, இருந்தால், இவ்வாறுள்ள கிரஹ நிலேயில் பிறந்த குழந்தையின் பலன்களேச் சொல்லுவீர்களாக, என்று பார்வதி கேட்டாள்.

2. அத்திரி சொல்லு கின்ருர் ஆணது ஜனன மாகும்
வித்தக னில்லம் சொல்வேன் மேல்வாடை வடதென் வீதி
உத்தரம் மாயோன் வாசம் உமையவ ளீசன் கீழ்ப்பால்
பத்திர காளி மீனம்[1] பாஞ்சாலி வடமே லாகும்.

2. அத்திரி முனிவர் பலன்களேக் கூறுகின்ருர். மேற்கூறியவாறுள்ள கிரக நிலேயில் பிறந்த குழந்தை ஆணுகும். வீதி தெற்கு வடக்காக அமைந்திருக்கும், வீடு கிழக்கு நோக்கி இருக்கும், வட திசையில் விஷ்ணுவின் ஆலயமும் கிழக்கே பார்வதி பரமேசுவரன் கோயிலும். வடக்கே பத்திரகாளி கோயிலும் வடமேற்கே திரௌபதியம்மன் கோயிலும் இருக்கும்.

[1] வடக்கு.

3. இன்னமும் பலதே வாசம் இலகிய சமவூர் தன்னில்
முன்குல முதிப்பா ளுகும் மொழிகிரே மிவன்தன் யோகம்
அன்னேயின் தந்தை யோகம் அவன்துணே களத்திர புத்திரர்
உன்னத முன்பின் ஜன்மம் உரைக்கிரேம் கேளும் தாயே.

3. இன்னும் பல தேவாலயங்களும் அவ்வூரில் உண்டு. அப்படிப்பட்ட ஊரில் பிராம்மண வமிசத்தில் உதிப்பான். தாயே! இந் நூலில் அவனுடைய தாய், தந்தை, சகோதரன், களத்திரம் புத்திரர் இவர்களின் யோகங்களேப் பற்றியும், முன் பின் ஜன்மங்களேப்பற்றியும் சொல்லுகின்ரேம். கேட்டருளவேண்டும்.

4. தந்தையின் துணையண் ஒன்று சத்திமா ரிருவ ரென்ரேம்
எந்தையே பிதாகு ணத்தை யியம்புவோ மாநி றத்தன்
முந்தின கல்வி கற்பன் உண்மையா மனத்த ளுகும்
சிந்தையில் கபடு மில்லான் சீலவா னென்று சொல்வோம்.

4. இவனுடைய தந்தைக்குச் சகோதரர் ஒருவர், சகோதரிகள் இருவர். பிதாவின் குணத்தைச் சொல்லுகின்ரேம். மா நிறமுள்ளவன். நல்ல கல்வியைக் கற்றறிந்தவன். நேர்மையான மனம் படைத்தவன். நெஞ்சில் கள்ளமில்லாதவன். நல்ல நடத்தையுள்ளவன்.

5. கல்வியல் ஜீவிப் பானும் கரமதில் கமல ரேகை
நல்லவ ளுகி வாழ்வன் நயமுள வார்த்தை கூறுவன்
மல்லினில் செல்லா ளுகும் மாதர்க்கு உபதே சிப்பன்
புல்லிய புத்தி யில்லான் பூமியை யளந்தோன் பத்தி.

5. தான் கற்ற கல்வியைக்கொண்டு ஜீவனத்தை நடத்துவான். கையில் பதுமரேகை இருக்கும். எல்லோருக்கும் நல்லவனுக நடந்து கொள்ளுவான. நயமான வார்த்தைகளேச் சொல்லுவான். சண்டை சச்சரவுகளில் ஈடுபடமாட்டான். மாதருக்கு உபதேசம் செய்வான். விசாலமான புத்தி உடையவன். பூமியை அளந்த திருமாலிடம் மிக்க பக்தி;

6. கொள்ளுவான் கிருஷி யில்லான் குலவுவான் தலவா சங்கள்
விள்ளவே யுரைப்பா ளுகும் வேதசாத் திரங்கள் சொல்வன்
தள்ளுவான் அல்பர் தம்மைச் சதுஷ்பாதம் விருத்தி யில்லான்
நள்ளிருள் விளக்கு மெங்கள் நாயகி கேட்டி டாயே.

6. உள்ளவன். விவசாயத்தில் இஷ்டமில்லாதவன். பல புண்ணிய க்ஷேத்திரங்களில் ஆசையோடு வாசம் செய்வான். தெளிவாகப் பேசுவான். வேத சாஸ்திரங்களேப் பிறர்கேட்குமாறு எடுத்துச் சொல்லுவான். தாழ்ந்தவர்களின் சகவாசத்தை விலக்கி விடுவான். கால் நடைகளே அபிவிருத்தி செய்வதில் நோக்க மில்லாதவன். இருளில் விளக்கு போல் அஞ்ஞான இருளேப் போக்கும் தேவியே! மேலும் சொல்லுகிரேம். கேளுங்கள்.

7. சொன்னவிக் குணத்தா னுக்குச் சுதனுமே உதிப்பா னுகும்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் அழகுளான் இருநி றத்தன்
பின்னமில் லாத தேகம் பூமிகள் சேர்ப்பா னுகும்
கனமனம் கபடு கொஞ்சம் கரமதில் மாலின் ரேகை.

7. இப்படிப்பட்ட குணங்கள் உள்ள தந்தைக்கு இந்த ஜாதகன் ஜனித்திருப்பான். அவனுடைய குணங்களைக் கூறுகின்றோம். அழகுள்ளவன். கருத்தமேனியான். பின்னமில்லாத சரீரம் வாய்ந்தவன். பூமிகளைச் சேர்ப்பான். கல் நெஞ்சன். மனத்தில் சிறிது கள்ளமுண்டு. கையில் விஷ்ணு ரேகை உடையவன்.

8. இருவித வார்த்தை யுண்டு இளமனம் போல காட்டும்
அரிபத்தி வேட தாரி யாரையும் நேசம் கொள்வன்
விரைவினில் நடக்க வல்லன் வெஞ்சின முன்னே காட்டும்
புரைசொல்வன் சமமாம் கல்வி போஜன வறுமை காணுன்.

8. இருவிதமாகப் பொருள்படும்படியான வார்த்தைகளைச் [சிலேடை வார்த்தைகளை] சொல்லுவான். தான் மிக்க இளகிய மனம் உள்ளவன் போல் பிறருக்குத் தோற்றமளிப்பான். விஷ்ணு பக்தி உண்டென்று பிறர் எண்ணும்படி வேஷம் தரிப்பான். உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வித்தியாசமின்றி எல்லாரிடத்தும் நட்புக்கொள்ளுவான். வேகமாக நடக்கும் இயல்புள்ளவன் தனது சினத்தை முதலிலேயே காட்டி விடுவான். ரகசியத்தை வெளியிட்டு விடுவான். சிறிது கல்வியறிவு உடையவன். போஜனத்திற்குக் குறைவில்லாதவன்.

9. கைமுதல் பின்னு ளுள்ளான் காதலி பட்ச னுவன்
சொல்லதைக் காப்பா னுகும் சுகதுக்க மிரண்டு முள்ளான்
மல்லான வார்த்தை யுண்டு மருவிடும் நாபிச் சூடு
புல்லிய புத்தி கொஞ்சம் புகலுவான் தந்திர வார்த்தை.

9. பிற்காலத்தில் இவனுடைய கையில் சிறிதுசெல்வம் சேரும். மனைவியிடத்தில் அன்புள்ளவன். சொன்ன சொற்படி நடப்பான். இவனது வாழ்க்கையில் சுகம், துக்கம் இரண்டும், நிறைந்திருக்கும். இவனது வார்த்தைகளால் கலகமுண்டாகும். நாபியில் சூடு தங்கி இருக்கும். சிறிது அல்ப புத்தியும் உள்ளவன். நயவஞ்சகமான வார்த்தைகளைப் பேசுவான்.

10. துணைவர்கள் ஐந்து தோன்றும் செப்புவோ மாண்பால் ரண்டு
கனமுடன் விருத்தி யாகும் கன்னிமார் மத்தி யத்தில்
பிணையான கால ளுடு போவரே இருவ ருந்தான்
சினமிலாத் துணையாண் சேதி செப்புவோம் பின்பா கத்தில்.

10. இக்கடகலக்கின மகனுக்கு ஐந்து சகோதர சகோதரிகளாவார்கள். அவர்களில் ஆண்கள் இருவரும் பெண்கள் மூவருமாவர். சகோதரர்கள் நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள். சகோதரிகள் மூவரும் நடுத்தர வயதில் மரணமடைவார்கள். இரு சகோதரர்களைப் பற்றிய வரலாற்றைப் பின் பாகத்தில் சொல்லுகின்றோம்.

11. இருபது மூன்று ஆண்டில் எய்திடும் பாரி தானும்
வருங்கன்னி குடகு திக்கில் மாதுலன் மகளைக் கொள்வன்
திருமக ளொப்ப தாகும் செல்வியும் யோக சாலி
வருவோரை ஆதரிப்பாள் மறித்துரை கூரு ளாகும்.

11. இந்த சாதகனுக்கு இருபத்து மூன்றும் வயதில் விவாஹம் நடைபெறும். மேற்குத் திசையில் ஜனித்த மாமன் மகளை மணப்பான். அவள் மஹாலக்ஷ்மிக்குச் சமமானவள். மிக்க அதிருஷ்ட முள்ளவள். வரும் விருந்தாளிகளை உபசரிப்பாள். பிறர் சொல்லும் வார்த்தைகளை ஆக்ஷேபிக்கும் சுபாவமில்லாதவள்.

12. சீலமும் அறத்திலிச்சை தேறினேர் தமக்கு அன்பள்
காலத்தை அறிந்து ரைப்பள் கனத்தபுத் திகளு முண்டு
மால்பத்தி விரதம் பூண்பள் மாமியைக் காணு ளாகும்
தூலமாந் தேகம் பின்னுல் சொற்சுகம் நாபிச் சூடு.

12. நல்ல சீலமுடையவள். தருமத்தைச் செய்வதில் ஆசைகொண்டவள். தன்னை அண்டியவர்களுக்கு இனியளாவள். இடம் பொருள் ஏவலறிந்து பேசுவாள். உதாரமனப்பான்மை கொண்டவள். திருமாலிடம் விசேஷ பக்தியுண்டு. இருச்சிரம் சாந்திராயணம் முதலிய விரதங்களை அனுஷ்டிப்பாள். மாமியாரைக் காணமாட்டாள். [இந்த ஜாதகனின் விவாஹத்திற்கு முன்பே இவன் தாய் இறப்பாள் என்பது கருத்து.] இவளது உடல் சிறிது பருத்திருக்கும். நாபியில் சூடு உள்ளவள்.

13. சுதர்களு மறுவர் தோன்றும் செப்புவோ மாண்பா லொன்று
மதிமுகப் பெண்பால் ரெண்டு வரைகிறோம் தீர்க்க மாக
முதல்சுதர் தோஷ மெய்தும் மொழிகுவீ ரந்தச் சங்கை
மதலைதா னத்தோன் ஜன்ம மருவியே நீச்ச மாக ;

13. இவளுக்கு ஆறு குழந்தைகள் பிறக்கும். அவைகளில் ஒன்று ஆண். மற்ற இரண்டும் பெண் குழந்தைகள். இவர்கள் தீர்க்கமாக வாழ்வார்கள். முதலில் பிறக்கும் குழந்தை நசிக்கும். அதற்குக் காரணமென்ன என்று பார்வதிதேவி வினவினள். அத்திரி முனிவர் பதில் கூறுகின்ருர். புத்திரஸ்தானுதிபதியான செவ்வாய் லக்கினத்தில் நீசனுக இருப்பதாலும் ;

14. காரிக்கு ஐந்தோன் மூன்றில் கன்னியில் நீச மாகக்
கூறினே மந்தச் சங்கை குமரன்தன் பூர்வம் கேளாய்
வீரிய காஞ்சி கீழ்ப்பால் மிகப் பெரு மூரி லேதான்
மாரன்செங் குந்த வம்சம் மரபினி லுதித்தானென்றோம்.

14. சனிக்கு ஐந்தாமிடத் ததிபனை சுக்கிரன், மூன்று மிடமாகிய கன்னியில் நீசனுக இருப்பதாலும் புத்திர தோஷ முண்டு என்று சொன்னேம். இவனுடைய பூர்வஜன்மத்தைக் கூறுகின்றோம். இவன் காஞ்சீநகரத்திற்குக் கீழத்திசையிலுள்ள பெரிய ஓர் ஊரில் கைக்கோலர் வமிசத்தில் பிறந்திருந்தான்.

15. நெசவுக ளதிக முண்டாய் நிமலியு மதலே யுண்டாய்ப்
பசியென்றோர்க் கன்ன மீந்து பஜனைகள் மிகவே செய்து
கசிவுள மனத்த ளுகி களத்ததோர் தலங்கள் சென்று
அசைவிலா தாகப் பந்தல் அளித்துமே கால னுடு ;

15. நெசவுத் தொழிலே விரிவாகச் செய்து, பணம் சம்பாதித்து மனைவி மக்களுடன் சுகமாக வசித்து வந்தான். பசித்தவர்களுக்கு அன்னதானம் செய்தான். பஜனைகளில் அதிகமாக ஈடுபட்டான். எல்லோரிடமும் கருணையோ டிருந்தான். பல புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்றான். நிலேத்து நடக்குமாறு ஒரு தண்ணீர்ப் பந்தலேயும் நிறுவினான். காலப் போக்கில் மரணமடைந்து ;

16. வந்துமே பிரமன் லக்கம் மறைக்குல முதிப்பா னுகும்
இந்ததோர் ஜன்மம் தன்னில் இவன்செயல் புகலு கின்றோம்
முந்துமால் பத்தி யுண்டு உதித்தநாள் முதலா மாக
சந்தத மரண மட்டும் சந்திரன் பிறைபோல் யோகம்.

16. முன்ஜன்மத்தில் செய்த புண்ணியத்தின் பயனுக, பிராம்மண குலத்தில் பிறந்திருக்கிறான். இந்த ஜன்மத்தில் இவன் புரியும் செயல்களைக் கூறுகின்றோம். இவனுக்குத் திருமாலிடம் பக்தி யுண்டு. பிறந்த நாள் முதல் இறக்கும் வரை இவனது யோகபாவங்கள் பிறைச் சந்திரன் போல ஓங்கி வளரும்.

17. வறுமைக ளில்லா னுரு மாதியில் அலேச்ச லுண்டு
குறைவுறும் தாய்சு கங்கள் தோகையும் வந்த பின்பு
நிறையவே குடும்ப மெய்தும் நேமிகள் சேர்ப்பா னுகும்
நறுமலர்க் கந்த மிஷ்டன் நாட்டினில் சல்லியம் கொள்ளான்.

17. வறுமை இல்லாதவன். இளமைக்காலத்தில் சிறிது சிரமப்பட்டிருப் பான். தாய் சுகம் இவனுக்கு மட்டாகவே இருக்கும். மனைவி வந்த பின், குடும்பம் பலதுறைகளில் அபிவிருத்தியடையும். அதிகப் பூமிகளைச் சேர்ப்பான். வாசனையுள்ள மலர்கள், சந்தனம் முதலிய பொருள்களில் விருப்பமுள்ளவன். இவனுக்குக் கடன் இராது.

18. முப்பது ஆண்டு மேலாய் விசேஷமாம் யோகம் என்றோம்
செப்புவோ மரசர் பேட்டி ஜயம்செய்வன் நினைத்த வெல்லாம்
ஒப்புடன் தனங்கள் சேர்ப்பன் உலகுளோர் நேசங் கொள்வன்
கப்பிய பணிகள் சேர்ப்பன் காலாள்க ளுடைய னுகும்.

18. இவனுடைய முப்பதாவது வயதிற்குமேல் இவனுக்கு விசேஷ யோகங் கள் நடைபெறும். அடிக்கடி அரசர் தரிசனம் ஏற்படும். ஆரம்பித்த காரியம் வெற்றியடையும். அதிகப் பணத்தைச் சேர்ப்பான். பலருடைய நட்பு இவனுக்கேற்படும். நிறைந்த ஆபரணங்களையும் அடைவான். நல்ல சேவகர்களும் இவனை வந்தடைவார்கள்.

19. யோகமெவ் விதமாய்ச் சொன்னீர் உரைப்பீர்கள் முனியே நீர்தாம்
பாகமாய் நான்கு கேந்திரம் பாரியே கிரகம் நிறக
யோகபாக் கியங்கள் பின்னுல் பெறுவனும் நிதிநிட் சேபம்
சேகரஞ் சொல்லு மென்ன செம்பொன்னும் புகரும் கூடி ;

19. யோகங்களின் காரணங்களைச் சொல்லுங்கள் எனப் பார்வதி கேட்க, முனிவர் பதில் சொல்லுகின்றார். நான்கு கேந்திரஸ்தானங்களிலும் கிரஹங்கள் இருப்பதால் யோகங்கள் நிச்சயம் உண்டு. ஆனுல், பிறகாலத் தில்தான் ஏற்படும். புதையலும் இவனுக்குக் கிடைக்கும். அதற்கெனன காரணம் ? என்று பார்வதி வினவினுள். முனிவர் பதிலுரைக்கின்றார். குருவும் சுக்கிரனும் சம்பந்தப்பட்டு ;

20. மூன்றினி லிருப்ப தாலே மொழிகிறோ மந்தச் சேதி
தூன்றிய [1] முடவன் [2] சக்கரம் செல்லுங்கால் அந்தம் தன்னில்
ஈன்றிடு பலன்கள் தாமும் இதுபலன் தப்பா தாகும்
சான்றோரை ஆதரிக்கும் சங்கா கேட்டி டாயே.

20. மூன்றுமிடத்திலிருப்பதால் நிதி நிக்ஷேபம் கிடைக்கும். சனிமகா தசை அந்திய பாகத்தில் பலன் கிட்டும். சாதுக்களை ஆதரிக்கும் தாயே ! இந்த மொழிகள் தப்பா.

தாய்க் குணம்.

21. அன்னமாஞ் சிவப்ப ளாகும் ஆளனுக் கினிய ளாகும்
தன்சொனு மடக்க முண்டு தன்பணி அதிகம் காணுள்
கன்னிகை சமயோ கத்தாள் கருதிடாள் கட்டு வார்த்தை
முன்னமே கோபங் கொஞ்சம் மேவிப்பின் சாந்த முண்டு.

21. இவனுடைய தாய் மாநிறமுள்ளவள். கணவனிடத்தில் மிக்க பக்தி யுடையவள். அடக்கமான சொறகளைப் பேசுவாள். தனது உடலின் சௌ கர்யங்களைக் கவனிக்கமாட்டாள். யோகம் மத்யமம். கட்டு வார்த்தைகளைப் பேசுவதில் கருத்தில்லாதவள். சிறிது முன் கோபி. ஆனுல், பிறகு மிகவும் சாந்தமாவாள்.

22. இல்லமும் குடகு வென்றோம் இவள்துணை ஆண்பா லொன்று
வல்லிமா ரவாறு தீர்க்கம் அவ சேதி பின்பால் சொல்வேன
தல்லியின் பூர்வம் கேளாய்ச் சட்டநா தீசர் வாழும்
நல்லதோர் நகரம் தனனில் நாயகி கங்கை சேயாய்.

22. இவள் பிறந்த வீடு மேற்குத் திசையில் என்று முன்னமேயே சொன் னேம். அவளுடைய சகோதர வருக்கத்தைச் சொல்லுகின்றோம். சகோ தரன் ஒருவன். சகோதரி ஒருத்தி. அவர்கள் நீடித்து வாழ்வார்கள். அவர்கள் செய்தியைப் பின்பாகத்தில் கூறுகினறோம் இவளுடைய பூர்வ ஜன்மத்தைச் சொல்லுகினறோம். சட்ட நாதர் எழுந்தருளி இருக்கும் நகரில் (சீகாழியில்) வேளாள வமிசத்தில் பிறந்திருந்தாள்.

---

[1] சனி. [2] தசை.

23. உதித்துமே மதலை யுண்டாய் உலகுக்கு நல்லோ ளாகி
மதித்திடு குடும்பி யாகி வளமுள தலங்கள் சென்று
சதியிலா மனத்த ளாகித் தன்வரன் முன்னே மாண்டு
விதியவன் வரையப் பட்டு விளங்கினுள் பிரம்ம சேயாய்.

23. ஜனித்த பிறகு குழந்தைகளைப் பெற்று, பெரிய குடும்பம் உள்ளவ ளாக ஆனுள். உலகத்தாரால் நல்லவளெனப் போற்றப்பட்டாள். பல புண்ணிய தலங்களுக்குச் சென்றுள். கள்ளமில்லாத மனம் படைத்தவ ளாகவும் இருந்தாள். அந்த ஜனமத்தில் கணவன் இறப்பதற்கு முன்ன மேயே மாண்டு, பிராம்மண குலத்தில் பிறந்து இவனுக்குத் தாயாக ஏற் பட்டுள்ளாள்.

24. குருதசை காரி புத்தி குலவுவாள் கால னுடு
மறுஜன்மம் வேங்க டத்துள் மாதுமிக் குலத்தி லேதான்
உறைகுவாள் சுகமுண் டாகி உத்தமி வாழ்வா ளாகும்
அருமறை முடிவி லாடு மம்பிகை யாளே கேளாய்.

24. இந்த ஜாதகனுக்குக் குருதிசையில் சனிபுக்தி நடைபெறும்போது இவள் மரணமடைவாள். மறு ஜன்மத்தில் திருவேங்கட க்ஷேத்திரத்தில் பிராம்மண ஜாதியில் பிறந்து சுகமாக வாழ்வாள். உபநிஷதங்களால் போற்றப்படும் பெருமை உடைய தாயே! கேட்டருளுங்கள்.

25. தந்தையின் பூர்வம் தன்னைச் சாற்றுவோம் சோழ நாட்டில்
வந்தனன் வைசியச் சேயாய் மானலம் செட்டுச் செய்து
தன்மனை மதலை யுண்டாய்ச் சம்பத்தாய் வாழு நாளில்
பின்னமாய் வந்த ஊழைப் பேசுவோம் தாயே கேளும்.

25. தந்தையின் முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேம். இவன் சோழ நாட்டில் வைசிய குலத்தில் உதித்து, வியாபாரம் செய்து, மனைவி மக்களுடன் சுகமாக வாழ்ந்திருக்கும் காலத்தில் இவனுக்கேற்பட்ட வினை யைச் சொல்லுகின்றேம். தாயே! கேளுங்கள்.

26. அந்நகர் சூத்திர சாதி அவள்பேரில் மோகம் கொண்டு
பொன்காசு அவளுக் கேயப் புதுபோக மனுப வித்துக்
கன்னிக்குக் கருவு தங்கக் கனத்ததோ ரவிழ்த மீயப்
பின்னமாய்க் கருவு நீங்கிப் பேதையு மரண மானுள்.

26. அந்த ஊரில் வசித்து வந்த சூத்திர ஸ்திரீயிடம் மோஹம் கொண்டு, அவளுக்குப் பொற்காசுகளைக் கொடுத்து இன்பத்தை அனுபவித்தான். காலக் கிரமத்தில் அவளுக்குக் கர்ப்பமேற்பட்டது. அதை அழிப்பதற்காக இவன் அவளுக்கு ஒரு கொடிய மருந்தைக் கொடுத்தான். அதனுல் கருப்பமும் சிதைந்தது. கன்னியும் மரணமானுள்.

27. அந்தவோர் தோஷம் தானும் அனுகிற்று இவனுக் கேதான்
பிந்தியு மனைவி மாண்டு புத்திரர் பகையு மாகித்
தென்திசைச் சேதுச் சென்று தேறினர்க் கன்ன மீந்து
தன்னக ரடைந்து மேதான் சண்டன்தன் பதிக்குப் புக்கு.

27. அந்தப் பாவம் இவனைச் சார்ந்தது. ஆகையால் மனைவி மாண்டாள். புத்திரர்களுடன் பகைமை ஏற்பட்டது. பிறகு சேதுவிற்குச் சென்று, அன்ன தானம் செய்து தன்னது நகரததை வந்தடைந்தான். சில நாட்களுக்குப் பிறகு மரணமடைந்தான்.

28. தலைநான்கோன் வரையப் பட்டு ஜனித்தவ னிவனே யென்றேம்
உலவிடு முன்னுழ்த் தோஷம் உறும்பாரி மத்தில் மாண்டு
கலவர புத்தி யாகிக் காவலன் சிறையாய் வாழ்வன்
நிலைமையா யிவன்பின் ஜன்மம் நிகழ்த்துவோம் தாயே கேளும்.

28. நான்முகப் பிரம்ம தேவனுல் இங்குப் பிறப்பிக்கப்பட்டான். முன் ஜன்மத்தில் செய்த பாவத்தினுல் இந்த ஜன்மத்திலும் மனைவி, வாழ்க் கையின நடுவிலேயே மரணமடைவாள். அந்தப் பாவத்தினுலேயே இவன் புத்தி குழம்பி, சிறையிலிருப்பது போலத் தனித்து வாழ்வான். இவனது பின் ஜன்மத்தையும் சொல்லுகின்றேம். தாயே! கேளுங்கள்.

29. அரங்கமா நகரந் தன்னில் அருளுவா னிந்தப்பாலன்
பெருமையா யிக்கு லத்தில் பிறந்துமே வரசர் பக்கல்
உறைந்துமே சீவிப் பானும் உரைத்தது தப்பா தாகும்
மருமமாய்த் தவங்கள் செய்யும் மங்கையே கேட்டி டாயே.

29 ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் இவன் பெருமைவாய்ந்த பிராம்மண வமிசத்தில் பிறப்பான். அரசருடைய ஆதரவும் அரசாங்க அலுவலும் பெற்று ஜீவிப்பான். ஆடம்பரமற்று (பிறர் உணராதபடி) மிக்க தவத்தைச் செய்யும் பார்வதி தேவியே! இந்த மொழிகள் பொய்யாகா.

30. முப்பது மூன்றுண் டின்மேல் மேவிடும் தந்தை கண்டம்
ஒப்புடன் ஜாத கர்க்கு உரைக்கிறே மறுபா னேழில்
மெய்ப்புடன் [1] மகரமாதம் விளம்புவோம் கண்டந் தானும்
செப்புவோ மிவன்பின் ஜன்மம் தில்லையில் இக்கு லத்தில்.

30. இந்த ஜாதகனுடைய தந்தை, இவனது முப்பத்து மூன்றுவது வயதிற்குமேல் மரணமடைவான். ஜாதகன் தனது அறுபத்தேழாவது வயதில் தை மாதத்தில் மரணமடைவான். இந்த ஜாதகன் மறுஜன்மத்தில் சிதம்பரத்தில் பிராம்மண குலத்திலேயே பிறப்பான்.

31. பிறந்துமே கடவுள் பூசை புரிவனு மென்று சொல்வோம்
அரிவையு மிவன்பின் ஞலே அந்தரன் டக்கல் சேர்வள்
சிறியவன் ஜனன காலம் ஆதிரை நாலாம் பாதம்
வருந்திங்கள் ஏழே யாகும் மங்கையே கேட்டி டாயே.

31. பிறந்து, கடவுள் பூசையைத் தப்பாது செய்வான். இவனுடைய மனைவி இவனுக்குப் பிறகு மரணமாவாள். இந்த ஜாதகன் பிறந்தபொழுது திருவாதிரை நக்ஷத்திரம் நாலாம் பாதம். ஆகவே ராகுதசையில் இருப்பு மாதங்கள் ஏழுதான். பார்வதி தேவியே! மேலும் கேளுங்கள்.

[1] தை மாதம்.

ஜாதகம் 8

1. சந்திரன் அரியில் புக்கச் சார்ந்ததற் கிரண்டில் ராகு
விந்தையாம் புக ந மாக வீற்றிட அலரி கோலாய்ப்
புந்தியும் பற்ப ராகப் பூமகன் கொச்சை மந்தன்
சிந்தையாம் சாடி கேது சேலதாய் அலவன் பொன்னன்.

குரு	செவ்வாய்		
சனி கேது	இராசி சக்கரம்		இலக்கினம்
			சந்திரன் ராகு
		சுக்கிரன் சூரியன் புதன்	

1. இஃது ஒரு கற்பனை ஜாதகம். ஒவ்வொரு ஜாதகத்தின் முடிவிலும் நக்ஷத்திரமும், தசை இருப்பும் சொல்லப்படுவதுபோல் இந்த ஜாதகத்திற்குத் தெளிவாக ஒன்றும் சொல்லப்படவில்லை. இஃது ஒரு காரணம். அடுத்த பாட்டில் இவ்வாறு கிரஹநிலையில் " பிறக்குமானல் " என்று சொல்லப்படுகிறது. ஆகவே பிறக்காது என்பது உறியக்கிடக்கின்றது. இஃது இரண்டாம் காரணம். மற்றைய ஜாதகங்களில் " பிறக்குமானல் " என்று சொல்லப்படாததையும் இங்கு கவனிக்கவேண்டும். சந்திரன் ராகு சிம்மத்திலும், சுக்கிரன் சூரியன் புதன் துலாத்திலும், செவ்வாய் மேஷத்திலும், சனி கேது கும்பத்திலும், குரு மீனத்திலும், இலக்கினம் கடகமாகவும் இருந்து, இவ்வாறு கிரஹ நிலைகளில் பிறந்த குழந்தையின் பலன்களைச் சொல்லுவீர்களாக எனப் பார்வதி வினவினுள்.

2. இமையவன் மகளே கோள்கள் இந்தவாறு பலத்து நிற்க
அமைமதி நிலத்தில் சேயும் அழகுடன் ஜனிக்கு மானல்
செமையுள குழவி யாகும் செப்புவோம் கீழ்மேல் வீதி
தழைபுத ஞேக்கா வில்லம் தரித்திடும் கணேசன் வாசம்.

2. பர்வதராஜன் மகளே! இவ்வாறு கிரக நிலையில் ஒரு குழந்தைப் பிறக்குமானல் அஃது அழகை இருக்கும். வீதி கிழக்கு மேற்காக அமைந்திருக்கும். வீடு, தழைபோன்று பசுமையான புதன்திசையாகிய வடக்கு நோக்கி இருக்கும். ஸ்ரீவிநாயகரது ஆலயமுமு் இருக்கும்.

3. சித்தியாம் கீழ்ப்பா லீசன் தென்பா லார் பேரூரிற் றுண்
வெற்றிச ரிந்தப் பாலன் விளங்கிய பிரம்ம கோத்திரம்
பற்றிலா ஜனிப்பா னென்று பகருவோம் கோட்களாலே
அத்திமா முகனை யீன்ற அம்மையே கேட்டி டாயே.

3. அந்த வீட்டிற்குக் கீழ்த் திசையில் ஈசன் கோயிலும் தென் திசையில் ஆறு முள. இவ்வாறான பெரிய ஊரில் முதற்பாட்டில் சொல்லப்பட்ட கிரக நிலைகளாலே இக் குழந்தை பிராம்மண வமிசத்தில் பிறந்திருக்கும். ஸ்ரீவிநாயகரைப்பெற்ற தாயே! கேளுங்கள்.

4. புகலிவன் ஜனன யோகம் புனித னும் தந்தை யோகம்
வகையுள அன்னை யோகம் வந்திடும் இவன்முன் ஜன்மம்
புகையிலாப் பலன்க ளெல்லாம் போதமா யெடுத்து ரைப்போம்
தகைமைசேர் குடும்பச் செய்கை சாற்றுவோ மினிமே லாக.

4. இவனது யோகம், தந்தை, தாய், முன்பின் ஜன்மங்கள் இவை களைப்பற்றிச் சொல்லுகிறோம். மேலும் அவனது குடும்பவாழ்க்கையைப் பற்றியும் சொல்லுகிறோம்.

5. அன்னையே தந்தை வர்க்கம் ஆண்பாலின் பலத்தைக் காணும்
கன்னியு மொன்று நிற்கும் கனத்திடா வதுவு மாயும்
பின்னையும் பாலன் வர்க்கம் பேசுவோ மதனைக் கேளாய்
வன்னமாம் அவனின் வர்க்கம் வளமுள ஆண்பா லொன்று.

5. தாயே! இவனுடைய தந்தைக்குச் சகோதரன் இருக்கமாட்டான். ஒரு சகோதரி இருப்பாள். அவளும் நீடித்திராள். இந்தப் பாலகனுடைய சகோதர பாவத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். சகோதரன் ஒருவன் நீடித்திருப்பான்.

6. தையலர் யோக மொன்றும் சாற்றிட பலம் பெறுது
மெய்யதா யெடுத்துச் சொன்னேம் வார்த்தையும் பிசகி டாது
ஜயமில் நிறங்கு ணத்தை அற்புதன் தனக்குப் பார்மேல்
வையகம் புகழு மாதே வழுத்துவோம் கேட்டி டாயே.

6. சகோதரி பிறப்பதற்குக் காரணங்கள் இல்லை. இது பிசகாது. உலகம் போற்றும் மாதே! இவனுடைய நிறம் குணம் முதலியவைகளைச் சொல்லுகின்றோம் கேளுங்கள்.

வேறு

7. பாலனுமே நிறஞ்சிகப்பன் நீட்சி யுள்ளான்
பித்த மெனும் தேகி யாவன்
கோலெனவே கரங்காலும் நீண்டிருக்கும்
குணமுள்ளான் நாசியது கூர்மையாகும்

வேலெனவே விழியாகும் விவேகியாவன்
வித்தகனும் சன்மார்க்கன் தர்க்கவாதி
மாலவனின் ரேகையது கரத்திலுண்டு
மகிழ்ச்சியுளான் நீரனிவன் சாற்றிஞேமே.

7. பாலனின் நிறம் சிவப்பு. உயரமாக வளர்ந்தவன். பித்ததேகம் வாய்ந்தவன். கோல்போல் கை கால்கள் மெலிந்து நீண்டிருக்கும். நற்குணம் வாய்ந்தவன். நாசி கூர்மையாக அமைந்திருக்கும். வேல் போன்று ஊடுருவிப்பாயும் விழிகளை உடையவன். மிக்க பகுத்தறிவு உள்ளவன். இவன் நல்வழியில் நடப்பவன். மேன்மேலும் யுக்திவாதங்களைச் செய்து விஷயங்களை நிருபிப்பான். இவனது கையில் விஷ்ணுரேகை இருக்கும். எப்பொழுதும் மகிழ்ச்சியோடு இருப்பான். மிக்க ஔதாரியமும் வாய்ந்தவன்.

8, பொய்பேசான் சிக்கனன்ருன் தையல்மோகன்
போசனமும் சிறுத்துண்பன் புகழாய்நிற்பன்
ஐயமிலா வார்த்தையது அறவுரைப்பான்
அண்டியபேர் தமைகாப்பன் சோம்பல்கொஞ்சன்
நையுறவே சொல்கூருன் சாந்தனவன்
நானிலத்தில் பெரியோர்கள் பிரபுக்கள்பட்சன்
செய்தொழிலும் பலிதமுள்ளன் எதிரிதம்மைச்
சூட்சமமுடன் லகுவாக வெல்வன்ருனே.

8. பொய் பேசமாட்டான். சிக்கனமாகவே வாழ்க்கையை நடத்துவான். பாரியையிடம் அன்புகொண்டவன. சிறிதே ஆஹாரம் உட்கொள்ளுபவன். புகழுடன வாழ்வான். சந்தேகிக்க முடியாதபடி இவன் பேச்சு மிகவும் தெளிவாக இருக்கும். அண்டியவர்களை ஆதரிப்பான். சிறிது சோம்பலுள்ளவன். பிறா வருந்தும்படி வார்த்தைகளைச் சொல்லமாட்டான். சாந்தகுணம் படைத்தவன். பெரியோர்களுடையவும், பிரபுக்களுடையவும் அன்பிறகுப் பாத்திரமானவன். பலவிதத்தொழில்களைச் செய்வான். எதிரிகளைத் தனது மதிவன்மையால் சுலபமாகவே வெனறு விடுவான்.

9. குழவி யிடமிஷ்ட முள்ளோன் பாக்கியமுள்ளான்
கூர்மையுளான் எதிரிச்சொல் நுணுக்கம்தேர்வன்
பழையதொரு வாக்கியங்க ளுபமானங்கள்
பவருகனும் சொல்மிருது சாந்தவானும்
குழிவான ஞாயமதை யகுவில்தீர்ப்பன்
குற்றமிலான் பலபேர்கள் நேசமுள்ளான்
தொழுதாரு மும்பர்முதல் எவரும்போற்றும்
சுந்தரியே இன்னமதில் சொல்வோங்கேளே.

9. குழந்தைகளிடம் பேரன்பு கொண்டவன். நிறைந்த செல்வமுள்ளவன். கூர்மையான புத்தியுடையவன். எதிரிகள் சொல்லும் வார்த்தைகளின் சாராம்சத்தை அறிபவன். பழமொழிகளையும் உபமானச் சொற்றெடர்

களையும் தம் கருத்துக்களைத் தெரிவிப்பதற்காகக் கையாள்வான். சொற்கள் மிருதுவாக இருக்கும். சாந்தமானவன். சண்டைகளில் நியாயங்களையும் சந்தேகங்களைச் சுலபமாகத் தெளிவிப்பான். குற்றம் செய்யாதவன். பல மனிதர்களின் நட்பு இவனுக்கு உண்டு. தேவர்களாலும் மற்றவர்களாலும் போற்றப்படும் தாயே ! இவனைப் பற்றி மேலும் சொல்லுகிறோம். கேளுங்கள்.

10. பலருக்கும் உபகாரன் பெருமை யுள்ளான்
பகரிவனின் தாய்வர்க்கம் பலத்துநிற்கும்
குலத்தொழிலில் வெறுக்கையுளான் செயல் வெறுக்கை
கொடுமையது மிகவாடான் வித்தையுள்ளான்
சொல்லிவனும் நயமாவன் சொகுசனும்
சுத்தமுளான் செழுமையுளான் தனங்கள்சேர்ப்பன்
தலையான உலகோர்க்கு நட்பாய்நிற்பன்
தழை பெறவே வாழ்வனெனச் சாற்றிஞேமே.

10. பலருக்கும் இவன் உபகாரம் செய்வான். மிக்க பெருமையும் மரியாதையும் உடையவனுக இருப்பான். இவனுடைய தாய் வருக்கம் எல்லாத் துறைகளிலும் செழிப்பாக இருக்கும். குலத்தொழிலால் செல்வத்தை அடைவான். மேலும் எந்தத் தொழில் நடத்தினுலும் நஷ்டமேற்படாமல் லாப முண்டாகும். வெயில் பசி முதலியவைகளால் வாடமாட்டான். கல்வி கற்றவனுகவும் இருப்பான். மிக்க சௌக்கியத்தை நாடுவான். மனத் தூய்மைப் பெற்றவன். நயமான வார்த்தைகளைப் பேசுபவன். சரீரத்திலும் குடும்பத்திலும் புஷ்டியுடையவன். செல்வத்தைச் சேமிப்பான். உலகிலுள்ள தலைவர்களுக்கு நண்பனுவான். இவன் நன்ருகத் தழைத்து ஓங்கி வாழ்வான்.

வேறு

11. வித்தையும் தமிழ் தெலுங்கு வடமொழி சமமாய் நேரும்
சத்தியே சமமாய் நிற்கும் சதியிலா யோக்கிய ஞவன
மெத்தவே நன்ன டக்கை மேலுள கபட மில்லான்
ஒத்தையாய் முனைச்ச லாவன் ஊக்கனும் சுகமு ளானே.

11. இவன் தமிழ், தெலுங்கு, ஸம்ஸ்கிருதம் இவைகளில் சமமான பாண்டித்யம் பெறுவான். சிறிதும் கபடமில்லாதவன். மிகவும் நம்பத் தக்கவன். உயர்ந்த நடத்தையுள்ளவன். எதையும் தான் ஒருவனுகவே முனைந்து செய்வான். எல்லா விஷயங்களிலும் ஆர்வம் கொண்டவன். சுகங்களை அனுபவிப்பவனுகவும் இருப்பான்.

12. இன்னமும் புகலக் கேளாய் இசைந்திடு வழா மாதி
அன்னையே அஷ்ட மத்தில் அமர்ந்திடச் சுகீனை சந்திரன்
பின்னமா யதனை நோக்க விளம்பிது வன்றி ரண்டோன்
மன்னிய நீச மாக மண்மக னெதிராய் நோக்கி ;

12. இவனுடைய மனைவியைப் பற்றிச் சொல்லுகின்றோம். மேலும் கேளுங்கள். ஏழாமிடத்திற்கு அதிபனுகிய சனி எட்டில் அமர்ந்திருக்க, க்ஷீணசந்திரன் அவனைப் பார்ப்பதாலும், குடும்ப ஸ்தானத்திற்கு உடைய சூரியன் நீசமாகி பூமிமகனென்றுச் சொல்லப்படும் செவ்வாயினுல் பார்க்கப்பட்டிருப்பதாலும் ;

13. இந்தவாறு கோள்கள் நிற்க இயம்பிவன் மனைவி தானும்
சிந்தையா முன்ஜன் மத்தில் செப்புமார்ச் ஜாலந் தன்னைப்
பெருந்திடும் சுடுநீர் தன்னில் போட்டிட இளமை யன்ருள்
பந்தமல் வினையி னுலே பகருவன் மேனி யெல்லாம்.

13. மேலே சொல்லப்பட்ட கிரக நிலையில் பிறந்தவனின் மனைவி, முன் ஜன்மத்தில் பால்யப் பருவத்தில் ஒன்று மறியாத வளாகி பூனையைச் சுடு நீரில் போட்டதால் அந்தப் பாவம் இவளைச் சூழ்ந்து கொண்டது. அதனபனைக இந்த ஜன்மத்தில் இவளது உடலெல்லாம்.

14. சத்திரே மிக்கா லத்தில் சதியொடு வெண்மே கந்தான்
பத்திபே இருக்கு மென்று கூறினேம் தவறி டாது
வித்தகி அவளும் நல்லோள் விளக்கமாய் வாழ்வா ளாகும்
பத்தியா யிந்த நூலில் கூறினேம் மேலுங் கேளே.

14. மிகப்பொலல த வெண்மேக நோய் பரவியுள்ளது. அவள் மிகவும் நல்லவள்தான். சிறப்பாக வாழவாள். இவ்விஷயங்களை மிகவும் சிரத்தை யுடன் கண்டு சொன்னேம். மேலும் சொல்லுகிறோம். கேளுங்கள்.

15. இனிமேலா மிவனின் மன்றல் இயலுட னெடுத்து ரைப்போம்
கனிவுள இருபான் மூன்றுள் கருதிய களனி கோணம்
தொனிவட ஹுதித்தாள் தன்னைத் துயரிலா மணமு டிப்பன்
சினமிலா எங்கள் மாதே செப்பினேம் பிசகி டாதே.

15. இனிமேல் அவனுடைய மணத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். அவனுடைய இருபத்துமூன்றும் வயதில் கன்னிய லக்னத்தில் பிறந்த பெண்ணை மணம் செய்துகொள்வான். பொறுமைக் கடலே! தாயே! எங்கள் சொல் தவருது.

16. அந்தநல் மாதுக் கேத ன் அனுகிடும் புத்திரர் சொல்வோம்
வந்திடு மாண்பா லொருமே வளமுள கன்னி யவ்வாறு
சிந்தையாய்த் தீர்க்க மாகும் செப்பிதின் மேலாய் வந்தால்
இந்திர னிறைஞ்சு மாதே இருநிலம் நிலைத் திடாது.

16. அப்படிப்பட்ட அந்த நல்ல பெண்ணிற்குப் புத்திரர்களைச் சொல்லு கின்றோம். ஒரு புத்திரனும் ஒரு புத்திரியும் தோன்றுவர். இவர்கள் தீர்க் காயுளுடன் இருப்பார்கள். இந்திரனுலும் போற்றப்படும் தாயே! இந்த எண்ணிக்கைக்கு மேல் பிறப்பின நிலைத்திராது.

வேறு

முன் பாட்டில் இரு குழந்தைகளுக்குமேல் தங்காது என்று சொன்னூர். அதற்கான காரணத்தை இப் பாட்டில் விளக்குகின்ருர்.

17. தாயாதி சொத்ததனை வஞ்சித்த தல்லால்
சாற்றந்த கோயிலுறும் தேவ சர்ப்பம்
ஓயாது வெகுநாளாய் இருக்க வதை
வெம்பி யிறந்திட அடித்த தோஷத்தோடு
ஓயாது பரவிஷ யக்கள போகம்
உணர்ந்ததனுல் வெகு கருக்கள் அழிந்த இந்த
ஆயமெனும் தோஷமெலா மிவனைப்பற்றி
அந்நாளும் போகிறற் செய்து வப்பால்.

17. முன் ஜன்மத்தில் இவன் பங்காளிகளின் சொத்தை ஏமாற்றி அப கரித்தான். மேலும் ஒரு தேவாலயத்தில் வெகுநாளாக வாசம் செய்து வந்த ஒரு சர்ப்பத்தை அடித்துக் கொன்றுவிட்டான். அவ்விரண்டு காரணங் களுமன்றி வேறு ஒரு காரணமும் உண்டு. பிறர் மனைவியிடம் கள்ள போகங்களை அனுபவித்து, பலருடைய கருக்களையும் அழித்ததற்க் காரண மாக இருந்தான். ஆகவே, இத்தனைப் பாவங்களும் இவனைச் சூழ்ந்து கொண்டன. நாங்கள் சொல்லப்போகும் பரிகாரங்களைச் சிரத்தையுடன் செய்தால் பாவங்கள் இவனை விட்டு நீங்கும்.

18. வீதமொடு கஞ்சனுமே இலக்கந் தாக்கி
வெளியாகி இப்புவியில் செனிக்க விட
ஜாதகனு மிவனென்றே கோட்களாய்ந்து
சாற்றின மேயம்மொழியுந் தவறிடாது
கோதுடனே அவ்வாறுமுன தோஷமெல்லாம்
குழந்தைக்கு இருப்பதனுல் ஒழியச்சொல்வோம்
காதலுடன் மனையாளோ டிந்தப் பாலன்
கனமான சேதுக்குச் சென்றுஅங்கு ;

18. முன் ஜன்மத்தில் கொடிய பாவங்களைச் செய்த இவன், இறந்து, இப்பொழுது கடக லக்னத்தில் பிறந்திருக்கின்ருன். நவகிரஹ நிலைகளை ஆராய்ந்து பார்த்து பாவங்கள் ஒழியும் வகையைக் கூறுகின்றோம். பக்தி யுடன் இவன் [மனைவியோடு] பெருமை வாய்ந்த சேதுவிற்குச் செல்ல வேண்டும். அங்கே ;

19. கடலாடி சிவன்கழலும் அர்ச்சித்தப்பால்
கரபடந்த பவங்கள்தமை அவர்க்கொப்பித்துக்
கொடிதான ஊனீரென் றிருகண்ணீரும்
கூர்ந்திடவே வேதவகை தொழுதுஅப்பால்
நடையான கனகத்தால் நாகம் செய்து
நாடியதை மறையோர்க்குப் பொருளும்மே
அடைவாக ஈந்துமுன் ஊழைஓதி
அவர்பாதம் முக்காலும் வலம்வந்தேத்தி ;

19. கடலில் நீராடி, அங்கு எழுந்தருளி இருக்கும் ஸ்ரீராம நாதரின் திருவடிகளை அர்ச்சித்து, தான் செய்த பாவங்களை அவர் முன் ஒப்புவித்து, கொடிய என் வினைகளைத் தீர்த்தருளும் என்று கண்களில் நீர் பெருக, வேத முறைப்படி பூசித்து, பிறகு அழகிய தங்கத்தால் நாகம் செய்து, அதை மற்றைய தக்ஷிணைகளுடன் வேதமோதும் பிராம்மணருக்கு மிக்க சிரத்தையுடன் கொடுத்து, முன் ஜன்மத்தில் செய்தப் பாவங்களை அவரிடம் தெரிவித்து, அவரை மூன்று முறைப் பிரதக்ஷிணம் செய்து, அவர் பாதங்களில் வணங்கி ;

20. மனையாளும் மடிபிடிக்க மறையோர்தாமும்
மனங்களித்து வாழ்நீங்கிச் சுகங்களேற்று
இனமுடனே சுதருண்டாய்ப் புவியில்மிக்க
இன்பமுடன் வாழ்வீரென் றுசியேற்று
நனிவான பலபேர்க்கு அன்னமிட்டு
நக்கன்பால் எண்ணியொரு திங்கள்நின்று
பினையதற்குப் பின்மதுரை வந்து அன்னோர்
பூவடியை யேத்திப்பசு நெய்யால் தீபம் ;

20. மனையாளும் இவனும் மடி பிடிக்க, மனங்குளிர்ந்து, பிராம்மணர்கள் முன் வினை நீங்கி, குழந்தைகள் பெற்றுச் சுகமாக பூமியில் வாழ்வீர்களாக என்று அருளும் ஆசிகளைப்பெற்றுக் கொண்டபின், அங்குப் பலருக்கு அன்னமிட்டு, பரமசிவன் சந்நிதியில் ஒரு மாதம் தங்கி, அதற்குப் பின் மதுரைக்கு வந்து, அங்கு எழுந்தருளியிருக்கும் சொக்கநாதரின் திருவடிகளை வணங்கி, பசுவின் நெய்யால் தீபம் ஸமர்ப்பித்து ;

21. திருவுடனே ஒருநூறும் கோயிலேற்றித்
தீராத வினைதீரென்றேத் துதித்த போற்றி
அருமையுள்ள தில்லையுமே கண்டுபோற்றி
அப்பால்தன் பதிவந்து விருக்ஷமான
அரசொன்று வைததற்கு மணமுஞ்செய்து
அதன்கீழே நாகமென்றும் பிரதிஷ்டையாக்கிக்
குறைவிலா பிரதோட வுபவாசந்தான்
கூர்ந்திவனு மிரண்டாண்டு தவறு நின்று.

21. நூறு தீபங்களைக் கோயிலில் ஏற்றி, தீராத பாவங்களைத் தீர்க்கும்படி கடவுளைத் துதித்துப் பிரார்த்திக்கவேண்டும். அதன் பிறகு, பெருமை வாய்ந்த தில்லை க்ஷேத்திரத்திற்கு வந்து, நடராஜப் பெருமானைத் துதித்து வணங்கவேண்டும். அதன் பிறகு, தன் ஊருக்கு வந்து, அரசமரத்தை ஸ்தாபித்து, அதற்கு மணம் செய்வித்து, அந்த மரத்தின்கீழ் நாகத்தைப் பிரதிஷ்டை செய்யவேண்டும். எல்லா இஷ்டத்தையும் கொடுக்கவல்ல [பிரதோஷ விரதம் என்று பிரசித்தமான] பிரதோஷ உபவாசத்தை இரண்டு ஆண்டுகளுக்கு இடைவிடாமல் அனுஷ்டிக்கவேண்டும்.

22. பரனை ஈசனுக்கு விழாவும்செய்தால்
பலமான முன்னூழ நீங்கிப்போகும்
உரமாக இந்தவிதி செய்யாவிட்டால்
உண்மையுடன் உமையவளே உரைக்கக்கேளும்
தரமான புத்திரரும் சார்ந்திடார்கள்
சங்கடமும் மனவருத்த மனேகமுண்டாம்
பரிகாச மாகவிதைக் கூறவில்லை
பகுத்தறிந்த மானிடர்க்குச் சித்தியாமே.

22. பரமசிவனுருக்கு உற்சவங்களையும் நடத்தி வைக்கவேண்டும். இவ்வளவு பரிகாரங்களையும் செய்தால் மிக்க பெரிதான முன் ஜன்ம வினைகள் தீரும். பக்தி சிரத்தையுடன் இவைகளைச் செய்யானுகில் அவனுக் கேற்படும் தீங்களை சொல்லுகின்றோம். கேளுங்கள். புத்திரர்கள் தீர்க்காயுளுடன் பிறக்கமாட்டார்கள். வாழ்க்கையில் பல சங்கடங்களும் கவலைகளும் ஏற்படும். நாங்கள் ஏதோ பரிஹாஸமாக இவைகளைச் சொன்னதாக எண்ணவேண்டாம். பகுத்தறிவு படைத்த மானிடர்களுக்குத்தான இவைகளில் நம்பிக்கையுண்டாகும். அவர்களுக்குத்தான் இவைகள பலிக்கவும் செய்யும்.

வேறு

23. கேளுமே இதனை நம்பி ஞானமாய்ச் செய் வானுனல்
ஆளுமே புத்திரர் மேலாய் அருள்செல்வம் பலமாய்க் கூடும்
கோளுடன் பழிகள் நேரா குவலய மதிக்க வாழ்வன்
காளைவா கனன்றன் தேவி கருத்னேம் எழுவர் தாமே.

23. உமாதேவியாரே ! இவைகளை நம்பி மனப்பூர்வமாகச் செய்வானுகில் மிக்க நல்ல பிள்ளைகள் தோன்றுவார்கள். கடவுள் அருளால் கிட்டப் பெற்ற செல்வமும் நீடித்திருக்கும். பழிகள் ஏற்படாமல் உலகத்தோர் மதிக்கும்படி வாழ்வான். இடபவாகனனுடைய பரமசிவனின் தேவியாரே ! இவனுக்கு ஏழு குழந்தைகள் என்று முன்னமேயே சொன்னோம்.

24. இன்னமும் யோகச் செய்கை இயம்புவோம் ருனனந் தொட்டு
மன்னிய ஈரெட் டாண்டு மகிழ்பிதா தமக்கு யோகம்
நன்னய முடனே வாய்க்கும் நாட்டிய பலவீனத்தால்
கன்னலா மொழியி ஞளே காதலி கேட்டிடாயே.

24. இன்னமும் பிறவி முதல் இவனுக்கிருக்கும் யோகங்களைச் சொல்லுகிறோம். இவன் பிறந்தபிறகு பதினாறு வருஷங்கள் இவனுடைய பிதாவிற்கு விசேஷயோகங்கள் நடைபெறும். இனிய வார்த்தைகளைக் கூறும் பார்வதியே ! கேளுங்கள்.

25. மாதுரு கடவுள் கோயில் மகிழ்ந்திடு மர்ச்ச கத்தால்
கோதிலாச் சீவ னங்கள் கொள்ளுவன் பொருளு மெத்த
ஆதியே குருத்துவ மூலம் அணிபொருள் பலமாய் வாய்க்கும்
வாதிலா பலரால் நன்மை வளர்தன தானிய மேலாம்.

25. பரமசிவனுடைய சந்நிதிகளில் செய்த பல அனேக பூஜைகளின் பயனாக ஏற்பட்ட குற்றமில்லாத பலவித சீவனங்களால் ஏராளமாகப் பொருளை அடைவான். இவன் பிதாவினால் பலவிதமான ஆபரணங்கள் இவனுக்குக் கிடைக்கும். மேலும் கபடமில்லாத பல நண்பர்களாலும் நன்மைகளைப் பெறுவான். தனதானிய சமிருத்தி மேன்மேலும் வளரும்.

26. இல்லமும் பலமா யோங்கும் இணையிலாச் செல்வ முண்டாம்
கல்லனும் அடைந்தி டாது கன்றுகா லிகளு முண்டாம்
நல்லதோர் பயிர்பாக் யங்கள் நாடிடும் பணிதி பாத்திரம்
சொல்லிய புகழு மேலாய் சூழ்ந்திடும் பூமி யென்னே.

26. குடும்பமும் பலதுறைகளில் அபிவிருத்தியடையும். செல்வம் நிலைத்திருக்கும். வாழ்க்கையில் இடைஞ்சல்களும் நேரிடா. கால்நடைகளும் விருத்தியாகும். பயிர்த்தொழிலாலும் இவனுக்குப் பாக்கியங்கள் கிட்டும். ஆபரணங்களும் பாத்திரங்களும் நிரம்ப இருக்கும். பூமிகளும் ஏராளமாகச் சேரும். புகழும் அதிகரிக்கும்.

27. செப்பி துள்ளாய்க் கொஞ்சம் சேர்பலன் விரைய முண்டாம்
கப்பிய அரசில போக்குக் கண்டிடும் விருத்தி யாகும்
தப்பித மடைந்தி டாது சாற்றிய பலனுக்கே தான்
ஒப்புள கலவி மேன்மை உரைத்தது தவறி டாதே.

27. மேலேசொல்லப்பட்ட பலன்களில் சில நஷ்டமாகும். இவன் அரசியலில் ஈடுபடுவான். அதனால் மேன்மையையும் அடைவான். நாங்கள் சொன்ன பலன்கள் தப்பா. கல்வியில் மேன்மேலும் விருத்தியடைவான். கல்வியில் தோல்வியை அடையமாட்டான். வெற்றியையே அடைவான். நாங்கள் கூறியது தப்பாது.

28. பளமுள தந்நை தானும் பேசிட மிகவும் நல்லோன்
குலவியே எவர்க்கும் நண்பன் குணமுள னமைதி மேலான்
தலைமையாம் எவரும் போற்ற தான்மிக சிரேஷ்ட மூள்ளான்
உலகினில் புகழுடை யோனுய் உறைந்திடும் செல்வ மேலும்.

28. இவனுடைய பிதாவைப்பற்றிப் பேசுவோமானால், அவன் மிகவும் நல்லவன். உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வித்தியாசமின்றி எல்லோருக்கும் நண்பனுவான். நற்குணங்கள் உள்ளவன். மிகவும் சாந்த சுபாபமுடையவன். தான் வசிக்குமிடத்தில் எல்லோரையும்விட சிரேஷ்டனுகவே விளங்குவான். எல்லோராலும் கொண்டாடப்படுவான். அவனிடம் செல்வம் நிலைத்திருக்கும்.

29. குறைவற வாழ்வா னென்று கூறினே மவனின் செய்கை
அறமுற வவன் குறிப்பில் அறைந்தனம் தெளிந்து காணப்
புரியிதின் மேலா யிந்தப் பிள்ளைக்கு யோகம் சொல்வோம்
நறுமலர்க் கூந்த லாளே நங்கையே கேட்டி டாயே.

29. தந்தை, அவனது வாழ்க்கையில் ஒரு குறைவுமின்றிச் சுகமாக வாழ்வான் எனறு அவனுடைய ஜாதகப்பலனை எழுதும் காலத்தில் தெளிவாகச் சொன்னேம். நறு மலர்கள் அணியப்பெற்றக் கூந்தலாளே ! தேவியே ! அரசனைக்காட்டிலும் அதிக யோகங்களை இவனுக்குச் சொல்லப்போகின்றேம், கேளுங்கள்.

30. சென்ற வவ்வாண்டின் மேலாய்ச் சேர்ந்திடு மீரே மூாண்டும்
குன்றிலாச் சமமே யாகும் கூர்ந்திடும் பலவீ னத்தால்
வென்றிகொள் பூமி பாலும் விருத்திக்கும் தன தானியங்கள்
மனதினில் சமமாய்ச் செல்வம் மருவிடும் சுகமு முண்டாம்.

30. முன் சொல்லப்பட்ட பதினாறு ஆண்டுகளுக்குமேல், கிரஹபலக் குறைவால் பதினன்கு ஆண்டுகளுக்குச் சமபலன்தான். அதாவது முன் நடந்தபலன்களே மேலும் தொடர்ந்து நடைபெறும். பூமியில் வெற்றி கொள்வான். தன தானியங்கள் அபிவிருத்தியடையும். மன நிம்மதிக்குறைவால் முன் போலவே இருக்கும். செல்வம் சேரும். சௌக்கியங்களும் ஏற்படும்.

31. தன்னுடன் பிறந்தா ளேடே தானிதில் கூடி வாழ்வான்
அன்னையே சுகமும் துக்கம் அணிசமம் வெளிப்போக் காகும்
பின்னையும் தையல் மோகம் பெருகிடும் செலவு முண்டாம்
மன்னிய பிணிகள் பீடை வந்திடும் நிவிர்த்தி யாகும்.

31. தன் உடன் பிறந்தவனேடு இந்தப் பதினன்கு வருஷங்கள் வரையில் ஒன்றாக வாழ்வான். சுகமும் துக்கமும் சமமாகவே இருக்கும். வெளியூர்ப் பிரயாணங்களும் ஏற்படும். மேலும் பெண்கள் மோஹம் ஏற்படும். அதனால் செலவும் பெருகும். பலவித நோய்களால் உபத்திரவம் நேரும். சிறிது காலத்திற்குப் பிறகு அந் நோய்கள் நிவிருத்தியாகும்.

32. வரவுடன் செலவு மெத்த வந்திடாச் சமமாய்ச் செல்லும்
உறையிதின் மேல தாக உரைத்திடு மீரெட் டாண்டும்
சிறியவன் தனக்கு யோகம் சுறந்திடும் நயம தாகப்
பரிவுள வணிபத் தாலே பலபொருள் வந்து கூடும்.

32. பதினன்கு வருஷங்களும் வரவு செலவுகள் சமமாகவே இருக்கும். அதற்குமேல் பதினாறு வருஷங்களில் இவனுக்குச் சிறந்த யோகங்கள் வரும். விரும்பிச்செய்யும் வியாபாரத்தினால் பல பொருள்களை அடைந்து நிரம்பச் செல்வமுள்ளவனுவான்.

33. இல்லத்தில் கலக முண்டாய் இயல்பின ரிருவர் வேருய்
வல்லியே சுபமாய் வாழ்வன் பருப்பனும் அதன்பின் பாகம்
நல்லதோர் பலன்கள் மேலாய் நாடிடும் தவறி டாது
மெல்லியே பலனுல் நன்மை மேவிடும் இஷ்டர் நேசம்.

33. வீட்டில் கலகமேற்பட்டு இரு சகோதரர்களும் பிரிந்து தனித் தனியே வாழ்வார்கள். அவ்வாறுப் பிரிந்த பிறகும் இந்த ஜாதகனது யோகம் குன்றுமல் பலதுறைகளிலும் அபிவிருத்தியடையும். மேன் மேலும் நல்ல

பலன்களே இவனுக்கு ஏற்படும். இவ் வார்த்தைச் சிறிதும் தவருது. மேலும் அப்படிப்பட்ட நன்மைகளை அடைந்த பிறகு அவைகள் காரணமாகவே பல பெரியோர்களின் நட்பும் இவனுக்குண்டாகும்.

34. அணிபெறும் செல்வ மேன்மை அணுகிடும் பணிதி பூண்கள்
கனமுள தானிய மெல்லாம் சேருதிடும் கீர்த்தி மேன்மை
இனமுள பூமி சேரும் எவருமே புகழ்ந்து நிற்பர்
குணமுள சுகமும் ஒன்று கூட்டுவன் சுபமாய்த் தானே.

34. செல்வத்தின் மேன்மை விளங்கிடும். பலவித ஆபரணங்களும் இவனுக்குக் கிட்டும். பல தானியங்களும் சேரும். இவனது புகழ் விஸ்தாரத்தை அடையும். வளமான பூமிகள் சேரும். எல்லோரும் இவனைப் புகழ்ந்து வணங்கி நிற்பார்கள். நல்ல சுகந்தரும் வீடு, நிலம், தோட்டம், பசு முதலிய பொருளை சுலபமாகச் சேர்ப்பான்.

35. வித்தகி யிவ்வாண் டுள்ளாய் வினைபொருள் சிலவே சேதம்
புத்திரர் நாச முண்டாம் புகன்றனம் சூதம் நேரும்
சக்தியே கள்ள ராலே சார்சில பொருளும் நஷ்டம்
நத்திய அலைச்சல் மெத்த நாடிடும் அரசரால் போகம்.

35. தேவியே! முன் சொன்ன ஆண்டுகளுக்குள் சில கெட்டப் பலன் நேரும். அவையாவன:—வீண் பொருள்கள் நஷ்டமும், புத்திர மரணமும் ஏற்படும். பந்து வர்க்கங்களில் மரணத்தால் தீட்டு வரும். கள்ளர்கள் இவனுடைய பொருள்களைக் கொள்ளையிடுவார்கள். வீண் அலைச்சல்களும் ஏற்படும். ஆனால், அரசாங்கத்தாரால் சிறிது சுகம் உண்டாகும்.

36. செப்பிய வெல்லா மவ்வாறு சிறப்புடன் நிவிர்த்தி யாகும்
ஒப்புடன் முன்சல் லியங்க ளுற்றிடும் இவ்வாண் டின்மேல்
கப்பிய வேரேன் புக்கு மகன்பொரு ள்மேல்மே லுண்டு
இப்பிலா பலத்த யோகம் இலகிடும் தவறி டாதே.

36. சொல்லிய சில கெட்ட பலன்கள் நீங்கும். முன் ஏற்பட்ட கடன்களும் நிவிர்த்தியாகும். சம பலனைத் தரும். பதினான்கு ஆண்டுகளுக்குமேல் பொருள் மேன்மேலும் சேரும். பலமான யோகங்கள் தவருமல் உண்டாகும்.

37. பதிபெறும் செல்வ மிக்க பலித்திடு மன்னன் போல
நிதியது பலமாய்க் கூடும் நிலைத்திடு செல்வ மேன்மை
சதமுள ஆண்டுள் ளுற்ற சல்லிய பிணைகள் தீரும்
கோதியு மேலு நன்மை கூடிடும் சுபிட்ச மாமே.

37. அரசர்களுடைய செல்வம்போல இவனுடைய செல்வமும் ஓங்கி வளரும். அச் செல்வமும் இந்த ஜாதகனிடம் நிலைத்திருக்கும். இதற்கு முன் ஏற்பட்ட சல்லியங்களும் விலகும். நன்மைகள் இவனுடைய முயற்சியின்றியே இவனை வந்தடையும். குடும்பம் சுபிட்சம் அடையும்.

38. இதன்மேலா யிந்தப் பாலன் இலகிய ஆயுள் மட்டும்
சதியிலாத் தொழிலு மோங்கச் சாரமதி பிறைபோல் செல்வம்
பதிவொடு பலத்து லோங்கப் பலமுடன் வாழ்வா னென்று
அதிவித இந்த நாலில் அறைந்தனம் ரிஷிக ளம்மா.

38. மேலும் இந்த ஜாதகன் ஆயுட்காலம் வரை [முப்பத்தைந்தாவது பாட்டில் சொல்லப்பட்டத் தீமைகளின்றி] தொழிலைச் சிரத்தையுடன் நடத்துவான். வளர்பிறை சந்திரன் போல இவனது தொழில் வளரும். செல்வமும் விருத்தியாகும். ஸ்திரமாகப் புகழ்பெற்று நல்ல ஆரோக்கியத்துடன் சுகமாக வாழ்வான். ரிஷிகளாகிய நாங்கள் இந்நூலில் பற்பல யோகங்களைச் சொல்லியிருக்கின்ரேம். [அவைகள் பொய்யாகா என்பது கருத்து.]

39. முன்னுளின் ஊழி தீர்ந்தால் முறைப்படி நடக்கும் சொல்லும்
இன்னமேல் தந்தை கால மியம்பினே மொருபா னேழு
வின்னமாய் மாய்வா னுகும் விளம்பிய முப்பா னேழுன்
அன்னையும் மாய்வா ளாகும் அறைந்தது பிசகி டாது.

39. முன்ஜன்ம வினைகள் நாங்கள் சொன்ன [சேதுவில் நீராடுதல், அரசமரப் பிரதிஷ்டை முதலிய] பரிகாரங்களால் நீங்கினுல் நற்பலன்களும் முறைப்படி நடைபெறும். இதற்குமேல் தந்தையின் மரணகாலத்தைக் கூறுகின்ரேம். இவனது பதினேழாவது வயதில் இவனுடைய தந்தை மரண மடைவான். தாய், இவனுடைய முப்பத்தேழாவது வயதிற்குள் இறப்பாள். இவைகள் பிசகாமல் நடைபெறும்.

40. இவனுடைக் கண்ட காலம் இயம்புவோ மினி மேலாக
அவமுடன் சிறுகண் டங்கள் அணுகிடும் நிவிர்த்தி யாகும்
கவலையா மிவனி னுயுள் கழறுவோம் எண்பானுண்டுள்
உவமுள பூர்வ பாகம் உரைத்திடு மதற்குத் திங்கள்.

40. இவனுடைய மரணகாலத்தைச் சொல்லுகின்ரேம். இவனுக்குச் சிறிய கண்டங்கள் பல தோன்றும். ஆனால், உடனேயே அவைகள் நிவிருத்தியாகும். இவனுடைய எண்பதாவது வயதில் கவலையைத் தரும் கண்டம் [மரணம்] ஏற்படும். உத்திராயணத்தில்,

41. சென்றிடும் தசமி யந்நாள் சேருவ னும்பர் நாடு
தோன்றிடும் இவன்பின் ஜென்மம் சொல்லுவோம் காசி பக்கல்
வென்றிகொ ளிதுவே யாக விளைசட மெடுத்து அந்நாள்
நன்றுசேர் செல்வம் ஞானம் நல்கியே வாழ்வா னுமே.

41. கிருஷ்ண பக்ஷ தசமி திதியில் இவன் சுவர்க்கலோகம் ஏகுவான். இவனுக்குப் பின் ஜன்மத்தைப் பற்றியும் சொல்லுவோம். இவன் அடுத்த ஜன்மத்தில் காசி க்ஷேத்திரத்தில் பிராம்மண குலத்திலேயே பிறந்து, நல்ல செல்வம் படைத்தவனுகவும், ஞானம் பெற்றவனுகவும் சிறப்பாக வாழ்க்கையை நடத்துவான்.

ஜாதகம் 9.

1. அம்புலி சனியும் சீயம் அரவுசெய் நந்தி யாகப்
புந்திபான் மேடமாகப் புகர்குரு சாடி யாகப்
பந்தமாய்ச் சிகியும் தேளில் பகருவோம் கடகம் ஜன்மம்
இந்தவாறு கிரகம் நின்றால் இயம்புவீர் பலனைத் தானே.

	புதன் சூரியன்	ராகு செவ்வாய்	
சுக்கிரன் குரு	இராசி சக்கரம்		இலக்கினம்
			சந்திரன சனி
	கேது		

கர வருஷம் சித்திரை மாதம் 8-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை நடுப் பகலில் ஜனனம்.

ஆங்கிலத் தேதி 19-4-1891.

நவக்கிரஹங்களின் பாதசாரங்கள்.

அச்வனி 3-ல் சூரியன். மகம் 4-ல் சந்திரன. கிருத்திகை 4-ல் செவ்வாய. கிருத்திகை 1-ல் புதன். சதயம 4-ல் குரு. பூரட்டாதி 3-ல் சுக்கிரன். பூரம் 2-ல் சனி. ரோகிணி 2-ல் ராகு. அனுஷம் 4-ல் கேது.

1. சந்திரன் சனி சிங்கத்திலும், ராகு செவ்வாய் ரிஷபத்திலும், புதன் சூரியன் மேஷத்திலும், சுக்கிரன் குரு கும்பத்திலும், கேது விருச்சிகத்திலு மிருந்து இலக்கினம் கடகமுமானால் இவ்வாறு கிரஹ நிலையில் பிறந்த குழந் தையின் பலன்களைச் சொலவீர்களாக, எனப் பார்வதி கேட்கலுற்றாள்.

2. உமையவள கேட்கும் போது உரைக்கிறார் பராசர் தாமும்
அமைந்திடு மாண்பால் ஜன்மம் அறைகிறோம் பிறந்த இல்லம்
எமனுத்திர வாடை யாகும் இந்திரன் வாச லாகும்
நவமதில் தெனகீழ் மாரி நற்காளி கணேசன் உத்திரம்.

2. உமாதேவி இவ்வாறு கேட்டதற்குப் பராசரர் பதில் கூறுகின்றார். மேலே சொன்ன கிரஹ நிலையில் பிறந்த குழந்தை ஆணாகும். வீடு தெற்கு வடக்கில் அமைந்திருக்கும். வீடு கீழ்த்திசையை நோக்கி இருக்கும். தென் கிழக்குத் திசையில் மாரியம்மன் ஆலயமும், வடதிசையில் பத்ரகாளி கோயி லும், விநயகர் ஆலயமும் இருக்கும்.

3. மேற்கினில் ஈசன் கன்னி ரிவிலாக் கோஷ்ட முண்டு ?
தீர்க்கமா மாழி யுண்டு சிறந்ததோர் கிரியு முண்டு
ஆர்க்கவே சிற்றூர் தன்னில் அவன் கத்திரிய குலத்தி லேதான்
மார்க்கமாய்க் கூரை வீட்டில் வருவனு மென்று சொன்னோம்.

3. மேற்குத் திசையில் ஈசன் கோயிலும், இடிந்த ஸப்த கன்னிமார் ஆலயமும் ஒரு நீர் நிலையும், ஒரு மலையும் உண்டு. அப்படிப்பட்டதொரு சிறிய ஊரில் க்ஷத்திரிய குலத்தில் கூரை வீட்டில் ஜனிப்பான்.

4. தந்தைதாய் யோகம் தானும் ஜாதகன் துணைவர் யோகம்
பந்தமாய்க் களத்திர புத்திரர் பாரினில் முன்பின் ஜன்மம்
வந்தவன் யோகச் செய்கை வரைகிறோ மிந்நூல் தன்னில்
கந்தனைப் பெற்ற மாதே கழறின மொழி குன்றாது.

4. இவனுடைய தந்தை தாய் சகோதரர்கள் களத்திரம் புத்திரர் இவர்களைப்பற்றியும், இவனது முன்பின் ஜன்மங்களைப்பற்றியும், இவனுக் கேற்படப்போகும் யோகங்களைப்பற்றியும் இந்த நூலில் சொல்லப்போகின் றோம். சுப்பிரமணியக் கடவுளைப்பெற்ற தாயே! எங்கள் வார்த்தை தப்பாது.

5. இவன்பிதா குணத்தை யாங்கள் இயம்புவோம் இருநி றத்தன்
நவனியில் சமதே கத்தான் நன்முக வடிவு முள்ளான்
அவனியில் சீல மில்லான் அதிர்ஷடவா னலைச்ச லுள்ளான்
தவமுடை யோர்க்கு அன்பன் தயாளமாங் குணத்த னுமே.

5. இந்த ஜாதகனின் தந்தையினுடைய குணங்களைச் சொல்லுகிறோம். கருத்த நிறத்தவன். சமமான தேகம் வாய்ந்தவன். முகத்தின் அமைப் பும் வெகு கவர்ச்சிகரமாக இருக்கும். அதிக நல்லொழுக்கமில்லாதவன் அதிர்ஷ்டமுள்ளவன். வீண் அலைச்சல்களும் ஏற்படும். தவமுடைய பெரி யோர்களிடத்தில் பக்தி உடையவன். தயைக் குணம் வாய்ந்தவன்.

6. பித்தகா ரகமாம் தேகம் பல முளான் மதுக்க லிஷ்டன்
நித்தியம் சுகிபொ சிப்பன் நிதானமாய் வார்த்தை கூறுவன்
புத்திமான் செட்டுச் செய்வன் புண்ணிய மனத்த னுகும்
எத்திசைக் கீர்த்தி கொள்வன் இடறுக ளனந்த முள்ளான்.

6. சரீரம் பித்தகாரகமுள்ளது. ஆயினும் உடல் வலிமை உடையவன். மதுபானத்தில் ஆசை உள்ளவன். எப்பொழுதும் சுகங்களை அனுபவிப்பான். மிகவும் ஜாக்கிரதையாக வார்த்தைகளைச் சொல்லும் இயல் புள்ளவன். சிறந்த புத்தி வாய்க்கப் பெற்றவன். வியாபாரம் செய்வான். எல்லோருக்கும் நன்மைகளையே நினைப்பான். எல்லா இடங்களிலும் இவனுக்குப் புகழ் உண்டாகும். இவனுக்கு வாழ்க்கையில் அதிக இடையூறுகளும் ஏற்படும்.

7. ஆள்கார ருடைய னுவன் அநேகமாய் வணிபம் செய்வன்
நீள்புவி சேர்ப்பா னுகும் நிகர்பந்து மெச்ச வாழ்வன்
வாள்விழி யார்கள் நேயன் வண்டிவா கனமு முள்ளான்
காலிகள் விருத்தி யுள்ளான் காதலி மேலுங் கேளே.

7. அனேக சேவகர்களுக்கு யஜமானனுக் விளங்குவான். பெரும்பாலும் இவனது ஜீவனம் வியாபாரத்தினுல் நடைபெறும். அதிக பூமிகளைச் சேர்ப்பான். உறவினர்கள் வியந்து கொண்டாடும் வகையில் வாழ்க்கையை நடத்துவான். பெண்களிடம் மோஹம் கொண்டவன். வண்டி வாஹனங்களும் இவனுக்கு இருக்கும். எருதுகளை அபிவிருத்தி செய்வான். பார்வதி தேவியே! கேட்டருள வேண்டும்.

8. மூலநோ யுடைய னுவன் முன்கோபம் பொறுமை யுள்ளான்
பால்பாக்கிய மல்ப முள்ளான் பந்துவை ஆத ரிப்பன்
சாலவே துணைவர் தம்மைச் சாற்றவே ஆண்பால் காணும்
வேல்விழி பெண்பால் மூன்று விளங்கிடும் தீர்க்க மாகும்.

8. மூலநோய் இவனைப் பாதிக்கும். முன்கோபி. ஆனுல் பொறுமைக் குணமும் இவனுக்குண்டு. சிறிது பால் பாக்கியம் உள்ளவன். உறவினர்களை ஆதரிப்பான். அவனுடைய சகோதரர்களைப்பற்றி ஆராய்ச்சி பண்ணும் காலத்தில் ஆண் சகோதரர் இல்லை என்று ஏற்படுகிறது. ஆனுல் சகோதரிகள் உண்டு. அவர்கள் மூவர். அவர்கள் எல்லோரும் தீர்க்கமாக வாழ்வார்கள்.

9. துணைவிகள் சேதி தன்னைச் சொல்லுவோம் மூத்த மாதர்
கனமுட னிவனில் சென்று கன்னியும் வாழ்வா ளாகும்
அணைவரன் சுகமு மின்றி மதலைக ளில்லா ளாகி
இணையிலாப் பெருமை பூண்டு இவளதி காரம் பெற்று ;

9. அந்தச் சகோதரிகளைப் பற்றிக் கூறுகின்றேம். மூத்த சகோதரி கணவன் இன்றியும், குழந்தைகள் இல்லாமலும் இவன் விட்டிலேயே வாழ்வாள். அதிகச் செல்வமுள்ள அவள், இவன் வீட்டில் விசேஷ அதிகாரங்களைச் செலுத்திக்கொண்டு ;

10. இவனுடைக் குடும்பந் தன்னில் இன்பமாய் வாழ்வா ளாகும்
அவளுடை இளைய மாது அவளுமே இவன்பால் சென்று
கவனமாய் வாழ்வா ளாகும் கன்னிக்கு மதலைத் தோஷம்
நவனியில் அவர்க ளாலே நாயகன் யோக வானும்.

10. இவனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவளாக ஸ்திரமாக அங்கேயே வாழ்வாள். அவளுக்கு அடுத்த சகோதரியும், புத்திரதோஷம் இருப்பதால்; பிள்ளைகள் இல்லாதவளாய், இவனது குடும்பத்தில் ஒற்றுமையாக வாழ்வாள். அவ்விரு சகோதரிகளாலும் இவனுக்கு விசேஷ யோகங்கள் ஏற்படும்.

11. இப்படி யிருக்குந் தந்தை இவனுக்கு உதித்த பாலன்
செப்புவோம் பலனை யாங்கள் தீரமுள் மனத்த னுகும்
ஒப்புடன் கல்வி கொஞ்சம் உத்தமன் மர்ம முள்ளான்
மைப்படி கண்ணுள் மோகன் நிலம் சேர்ப்பா மானுமே.

11. இப்படிப்பட்ட தந்தைக்கு இந்தக் கடகலக்கின பாலகன் பிறந்திருக்கிறன். இப்பொழுது இந்தப் பாலனுடைய பலன்களைக் கூறுகின்றேம். கல்வி அறிவுள்ளவன். சிறிது கபடமுள்ளவன். பெண்களிடம் அதிக மோஹம் உடையவன். பெரிய நிலங்களையும் சேர்ப்பான்.

12. அடிமையா ளுடைய னுவன் அனேகமாய் வணிபம் செய்வன்
கடினமா யுரைக்க மாட்டான் காரக தேக முள்ளான்
படிமிசை போற்ற வாழ்வன் பந்துவுக் கினிய னுவன்
நடமிடு மாடு விருத்தி நவதானிய மதிகம் சேர்ப்பான்.

12. நம்பிக்கை வாய்ந்த அனேக சேவகர்களை உடையவன். தந்தையைப்போலவே இவனும் வியாபாரத்தினுல் ஜீவிப்பான். கொடிய வார்த்தைகளைப் பேசாதவன். இவனது தேஹம் காரக தோஷம் வாய்ந்தது. எல்லோராலும் கொண்டாடப் படுவான். பந்துக்களுக்குப் பிரியமானவன். கால்நடைகளை விருத்தி செய்வான். நவதானியங்களையும் சேமிப்பான்.

13. தந்தையி னுஸ்தி யில்லான் தன்தந்தை துணைவி யாலே
சந்ததம் ஆஸ்தி சேரும் பாக்கிய மிகவே சேர்ப்பன்
வந்தவர்க் கன்ன மீவன் வாக்குகள் தப்பா னுகும்
முந்திய தெய்வ பக்தி முயற்சியாய் வாழ்வா னுகும்.

13. தந்தையின் சொத்து இவனுக்கு இராது. ஆனுல் தந்தையின் சகோதரி (அத்தை) யால் எப்பொழுதும் சொத்து சேர்ந்து கொண்டே இருக்கும். மிக்க பாக்கியவானுவான். தனது வீட்டை நாடி வந்தவர்களுக்கு அன்னம் இடுவான். சொன்ன வார்த்தைகளின் படியே நடப்பான். சிறந்த தெய்வபக்தி உள்ளவன். தனது முயற்சியாலே சிறந்து வாழ்வான்.

14. நடையது சொகுசு முள்ளான் நாட்டுவோம் தரள தந்தம்
படைகளை ஜயிக்க வல்லன் பாவையர் மோக வானும்
தடமது இரண்டு முள்ளான் சந்தோஷ மனத்த னுகும்
கடினமாம் தேக முள்ளான் காதலி மேலுங் கேளே.

14. அழகிய நடையை உடையவன். முத்துக்களைப் போன்ற பற்களை உடையவன். சேனைகளை ஜயிக்கும் வல்லமை வாய்ந்தவன். பெண்களிடம் மோகம் கொண்டவன். சந்தோஷம் இவன் மனத்தை விட்டகலாது. உடல் கட்டாக இருக்கும். அன்னையே! மேலும் சொல்லுகிறேம். கேளும்.

15. இன்னவன் கரத்தி லேதான் இலகிடும் பத்ம ரேகை
தன்னிலே சுழியு முள்ளான் தயாளமாங் குணத்த னுகும்
உன்னித சித்திர வீடு உத்தமன் செய்வா னுகும்
அன்னிய ராஸ்தி சேரும் அதிகமாய் யோகம் வாய்க்கும்.

15. இப்படிப்பட்ட ஜாதகனின் கரத்தில் பதுமரேகை விளங்கிடும். கையிலே சுழியும் இருக்கும். தயைநிரம்பிய நெஞ்சம் படைத்தவன். அழகிய விசித்திரமான (புதுவிதமான) வீட்டைக் கட்டுவான். பிறர் சொத்தும் இவனை வந்தடையும். விசேஷ யோகங்களும் நடைபெறும்.

16. இவனுடைத் துணைவர் தம்மை யிசைக்கிறே மாண்பால் காணும்
அவனியில் பெண்பால் மூன்று அறைகிறேம் தீர்க்க மாக
நவமதில் ஒன்று நஷ்டம் நாட்டுவோம் இவனுக் கேதான்
சிவனிடைப் பாகத் தாளே செப்புவோம் கேளு மம்மா.

16. இவனுடைய சகோதர வருக்கத்தைப்பற்றிப் பேசுவோமானல் ஆண் சகோதரர் ஜனிப்பதற்குக் காரணமே இல்லை. ஆனல் மூன்று சகோதரிகள் ஜனிப்பார்கள். அவர்கள் நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள். ஆயினும் ஒரு சகோதரி சிறிது காலத்திற்குப் பிறகு நஷ்டமாவாள். [காணமல் போவாள் என்று சொல்லலாம்.] சிவ பிரானின் இடது பாகத்தில் விளங்கு பவளே ! கேளுங்கள்.

17. உதித்தவன் மன்றல் கால முரைக்கிறே மிருபா னென்றுள்
சதியிலாக் கிழக்குத் திக்கில் தாயின்தன் வர்க்கம் தன்னில்
மதிநிகர் மாது சேர்வாள் மங்கைக்குப் புத்திர பாகம்
விதியினல் முன்னூ தன்னல் விளங்காரே புத்திர ரென்றோம்.

17. இந்த ஜாதகனுடைய கலியாண காலத்தைச் சொல்லுகின்றோம். இருபத்தொன்றுவது வயதிற்குள் விவாஹம் நடைபெறும். பெண், கிழக்குத் திசையில் தாயின் பந்து வருக்கத்தில் ஜனித்திருப்பாள். அவளுக்கு இந்த ஜாதகனின் முன்ஜன்ம வினை காரணமாகப் புத்திரர் விளங்கமாட்டார்கள் என்று சொல்லுகிறோம்.

18. முனிவரிவ் விதமாய்ச் சொல்ல மொழிகுவார் விசுவா மித்திரர்
அனையவே புத்திர தோஷம் அறைந்திட்டீர் அந்தச் சங்கை
கனமுட னுரைப்பீ ரென்னக் கௌசிகர் கேட்கும் போது
இணையிலாப் பராசர் சொல்வார் ஈசுவரி கேளு மென்றுர்.

18. பராசர முனிவர் இவ்வாறு கூறியவுடன், விச்வாமித்திரர், பராசர முனிவரே ! புத்திர தோஷ முண்டு என்று சொன்னீர். அதற்கான காரணங்களைச் சொல்லுவீராக என்று கேட்டார். இவ்வாறு விசுவாமித்திரர் கேட்டதற்குப் பராசரர் பதிலுரைக்கின்றுர்.

19. அஞ்சினில் கேது நிற்க ஆரலு மதனைப் பார்க்கத்
துஞ்சிடும தலையென்றோம் சொல்லுவோ முன்னூம் தன்னை
தஞ்சமாய்த் தவளை தென்பால் சாற்றுவோம் பேரூர் தன்னில்
மிஞ்சிய மிலேச்ச வம்சம் வித்தக னுதித்தா னென்றோம்.

19. புத்திர பாவமெனப்படும் ஐந்தாமிடத்தில் கேது இருக்க, அந்த கிரஹத்தைச் செவ்வாய்ப் பார்ப்பதால் புத்திர தோஷம் உண்டு. அதற்குக் காரணமாகிய முன்ஜன்ம வினையைச் சொல்லுகின்றோம். தவளேச்வரத்திற்குத் தென்திசையில் பெரிய ஓர் ஊரில் இவன் முன்ஜன்மத்தில் மிலேச்ச [துருக்க] வமிசத்தில் பிறந்திருந்தான்.

20. ஜெனித்துமே பெருமை பூண்டு செட்டுக்க ளதிகம் பெற்று
வனிதையு முள்ளனுகி மானில மதிகம் பெற்றுக்
கனமுள தனங்கள் உண்டாய்க் கியாதியும் அதிகம் பெற்று
இனங்களை யாத ரித்து அவனுமே வாழு நாளில் ;

20. அப்பொழுது இவன் மிக்க பெருமைகளையடைந்து, அதிக வியாபாரம் செய்து, மனைவியையும் அடைந்து, அதிகப் பூமிகளையும் பெற்றுத் தனம் உள்ளவனுகவும் விளங்கினன். தன் இனத்தார்களையும் ஆதரித்து வந்தான். அவ்வாறு சிறப்பாக வாழும் நாளில் ;

21. அந்நகர் நதியின் பக்கல் அணுகிய அரசின் மேலே
தந்தியும் நாகம் நிற்கும் தானவர் வாச மாகும்
மந்திரம் ஓதும் வேத மறையவர் பூசை செய்வர்
இந்தவா றிடத்திலே தான் இரவினி லேது செய்தான்.

21. அந்த ஊரின் நதிக்கு அருகில் அரச மரமுண்டு. அந்த மரத்தி னடியில் ஸ்ரீவிநாயகர் வாசம் செய்தார். அங்கு நாகப் பிரதிஷ்டையும் செய்யப்பட்டிருந்தது. வேதம் ஓதும் அந்தணர்கள் பூசையும் செய்து வந்தார்கள். இப்படிப்பட்ட புனிதமான இடத்தில் இவன் என்ன பாவம் செய்தான் ; தெரியுமா ?

22. விதவையை மரத்தின் மேலே வித்தகன் போகம் துய்த்தான்
அதனலே கருவும் தங்கி அநேகமா யவிழ்ந்த மீயச்
சதியினல் கருவு நீங்கிச் சத்தியும் மரண மானுள்
அதுவொரு தோஷ மாக அணுகிற்று அதுவல் லாமல் ;

22. கணவனற்ற ஒரு பெண்ணுேடு அந்த மரத்தின் மேலே போகம் செய்தான். அதனல் அவளுக்குக் கருவேற்பட, அதை அழிப்பதற்காக இவன் மருந்தைக் கொடுக்க கருவும் அழிந்தது, அந்தப் பெண்ணும் இறந்தாள். இஃது ஒரு தோஷமாகும். இதுவு மன்றி மற்றெரு பாவமும் ஏற்பட்டது.

23. மற்றெரு நாளி லேதான் மனையினில் நாகம் தானும்
உற்றது அதனைக் கண்டு உத்தம னடித்தா னம்மா
குற்றங்கள் அதனு லேதான் கூறுவோம் புத்திர தோஷம்
சுற்றமாய் ஜனனந் தோறும் துலங்காது புத்திர ரென்றோம்.

23. வேறு ஒரு நாளில், இவன், தனது வீட்டில் ஒரு சர்ப்பம் இருக்கக் கண்டு, அதை அடித்தான். அந்தக் குற்றமும் இவனைச் சார்ந்தது. அவ்விரு குற்றங்களால் ஜன்மந்தோறும் அவனுக்குப் புத்திரர்கள் பிறக்க மாட்டார்கள் என்று சொன்னேம்.

24. அச்சென்மம் தன்னி லேதான் அவனுக்குப் புத்திர ரின்றி
உச்சித தக்ஷிணத்தில் உறைந்தனன் தீர்த்தம் தோய
மிச்சமாய் முசல்மா னுக்கு உயர்ச்சியாய் கந்தங் கொண்டு
இச்சையா யபிஷே கித்தான் விலசிற்று விதவை தோஷம்.

24. அந்த ஜன்மத்திலே மேற்சொன்ன தோஷத்தினல் புத்திரரின்றி தென்திசையிலுள்ள புண்ணிய தீர்த்தங்களுக்குச் சென்றுநீராடினன். கடவுளுக்கு சந்தனம், புஷ்பம், ஊதுவத்தி முதலிய வாசனை திரவியங்களைச் சமர்ப்பித்தான். அபிஷேகமும் செய்வித்தான். ஆகையால் விதவை சம்பந்தத்தினலேற்பட்ட பாவம் விலகிற்று.

25. மறுபடி உள்ளூர் மீண்டு மிகப்பெரி யோர்க்கு அன்னம்
பெருமையா யளித்து வந்த புண்ணியன் மரண மாகித்
திறமையா யிக்கு லத்தில் ஜனித்தவ னிவனே யென்றோம்
அருமையா யிச் சென்மத்தில் அறைந்திட்டோம் புத்திர தோஷம்.

25. மறுபடி தன் ஊருக்கு வந்து, பெரியோர்களுக்குச் சிரத்தையுடன் அன்னமளித்தான். பிறகு மரண மடைந்து, முன்ஜன்மத்தின் புண்ணியத்தின் பயனுக இக்குலத்தில் ஜனித்தான். ஆகவே ஒரு பாவம் விலகினும், மற்றெரு பாவம் விலகாததால் இந்த ஜன்மத்திலும் இவனுக்குப் புத்திரதோஷமுண்டு.

26· புத்திர தோஷம் தீரப் புகலுவோம் சாந்தி ஒன்று
சித்துமா யரசின் கீழே சிறப்பான நாகம் செய்து
உத்தமர் பிராமணருக்கு உண்டியு மளிப்பா னுகில்
வெற்றியாய்ப் புத்திரர் தானும் விளங்கிடும் என்று சொன்னேம்.

26. அந்தப் புத்திர தோஷம் நீங்க ஒரு சாந்தியைச் சொல்லுகின்றேம். ஓர் அரசமரத்தின் கீழே நாகப் பிரதிஷ்டையைச் சிறப்பாகச் செய்து, உத்தம பிராமணர்களுக்கு அன்னமும் அளிப்பானுயின் மேற்சொன்ன பாவம் நீங்கிப் பிள்ளைகளும் பிறந்து, புத்திரர்களும் இவனும் சுகமாக வாழ்வார்கள்.

27. சாந்தியும் செய்யா னுகில் தரிக்காரே புத்திரர் தாமும்
சாந்தியும் செய்வா னுகில் தரித்திடும் மதலே யென்றேம்
கூர்ந்திடு மாண்பா லொன்று குறித்தனம் பெண்பால் ரண்டு
சேர்ந்திடு தீர்க்க மாகும் செல்வியே மேலுங் கேளே.

27. இவன் மேற்சொன்ன சாந்திகளைச் செய்யாவிடில் தோஷம் நீங்காது. ஆகையால் சந்ததியும் உண்டாகாது. பரிகாரங்களைச் செய்தால் பாவம் போய்ப் புத்திரர் பிறப்பார்கள். ஒரு புத்திரனும், இரண்டு புத்திரிகளு முண்டு. அவர்கள் எல்லோரும் நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள். தேவியே ! மேலுங் கேளுங்கள்.

28. இவன்பிதா முன்ஜன் மத்தை இசைக்கிறேம் சோழ நாட்டில்
அவனியில் வன்னிய வம்சம் அவனுமே யுதித்து மேலும்
தவமுடை யோர்க்கு அன்னம் தானவ னளித்து வந்தும்
நவனியில் கீர்த்தி பெற்று நாடெலாம் கீர்த்தி கொண்டான்.

28. இந்த ஜாதகனுடைய தந்தையின் முன்ஜன்மத்தைச் சொல்லுகின்றேம். சோழநாட்டில் வன்னிய வமிசத்தில் உதித்திருந்தான். அப்பொழுது தவமுடைய பெரியோர்களுக்கு அன்னதானம் செய்து வந்தான். நல்ல புகழ்படைத்தவனுகவும் இருந்தான்.

29. மனைவிமைந் தரு முண்டாகி மகிழ்ச்சியாய் வாழு நாளில்
அனையவே ஊழி தானும் அறைகிறே மிவனுக் கேதான்
கனமுள மார்க்கந் தன்னில் கள்ளரால் பயந்து மேதான்
வனிதையர் பிரம்ம மாது வந்தன ளிவனுங் கொண்டு ;

29. மனைவி மக்களுடன் மகிழ்ச்சியோடு வாழும் காலத்தில் இவனுக் கேற்பட்ட தொரு நல்வினையைச் சொல்லுகின்றேம். ஒரு நாள் இரு பிராம்மண மாதர் வழி நடந்து செல்லும்போது கள்ளர்களைக் கண்டு பயந்து இவனை வந்தடைந்தார்கள். இவன் அவர்களை ஏற்றுக்கொண்டு ;

30. ஆதரித் தாஞ மந்த அதிதியா மிருவரைத் தான்
வேதனை யில்லா தாகி வஸ்திரம் பொருளு மீந்து
நீதியா யுபச ரித்தான் நிமலியர் சொல்லு கின்றுர்
தீதிலா மறுஜன் மத்தில் துணைவியா யுதித்து மேதான் ;

30. இவன் அவ்விரு அதிதிகளுக்கும் பாதுகாப்புத் தந்து, பயத்தைப் போக்கி, வஸ்திரங்களையும் பொருள்களையும் கொடுத்து, தருமசிந்தையோடு நன்ருக உபசரித்தான். ஆகையால் அவர்கள் மனம்குளிர்ந்து சொன்னுர்கள். அஃதாவது மறு ஜன்மத்தில் உனக்குச் சகோதரிகளாகப் பிறந்து ;

31. எங்களின் ஆயுள் மட்டும் இன்பமா யுன்பால் சென்று
துங்கமா யூழி யங்கள் செய்கிறே மென்று சொல்லித்
தங்கிய மாதுர் தானும் தக்ஷிணம் தீர்த்தம் தோய்ந்து
பங்கமில் லாம லேதான் பரங்களும் உள்ளூர் சென்றுர்.

31. எங்கள் ஆயுள்காலம் வரையில் உன்னிடமே ஸ்திரமாக வசித்து, உனக்கு வேண்டிய ஊழியங்களை அன்போடு செய்கின்றேம் என்பது தான் அது. இவ்வாறு சொல்லிவிட்டுத் தென் தேசம் சென்று, அங்குள்ள புண்ணியத் தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து, ஒருவித இடையூறுமின்றித் தங்கள் ஊர் திரும்பிச் சென்றனர்.

32. ஆகையா லிச்சென் மத்தில் அம்மாது ரிருவ ருந்தான்
பாகமா யிவன்பால் சென்று பாகமாய் வாழ்வராகும்
மோகமாய் முன்ஜன் மத்தில் முனிவர்கள் மனைவி யோடு
ஏகமாய்த் தீர்த்தம் தோய்ந்து ஏகினு ரென்று சொன்னேம்.

32. அவ்விரு மாதர்களும் அவனிடமிருந்து உபசாரங்களைப்பெற்று மனமுவந்து சொன்னபடியே இந்த ஜன்மத்தில் இவனுக்குச் சகோதரிகளாகப் பிறந்து, இவனிடமே நிலைபெற்று வாழ்கிருர்கள். முன்ஜன்மத்தில் உபகாரத்தைப் பெற்றபடியாலேயே அவ்விரு சகோதரிகளும் இந்த ஜன்மம் முழுவதும் இவனுக்கிடைவிடாது உழைக்கின்றுர்கள். இவனுடைய முன் ஜன்மத்தில் ஓர் அரனடியாரோடு இவன் மனைவி தனியாக நீராடி வந்தாள்.

இப்பாட்டில் இவன் சகோதரனற்றவனுக இருப்பதற்கான காரணத்தைக் கூறுகிருர்.

33. அந்தவோர் காலந் தன்னில் அம்முனி மதுபு சித்துச்
சொந்தநன் மனைவி யோடு சேர்ந்ததால் விரோத முற்று
நிந்தையு மதிகம் சொல்லி நேர்மையா யடித்தா னப்போ
மைந்தனு மவரைக் கண்டு மனமது கோபமுற்றுன்.

33 அக்காலத்தில் அந்தச் சிவனடியார் லாகிரி வஸ்துக்களைப் புசித்து, மதிமயங்கி, தன் மனைவியோடு தனித்துப் பேசிக்கொண்டிருப்பதைப்பார்த்து, இவன், மிகவும் மனம் கொந்தளித்து, அவரிடம் விரோதம் கொண்டு, அவரைப் பலவாறு நிந்தித்து, அடிக்கவும் செய்தான்.

34. பரதேசி தன்னை யேதான் பலபல நிந்தை சொல்லி
அரனடி யென்றெண் ணுமல் அடித்தனன் முனிவன் தன்னைத்
திறமையாய் முனிவர் தாமும் செப்புவார் சாபம் தானும்
உரிமையாய் மறுஜன்மத்தில் ஒண்டியா யுதித்து வாழ்வாய்.

34. அந்தப் பரதேசியை நிந்தித்தும் பரமசிவனின் அடியார் அவர் என்ற மரியாதையும் பக்தியுமில்லாமலும், அவரை அடிக்கவும் செய்தான். இவைகளால் மனங்கலங்கிய முனிவர் சாபமிட்டார். அஃதாவது, மறுஜன் மத்தில் நீ சகோதரரின்றி, தன்னந்தனியே வாழ்வாய்.

35. என்னைப்போல் மதுபு சித்து எவர்களும் நகைக்க ஜன்மம்
தன்னிலே அவமான முற்றுச் சதிருடன் வாழ்வா யென்றுர்
உன்னித முனிவர் கூறி உறைந்தனர் நகரம் விட்டுப்
பன்னிய ஊழி தானும் பருகிற்று இச்சென் மத்தில்.

35. மேலும், நான் லாகிரிப்பொருளைப் புசிப்பது போல் நீயும் மறுஜன் மத்தில் லாகிரிப்பொருள்களைத்தின்று, எல்லாராலும் நகைக்கப்பட்டு, அவமானமடைந்து, உயிர் வாழ்வாய். இவ்வாறு கூறிவிட்டு, அம் முனிவர் அந்த ஊரைவிட்டுச் சென்றுர். அந்தப் பாவம் இந்த ஜன்மத்தில் இவனைப் பற்றிக்கொண்டது.

36. லாகிரி வஸ்து வாலே நலமிலாக் கீர்த்தி யெய்தும்
மாதுகள் துணைவி யாலே மைந்தனும் பெருமை கொள்வன்
பாகமாய்ப் பின்ஜன் மத்தைப் பகருவோம் காஞ்சி கீழ்பால்
தோகமால் மலைக்கு மேல்பால் தோன்றிய பேரூர் தன்னில் ;

36. அம்முனிவர் சொன்னபடியே இவனுக்கு லாகிரி வஸ்துவினுலேயே கெட்டபெயர் ஏற்படும். முன் சொன்னபடி சகோதரிகளால் இவன் செல்வத்திலும், மற்றைய துறைகளிலும் மேன்மை யடைவான். இவனது பின் ஜன்மத்தைப் பகருவோம். காஞ்சிபுரத்திற்குக் கீழ்த் திசையில், திருமால் எழுந்தருளியிருக்கும் மலைக்கு மேற்கில் உள்ள தொரு பெரிய ஊரில் ;

37. வைசிய குலமு தித்து வணிபங்க ளதிகம் செய்து
திசையெலாம் கீர்த்தி பெற்றுச் செல்வனும் வாழ்வா னுகும்
அசைவிலாப் பராசர் சொல்ல அம்மனும் கேட்க லுற்றுள்
உசிதமா யிச்சென்மத்தில் உத்தமன் சீல மின்றி ;

37. வைசிய குலத்தில் பிறப்பான். வியாபாரத்தை விஸ்தாரமாகச் செய்வான். எல்லா இடங்களிலும் இவனது புகழ் பரவும். சிறப்பாக வாழ்க்கையை நடத்துவான் என்று பராசரர் கூறியவுடன், பார்வதி வினவினுள். இவன் இந்த ஜன்மத்தில் லாகிரி வஸ்துக்களைப் புசித்து உயர்ந்த சீல மின்றி ;

38. மதுமா மிசம் புசித்து வருவதால் மறுஜன் மத்தில்
உதிப்பனே வணிகச் சேயா யுதிக்கக்கா ரணங்கள் சொல்வீர்
சதியிலா இச்ஜன் மத்தில் தன்குல தெய்வத் துக்கு
மிதமிலா ஊழி யங்கள் மேன்மையாய் செய்த லாலும் ;

38. மாமிசாதிகளைத் தின்று வாழ்ந்தால் மறுஜன்மத்தில் வைசிய குலத்தில் எவ்வாறு இவன் பிறக்க முடியும் ? அதற்கான காரணங்களைச் சொல்லித் தெளிவிப்பீராக, என, பராசரர் பதில் கூறுகின்றுர். இந்த ஜன்மத்தில தன் குலதெய்வத்திற்கு அளவிட்டுக் கூறமுடியாதபடி தொண்டுகளைப் பக்தி சிரத்தையுடன் செய்திருப்பதாலும் ;

39 வருவோர்க்கு அன்ன மீந்து வண்மையாய்த் தான தர்மம்
பெருமையாய்ச் செய்ததாலும் பேசினேம் வைசிய வம்சம்
அருமறை முனிவர் சொல்ல அம்மனும் கேட்க லுற்றுள்
திறமையாய் மாதுர் சேதி சொல்லுவீ ரென்று கேட்டார்.

39. தன் வீட்டை நாடி வருபவர்களுக்கு அன்னதானம் ஏராளமாகச் செய்ததாலும், இவைகளைத்தவிற மற்றைய தான தருமங்களையும் செய்ததாலும் மறு ஜன்மத்தில் வைசியகுலத்தில் பிறப்பான்; பார்வதி தேவியார் இந்த ஜாதகனின் தாயின் செய்திகளைப்பற்றிச் சொல்லுங்க ளெனக் கேட்டாள்.

40. மாதிரு குணத்தை யாங்கள் வரைகிறேம் சிவந்த மேனி
கோதிலா மூர்க்க முள்ளாள் குணமது கபடு மில்லாள்
மேதினில் வலுவு முள்ளாள் வித்தகி ஊகை கொஞ்சம்
பாதக மெண்ணு நெஞ்சம் பந்துவுக் கினிய ளாவள்.

40. தாயின் குணங்களை நாங்கள் சொல்லுகின்றேம். அவள் சிவந்த மேனியள். பிடிவாதம் உள்ளவள். ஆனுல் நெஞ்சில் கள்ளமில்லாதவள். உடல்வலிமை வாய்ந்தவள். மதிநுட்பம் உடையவள். பிறருக்குத் தீமைகளை மனத்தினுலும் எண்ணுதவள். உற்றுர் உறவினர்களுக்குப் பிரியமாக நடந்து கொள்ளுவாள்.

41. அடக்கமு மொடுக்க முள்ளாள் அன்னங்கள் போட வல்லாள்
நடக்கையும் நல்ல தாகும் நாயகி அதிர்ஷ்ட முள்ளாள்
துடுக்கான வார்த்தை கூருள் சோர்வான பாத முள்ளாள்
மடக்கொடி சொற்ப ரோகி உரைக்கிறே மிவளுக்கே தான்.

41. மனத்திலும் சரீரத்திலும் அடக்கம் உடையவள். பிறர்க்கு அன்னமிடும் சக்தி வாய்ந்தவள். சிறந்த நடத்தை உடையவள். மேலும், அவள் மிக்க அதிர்ஷ்டமுள்ளவள். துடுக்கான வார்த்தைகளைச் சொல்லமாட்டாள். இவளுக்கு பாதங்களில் சோர்வு உண்டாகும். சிறிது நோயும் ஏற்படும்.

42. இவளுடைத் துணைவர் தம்மை இசைக்கிறே மாண்பால் ரண்டு
அவனியில் பெண்பா லவ்வாறு அறைகிறேம் தீர்க்க மாக
நவமதில் மற்ற வெல்லாம் நஷ்டமாம் என்று சொன்னேம்
தவநிலை யோரைக் காக்கும் தயாபரி மேலுங் கேளே.

42. இவளுடைய உடன் பிறந்தவர்களைப்பற்றிக் கூறுகின்றேம். சகோதரர்கள் இருவரும் சகோதரிகள் இருவருமாவர். அவர்களெல்லோரும் நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள். இந்த எண்ணிக்கைக்கு மேல் பிறக்கும் குழந்தைகள் நீடித்திருக்கமாட்டா. தவசிகளைக் காக்கும் தயாபரியான தேவியே ! மேலும் கேளுங்கள்.

43. இன்னவள் முன்ஜன் மத்தை இசைக்கிறேரம் விரிஞ்சி நாட்டில்
உன்னித சேடர் வம்சம் உதித்துமே மதலை யின்றி
மன்னிய வரனின் கூட மங்கைகா ளத்தி சென்று
தன்னிலே ஈசனுக்குத் தானவ ளர்ச்சித் தேத்தி.

43. இவளுடைய முன் ஜன்மத்தைக் கூறுகின்றேரம். விரிஞ்சி நாட்டில் சேடர் [கைக்கோலர்] வமிசத்தில் பிறந்து, வாழ்க்கையை நடத்தும் காலத்தில், பிள்ளை இல்லாததால், தன் கணவனுடன் காளஹஸ்தி க்ஷேத்திரத்திற்குச் சென்று, அங்கு எழுந்தருளியிருக்கும் பரமசிவனுருக்கு அபிஷேகம் அர்ச்சனைகளைச் செய்து, அவரை மனமாரத்துதித்து.

44. மதலையி ஞசை கொண்டு மங்கையும் தோத்த ரித்தாள்
அதிசய மாக வேதான் அசரீரி உரைக்கக் கேட்டாள்
விதியினுல் முன்னும் தன்னுல் விளங்காது புத்திரர் தாமும்
பதியினில் சென்று மேதான் பரங்களுக் கன்ன மீந்து.

44. புத்திர பாக்கியத்தில் மிக்க விருப்பம் கொண்டவளாக அங்குத் துதிதுக்கொண்டே நிற்கும்போது. ஆச்சர்யத்தை விளைவிக்கும் ஓர் அசரீரி வாக்குக் கேட்கப்பட்டது. உனக்கு முன்ஜன்ம வினையினுல் புத்திரர்கள் உதிக்கமாட்டார்கள். உனது ஊருக்குச் சென்று அகதிகளுக்கு ஏராளமாக அன்னதானம் செய்து ;

45. தாகப்பந் தனும மைத்தால் சதிருடனு னுனக்கு மேதான்
பாகமாய் மறுஜன் மத்தில் பாலர்கள் உண்டு என்று
மோகமாய் அசரீரி வாக்கு மொழிந்தது அகுதி போலே
தோகையு மதனைக் கேட்டுத் தூண்டில்போல் மனம் பதைத்து;

45. மிக்கச் சிரத்தையுடன் ஒரு தண்ணீர்ப் பந்தலும் வைத்தால், மறு ஜன்மத்தில் உனக்குப் பாலர்கள் தோன்றுவார்கள் இவ்வாறு அசரீரி வாக்கைக் கேட்டு இந்த மங்கை தூண்டிலில் அகப்பட்ட மீன்போல் துடித்து ;

46. தன்னுடைய ஊரைச் சேர்ந்து தனயர்க ளில்லா ளாகி
அன்புடன் தாகப் பந்தல் அகதிகட் கன்ன மீந்து
இன்பமில் லாமல் வாழ்ந்து இவளுமே மரண மாகித்
தென்புட னிக்கு லத்தில் ஜனித்தவ ளிவளே யென்றேரம்.

46. தன்னுடைய ஊரை வந்தடைந்து, தனயர்கள் இல்லாத காரணத்திஞல், மிகவும் அன்புடன் தண்ணீர்ப் பந்தல் வைத்தாள். ஏழைகளுக்கு ஏராளமாக அன்னதானம் செய்தாள். ஆயினும், அசரீரி வாக்குப்படி பிள்ளைகள் தேகாருத வருத்தத்துடனேயே மரணமடைந்து, இக்குலத்தில் இவள் ஜனித்தாள் என்று சொன்னேம்.

47. மறுஜன்மம் அவ்வூர் தன்னில் வன்னிய மரபில் தோன்றித்
திருமகள் விலாசம் பெற்றுச் செல்விழி வாழ்வா ளாகும்
அருமறை முனிவர் கூற அம்மனும் கேட்க லுற்றுள்
பெருகிய கர்ம காலம் பேசுவீ ரென்று சொன்னுள்.

47. மறுஜன்மத்தில் இப்பொழுது வசிக்கும் ஊரிலேயே வன்னிய வமிசத்தில் தோன்றுவாள். லக்ஷ்மிகடாக்ஷம் இவளுக்கு ஏற்பட்டுச் சிறப்பாக வாழ்வாள். இவ்வாறு வேதமோதும் முனிவர் கூறியவுடன், பார்வதி தேவி கேட்கலுற்றுள். இந்த ஜாதகன் தன் தாய் தந்தையர்களுக்குக் கருமம் செய்ய நேரும் காலத்தைச் சொல்லுவீர்களாக, எனக் கேட்டாள்,

48. தந்தையின் மரண காலம் சாற்றுவோ மிருபானுறில்
பந்தமாய்க் கண்டம் வந்து பாரினில் சுகமே யுண்டாய்ச்
சந்ததம் முப்பா னென்றில் சித்திரை மாதம் தன்னில்
முந்திய தந்தை சண்டம் மொழிகிறேரம் மேலுங் கேளே.

48. தந்தையின் மரண காலத்தைப்பற்றிச் சொல்லுகின்றேரம். இந்த ஜாதகனுக்கு இருபத்தாருவது வயதில் தந்தைக்கு ஒரு கண்டம் நேரிடும். ஆனால் அது நீங்கிவிடும் அதனுல் மரணமேற்படாது. பிறகு இவனுக்கு முப்பத்துஒன்றுவது வயது நடை பெறும்போது சித்திரை மாதத்தில் கண்டமேற்பட்டு இவன் தந்தை மரணமடைவான்.

49. மாதிரு மரண காலம் வரைகிறே முப்பா னெட்டில்
மேதினில் கன்னி மாதம் வித்தகி மரண மாகும்
தீதிலா ஜாத காக்குச் செப்புவோ மறுபா னெட்டில்
கோதிலாக் கூனி மாதம் குறைபக்கம் ஏகாதேசி.

49. தாயின் மரண காலம் எப்பொழுது ஏற்படுமென்பதையும் சொல்லுகின்றேரம். இந்த ஜாதகனுக்கு முப்பத்தெட்டாவது வயதில் கன்னி மாதத்தில் இவன் தாய் மரணமாவாள். ஜாதகனும் அறுபத்தெட்டாவது வயதில் பங்குனி மாதத்தில் தேய்பிறையில் ஏகாதசி திதியில் மரணமடைவான்.

50. பக்கசூ லையுமே கண்டு பாரினில் மரண மாகி
மிக்கவே மறுஜன் மத்தை விளம்புவோம் காஞ்சி தன்னில்
தொக்கசத்திரிய வம்சம் தோன்றியே அரசர் பக்கல்
மிக்கவே ஜீவிப் பானும் நிமலியே மேலுங் கேளே.

50. இவனுக்குப் பக்கசூலை கண்டு கஷ்டப்படுவான். அதுவே இவனுக்கு முடிவாகும். மறு ஜனமத்தைப்பற்றி விளம்புகின்றேரம். இவன் அடுத்த ஜன்மத்தில் காஞ்சீபுரத்தில் க்ஷத்திரிய வமிசத்தில் பிறந்து, அரசரிடம் அதிகாரம் பெற்று ஜீவிப்பான். பார்வதி தேவியே! மேலும் கேளுங்கள்.

51. இன்னவன் யோகச செய்கை இயம்புவோம் பூமி சேர்ப்பன்
உன்னதச் செட்டுச் செய்வன் உலகெலாம் கீர்த்தி யேற்பன்
தன்னிலே பூமி சேர்ப்பன் தனம்வீடு பூமி மாடு
பன்னிய பூஷ ணங்கள் பகர்வோமை யாயிரம் பொன்.

51. இவனுடைய யோகங்களைப் பொதுவாகக் கூறுகின்றேரம். பூமிகளைச் சேர்ப்பான். பெரிய வியாபாரங்களைச் செய்வான். இவனது புகழ் உலகெலாம் பரவும். இவனுடைய பூமி வீடு கால்நடைகள், ஆபரணங்கள் முதலிய பொருள்களின் உத்தேச மதிப்பு ஐயாயிரம் பொன்னுகும். [சுமார் ஐம்பதாயிரம் ரூபாய் மதிப்பு வாய்ந்தன என்பது கருத்து.]

52. உதித்தவன் ஜனனகாலம் உயர்கேது தசையிருப்புச்
சதிருடன் திங்க ளுந்தான் சாற்றுவோம் பதினொன் ருரும்
மதித்திட நாள்க ளெட்டும் பகருவோம் பலனே யாங்கள்
விதவித நோய் களுண்டு விளம்புவோம் பலன்க ளற்பம்.

52. இவன் ஜனித்த சமயம் கேது தசை இருப்பு மாதங்கள் பதினொன்றும் நாட்கள் எட்டுமாம். இந்தத் தசையின் பலன்களைச் சொல்லுகின்றோம். விதவிதமான நோய்கள் வரும். பயிர், வியாபாரம் முதலியவைகளில் பலன் அல்பமாக இருக்கும்.

53. புகர்தசை யிருப தாண்டும் புகலுவோம் கல்வி நேரும்
பதியினில் மனையாள் வாய்க்கும் பசுக்களும் விருத்தி யாகும்
வகையான பூமி வாய்க்கும் வருந்துணை சுபமே யுண்டாம்,
புதிதான கிருகம் நேரும் பூஷண மிகுதி யாகும்.

53. இதற்கு அடுத்தபடியாக வரும் சுக்கிரதசை இருபதாண்டும் நடக்கப் போகும் பலன்களைக் கூறுகின்றோம். ஜாதகனுக்குக் கல்வி நன்றாக வரும். விவாஹம் நடை பெறும். கால் நடைகளும் ஏராளமாக அபிவிருத்தியடையும். நல்ல செழிப்பான பூமிகள் சேரும். பிறக்கும் சகோதரர்களுக்குப் பாலாரிஷ்டம் முதலிய தோஷமின்றி க்ஷேமங்கள் ஏற்படும். புதியதோர் கிருஹத்தை நிர்மாணிப்பான். நிரம்ப பூஷணங்களும் கிடைக்கும்.

54. மத்தியில் மாதுர் தந்தை வந்திடும் விரோதம் நோயும்
சித்தமாய்ப் பூமி நஷ்டம் சிதறிடும் பொருள்க ளெல்லாம்
உத்தமர் விரோத மாகும் உரைக்கிறோம் விபரம் ரண்டில்
அத்திமா முகனைப் பெற்ற அம்மையே மேலுங் கேளே.

54. சுக்கிரதசையின் மத்தியில் தாய்க்கும் தந்தைக்கும் விரோதம் நேரிடும். மேலும் சிறிது நோயும் வந்திடும். பூமி நிச்சயமாக நஷ்டமாகும். பொருள்களும் பலவழிகளில் சிதறி நாசமடையும். மேலோர்களுடைய பகைமையும் ஏற்படும். மற்றைய விபரங்களை இரண்டாம் பாகத்தில் சொல்லுகின்றோம். ஸ்ரீ விநாயகரைப் பெற்ற தாயே! மேலும் கேளுங்கள்.

ஜாதகம் 10.

1. பொன்புத னிரவி வண்டி பூமகன் சிகியும் சீயம்
மந்தனும் துலேயிலேற மதிசுரு கருங்கோள் சாடி
விந்தையாய் மழைக்கோள் கன்னி மேவிய ஜன்மம் நண்டு
இந்தவாறு கோள்கள் சேரில் இயம்புவீர் பலனைத் தானே.

ராகு	இராசி சக்கரம்		லக்கினம் குரு புதன் சூரியன்
சந்திரன்			செய்வாய் கேது
		சனி	சுக்கிரன்

1. மன்மத வருஷம் ஆடி மாதம் 21-ஆந் தேதி ஞாயிற்றுக் கிழமை காலையில் ஜனனம்.

ஆங்கில தேதி 4–8–1895.

நவக்கிரஹங்களின் பாதசாரம்.

ஆயில்யம் 1-இல் சூரியன். உத்திராடம் 2-இல் சந்திரன். மகம் 4-இல் செவ்வாய். புஷ்யம் 1-இல் புதன். புனர்வஸு 4-இல் குரு. உத்தரம் 2-இல் சுக்ரன். சுவாதி 1-இல் சனி. பூரட்டாதி 1-இல் ராகு பூரம். 3-இல் கேது. குரு புதன் சூரியன் கடகததிலும், செவ்வாய் கேது, சிம்மத்திலும், சனி துலாத்திலும், சந்திரன், மகரத்திம், ராகு கும்பத்திலும், சுக்கிரன் கன்னியிலும் இருந்து, இலக்கினம் கடகமாகவுமானல், இவ்வாறு கிரஹநிலையில் பலன்களைச் சொல்லுவீர்களாக, எனப் பார்வதி தேவி வினவினுள்.

2. பார்வதி கேட்கும் போது பகருவார் பராசர் தானும்
சீர்புகழ் ஆண்பால் ஜன்மம் ஜனித்தஇல் கீழ்மேல் வீதி
கூறினேம் வடக்கு வாடை குணக்கினில் காளி வாசம்
மாரியு மேற்கில் தங்கும் வடதிசை கணேசன் கோஷ்டம்.

2. இவ்வாறு பார்வதி தேவிகேட்டவுடன், பராசர முனிவர் பதில் கூறுகின்றார். மேற்சொன்ன கிரஹநிலையில் ஆண் குழந்தை ஜெனிப்பான். வீதி கிழக்கு மேற்காக அமைந்திருக்கும். வீடு வடக்கிலுள்ள வரிசையில் இருக்கும் [அஃதாவது தெற்கு நோக்கி இருக்கும்]. கீழ்த்திசையில் காளி கோயிலும், மேற்குத்திசையில் மாரியம்மன் கோயிலும், ஸ்ரீ விநாயகரது ஆலயமும் விளங்கும்.

3. தென்திசை நதியு முண்டு சிற்றூரில் கெட்டி வீட்டில்
இன்னவன் ஜனிப்பா னுகும் இவனுமே நவமாம் ஜன்மம்
தந்தை தாய் களத்திர புத்திரர் தன்துணே யோகம் தானும்
முன்பின்ஜன் மங்கள் யாவும் மொழிகிறே மிந்நூல் தன்னில்.

3. தென்திசையில் ஒரு நதியும் இருக்கும். அவ்வாறு அமைந்த ஒரு சிறிய ஊரில் கற்களால் கட்டப்பட்டுக் கெட்டியாக இருக்கும் வீட்டில் இந்தக் குழந்தை ஜனிப்பான். அக்குடும்பத்தில் இவன் ஒன்பதாவது குழந்தை என்று சொல்லவேண்டும். இவனுடைய தாய் தந்தை, பாரியை புத்திரர் சகோதரர் இவர்களைப்பற்றியும், இவனது யோகபாவங்களைப்பற்றியும், முன் பின் ஜன்மங்களைப்பற்றியும் இந்நூலில் சொல்லப்போகின்றேம்.

4. தந்தைக்குத் தாரம் ரண்டில் தரித்திடு முதல்மா தின்ற
நீதியாய் மைந்தன் தானும் நிகழ்த்துவோ மிவனின் தந்தை
போதவே துணைவர் தம்மை போற்றவே பலத்தைக் காணேம்
ஆதியாய்ப் பிதாகு ணத்தை அறைகிறேம் கேளு மம்மா.

4. இந்த ஜாதகனின் தந்தைக்குள்ள இரு மனைவிமார்களில்முதல் மனைவிக்குப் பிறந்தவன் இவன். இந்தக் குழந்தையின் தந்தைக்குச் சகோதரர்கள் உண்டு என்று சொல்லுவதற்குக் காரணமில்லை. ஆகவே, தந்தையின் குணங்களைப்பற்றிச் சொல்லுகின்றேம். கேட்டருளவேண்டும், தாயே!

5. மால் நிறமுடைய தேகன் மர்மவான் உயர மில்லான்
சீலமா சார வன் சிந்தையில் கபடு முள்ளான்
வேல்விழி மனையாள் பட்சன் விசேஷமாம் குடும்ப முள்ளான்
பால்தயி ரிஷ்ட முள்ளான் பந்துவு மெச்ச வாழ்வன்.

5. அவன் தேகம் கறுத்திருக்கும். சிறிது மர்மமான நெஞ்சம் உடையவன் (கபட முள்ளவன்) உயரமானவனல்லன். சிலங்களும் நல்ல பழக்க வழக்கங் களுமுண்டு. வேல்போன்ற விழிகளை உடைய மனைவியிடத்தில் ரக்ஷபாதம் உள்ளவன். பெருமைவாய்ந்த குடும்பம் உள்ளவனுக ஆவான். பால் தயிர், நெய் முதலியவைகளில் விருப்பம்கொண்டவன். உற்றர் உறவினர் மெச்சும் வகையில் வாழ்க்கையை நடத்துவான்.

6. ஆதியில் வறுமை யுள்ளான் அநேகமாய்ப் பூமி சேர்ப்பன்
மாதவர் வணக்க முள்ளான் வண்டிவா கனமு முள்ளான்
நீதிலாக் குணத்தா னுகும் சிவந்திடு நேத்திர முள்ளான்
நோதிலானு தர நோயின் குறிவடு முகத்தி லுள்ளான்.

6. பாலியத்தில் வறுமையால் கஷ்டப்பட்டிருப்பான். ஏராளமாகப் பூமிகளைச் சேர்ப்பான். தவசிகளிடம் [கடவுள் அடியார்களிடம்] பயபக்தியுடன் வணங்கி நடப்பான். வண்டி வாஹனங்களை உடையவன். நற்குணங் களைப் பெற்றவன். நேத்திரம் சிவந்திருக்கும். துக்கமில்லாதவன். வயிற்று வலியால் சிறிது பீடிக்கப்படுவான். முகத்தில் அடையாளங்கள் உடையவன்.

7. தந்தங்கள் தேய்வு முள்ளான் சாயல் நேத்திரமு ள்ளான்
வந்தவர்க் கன்ன மீவன் வாக்குகள் பலித முள்ளான்
சந்ததம் பித்த தேக சஞ்சல மனத்த னுகும்
சொந்தமாய்க் கிருகம் செய்வன் துராசையு முடைய னுமே.

7. இவனுடைய பற்கள் சிறிது சிறிதாகத் தேய்ந்து வரும். சாய்ந்த பார்வை உடையவன். வரும் விருந்தாளிகளுக்கு அன்னமிடுவான். இவன் சொன்ன வாக்குகள் உண்மையாக நடைபெறும். பித்த தேகம் வாய்ந்தவன். மனத்தில் சிறிது சஞ்சலமும் அவ்வப்பொழுது உண்டாகும். பிதுரார்ஜிதமான வீட்டைத் தவிர சொந்தமாகவும் வீடு கட்டுவான். சிறிது கெட்ட எண்ணங்களும் உடையவன்.

8. இக்குண முடையோ னுக்கு இவனுமே உதித்த பாலன்
தொக்கவே குணத்தை யாங்கள் சொல்லுவோம் சிவந்த மேனி
நக்கன்மேல் பக்தி யுள்ளான் நாதனுர் பூசை செய்வன்
சிக்கெனப் பொருளும் சேர்ப்பன் தீரமாம் மனத்த னுமே.

8. இப்படிப்பட்ட குணங்கள் உள்ள தந்தைக்கு இவன் குழந்தையாகப் பிறந்திருக்கிறன். இவனது குணங்களை நாங்கள் சொல்லுகின்றேம். பரமசிவனுரிடம் பக்தி உள்ளவன். ஈசன் பூசையை இடைவிடாது செய்வான். மிகவும் சிக்கனத்துடன் பலவிதப் பொருள்களைச் சேர்ப்பான். தைரியம் வாய்ந்த மனம் படைத்தவன்.

9. கல்வியு முடைய னுகும் கனத்தவர் நேசம் கொள்வன்
எல்லேயு மதிகம் சேர்ப்பன் யாரையும் வசியம் செய்வன்
சொல்லுமெய்ந் நெறியுள் ளோனும் துண்டமும் கொஞ்ச [முள்ளான்
புல்லியர் நேசம் கொள்வன் பூஞ்சோலை தூவு செய்வன்.

9. கல்வியறிவு உடையவனுக இருப்பான். கௌரவம் வாய்ந்தவர்களின் நட்பும் இவனுக்கு இருக்கும். நிலங்களின் எல்லேகளை விஸ்தரிப்பான் [நிலங்களைச் சேர்ப்பான் எனபது கருத்து]. எல்லோரையும் தன்வசப்படுத்தும் இனிமையான சுபாவமுள்ளவன். தான் சொன்ன வார்த்தைகள்படி நடப்பான். பிறரைக் கண்டித்துப் பேசும் இயல்பும் கொஞ்சமிருக்கும். கீழ்ப்பட்டோரின் நேசமும் இவனுக்கு இருக்கும். பூஞ்சோலைகளையும் கிணறுகளையும் நிறுவுவான்.

10. சித்திர வீடு செய்வன் சிறப்பான குடும்ப முள்ளான்
எத்திசைக் கீர்த்தி கொள்வன் இவன்சுக புசிப்பு முள்ளான்
சித்தனு னைப்ப தாகும் சிலசில வணிபம் செய்வன்
நித்தியம் நெய்பா லிஷ்டன் நேமியில் கிருஷி செய்வன்.

10. விசித்திரமான வீட்டை நிர்மாணிப்பான். சிறந்த குடும்பியாவான், எல்லாத் திசைகளிலும் இவனது கீர்த்தி பரவும். எப்பொழுதும் பலவித சுகங்களை அனுபவிப்பான். மன்மதனுக்குச் சமமான அழகு வாய்ந்தவன். சிற்சில வியாபாரங்களைச் செய்வான். நெய்யிலும் பாலிலும் விருப்பமுடையவன். கிருஷி இவனுக்கு முக்கியத் தொழிலாக இருக்கும்.

11. வறுமையு மில்லா னுகும் வல்வாயன் பெருமை யுள்ளான்
திருமகள் வாச முள்ளான் சென்றிடம் பெருமை பூண்பன்
பெருமையா யாட்கள் சேர்ப்பன் பூஷண மதிக முள்ளான்
அருமறை யவர்கள் நேசன் அநேகதா னியமு முள்ளான்.

11. வறுமை இல்லாதவன். பிறரை வெல்லும் வாக்குவன்மை பெற்றவன். பெருமை உடையவனுக இருப்பான். மஹாலக்ஷ்மி வாசம் பொருந்தியவன். இவனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு ஏற்படும். நல்ல சேவகர்களைத் தன்னிடத்தில் வைத்துக்கொள்வான். அதிக ஆபரணங்களைச் சேர்ப்பான். வேதமோதும் பிராம்மணர்களிடம் பக்தி கொண்டவன். பலவித தானியங்களையும் அடைவான்.

12. இன்னவன் துணைவர் தம்மை இயம்புவோம் நவம தாகும்
கன்னியு மூவர் தீர்க்கம் கனத்திடு ஆண்பா லொன்று
உன்னத நான்கும் தீர்க்கம் உரைக்கிறோம் இவனுக் கேதான்
அன்னையே யாங்கள் சொல்லு மருள்மொழி குன்று வென்றோம்.

12. இவனுடைய சகோதர பாவத்தைப்பற்றி இப்பொழுது கூறுகின்றோம். இவனுடன் பிறந்தவர்கள் ஒன்பதின்மர்; அவர்களில் மூன்று சகோதரிகளும் ஒரு சகோதரனும் ஆக நால்வர் நீடித்து வாழ்வார்கள் அன்னையே! நாங்கள் சொன்ன அருள் மொழிகள் குன்ற.

13. துணைவன்தன் சேதி தன்னைச் சொல்லுவோம் கல்வி மானும்
கனமுடன் வாழ்வா னுகும் கணக்கினி லூகை சாலி
தனமது உடைய னுவன் தயையுளன் பொறுமை யுள்ளான்
இணையிலாப் பூமி சேர்ப்பன் எதிரியை வசியம் கொள்வன்.

13. அந்தச் சகோதரனின் வரலாறுகளைச் சொல்லுகின்றோம். சிறந்த கல்வி உள்ளவன். மிக்க பெருமையுடன் வாழ்வான், கணிதத்தில் மதிநுட்பம் வாய்ந்தவன். செல்வம் உடையவனுகவும் இருப்பான். தயைக் குணமும் பொறுமைக் குணமும் வாய்ந்தவன். செழிப்பான பூமிகளைச் சேர்ப்பான். சத்துருக்களையும் தன்வசப்படுத்துவான்.

14. அன்னிய கர்மம் செய்வன் அரசரால் வணிபம் செய்வன்
உன்னத வார்த்தை கூறுவன் உயர்ந்ததோர் குடும்ப முள்ளான்
பன்னியே உரைக்க வல்லன் பலவிதச் சோலை செய்வன்
தன்னிலே ஊகை சாலி தாயாதி மெச்ச வாழ்வன்.

14. உறவினர்களில் யாருக்காகிலும் இவன் ஈமச்சடங்குகளைச் செய்வான். அரசர்களுடைய உதவியைப் பெற்று வியாபாரம் செய்வான். அர்த்தபுஷ்டியுள்ள வார்த்தைகளையே பேசுவான், பெரிய குடும்ப முள்ளவனுவான். பேசப்படும் விஷயங்களைத் தெளிவாகப் பேசுவான். பலவிதப் பூஞ்சோலைகளையும் தோப்புக்களையும் நிறுவுவான். மிக்க மதி நுட்பம் வாய்ந்தவன். பங்காளிகள் கொண்டாடும்படி வாழ்வான்.

15. முனிவரிவ் வாறு கூற மொழிகுவா ளம்மன் தாமும்
இனியவே கர்மம் வேறு இவனுமே செய்வா னென்றீர்
கனமுட னுரைப்பீ ரென்னக் கழறுவார் பராசர் தாமும்
இணையவே சிறிய [1] தாதைக் கிவனுமே கர்மம் செய்வன.

15. பராசர முனிவர் இவ்வாறு கூறியவுடன், பார்வதி தேவி கேட்கலுற்றுள். இவன் அந்நியனுக்குக் கருமம் செய்வான் என்று சொன்னீர். யாருக்குக் கருமம் செய்வான்? அதைத் தெளிவுபடுத்திக் கூறும் என, பராசர முனிவர் கூறினுர். இவன் சிறிய தகப்பனுருக்கு (அல்லது சிறிய பாட்டனுருக்கு) ஈமச் சடங்குகள் செய்ய நேரிடும்.

16. தாதைக்குப் புத்திர பாவம் சாற்றுவீ ரென்று கேட்க
மேதினி லாண்பா லுந்தான் விளங்காது என்று சொன்னேம்
கோதிலாப் பெண்பா லுந்தான் கூறுவோம் தீர்க்கம் நான்கு
மாதவர் சொல்லும் போது மங்கையும் கேட்க லுற்றுள்.

16. சிறிய தந்தையின் புத்திர பாவத்தைப்பற்றிச் சொல்லும், எனப் பார்வதி கேட்டவுடன் பராசரமுனிவர் பதில் கூறுகின்றுர். அந்தச் சிறிய தந்தைக்குப் புத்திரன் பிறக்கமாட்டான், நான்கு பெண்கள் பிறப்பார்கள். அவர்கள் தீர்க்காயுளுடன் இருப்பார்கள். மறுபடியும் பார்வதிதேவி கேட்கின்றுள்.

17. தாதைக்குத் தவத்தி னுலே சாராதோ கர்ம மென்றுள்
நீதியாய்ச் சொல்லு மென்ன நிகழ்த்துவார் முனிவர் தாமும்
போதவே புத்திர ருண்டு பொருந்தாது கிரிகை தானும்
மேதினில் துணைவ னுலே விளம்பினேம் கர்மம் தானும்.

17. சிறிய தாதைக்குப் பெண்கள் உண்டு என்று சொன்னீர். அவர்களில் யாராவது ஒருவளுடைய பிள்ளையால் [தௌஹித்திரனுல்] அவனுக்குக் கருமம் செய்யப்படாதோ? அல்லது அவர்களுக்குப் பிள்ளைகள் பிறக்கமாட்டார்களா? ஆகையினுலேயே இவன் கருமம் செய்ய நேருமா? இவ் விஷயங்களைத் தெளிவாகச் சொல்லும் என, பராசர முனிவர் பதில் சொல்லுகின்றுர். தாயே! பெண்களுக்குப் புத்திரர்கள் பிறக்கமாட்டார் என்பது இல்லை. அவர்களுக்குப் புத்திர சந்ததியுமுண்டு. ஆயினும் இவன் சிறிய தாதை மரணமாகும காலத்தில் அருகில் இருக்கமாட்டார்கள். ஆகவே தௌஹித்திரர் கருமம் செய்ய நேரிடாது. ஆகையினுல்தான் இவன் [சாதகனின் சகோதரன்] கருமம் செய்வான் என்று சொன்னேம்.

18. ஜாதகன் மணத்தின் காலம் சாற்றுவோம் ஒருபா னுலில்
மேதினில் தக்ஷி ணத்தில் விளங்கிய மாதுர் வர்க்கம்
கோதிலா வருவா ளாகும் கூறுவோம் தாரம் ஒன்று
போதக வானே பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

18. இப்பொழுது ஜாதகனுடைய கலியாணகாலத்தை விளம்புகின்றோம். இவனுக்குப் பதினுலாவது வயதில் விவாஹம் நடைபெறும். தக்ஷிணதிசையில் மாதுரு வருக்கத்தில் இவனுக்கு மனைவியாக வரப்

1. தாதை = தகப்பன், பாட்டன்.

போகும் பெண் ஜனித்திருப்பாள். இந்த ஜாதகனுக்கு மனைவி ஒருத்தி தான். [தந்தைக்கு ஏற்பட்டது போலல்ல] ஸ்ரீவிநாயகரை ஈன்ற தாயே! மேலும் கேட்டருளவேண்டும்.

19. புத்திர விருத்தி தன்னைப் புகலுவோ மிருநான் காகும்
சித்தமா யாண்பால் ரண்டு தேவியு மவ்வா ருகும்
உத்தமி நான்கும் தீர்க்கம் உரைத்திட்டோம் நான்கு நஷ்டம்
வித்தகன் முன் ஜன் மத்தை விளம்புவோம் கேளு மம்மா.

19. புத்திரபாவத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவனுக்குப் பிறக்கும் குழந்தைகள் எட்டாம். அவர்களில் ஆண்கள் இருவரும், பெண்கள் இருவருமாவர். ஆக நால்வர் மாத்திரமே தீர்க்காயுளுடன் வாழ்வார்கள். மற்றைய நால்வரும் நீடிக்கமாட்டார்கள். இந்தக் கடகலக்கின மகனது முன் ஜன்மத்தைக் கூறுகின்றோம். தாயே! கேளுங்கள்.

20. கொச்சிநாட் டதனி லேதான் கோவைசிய குலமு தித்து
மிச்சமாய்ச் செட்டுச் செய்து விசேஷமாய்ப் பொருள் படைத்துத்
தக்ஷிணம் தீர்த்தம் தோய்ந்து தேவியு மதலே யுண்டாய்
அச்சுதன் மதத்தா ஞகி அவனுமே வாழ்ந்தா னென்றோம்.

20. கொச்சி நாட்டில், இடையர் வமிசத்தில் பிறந்து, விசேஷமான வியாபாரங்களைச் செய்து ஏராளமான பொருள்களை அடைந்தான். தக்ஷிண தேசத்திலுள்ள புண்ணிய தீர்த்தங்களில் நீராடினுன். மனைவி மக்களை அடைந்து, விஷ்ணுவிடம் பக்திபூண்டு, சிறப்பாக வாழ்ந்து வந்தான்.

21. அந்திய காலம் தன்னில் அனுயாச மரண மாகி
வந்தவ னிவனே யென்றோம் வரைகிறோம் பின்ஜன்மத்தை
முந்திய காஞ்சி தன்னில் முதுமறைக் குலத்தி லேதான்
மைந்தனு முதிப்பா னென்றோம் மங்கையே மேலுங் கேளே.

21. அந்திய காலத்தில் சிறிதும் கஷ்டமின்றி மரணத்தை அடைந்தான். பிறகு இந்த ஜனமத்தில் இங்கு வந்து கடகலக்கினத்தில் பிறந்திருக்கிறுன். இவனது பின்ஜன்மத்தைப் பற்றிக் கூறுகின்றோம். மறுஜன்மத்தில் காஞ்சீபுரத்தில் பிராம்மண குலத்தில் பிறப்பான், பார்வதி தேவியே! மேலும் கேளுங்கள்.

22. இவன்பிதா முன்ஜன்மத்தை இசைக்கிறோம் சிறுபா கத்தில்
அவனியில் வைசியச் சேயாய் அநேகமாய் வணிபம் செய்து
தவசிகட் கன்ன மீந்து சங்கரன் பணியும் செய்து
நவமதில் கீர்த்தி பெற்று நற்பல தீர்த்தம் தோய்ந்தான்.

22 இவனுடைய பிதாவின் முன்ஜன்மத்தைப் பற்றிக் கூறுகின்றோம். தந்தை முன்ஜன்மத்தில், வைசிய குலத்தில் பிறந்து, பலவித வியாபாரம் செய்து வந்தான். கடவுளடியார்களுக்கு அன்னதானம் செய்தான், பரமசிவனுக்குப் பலவிதத் தொண்டுகளையும் செய்தான். அதனுல் இவனுக்குப் பெரும் புகழும் ஏற்பட்டது. பல புண்ணிய தீர்த்தங்களில் நீராடினுன்.

23. வாழ்கிற நாளி லேதான் வரைகிறோ மூழி தானும்
தாழ்வான அடைக்க லானும் தன்கூட்டில் குஞ்சை வைத்து
ஆழியி லிரைக்குச் செல்ல அந்தவோர் பக்ஷி தன்னைப்
பாழான புத்தி யாலே பாலக னடித்து விட்டான்.

23. இவ்வாறு நற்காரியங்களைச் செய்துகொண்டு வாழும் நாளில், இவனுக் கேற்பட்ட ஓர் ஊழ்வினையைக் கூறுகின்றோம். ஒரு தாய்ப் பக்ஷி, தனது குஞ்சை கூட்டில் வைத்துவிட்டு, இரை தேடுவதற்காக வெளியே சென்றது. அப்பொழுது இவன், பிறஜீவனை இம்சிக்கும் இயல்பினுல் தூண்டப்பட்டவனுய், அந்தத் தாய் பக்ஷியை அடித்தான்.

24. இரைகொணர் வந்த பக்ஷி எமபதம் சேர்ந்த தென்றோம்
சிறையினி லிருக்குங் குஞ்சு தீனிக்குக் குறைவு நேர்ந்து
விரைவினில் மாண்ட தென்றோம் மேவிற்றுப் புள்ளின் தோஷம்
அறைகிறோ மச்சென் மத்தில் அவனுமே மரண மாகினுன்.

24. தனது குஞ்சிற்காக இரை தேடுவதற்கு வெளியே சென்று கொண்டிருக்கும் பக்ஷி இவனுல் அடிப்பட்டு இறந்தது. கூண்டில் இரையை எதிர் பார்த்துக்கொண்டிருக்கும்—தானே இரையைத் தேடிக்கொள்ள சக்தியற்ற—அதன் குஞ்சும் ஆகாரத்திற்குக் குறைவு நேர்ந்ததால் சீக்கிரத்திலேயே உயிரை விட்டது. ஆகவே அவ்விரு பக்ஷிகளைக் கொன்ற தோஷம் இவனைச் சார்ந்தது. பிறகு இவன் காலக் கிரமத்தில் மரணமானுன்.

25. கஞ்சனுல் வரையப் பட்டுக் காளையு மிச்சென் மத்தில்
மிஞ்சிய தீயின் வம்சம் மீதினில் உதித்தா னெனறோம்
தஞ்சமா யிச்சென் மத்தில் தன்தாயு மின்றி யேதான்
துஞ்சியே இளைய மாதா தோன்றிடு மென்று சொன்னேம்.

25. முன்ஜன்மத்தில் இக் கொடிய பாவத்தைச் செய்த இவன் இப்பொழுது வன்னிய வமிசத்தில் பிறந்து, இக் கடக லக்கின மகனுக்குத் தகப்பனுக அமைந்திருக்கின்றுன். அந்தப் பாவத்தினுல் தான் அவனுக்குச் சொந்தத் தாய் இருக்கமாட்டாள். இளைய தாய் தோன்றிடுவாள் என்று சொல்லுகின்றோம்.

26. பிதாவின் தன் பின்ஜன் மத்தைப் பேசுவோம் தொண்டை நாட்டில்]
சதமுள நீலி வாழும் சாற்றிய பேரூர் தன்னில்
மதிநகர் கங்கை வம்சம் வந்துமே அரசர் பக்கல்
நிதமுமே பெருமை பூண்டு நிமலனும் வாழ்வா னென்றோம்.

26. இந்தக் கடக லக்கினத்தில் உதித்த பாலனது தந்தையின் மறுஜன்மத்தைப் பற்றிக் கூறுகின்றோம். தொண்டை நாட்டில் பிரசித்தமான காளி கோயிலுள்ள ஒரு பெரிய ஊரில், சிறந்த வேளாள வமிசத்தில் பிறப்பான். அரசரிடம் செல்வாக்கும் பெருமையும் ஏற்பட்டு, மிகச் சிறப்பாக வாழ்வான், என்று உறைக்கின்றோம்.

27. அன்னையின் முன்ஜன் மத்தை அறைகிறோம் பாண்டி நாட்டில்
இன்னவள் சேடர் வம்சம் இலகியே பால ரின்றி
உன்னத வரனின் கூட உறைந்தனள் சேதுக் கேதான்
பன்னிய தீர்த்தம் தோய்ந்து பிராமணர் தமக்குத் தாமும்

27. தாயின் முன்ஜன்மத்தைப்பற்றிக் கூறுகின்றோம். இவள் பாண்டிய நாட்டில், சேடர் [கைக்கோலர்] வமிசத்தில பிறந்து, மணமாகி தன்னுடைய கணவனுடன் வாழ்ந்து வந்தாள். வெகு நாளாகியும் புத்திரப் பேறு இல்லாமையால் கணவனுடன் சேதுவிக்குச் சென்று அந்தப் புனித நீரில் ஸ்னனம் செய்து, பிராமணருக்குப் பலவித தானங்கள் வழங்கி.

28. ஈந்துமே உள்ளூர் மீண்டு ஏழைக்கு அன்னம் தாகம்
சாந்தமா யளித்து மேதான் சங்கரன் பணிகள் செய்து
ஏந்திழை மரண மாகி இவளுமே வந்தா ளென்றோம்
ஆய்ந்திடு மிவள்கு ணத்தை அறைகிறோம் சிவந்த மேனி.

28. தனது சொந்த ஊருக்கு வந்து, ஏழைகளுக்குச் சிரத்தையுடன் அன்னமும் தண்ணீரும் கொடுத்து, பரமசிவனுக்குப் பல பணிகளையும் செய்து வாழ்ந்து வந்தாள். கடைசியாக மரணமடைந்து, இங்குப் பிறந்து, இவனுக்குத் தாயாகி இருக்கின்றாள். இவளுடைய குணங்களை ஆராய்ந்து பார்த்துச் செல்லுகின்றோம், சிவந்த மேனியாள்.

29. அடக்கமும் பொறுமை யுள்ளாள் ஆளனுக் கினிய ளாகும்
துடுக்கென வார்த்தை கூறுள் தோகையும் பித்த தேகி
நடக்கையும் நல்ல தாகும் நாயகி வாயு ரோகி
திடமான குடும்ப முன்னாள் செல்வியே மேலுங் கேளே

29. அடக்கமுள்ளவள். பொறுமைக் குணம் நிறைந்தவள். அகமுடையானுக்குப் பிரியமானவள். பித்த தேகம் வாய்ந்தவள். நல்ல நடத்தையுடையவள். வாயு ரோகத்தால் இவளுக்குப் பீடை உண்டாகும். குழப்பங்களும் கலவரங்களும் இல்லாமல் ஒரே நிதானமான குடும்ப வாழ்க்கை உடையவள். தாயே ! மேலும் கேளுங்கள்.

30. இவளுடைத் துணைவர் தம்மை இசைக்கிறோம் நவம தாகும்
நவனியில் ஆண்பா லொன்று அறைகிறோம் பெண்பா லொன்று
கவனமா யிரண்டும் தீர்க்கங் காளேயு முதித்த பின்பு
வரவர வறுமை யுண்டாய் மாதுரு குடும்பத் துக்கே.

30. இவளுடைய சகோதர பாவத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவளுடன் பிறந்தவர்கள் ஒன்பது பேர்கள். ஆண் ஒருவனும், பெண் ஒருத்தியுமாவர். இவ்விருவரும் நீண்ட ஆயுளுடன் இருப்பார்கள். மற்றைய குழந்தைகள் நிலைத்திரா என்பது கருத்து. இவளுக்கு ஆண் சகோதரன் ஜனித்த பிறகு சிறிது சிறிதாக வறுமை அதிகரித்து அக்குடும்பம் அல்லல்படும்.

31. மாதிரு துணைவர் தம்மை வரைகிறோம் பின்பா கத்தில்
மாதிரு பின்ஜன் மத்தை வரைகிறோம் கச்சி தன்னில்
தீதிலா பிரம்ம சேயாய் ஜனித்துமே வாழ்வா னாகும்
போதக வானைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

31. இவனுடைய சகோதரனைப்பற்றிய வரலாற்றைப் பின் பாகத்தில் எழுதப் போகின்றோம். தாயின் பின்ஜன்மத்தைப் பற்றிக் கூறுகின்றோம். காஞ்சீபுரத்தில் மிக்க பரிசுத்தமான பிராமண குலத்தில் குழந்தையாக ஜனித்துச் சிறப்புடன் வாழ்வாள். ஸ்ரீவிநாயகரைப் பெற்ற புண்ணிய சாலியே ! கேட்டருளல் வேண்டும்.

32. தந்தையின் மரண காலம் சாற்றுவோ மிருபா னலில்
பிந்திய அன்னை காலம் பேசுவோ முப்பா னென்றில்
இந்தவோர் ஜாதகர்க்கு இயம்புவோம் அறுப ானென்றில்
வந்தவோர் சிம்ம மாதம் வளர்பிறைத் தசமி தன்னில்.

32. தந்தையின் மரணகாலத்தைச் செப்புகின்றோம். இந்தக் கடக லக்கின பாலனுக்கு இருபத்துநான்காவது வயதில், தந்தை இறப்பான். அதற்குப் பிறகு அன்னையின் மரண காலத்தைச் சொல்லுகின்றோம். இந்த ஜாதகனுக்கு முப்பத்தொன்றாவது வயதில் தாய் மரணமாவாள். இந்த ஜாதகனது மரண காலத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவனுக்கு அறுபத்தொன்றாவது வயதில் ஆவணி மாதத்தில் வளர்பிறைத் தசமி திதியில் மரண மேற்படும்.

33. க்ஷயத்தினல் மரண மாவான் சாற்றுவோ மிவன்பின் ஜன்மம்
நயப்புடன் தில்லை தன்னில் நற்சைவ குலமு தித்து
ஜயமுடன் குடும்ப மாகிப் செல்வனும் வாழ்வா னுகும்
தயையுடன் யோகச் செய்கை சாற்றுவோம் சேளு மம்மா.

33. க்ஷய நோயினல் இவனுக்கு மரணமுண்டாகும். இவனது பின் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். சிதம்பர க்ஷேத்திரத்தில் நல்ல சைவ வமிசத்தில் பிறப்பான். சிறப்பான குடும்ப முள்ளவனுகிப் பெருமையுடன் வாழ்வான். இவனது இந்த ஜன்மத்து யோகங்களைக் கூறுகின்றோம். கருணையுடன் கேட்டருள வேண்டும்.

34. உதித்தவன் யோகந் தானும் உரைகின்றோம் பூமி சேர்ப்பன்
அதிபதி யாக வாழ்வன் ஆள்கா ருடைய னுவன்
பதியது சித்திரம் செய்வன் பாரினில் கிருஷி செய்வன்
நதிபல தீர்த்தம் தோய்வன் நற்பந்து மெச்ச வாழ்வன்

34. கடக லக்கினத்தில் பிறந்த இவனுடைய யோகங்களைக் கூறுகின்றோம். பூமிகளைச் சேர்ப்பான். எப்பொழுதும் சமானனுகவே இருப்பான். நம்பிக்கையுள்ள சேவகர்கள் உடையவன். விசித்திரவேலைகள் அமைந்த வீட்டைக் கட்டுவான். விவசாயம் செய்வான். பல புண்ணிய நதிகளில் நீராடுவான். பந்துக்கள் மெச்சும்படி வாழ்க்கையை நடத்துவான்.

35. வண்டிவா கனமு முள்ளான் மாநிலம் கீர்த்தி கொள்வன்
அண்டினேர்க் குதவி செய்வன் அநேகபாக் கியமும் சேர்ப்பன்
கொண்டதோர் பூமி வீடு கூறிய பொருளும் யாவும்.
எண்டிசை யேழாயி ரம்பொன் இவனுமே சேர்ப்பா னுகும்.

35. வண்டி மாடுகள் இவைகளை உடையவனுவன். தான் வசிக்கும் ஊரில் நல்ல கீர்த்தியுள்ளவனுக இருப்பான். தன்னை அண்டியவர்களுக்கு மனமுவந்து உதவி செய்வான். பலவித ஐச்வரியங்களைச் சேர்ப்பான். இவன் அடைந்திருக்கும் பூமி, வீடு, வாஹனம் ஆபரணம் முதலியவைகள் எல்லாம் சேர்ந்து, உத்தேசமாக, ஏழாயிரம் பொற்காசுகள் மதிப்பு வாய்ந்தன. [உத்தேச மதிப்பு ரூபாய் எழுபதாயிரமாம்].

36. பிறந்தசேய் ஜனனகாலம் பதங்கள்தன் இருப்புத் தானும்
சிறந்திடு ஆண்டு நான்கு திங்களும் மூன்ற தாகும்
குறைந்திடு குடும்பம் தானும் கூறுவோம் வேற தாகும்
உறைந்திடு சுபமு முண்டு உற்றவர் பகையே யாகும்.

36. இக் குழந்தையின் ஜனன காலத்தில் சூரியதசையில் இருப்பு வருஷங்கள் நான்கும், மாதங்கள் மூன்றுமாம். இந்தத் தசையில் குடும்பம் பல துறைகளிலும் குறைந்திடும். குடும்பப் பிரிவினையும் நடைபெறும். சில சில சுப சம்பவங்களும் நடைபெறும். உற்றவரின் (பெரும்பாலும் பங்காளிகளின்) விரோத முண்டாகும். உத்தராடம் இரண்டாம் பாதம்.

37. தாய்தந்தை நலிக ளுண்டு தானியக் குறைவு நேரும்
நேயர்கள் விரோத மாகும் நிதம்மன அலேச்சலுண்டு
காயமாம் ஜாத கர்க்குக் கண்டிடும் ருணங்கள் ரோகம்
ஆயவே பலன்க ளற்பம் அவனுடைத் துணைவிக் கேதான்.

37. தாய்க்கும் தந்தைக்கும் நோய்களால் உபத்ரவம் ஏற்படும். பயிர் குறைந்து தானியக் குறைவும் உண்டாகும். நண்பர்களும் விரோதிகளாவார்கள். எப்பொழுதும் கவலை இருக்கும். மன நிம்மதி இராது. ஜாதகனுக்குச் சில கடன்கள் ஏற்படும். குடும்பத்திற்கும் கடன் நேரும். குடும்பத்தினர் எல்லோருக்கும் ரோகம் வந்திடும். அவனுடைய சகோதரிக்கும் நல்ல பலன்கள் நடைபெரு.

38. புத்திர தோஷ மாகும் பூதப்பேய் தன்னுல் பீடை
வெற்றியாய்ச் சாந்தி செய்யில் விலகிடும் தோஷம் தானும்
சித்தமாய் மதித சைக்குச் செப்புவோம் பலனை யாங்கள்
நித்திய லாப முண்டு நிகழ்த்துவோம் பூமி சேரும்.

38. இவனுக்குப் பல தோஷங்களும் ஏற்படும். பூதம், பேய், பிசாசு முதலிய துஷ்ட ஆவிகளால் பீடையுமுண்டாகும். சிரத்தையுடன் நன்றாகச் சாந்திகளைச் செய்தால் மேற்சொன்ன குற்றங்கள் விலகும். சந்திரதசையின் பலன்களை நாங்கள் கூறுகின்றேம். எப்பொழுதும் நல்ல லாபமேற்படும். பூமிகளும் சேரும்.

39. தனதானிய மதிக மாகும் சித்திர வீடு செய்வன்
கனமுடன் துணைவ ருக்குக் கூறுவோம் சுபங்கள் கூடும்
இனமுடன் பசுக்கள் விருத்தி எதிரியை வசியம் செய்வன்
அனையவே ஞாதி பூமி அணுகிடும் என்று சொன்னேம்.

39. பணமும் பண்டமும் அபிவிருத்தியடையும். அழகிய வீடு கட்டுவான். இவனது சகோதர சகோதரிகளுக்கு க்ஷேமங்கள் நிச்சயமுண்டாகும் (வியாதி முதலியன இரா என்பது கருத்து). கால்நடைகள் நன்ருக விருத்தியாகும். எதிரிகள் இவன் வசப்படுவார்கள். பங்காளிகளின் பூமிகளும் சேரும்.

ஜாதகம் 11.

1. பொன்தனு புகர்மால் கேது புலியினில் இரவி வண்டி
சந்திரன் ஆட தாகச் சனிகருங் கோளும் சாடி
முந்திய சேயும் மீனம் வளையலும் சென்ம மாக
இந்தவாறு கிரகம் நின்றால் இயம்புவீர் பலனைத் தானே.

செவ்வாய்	சந்திரன்		
சனி ராகு	இராசி சக்கரம்		லக்கினம் சூரியன்
			சுக்கிரன் புதன் கேது
குரு			

1. ஈசுவர வருஷம், ஆடி மாதம், 20-ஆந் தேதி வியாழக்கிழமை விடியற் காலையில் ஜனனம்.

ஆங்கில தேதி 2-8-1877

நவகிரஹங்களின் பாதசாரம்

ஆயில்யம் 1-இல் சூரியன். அச்வனி 4-இல் சந்திரன். பூரட்டாதி 4-இல் செவ்வாய். மகம் 1-இல் புதன். மூலம் 1-இல் குரு. மகம் 4-இல் சுக்கிரன். பூரட்டாதி 3-இல் சனி (வக்ரீ), சதயம் 2-இல் ராகு. மகம் 4-இல் கேது. குரு தனுவிலும் சுக்கிரன் புதன் கேது சிம்மத்திலும், சூரியன் கடகத்திலும், சந்திரன் மேஷத்திலும், சனி ராகுவும் கும்பத்திலும், செவ்வாய் மீனத்திலும் இலக்கினம் கடக லக்னமாகவுமிருந்தால், இவ்வாறு கிரஹநிலை உள்ள ஜாதகனது பலன் என்ன? சொல்லுங்கள், எனப் பார்வதிதேவி கேட்கலுற்றாள்.

2. அம்பிகை கேட்கும் போது அத்திரி முனிவர் சொல்வார்
செம்மையா யாண்பால் ஜன்மம் ஜனித்தஇல் கீழ்மேல் வீதி
நன்மையாய் உத்தர வாடை நாட்டுவோம் எதிர்வீ டில்லை
அம்புவி யளந்தோன் மேற்கில் உறைந்தனன் என்று சொன்னோம்.

2. இவ்வாறு அம்பிகை கேட்டதற்கு அத்திரி முனிவர் பதிலுரைக்கின்றார். இவ்வாறான கிரக நிலையில் ஜனித்தக் குழந்தை ஆணாகும். வீதி கிழக்கு மேற்காக இருக்கும். வீடு வடக்கு வரிசையில் இருக்கும். (தென்திசை நோக்கி இருக்கும்.) எதிரே வீடிராது. பூமியை அளந்தவனாகிய திருமாலின் கோயில் மேற்குத் திசையிலிருக்கும்.

3. உத்தரம் ஈசன் காளி உறைந்திடும் தக்ஷிணத்தில்
சத்தியும் நிற்கு மென்றேம் சாற்றுவோம் வடமேல் திக்கில்
அத்தியும் மாரி தங்கும் அக்கினி காளி கோஷ்டம்
வித்தகி அடையா ளத்துள் மேவிய சமவூர் தன்னில் ;

3. வடதிசையில் பரமசிவனது ஆலயமும் காளி கோயிலும் உண்டு. தென் திசையில் பார்வதியின் கோயில் இருக்கும். வடமேற்கில் ஸ்ரீ விநாயகரது கோயிலும் மாரியம்மன் கோயிலும் விளங்கிடும். தென்கிழக்கில் ஒரு காளி கோயில் இருக்கும். இப்படிப்பட்ட அடையாளமுள்ளதோர் ஊரில் ;

4. உதிப்பானும் நாலாம் ஜென்மம் உறுந்தந்தை தாயின் யோகம்
படித்திட துணைவர் யோகம் வரும்புத்திர களத்திர யோகம்
சதியிலா முன்பின் ஜன்மம் சாற்றுவோம் நவக்கோ ளாய்ந்து
விதியதைச் சொல்லு கின்றேன் வித்தகி கேட்டி டாயே.

4. இவன் உதித்திருப்பான். இவன் அக்குடும்பத்தில் நான்காவது குழந்தை. நவக்கிரகங்களைச் செம்மையாக ஆராய்ந்து பார்த்து, இவனுடைய தாய் தந்தை சகோதரர்கள் வரப்போகின்ற மனைவி புத்திரர் இவர்களைப்பற்றிய வரலாறுகளையும், இவனது யோகங்கள் முன் பின் ஜன்மங்கள் இவைகளைப்பற்றியும் இந்த நூலில் சொல்லுகின்றேன். கேட்டருளவேண்டும்.

5. தந்தையின் குணத்தைச் சொல்வேன் சமர்த்தனாய் வார்த்தை [கூறுவன்
பந்தமா யிருநி றத்தான் பாரினில் ஒடிச்சல் தேகி
சிந்தையு மர்ம முள்ளான் சிலசில செட்டுச் செய்வன்
சந்ததம் பித்த தேகி தயாளமாங் குணங்க ளில்லான்.

5. முதலில் இவனுடைய தந்தையின் குணங்களைச் சொல்லுகின்றேன். மிக்க சாமர்த்தியமாக வார்த்தைகளைப் பேசுவான். கருத்த மேனியான். மெலிந்த உடல் அமைந்தவன். அவனது மனத்தில் எப்பொழுதும் ஆலோசனைகளும், கபடமும் தங்கி இருக்கும். சிற்சில வியாபாரங்களைச் செய்வான். அடிக்கடி பித்தத்தினால் பாதிக்கப்படுவான். தயை, தாக்ஷிணியம் முதலிய குணங்கள் இல்லாதவன்.

6. ஞானங்கள் பலவும் சொல்வன் நாதனார் பத்தி பூண்பன்
தேன்குண வார்த்தை சொல்வன் சிறப்பான குடும்பி யாவன்
ஈனமாங் குணங்க ளுள்ளான் எதிரியை வசியம் செய்வன்
ஆனதோர் பூமி சேர்ப்பன் அவன்பூமி யிச்சை யுள்ளான்.

6. பலவிதக் கல்வியறிவுகளைப் பிறர் வியக்கப் பேசுவான். சிவபிரானிடம் பக்தி கொண்டவன். தேன் போல் மிக இனிமையான வார்த்தைகளைச் சொல்லுவான். அவ்வூரில் சிறந்த குடும்பஸ்தர்களில் ஒருவனாக மதிக்கப்படுவான். கீழ்த்தரமான குணங்கள் உள்ளவன். பகைவரைத் தன் வசப்படுத்துவான். நல்ல பூமிகளைச் சேர்ப்பான். மேன்மேலும் பூமிகளைச் சேர்ப்பதில் ஆசை உள்ளவனாகவும் இருப்பான்.

7. மூலச்சூ டுடைய னுகும் முன்கோபங் மூர்க்கம் கொஞ்சம்
ஞாலமேல் கிருஷி செய்வான் நவதானிய முடைய னுகும்
வேல்விழி தன்னைப் பேணுன் வீணப வாத முள்ளான்
சாலவே துணைவர் தம்மைச் சாற்றுவோம் மேலுங் கேளே.

7. மூலச்சூட்டினல் பாதிக்கப்படுவான். சிறிது முன்கோபமும் பிடிவாதமும் இருக்கும். இவனுக்கு விவசாயம் முக்கியத் தொழிலாக இருக்கும். பல தானியங்களை உடையவன். தனது மனைவிடம் அதிக பக்ஷமில்லாதவன். இவனைப்பற்றிக் காரணமின்றியே அவதூறுகள் ஏற்படும். இவனுடைய சகோதரர்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். கேளுங்கள்.

8. துணைவர்க ளாண்பா லொன்று சொல்லுவோம் மாகப் தீர்க்கம்
பிணையாகு மற்ற வெல்லாம் பேசுவோ மிவனுக் கேதான்
அணையவிக் குணத்தா னுக்கு அவனுமே உதிப்பா னென்றேம்
கனமுட னிவனதன் சேதி கழறுவோம் கேளு மம்மா.

8. இவனுக்கு (தந்தைக்கு) ஒரு சகோதரன் இருப்பான். அவன் தீர்க்காயுளுடன் வாழ்வான். இவனுடன் பிறந்த மற்றைய குழந்தைகள் விளங்கா. இப்படிப்பட்ட குணங்கள் வாய்க்கப் பெற்ற தந்தைக்கு இக் கடக லக்கின மகன் பிறந்திருக்கிறன். இந்த ஜாதகனது செய்திகளைக் கூறுகின்றேம். கேளுங்கள். தாயே!

9. மால்நிறம் ஒடிச்சல் தேகி மருமமும் கொஞ்ச முள்ளான்
ஈனரைச் சேரா னுகும் இன்பமாய் வார்த்தை சொல்வன்
ஆனவர் நேசம் கொள்வன் ஆள்கார ருடைய னுகும்
மானமாய் ஜீவிப் பானும் வடுவுகள் காணு மென்றேம்.

9. திருமாலின் நிறத்தவன் [கருத்த மேனியான் என்பது கருத்து]. மெலிந்த சரீரமுள்ளவன். சிறிது கபடமுள்ளவன். தன்னைவிடத் தாழ்ந்தவர்களிடம் பழகமாட்டான். இனிமையாகப் பேசுவான். பெரியோர்களின் நட்பு உடையவன். நல்ல சேவகர்களை உடையவன். மிக்க கௌரவத்தோடு ஜீவனத்தை நடத்துவான். சரீரத்தில் சில அடையாளங்களும் காணப்படும்.

10. நித்திரை சுகிப்ப னுகும் நீராடப் பிரியன் மிக்க
நத்தின பேரைக் காப்பன் நக்கன்மேல் பக்தி பூண்பன்
எத்திசைக் கீர்த்தி கொள்வன் யாவர்க்கு நல்லோ னுவன்
பத்தினி நேய னுகும் மாடுகள் (பாருகள்) விருத்தி செய்வன்.

10. நித்திரையில் பிரியமுள்ளவன். நீரில் மூழ்கி விளையாடுவதிலும் ஆசை உள்ளவன். தன்னை அண்டியவர்களைக் காப்பாற்றும் சுபாவமுள்ளவன். பரமசிவனிடத்தில் பக்தி பூண்டவன். இவனது கீர்த்தி எல்லாத் திசைகளிலும் பரவி இருக்கும். எல்லோருக்கும் நல்லவனுக நடந்து கொள்ளுவான். மனைவியிடத்தில் மிக்க அன்புள்ளவன். கால்நடைகளை (பூமிகளை) விருத்தி செய்வான்.

11. வண்டிவா கனமு முள்ளான் வணிபமும் செய்வா னுகும்
குண்டைகோ விருத்தி யுள்ளான் குலத்துளோர் மெச்ச வாழ்வன்
தண்டமிழ்க் கல்வி யுள்ளான் சன்மார்க்கன் வறுமை யில்லான்
துண்டமாய் வார்த்தை சொல்வன் சுந்தரி மேலுங் கேளாய்.

11. வண்டியும், மற்றைய வாஹன சாதனங்களும் உடையவன். இவன் வியாபாரமும் செய்வான். பசுக்களை விருத்தி செய்வான் [பால் பாக்கியம் உண்டு என்பது கருத்து] உற்ருர் உறவினர் மெச்சும் வகையில் வாழ்க்கையை நடத்துவான். தமிழில் பாண்டித்தியம் உள்ளவன். தரும வழியிலேயே நடப்பான். ஏழ்மை இல்லாதவன். பிறர் சந்தேகிக்க முடியாத வகையில் பேச்சுகள் ஸ்பஷ்டமாக இருக்கும். தேவியே! மேலும் கேளுங்கள்.

12. இவனுடைத் துணைவர் தம்மை இயம்பஆண் பலத்தைக் காணேம்
அவனியில் கன்னி ஒன்று அறைகிறேம் மூத்தோ ளாக
நவனியில் அவள்தன் சேதி நாட்டுவோம் நற்கு ணத்தாள்
பவமுள புத்தி சாலி பஞ்சையை ஆத ரிப்பள்.

12. இவனுடைய சகோதர பாவத்தைப்பற்றிப் பேசுவோமானுல், இவனுக்கு ஆண் சகோதரன் இருக்க ஆதாரமில்லை. [சகோதரரில்லை.] ஒரு சகோதரி உண்டு. அவளும் மூத்தவளாக இருப்பாள். அவளுடைய வரலாறுகளைச் சொல்லுகின்றேம். நல்ல குணமுள்ளவள். மதிநுட்பம் வாய்ந்தவள். ஏழைகளை ஆதரிப்பாள்.

13. தனமுளாள் பொறுமை யுள்ளாள் தன்வரன் சுகம்கு றைச்சல்
கனமுடன் வாழ்வா ளாகும் காதலி சஞ்ச லத்தாள்
அனையவே புத்திர மில்லாள் அல்பரை உறவு கொள்ளாள்
இனங்களை ஆத ரிப்பள் ஈச்வரி கேட்டி டாயே.

13. பணம் படைத்தவள். பொறுமைசாலி. கணவனின் ஆதரவு மட்டாகவே இருக்கும். ஆயினும் பெருமையுடன் வாழ்வாள். எப்பொழுதும் மனத்தில் கவலையுள்ளவள். புத்திர பாக்கியம் இல்லாதவள். தன்னைவிடத் தாழ்ந்தவர்களிடம் நட்புகொள்ள மாட்டாள். தன் இனத்தவரை ஆதரிப்பாள். பார்வதி தேவியே! மேலும் கேட்டருளல்வேண்டும்.

14. அவளுக்குப் புத்திர பாவம் அறைகிறே மாண்பால் காணேம்
பவமுள பெண்பா லொன்று பருகிடும் இவனுக் கேதான்
தவசியே அந்த மாதை ஜாதகன் மணமே கொள்வன்
கவனமா யிருபான் மூன்றில் கழறினேம் மணங்கள் தாமே.

14. அவளுக்குப் புத்திரர்கள் இருப்பதற்குக் காரணமில்லை. ஆனல் ஒரு பெண் பிறப்பாள். இந்தப் பெண்ணையே இக்கடகலக்கின குமாரன் மணம் செய்து கொள்ளுவான். இவனுக்கு இருபத்துமூன்றும் வயதில் விவாஹம் நடைபெறும்.

15. மாதுவின் குணத்தைச் சொல்வேன் மங்கள வார்த்தை கூறுவன்
தீதுக ளெண்ணு நெஞ்சம் திருமக ளொப்ப தாகும்
சூதுக ளில்லா ளாகும் சிவந்திடு மேனி யாவள்
பாதக மொருவர்க் கெண்ணுள் பாலர்க ளுடைய ளாமே.

15. அந்தப் பெண்ணைப் பற்றிய வரலாறுகளைக் கூறுவேன். எப்பொழுதும் மங்களகரமான வார்த்தைகளைப் பேசுவாள். பிறருக்கு ஒருபோதும் தீமைகளை எண்ணாத நெஞ்சம் படைத்தவள். மஹா லக்ஷ்மியைப் போன்றவள். கள்ளமில்லாதவள். சிவந்த மேனியாள். பிறரது வேலைகளில் இடையூறுகளைச்செய்ய நினைக்கமாட்டாள். புத்திரப்பேறு உடையவள்.

16. அன்னம்போல் சாய லுள்ளாள் ஆளனுக் கினிய ளாகும்
உன்னத வாத தேகி உத்தமி யோக சாலி
அன்னையின் ஆஸ்தி தானே அணுகிடு மிவளுக் கேதான்
தன்னிலே சுகமு முள்ளாள் சகல பாக் கியமு முள்ளாள்.

16. அன்னம்போல் நடையழகு உள்ளவள். கணவனுக்கு மிகப் பிரியமானவள். வாததேகம் வாய்ந்தவள். விசேஷயோக முள்ளவள். தன்தாயின் சொத்துக்கள் இவளை வந்தடையும். சௌக்கியங்களுக்குக் குறைவில்லாதவள். பூமி, வீடு, தோட்டம், பணம், பசுக்கள், வஸ்திரம், ஆபரணம், புத்திரர் முதலிய எல்லா பாக்கியமும் நிறைந்தவள்.

17. பணிகளு முடைய ளாகும் பகருவோம் தெய்வ பக்தி
கணிகைய ரொப்ப தாகும் கனதன முடைய ளென்றேம்
துணிவான குணத்த ளாகும் தொல்புவி கீர்த்தி ஏற்பள்
அனையவே புத்திர பாவம் அறைகிறேம் மேலுங் கேளே.

17. ஆபரணங்களைப் பெறுவாள். தெய்வபக்தி உள்ளவள். கணவனுக்குச் சிற்றின்பத்தில் பூரண திருப்தியை உண்டாக்குவாள். மிகப் பெருந்தனமுடையவள். துணிவு உடையவள். இவளுடைய நற்பெயர் பூமியில் பரவும். இவளுடைய புத்திரபாவத்தைக் கூறுகின்றேம். கேளுங்கள்.

18. ஜாதகன் தனக்குப் புத்திரர் சாந்றுவோ மாண்பால் ரண்டு
மேதினில் கன்னி ரண்டு விருத்தியா மிவனுக் கேதான்
போதவே மூன்று நஷ்டம் போற்றுவோம் மதலை தானும்
கோதிலா இவன்தன் மேலாய்க் குமலிகள் வாழ்வ ரென்றேம்

18. இந்தத் தம்பதிகளுக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் பிறப்பார்கள். அவர்கள் நால்வரும் தீர்க்காயுளுடன் வாழ்வார்கள். இவர்களைத் தவிர மூன்று குழந்தைகள் பிறந்து நீடிக்க மாட்டார்கள். அந் நான்கு குழந்தைகளின் வாழ்க்கை, இக்கடக லக்கின ஜாதகனின் வாழ்க்கையைக் காட்டிலும் எல்லாத் துறைகளிலும் மேலாக இருக்கும்.

19. அன்னையின் குணத்தைச் சொல்வேன் அன்புளள் இருநிறத்தள்
பன்னிய ஒடிச்சல் தேகி பகையிலாள் எவர்க்கு நண்பள்
உன்னத வார்த்தை கூறுவள் உறுதியா மனத்த ளாகும்
அன்னியர் மெச்ச வாழ்வள் அவளுமே ஈகை யுள்ளாள்.

19. இந்த ஜாதகனுடைய அன்னையின் வரலாறுகளைக் கூறுவேன். அன்புள்ளவள். கருத்த மேனியாள். மெலிந்த சரீரம் வாய்ந்தவள். ஒருவரையும் பகைத்துக் கொள்ளமாட்டாள். எல்லோரிடத்தும் தோழமை கொண்டவள். மேலான வார்த்தைகளையே பேசுவாள். உறுதியான மனம் உடையவள். பிறர் கொண்டாடும்படி வாழ்வாள். மேலும் கொடுக்கும் குணமும் உள்ளவள்.

20. அடக்கமு மொடுக்க முள்ளாள் அன்னங்கள் போட வல்லாள்
நடக்கையும் நல்ல தாகும் நற்றந்தம் பெரிதாய்க் காட்டும்
துடுக்கென வார்த்தை சொல்லாள் சொல்லுவோம் பித்தச் சூடு
மடக்கொடி பக்தி பூண்பள் வரைகிறேம் துணைவர் தம்மை.

20. சரீரத்திலும் மனத்திலும் வணக்கமுடையவள். அன்னதானம் செய்ய ஆசை உள்ளவள். நல்ல நடத்தை உடையவள். அவளுடைய பற்கள் பெரியனவாக இருக்கும். பிறர்க்குத் திடீரென அவமானத்தை உண்டாக்கும் வார்த்தைகளைப் பேசமாட்டாள். பித்தச்சூடு உள்ளவள். தெய்வ பக்தி கொண்டவள். அவளுடைய சகோதரர்களைப்பற்றிச் சொல்லுகின்றேம்.

21. துணைவர்க ளாண்பால் ரண்டு சொல்லுவோம் கன்னி ஒன்று
கனமுடன் மூன்று தீர்க்கம் கணக்காது மற்ற வெல்லாம்
அனையவே உள்ளூர் தன்னில் அவளுமே வாழ்வா ளாகும்
இணையிலா இவள் முன்ஜன்மம் இயம்புவோம் மேலுங் கேளே.

21. இவளுக்குச் சகோதரர்கள் இருவர். சகோதரி ஒருத்தி இவர் மூவரும் நீடித்து வாழ்வார்கள். மற்றக் குழந்தைகள் நீடித்திரா. உள்ளூரிலேயே வாழ்க்கைப்பட்டு வாழ்வாள். இவளது முன்ஜென்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேம். கேளுங்கள்.

22. தவளையின் கிரிக்குத் தெற்கில் சாற்றிய பேரூர் தன்னில்
இவளுமே வன்னிய வம்சம் இலகினு ளென்று சொல்வோம்
அவனியில் பாக்கியம் பெற்று அதிகமாய்ப் பணிதி யுண்டாய்ப்
பவமுள வரனின் கூடப் பத்தினி வாழ்ந்தா ளென்றேம்.

22. இவள் தவளகிரி என்று பிரசித்தமான க்ஷேத்திரத்திற்குத் தென் திசையில் பெரிய ஓர் ஊரில் வன்னிய வமிசத்தில் பிறந்திருந்தாள். அந்த ஜன்மத்தில் இவள் ஏராளமான செல்வத்தைப் பெற்றும், ஆபரணம் முதலியவைகளை அடைந்து நற்குணம் வாய்ந்த தனது கணவனுடன் சிறப்புடன் வாழ்ந்தும் வந்தாள்.

23. சுதர்களின் விருத்தி யுண்டாய்ச் சுற்றத்தார் மெச்ச வாழ்ந்து
நிதமுமே வருவோ ருக்கு நிமலியும் தாக மீந்து
பதியினில் திருவு முண்டாய்ப் பாலகன் கலைச னுக்குச்
சதமுடன் தீபம் ஒன்று சத்தியும் வைத்தா ளென்றேம்.

23. புத்திரர்களைப் பெற்று, உற்ருர் உறவினர் மெச்சும்படியும் வாழ்ந்தாள். மேலும் தன் வீடு நாடி வந்தவர்களுக்குச் சோறும் தண்ணீரும் கொடுத்து உதவினுள். அதன் பயனுக இன்னும் செல்வம் அதிகரித்து, தங்கள் குழந்தையான ஸ்ரீ விநாயகப்பெருமானுக்கு பிரதிதினம் ஒரு தீபம் சமர்ப்பித்து வந்தாள்.

24. தோகையின் வேலன் பக்தி சுந்தரி அதிகம் வைத்துப்
பாகமாய் வரனின் முன்னே பத்தினி மரண மானுள்
ஆகையால் அவர்கள் வீட்டில் அவள்குல தெய்வ மாகச்
சேகரம் செய்து வாழ்வாள் செப்பின மொழி குன்ருது.

24. அப்பொழுது இவளுக்கு ஸ்ரீசுப்பிரமணியசுவாமியிடம் பக்தியும் சிறந்து விளங்கிற்று. காலக்கிரமத்தில் இவள் கணவனுக்கு முன்னமேயே மரணமடைந்தாள். அதனுல் அவள் அக்குடும்பத்தில் குலதெய்வமாகக் கொண்டாடப்பட்டுச் சிறபிக்கப்பட்டு விளங்குவாள். சொல்லிய வார்த்தை தவருது.

25. கஞ்சனுல் வரையப் பட்டுக் காதலி இச்சென் மத்தில்
வஞ்சியு மிக்குலத்தில் வந்தவ ளிவேளே யென்ருேம்
தஞ்சமாய்க் கணேச ருக்குச் சத்தியும் தீப மொன்று
மிஞ்சியே வைத்த தாலே விளங்கிற்றுப் புத்திர ரொன்றே.

25. பிறகு பிரம்மதேவனுல் இவள் இந்தக் குலத்தில் பிறப்பிக்கப் பட்டாள். இவளுக்கு ஒரே ஒரு பிள்ளை பிறப்பதற்கான காரணத்தைக் கூறு கின்ருேம். முன்ஜன்மத்தில் இவள் கணேசப்பெருமானுக்கு ஒரு தீபம் சமர்ப்பித்து வந்தமையால் இந்த ஜன்மத்தில் இவளுக்கு ஒரே ஒரு பிள்ளை தான் உண்டு.

26. பின்ஜன்மம் காஞ்சி தன்னில் பிராமண குலமு திப்பாள்
தன்னிலே செல்வ முண்டாய்த் தன்வர னுடனே வாழ்வள்
அன்னையும் கேட்க லுற்ருள் அவளிந்த ஜன்மம் தன்னில்
உன்னித கங்கை வம்சம் உறைந்துமே மறுஜன் மத்தில்.

26. இவள் மறுஜன்மத்தில் காஞ்சீபுரத்தில் பிராமண வமிசத்தில் பிறப்பாள். அக்காலத்திலும் இவள் அதிக செல்வம் படைத்தவளாகத் தன் கணவனுடன் சுகமாக வாழ்வாள். இவ்வாறு முனிவர் சொன்ன வுடன், பார்வதி தேவி கேட்கலுற்ருள். இந்த ஜன்மத்தில் வேளாள வமிசத்தில் பிறந்த இவள் மறு பிறவியில் ;

27. மறைக்குல முதிப்ப தென்ன வறைகுவார் முனிவர் தாமும்
பெருமையா யிச்சென் மத்தில் பந்துவுக் கினிய ளாகி
வருவோர்க்குத் தாகம் அன்னம் மனமது தளர்ச்சி யாகிக்
குறைவிலா தெய்வ பக்தி கொண்டதா லுதிப்பா ளென்ருேம்.

27. அந்தணர் குலத்தில் பிறப்பதற்குக் காரணம் என்ன ? சொல்லுங் கள் என முனிவர் இதற்குப் பதில் கூறுகின்ருர். இந்த ஜன்மத்தில் இவள் உறவினருக்கு நல்லவளாக நடந்துகொண்டதாலும், தன் வீடு நாடி வந்தவர்களுக்கு மனமிரங்கி சோறும் தண்ணீரும் அளித்ததாலும்; பரிபூரண சச்சிதானந்த சொரூபியான கடவுளிடம் எப்பொழுதும் பக்தி கொண்டிருந்தமையாலும் இவள் மறுஜன்மத்தில் பிராம்மண குலத்தில் பிறப்பாள் என்ருேம்.

28. தந்தையின் முன்ஜன்மத்தைச் சாற்றுவோம் காஞ்சி தன்னில்
பந்தமாய் வைசிய வம்சம் பாலக னுதித்து மேலும்
சந்ததம் செட்டுச் செய்து தனமது பெருக்க முண்டாய்
முந்திய மனைவி மைந்தர் முபற்சியாய் வாழ்வா னென்ருேம்.

28. இந்தக் கடக லக்கின குமாரனது தகப்பனுரின் முன்ஜன்மத்தைப் பற்றிக் கூறுகின்ருேம். இவன் முன் பிறவியில் காஞ்சீபுரத்தில் வைசிய குலத்தில் பிறந்தான். அப்பொழுது அவன் வியாபாரம் செய்து அதிகச் செல்வத்தைப் பெற்றிருந்தான். தன் மனைவி மக்களுடன் சுகமாக வாழ்ந்து வந்தான்.

29. பித்தகுன் மத்தி னுலே பூமியில் மரண மாகி
வித்தகன் கங்கை சேயாய் விளங்கின னிவனே யென்ருேம்
சித்தமா யிவன் பின்ஜன்மம் செப்புவோமவ் வூர் தன்னில்
சுத்தமா யிக்கு லத்தில் தோன்றுவா னிவனே யென்ருேம்.

29. பிறகு அந்திய காலத்தில் பித்த குல்மத்தினுல் கஷ்டப்பட்டு மரண மாகி, இங்கு வேளாள வமிசத்தில் பிறந்து, இக் கடகலக்கின மகனுக்குத் தந்தையாக ஏற்பட்டிருக்கின்ருன். இவனது பின்ஜன்மத்தையும் சொல்லுகின்ருேம். இப்பொழுது வசிக்கும் ஊரிலேயே பிறரை எதிர் பாராத வேளாள குலத்திலேயே தோன்றுவான்.

30. ஜாதகன் முன்ஜன் மத்தைச் சாற்றுவோ மருணை கீழ்ப்பால்
மேதினில் பேரூர் தன்னில் வித்தகன் சூத்திர வம்சம்
தீதிலா உதித்தா னென்ருேம் தேவியும் மதலை யுண்டாய்ப்
பூதலம் குறைவ தாயும் பெரிதான செட்டுச் செய்தான்.

30. ஜாதகனுடைய முன்ஜன்மத்தைப் பற்றிக் கூறுவோம். இவன் முன் பிறவியில் திருவண்ணுமலைக்குக் கீழ்த்திசையில் ஒரு பெரிய ஊரில் சூத்திர வமிசத்தில் உதித்திருந்தான். அப்பொழுது அவன் மனைவி மக்களை அடைந்து பெரியதோர் வாணிபம் செய்து வாழ்ந்தான்.

31. பலவித தலங்கள் சென்று பிராமணர் பக்தி யுண்டாய்க்
குலவியே தான தர்மம் குணமுடன் செய்து வந்து
உலகுளோர் மெச்ச வாழ்ந்து உத்தமன் மரண மாகி
நலமுள இக்கு லத்தில் நாயகன் உதித்தா னென்ருேம்.

31. பலபல புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச் சென்ருன். அந்தணர் களிடம் பகைமையின்றிப் பக்தியோடிருந்தான். தானதருமங்களை மன முவந்து சிரத்தையுடன் செய்து வந்தான். உறவினர் மெச்சும் வகையில் வாழ்ந்து, பிறகு மரணமாகி இக் குலத்தில் பிறந்திருக்கின்ருன் என்ருேம்.

32. முன்ஜன்மம் செய்த புண்ணியம் மொழிகிறே மிச்சென் மத்தில்
தன்செல்வ மேல்மே லோங்கும் தழைத்திடும் குடும்பம் தானும்
அன்னையும் கேட்க லுற்றாள் அவன்துணை விக்குப் புத்திரர்
சொன்னீரே இல்லை யென்று சுந்தரி தனக்குக் கர்மம் ;

32. முன் பிறவியில் செய்த நற்காரியங்களின் பயனுக இந்தப் பிறவியில் இவனது செல்வம் மேன்மேலும் ஓங்கி வளரும். குடும்பம் தழைத்துப் பல கிளைகள் ஏற்பட்டுப் பரவும். இங்கு அன்னை பார்வதி கேட்கின்றாள் ; இவனுடைய சகோதரிக்குப் புத்திரப்பேறு இருக்காது என்று [பதின்மூன்ரும் பாட்டில்] சொன்னீர்கள். அவ்வாருயின் அவளுக்கு ஈமச் சடங்குகளை ;

33. எவர்கள்தாம் செய்வார் சொல்லாய் இயம்புவோம் கேளு மம்மா
நவனியில் தவத்தி ஞலே நாட்டுவோம் கிரியை தானும்
பவமுள குடும்ப மொன்ருய்ப் பாலிப்பா ளிவளே யென்றேம்
சிவன்தனைப் பூசை செய்யும் தேவியே கேட்டி டாயே.

33. யார் செய்வார்கள் ? இவ்விஷயத்தைச் சொல்லுவீர்களாக என முனிவர் பதில் கூறுகின்ருர். உண்மை. அவளுக்குப் புத்திரர் இல்லை. ஆயினும் அவளுக்கு தௌஹித்திரனல் [பெண்ணின் பிள்ளையால்] ஈமச் சடங்குகள் நடைபெறும். அவள் [இந்த ஜாதகனின் மூத்த சகோதரி] தன்னுடைய பெண்ணின் குடும்பத்தையும் தனது குடும்பத்தையும் ஒன்ருகப் பாவித்துப் பரிபாலிப்பாள் என்று முன்னமேயே சொல்லியிருக்கின்றேம். சிவபிரானைப் பூசைசெய்யும் தேவியாரே ! மேலுங்கேளுங்கள்.

34. தந்தைதாய் மரண காலம் சாற்றுவோ முப்பா னுண்டில்
பந்தமாய்த் தேளின் மாதம் பகருவோம் தந்தைக் கேதான்
பிந்தியு மன்னைக் கேதான் பேசுவோ முப்பா னென்பான்
சந்ததம் தனுசு மாதம் சாற்றினேம் கண்டம் தானே.

34. இந்த ஜாதகனது தந்தை தாய் இவர்களுடைய மரண காலத்தைச் சொல்லுகின்றேம். முப்பதாவது வயதில் கார்த்திகை மாதத்தில் இவனுடைய தந்தை மரணமாவான். தாய் இவனுடைய முப்பத்து ஒன்பதாவது வயதில் மார்கழி மாதத்தில் மரணமடைவாள்.

35. இன்னவன் மரண காலம் இயம்புவோ மறுபா னுலில்
தன்னிலே மேட மாதம் சதுர்த்தசி வளர்பக் கத்தில்
அன்னவன் பித்த நோயின் அவத்தையால் மரண மாவன்
உன்னத இவன்பின் ஜன்மம் உரைக்கிறேம் கேளு மம்மா.

35. இந்த ஜாதகனுக்கு அறுபத்துநான்காவது வயதில் சித்திரை மாதத்தில் வளர்பிறைச் சதுர்த்தசி திதியில் பித்த [காமாலை முதலியன] நோயினுல் மரணமுண்டாகும். இவனது பின்ஜன்மத்தைப் பற்றிக் கூறுவோம். கேளுங்கள் தாயே !

36. கச்சியில் பிரம்ம சேயாய்க் காவல னுதிப்பா னுகும்
உச்சித கல்வி கற்று உத்தம னரசர் பக்கம்
மிச்சமா யதிகா ரங்கள் வித்தகன் செய்வா னுகும்
அச்சுதன் தங்கை யாளே அறைகிறேம் மேலுங் கேளே.

36. காஞ்சீபுரத்தில் பிராம்மண குலத்தில் உதிப்பான். நல்ல கல்வியைக் கற்று, அரசர்களிடம் [அரசாங்கத்தில்] விசேஷ அதிகாரத்தைப் பெற்று விளங்குவான். திருமாலின் தங்கையே ! மேலும் சொல்லுகிறோம். கேளுங்கள்.

37. இன்னவன் பொதுயோ கத்தை இயம்புவோம் சுகமு முள்ளான்
தன்னிலே பூமி சேர்ப்பன் தைரியன் வறுமை யில்லான்
உன்னத மனையாளாலே உரைந்திடும் பூமி தானும்
அன்னையே பிறைபோல் யோகம் அமர்ந்திடு மென்று சொன்னேம்.

37. இவனுடைய பொதுவான யோகங்களைக் கூறுகின்றேம். மிக்க சௌக்கிய முள்ளவன். தன்முயற்சியால் பூமிகளைச் சேர்ப்பான். தைரியசாலி. ஏழ்மை இல்லாதவன். தனது மனைவியின் மூலமும் இவனுக்குப் பூமிகள் சேரும். தாயே ! இவனது யோகங்கள் வளர்பிறைச் சந்திரன் போல மேன்மேலும் வளர்ந்திடும்.

38. பாக்கிய முடைய னுகும் பலரையும் சிநேகம் கொள்வன்
வாக்குச் சொல் மேன்மை யுள்ளான் மானில மதிக்க வாழ்வன்
நீக்குவா னல்பர் தம்மை நிதானமாய் வார்த்தை கூறுவன்
யோக்கிய னுகி வாழ்வன் உறைந்திடும் திருவு தானே.

38. எல்லா வித பாக்கியமும் உள்ளவனுவான். பலரையும் சிநேகம் செய்து கொள்ளுவான். பேச்சுத் திறமை உள்ளவன். எல்லோரும் கௌரவிக்கும்படி சிறப்பாக வாழ்வான். தாழ்ந்தோரிடம் பழக்கம் கொள்ள மாட்டான். வெகு கவனமாகப் பேசுவான். எல்லோருடைய நம்பிக்கைக்கும் பாத்திரமானவன். லக்ஷ்மீவாசம் பொருந்தியவன்.

39. உதித்திடு காலம் தன்னில் உயர்கேது தசையி ருப்பு
விதித்திடு திங்கள் பத்தும் விளம்புவோம் பலனை யாங்கள்
சதியான ரோகம் வாய்க்கும் ஜாதகன் தனக்கு மேதான்
அதிகமாய் லாப மெய்தும் அவன்தந்தை தனக்குத் தானே.

39. இவனது ஜனனகாலத்தில் கேது தசையில் இருப்பு மாதங்கள் பத்து மாத்திரம்தான் [மக நக்ஷத்திரம் நான்காம் பாதத்தில் ஜனித்தவன்]. இந்தக் கேது தசையில் ஜாதகனுக்கு நோய் நேரும். ஆனல் இவனது தந்தைக்கு அதிக லாபங்கள் கிடைக்கும். அவனுக்கு நல்ல ஆரோக்கியமும் இருக்கும்.

40. புகர்தசை காலம் தன்னில் கனதனம் மேன்மே லோங்கும்
புவியது சேரு மென்றேம் புதிதான கிருகம் நேரும்
நவிலுவோம் குடும்பம் தன்னில் நற்சுபம் துணைவ ருக்கு
அவனியில் பெரிய தந்தை அவன் புத்திரர்க் கதிகா ரங்கள்.

குறிப்பு.—இந்த ஜாதகன் குழந்தையாக இருக்கும்போது நல்ல தசைகள் வந்தால் அதனுல் வரும் சில யோகங்கள் இவனுக்கு நேரடியாக நடப்பதற்கு முடியாதாகையால் பொதுவாகக் குடும்பத்திற்கும் விசேஷமாகத் தந்தைக்கும் அந்த யோகங்கள் நடைபெறும் என்று சொல்ல வேண்டும்.

40. சுக்கிரன் தசையில் ஜாதகனின் தந்தைக்குச் செல்வமும் செல்வாக்கும் மேன்மேலும் அதிகமாகும். பூமிகள் சேரும். புதியதொரு வீடு கட்டுவான். குடும்பத்தில் ஜாதகனின் சகோதரிக்கு நற்சுபங்கள் [கலியாணம் முதலியன] நடைபெறும். பெரிய தந்தையின் பிள்ளைகளுக்கு அதிகாரங்கள் வரும்.

41. நேரிடும் தானிய விருத்தி நிகர்தந்தை செட்டுச் செய்வன்
கூறுவோம் துணைகளுக்கு கொண்டவன் மரண மாவன்
நாரியே தாய்தந் தைக்குந் நற்சுதன் இவர்கட் கெல்லாம்
பாரிய ரோகம் வாய்க்கும் பருகினும் நிவிர்த்தி யாமே.

41. நவதானியம் விருத்தியடையும். தந்தைக்குச் சமமாக வியாபாரம் செய்வான். சகோதரியின் கணவன் மரணமாவான் என்றும் சொல்ல வேண்டும். தாய் தந்தை ஜாதகன் இவர்கள் எல்லோருக்கும் கொடிய நோய் வரும். ஆனுல் சீக்கிரத்திலேயே நீங்கும்.

42. பூமியால் வழக்கு நேரும் புதுமனை சேரு மென்றோம்
நேமியோர் புகழ வாழ்வன் நாற்காலி விருத்தி யாகும்
சேமமாம் குடும்பம் தானும் ஜனபந்து சூதம் நேரும்
தாமத மாக ரண்டில் சாற்றுவோம் விபர மாக.

42. பூமியினுல் வியாஜ்யம் நேரிடும். புதியதொரு வீடும் கட்டுவான் என்று முன்பே சொன்னேம். உலகத்தார் புகழும்படி வாழ்க்கையை நடத்துவான். கால்நடைகளை அபிவிருத்தி செய்வான். குடும்பத்தில் க்ஷேமமிருக்கும். ஆனுல் பந்து வருக்கத்தில் மரணத்தினுல் தீட்டு (தீங்கு) நேரும். இவனது பலன்களைப்பற்றி விவரமாக இரண்டாம் பாகத்தில் கூறப் போகின்றோம்.

43. அத்திரி முனிவர் சொல்ல அம்பிகை கேட்க லுற்றுள்
சித்தமாய்த் தந்தை மூத்தோர் சேதியைச் சொல்லு மெனப்
பத்தியா யிரண்டில் சொல்வேன் பலன்களை விபரமாக
முத்தனே தவங்கள் செய்யும் முதல்வியே கேட்டி டாயே.

43. இவ்வாறு அத்திரி முனிவர் சொன்னவுடன் பார்வதி தேவி, இந்தச் ஜாதகனுடைய பெரிய தந்தையைப்பற்றிய செய்திகளைச் சொல்லுவீர்களாக, எனக் கேட்டாள். அத்திரி முனிவர், தாயே! பெரிய தந்தையைப்பற்றிய விபரங்களை இரண்டாம் பாகத்தில் சொல்லுகின்றேம். மேலும் கேட்டருளல் வேண்டும்.

ஜாதகம் 12

1. அளியது இலக்கின மாக அரிவையில் மதி சுன்நிற்க
விளிதச மரவு கேந்திரம் வெஞ்சிகி லாப மைந்தில்
களி புதன் தனத்தோ ஞறில் கனகன்சேய் தரும மாகத்
தளிர்பெறும் நவக்கோ ளிவ்வாறு தங்கிட ஜனித்த சேயும்.

குரு செவ்வாய்	ராகு		
	இராசி சக்கரம்		இலக்கினம்
புதன் சூரியன்	சுக்கிரன்	கேது	சந்திரன் சனி

1. நந்தன வருஷம் மார்கழி மாதம் 26-ஆந்தேதி ஞாயிற்றுக்கிழமை இரவு சுமார் ஒரு நாழிகைக்கு ஜனனம்.

ஆங்கிலத் தேதி 8-1-1893.

நவக் கிரஹங்களின் பாதசாரம்.

பூராடம் 4-இல் சூரியன். ஹஸ்தம் 1-இல் சந்திரன். உத்திரட்டாதி 4-இல் செவ்வாய். மூலம் 2-இல் புதன். ரேவதி 3-இல் குரு. கேட்டை 4-இல் சுக்ரன். ஹஸ்தம் 4-இல் சனி. அசுவினி 4-இல் ராஹு. சுவாதி 2-இல் கேது. ஜனன காலத்தில் ஹஸ்த நக்ஷத்திரம். சந்திர தசையில் இருப்பு வருஷங்கள் ஒன்பது. இலக்கினம் கடகம். சந்திரன் சனி கன்னியிலும் ராஹு மேஷத்திலும், கேது துலாத்திலும், சுக்கிரன் விருச்சிகம், புதன் சூரியன் தனுஸிலும், குரு செவ்வாய் மீனத்திலுமாக இவ்வாறு நவக்கிரகஹங்கள் நிற்க, பலன்களைச் சொல்லுவீர்களாக.

குறிப்பு.—இந்நூலாசிரியர் நக்ஷத்திரதையோ தசை இருப்பவையோ தெளிவாகச் சொல்லாவிடினும், நாம் ஒருவாறு ஊகித்தறிந்து தீர்மானமாகத் தேதி முதலியவைகளைத் தெரிவித்திருக்கிறேம். இவ்விஷயத்தை ஆராய்ந்து பார்ப்பவர்களே ரஸிப்பார்கள்.

2. காலனை யுதைத்தோன் தேவி கழறுவ தாண்பாலாகும்
சீலமவ் வீதி தானும் செங்கதிர் வாயு வாகும்
கோலமில் உத்திர நோக்கம் குறித்திடு மரணின் கோஷம்
சேலதில் இருக்கும் தென்பால் விளங்குநீ ரோட்டம் கீழ்ப்பால்.

2. யமனை உதைத்துத் தள்ளிய பரமசிவனது தேவியே! இக் கிரஹ நிலையில் உதித்த குழந்தை ஆணாகும். வீதி கிழக்கு மேற்காக அமைந்திருக்கும். வீடு வடக்கு நோக்கி இருக்கும். தென் புறத்தில் பரமசிவனுடைய கோயிலுண்டு. கீழ்த்திசையில் ஒரு வாய்க்கால் இருக்கும்.

3. மாரியும் மூக்கண் ணேனும் வாசமாம் சிலேயில் தந்தி
வீரிய வடபால் காளி விளங்குநீ ரோட்டம் கீழ்ப்பால்
கூறுநல் லடையா ளங்கள் குறித்தநற் சிற்றூ ரிற்றன்
[1]காராள கோத்தி ரத்தில் கணமுடன் உதிப்பா னென்றோம்.

3. கீழ்த் திசையிலேயே மாரியம்மன் கோயிலும் பரமசிவனுடைய மற்றொரு கோயிலும், விநாயகரது ஆலயமும் இருக்கும். வடதிசையில் காளி கோயிலுண்டு. அதற்குக் கீழ்ப்புறத்தில் கால்வாயும் இருக்கும். மேலே கூறப்பட்ட அடையாளங்கள் அமைந்த சிறிய ஓர் ஊரில் காராளகோத்திரத்தில் இவன் உதித்திருப்பான்.

4. எழுவரும் பதத்தைப் போற்றி இயம்பினோம் உமையே யின்னம்
குழவியின் ஜனன யோகம் குணமுள தந்தை யோகம்
வொழுமுளம் பின்ஜன் மங்கள் உரைபல மெல்லா மாய்ந்து
வழிபடு மிந்த நூலில் வகுத்திடக் கேட்டி டாயே.

4. தேவியே! உனது திருவடிகளைப் போற்றி விட்டு, ஏழு ரிஷிகளாகிய நாங்கள் இவனுடைய தந்தை மனைவி புத்திரர் இவர்களைப் பற்றியும், இவனுடைய யோகம் முன்பின் ஜன்மங்கள் இவைகளைப் பற்றியும் இந்த நூலில் சொல்லுகின்றோம். கேட்டருளல் வேண்டும்.

5. பொங்கிய குடும்பச் செய்கை பூவையே எடுத்துரைப் போம்
தங்கிய பிதிரின் வர்க்கம் தரித்திடும் ஆண்பால் மூன்று
இங்கித பெண்பால் யாதும் இலகிடா அவையே தீர்க்கம்
மங்கையே பாலன் வர்க்கம் வழுத்துவோம் இனிமேல் கேளே.

5. தேவியே! பால் பொங்குவது போல் பொங்கி மேன்மேலே வளரும் இவனுடைய குடும்பத்தைப்பற்றி எடுத்துரைக்கின்றோம். தந்தைக்குச் சகோதரர்கள் மூவர். சகோதரிகள் விளங்கமாட்டார்கள். அந்தச் சகோதரர்கள் மூவரும் தீர்க்காயுளுடன் வாழ்வார்கள். தாயே! இந்த ஜாதகனின் வருக்கத்தை இனிமேல் சொல்லப்போகின்றோம். செவி சாய்த்துக் கேளுங்கள்.

6. சுந்திரன் வர்க்க மாண்பால் சூழ்ந்திடு மிருவ ராகும்
எந்தையே பெண்பால் மூன்று இலகிடும் தீர்க்க மாக
வந்ததன் மேலா யுற்றல் வளமுறு தரிஷ்ட மாகும்
செந்திரு வதனத் தாளே சொன்னது தவறி டாதே.

---

[1] காராளர்=வேளாளர்.

6. இந்த கடகலக்கின பாலனுக்குச் சகோதரபாவத்தைச் சொல்லுகின்றோம். சகோதரர்கள் இருவர். சகோதரிகள் மூவர். இவர்கள் ஐவரும் நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள். இதற்குமேல் பிறக்கும் குழந்தைகள் பாலாரிஷ்டத்தினால் நீடித்து வாழா. சுந்தரவதனமுள்ள தேவியே! இவ் வார்த்தைகள் தவறா.

7. நிறங்குணம் இனிமே லாங் நிகழ்த்துவோம் பால னுக்கு
உறமுள சிவந்த மேனி உடலது சமமாய் நிற்கும்
தருமுள சமவ ளர்த்தி சார்ந்திடும் உஷ்ண தேகி
குறைவிலா தரள தந்தம் கொண்டிடும் பால னுக்கே.

7. இனிமேல் இந்தப் பாலகனது நிறம் குணம் முதலியவைகளைக் கூறுகின்றோம். நன்கு சிவந்த மேனியன். கை கால் முதலிய அவயவங்கள் ஏற்றத்தாழ்வின்றி அளவுக்கேற்றபடி அமைந்திருக்கும். பொதுவாகச் சரீரமும் திட்டமாக வளர்ந்திருக்கும். இவனது உடலில் எப்பொழுதும் உஷ்ணம் அதிகரித்திருக்கும். முத்துக்கள் போன்ற அழகிய பற்களை உடையவன்.

8. அடுத்தவர்க் குதவி செய்வன் ஆண்மையு முடையான் சொல்லும்
எடுத்தநற் கர்மம் வெல்வன் எவர்களும் நல்லோ னென்பர்
கொடுப்பதில் தாட்டியுள்ளான் கொடையுளான் சூரன் சொல்லில்
தொடுத்தபேர் வழக்கு வெல்வன் தோகையர்க் கினிய னென்னே.

8. தன்னை அண்டியவர்களுக்கு உபகாரம் செய்யும் இயல்புள்ளவன். பிறரை அடக்கி ஆளும் திறமை படைத்தவன். தான் தொடங்கிய முயற்சிகளில் வெற்றியை நிச்சயமாகக் காண்பன். எல்லோரும் இவனை நல்லவன் என்று கொண்டாடுவார்கள். பிறருக்குப் பொருள்களைக் கொடுப்பதில் பேரவாக் கொண்டவன். ஆகையால் இவனைக் கொடையாளி என்று சொல்லவேண்டும். காரியங்களைத் திறம்படச் செய்வான். தொடுத்த வியாஜ்ஜியங்களில் ஜயம் பெறுவான். பெண்களால் விரும்பத்தக்கவனாகவும் இருப்பான்.

9. சகலரும் புகழ வாழ்வான் சன்மார்க்கன் துக்க வாதி
அகமதில் தெய்வ பக்தி அணுகுநல் மனத்த னாகும்
நகைமுகன் அடைக்காய்ப் பட்சன் நாவலர் தமக்கு மீவன்
சுகமுளான் ஈகை மேலான் சோர்விலா னென்று பேசே.

9. உலகத்தோர் போற்ற வாழ்க்கையை நடத்துவான். தருமநெறியினின்று வழுவாதவன். ஒவ்வொரு பொருளாலும் ஏற்படும் துன்பத்தையே காண்பான். அதையே பிறர்க்கும் எடுத்துச் சொல்வான். மனத்தில் தெய்வ பக்தி நிறைந்தவன். [தனது தெய்வ பக்தியைப் பிறர் அறியக் காட்டிக் கொள்ளாதவன் என்பது கருத்து.] நல்ல மனம் படைத்தவன். எப்பொழுதும் புன்முறுவல் பூத்த முகத்தன். வெற்றிலையைச் சுவைப்பதில் சபலமுள்ளவன் வித்துவான்களுக்கும் சன்மானம் வழங்குவான். சௌக்கியங்களை அனுபவிப்பான். ஈகைக்குணம் இவனிடம் தலைதூக்கி நிற்கும். உடலிலும் மனத்திலும் சோர்வில்லாதவன். [உத்ஸாஹம் குன்றாதவன்.]

10. வித்தையும் பலமாய் நிற்கும் விளங்கிடும் தமிழ்தெ லுங்கு
சத்திய அன்னிய பாஷை சார்ந்திடும் விருத்தி யாகும்
குத்தமும் எவர்க்கும் செய்யான் குவலயம் தனதான்யங்கள்
பத்திய பூமி செல்வம் பகர்நிதி மேன்மே லுள்ளான்.

10. ஆழ்ந்த கல்வியறிவு உள்ளவன். தமிழ் தெலுங்கு இவைகளைத் தவிர வேறு ஒரு பாஷையிலும் பாண்டித்தியம் பெறுவான். பிறருக்குக் கெடுதல் செய்யாதவன். தனம் தானியம் நிலம் நிதி இவைகள் மேன் மேலும் வளரும்.

11. அன்னிய மனுக்கள் நேயன் அலங்கார முடையோ னுகும்
துண்ணிய ததிநெய் பாலில் தொடர்சிறு புளிப்பி லிச்சை
கண்ணிய முடைய னுவன் கேண்மையோ ரதிக பட்சன்
நன்னிதி புவியில் மிக்க நல்கிடும் தவறி டாதே.

11. பிறசாதியாருக்கும் நண்பனுவான். தன்னை அலங்கரித்துக் கொள்ளுவதில் விருப்பமுடையவன். தயிர் பால் நெய் முதலியவை களிலும், புளிப்பிலும் ஆசை உள்ளவன். கௌரவம் வாய்ந்தவன். உறவினர்களிடம் அதிக பிரியம் வாய்ந்தவன். இவனுக்கு அதிக நிதியும் தவறாமல் கிடைத்திடும்.

12. தானதர் மங்கள் மிக்க தான்மிக வருந்திச் செய்வன்
கோனவ னருளு முள்ளான் குணமுளான் தீர சித்தன்
மானமாம் பிரபுக்கள் மேலோர் மகிழ்ந்திடும் பட்ச னுகும்
நானிலம் புகழ்மேன் மேலாய் நாடிடும் இவனுக் கென்னே.

12. தன் சுகங்களைப் புறக்கணித்தும் கூடத் தான தருமங்களைச் செய் வான். அரசனுடைய அருளிற்குப் பாத்திரமாவான். நற்குணங்கள் வாய்க் கப் பெற்றவன். தைரியசாலி. பெரிய பிரபுக்களின் அன்பிற்கும் பாத்திர மாவான். இவனுடைய புகழ் மேன்மேலும் ஓங்கி வளரும்.

13. எதிரியை லகுவில் வெல்வன் இனஜன பட்ச னுவன்
கதியுள பொருளும் வாய்க்கும் கேவலம் எவர்கு மாகான்
பதியிவன் ஜன்னம் பின்னுல் பால்கடல் போலே யில்லம்
கதமுடன் விருத்தி யோங்கிக் களைத்திடும் கழன்றிட் டோமே.

13. சத்ருக்களைச் சுலபமாகவே வென்றிடுவான். தன்து சாதியாரிடம் அதிக அன்புள்ளவன். நற்பொருள்கள் கிடைக்கும். யாரும் இவனைத் தாழ்வாக நினைக்கமாட்டார்கள். இவன் ஜெனித்த பிறகு இவனது குடும் பம் பாற்கடல் போலே எல்லாத் துறைகளிலும் விருத்தியாகி விசாலமாகும்.

14. பாரிய அரசர் நேயன் பாங்குளான் பிரதானி யாவான்
மாறிடான் சொற்க ளம்மா மதலையும் யோக சாலி
நாரியர் இவன்மே லிச்சை நல்கியே வலிவாய்ச் சேர்வர்
கூர்விழி வேல்போ லாகும் குணமுளான் புகன்றிட் டாரே.

14. பெரிய அரசர்களுக்கும் [பெரிய அரசாங்க அதிகாரிகளுக்கும் என்று கருதவேண்டும்.] நண்பனுவன். அழகுள்ளவன். இவன் வசிக்குமிடத்தில் இவனே பிரதான மனிதனுக விளங்குவான். தான் சொற்படி நடப்பான். இவ

னுடைய குழந்தைகளும் நல்ல அதிருஷ்ட முள்ளவர்களாக இருப்பார்கள். பெண்மணிகள் இவனிடம் வேறு தூண்டுதலின்றிக் காதல் கொள்வார்கள். கண் பார்வை கூர்மையாக இருக்கும். முன் சொல்லப்பட்ட குணங்கள் தவிர, வேறு நற்குணங்களும் வாய்ந்தவன்.

15. முன்வரும் கோப முண்டு மூத்தோர்கள் வெகுபேர் நேயன்
நன்பூசை நேச முள்ளான் நக்கன்மேல் பக்தி யுள்ளான்
அனந்த பூஷணங்க ளாடை அணிகந்தப் பிரியன் சொல்லும்
தென்பாடு அனங்க னைப்போல் தேர்ச்சியாய் வாழ்வா னுமே.

15. சிறிது முன் கோபி. வயதான பெரியோர்கள் பலர் இவனுக்கு நண்பர்களாக இருப்பார்கள். பூசை செய்வதில் சிரத்தையுள்ளவன். சிவ பிரானிடம் பக்தி பூண்டன். ஆடை ஆபரணம் சந்தனம் முதலிய வைகளில் பிரியம் உள்ளவன். மன்மதன் போல அழகு குன்றுமல் வாழ்ந்திடுவான்.

16. புண்ணியம் தருமந் தன்னுல் பொருளது செலவ ழிப்பன்
நண்ணறு செய்கை யுள்ளான் நற்சுதன் மன்றல் காலம்
திண்ணமா யெடுத்து ரைப்போம் தேவிகேள் ஒருபா னென்பால்
ஒண்ணிய வருட கோணம் உதித்தாளே மணப்பா னென்றேம்.

16. இவனது செல்வம் தரும வழிகளில் செலவழிக்கப்படும். இப்படிப் பட்ட நற் செய்கைகள் உடைய இவனது கலியாண காலத்தைச் சொல்லு கின்றேம். இவனுக்கு, பத்தொன்பதாவது வயதில் திண்ணமாக மணம் நடை பெறும். தனுர்லக்னத்தில் உதித்தவளே இவன் விவாகம் செய்துக் கொள்வான்.

17. அன்னவள் கமலை போல அழகுளாள் விவேகி யாவாள்
கன்னியாம் அவட்குப் புத்திரர் கழறுவோ மாண்பா லிரண்டு
துன்னிய பெண்பால் மூன்று துலங்கிடும் தீர்க்க மாக
வின்னமா யிதன்மேல் நேர்ந்தால் விளங்கிடா வென்று செப்பே.

17. அவள் மஹாலக்ஷ்மி போல் அழகுள்ளவள். மிகவும் பகுத்தறி வுடையவள். இந்தத் தம்பதிகளின் சந்ததியைப்பற்றிக் கூறுகின்றேம். ஆண்கள் இருவர், பெண்கள் மூவர். ஆக இந்த ஐவரும் நீண்ட காலம் வாழ் வார்கள். இந்த எண்ணிக்கைக்கு மேல் குழந்தைகள் பிறந்தால் அவை விளங்கமாட்டா.

18. விளம்பவள் தன்னு லில்லம் விருத்திக்கு மேன் மேலாகக்
களங்கமில் இவன் முன்ஜன்மம் கழறுவோம் இனிதான் கேளும்
தலம்புகழ் மதுரை நாட்டில் சார்ந்திடும் பேரூரிற்றுன்
வளம்பெரு வைசிய னுக வாய்த்திவன் ஜனன மானுன்.

18. இவள் இக்குடும்பத்தில் வாழ்க்கைப்பட்ட பிறகு குடும்பம் எல்லா விதங்களிலும் அபிவிருத்தியடையும். இந்த ஜாதகனுடைய முன் ஜன் மத்தைப்பற்றிக் கூறுவோம். இவன் பாண்டிய நாட்டில் மதுரைக்குச் சமீ பத்தில் ஒரு பெரிய ஊரில் வளம் பொருந்திய வைசிய குலத்தில் பிறந் திருந்தான்.

19. தன்னிலே வணிப மேலாய்ச் சார்ந்ததில் பொருள்கள் விருத்தி
பொன்னோடு பணிதி யோங்கப் புகழுமே பொருளு மிக்க
அன்னையே அறங்கள் மேலாய் அறுமுகன் கோஷ்டத் திற்கு
மன்னவ னிட்ட தன்றி மாபெரும் அகதி யோர்க்கு ;

19. பிறகு தக்க வயதில் வியாபாரத்தை ஆரம்பித்து நடத்தி, எல்லோரும் இவனைப் புகழும் வகையில் பொருள்களை விருத்தி செய்து, தங்கம் வெள்ளி ஆபரணங்கள் முதலியவைகளை அடைந்து, அதன் பயனாக பல அறங்களைச் செய்தான். ஆறுமுகக் கடவுளது ஆலயத்திற்கு ஏராளமாகத் திருப்பணிகளைச் செய்தும் வந்தான். இவைகளுமன்றிக் கூட்டம் கூட்டமாக வந்த ஏழைகளுக்கு ;

20. பூசையோ டினிதா னன்னம் புகழ்ச்சியா யளித்து நாளும்
வாசமாம் புஷ்பங் கொண்டு வளர் சிவன் தமக்க ளித்தே
மாசிலா வருகுங் காலே மருவிய வூழே தன்னில்
ஆசையும் மறையோ னுன அரிவைமேல் வெகுவாய்க் கொண்டான்.

20. அவர்களைக் கௌரவித்து, மகிழ்ச்சியுடன் அன்னம் அளித்தான். பிரதி தினமும் வாசனை பொருந்திய நறுமலர்களைக் கொணர்ந்து சிவபிரானது திருவடிகளில் சமர்ப்பித்தான். இவ்வாறு மிக்க தார்மிகனாக வாழுங் காலத்தில் இவனுக்கேற்பட்ட தொரு தீய வினையைச் சொல்லுகின்றோம். ஒரு பிராமணப் பெண்ணிடம் காதல் கொண்டான்.

21. சொன்னதோர் வரனு மின்னேன் சுகமுடன் அகம்கொ ணர்ந்து
கன்னியை இனிவாய் மோகம் காளையும் கொண்டு விட்டான்
மன்னவன் விதியீ தென்று மனத்தினில் நினைந்தி ருக்க
அன்னிய போகத் தாலே அணிகரு வயிற்றில் தங்க.

21. மோஹம் கொண்ட இவனது விருப்பம் நிறைவேறப் பெற்றவுடன், " இதுவும் என் தலைவிதியே, என்று எண்ணி, தனக்கேற்பட்ட பாவத்திற்கு மிகவும் வருந்தினன். அவளுக்குக் கருவும் ஏற்பட்டது.

22. பூத்தரு மணமு மின்றி பொற்கொடி யிருந்த தாலே
நேத்திய கருவு மேலாய் நிகழ்ந்திட மங்கை கண்டு
கோத்திரம் இழிவாச் சென்று கூறதை யிவன்பா லோதக்
கூத்தனைப் போல்மருந்து கொணர்ந்திட்டான் மங்கைக் கென்றோம்.

22. அவள் மணமாகாத பெண்ணாகவே இருந்தாள். அவளுக்குக் கருவேற் பட்டதை இவனிடம் சொல்ல அக் கருவைப் போக்க இவன் ஔஷதம் தந்தான். அவளுக்கு இவன் யமனாகவே ஆனான்.

23. மங்கையும் மருந்தை யேற்க மகிழ்கரு வெளியாய்ப் போகச்
சங்கையாய் அதனுல் மெத்தச் சதிருடவ தோஷ முண்டாய்ப்
பொங்கிய பாவை நொந்து புலம்பியே மாய்ந்து விட்டாள்
இங்கிவன் தனையத் தோஷம் இலகிய தநுவல் லாமல்,

23. மருந்தை உட்கொண்டதால் அவளூறுக்குக் காரணம் இல்லாமல் ஆகி விட்டது. ஆயினும், அவள், தனக்கு தன் ஈனபுத்தியால் ஏற்பட்ட அவதூறை எண்ணி எண்ணி மனம் புழுங்கி, இறந்தாள். ஆகையால் அந்தத் தோஷம் இவனைப் பிடித்துக்கொண்டது. இதுவுமின்றி இவனுக்கு வேறொரு பாவம் ஏற்பட்டதையும் சொல்கின்றோம்.

24. தாயாதி மூலந் தன்னில் தான்சில பொருள் மறைத்தான்
ஏயமாந் தோஷ மெல்லா மெய்திவ னன்னுள் போக்கி
ஓய்விலா நரகம் புக்கி உறைந்தனன் பின்னுல் ஜன்மம்
நேயமாம் சைவ னுக நிகழ்ந்தவக் காலந் தன்னில்.

24. பங்காளிகளின் சில சொத்தை மறைத்து அவர்களை ஏமாற்றி அபகரித்தான். ஆகவே, அந்த ஜன்மத்தில் மரணமாகி, அவ்விருப் பாபங்களால் கொடிய நரகத்தில் நீண்டகாலம் வருந்திக்கிடந்து, பிறகு இப் பூமியில் சைவ மதத்தில் பிறந்தான். சைவனுகப் பிறந்த அந்த ஜன்மத்திலும்.

25. தரித்திரனுய்ப் பெண்டிர் மக்கள் தழைத்திடை வாழ்க்கை யுற்று
குறித்திவன் பெரியோ ரோடு கூடியே தலங்கள் தோறும்
சித்தவன் தரிச னங்கள் செய்துமே மூத்தோர் பாதம்
கருத்துடன் வணங்கிப் போற்றிக் காதலாய் போற்றி வந்தான்.

25. பெண்டிரையும் ஏராள குழந்தைகளையும் அடைந்து, அவர்களைக் காப்பாற்ற முடியாத தரித்திரனுக இருந்து, அவர்களையும் வருத்தி, தானும் வருந்தி, அந்த ஜன்மம் முழுவதும் மிகவும் கஷ்டப்பட்டான். [ஏராளமான குழந்தைகளைப்பெற்று அவர்களை அன்னம் வஸ்திரம் முதலியவைகளால் காப்பாற்றமுடியாமல் தரித்திரத்தினுல் தவிப்பது மிகப் பெரிய பாபத்தின் பயனே என்ற கருத்தை ஸ்ரீமத் ராமாயணத்தில் அயோத்தியா காண்டத்தில் பரதனது சபதத்தில் காணலாம்.] கடைசியாக, சில தவசிகளுடன் கூட, அவாகள் செல்லும் புண்ணிய ஸ்தலங்களுக்குத் தானும சென்று, அங்கு எழுந்தருளியிருக்கும் கடவுளது மூர்த்திகளைத் தரிசித்து, அந்தத் தவசிகளுடைய பாதங்களில் விழுந்து வணங்கி அவர்களைப் போற்றி வந்தான்.

26. வமிலா அன்னுன் போக்கிப் பரனுல கடைந்து பின்னுல்
உவமுள தோஷந் தீர ஊன்சட மாக்கிப் பிரம்மன்
தவறிலா மனித னுகத் தரையினில் ஜனிக்க விட்ட
அவமிலாப் பாலன் தானும் அம்மையே இவனு மென்னே.

26. அந்திய காலத்தில் யம உலகமடைந்த இவனை இவனுடைய பாவத்தைத் தீர்க்க, மறுபடியும் மனித உடலில் இங்குக் கடகலக்னத்தில் பிறப்பித்திருக்கிறன். [முன்பு மூன்றும் ஜன்மத்தில் செய்த பாவம் இன்னும் இவனை விடு நீங்கவில்லை.]

27. முன்னந்த விதமாய்த் தோஷம் மூண்டுமே யிருப்ப தாலே
தன்னய வதுவும் தீர நாட்டுவோம் கிரியை யொன்று
மன்னிவன் சேதுக் கேகி மகிழுவர் பித்தத்தைப் போற்றிப்
பின்னையும் மதுரை வந்து பித்தனுர் பாதம் கண்டால் ;

27. அந்தத் தோஷம் நீங்காது அப்படியே இருப்பதால், அவைகள் தீரப் பரிகாரங்களைச் சொல்லுகின்றோம். இவன், சேதுவிற்குச் சென்று, அங்கு எழுந்தருளியிருக்கும் சிவபிரானின் திருவடித்தாமரைகளைத்துதித்து, வணங்கி, பிறகு மதுரைக்கு வந்து, பக்தர்களிடம் பித்துக்கொண்டவன் என்று போற்றப்படும் பரமசிவனுடைய கழலைத் தரிசித்து, அங்கிருந்து ;

28. சத்தியே தில்லை வந்து சதிரவர் பதத்தைப போற்றிச
சிற்றிடை போலப் பொன்னால் செய்துமே மறையோ ருக்கு
நத்திய தனங்க ளாடை நல்லடைக் காயி னேடு
வெற்றியாய்த் தான மீந்து விளங்கிய வூழை ஒதி.

28. சிதம்பர க்ஷேத்திரத்திற்கு வந்து, நடராஜப் பெருமானின் பாதங்களைப் போற்றி, தங்கத்தினால் ஒரு பெண் உருவம் செய்து [மூன்றும் ஜன்மத்தில் ஒரு பெண்ணின் மரணத்திற்கு அவன் காரணமானபடியால் இவ்வாறு பரிகாரம் கூறப்பட்டது.] அதை, தக்ஷிணை தாம்பூலம் வஸ்திரம் இவைகளுடன் ஓர் அந்தணருக்குச் சமர்ப்பித்து, அவரிடம் தன் பாபங்களை உரக்கச் சொல்லி, மன்னிக்குமாறு பிரார்த்திக்கவேண்டும்.

29. பொருத்தமென் றவரு மாசி புகன்றிட வதனை யேற்றுக்
கருத்துடன் அகதிக் கன்னம் கனமுடன் வெகுவா மீந்து
உருத்திடும் ஆனெய் யாலே உயர்விளக் கொருநூ றுந்தான்
விருத்தவர் கோஷ்ட மேற்றி விளங்கிய தன்னூர் வந்து ;

29. அவர்களும், "மன்னித்தோம், கஷ்டங்கள் தீர்ந்து இஷ்டங்கள் நிறைவேறுக" என்று மனமகிழ்ந்து அருளும் ஆசிகளைப் பெற்று, ஏழைகளுக்குச் சிரத்தையுடன் அன்னமளித்து, ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி சந்நிதியில் பசுவின் நெய்யால் நூறு விளக்கேற்ற வேண்டும். பிறகு தனது ஊருக்குத் திரும்பி வந்து ;

30. சஷ்டிநோன் பாண்டி ரண்டு ஜாதகன் தவரு நோற்றும்
துஷ்டமுன் தோஷ மெல்லாம் தொடர்ந்திடா நிவிர்த்தி யாகும்
இஷ்டமாம் முத்திச் செல்வம் யேற்றிட விரிவாய்ச் சொன்னேம்
கஷ்டமென் றெண்ணி யின்னேன் கருதியே செய்யா விட்டால் ;

30. ஜாதகன் இரண்டு ஆண்டுகளுக்கு இடைவிடாது ஷஷ்டி விரதம் அனுஷ்டித்தால், மூன்றும் ஜன்மத்திலிருந்து தொடர்ந்துவரும் பாவங்கள் தொலையும். எல்லாவிதத்திலும் க்ஷேமங்கள் உண்டாகும். இவ்வளவு பரிகாரங்களைச் செய்வதால் உடல் வாடுமே ! செல்வம் போகுமே ! என்று அஞ்சி இவைகளைச் செய்யானாகில் ;

31. பொற்கொடி மனையாள் காலி பிள்ளைகள் விருத்தி யாகார்
அற்பமாய்ப் போகும் செல்வம் ஆயுளும் விருத்தி யாகா
சொற்பிதை நம்பி பாலன் சுகமுடன் செய்வா னாகில்
விற்புரு வத்தாய் கேளு விளைமாறு கண்டன் போலே ;

31. இவனுக்கு வாய்த்திருக்கும் தங்கக்கொடிபோன்ற மனைவி நீடித்திருக்கமாட்டாள். சந்ததியும் விருத்தியாகாது. செல்வம் முழுவதும் நீங்கும். ஜாதகன் அற்பாயுளாக மரணமாவான். நாங்கள் சொன்ன

வார்த்தையை நம்பி ஜாதகன் சந்தோஷத்துடன் பரிகாரங்களைச் செய்வானாகில், வில்போல் வளைந்த புருவம் உடைய தாயே ! ஏற்படும் பலன்களைச் சொல்லுகிறோம் கேளுங்கள். என்றும் பதினாறு வயது பெற்று விளங்கிய மார்க்கண்டேயனைப் போல ;

32. ஆயுளும் விருத்தி யாகி அஷ்டஐச்வரிய முண்டாய்
நேயமாய் வாழ்வா னென்று நிகழ்த்திய மொழிகுன் றாது
காயமாம் உலகோர்க் கிந்நூல் வெளியிட யாவும் சொன்னோம்
மாயமாய் நம்பி னோர்க்குக் கைலாயம் சாட்சி யாமே.

32. ஆயுள் விருத்தியாகும். எட்டுவிதச் செல்வமும் நிறைந்து சந்தோஷத்துடன் வாழ்வான். இந்த வார்த்தை குன்றாது. உலகத்தோர்க்குப் புண்ணிய பாவங்களின் பயன்களை அறிவிப்பதற்காகவே இந்நூலில் முன் பின் ஜன்மங்களைப்பற்றிச் சொன்னோம். புண்ணிய பாவங்களை நம்பி அறநெறியில் செல்லுபவர்களுக்குக் கைலாயம் காட்சி யளிக்கும்.

[தெய்வத்தன்மை வாய்க்கும் என்பது கருத்து.]

33. பவமகல் கருணை யுற்ற பார்வதி யினிமே லாக
உவமுள யோகச் செய்கை உரைப்போம்யாம் கேட்பா யாக
அவமிலா இந்தப் பாலன் அனுகிய ஜனனந் தொட்டு
நவமுறு மீரெட் டாண்டு நயயோகம் பிதிருக் குண்டாம்.

33. உலகமக்களைக் கருணையால் உய்விக்கும் பார்வதி தேவியே ! இனிமேல் ஜாதகனின் யோகங்களைச் சொல்லப்போகின்றோம். இவன் ஜனித்தது முதல் பதினாறு வருஷங்கள் வரை ஜாதகனின் தந்தைக்கு நல்லயோகம் உண்டாகும்.

34. பலவிதம் பூமி யாலும் பாக்கியம் பொருளு முண்டாம்
நலமிகு பூமி சேரும் நற்கீர்த்தி மேன்மே லுண்டாம்
கலன்பணி மணிக ளாடை கனத்திடும் தானிய மெல்லாம்
உலவிய கன்றுகாலி உயர்ந்திடும் பாலு முண்டாம்.

34. பூமிகளால் பலவிதத்திலும் பாக்கியமும் பொருளும் சேரும். செழிப்பான நிலங்களும் வந்திடும். இவனுடைய புகழ் மேன்மேலும் ஓங்கி வளரும். பாத்திரம் ஆபரணம் ரத்தினம் ஆடை இவைகள் எல்லாம் அதிகமாகும். தானியமும் நிறைந்திடும். கால்நடைகளும் அபிவிருத்தியடையும். பால்பாக்கியமும் விருத்தியாகும்.

35. மணமது நடக்கும் சொல்லு மனக்களிப் பதிக முண்டாம்
குணநிதி பிறைபோ லாகக் குவலயம் போற்ற வுண்டாய்ப்
பணிநிலம் மேன்மே லாக முரலிக்கும் பயிர்பாக் கியங்கள்
துணைபெரும் குடும்ப மேலாய்த் துலங்கிடும் புதிதா யில்லம்.

35. இவனுக்கு மணம் நடக்கும்போது அதைத் தொடர்ந்து இன்னும் பல சுபசம்பவங்கள் நடைபெறும். எல்லோரும் போற்றும்படி நற்குணங்கள் மேன்மேலும் சந்திரன்போல வளரும். ஆபரணங்களும் நிலங்களும் அதிகரிக்கும். நிலமும் நன்றாக விளையும். இவனது குடும்பம் பெருமையோடிருக்கும். புதியதொரு வீடும் ஏற்படும்.

36. கட்டினும் சுகபோ கங்கள் கருதிடும் நாட்கு நாளாய்
மட்டிலா நாண யங்கள் வந்திடும் சுகங்கள் மேலாம்
சொட்டிடு மவ்வாண்டி னுள்ளாய்ச் சூழ்பலன் விரயம் கொஞ்சம்
கட்டனே பிதிர்வம் சத்தில் கனசுக முண்டா மல்லால்.

36. ஒவ்வொரு நாளும் சுகபோகங்கள் விருத்தியாகும். கணக்கிலடங் காதவாறு பணவரவு உண்டு. ஆயினும் இவ்வாண்டில் [மணமான வருஷத்தில்] கிடைத்த பலன்களிற் சில செலவாகும். பித்ருவருக்கத்தின ருக்கும் கௌரவமும் சுகங்களும் உண்டாகும்.

37. அரசதில் போக்கு முண்டாம் அன்னதால் நஷ்டங் கொஞ்சம்
செரிசுதன் தனக்குக் கண்டம் சூழ்ந்திவை யெல்லாம் தீரும்
வரிசையாய்க் கல்வி மேன்மை வந்திடும் பால னுக்கு
வரியில்லம் வெவ்வேருக வருந்திடும் கலக மேலாய்.

37. இந்த ஜாதகன் அரசியலில் ஈடுபடுவான். அதனுல் சிறிது நஷ்டங்கள் ஏற்படும். இவனுக்குச் சில ஆபத்துக்களும் நேரிடும். ஆனுல் உடனே அவைகள் தீர்ந்திடும். பாலனுக்குப் படிப்படியாகக் கல்வியில் அபிவிருத்தி யுண்டு. சிறிது காலத்திற்குப் பிறகு கலகங்கள் ஏற்பட்டுக் குடும்பப் பிரிவினை நடைபெறும்.

38. சொல்லிது தவறி டாது சுகமுள தந்தை தானும்
நல்லவன் எவர்க்கு நண்பன் நங்கையற் கினிய மோகன்
வெல்லுநன் மேம்பா டுள்ளான் வாய்ச்சாலன் கபட மில்லான்
சொல்லது மிருது வாகும் சொகுசுளான் பெரியோர்க் கன்பன்.

38. மேலே சொன்ன பலன்கள் தவரு. இந்த ஜாதகனுடைய தந்தை எல்லோருக்கும் நல்லவனுகவும் நண்பனுகவும் இருப்பான். ஸ்திரீகளுக்குப் பிரியன். தனது பெருமையால் பிறரை வசப்படுத்துவான். நன்ருகப் பேசும் திறமை உள்ளவன். கபடமில்லாதவன். மிருதுவாகப் பேசுபவன். அதிக சிரமத்தைச் சகிக்காதவன். பெரியோர்களின் அன்பிற்குப் பாத்திர மானவன்.

39. வெற்றியாம் ஜயனைப் போல விளங்குவன் சமர்த்தன் சொல்லு
பத்திய கோபந் தானும் பலத்திடின் பிரசண்ட மாகும்
நந்திய யிளம னத்தான் நீனிலம் கீர்த்தி மேலான்
குத்தங்க ளணுகா வன் குவலய மவனும் செல்வம்.

39. அர்ஜுனனைப்போலத் தோல்வியே இல்லாதவன். மிக்க சாமர்த்திய சாலி. கோபமில்லாதவன். கோபம் ஏற்படுமாயின் சண்டமாருதம் புயற் காற்று போல் பயங்கரமாக இருக்கும். இளகியமனம் படைத்தவன். புவியில் புகழ் பெற்றவனுக இருப்பான். குற்றங்களால் அணுக முடியாதான். செல் வம் படைத்தவனுகவும் விளங்குவான்.

40. தனதானிய பூமி யோங்கத் தரணியில் எவரு மெச்ச
குணநிதி பிறைபோ லாகக் கொண்டுமே வாழ்வா னென்று
முனமவன் பிரிவில் பார்க்க வழுத்திளும் தெளிந் துகாணுய்ச்
சொன்னதன் மேலாய் யோகம் சுதனவன் றனக்கு ரைப்போம்,

40. பணம் பொருள் பூமி இவை அதிகமாகும். ஊரில் எல்லோரும் இவனைக் கொண்டாடுவார்கள். வளர்பிறைச் சந்திரன்போல இவனது குணங்கள் வளர்ந்து நிலைத்திருக்கும். இப்பொழுது சொல்லப்பட்ட இந்த ஜாதகனுக்கு இதற்கு மேலாக நடக்கப்போகும் யோகங்களைச் சொல்லு கின்ருேம்.

குறிப்பு.—பலன் சொல்லும்போது “ பூமிசேரும்,” “ செல்வம் ஓங்கும் ” என்று அடிக்கடி சொல்லுவார்கள். அது “ கூறியது கூறல் ” என்ற குற்றமாகாது. ஏனெனில், ஒரு ஜாதகனுடைய வாழ்க்கையில் பல தடவைகளில் பூமி சேரலாம். பல சமயங்களில் செல்வம் ஓங்கலாம். ஆகவே பல சமயங்களில் நிகழும் சம்பவங்களைச் சொல்லுவதாகக் கருத வேண்டும்.

41. செப்புமூ வாண் டின் மேலாய்ச் சேர்ந்திடும் ஈரே மூாண்டும்
ஒப்புள பலத்த யோகம் உயர்ந்திடும் பலஇ னத்தால்
தப்பிலாப் பூமி யாலும் தாயேகேள் பொருள் வகுத்து
வெப்பங்க ளடைந் திடாவே வேணதோர் பொருளும் சேரும்.

41. முன்னுல் சொல்லப்பட்ட பதினறு ஆண்டுகளுக்குமேல் பதினன்கு ஆண்டுகளில் பலவிதங்களிலும் பலமான யோகங்கள் வரும். பூமியின் மூல மும் யோகமேற்படும். கஷ்டங்கள் இரா. விரும்பப்பட்ட பொருள்கள் கிட்டும்.

42. இங்கித பூமி மேலாய் இலகிடும் பயிர்பாக் கியங்கள்
மங்கையே குடும்ப மேலாய் மருவிடும் மணங்க ளுண்டாம்
துங்கமாந் தனதா னியங்கள் தோன்றிடும் பணிக லங்கள்
பொங்குமெப் பலன்கள் மேலாய்ப் பொருந்திடும் பால்பாக் கியங்கள்.

42. நிலம் செழித்து விளையும். பயிரால் ஐச்வர்யம் உண்டு. குடும்பம் பெருமையை அடையும். குடும்பத்தில் அநேக மணங்கள் நடைபெறும். தனதானியங்கள் மேலாகும். புதிய ஆபரண வகைகளும் பாத்திரவகை களும் சேரும். பால் பாக்கியமும் பெருகும்.

43. அவனியி லெல்லா மோங்கு மறைந்தஇவ் வாண்டினு ள்ளாய்க்
கவலையாம் சிலபொ ருள்கள் கழறினேம் நஷ்ட முண்டாம்
உவமுடன் பிதுர்வர்க் கத்தில் உற்றிடும் சூத மம்மா
நவமுள வாசில் போக்கு நாடிடும் கலக பாதை.

43. முன் [நாற்பத்தொன்ருவது பாட்டில்] சொன்னவாறு குடும்பம் எல்லாவிதங்களிலும் குறைவில்லாமல் ஓங்கி வளரும். சில பொருள் களைப்பற்றிக் கவலை ஏற்படும். எதிர்பார்த்தபடி நஷ்டங்களும் உண்டாகும். பிதிரு வருக்கத்தில் மரணத்தினுல் சூதகம் துன்பம் நேரும். அரசியலிலும் நாட்டம் செல்லும். கலகங்களால் கஷ்டங்களும் ஏற்படும்.

44. வந்திவை யெல்லாம் தீரும் வளர்பெரு மரசர் தீ மூலம்
சிந்தையாம் தொழில்மூ லத்தால் செழும்பொரு ளிவனுக் குண் [டாம்
எந்தையே யிதன்மேல் பத்தும் ஏற்றிடும் இராச யோகம்
விந்தையாம் பிறைபோல் செல்வம் விருத்தியாம் தவறி டாது.

44. முன் சொல்லப்பட்ட தீதான பலன்கள் அதிகாரம் ஓங்குகின்ற அரசாங்க ஆதரவால் நீங்கிவிடும். செய்யப்படும் தொழில்களால் மேன்மையான பொருள்கள் சேர்ந்திடும். இந்தப் பதினொன்கு வருஷங்களுக்கு [முப்பது வயதிற்கு] மேல் பத்து வருஷம் ஜாதகனுக்கு ராஜயோகம் வரும். அப்பொழுது செல்வமும் வளர்பிறைச் சந்திரன்போல, தப்பாமல் விருத்தியாகும்.

45. அதிவித பணிதா ரைும் அணுகிடும் மேழிச் செல்வம்
பதியிதன் மேலா யெட்டும் பாரிய யோக முண்டாம்
கதியுள தனங்கள் வாய்க்கும் கேவல மடைந்தி டாது
துதியுள அரசர் மூலம் தொழிலது மேன்மே லாமே.

45. விசித்திரமான பூஷணங்கள் கிடைக்கும். உழுவதால் வரும் செல்வம் கிட்டும். அதற்கு (நாற்பது வருஷங்களுக்கு) மேல் எட்டு வருஷங்களுக்கும் பெரிய யோகங்கள் வாய்க்கும்-தனங்கள் சேரும். வீண் செலவாகாது. பெருமைபொருந்திய அரசர்களால் [அரசாங்க அதிகாரிகளால்] இவனது தொழில் மேன்மேலும் பெருமையை அடையும்.

46. அன்னையே இதன்மே லைந்தும் அணுகிடும் பலத்த யோகம்
கண்ணிய பலரால் நன்மை கனசன்மா னங்க ளுண்டாம்
வின்னங்க ளடைந் திடாவே விஜயனைப் போல வாழ்வான்
மன்னிய இதன்மே லிந்த மதலையு மின்னுள் மட்டும்.

46. அன்னையே! இதற்கு (நாற்பத்தெட்டு வருஷங்களுக்கு) மேல் ஐந்து வருஷங்களில் பிரபல யோகங்கள் வாய்க்கும். கௌரவம் வாய்ந்த பெரிய மனிதர்களால் நன்மைகள் ஏற்படும். அதிக சன்மானங்களையும் பெறுவான். யோகங்களுக்குப் பங்கம் ஏற்படா. அர்ஜுனனைப்போல எல்லோருக்கும் மேலாக வாழ்வான். இவ்வாறு பெருமையான வாழ்க்கைக்கு இவனுடைய ஆயுட்காலம் மட்டும் பங்கம் நேரிடாது.

47. பலமுள யோகவானாய்ப் பாரிய மனுக்கள் மெச்ச
உலகினில் வெகுவாய்ச் செல்வம் உற்றுமே விருத்தியோங்கி
நலமிக வாழ்வா னென்று கழறினோம் கோள்க ளாலே
சிலைநுதல் மேனி யாளே செல்வியே மேலுங் கேளே.

47. விற்போன்ற புருவ மமைந்த சரீரமுடைய பார்வதி தேவியாரே! இவனுடைய கிரஹ நிலைகளை ஆராய்ந்து பார்த்து, இவன் யோகவான். பெரிய மனிதர்களின் பாராட்டைப் பெறுவான். இவனுடைய செல்வம் ஓங்கும். சிறப்பாக வாழ்வான் என இவை போன்ற மற்றைய பலன்களையும் சொன்னோம். மேலும் சொல்லுகிறோம் கேளுங்கள்.

48. இருமயங் குடியாய் நிற்கும் ஈசுவரி யினிமே லாகச்
சிறியவன் பொதுயோக த்தைச் செப்புவோம் தனத்தி னுாலும்
புரிவெற்றி யோனே டொன்றிப் புகராறி லேறி நிற்க
விரிசுக லாப னைந்தில் வீற்றிட குருவுங் காண;

48. தேவியே! இனிமேல் இந்த ஜாதகனின் பொது யோகத்தைக் கூறுகின்றோம். கடக லக்கினத்திற்கு சுகலாபாதிபதியான சுக்கிரன் ஐந்தாமிடத்தில் இருக்கக் அவனை குரு பார்ப்பதாலும்;

49. மன்னவன் தரும மாட்சி படரதில் பத்தோ னேற
அன்னையே ராகுபத்தில் அமர்ந்திட நவக்கோ ளிவ்வாறு
முன்னநாள் ஊழி தீர்த்தால் மூலொன்பின் மேலாய் யோகம்
மன்னெனும் ராஜ யோகம் வந்திடும் பிசகி டாதே.

49. பிருஹஸ்பதி தருமஸ்தானம் என்று சொல்லப்படும் ஒன்பதில் [மீனத்தில்] ஆட்சியுடன் இருப்பதாலும், ராஹு பத்தில் இருப்பதாலும் இந்த ஜாதகனுக்குப் பலமான தீய முன்வினை இருப்பதாகவும், ஆனால் அது பரிகாரங்களால் நீங்கக்கூடியதாகவும் அறியப்படுவதால், நாம் சொன்ன பரிகாரங்களைச் செய்தால்தான் இவனுக்கு சொல்லப்பட்ட ராஜயோகங்களும் பிசகாமல் நடைபெறும்.

50. பூமியு மேலா யோங்கும் புகழ்நிதி பிறைபோ லாகும்
காமியே அரச ராலே கனதனம் மேன்மே லாகும்
நாமியே பணிதாராவும் நற்கீர்த்தி மேன்மே லாகும்
கோதிலா மேழிச் செல்வம் சுகபோக மேன்மே லாகும்.

50. மேன்மேலும் நிலங்கள் விருத்தியாகும். பணச் சேமிப்பும் அதிகமாகும். அரசர்களால் பெருமைகளும் விருதுகளும் ஏற்படும். நற்கீர்த்திகளும் பரவும். குற்றமற்ற பயிர்த்தொழிலும் பயனளிக்கும். மற்றைய சுகங்களும் இவனை அடையும்.

51. குறைவது அடைந்த போது குணமுடன் நிவிர்த்தி யாகும்
தாம்தரும் செல்வ மேலாய்த் தரித்திடும் பிரபுக்கள் பட்சம்
அரசனைப் போலே செல்வம் அணுகியே எவரும் போற்றச்
சரசமாய் வாழ்வா னென்று சாற்றினோம் ரிஷிக ளம்மா.

51. ஏதாகிலும் குற்றமேற்பட்டாலும் நிவிர்த்தியாகும். நீங்காத செல்வம் நிறைந்திருக்கும். பிரபுக்களின் அன்பும் நிலைத்திருக்கும். அரசர்களுக்கிருப்பதுபோல் பிறரால் வியக்கப்படும் செல்வம் நிலைத்து, இவன் சுகமாக வாழ்வான். தாயே! ரிஷிகளாகிய நாங்கள் சொன்ன வார்த்தை பிசகுமா?

முன்சொன்ன பலன்களையே இறுதியில் சுருக்கிக் கூறுகின்றார்.

52. மணநேரும் அரச ராலே மகிழ்தொழில் மேன்மே லாகும்
தன்னதால் செல்வ மேன்மை தரணியில் வெகுவா யுண்டாய்
வின்னங்க ளடைந்தி டாமல் விளக்கமாய் வாழ்வா னென்று
பன்னிய இந்த நூலைப் பகருவோம் எழுவ ரம்மா.

52. அரசரால் கௌரவம் வாய்க்கும். மகிழ்ந்து செய்யும் தொழிலும் விருத்தியாம். தன் முயற்சியால் ஐசுவரிய விருத்தி உண்டாகும். ஒருவித குறைவுமின்றிச் சிறப்பாக வாழ்வான். ஏழு ரிஷிகளும் இந்த நூலை (உலக நன்மைக்காக)க் கூறினோம்.

53. இனிமேலாய்த் தந்தை காலம் இயம்புவோம் முப்பா ளுறில்
கனிவுடன் மாய்வா ளுகும் நாட்டிதன் மேலா யேழுள்
இனிபுள அன்னை மாயவள் இயம்பிது தவறி டாது
தனிவுள பாலன் கண்டம் சாற்றுவோம் சிறுகண் டங்கள் ;

53. இதற்குமேல் தந்தையின் மரணகாலத்தைச் சொல்லுகின்றோம். இவனுக்கு முப்பத்தாறுவது வயது நடக்கும்போது இவன் தந்தை மரண மடைவான். அதற்குப் பிறகு ஏழு வருஷங்களுக்குள் தாய் மரணமாவாள். இனி இவனுக்கு நேரும் கண்டத்தைப்பற்றியும் சொல்லுவோம். இவனுக்குச் சிறிய கண்டங்கள் ;

54. வந்திடும் பரியா யத்தால் வளமிலா நிவிர்த்தி யாகும்
எந்தையே இவனின் ஆயுள் எடுத்தினி இயம்பக் கேளும்
பந்தமா மெழுமாண் டுள்ளே பகர்கொச்சை திங்கள் தன்னில்
சிந்தையாம் பூர்வ பக்கம் செல்திதி சஷ்டி யன்னுள் ;

54. மாறி மாறி வந்திடும். ஆனால் அவைகள் அதிகமாகாமல் நிவிர்த்தி யாகும். இவனுடைய ஆயுளைக் கூறுகின்றோம். எழுபதாவது வயதில் சித்திரை மாதத்தில் வளர்பிறை ஷஷ்டி திதியில் ;

55. பற்றுல கடைவா னின்னேன் பாவைகேள் பிற்ஜன் மத்தை
உவமிவன் காசி பக்கல் உயர்குலம் மறை யோனுகி
விரிபெரு ஞான நூலை விளம்பியே பயிற்சி யாகிச்
சரமுடன் சிவத்தைச் சேர்வன் சாற்றினோம் ரிஷிக ளம்மா.

55. தேவலோகத்தை அடைவான் தேவியே ! இவனுடைய பின் ஜன்மத்தைக் கேளுங்கள். காசிக்கருகில் உயர்ந்த பிராமண குலத்தில் பிறந்து, பெரிய ஞான சாஸ்திர (வேதாந்தம்)த்தை நன்குக் கற்றுணர்ந்து, காலக்கிரமத்தில் சிவபிரான் திருவடிகளை அடைவான். தேவியே ! தெய்வ ஞானம் படைத்த ரிஷிகளாகிய நாங்கள் இவ் விஷயத்தைச் சொன்னேம். [மற்றவர்கள் இதில் அவநம்பிக்கை கொள்ளவேண்டாமென்பது கருத்து]

ஜாதகம் 13

1. பிறைபுதன் மேரு வாகப் பொன்மானில் சேயும் சாடிக்
கரியவன் சீய மாகக் கதிர்புகா கேது தேளில்
அரவுமே நந்தி யாக அலவனும் ஜன்ம மாக
உரைகுவீர் பலனை யென்று உத்தமி கேட்கும்போது.

		ராகு	
செவ்வாய்	இராசி சக்கரம்		லக்கினம்
குரு			சனி
புதன் சந்திரன்	சூரியன் சுக்கிரன் கேது		

1. விக்ருதி வருஷம் கார்த்திகை மாதம் 29-ஆந் தேதி சனிக்கிழமை இரவு ஐந்து நாழிகைக்குமேல் ஜனனம். [ஆங்கிலத் தேதி 13–12–1890] நவக்கிரஹங்களின் பாத சாரம் :—கேட்டை 4-இல் சூரியன் பூராடம், 2-இல் சந்திரன், அவிட்டம் 4-இல் செவ்வாய். பூராடம் 1-இல் புதன், சிரவணம் 3-இல் குரு. அனுஷம் 4-இல் சுக்கிரன். பூரம் 4-இல் சனி. ரோகிணி 4-இல் ராகு. கேட்டை 2-இல் கேது. நக்ஷத்திரம் பூராடம். சுக்கிர தசை இருப்பு வருஷங்கள் பதினொன்று ; மாதங்கள் ஏழு. புதன், சந்திரன் தனுஸிலும், குரு மகரத்திலும், செவ்வாய் கும்பத்திலும், சனி சிங்கத்திலும், சூர்யன் சுக்கிரன் கேது விருச்சிகத்திலும், ராகு விருஷபத்திலுமாக, லக்கினம் கடகமாக, இவ்வாறமைந்திருக்கிற கிரக நிலையில் ஏற்படும் பலன்களைச் சொல்வீர்களாக, எனப் பார்வதி கேட்கலுற்றாள்.

2. பிருகுமே புகலு கின்றார் பிறந்திடும் ஆண்பால் ஜன்மம்
வருமில்லம் வடபால் நோக்கம் மால்கோஷ்டம் தென்பால் நேரும்
பெருவயிறப்பன் உத்திரம் பூதவா கனத்தாள் மீனம்
அரன்கோஷ்டம் பால தாகும் அருகிய சிற்று ராகும்.

2. இவ்வாறு தேவி கேட்டவுடன் பிருகு முனிவர் பதில் உரைக்கின்றார். இந்தக் கிரஹநிலையில் பிறந்த குழந்தை ஆண். பிறந்த வீடு வடதிசையை நோக்கி இருக்கும். [வீதி கிழக்கு மேற்கில் அமைந்தது எனக்கொள்க.]